டாக்டர் மா. இராசமாணிக்கனார்

# தமிழ் மொழி - இலக்கிய வரலாறு

# தமிழ்
# மொழி - இலக்கிய வரலாறு
## சங்க காலம்

டாக்டர் மா. இராசமாணிக்கனார்

விற்பனை உரிமை :

பூங்கொடி பதிப்பகம்

14, சித்திரக்குளம் மேற்கு,
மயிலாப்பூர், சென்னை-4.

# நூலைப் பற்றி


கண்ணம்மாள் பதிப்பக
வெளியீடு : 104

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | சனவரி, 1963 |
| நான்காம் பதிப்பு | : | 1976 |
| ஐந்தாம் பதிப்பு | : | டிசம்பர். 1996 |
| நூலின் பெயர் | : | தமிழ் மொழி-இலக்கிய வரலாறு சங்க காலம் |
| ஆசிரியர் | : | டாக்டர் மா. இராசமாணிக்கனார் |
| உரிமை | : | மா. ரா. அரசு |
| நூலின் அளவு | : | கிரவுன் 1×16 |
| பக்கங்கள் | : | 384 |
| வெளியிடுவோர் | : | கண்ணம்மாள் பதிப்பகம்<br>796, 29ஆவது தெரு,<br>பெரியார் நகர், கொரட்டூர்,<br>சென்னை - 600 080.<br>தொலைபேசி : 651804 |
| பொருள் | : | இலக்கிய வரலாறு |
| **விலை** | : | **ரூ. 75-00** |
| அச்சிட்டோர் | : | சித்திரா பிரிண்டோ கிராபி<br>24, பொன்னுசாமி தெரு,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014<br>தொலைபேசி : 8263349 |

# முகவுரை

கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் பெரிப்ளூஸ் ஆசிரியர், பிளைநி, தாலமி என்ற கிரேக்கர் மூவரும் தமிழகத்து உள்நாட்டு ஊர்களைப் பற்றியும் துறைமுக நகரங்களைப் பற்றியும் மேல் நாடுகள் தமிழகத்தோடு செய்து வந்த வாணிகத்தைப் பற்றியும் சில செய்திகளை எழுதியுள்ளனர். பழந்தமிழ் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய நூல்களில் யவனர் பாவைவிளக்கு, யவனர் வாணிகம், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் யவனரைப் பிடித்து அடக்கினமை போன்ற செய்திகள் காணப்படுகின்றன. கி. மு. முதல் நூற்றாண்டிலும் பின் நூற்றாண்டுகளிலும் வழங்கப்பட்ட ரோம நாணயங்கள் மதுரை முதலிய இடங்களில் கிடைத்துள்ளன.

இச்சான்றுகளைக் கொண்டு எட்டுத்தொகையும், பத்துப் பாட்டும் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளில் செய்யப் பட்டவை என்னலாம்; சங்ககாலமே கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகள் என்னலாம்[1] என்று வரலாற்று ஆசிரியர் சிலரும் தமிழ்ப் பேராசிரியர் சிலரும் தம் ஆராய்ச்சி நூல்களில் எழுதிவிட்டனர். அவர்கள் கூற்றை உறுதியாகக்கொண்டு பலரும் சங்ககாலம் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தது என்று கூறியும் எழுதியும் வருகின்றனர்.

தொகை நூல்களிலுள்ள செய்யுட்கள் ஒருவர் பாடியவை அல்ல. ஏறத்தாழப் புலவர் ஐஞ்ஞூற்றுவர் பாடியவை. அவற்றுள் யவனர் தந்த பாவை விளக்குப் பற்றியும், யவனரைப்பற்றியும் வருகின்ற செய்யுட்கள் மிகச் சிலவே யாகும். புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை இவற்றில் காணப்படும் பாரதப்போர், நந்தர்கள் பற்றிய செய்திகள், மோரியர் படையெடுப்பு ஆகியவற்றை

---

1. சங்ககாலம் கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளா கலாம். சங்ககாலம் கி. பி. முதல் நான்கு நூற்றாண்டு களாகலாம் என்பர் வரலாற்றாசிரியர் திரு. K. A. N திரியார். — A History of South India, pp. 112—1

நோக்க, இன்றுள்ள சங்கச் செய்யுட்களுள் சில கிறிஸ்துப் பெருமானுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளையும் சேர்ந்தவை என்னும் உண்மை உணரப்படும்.

மேலும் ஒரு மொழிக்குரிய நூல்கள் திடீரென்று கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளை மட்டும் குறிக்குமென்றோ, அந்நூற்றாண்டுகளில் செய்யப்பெற்ற பாடல்கள் மட்டுமே கிடைக்கக்கூடுமென்றோ எண்ணுதல் பொருத்தமற்றது.

செங்குட்டுவன் செய்த பத்தினி விழாவிற்குக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன் வந்திருந்தான் என்பது சிலப்பதிகாரம் கூறும் செய்தியாகும். அக்கயவாகுவின் காலம் கி. பி. 113—136 என்று அண்மையில் வெளிவந்த இலங்கை வரலாற்று நூல் தெரிவிக்கின்றது. எனவே, செங்குட்டுவன் காலமும் அவன் தம்பியாரான இளங்கோவடிகள் காலமும் அவ்விருவருக்கும் நண்பராகிய 'மணிமேகலை' ஆசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் காலமும் அதுவேயாகும் என்பது வெள்ளிடை மலை.

மணிமேகலையில், ''தெய்வம் தொழா அள்'' என்று தொடங்கும் குறள் முழுமையும் ஆளப்பட்டுள்ளதை அனைவரும் அறிவர். மேலும், சிலப்பதிகாரத்தில் குறட் கருத்துக்களும் தொடர்களும் பல இடங்களில் ஆளப்பட்டுள்ளன. இவற்றை நோக்க, திருக்குறள் இவ்விரு நூல்களுக்கும் முற்பட்டது என்பது தெளிவாகும்.

திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய சங்க நூல்களுக்கெல்லாம் முற்பட்டது தொல்காப்பியம் என்பதை மகாவித்துவான் இரா. இராகவய்யங்கார், டாக்டர் சோமசுந்தர பாரதியார், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் திரு. க. வெள்ளைவாரணனார், பேராசிரியர் சி. இலக்குவனார், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் வே. வேங்கடராசுலு ரெட்டியார் ஆகிய அறிஞர்கள் தம் ஆராய்ச்சி மிக்க நூல்களில் நன்முறையில் வெளியிட்டுள்ளனர். வரலாற்று முறைப்படி ஆராயின், தொல்காப்பியத்

தின் குறைந்தகால எல்லை ஏறத்தாழக் கி. மு. 300 என்று கூறலாம்.[2] இதற்குக் கீழே தொல்காப்பியத்தின் காலத்தைக் கொண்டு செல்வது வரலாற்று உண்மைக்கும் இலக்கிய ஆராய்ச்சிக்கும் முரண்பட்டதாகும்.

ஏறத்தாழக் கி. மு. 300இல் செய்யப்பட்டதாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில், தொல்காப்பியர் தமக்கு முன்பும் தம் காலத்திலும் இருந்த இலக்கண நூல்களைச் செய்த ஆசிரியர் பலரை ஏறத்தாழ இருநூற்றைம்பது இடங்களில், ''என்ப'', ''என்மனார் புலவர்'', ''யாப்பறி புலவர்'' எனப் பலவாறு கூறியுள்ளார். எனவே, தொல்காப்பியம் செய்வதற்கு உறுதுணையாய் இருந்த இலக்கண நூல்கள் மிகப்பல என்பது தெளிவாகும். இங்ஙனமே தொல்காப்பியர் காலத்தில் மிகப்பல இலக்கிய நூல்களும் இருந்தன என்பதை அவருடைய செய்யுளியல் நூற்பாக்கள் நன்கு தெரிவிக்கின்றன. தொல்காப்பியர் காலத்திலேயே (கி. மு. 300) பல இலக்கண நூல்களும் பல இலக்கிய நூல்களும் இருந்தன எனில், தமிழ் மொழியின் தொன்மையை என்னென்பது!

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த குடியினரான தமிழர்தம் மொழியாகிய தமிழின் தோற்றத்தை அறியவல்லார் யாவர்? இதனாலன்றோ கல்வியிற் சிறந்த கம்பர் பெருமான், ''என்றுமுள தென்றமிழ்'' என இயம்பி மகிழ்ந்தார்!

இத்துணை உண்மைகளையும் மறந்து அல்லது மறைத்துச் 'சங்ககாலம்' கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தது, தொல்காப்பியம் தொகை நூல்களுக்குப் பிற்பட்டது என்று தம் மனம் போனவாறு ஒரு சிலர் எழுதுதல் உண்மை ஆராய்ச்சிக்கு மாறுபட்டதாகும்.

கி. பி. 4ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சியில் பல்லவ் அரசு ஏற்பட்டது என்பது வரலாற்று உண்மை.

---

2. 'தொல்காப்பியம்' என்னும் தலைப்புடைய பகுதியிற் காண்க.

பல்லவர் ஏறத்தாழக் கி. பி. 300 முதல் கி. பி. 875 வரையில் தமிழகத்தில் பேரரசராய் இருந்தனர் என்பதும் வரலாறு கூறும் உண்மையாகும். தொல்காப்பியம் முதல் மணி மேகலை ஈறாக உள்ள சங்க நூல்களில் இப்பல்லவர்களைப் பற்றிய குறிப்பு ஒரு சிறிதும் காணப்படவில்லை; காஞ்சியில் திரையர் இருந்தமைக்கும் சோழர் இருந்தமைக்குமே சான்றுகள் காணப்படுகின்றன. எனவே, **இந்நூல்கள் அனைத்தும் பல்லவர்க்கு முற்பட்ட நூல்கள்** என்பது தெளி வாகும். ஆகவே, **சங்ககாலத்தின் இறுதி எல்லை ஏறத்தாழக் கி. பி. 300** என்று கொள்ளப்பட்டது. அதன் மேல் எல்லை இன்றுள்ள சான்றுகளைக் கொண்டு வரையறுக்க இயல வில்லை. புறநானூற்றின் துணையைக் கொண்டு அதன் மேலெல்லையை ஏறத்தாழக் கி. மு. 1000 என்று கூறலாம். அக்காலத்திலும் கடல் வாணிகம் சிறப்புற நடைபெற்றது. இன்று கிடைத்துள்ள இலக்கியம் முதலிய சான்றுகளைக் கொண்டு, **ஏறத்தாழக் கி.மு. ஆயிரத்திலிருந்து கி. பி. 300 வரையில் இருந்த பரந்துபட்ட காலமே சங்ககாலம்** என்று கூறலாம். **இந்த அடிப்படை உண்மையை உள்ளத்திற் கொள்ளின், நூல்களின் காலத்தைப் பற்றிய குழப்பமே தோன்றாது.** தொகை நூற் பாடல்கள் கி. மு.விலும் பாடப் பட்டிருக்கலாம், கி. பி.யிலும் பாடப்பட்டிருக்கலாம் என்னும் உண்மையை உணர்தல் நல்லது.

காய்தல் உவத்தல் இன்றித் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை நன்கு கற்று, கிடைக்கும் உண்மைகளை ஒன்று சேர்த்து, பிறநாட்டார் குறிப்புகளையும் இந்திய வரலாற் றினையும் ஒப்புநோக்கிச் **சாத்திரீய முறையில் (Scientific Method)** ஒரு முடிவுக்கு வருதலே உண்மை ஆராய்ச்சி எனப் படும். அத்தகைய உண்மை ஆராய்ச்சியே என்றும் நிலைத் திருக்கும்.

மிகப் பழைய காலம் முதல் ஏறத்தாழக் கி. பி. 300 வரை யில் தமிழகம் சேர, சோழ, பாண்டியர் ஆட்சியில் இருந்தது என்பது தென்னிந்திய வரலாற்றால் தெளிவாகத்

தெரிகின்றது. அப்பரந்துபட்ட காலத்தில் பாண்டியர் தமிழ்ச் சங்கத்தை வைத்துத் தமிழ் வளர்த்து வந்தனர் என்பது சங்க நூல்களால்[3] தெளிவாகத் தெரிகின்றது. ஆதலால் இக்காலம் சங்ககாலம் என்று ஆராய்ச்சியாளரால் கூறப்படுகின்றது.

ஏறத்தாழக் கி. பி. 300 முதல் கி. பி. 875 வரையில் தமிழகத்தில் பல்லவரும் பாண்டியரும் சிறப்புற்றிருந்தனர். அக்காலத்தில் சைவமும் வைணவமும் சமணத்தையும் பௌத்தத்தையும் எதிர்த்துப் போரிட்டன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் முறையே சைவத்தையும் வைணவத்தையும் தம் திருப்பாடல்களால் வளர்த்தனர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பெரும்பாலானவை இப்பல்லவர் காலத்தில் தோன்றியவை.

பல்லவர்க்குப் பின்பு பேரரசராய் விளக்கமுற்ற பிற்காலச் சோழர்கள் சைவ வைணவ சமயங்களை நன்கு வளர்த்ததோடு சமணர்க்கும் பௌத்தர்க்கும் வேண்டிய அளவு உதவி செய்தனர். இச் சோழர் ஏறத்தாழக் கி. பி. 875 முதல் 1300 வரையில் நாடாண்டனர். இவர்கள் காலத்தில் சமய வளர்ச்சி மிகுதியாகக் கவனிக்கப்பட்டது. எனவே, பல்லவர் சோழர் காலங்களைச் சமய வளர்ச்சிக் காலம் அல்லது இடைக்காலம் என்று கூறலாம். இக்காலத்தில் சிந்தாமணி, பெரிய புராணம், கம்ப ராமாயணம் போன்ற பெரு நூல்கள் தோன்றின; இவற்றோடு அரசியல் தொடர்புடைய கலிங்கத்துப்பரணி, மூவருலா போன்ற சிறு நூல்களும் தோன்றின யாப்பருங்கலம், வீரசோழியம், தண்டியலங்காரம், நன்னூல் முதலிய இலக்கண நூல்களும் தோன்றின.

கி. பி. 1300க்குப் பிறகு தமிழகம் விசயநகர வேந்தர் ஆட்சிக்கு உட்பட்டது; பின்பு நாயக்கர் ஆட்சிக்கும் கருநாடக நவாபுகள் ஆட்சிக்கும் உட்பட்டது; இறுதியில் ஆங்கிலேயர்

3. இந்நூலில் உள்ள 'மதுரையில் தமிழ்ச் சங்கம்' என்னும் பகுதியைக் காண்க.

ஆட்சிக்கு உட்பட்டது. இக்காலத்தில் (1300—1947) தமிழைத் தக்கவாறு ஆதரித்தவர் மிகச் சிலர். அதனால் எண்ணிறந்த தலபுராணங்கள், உலா, தூது போன்ற சிற்றிலக்கியங்கள், இசுலாத்தையும் கிறிஸ்துவத்தையும் பற்றிய பெருநூல்கள் சிறு நூல்கள், திருவருட்பா, மனோன் மணீயம் போன்ற நூல்கள் தோன்றின. ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்பு அச்சுப் பொறியின் வாயிலாகச் செய் தித் தாள்களும் நூல்களும் அச்சிடப் பெற்றன. பள்ளிக் கூடங்கள் பெருகப் பெருக உரைநடை நூல்களும் பெருகின. 20ஆம் நூற்றாண்டில் உரைநடை நூல்களும் மொழி பெயர்ப்பு நூல்களும் பெருங் கதைகளும் சிறு கதைகளும் கவிதைகளும் வளர்பிறைபோல வளர்வனவாயின. இக் காலத்தைத் தமிழிலக்கிய வரலாற்றில் பிற்காலம் என்னலாம்.

எனவே, தமிழ் இலக்கிய காலத்தைச் (1) **சங்ககாலம்,** (2) **இடைக்காலம்,** (3) **பிற்காலம்** என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பது பொருத்தமாகும். இம்மூன்று பிரிவு களுள் சங்ககாலமாகிய முதற் பிரிவில் அமைந்த நூல்களைப் பற்றிய விளக்கத்தை இந்நூலிற் காணலாம்.

தொல்காப்பியம் இன்னது—அதன் காலம் இன்னது—அதில் கூறப்பட்டுள்ள செய்திகள் இன்னவை—அவற்றா லறியப்படும் தமிழர் வாழ்க்கை முறை நாகரிகம் பண்பாடு இன்னவை—தொல்காப்பியத்தால் அறியப்படும் மொழி வரலாறு இது—இலக்கிய வரலாறு இது என்பன போன்ற பல விவரங்களும் இலக்கிய வரலாற்றில் இடம் பெற வேண்டும்; ஒவ்வொரு நூலைப்பற்றிய இத்தகைய விவரங் கள் இலக்கிய வரலாறு படிப்பவர்க்கு அந்நூலைப்பற்றி ஓரளவு அறிவைத் தரும். இந்த முறையில் இலக்கிய வரலாறு எழுதல் வேண்டும் என்ற எண்ணம் பல்லாண்டு களாக என்னுள்ளத்தில் வேரூன்றி வளர்ந்து வந்தது.

ஆங்கில இலக்கிய வரலாறு பற்றிய நூல்களில் ஒரு நூலின் ஆசிரியர் பெயர், அவரது வாழ்க்கைச் சுருக்கம், காலம், அவர் செய்த நூல்கள், அந்நூற் செய்திகளின்

சுருக்கம், அவை பற்றிய இலக்கிய வரலாற்று ஆசிரியர் கருத்துக்கள் என்னும் முறையில் செய்திகள் காணப்படுகின்றன. இம்முறை வரவேற்கத்தக்கது.

ஏறத்தாழ இம்முறையைத் தழுவி வங்கமொழி இலக்கிய வரலாறு திருவாளர் தினேஷ் சந்திர சென் என்பவரால் 840 பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்நூலின் விலை ரூபாய் 25. மேலே காட்டப்பெற்ற முறையைத் தழுவித் தமிழிலக்கிய வரலாற்றை எழுத வேண்டும் என்னும் எண்ணம் எனக்குண்டாயிற்று.

யான் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியனாகவும் தமிழ்த்துறைத் தலைவனாகவும் இருந்த போது, தமிழிலக்கியம் பற்றி ஆறு சொற்பொழிவுகள் மதுரை மாவட்ட ஆசிரியர்களுக்கு ஆற்றவேண்டும் என்று கல்வித்துறை இயக்குநர் பத்மஸ்ரீ நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் ஆணை பிறப்பித்தனர். யான் அவ்வாணையின்படி மதுரை யூனியன் கிறிஸ்தியன் உயர்நிலைப்பள்ளியில் 1956 ஏப்ரலில் ஆறு சொற்பொழிவுகள் ஆற்றினேன். என் சொற்பொழிவு முறையில் நூலை எழுதும்படி ஆசிரியர் பலர் வற்புறுத்தினர். யான் அவர்கள் விருப்பத்திற்கிசைந்து அச்சொற்பொழிவுகளை அடிப்படையாகக்கொண்டு விரிந்த முறையில் தமிழிலக்கிய வரலாற்றை எழுதத் துணிந்தேன்.

பெரும்பாலரான தமிழ் மக்களுக்கு ஒவ்வொரு தமிழிலக்கியத்தையும் படித்துச் செய்திகளையறியப் போதிய நேரமோ வாய்ப்போ இல்லை. ஆதலின் ஒவ்வொரு நூலைப்பற்றியும் சுருங்கிய முறையில் செய்திகளையறிய இலக்கிய வரலாற்று நூல் துணைபுரிய வேண்டும்—அந்நிலையிற்றான் அவர்கள் ஒவ்வொரு காலத் தமிழர் நாகரிகத்தையும் மொழி வளர்ச்சியினையும் மொழி மாறுதல்களையும் அறிதல்கூடும் என்னும் எண்ணம் உந்தியதால், ஒவ்வொரு நூலைப்பற்றியும் தேவையான செய்திகளை மட்டும் தருதல் நன்றெனத் துணிந்தேன்.

இம்முறையினால் நூல், அளவில் பெருகலாயிற்று. அதனால் சங்ககால இலக்கிய வரலாறு மட்டும் 600 பக்க

அளவில் ஒரு தனி நூலாக உருவெடுத்தது. நூல் அளவில் பெருகின் விலையும் மிகும். ஆதலால் யான் முதலில் விரிவாய் எழுதிய நூலை மிகத் தேவையான செய்திகளை மட்டும் கொண்ட நூலாகச் சுருக்கினேன். அங்ஙனம் சுருக்கப்பட்ட நூலே இது.

இந்நூலில் மொழியின் தோற்றம் வளர்ச்சி—இலக்கியம்—இலக்கியத் தோற்றம் என்பவை முன்னுரைச் செய்திகளாகத் தரப்பட்டுள்ளன. அடுத்துச் சங்ககால இலக்கியத்திற்கு இந்திய வரலாறும் இலங்கை வரலாறும் அயல்நாட்டார் குறிப்புகளும் எந்த அளவு துணை செய்கின்றன என்பது விளக்கப்பட்டுள்ளது.

அடுத்து முச்சங்கங்கள் வரலாறு—மதுரையில் தமிழ்ச் சங்கம் என்பவை பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துத் தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களின் காலமும், நூற் செய்திகளும் பிறவும் விளக்கப்பட்டுள்ளன.

''இலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு நூலின் காலத்தையும் ஆராய்ந்து முடிவு கட்டுதல் இன்றியமையாதது. ஆயின், இக்கால ஆராய்ச்சி மட்டும் இலக்கிய வரலாறு ஆகாது. வரலாற்றில் பல காலங்கள் உண்டு. ஒருகால இலக்கியத்திற்கும் அடுத்தகால இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுதல் வேண்டும். ஒரு காலத்து இலக்கிய நூல்கள் எவ்வெச்சூழ்நிலையில் உருவாகியுள்ளன என்பதும் விளக்கப்படல் வேண்டும். ஒரு காலத்துக்கு உரிய நூல்களை அக்கால அரசியல், பொருளாதார இயல், சமூக இயல் முதலியவை எங்ஙனம் வளர்த்தன என்னும் உண்மையும் விளக்கப்படல் வேண்டும்.

''காலக் கணக்கு மட்டும் கூறுவது நன்றன்று. ஒரு மொழி பேசிய மக்களினம், அவ்வினத்துப் பிரிவுகள், அவ்வினத்தவர் தொழில்கள், வாழ்க்கை முறை இவற்றை

ஆராய்ந்து சமூக மாறுதலுக்குரிய நிலைமைகளை விளக்கி, வரலாற்றுப் பின்னணியில் இலக்கிய வளர்ச்சியை விளக்குதல் வேண்டும்.

''மனிதனது வாழ்க்கையில் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. அவ்வாறே இலக்கிய உலகத்திலும் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. மாறுதல்கள் இருப்பினும் ஒருமைப்பாடும் காணப்படும். மணிகள் பல நிறத்தனவாயினும் அவை கோக்கப்பெறும் நூல் ஒன்றியிருப்பது போல—வேறுபாடுகளுக்கிடையே ஒருமைப்பாடு இருக்கும். இலக்கிய உலகிலும் அவ்வொருமைப்பாடு உண்டு. அதனைச் சுட்டிக் காட்டுவது இலக்கிய வரலாற்றாசிரியரது கடமையாகும்.''

திரு. வி. சுப்பராவ் என்ற தெலுங்குப் புலவர் 1920இல் எழுதிய ''ஆந்திர வான்மய சரித்திரம்'' என்னும் தெலுங்கு இலக்கிய வரலாற்று நூலுக்குத் தாம் வரைந்த முன்னுரையில் காலஞ்சென்ற பேரறிஞர் டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்கள் மேற்கண்ட கருத்தினைத் தெரிவித்துள்ளனர். தெலுங்கிலுள்ள இச்செய்தியைப் படித்து, யான் எழுதியுள்ள முறை தக்கதே என்பதை எனக்குத் தெரிவித்து ஊக்கியவர் என் கெழுதகை நண்பர் **வேதம் வேங்கடராய சாஸ்திரியார், M. A.** ஆவர். அவருக்கு எனது நன்றி உரியது.

கல்வித்துறை இயக்குநரவர்கள் மதுரையில் என்னைத் தமிழ் இலக்கிய வரலாறு பற்றிப் பேசுவித்தமையே இந்நூல் வெளிவரச் சிறந்த அடிப்படையாகும். தமிழகத்துக் கல்வித் துறையில் ஓய்வின்றி உழைத்து வரும் அப்பெருமகனார்க்கு என் வணக்கமும் நன்றியும் உரியவாகும்.

இவ்வாராய்ச்சி நூலை வெளியிட இசைவு தந்த சென்னைப் பல்கலைக் கழக ஆட்சியாளர்க்கு (Syndicate) எனது நன்றியும் வணக்கமும் உரிய.

கல்விக்கும் மருத்துவத்திற்கும் அருந்தொண்டாற்றி வருபவரும், உலகப் பெரியாருள் ஒருவரும், சென்னைப்

பல்கலைக் கழகத் துணைவேந்தருமான டாக்டர் சர். ஆ. இலக்குமணசுவாமி முதலியார் அவர்கட்கு இந்நூலை உரிமையாக்க இசைவு நல்கும்படி அப்பெரியாரவர்களை வேண்டினேன். அருள் உள்ளம் கொண்ட அவர்கள் எனது வேண்டுகோளுக்கு இசைந்ததே யான் பெற்ற பெரும் பேறாகும். அம் மூதறிஞரவர்கட்கு என் வணக்கமும் நன்றியும் உரியவாகும்.

இங்ஙனம் விரிவான முறையில் இலக்கிய வரலாறு வருவது நல்லதே எனக் கூறி எனக்கு ஊக்கமளித்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவராயுள்ள பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்கு என் உளமார் நன்றியும் வணக்கமும் உரிய.

என் திருமகன் மா.ரா. இளங்கோவன் (M. A.), என் திருமகள் மா. ரா. தமிழரசி (M A.) ஆகிய இருவரும் இந்நூலைப் பிழையறப் படியெடுத்தனர்; அச்சுப் படிகளைப் படித்துத் திருத்தினர். இவ்விருவர்க்கும் நல்லாசி வழங்கும்படி அங்கயற்கண்ணியோடமர்ந்த ஆலவாயண்ணலை வேண்டுகிறேன்.

மா. இராசமாணிக்கம்

# உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | **தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்**<br>மொழியின் தோற்றம்—சொற்களின் தோற்றம்—ஐவகை நிலம்—மொழி வளர்ச்சி—மொழி நிலைகள்—எழுத்து வளர்ச்சி—தமிழ் எழுத்துக்கள்—பிறமொழிக் கலப்பு. | ... | 17 |
| 2. | **தமிழின் தொன்மை**<br>திராவிட மொழிகள்—வட இந்தியாவில் திராவிடம்—வேறு சான்றுகள்—முடிவுரை. | ... | 30 |
| 3. | **இலக்கியம்**<br>இலக்கியம்—இலக்கியத் தோற்றம் | ... | 35 |
| 4. | **சங்ககால இலக்கியம்**<br>வாழ்க்கையின் உயிர் நாடி—அகப்பொருள் இலக்கணம்—களவொழுக்கம்—அறத்தொடு நிற்றல்—கற்பு வாழ்க்கை—புறப்பொருள் இலக்கணம். | ... | 39 |
| 5. | **மதுரையில் தமிழ்ச்சங்கம்**<br>முச்சங்கங்கள் பற்றிய செய்தி—சங்கம் இருந்தமைக்குப் பிற்காலச் சான்றுகள்—சங்க நூற் சான்றுகள்—சங்ககாலம். | ... | 54 |
| 6. | **சங்ககால வரலாறு**<br>1. கடல் வாணிக வரலாறு<br>2. இந்திய வரலாறு<br>3. இலங்கை வரலாறு | ... | 65 |
| 7. | **தொல்காப்பியம்**<br>1. தொல்காப்பியத்தின் பழைமை<br>2. தொல்காப்பியத்தின் காலம்<br>3. தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகள்<br>எழுத்ததிகாரம்—சொல்லதிகாரம்<br>பொருளதிகாரம். | ... | 91 |

பக்கம்

4. தொல்காப்பியருக்கு முற்பட்ட நூல்கள்
5. தொல்காப்பிய உரையாசிரியர்கள் : இளம்பூரணர்—சேனாவரையர்—பேராசிரியர்—நச்சினார்க்கினியர்—தெய்வச்சிலையார்—கல்லாடர்.

8. திருக்குறள் ... 138

திருக்குறளும் மணிமேகலையும்—மணிமேகலையின் காலம் என்ன?—திருக்குறளின் பழைமை—திருக்குறளும் சங்க நூல்களும்—திருவள்ளுவர் காலம்—திருக்குறட் சிறப்பு.

9. எட்டுத்தொகை ... 163

1. எட்டுத்தொகை: ஐங்குறுநூறு—குறுந்தொகை—நற்றிணை—அகநானூறு—கலித்தொகை—பதிற்றுப் பத்து—பரிபாடல்—புறநானூறு.
2. புறநானூற்றின் காலம்: முன்னுரை—புறநானூறு—புறநானூற்றின் காலம்—பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்—தருமபுத்திரன்—வான்மீகியார்—நெடியோன்—கரிகாலன்—நெடுமுடிக்கிள்ளி—பிற சோழவேந்தர்.

10. ஐங்குறுநூறு ... 182

முன்னுரை—ஐங்குறுநூற்றுப் புலவர்கள்—பேரரசரும் சிற்றரசரும்—ஊர்கள்—சிறப்புச் செய்திகள்—அணிகள் — விளையாட்டுகள்-மேற்கோள்-அந்தணர் கூட்டுறவு.

11. குறுந்தொகை ... 191

முன்னுரை—குறுந்தொகையைப் பாடிய புலவர்கள் — பெண்பாற் புலவர்கள் — அரசர் — சிற்றரசர் — ஊர்கள்—சிறப்புச் செய்திகள் — அணிகள்—பண்பாடு—மேற்கோள்—வடசொற்கள்.

12. நற்றிணை ... 206

முன்னுரை — நற்றிணையில் செய்யுட்களைப் பாடிய புலவர்கள்—அரசரும் சிற்

பக்கம்

றரசரும்—அரசியல்—ஆயன்— ஊர்கள்—உடை—வாணிகம்—கலைகள்—சமயம் —பண்பாடு—மேற்கோள்—உவமை முதலியன—வடசொற்கள்.

13. அகநானூறு ... 221

முன்னுரை—அகநானூற்றில் இடம்பெற்ற புலவர்கள்—நந்தர்கள்—மோரியர் படையெடுப்பு—பேரரசர் — சிற்றரசர்—பாணர்கள் (Banas) — கங்கர் — திரையர்—ஊராட்சி—தமிழர் திருமணம் — சமயச் செய்திகள் — நாகரிகம் — பண்பாடு—புராணக் கதைகள்—வட சொற்கள்.

14. கலித்தொகை ... 235

கலித்தொகையின் புதுமைகள்—கலித்தொகை ஆசிரியர்—ஐவரல்லர்—கலித்தொகையின் காலம்—ஏறுதழுவல்-தமிழ்ச் சங்கம்—கல்வி—அணிகள்-சமயச் செய்திகள்—சில உண்மைகள்—உவமை முதலியன—மேற்கோள்—வடசொற்கள்.

15. பரிபாடல் ... 254

முன்னுரை—பரிபாடல் நூல்—பரிபாடலின் காலம்—முப்பொருள் பற்றிய பாடல்கள்—இருங்குன்றம் — இருந்தையூர்—தன்பரங்குன்றம்—வையை—தமிழ் வையை-தைந் நீராடல்—அடியார் வேண்டுதல்-ஓவியம்-பேரெண்கள்—மேற்கோள்—புராண கதைகள்—வடசொற்கள்—வடமொழிப் பெயர்கள் மொழிபெயர்ப்பு.

16. பதிற்றுப் பத்து ... 275

முன்னுரை—பாடல் பெற்ற சேரர்—சேரர் கொடை — பதிற்றுப்பத்தின் காலம்—பதிகங்கள் — சேரர் வீரம் — கொடைச் சிறப்பு—ஆட்சிச் சிறப்பு—படையெடுப்பு உழிஞைப் போர்—பாசறை—சமயச் செய்திகள்—நகரங்கள் — வருணனை — வாழ்த்து முறை—மேற்கோள்-வடமொழியாளர் செல்வாக்கு.

பக்கம்

17. புறநானூறு ... 289
முன்னுரை-புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய புலவர்கள்—பேரரசரும் சிற்றரசரும்—ஆட்சிச் சிறப்பு—அரசர் ஒழுக்கம்-தமிழ்ப் புலவர்கள்—தமிழரசரும் புலவரும்—சிற்றரசர்—தமிழ் வீரர்—சமயம்—தமிழர் வடநாட்டு அறிவு—பண்பாடு—அந்தணர்—வடசொற்கள்.

18. பத்துப்பாட்டு ... 304
முன்னுரை—பத்துப் பாட்டின் காலம்—திருமுருகாற்றுப் படையின் காலம்—பத்துப் பாட்டு என்னும் பெயர்—திருமுருகாற்றுப் படை—பொருநராற்றுப்படை—சிறுபாண் ஆற்றுப்படை—பெரும்பாண் ஆற்றுப்படை — முல்லைப்பாட்டு — மதுரைக் காஞ்சி—நெடுநல்வாடை—குறிஞ்சிப் பாட்டு—பட்டினப்பாலை—மலைபடுகடாம்—உயிர்காட்சிச்சாலை -வாணிகம்-அந்தணர் செல்வாக்கு-புராண கதைகள் வடசொற்கள்.

19. சிலப்பதிகாரம் ... 331
சிலப்பதிகார காலம் - சிலப்பதிகாரச் சிறப்பு-திருமணச் சடங்குகள்-நடனக் கலை இசைக்கலை-இந்திர விழா-தமிழர் வீரம்-அக்காலப் பெருவழிகள்-சிறப்புச் செய்திகள்-இளங்கோவடிகள் சிறப்பு-வடமொழியின் செல்வாக்கு-வடசொற்கள்.

20. மணிமேகலை ... 358
ஆசிரியர்-நூலின் அமைப்பு-இந்திர விழா உடலின் இழிவு-உடல் அடக்க முறைகள்-அரசியல் அறிவுரை-பசிப்பிணி என்னும் பாவி-உண்டி கொடுத்தோர் சிறப்பு-தலயாத்திரை - கணிகையர் இயல்பு-கணிகையர்க்குத் தண்டனை-அறம் செய்யக் காரணம்-அரச நீதி-தீயவை பத்து-அரசர்க்கு அறிவுரை - சமயக் கருத்துகள்-பாண்டுகம்பளம்-விருப்பப்படி பிறப்பு-அறத்தின் சிறப்பு-வருணனை-கதைகள் பிறமொழிச் சொற்கள்-முடிவுரை.

# தமிழ் மொழி—இலக்கிய வரலாறு

## 1. தமிழின் தோற்றமும் வளர்ச்சியும்

இதாலிமொழியைத் தாந்தே என்னும் கவிஞரும், ஆங்கில மொழியைச் சாஸர் என்னும் அறிஞரும், ஜர்மன் மொழியை லூதர் என்பவரும், டச்சுமொழியைக் கிறிஸ்தியெர்ன் பெடெர்சன் என்னும் பெரியாரும் உண்டாக்கி வளர்த்தனர் என்று பழங்கால ஐரோப்பியர் நம்பி வந்தனர்.[1] இங்ஙனமே வடமொழியைப் பாணினிக்கும், தென்மொழியை அகத்தியருக்கும் சிவபெருமான் கற்பித்தார் என்று பழங்காலத் தமிழர் நம்பினர். ஆயின், மொழி மக்களது உள்ளுணர்விலிருந்து தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சி பெற்றுவரும் ஒரு கலை என்பது இன்றைய மொழிவல்லுநர் துணிபாகும்.

### மொழியின் தோற்றம்

மலைநாட்டு மக்களாகிய கொண்டர், சவரர், துதவர் முதலியவர் உணர்ச்சிவயத்தால் ஆடுவர்; ஆடிக்கொண்டே பாடுவர். இவ்வாறே பழங்கால மக்களும் ஆடிய நேரங்களிலெல்லாம் வாய்க்கு வந்தவாறு பாடிவந்தனர். அவர்தம் பாடல்கள் முதற்கண் பொருளில்லா வெற்றொலிகளாக இருந்தன; நாளடைவில் படிப்படியாகப் பொருள்களை உணர்த்தத் தொடங்கின. ஒவ்வோர் ஒலியும் தான் தோன்றிய இடமும் காலமும் காரணமும் பற்றி ஒரு பொருளையோ தொழிலையோ உணர்த்தத் தொடங்கியது. இங்ஙனம்

---

1. **Otto Jespersen, Mankind, Nation and Individual, p. 51.**

முதலில் பொருளில்லா வெற்றுரைகளாக இருந்த ஒலிகள் காலப்போக்கில் கருத்தை உணர்த்தும் சொற்களாயின என்பது அறிஞர் கருத்து.

முதலில் மனிதன் பாடுதற்கு மட்டும் அறிந்திருந்தான்; பின்புதான் பேசத்தொடங்கினான். அதனால்தான் ஒவ்வொரு நாட்டு இலக்கியத்திலும் பாட்டு முற்பட்டதாகக் காணப்படுகிறது, உரைநடை பிற்பட்டதாக அமைந்துள்ளது என்று அறிஞர் கூறுகின்றனர்.[2]

**சொற்களின் தோற்றம்**

முதல் மனிதனுக்கு இயல்பான மலைக்குகையே வீடாகப் பயன்பட்டது. அக்காலத்தில் அவன் இயற்கையாகப் பெற்றிருந்தவை ஒலியும் அதைப் பயன்படுத்த வல்ல அறிவுமேயாகும். அவனது குகைவீட்டில் இயற்கையான அறை ஒன்றே இருந்தது. அக்குகை வீடு போலவே, அவன் முதலில் பேசிய மொழி இயற்கையாக—அவனது வாயிலிருந்து பிறந்த ஒலித்தொடராக இருந்தது; அந்த ஒலித் தொடரில் எழுத்து, சொல், சொற்றொடர், அடிச்சொல் முதலிய பாகுபாடுகள் அப்போது அமையவில்லை.

மனிதன் மலையைப் பெரிய கற்களாக உடைப்பது போலப் பழைய மனிதன் தான் பேசிவந்த நீண்ட ஒலித் தொடர்களைப் பிரித்துப் பிரித்துச் சில பொருள்களின் குறியீடுகளாகப் பயன்படுத்த அறிந்தான். இங்ஙனம் அமைந்தனவே சொற்கள் என்பவை. பெரிய கற்பாறைகளிலிருந்து சிறிய கற்களை வெட்டியெடுப்பது போல மனிதன் அச்சொற்களை நாளடைவில் குறுக்கி எளிய ஒலித்துணுக்குகளாக அமைத்துக்கொண்டான். அவையே இன்று அடிச்சொற்கள் அல்லது வேர்ச் சொற்கள் என்பவை.[3]

---

2. Otto Jespersen, Language, etc., pp. 436—437.
3. டாக்டர் மு. வரதராசனார், மொழி வரலாறு, பக். 223-224,

குகையில் வாழ்ந்த மனிதன் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெற்ற அறிவு வளர்ச்சியின் காரணமாகவே குடிசைவீடு கட்ட அறிந்தான்—கருங்கல் வீடு கட்டத் தெரிந்தான்—மண்ணைச் செங்கல்லாக்கிச் செங்கல் வீடு கட்டஅறிந்தான்—வானளாவிய மாடமாளிகை கட்டும் வன்மை பெற்றான். இவ்வாறு அவன் படிப்படியாகப் பெற்ற அறிவே மொழி வளர்ச்சியிலும் அவனுக்குத் துணைபுரிந்தது.

மனிதன் தனித்து வாழும்போது மொழி தேவையில்லை. அவன் பலருடன் கூடிவாழும் பொழுதே, அவருடன் கலந்து உறவாடவும் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளவும் பொதுக் கருவி ஒன்று தேவைப்படுகிறது. அப்பொதுக்கருவியே மொழி எனப்படுவது. ஓரினமக்கள் தம் வாழ்க்கையை உயர்த்த உயர்த்த, அவ்வுயர் நிலைக்கு ஏற்பச் சொற்களும் தொகையில் பெருகுகின்றன; அஃதாவது, மொழி வளர்ச்சி அடைகின்றது. மனிதன் தன் தேவைக்குத் தக்கபடி அவ்வப் பொழுது பல பொருள்களைப் படைத்துக்கொள்வது போலவே அப்பொருள்களுக்குரிய சொற்களையும் படைத்துக்கொள்கிறான்; இங்ஙனமே பல்வேறு வகைப்பட்ட தன் செயல்களுக்கு உரிய சொற்களையும் ஆக்கிக்கொள்கிறான். நாகரிக வாழ்வும் கல்வி அறிவும் இல்லாது மலைப்பகுதிகளில் ஒதுங்கி வாழும் மக்களாகிய கொண்டர், சவரர், துதவர் முதலியோரிடம் அவர்தம் மொழிச் சொற்கள் தொகையில் சுருங்கி இருக்கின்றன. அவர்தம் அநாகரிக வாழ்வே இதற்குக் காரணமாகும். பல நாடுகளுக்கும் சென்று, பலரோடும் பழகிப் பெருவாழ்வு வாழ்ந்த தமிழர் தெலுங்கர் போன்றாரிடம் பல்லாயிரக்கணக்கான சொற்கள் இருக்கின்றன. இச்சொற்பெருக்கம் அவர்தம் நாகரிக வளர்ச்சியை நன்கு காட்டுகின்றது.

**ஐவகை நிலம்**

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். காடும் பசிய புல்வெளிகளும் உள்ள இடம் முல்லை எனப்படும். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும்.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்பெயர் பெறும். வளமற்றுப் புதர்களும் பருக்கைக் கற்களும் நிறைந்துள்ள இடம் பாலை எனப்படும்.

**குறிஞ்சி நிலத்தில்** வாழ்ந்த மக்கள் தம் பிழைப்புக்காக விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடினர்; தேன்கூடுகளை அழித்துத் தேன் எடுத்தனர்; இயற்கையாகக் கிடைத்த காய் கனிகளையும் கிழங்குகளையும் உண்டனர். இம்மக்கள் தாம் வாழ்ந்த குறிஞ்சி நிலத்தில் இருந்த மரங்களுக்கும் செடிகளுக்கும் கொடிகளுக்கும் தம்மளவில் வேறுபாடு அறிவதற்காக ஒவ்வொரு பெயரிட்டு அழைத்தனர். சந்தனம், கருங்காலி, மிளகுக்கொடி முதலிய பெயர்கள் குறிஞ்சி நில மக்களால் தமிழிற் சேர்ந்தன. குறிஞ்சி நில மலர்களின் பட்டியலைக் குறிஞ்சிப் பாட்டிற் காணலாம்[4]. அம்மக்கள் இவ்வாறே மலைக்காடுகளில் வாழ்ந்து வந்த பலவகை விலங்குகளுக்கும் பெயர்களை இட்டு வழங்கினர்; நாளடைவில் அறிவு பெற்றுத் தினை, சாமை முதலிய கூலங்களையும், கிழங்கு வகைகளையும் பயிரிட அறிந்தனர். அப்பொழுது உண்டான சொற்கள் பல. சுனை நீராடல், தேன் அழித்து எடுத்தல் முதலிய பல தொழில்களால் அவர்களிடம் தோன்றிய சொற்கள் பல. அவர்தம் தொழில்களுக்கேற்ற கருவிகளைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள் பலவாயின. காலப்போக்கில் ஆடல் பாடல் கலைகளைக் குறிக்கும் சொற்களும் அவர்களிடம் தோன்றின. இவ்வாறு குறிஞ்சி நிலத்தில் மட்டும் தோன்றி வளர்ந்த சொற்கள் பலவாகும்.

**முல்லை நிலத்தில்** ஆடு, பசு ஆகிய பால் தரும் விலங்குகள் வாழ்ந்து வந்தன. அவற்றை மேய்த்து, அவற்றின் பாலைத் தயிராக்கிப் பின்னர் மோராக்கி, வெண்ணெய் எடுத்து நெய் காய்ச்சி, அவற்றை விற்று வாழ்ந்த மக்களே முல்லை நில மக்களான ஆயர். அவர்கள் அமைதியான

4. வரி. 61—95.

வாழ்வு நடத்தினர். கால்நடைகளை மேயவிட்டு, அந்த ஓய்வு நேரத்தில் ஆம்பற் குழலும் வேய்ங் குழலும் ஊதி ஆடிப் பாடினர். அந்நிலத்தில் வளர்ந்த மரம், செடி, கொடி, பயிர் வகைகளைக் குறிக்கவும் தங்களுடைய தொழில்களைக் குறிக்கவும், பழக்க வழக்கங்களைக் குறிக்கவும், அவர்கள் உண்டாக்கிய கலைகளைக் குறிக்கவும் பல சொற்கள் தோன்றின.

வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருத நிலத்தில் ஒழுங்கான முறையில் பயிர்த்தொழில் நடைபெற்றது. அதனால் அத்தொழில் வளர வளர, அதற்குரிய பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் பெருகின. அந்நிலத்தில் பயிரான மரம் செடி கொடிகளுக்கும், பிற உணவுப் பயிர் களுக்கும் தனித்தனியே பெயர்கள் ஏற்பட்டன. இவ்வாறே அந்நிலத்தில் வாழ்ந்த விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் பெயர்கள் அமைந்தன. அந்நில மக்களுக்கும் அவர்கள் செய்து வந்த பலதுறைத் தொழில்களுக்கும் பெயர்கள் ஏற்பட்டன. ஓவியம், சிற்பம், நடனம், நாடகம், இசை, மருத்துவம் முதலிய பல கலைகளுக்கு உரிய சொற்களும் நாளடைவில் தோன்றின. மனித நாகரிகத்திற்கே மருத நிலம்தான் உயிர்நாடியானது. எனவே, பெரும்பாலான சொற்கள் மருத நிலத்தில்தான் தோன்றின என்பது உண்மையாகும்.

கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தலில் வாழ்ந்த மக்கள் மீன் பிடித்தல், மீன் விற்றல், உப்பெடுத்தல், மீனை உப்புப்படுத்தல், கடலாடுதல் முதலிய தொழில்களைச் செய்தனர். கடலில் வாழும் உயிரினங்களுக்குப் பெயர்களை இட்ட முதல் மக்கள் இந்நெய்தல் நில மக்களேயாவர். இவர்தம் ஆடல் பாடல் முதலிய தொழில்களால் உண்டான சொற்கள் பல. ஓடம், தோணி, கப்பல், பாய்மரக் கப்பல், கலம் முதலிய சொற்களை உண்டாக்கியவர்களும் இவர் களே. பலவகை மீன்களுக்கும் இவர்கள் வைத்த

பெயர்களே இலக்கியத்திலும் பேச்சிலும் இன்றளவும் இருந்து வருகின்றன.

பாலை நிலத்தில் வேட்டுவர் வாழ்ந்தனர். வழிப்பறி செய்தல், பாலைநிலத் தெய்வமாகிய கொற்றவையை வழிபடுதல் முதலியன இவர்தம் தொழில்கள். இவர்களால் உண்டான சொற்கள் சிலவாகும்.

இந்த ஐவகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் நாளடைவில் வாணிகத்துறையில் கலக்கலாயினர். அப்பொழுது ஒரு நிலத்தாரே சிறப்பாக வழங்கிவந்த சொற்கள் பிற நிலங்களிலும் பரவத் தொடங்கின. உயர்ந்த பழக்க வழக்கங்களும் பிற நிலங்களில் பரவலாயின. மக்களுக்குப் பயன்படும் ஒரு நிலத்து விலங்குகள் பிற நிலங்களுக்குக் கொண்டு செல்லப் பட்டன. இத்தகைய கலப்பு முறையால் நாளடைவில் பல சொற்கள் எல்லா நிலங்களிலும் பொது வழக்குப் பெறலாயின. இதுகாறும் கூறப்பெற்ற சொற்கள், பல்லாயிர ஆண்டுகள் கணக்கில்—மக்கள் நாகரிகம் தோன்றி வளர வளரத் தோன்றியவையாகும்.

### மொழி வளர்ச்சி

குழந்தை தொடக்க நிலையில் நாவினை அசைத்துப் பேசத் தொடங்குகின்றது; அது முதலில் ஆ, ஊ, வா, போ போன்றவற்றை ஒலிக்கின்றது. இவ்வொலிகள் நாளடைவில் வளரத் தொடங்குகின்றன. பின்பு அக்குழந்தை பெற்றோர் ஒலிப்பதைப் பார்த்துப் பார்த்து அவர் போலவே ஒலிக்கத் தொடங்குகிறது. இது **'போலச் செய்தல்' (Imitation)** என்னும் சிறப்பியல்பாகும். இச்சிறப்பியல்பால் தான் ஒருவன் தன்னிடம் இல்லாத ஆற்றல்களைப் பிறரிடம் கண்டும் கேட்டும் உணர்ந்தும் கற்றுக்கொண்டு தன்னை உயர்த்திக்கொள்ளுகிறான். இந்தப் பண்பே மனிதனது நாகரிக வளர்ச்சிக்கு முதல் அடிப்படை என்னலாம். குழந்தையின் வளர்ச்சிக்கும் இந்த ஆற்றலே காரணமாய் அமைந்துள்ளது.

முதலில் 'பனை' ஒன்றையே மரம் என்ற சொல்லால் உணர்ந்த குழந்தை, தென்னை மரத்தைப் பிறர் 'மரம்' என்று சொல்லும்போது ஏற்க மறுக்கின்றது. குழந்தை தன்னை 'நல்ல பையன்' என்று பாராட்டிய தமக்கையை, 'நல்ல பையன்' என்று பாராட்டுகின்றது; தன்னெதிரே மெல்ல நடந்து வரும் பூனையைப் பார்த்தும் 'நல்ல பையன்' என்றே கூறுகின்றது.

இவ்வாறு தொடக்க நிலையில் எந்த வேறுபாடும் உணராமல் திணை, பால் முதலியவற்றைப்பற்றி எள்ளளவும் கவலைப்படாமல் இருக்கும் குழந்தை, காலப்போக்கில் தன்னை அடுத்துள்ளோர் பேசுவதைக் கேட்டுக் கேட்டுக் கற்கும் சொற்களைப் பெருக்கிக்கொள்கின்றது.

மனிதன் தான் கற்ற சிலவற்றைக்கொண்டு மற்றவற்றை அமைத்துக்கொள்ளும் தன்மை ஒன்று உண்டு. அஃது ஒப்புமையாக்கம் (Anology) எனப் பெயர் பெறும். இவ்வொப்புமையாக்க முறையினால் பல வாக்கியங்கள் குழந்தையின் மூளையில் பதிகின்றன. 'அக்காள் வந்தாள்', 'அது வந்தது' போன்ற வாக்கியங்களைப் பலநாள் கூறக் கேட்டுப் பயின்று பெண்பால் வினைமுற்றும் ஒன்றன்பால் வினைமுற்றும் குழந்தைக்குப் பழக்கமாகின்றன. குழந்தை தனது இளமைக்காலத்தில் 'எடு' என்பதன் இறந்தகாலச் சொல்லாக 'எடுத்தார்' என்பதை அறிகிறது. பின்னர் அது 'தடு' என்பதற்குத் 'தடுத்தார்' என்றும், 'கொடு' என்பதற்குக் 'கொடுத்தார்' என்றும் தானே சொற்களை அமைத்துக்கொள்ளும் நிலையைப் பெறுகின்றது. இதே நிலையில் பல வாக்கியங்களை அமைக்கவும் குழந்தை கற்றுக் கொள்ளுகின்றது. நாளடைவில் எழுவாய் முதலிலும் பயனிலை இறுதியிலும் செயப்படுபொருள் இடையிலும் அதற்கு அடையான எண்ணுப் பெயர் அதற்கு முன்னும் அமையும் அமைப்பு நன்றாக அதன் மூளையில் பதிந்து விடுகின்றது; ''இவ்வாறு பெயர்ச்சொல்லின் வேறுபாடுகள் (Declensions), வினைச்சொல்லின் வேறுபாடுகள் (Conjuga-

tions), சொற்றொடர் அமைப்புகள் முதலிய எல்லா வற்றையும் ஒப்புமையாக்க முறையினால் எளிதில் அறிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய ஒப்புமையாக்க முறை இளம்பருவத்திலேயே நன்றாகப் பதிந்து பழகிவிடும் வாய்ப்புத் தாய்மொழியில் உள்ளது.''[5]

அச்சம், ஆவல், நாகரிக வளர்ச்சி முதலியவை பற்றி யும் புதிய சொற்கள் தோன்றுவது உண்டு. பண்டை மக்கள் இறப்பை அஞ்சினர்; அதனால் இறந்தார், செத்தார் என்னும் சொற்களைச் சொல்லவும் தயங்கினர்; இவற்றுக் குப் பதிலாகத் 'துஞ்சினார்' என்னும் சொல்லைப் பயன் படுத்தினர்; பின்பு தத்தம் சமயத்திற்கேற்றவாறு 'சிவ பெருமான் திருவடி நீழலை அடைந்தார்' எனவும், 'திரு நாட்டுக்கு எழுந்தருளினார்' எனவும், 'பரமபதம் அடைந் தார்' எனவும், 'காலமானார்' எனவும் கூறலாயினர்: 'உயிர் போய்விட்டது' என்று சொல்லத் தயங்கி, அக் கருத்தையே உணர்த்தும் 'குளிர்ந்துபோய்விட்டது' என்பதை மக்கள் கூறுகின்றனர். மக்களுடைய ஆட்சியே இலக்கண வழக்கில் ஏறுவது மரபு ஆதலின், மக்கள் இவ்வாறு சொல்வது 'தகுதி' என்றும், 'மங்கல வழக்கு' என்றும் சான்றோர் இவற்றை ஏற்றுக்கொண்டனர்.

திருமகளின் பொலிவு என்று விளக்கைப் போற்றும் வழக்கம் நம்நாட்டில் உண்டு. பெண்கள் விளக்கேற்றிய வுடன் அதற்கு வணக்கம் புரிதலைக் காணலாம். இதனால், 'விளக்கை அணை', 'நிறுத்து' என்று கூறுதல் அமங்கலம் என்றும், அவ்வாறு கூறுவதால் திருமகளின் அருள் நீங்கு மென்றும் மக்கள் அஞ்சுகின்றனர். இந்த அச்சத்தால் (விளக்கை) அமர்த்து, (விளக்கைக்) குளிரவை என்பன போன்ற புதிய சொற்கள் தோன்றியுள்ளன.[6]

---

5. டாக்டர் மு. வரதராசனார், மொழி வரலாறு, பக். 34-35.

6. ஷை, பக். 49—50.

ஒவ்வொரு கூட்டத்தார் யாதாயினும் ஒரு காரணம் பற்றி ஒரு சொற்குறியை ஒழித்து, அதனை வேறொரு சொற் குறியால் சொல்லி வந்தமையாலும் சொல்வழக்குகள் பெருகலாயின. இவ்வழக்குக்குக் 'குழூஉக்குறி' என்பது பெயர். பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்றும், யானைப்பாகர் ஆடையைக் 'காரை' என்றும், வேடர் கள்ளைச் 'சொல் விளம்பி' என்றும் வழங்கும் இவை முதலானவை குழூஉக்குறி என்பர் நன்னூலார். ஆடை விற்பவர் வாங்குவோர்க்கு விளங்காமல் தம்முள் பேசும் சொற்களும் பலவாகும். இவ்வாறே ஒவ்வொரு குழுவின ரும் பிறர் உணராத வகையில் பேசும் சொற்கள் தேவை பற்றி உண்டானவையாகும்.

**மொழி நிலைகள்**

மொழி ஆராய்ச்சி அறிஞர் உலகமொழிகளை நன்கு ஆராய்ந்து, (1) தனிநிலை மொழிகள், (2) ஒட்டுநிலை மொழிகள், (3) உட்பிணைப்புநிலை மொழிகள் என மூன்று வகையாகப் பகுத்துள்ளனர்.

(1) ஒரு மொழியில் உள்ள பெரும்பாலான சொற்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித்தனியே நின்று வாக்கிய மாக அமைந்து பொருள் உணர்த்தும் நிலை **தனிநிலை (Isolation)** என்று பெயர் பெறும். இத்தகைய மொழியில் அடிச்சொற்களே சொற்களாகும்; விகுதி இடைநிலை முதலியன இல்லை. சீனமொழி, திபெத்து மொழி, பர்மிய மொழி, சயாம்மொழி ஆகியவை இவ்வகையைச் சேர்ந் தவை.

(2) அடிச்சொற்கள் இரண்டு சேரும்போது அவற்றில் ஒன்று சிதையாமல் நிற்க, மற்றொன்று சிதைந்து நிற்கும். இவ்வாறு அடிச்சொற்கள் இரண்டும் பலவும் பொருந்தி நிற்றல் **ஒட்டுநிலை (Agglutination)** எனப்படும்.

**அறிஞன்—அறி+ஞ்+அன்**

**உண்டான்—உண்+ட்+ஆன்**

இங்கு அறி, உண் என்பவை அடிச்சொற்கள். ஏனையவை இடைச்சொற்கள் எனப்படும். இந்த இடைச்சொற்கள் மொழியின் தொடக்கநிலையில் உண்டாக்கப்பட்டவை அல்ல; பெயர்ச் சொற்களும் வினைச்சொற்களுமே நாளடைவில் சிதைந்து இவ்வாறு பயன்படுகின்றன என்பது மொழி நூலார் கருத்து. ஒரு காலத்தில் முழுச்சொற்களாக இருந்த இவை, காலப்போக்கில் உருச்சிதைந்து இடைச்சொற்களாய்ப் பெயர் வினைகளோடு ஒட்டி நிற்கலாயின. இந்நிலையே ஒட்டுநிலை என்பது. தமிழும் பிற திராவிட மொழிகளும் இவ்வொட்டு நிலையைச் சேர்ந்தவை.

(3) அடிச்சொற்கள் இரண்டு சேரும்போது, இரண்டும் சிதைந்து ஒன்றுபட்டு நிற்கும் நிலையே **உட்பிணைப்புநிலை (Inflection)** என்பது. இவ்வகை மொழியில் அடிச்சொல் தெளிவாய் நிற்பது இல்லை; பகுதி விகுதி முதலியவற்றை எளிதில் பிரித்தறிதலும் இயலாது. வடமொழியும் ஐரோப்பிய மொழிகள் பலவும் இவ்வகையைச் சேர்ந்தவை.[7] இவை நிற்க.

விகுதி இடைநிலை முதலிய இடைச்சொற்களைப்பற்றி இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியமே பேசுகின்றதெனின்,[8] தொல்காப்பியத்திற்கு முன்னரே இவ்விடைநிலைகள் இருந்திருத்தல் வேண்டுமென்பது தெளிவு. இவை தனித்தனிச் சொற்களாகப் பன்னெடுங்காலம் வழக்கிலிருந்த பின்னரே, காலப்போக்கில் சிதைந்து பெயரோடும் வினையோடும் ஒட்டி வாழும் நிலை ஏற்பட்டிருத்தல் வேண்டும். இந்நிலையை ஆழ்ந்து எண்ணிப் பார்ப்பின், **தமிழின் பழைமை காலங் கடந்த ஒன்றாகிறது** அன்றோ?

---

7. டாக்டர் மு. வரதராசனார், மொழி வரலாறு, பக். 244—249.

8. ''இடையெனப் படுவ பெயரொடும் வினையொடும்
நடைபெற் றியலும் தமக்கியல் பிலவே.''

**எழுத்து வளர்ச்சி**

பேச்சுமொழிக்குப் பன்னெடுங்காலம் பின்னரே எழுத்து மொழி தோன்றியது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. முதலில் பேசத்தொடங்கிய மக்கள் முழுக்கருத்து அமைந்த வாக்கியங்களை ஒலித்தாற் போலவே, அவற்றைக் குறிக்க ஓவியங்களை எழுதினர். இங்ஙனம் தீட்டப் பெற்றவை ஓவிய எழுத்துகள் (Ideographs) எனப்படும். ஓவிய எழுத்துத் தமிழில் 'உருவெழுத்து' எனப்படும்

> ''காணப் பட்ட உருவம் எல்லாம்
> மாணக் காட்டும் வகைமை நாடி
> வழுவில் ஓவியன் கைவினை போல
> எழுதப் படுவது உருவெழுத் தாகும்''[9]

முதலில் கண் என்னும் உறுப்பைக் குறிக்க ஓவியம் தீட்டப்பட்டது. மனிதன் அறிவு வளர வளரப் பார்த்தல், பார்வை முதலிய கருத்துகளை உணர்த்தக் கண்ணைக் குறிக்கும் ஓவியத்தால் முடியவில்லை. இவற்றைக் குறிக்கப் புதிய ஓவியங்கள் தேவைப்பட்டன. பின்பு திணை, பால், எண், இடம் ஆகிய பாகுபாடுகளையும் காலவேறுபாடு முதலியவற்றையும் உணர்த்த ஓவிய எழுத்துகள் ஓரளவு பயன்பட்டன. கருத்தும் கற்பனையும் வளர வளர, எல்லா வற்றையும் உணர்த்த ஓவியங்களால் முடியவில்லை. எனவே, ஓவியங்களாக இருந்தவை நாளடைவில் அடையாள எழுத்துகளாக (Hieroglyphs) மாறத் தொடங்கின. இங்ஙனம் மாறத்தொடங்கிய அடையாள எழுத்துகள் பிற்காலத்தில் ஒலி எழுத்துகளாக மாறின.

ஒவ்வோர் எழுத்தும் முதலில் ஓவியமாக எழுதப்பட்டுப் பொருளை நேரே உணர்த்தியது; பிறகு அந்தப் பொருளின் பெயராகிய ஒலியை உணர்த்தியது; அதன்பின்பு ஓர் அசையை உணர்த்தியது; இறுதியில் ஓர் உயிரெழுத்தை

9. யாப்பருங்கல விருத்தி, நூற்பா 96. உரை.

அல்லது ஒரு மெய்யெழுத்தை மட்டும் உணர்த்தும் நிலையை அடைந்துவிட்டது.[10]

**தமிழ் எழுத்துகள்**

தமிழகத்துக் கல்வெட்டுகள் பிராமி எழுத்திலும், வட்டெழுத்திலும், கிரந்த எழுத்திலும் அமைந்திருக்கின்றன. தொல்காப்பியத்தையும் சங்க நூல்களையும் நுண்ணறிவோடு படியாத பலர் வட்டெழுத்துகள் பிராமியிலிருந்து வந்தவை என்று எழுதிவிட்டனர். வட்டெழுத்துகள் பிராமி எழுத்துகளிலிருந்து பிறந்தவை அல்ல, கிரந்த எழுத்துகளின் திரிபும் அல்ல. வட்டெழுத்துகள் தமிழரே தமது முயற்சியால் கண்டு வளர்த்தவையாகும்.

தமிழில் இன்றுள்ள மிகப்பழைய இலக்கணம் தொல்காப்பியம். அஃது இற்றைக்குச் சற்றேறக்குறைய 2,300 ஆண்டுகட்கு முற்பட்டது என்பது அறிஞர் கருத்து. அப்பழங்காலத்தில் வாழ்ந்த தொல்காப்பியரே, தம் காலத்திலும் தமக்கு முன்னரும் இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்பதையும், பலவகை நூல்கள் இருந்தன என்பதையும் தெளிவாகக் குறிக்கின்றார். எனவே, தொல்காப்பியர்க்கு முன்னரே இலக்கண இலக்கிய நூல்கள் பல இருந்தன என்பது தெளிவு. கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் அசோகனால் பொறிக்கப் பெற்ற பிராமி எழுத்துகளைக் கொண்டு வட்டெழுத்துகள் தோன்றின என்று கூறுவோர் இந்த உண்மையை உணர்தல் வேண்டும்; உணரின், தமிழ் எழுத்துகளாகிய வட்டெழுத்துகள் தமிழராலேயே பேணி வளர்க்கப்பட்டவை என்னும் உண்மையை எளிதில் உணர்வர். மேலும், இது பற்றிய உண்மைகளை அறிய விரும்புவோர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் எழுதியுள்ள மொழிவரலாற்றைப் படித்துத் தெளிவு பெறுவாராக.[11]

---

10. டாக்டர் மு. வரதராசனார், மொழிவரலாறு, பக். 399-409.

11. பக். 426—439.

''வட்டெழுத்து ஒரு காலத்தில் இத்தமிழ்நாடு முழுமையிலும் வழக்கில் இருந்திருத்தல் வேண்டும். பல்லவர் காலத்தில் அவர்கள் ஆண்ட தொண்டை நாட்டிலும், சோழ நாட்டிலும் பிராமி எழுத்துகளின் வழிவந்த கிரந்தமும், அதனை ஒட்டி வளர்ந்த கிரந்தத் தமிழும் ஏற்பட்டன. பல்லவர்கள் வழங்கிய கிரந்த எழுத்துகளும் நாகரி எழுத்துகளும் மிகுந்த காலம் வழக்கில் இல்லை. பல்லவர்க்குப் பின்வந்த சோழர்கள் கிரந்தத்தமிழ் எழுத்துகளை நாடு முழுமையும் பரப்பினார்கள். விசயநகரப்பேரரசு தமிழகத்தைக் கைக்கொண்ட காலத்தில் நாகரி எழுத்துகளைத் தமிழகத்தில் வழக்கிற்குக் கொணர்ந்தனர். இப்பொழுது அவையே மிகுதியாகப் பயிலப்படுவனவாகும்.''[12]

## பிற மொழிக் கலப்பு

தமிழ்மொழி மிகப்பழைய காலத்தில் தமிழகத்தில் தனிநிலை பெற்று வளர்ந்துவந்தது. தமிழர் இந்தியாவில் இருந்த பல மொழி மக்களோடு காலப்போக்கில் வாணிகம், சமயம், அரசியல் இவற்றில் கலந்து உறவாடத் தொடங்கியமையால், வடமொழி, பிராக்ருதம் முதலிய மொழிச் சொற்கள் தமிழிற் கலந்தன. தொல்காப்பியர் போன்ற இலக்கண ஆசிரியர்கள் தமிழின் பழைய நிலையையும் தொன்னூலுடைமையையும் ஆராய்ந்து இயற்சொல், திரிசொல் இவையென்று சிறப்பித்துக் காட்டிப் பிறசொற்கள் தமிழின்கட் புகுதலை உடன்பட்டு, வடசொல், திசைச்சொற்கள் புகுதற்கும் விதி வகுத்தனர். ''இதனால் தமிழ் மொழிக்குக் கலப்பற்றுத் தனிநின்ற இயற்சொல்நிலை முன்பே உண்டென்பதும், அது பல்வகையானுந் தன்னோடொத்த ஆரியமாகிய வடதிசைச் சொல்லையும், பிற திசைகளில் வழங்கிய பழஞ்சொற்களையும் தன்னிடங்கொண்டதென்பதும்,

> **''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**
> **றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே''**

என்னும் தொல்காப்பியச் சூத்திரம் கொண்டு துணியலாம்''[13]

---

12. தி. ந. சுப்பிரமணியன், பண்டைத் தமிழ் எழுத்துகள், பக். 105—106.

13. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 14.

# 2. தமிழின் தொன்மை

### திராவிட மொழிகள்

இப்போது இந்தியாவில் உள்ள திராவிட மொழிகள் பன்னிரண்டு என்பது கால்டுவெல் கருத்து. அவற்றுள் ஆறு செப்பம் செய்யப் பெற்றவை; ஆறு செப்பம் செய்யப் பெறாதவை.* செப்பஞ் செய்யப்பட்டவை: தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு. செப்பஞ் செய்யப் படாதவை: துதவர் மொழி, கோத்தர் மொழி, கோந்த், கூ(கந்த்), ஒரொவன், ராஜ்மஹால் என்பன.

இம்மொழிகள் அனைத்தும் பழைய திராவிடமொழி ஒன்றிலிருந்து பிரிந்தன என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. இவை அனைத்திலும் சிறந்தது தமிழே என்றும், அதனிடந் தான் பழைய திராவிட மொழிக்குரிய அமைப்புகள் முற்றக் காணக்கிடக்கின்றன என்றும் கால்டுவெல் கூறியுள்ளார்.[1]

சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் வெளிவந்துள்ள "திராவிட ஒப்பியல் அகராதி"யில் இரண்டாயிரம் சொற்கள் வெளிவந்துள்ளன. அவை தமிழ்—தெலுங்கு—கன்னடம் மலையாளம்—துளு ஆகிய மொழிகளில் பொதுவாக வழங்கப் படுபவை.[2] அவை, இம்மொழிகள் ஒரே இனத்தவை என்னும் உண்மையை நன்கு உணர்த்துகின்றன.

ரிக்வேதத்தைச் சேர்ந்த 'அயித்ரேய பிராம'ணத்தில் ஆந்திரர் குறிப்பிடப்பட்டுள்ளமையால் வேதகாலத்துக்கு முன்னரே பழைய திராவிட மொழியிலிருந்து தெலுங்கு

---

* இப்பொழுது ஏறத்தாழ 20 என்று கணக்கிட்டுள்ளனர்.

1. Comparative Grammar of the Dravidian Languages, Int. pp. 81—83 (ed. 3)

2. Dravidian Comparative Vocabulary, vol. 1.

பிரிந்ததாகல் வேண்டும்.[3] கன்னடமொழி, கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட காலத்திலேயே வேறுபட்டிருத்தல் கூடியதே என்பது, கி.மு.வில் செய்யப்பட்ட உரோம நாடகமொன்றில் கன்னட மொழிச் சொற்களமைந்த காட்சி ஒன்று காணப்படலால் நன்கறியக்கிடக்கிறது. ''வடவேங்கடம் தென்குமரி'' எனப் பனம்பாரனார் பாயிரம் தமிழகத்தெல்லை கூறலாலும் தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னரே (சுமார் கி.மு. 300-க்கு முன்பே) கன்னடம் தனி மொழியாயிற்றென்னும் உண்மையை உணரலாம்.

மலையாள நாடே தமிழ் நாடாக இளங்கோ அடிகள் காலத்தில் இருந்ததென்பது இலக்கியம் கண்ட சான்று. கன்னடத்தின் தொடர்பாலும், கிரந்த எழுத்துகளின் வன்மையாலும், நம்பூத்ரிகள் செல்வாக்காலும், பௌத்த—சமண சமயப் பிரசாரம் வடமொழி கலந்த தமிழில் செய்யப்பட்டமையாலும், அங்கிருந்த தமிழ் கொடுந்தமிழாகி மிகப் பிற்பட்ட காலத்தே வேறு பிரிந்தது. இதனைத் தமிழின் உடன் பிறந்தாள் என்பதைவிட 'மகள்' எனக் கூறலே மாண்புடைத்து.[4]

கன்னடம் வேறுபட்ட காலத்திற்குப் பிறகு கன்னடத்தினின்று சிறிதளவு வேறுபட்டுப் பிரிந்தது 'துளு' என்னல் தவறாகாது. குடகு மொழி தமிழின் தூய்மையைப் பலவழிகளிலும் போற்றிவருகிறது. அதன் மொழியமைப்பு, நடை ஆகிய இரண்டும் தமிழ்—மலையாள மொழிகளை ஒத்துள்ளது. கன்னடரும் மலையாளிகளும் பழக்கங்களில் பிற்காலத்தில் மாறினாற்போலக் குடகு நாட்டார் மாறாமல் பண்டைத் திராவிடர் நாகரிகத்தை இன்றும் பெரிய அளவில் பின்பற்றுதல் கவனிக்கத் தக்கது.[5]

இனிச் செப்பஞ் செய்யப்படாத திராவிட மொழிகளைக் காண்போம். துதவர் மொழி பழைய கன்னடத்திலிருந்து

3. C.G. (Int.) p. 26; 'Dravidic Studies', p. 32.
4. Comparative Grammar, Int. pp. 18-19.
5. Ibid p. 33.

கிளைத்ததாகும். **கோத்தர்** மொழியும் பழைய கன்னடத்தோடு தொடர்புடையது. **கோந்த்** மொழி தமிழ் மொழியுடன் நெருங்கிய ஒற்றுமையுடையது. **கூ அல்லது கந்த்மொழி** தமிழையும் கன்னடத்தையும் தழுவியுள்ளது. **ராஜ்மஹாலி**லும் **ஒரொவனி**லும் திராவிடச் சொற்கள் நிரம்பவுள்ளன.[6]

துதவர் மொழியும் கோத்தர் மொழியும் நீலகிரி மலைகளில் வாழும் துதவரும் கோத்தரும் பேசும் மொழிகள். கோந்த் மொழி நடு இந்திய மலைவாணருள் பெரும் பிரிவினர் பேசுவது. கூ அல்லது கந்த் மொழி பேசுவோர் கோந்த் வானாவின் கிழக்குப்பகுதி, ஒரிஸ்ஸா மலைத் தொடர்கள், பஸ்தர் வரையிலுள்ள மலைப்பகுதிகள் ஆகிய இடங்களில் வாழ்கின்றனர். ஒரொவன் மொழி நடு மாகாணத்து நாகபுரியிலும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மலைப் பகுதிகளிலும் பேசப்படுகிறது. ராஜ்மஹால் மொழி வங்க மாநிலத்தில் கங்கையாற்றுக்குத் தெற்கே உள்ள ராஜ்மஹால் மலைகளிலுள்ள மக்களால் பேசப்படுவது.

இவை செப்பஞ் செய்யப்படாத மொழிகளாயினும் தென்னாட்டு மொழிகளை ஒத்திருத்தலை நோக்க, இம்மொழிகள் பரவியிருந்த—இருக்கின்ற இடங்களை நோக்க, ஆரியர் வருகையால் சிதறுண்ட இம்மக்கள் மலைப்பகுதிகளிற் சென்று வாழலாயினர் என்பதும், அங்ஙனம் சென்ற போதிருந்த நிலைமையிலேயே இம்மொழிகள் பெரிதும் அமைந்துள்ளன என்பதும், பின்னர் ஆரியமக்கள் தொடர்பால் மிகச் சிறிதளவே இவை வேறுபட்டுள்ளன என்பதும் ஈண்டு உணரத்தகும் செய்திகளாகும்.

### வட இந்தியாவில் திராவிடம்

பலுசிஸ்தானத்தின் வட பகுதியில் 'பிராஹுய்' என்னும் மொழி ஒன்று வழக்கில் உள்ளது. மலைவாணர் அம்மொழியைப் பேசுகின்றனர். அது திராவிட மொழியைச் சேர்ந்தது.

---

6. Comparative Grammar, pp. 625—632.

என்று கூறுதலே ஏற்புடையது எனக் கால்டுவெல் கூறுதல் கவனிக்கத்தக்கது.[7]

தமிழுக்கே உரிய பால்பகா அஃறிணைப்பெயர் இம் மொழியில் காணப்படலும், இப்பிராஹுய் பேசுவோர் தென்னிந்தியத் தமிழ் மக்களை எல்லாக் கூறுகளிலும் ஒத்துள்ளமையும் அவர்கள் தமிழரே எனக்கூறத் துணிவு தருகிறது. 1911 இல் எடுக்கப்பட்ட மக்கட் கணக்கிலும் பிராஹுய் மொழியைத் திராவிட மொழிகளிலேயே சேர்க்கப்பட்டதும் கவனிக்கத்தக்கது. "பிராஹுய் திராவிட மொழி எனக் கூறக்கூடவில்லை; ஆயினும், அது திராவிட மொழியின் உயிர்நாடியைப் பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை." எனவே, பலுசிஸ்தானத்துக்கு அருகில் மிகப் பழைய திராவிட நாகரிகம் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது.[8]

"'யான்', 'நான்' என்பன தமிழ், மலையாளம், கூ., கோந்த் மொழிகளில் இருந்தல்—மிகப்பழைய மொழிகள் எனப்படுவனவற்றின் காலஎல்லையையும் கடந்து செல்கிறது. இன்றுள்ள நூல்கள் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகள் பழைமையுடையவை. இக்காலத்தைப்போல மூன்று மடங்கு காலம்—அதாவது, மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு பண்டைத் தமிழரும் கோந்த் மக்களும் வட இந்தியாவில் ஒன்றுபட்டிருந்து ஒரே மொழியைப் பேசிவந்த காலத்திற்கு 'நான்—யான்' என்பன நம்மை அழைத்துச் செல்கின்றன." இது கால்டுவெல் கூற்று.[9]

இப்போதுள்ள தமிழ் நூல்களில் பழைமையானது தொல்காப்பியம். கால்டுவெல் காலத்தில் தொல்காப்பியம் வெளிப்படவில்லை. அதன் காலம் சுமார் 2300 ஆண்டுகட்கு முற்பட்டதெனக் கொள்ளலாம். அக்காலத்துக்கு மும்முறை

---

7. Comparative Grammar, pp. 39, 633.

8. Ibid. p. 633. 9. Ibid. p. 368.

மிகுதிப்பட்ட காலத்தே பண்டைத் தமிழரும் கோந்த் மக்களும் வடஇந்தியாவில் ஒன்றுபட்டிருந்து ஒரே மொழியைப் பேசிவந்த காலத்துக்கு 'நான்—யான்' என்பன நம்மை யழைத்துச் செல்கின்றன, என்று கால்டுவெல் கூற்றை நாம் திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டும்.

இங்குக் கூறப்பெற்ற மக்களுள் கோந்த் வகுப்பினர் பழைய தமிழ்ப் பழக்கவழக்கங்களை இன்றும் விட்டிலர் என்பதை அறிதல் வேண்டும் அவர்கள் நிலமகளைத் 'தரி(ரை)ப் பெண்' என்று அழைக்கின்றனர்; வழிபடுகின்றனர்.[10] தொல்காப்பியம் சற்றேறக்குறைய 2300 ஆண்டுகட்கு முற்பட்டது. அதைவிட இரண்டு மடங்கு காலம் சென்றிருக்க வேண்டும் என்னும் கூற்றால் சுமார் 7000 **ஆண்டுகட்கு முன்னரே தமிழர்—கோந்த்மொழியினர் முதலியோர் ஒன்றாக நடு இந்தியாவில் வாழ்ந்துவந்தனராதல் வேண்டும்** என்னும் கால்டுவெல் கூற்று நோக்கத் தக்கது.

''பிராக்ருத மொழிகள் இப்போதுள்ள வடஇந்திய மொழிகளாக மாறுவதற்கு **நெடுங்காலமுன்பு 'கூ' வகுப்பாரும் தமிழரும் நடு இந்தியாவில் ஒன்றுபட்டவராய் ஒரே மொழி பேசியவராய்** (வரலாற்றுக் காலத்துக்கு நெடுங்கால முன்பு) **இருந்திருத்தல்வேண்டும்**. என்னை? கூ மொழியிலும் பன்மையைக் குறிக்கப் பிரதிபெயர்ச் சொற்களில் 'ம்' (நாம், நீம், தாம்) வழங்கப்பட்டிருத்தலே போதிய சான்றாதலின் என்க.''[11]

''திராவிட மொழிகளைப் பேசும் மக்கள் (கோந்த் பேசுவோர், கூ பேசுவோர் முதலியோர்) நடு இந்தியாவிலும் வங்காளத்தின் அருகிலும் இன்னும் காணப்படல்—இந்தியா

10. Thurston, Castes and Tribes of Southern India, vol. 3, p. 372.

11. Caldwell, Comparative Grammar, p. 412.

வின் பெரும் பகுதியில் திராவிட மக்கள் இருந்தமையை இனிது விளக்குவதாகும்.''[12]

''வங்காள மக்களிடையே மிகப்பரந்த அளவில் திராவிடக் கலப்பு ஏற்பட்டு உள்ளது. வங்காளத்திலும் சூடிய நாகபுரி, ஒரிஸ்ஸா போன்ற இடங்களிற் பரவியுள்ள 'ப்ருஹியர்' திராவிடரே யாவர். 'காக்' என்பவரும் இவ் வினத்தையே சேர்ந்தவர். இவ்விருவர் தொகை ஏறக்குறைய நாற்பது இலட்சம் ஆகும்.''[13]

**வேறு சான்றுகள்**

இதுகாறும் கூறியவாற்றால், ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியா முழுமையிலும் திராவிடமொழி பரவி இருந்தது என்பது நன்கு புலனாயிருக்கும். இங்ஙனம் பரவியிருந்தமை உண்மை என்பதைப் பின்வரும் உண்மைகளும் மெய்ப்பித்தல் காண்க:

''வடமொழியில் சில சொற்கள் வேற்று முகத்துடன் காணப்படுகின்றன. அவற்றின் பகுதி முதலியவற்றை வட மொழித் துணைக்கொண்டு அறியக் கூடவில்லை. அவை வட மொழியல்லாத பழைய இந்திய மொழியைச் சேர்ந்தவை யாக இருத்தல் வேண்டும். பழையமொழி ஒன்று வட மொழின் உயிர் நாடியிலேயே கை வைத்துவிட்டதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.''[14]

**கோட்டா** (Ghota) என்பது குதிரையைக் குறிக்கும் வட சொல். குர்ரம்—தெலுங்கு, குதிரை—தமிழ், குதிர—மலை யாளம், குதுரெ—கன்னடம், குத்ரெ—துளு. குதிரை இந்தி யாவில் உள்ளது. எனவே, வடசொல் (கோட்டா) திராவிடச்

---

12. Caldwell, Comparative Grammar, Int. p. 37.
13. Col. Dalton, 'Ethnology of Bengal', p. 243.
14. Dr. Beames, A Comparative Grammar of the Modern Aryan Languages of India, p. 128

சொல்லிலிருந்தே வந்திருக்க வேண்டும். அங்ஙனமாயின், தக்கணப் பகுதிக்குத் தென்பால் உள்ள திராவிட மொழிகள் ஒரு காலத்தில் வட இந்தியாவில் (ஆரியர் வந்தபோது) இருந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகும். எனவே, **இந்தியாவில் ஆரியமொழிக்கு முற்பட்டது திராவிட மொழியாகும்.**[15]

வடமொழியும் திராவிட மொழியும் நீண்ட காலம் ஒன்றோடொன்று நெருங்கி இருந்தன என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.[16]

விசிறி—தமிழ், விசனகர்ர—தெலுங்கு. வீசரி—மலையாளம், பீசணிகெ—கன்னடம்; வீஜன, வ்யஜன—வட சொற்கள். இச்சொல்லும் திராவிட மொழியினின்றும் கடன் வாங்கப்பட்டதே. இங்ஙனமே மயூரம் (மயில்), பல (பழம்), ஓடா (ஓடம்), முக்தா (முத்தம்) என்பன.

ஆரியர் வேற்று நாட்டிலிருந்து வந்தவர். ஆதலின் அவர்கள் இந்தியாவில் கண்ட புதிய செடிகட்கும் மரங்கட்கும் வேறு பொருள்கட்கும் உரிய சொற்களைக் கடன் பெற்றிருத்தல் இயல்பே. எனவே, அவர்கள் பஞ்சாப் பகுதியில் குடியேறியதும், அங்கிருந்த திராவிடரோடு கலப்புண்டு திராவிடச் சொற்கள் பலவற்றைப் பெற்றிருத்தல் இயல்பே. **ஆரியரது முதல் வேதமாகிய ரிக் வேதத்திலேயே பல திராவிடச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.** அவை கதலி (வாழை), ஓடா (ஓடம்), முக்தா (முத்தம்), தாம்பூலா

---

15. Pre-Aryan and Pre-Dravidian in India, pp. 47—49.

16. Ibid. p. 52; 'பூஜை' என்பது வடமொழிச் சொல்லாயினும், திராவிட மூலத்தையே கொண்டிருத்தல் வேண்டுமென்பது ஆராய்ச்சியாற் புலனாகும். -Dravidic Studies, vol. iii, p. 60.

(தமல ஆக்கு-தெலுங்கு) முதலியன. ''லிங்க (லிங்கம்) என்பது ஆரியச் சொல் ஆகாது.[17] 'யமன்' என்பது வடமொழி கடன் பெற்ற திராவிடச் சொல்.[18] மலைய, வளைய, பட்டின, கடம்ப என்பவை தமிழ்ச் சொற்களே.[19] ஆரியர் வருகைக்கு நீண்டகால முன்னரே திராவிடர் இந்தியா முழுமையும் பரவியிருந்தனர் என்பதில் ஐயமில்லை.[20]

''த, ட—இவற்றை முதலாகக் கொண்ட சொற்கள் 'சிந்தி மொழியில்' ஆரியச் சொற்களாகக் காணப்பட்டில. 'த, ட' இரண்டுமே ஆரியத்துக்கே புதியவை. எனவே, இவை பழைய இந்திய மொழி ஒன்றிலிருந்து கடன் பெற்றன வாதல் வேண்டும். இவை திராவிட மொழிக்கே உரியவை.[21]

''இந்து எண்ணங்கள் முதலியன உரம் பெறாத ரிக்வேத காலத்திலேயே திராவிட மொழியும் திராவிடர் பழக்கவழக்கங்களும் ஆரியர் மதத்தையும் அவர்தம் மொழியையும் தாக்கியுள்ளன என்பது அறியக் கிடக்கின்றது. ரிக்வேதத்தில் 'மறுபிறவி' பற்றிய பேச்சே இல்லை. திராவிடர் தெய்வங்கள் (சிவன், முருகன், கொற்றவை முதலியன) ஆரிய வேதங்களில் இடங்கொண்டன. ரிக்வேத நடை, மொழி, உணர்ச்சிகள் என்பவை தூய ஆரிய முறையில் இருப்பினும், உச்சரிப்புத் திராவிட மொழியால் மாறுதல் பெற்றுவிட்டது; ரிக்வேத வடமொழி, திராவிடத்தினின்றும் கோல் மொழிகளிலிருந்தும் வார்த்தைகளைக் கடன் பெற்று விட்டது. திராவிட மொழிக் கலப்பு வடமொழியில் மிகுந்த

17. Pre-Aryan and Pre-Dravidian in India, Ind, p. 20
18. Dr. Kittel, Kannada Dictionary, preface, p. 22.
19. Dravidic Studies, part iii, pp. 14, 26.
20. C. Narayana Rao, An Introduction to D. Philology. pp. 104. 105, 147.
21. Dravidic Studies, part iii, p. 58

அளவில் ஏற்பட்டதாற்றான் பிராக்குரு மொழிகள் தோன்ற லாயின.''[22]

''வட இந்திய 'பிராமி' எழுத்து முறை ஆரியரால் கொள்ளப்பட்டு வளர்க்கப்பட்டது. தென் பிராமி எழுத்து கள் திராவிடரால் வளர்க்கப்பட்டவை.''[23]

''பிராமி எழுத்துகள் தமிழுக்கெனவே ஏற்பட்டவை என்பதும், அவை வேறு விகற்பங்களுடன் வடமொழியாக ஆரியரால் மாற்றிக்கொள்ளப்பட்டன என்பதும் அறியக் கிடக்கின்றன.''[24]

''வடமொழியையும் பிராக்ருத மொழிகளையும் திராவிட மொழிகளையும் நன்கு ஆராய்கையில், **ஒரு காலத்தில் வட இந்தியா முழுமையும் திராவிடர் இருந்தனர்** என்பது நன்கு புலனாகும். பாலி முதலிய பிராக்ருத மொழிகள் வடமொழிக் குரிய முதற்கூட்டு உருபுகளை (pre-Positions) அறவே விட்டுத் திராவிட மொழிகள் பயன்படுத்தும் பிற்கூட்டு உருபு களை (post-positions) கையாளலாயின.''[25]

**முடிவுரை**

மேலே கூறப்பெற்ற ஆராய்ச்சியாளர் கூற்றுகளைக் கொண்டு—ஆரியர் வருகைக்கு முன்பு வட இந்தியாவிலும் திராவிட மொழி பரவி இருந்தது என்பதும், ஆரியர் வந்து ரிக்வேதம் செய்த காலத்தில் அந்நூலுள் திராவிடச் சொற் களும் இடம் பெற்றன என்பதும், திராவிட மொழியின் அமைப்பைப் பெரும்பாலும் காட்டவல்லது தமிழே என்பதும் நன்கு புலனாதலைக் காணலாம்.

---

22. Dr. S. K. Chatterji, Origin and Development of the Bengali Language, vol I, pp. 42-45.
23. Heras's Article, "The New Review," P. 7, July 1936.
24. T. N. Subramanyan, Article in "Kalai Magal", Part 70.
25. Dravidic Studies, Part III pp. 57 and 61.

# 3. இலக்கியம்

**இலக்கியம்**

சொற்களையும் வாக்கியங்களையும் உண்டாக்கிப் பாடவும் பேசவும் அறிந்த மக்கள், எழுத்து முறையைக் கண்டறிந்த பின்பு, தாம் அதுவரை வாழையடி வாழையாக அறிந்து வைத்திருந்த சமுதாயக் கருத்துகளையும் சமயக் கருத்துகளையும் பாக்களில் வடித்தனர். காலம் செல்லச் செல்ல, அறிவு வளர வளர, மொழி வளம் பெற்றது. மொழி வல்ல அறிஞர்கள் மக்கள் படைத்த இலக்கியங்களையும் பேச்சு மொழியையும் அடிப்படையாகக் கொண்டு மொழிக்கு இலக்கணம் வகுத்தனர். பின் வந்த புலவர்கள் அந்த இலக்கண அமைதிக்கேற்பத் தமிழர் பழக்க வழக்கங்களையும் நாகரிகத்தையும் பண்பாட்டையும் குறிக்கும் செய்யுட்களைச் செய்தனர்.

இலக்கியம் என்பது மக்களுக்கெல்லாம் பொதுவாகப் பயன்படும் பொருளை உடையதாய் இனிய வகையில் சொல்லப்படுவதாய் இருத்தல் வேண்டும்; சொற்கட்டுச் சிறந்து இன்பம் பயத்தலைக் குறிக்கோளாகப் பெற்றிருத்தல் வேண்டும்.[1] மக்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறும் செய்யுட்களோ நூல்களோ படிப்போரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டு, அவரது வாழ்க்கையையும் வழிப்படுத்த வல்லன. இவையே இலக்கியம் எனப்படும்.[2] அபிமன்யு கொல்லப்பட்ட அன்றிரவு அவனை

---

1. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 1, பக். 35—36.

2- Literature is thus fundamentally an expression of life through the medium of language.—An Introduction to the Study of Literature, Hudson, P 11.

நினைந்து அவன் தந்தையான அருச்சுனன் புலம்பும் பகுதியைப் படிப்பவர், தாமும் கண்ணீர்விட்டு அழுதலைப் பார்க்கின்றோம். இறப்பு எல்லோருக்கும் பொது; இறந்தது குறித்துப் புலம்புதலும் பொது. எனவே, இப்பகுதி அனைவர் உள்ளங்களையும் ஈர்க்கின்றது,

வாழ்க்கை நிகழ்ச்சிகளை எவரும் கூறலாம். ஆயின், அவற்றைச் சாதாரண மனிதன் கூறுவதற்கும் இலக்கிய இலக்கணம் கற்றுள்ள புலவன் கூறுதலுக்கும் நிறைந்த வேறுபாடு உண்டு. சாதாரண மனிதன் கூறுவது 'எலும்புக் கூடு' போன்றது. கற்று வல்ல புலவன் கூறுவது 'உயிருள்ள உடல்' போன்றது. சிறந்த புலமை வாய்ந்த சான்றோர் கலைத்திறம் பொருந்தப் பொருளைப் புகட்டுவதால் மட்டுமே நம் உணர்வு கவரப்படுகின்றது. இன்ன பொருளை இன்னின்ன சொற்களால் இன்னின்னவாறு இன்னின்ன அமையத்தில் சொல்லவேண்டும் என்பதை அப்பெரு மக்கள் நன்கறிவார்கள். அவர்கள் செய்யும் செய்யுட்களோ, நூல்களோ கற்பவர் உள்ளத்தைப் பிணைக்க வல்லவை. இவ்வாறு சிறந்த முறையில் ஆக்கப் பெற்ற நூல்கள் 'தலையாய இலக்கியங்கள்' என்று அறிஞரால் கருதப் பெறும். அப்பெருமக்களது செய்யுட் சிறப்பினை நன்கு உணர்ந்த கம்பர் பெருமான் பின்வருமாறு பாராட்டுதல் காண்க;

''புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து
புலத்திற் றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணெனன் றொழுக்கமும்
தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்.''

## இலக்கியத் தோற்றம்

ஒரு சமுதாயத்தில் இலக்கியம் வெளிப்படுதற்குக் காரணங்கள் யாவை? ஒருவருடன் ஒருவர் கலந்து வாழ்தல்

மக்கள் இயல்பு. அங்ஙனம் மக்கள் ஒன்றுகூடி வாழ்ந்தால் தான் பொருள் உணர்ச்சியும் அறிவு வளர்ச்சியும் உண்டாகும். மக்கள் தம் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் பிறர்க்கு எடுத்துக்காட்ட விழைதல் இயல்பாகும். இங்ஙனம் எடுத்துக் காட்டி, கேட்பவர் அவற்றை அறியும் பொழுது, தம்மைப் போலவே எண்ணி மகிழ்வதைப் பார்ப்பதில் சிறந்த இன்பம் தோன்றுகிறதன்றோ! இவ்வாறு மக்கள் தம்மை வெளிப்படுத்துவதற்கு விரும்பும் விருப்பமிகுதி இலக்கியத் தோற்றத்திற்கு ஒரு காரணமாகும். இம்முறையில் எழுந்தவையே அகப்பொருள், புறப்பொருள் பற்றிய பாடல்கள் எனலாம்.[3]

மக்கள் தம் கருத்துகளைப் பிறருக்கு டுத்துக் கூறுவதோடு, பிறர் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அறிந்து கொள்வதில் விருப்பம் காட்டுகின்றனர்; அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கண்டு இன்புறுகின்றனர் அல்லது துன்புறுகின்றனர்; அவற்றைப் பிறருக்கு எடுத்துக்கூறி அவற்றின் படிப்பினையை உணர்த்துகின்றனர். இவற்றால் அவர்க்குத் தம்மையொழிந்த பிறரிடத்துள்ள பற்றுக்கோடு நன்கு புலனாகும். இந்தப் பற்றுக்கோடே சிலப்பதிகாரம் முதலிய பெருங்காவியங்கள் எழுதக் காரணமாய் அமைந்தது. முற்றும் துறந்த இளங்கோ அடிகள் இப்பற்றின் காரணமாகவே சிலப்பதிகாரத்தை யாத்தனர் என்பது,

> ''அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற் றாவதூஉம்
> உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
> ஊழ்வினை யுருத்துவந் தூட்டுமென் பதூஉம்
> சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
> சிலப்பதி காரம் என்னும் பெயரால்
> நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்.''

---

3. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 1, பக். 70, 73

என்று கூறியதைக் கொண்டு உணரலாம். சிந்தாமணி, மணிமேகலை முதலிய காவியங்கள் இம்முறைபற்றியே செய்யப் பெற்றவை.[4]

மக்கள், துன்புறும் இவ்வுலக வாழ்க்கையைக் கண்டு கண்டு; இன்பம் காணும் முறையில் ஈடுபடுதலும் இலக்கியத் தோற்றத்திற்கு ஒரு காரணமாகும். இதனால்தான், 'இல்லது-இனியது நல்லது புனைந்துரை' எனப் புலவரால் நாட்டப்பெற்ற ஒழுக்கம் நான்கெனச் சான்றோர் கூறியுள்ளனர். கோவை, கலம்பகம் போன்ற புனைந்துரை நூல்கள் இம்முறைபற்றி எழுந்தனவேயாகும்.[5]

''உள்ளத்தைத் திறப்பதற்கும், அதைத் திருத்துவதற்கும், அதைச் செம்மைப்படுத்தற்கும், புரிந்துகொண்டு படிப்பதைச் செரிப்பதற்கும், தவறுகளைப் போக்கும் வன்மை உண்டாக்கற்கும், நல்லவற்றை மேற்கொள்வதற்கும், பிறர்க்கு எடுத்துரைப்பதற்கும், பிறரை நல்வழிப் படுத்தற்கும் இலக்கியம் பயன்படல் வேண்டும். இந்நிலையிற்றான் அஃது இலக்கியம் எனப்படும்,'' என்பது கார்டினல் நியூமன் என்பவர் கருத்தாகும்.[6]

இவ்வாறு இலக்கியம் பல காரணங்களைக் கொண்டு தோன்றுகிறது. இவற்றுள் **ஒழுங்கு, வரையறை, அழகு, பயன்** ஆகியவை நிறைந்துள்ள இலக்கிய நூல்களே படிப்போர்க்கு இன்ப உணர்ச்சியை உண்டாக்கும்.[7] அவையே ஒரு சமுதாயத்தின் அழியாத செல்வங்களாகும். நம் தமிழ் நூல்களுட் பல இத்தகைய அழியாத செல்வங்களாகும். அவற்றுள் தலை சிறந்தவை **சங்க நூல்கள்**.

---

4. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 1, பக். 71—72.
5. ஷை, பக். 72.
6. Selected Essays from the writings of Viscount Morley, edited by H. G. Rawlinson, p. 51.
7. செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 1. பக். 72—73

# 4. சங்ககால இலக்கியம்

சங்ககால இலக்கியம் தொல்காப்பியம், திருக்குறள், ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், பத்துப்பாட்டு; சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன. எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும் ஏறத்தாழ 2280 செய்யுட்களை உடையவை. இப்பாடல்களை ஏறத்தாழ 500 புலவர்கள் பாடியுள்ளார்கள். அவர்களுள் பெண்பாற் புலவரும் இருந்தனர். 102 செய்யுட்களுக்கு உரிய ஆசிரியர்களின் பெயர்கள் தெரியவில்லை. இச்சங்ககால இலக்கியம் பற்றிய விவரங்கள் இந்நூலின் பல பகுதிகளில் உரைக்கப்படும். இவற்றுள் சில இன்பம் (இல்லற வாழ்க்கை) பற்றியவை; சில அறம், பொருள், வீடு பற்றியவை. இன்பம் பற்றியவை 'அகம்' என்றும், மற்றவை பற்றியவை 'புறம்' என்றும் பெயர் பெறும்.

**வாழ்க்கையின் உயிர்நாடி**

மனிதப் பேறுகள் ஆகிய அறம்—பொருள்—இன்பம்—வீடு என்னும் நான்கனுள் அகப்பொருள் என்னும் இன்பப் பகுதியே வாழ்க்கையின் உயிர்நாடியாக விளங்குவது. மனிதன் இன்பம் பற்றியே பொருளைத் தேடுகிறான்; பொருள் கொண்டு அறஞ் செய்கிறான். இம்முப்பேறுகளும் செம்மையுறச் செய்பவன் நான்காம் பேற்றை இயல்பாகவே அடைவான். இதனாற்றான், பண்டைத் தமிழர் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையுமே வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கொண்டு வாழ்ந்துவந்தனர் என்பது சங்கப் பழம்பாடல்களால் அறியக்கிடக்கிறது. தொல்காப்பியர்க்கு முற்பட்ட தொல்லாசிரியர்கள் வகுத்த அகம், புறம் என்னும் இரண்டு பகுதிகளையும் தழுவி, தம் காலத்திய மாறுதல்களையும் உள்ளடக்கித் தொல்காப்பியர் எழுதியுள்ள பொருள்

இலக்கணம் ஒன்றே இன்றுள்ள சிறந்த அடிப்படை இலக்கண நூலாகும். அதனை இலக்கணமாகவும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலியவற்றையும், திருக்கோவையார் முதலியவற்றையும் இலக்கியமாகவும் கொண்டு ஆராயின், பழந்தமிழ்ப் பெருமக்கள் பகுத்தறிவோடு அமைத்த அகப்பொருளென்னும் அழகிய இன்பமாளிகையைக் கண்டு களிக்கலாகும். இவற்றுடன் சைவசமய ஆசிரியர்கள் பாடியருளிய திருமுறைகளையும் ஆழ்வார்கள் பாடியருளிய அருட்பாடல்களையும் பக்கத்தில் வைத்து உணர்ச்சியோடு படிக்கப் படிக்க, அப்பெரியோர்கள் அகப்பொருள் இலக்கணத்தைத் தமது பக்தி நெறிக்கே உயிர் நாடியாகக் கொண்டிருந்தனர் என்பதைத் தெள்ளிதில் உணரலாம்.

### அகப்பொருள் இலக்கணம்

இவ்வகப்பொருள் இலக்கணத்தை ஆராய்வதால் பண்டைத் தமிழ் மக்கள் மணம் செய்துகொண்ட முறைமை, அவர்தம் காதல் வாழ்க்கை, தலைவன் தலைவியரது இன்பத்திற்கு உதவும் பாங்கன் பாங்கியர், களவுப் புணர்ச்சியில் தலைவியும் தோழியும் தலைவனைச் சோதிக்கும் முறைகள், தனக்கு உண்டாகும் பல இடுக்கண்களைப் பொருட்படுத்தாமல் தலைவியை அடைவதில் தலைவன் கொள்ளும் முயற்சி, களவு வெளிப்பட்டபின் இருதிறத்துப் பெற்றோரும் நடந்துகொள்ளும் முறைமை, பெற்றோர் உடன்படாத போது தோழி தலைவியைத் தலைவனோடு கூட்டியனுப்புதல், அங்ஙனம் அனுப்பும்போது அவள் தலைவனிடம் கூறும் வாழ்க்கைக்கு இன்றியமையாத அறிவுரை, காதலர்க்குள் ஏற்பட்ட களவைத் தோழி தாய்மார்க்குக் குறிப்பாக உணர்த்தும் திறமை முதலியவற்றை நாம் அறிந்து மகிழலாம்.

### களவொழுக்கம்

இனி இவை பற்றிய செய்தியைக் காண்போம்: இளைஞன் (தலைவன்) ஒருவன் பூம்பொழில் ஒன்றில்

தனித்துப் பூக்கொய்யும் நங்கை (**தலைவி**) ஒருத்தியைக் காண்கிறான். இருவரும் ஒருவரையொருவர் நோக்குகின்றனர். இருவர் விழிகளும் சந்திக்கின்றன, இருவரும் மாறி இதயம் புகுகின்றனர். அவ்வமயம் உள்ளத்துத் தோன்றும் இன்ப உணர்ச்சியே அவர்தம் பிற்காலக் காதல் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்றது. பார்வை ஒன்ற, உள்ளம் ஒன்ற, உணர்ச்சி ஒன்ற அவ்விருவரும் ஓருயிர் ஈருடல் ஆகின்றனர், அவ்வின்பப் பூங்காவில் உள்ள நறுமணமுள்ள மலர்களிடையே நங்கை-நம்பி ஆகிய இருவர்தம் காதல் அரும்பும் போதாகி மலர்ந்து மணம் வீசுகின்றது. அம்மட்டோ? தேனும் பிலிற்றுகின்றது. காதல் மணமும் காதல் தேனும் அப்பூங்காவைப் பொன்னுலகமாக்குகின்றது. அன்று முதல் அவர்தம் காதல் வாழ்க்கை களவிலேயே நடந்துவருகின்றது.

தலைவன் சிறுவயதிலிருந்தே தலைவியோடு விளையாடி உற்ற வயது வந்த பின்பு அவள்மீது காதல் கொள்வதும் உண்டு.

நீடித்த களவு வாழ்க்கைக்குத் தோழியும் தோழனும் உதவி செய்யும் பாத்திரங்களாக அமைகின்றனர். தோழி தலைவனது காதலைப் பரிசோதிக்கும் திறம் மிக வியந்து பாராட்டத்தக்கது. தலைவியைத் தலைவன் பெறமுடியாது என்பதற்குப் பல நியாயங்களைத் தோழி கூறுகிறாள். அவளைத் தான் பெறாவிடில் மடல் ஏறுவதாகத் தலைவன் சூள் உரைக்கிறான். இங்ஙனம் பலவாறு முதற்கண் அவனது உள்ளத்தைச் சோதித்த தோழி அவனோடு தலைவியைக் கூட்டுகிறாள். அக்கூட்டம் நடைபெறும் பொழுதே மீண்டும் அவனைச் சோதிக்கக் கருதி, பகலில் வருகின்றவனை இரவில் வரும்படியும், இரவில் வருகின்றவனைப் பகலில் வருமாறும் மாறி மாறி வரச்செய்து, அவனுக்குத் துன்பத்தைத் தருகிறாள்; ''தலைவி வீட்டில் அடைக்கப்பட்டாள்; ஆதலின் அவளைப் பெற நள்ளிரவில் வருக'' என்பாள். தலைவனும் அவள்சொற்படி நடப்பான். தோழி மீண்டும் ''நீவரும்பொழுது

நாய் குரைக்கிறது; காவலர் திருடன் என்றெண்ணித் தேடுகின்றனர்; ஊர் விழித்துக்கொள்கிறது'' என்றெல்லாம் கூறி, அவனைத் துன்புறுத்துகிறாள். தலைவன் இத் துணைச் சொதனைகட்கும் உட்பட்டு அவள் சொற்படி நடந்து, தான் தலைவிமீது கொண்ட களங்கமற்ற காதலின் உறுதியை வெளிப்படுத்துகிறான்.

களவு வாழ்க்கையில் தலைவி இல்செறிக்கப்பட்டபோது தலைவனை முன்புபோல அடிக்கடி சந்திக்க முடியாது. அவன் சிலநாட்கள் தொடர்ந்து வாராமலிருப்பான் அந் நாட்களில் தலைவி கவலையால் உடல் மெலிவாள். அவளது உடல் மெலிவைக் கண்டு செவிலித்தாயும் நற்றாயும் கவலை கொண்டு வேலனை அழைத்து யோசனை கேட்பர். அவன் வீட்டின் ஓரிடத்தில் முருகனை எழுந்தருளச் செய்து அக் கடவுள்முன் கழற்சிக்காய்களைப் போடுவான். அவன் தன் தலையில் ஆடை சூடியிருப்பான்; பல கணுக்களையுடைய கோலை ஏந்தியிருப்பான். அக்கணுக்களில் சிறு பைகளைக் கட்டியிருப்பான். அவன் அக் கோலால் கழற்சிக்காய்களை வாரியெடுக்கும்போது அவன் உள்ளத்திற் பட்டதைக் குறியாகக் கூறுவான். இது **கழங்கு பார்த்தல்** எனப்படும் (நற்றிணை. செ. 47).

சேரியின் முதுபெண்டாகிக் குறிசொல்பவளை வீட்டில் அழைத்து வந்து முற்றத்தில் பிடி நெல்லையிட்டு எதிரில் தலை மகளை நிறுத்துவர். உடனே தெய்வத்திற்கு வழிபாடு செய்யப்படும். குறிசொல்பவள் அப்பிடி நெல்லை நந்நான்காக எண்ணி எஞ்சியவை ஒன்று, இரண்டு, மூன்று அளவும் முருகனால் நேர்த்த குறை என்றும், நான்காகின் வேறொரு நோய் எனவும் கூறுவாள். இது ஒருவகைக் குறியாகும்; '**கட்டுக் கேட்டல்**' எனப்படும் (நற். செ. 288).

கழங்கு பார்த்தலிலும் கட்டுக் கேட்டலிலும் தலைவியின் நோய் ஆராயப்படும். இந்த நிகழ்ச்சிக்கு முன்பு அல்லது பின்பு தோழி தலைவியின் காதலைத் தாய்மார்க்குக் குறிப்

பாகப் புலப்படுத்துவாள். அங்ஙனம் புலப்படுத்துதல் **'தோழி அறத்தொடு நிற்றல்'** எனப்படும்.

**அறத்தொடு நிற்றல்**

களவுப் புணர்ச்சியால் தலைவியின் வேறுபாடு கண்ட தாய்மார் தோழியை வினவுவர். தோழி களவை வெளிப் படக் கூறாமற் கூறும் திறன் அறிந்து வியக்கற்பாலது.

(1) ''தலைவியும் நாங்களும் சுனையில் நீராடுகையில் தலைவி கால் தவறிச் சுனையில் வீழ்ந்துவிட்டாள். நாங்கள் அலறினோம். அவ்வமயம் கட்டழகுள்ள இளைஞன் ஒருவன் அங்குத் தோன்றினான்; சரேரென நீரிற் குதித்தான்; தலைவியை அணைத்துக்கொண்டு சுனையினின்றும் வெளிப் போந்தான். தன் உயிரைக் காத்த அவ்வண்ணல்பால் தலைவி உள்ளம் நெகிழ்ந்தாள்.

(2) ''தலைவியும் யாங்களும் பூப்பறிக்குங்கால் தலைவி விரும்பியதொரு பூவை நாங்கள் பறிக்கக்கூட வில்லை. தலைவி வாட்டமுற்றாள். அப்பொழுது நம்பி ஒருவன் தோன்றி அம்மலரைப் பறித்துத் தலைவியின் கையிற் கொடுத்தான். தலைவி அவன்பால் நன்றியறிதல் உடையவள் ஆயினாள்.

(3) ''பண்டொருநாள் யாங்கள் விளையாடிக்கொண் டிருந்தபோது காட்டானை ஒன்று மதங்கொண்டு எங்களை நோக்கி ஓடிவந்தது. தலைவி அலறினாள். அவளது மையுண்ட கண்களிலிருந்து நீர் அருவிபோலப் பெருகியது. அவ்வமயம் கையில் வேலேந்திய இளைஞனொருவன் அங்குத் தோன்றினான். அச்சத்தால் அலறிய தலைவியைத் தன் இடக்கையால் அணைத்து நின்று, வலக்கையில் தாங்கிய வேலால் யானையைக் குத்தினான்; யானை பிளிறிக் கொண்டு ஓடியது. தன் உயிரைக் காத்த அத்தலைவன் பால் தலைவியின் உள்ளம் ஈடுபட்டது.'' இங்ஙனம் கூறுதல் முறையே **புனல்தரு புணர்ச்சி, பூத்தரு புணர்ச்சி, களிறுதரு**

**புணர்ச்சி** எனப்படும். இங்ஙனம் தோழி கூறுதலை **'அறத்தொடு நிற்றல்'** என்று இலக்கணம் கூறும்.

**மடலேறுதல் :** காதலியை அடிக்கடி சந்திக்கத் தோழி வழி செய்யாது விடினும், தலைவியின் பெற்றோர் மணம் மறுப்பினும், தலைவன் **மடலேறத்** துணிவான். அவன் பனை மடலால் குதிரையைப்போல ஓர் உருவத்தை யமைத்து அதன் கழுத்தில் மணி, மாலை முதலியவற்றைப் பூட்டுவான்; தலைவியின் உருவத்தை ஒரு படத்தில் எழுதிக் கையில் ஏந்துவான்; யாவரும் அறிய மடலூர்ந்து வருவான்; ஊர் மக்கள் உண்மையறிந்து பலவாறு பேசுவர். தலைவியின் பெற்றோர் மணத்திற்கு இசைவர்.

சில சமயங்களில் மடலூர்ந்து செல்லும் தலைவன் ஊர் அவையோரிடம் தன் காதல் நிலையைக் கூறி அவளைச் சேர்ப்பிக்கும்படி வேண்டுவான். இச்செய்திகளைக் கூறும் குறுந்தொகைப் பாடல்கள் பல (14, 17, 32, 173, 182, 276).

தலைவியின் வீட்டில் உணவு நேரத்தில் அயலார் வருவர். தலைவன் அவர்களோடு தலைவியின் வீட்டினுள் நுழைந்து விடுவான் (குறுந்தொகை, செ. 118).

**உடன்போக்கு :** தான் காதல் கொண்ட காதலனுக்குத் தன்னைத் தன் பெற்றோர் தாராரென்பதை அறிந்ததும்; தலைவி தலைவனுடன் ஓடுதல் உண்டு. இஃது **'உடன் போக்கு'** எனப்படும். அவன் அவளைத் தன் வீடு கொண்டு சென்று மணம் முடித்துக்கொள்ளலும் உண்டு; போகும் பொழுதே தலைவியைச் சேர்ந்தவர் இடைமறித்துக்கொண்டு சென்று தலைவி வீட்டில் திருமணம் நடத்தலுமுண்டு. சரியாகக் கூறுமிடத்து, இவ்வுடன் போக்கிலிருந்தே கற்புத் தொடங்கிவிடுகிறது. இதன் பின்பு நிகழ்வனவெல்லாம் கற்பியற் செயல்கள் எனப்படும். கற்பு என்பது ஒருவன் ஒருத்தியோடு உள்ளம் ஒன்ற வாழ்க்கை நடத்தல்.

**கற்பு வாழ்க்கை**

உடன்போக்கு நிகழ்ந்த பின்பு அதுகாறும் தலைவி தன் காலில் அணிந்திருந்த சிலம்பு தலைவன் வீட்டில் நீக்கப் பெறும். கற்பு வாழ்க்கைக்குரிய புதிய சிலம்பு அணியப் பெறும். இவற்றுள் முதல் நிகழ்ச்சி **சிலம்பு கழி நோன்பு** எனப்படும் (நற்றிணை, 279).

இரவலர்க்குக் கொடுப்பதற்கும் இன்பம் நுகர்வதற்கும் பொருள் இல்லாத ஏழைகட்கு உதவுவதற்குமே கற்பு வாழ்க்கை (இல்வாழ்க்கை) விரும்பப்படுகிறது (குறுந் தொகை, 63).

**பிரிவுகள் :** தலைவி மிகுந்த கவனத்துடன் இல்வாழ்க் கையில் ஈடுபடுவாள்; தலைவனைப் பலபடப் பாராட்டுவாள் (நற்றிணை 1, 237). அவ்வாறே தலைவன் தலைவியின் சமையலைப் பாராட்டுவான் (குறுந்தொகை 127) அவ ளுடைய பண்புகளைப் பாராட்டி மகிழ்வான் (குறுந் தொகை 101).

கற்பு வாழ்க்கையில் தலைவன் உயர் படிப்புக்காகத் தலைவியை விட்டுப் பிரிவான்; தன் அரசனிடமிருந்து வேற்றரசன்பால் தூது போவதற்காகப் பிரிவான்; தன் அரசனுக்குத் துணையாகப் போக நேரும்பொழுதும் பிரி வான்; பொருள் ஈட்டவும் பிரிவான்; பரத்தை காரணமாகவும் பிரிவான்; அங்ஙனம் பிரிய விரும்பும் தலைவன் தலைவியைப் பலவாறு பாராட்டுதல் வழக்கம் (நற் 166).

பொருள் ஈட்டப் பிரிந்த கணவனை நினைந்து மனைவி வருந்துவாள்; ஆயினும், ''பொருள்வயிற் பிரிதல் ஆடவர்க்கு இயல்பு'' (நற். 243) என்று தானே கூறி அமைவாள்; தம்பால் வந்து இரந்தவர் விரும்பிய பொருளைக் கொடுத்து அவருக்கு மகிழ்ச்சியை ஊட்டுவது இல்வாழ்க்கையின் நோக்கங்களில் ஒன்றாகும் (நற். 84).

**பரத்தையிற் பிரிவு :** தலைவன் பரத்தையர் இன்பத்தை நாடிப் பிரிவதைத் தோழியும் தலைவியும் கண்டிப்பர் (குறுந்தொகை 196, நற்றிணை 170). தலைவன் பாணன் முதலியோரைத் தூது விடுத்துத் தலைவியை அமைதிப்படுத்துவான் (குறுந்தொகை 106). சில சமயங்களில் தலைவி வாயில் மறுப்பாள். வாயில் பெறாத தலைமகன் தன் புதல்வனைத் தழுவிக்கொண்டு கொஞ்சிக் குலாவி வீட்டினுள் நுழைந்து படுக்கையில் படுப்பான். தலைவி அவனது குறையை மறந்து ஊடல் தணிவாள் (குறுந்தொகை, 359).

தலைவன் இங்ஙனம் தலைவியின் மனம் வருந்தும்படி பல தீமைகளைச் செய்யினும், அவள் பொறுத்து அவனை ஏற்றுக் கொள்வாள். ''உழவர் தம் வயலில் முளைத்த நெய்தலைப் பிடுங்கி எறிவர். ஆயினும் அது மீட்டும் அவரது வயலிலேயே பூக்கும். அதுபோல எனக்குத் தீமைசெய்த நின்னிடம் அன்புடையேன் ஆயினேன்'', என்று ஒரு தலைவி தலைவனை நோக்கிக் கூறினாள் (குறுந்தொகை, 309).

தலைவன் பரத்தையைப் பிரிந்து மீண்டும் வந்த பின்பு தலைவிக்கு முன்பு இருந்த ஆற்றாமை நீங்கும். அவள் அவனோடு அளவளாவி,

> **''இம்மை மாறி மறுமை யாயினும்**
> **நீயா கியரென் கணவனை;**
> **யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே''**
>
> (குறுந்தொகை-49)

என்று தன் மனமார்ந்த விருப்பத்தை வெளியிடுவாள். இப் பிறவியில் மட்டுமின்றி மறுபிறவியிலும் அவனே கணவனாதல் வேண்டும் என்ற தலைவியின் விருப்பம் அவர்தம் காதல் பிணிப்பை அன்றோ எடுத்துக்காட்டுகின்றது!

தலைவன் சில சமயங்களில் பரத்தையரோடு ஆற்று நீரிலும், மணற்குன்றுகள்மீதும், பூம்பொழிலிலும் விளையாடுவான். அதுபற்றித் தலைவி கேட்கும்போது தலைவன் மலைமீதும் பொழில்மீதும் மலைச்சாரல்மீதும் ஆணையிட்டுத்

தான் அவ்வாறு விளையாடவில்லை என்று கூறுவான். ஒழுக்கம் கெட்ட தலைவன் இவ்வாறு பொய்யாக ஆணை கூறுவது வழக்கம். இதனைப் பரிபாடலில் காணலாம்.

ஒரு தலைவன் பரத்தை வீட்டில் இருந்தபொழுது அவன் தலைவி பிள்ளை பெற்றாள்; வெண் கடுகை அப்பி எண்ணெய் தேய்த்து நீராடிக் குளித்து நெய்பூசி உறங்கினாள். தனக்கு மைந்தன் பிறந்தான் என்பதைக் கேள்வியுற்று மகிழ்ந்த தலைவன் இடையாமத்து இருளில் கள்வனைப் போல வீடுவந்து சேர்ந்தான் (நற்றிணை-40).

தொல்காப்பியர்க்கு முற்பட்ட தமிழரும், தொல்காப்பியர்க்குப் பிற்பட வாழ்ந்த சங்ககாலத் தமிழரும் காதல், வீரம் ஆகிய இரண்டையும் தம் இரு கண்களாகப் போற்றினர் என்பது தொல்காப்பியப் பொருளதிகாரத்தாலும் எட்டுத்தொகை நூல்களாலும் அறியக் கிடக்கின்றது. ஆதலின் அப்பெருமக்கள் இவ்விரண்டிற்கும் இலக்கணங்களை வகுத்தனர். அவை முறையே அகப்பொருள் இலக்கணம், புறப்பொருள் இலக்கணம் என்று பெயர் பெற்றன. இங்ஙனம் அகப்பொருளுக்கும் புறப்பொருளுக்கும் வேறு எம்மொழியிலும் இலக்கணம் வகுக்கப்படவில்லை என்பது இங்கு அறியத்தகும். தொல்காப்பியர் களவியல், கற்பியல், பொருளியல் என்னும் மூன்று இயல்களில் பல அகப்பொருள் துறைகளை விளக்கியுள்ளார். அத்துறைகளுக்குரிய செய்திகளை ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களிலும் காணலாம்.

## புறப்பொருள் இலக்கணம்

தம்மாட்சி நிலவியுள்ள நாட்டிலேதான் மனிதனது காதல் வாழ்க்கை சிறப்புறும். ஒரு நாடு தம்மாட்சி பெற்று விளங்கவேண்டுமாயின், அந்நாட்டு மக்களுள் பலர் மறவராயிருத்தல் வேண்டும்: அங்ஙனம் இருத்தற்கு அவர்க்குப் போர்ப் பயிற்சி இன்றியமையாதது. ஆதலின், பண்டைத்

தமிழர் அதனை ஒரு கலையாகவே வளர்த்துவந்தனர் என்பது தொல்காப்பியப் புறத்திணை இயலால் நன்கு தெளிவாகும்.

**போர் முறைகள் :** பண்டைத் தமிழர் போரில் அற நெறியைக் கையாண்டனர். ஒரு நாட்டின்மீது படையெடுக்க விரும்பிய அரசன் முதலில் பகைவனது நாட்டிலுள்ள ஆனிரைகளைக் கவர்வான். இம்முயற்சி **வெட்சித் திணை** எனப்படும் (திணை—ஒழுக்கம்). இம்முயற்சியின் போது பகை வீரர் வெட்சி வீரரின் முயற்சியைத் தடுப்பர். இங்ஙனம் தடுக்கும் முயற்சி **கரந்தைத் திணை** எனப்படும். வெட்சித் திணையார் வெட்சி மலர்களைச் சூடுவர்; கரந்தைத் திணையார் கரந்தை மலர்களைச் சூடுவர்.

நாட்டின்மீது நடைபெறும் படையெடுப்பு **வஞ்சித்திணை** எனப்படும். அப்படையெடுப்பை எதிர்த்து நிற்றல் **காஞ்சித் திணை** எனப்படும். கோட்டையை முற்றுகையிடல் **உழிஞைத் திணை** எனப்படும். கோட்டையுள் இருந்து எதிர்த்தல் **நொச்சித் திணை** எனப்படும். கோட்டைக்கப்பால் வெட்ட வெளியில் நடைபெறும் கடும்போர் **தும்பைத் திணை** எனப் படும். போரில் வெற்றி பெறுதல் **வாகைத் திணை** எனப் படும். ஒவ்வொரு திணைச் செயலிலும் ஈடுபட்ட வீரர்கள் அத்திணைக்குரிய மலர்களை அணிந்து கொள்ளுதல் மரபு.

மேலே கூறப்பெற்ற ஒவ்வொரு திணைப்போரும் பல படிகளையுடையது. அப்படிகள் **துறைகள்** எனப்படும். இப் போர்களைப் பற்றிய விளக்கம் தொல்காப்பியம்-புறத்திணை இயலில் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. இக்கலை வளர்ச்சி தொல்காப்பியர் காலத்தில் திடீரென ஏற்பட்டிருத்தல் இயலாது. தொல்காப்பியர்க்கு முன்னரே—பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வாழையடி வாழையாக வளர்ந்து வந்த போர்க்கலையின் விரிவே தொல்காப்பியத்தில் காணப்படுகின்றது என்று கொள்ளுதலே அறிவுடைமையாகும்.

**பிற திணைகள் :** இங்ஙனம் காதலையும் போரையும் இரு கண்களாகக் கருதின சங்க காலத் தமிழர், யாக்கை நிலையாமையையும் செல்வம் நிலையாமையையும் நன்கு அறிந்திருந்தனர். சான்றோர் அவ்வப்போது அரசனுக்கு நிலையாமையை விளக்கிக் கூறி வீடு பேற்றுக்குரிய அறவழியில் செலுத்திவந்தனர். இங்ஙனம் நிலையாமையைப் புலப்படுத்துவது **காஞ்சித் திணை** என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இத்திணையில் இருபது துறைகள் அமைந்துள்ளன.

தலைவன் புகழை விரும்புவதும், புலவன் பரிசில், வீடு பேறு முதலியவற்றை விரும்புவதும் உலக இயற்கை. இவ்வாறு அவரவர் விரும்பும் செய்திகள் **பாடாண் திணை** எனப்படும். இத்திணையிலும் பல துறைகள் உண்டு. தலைவனுக்கு அறிவுறுத்தல், தலைவனை வாழ்த்துதல், ஒருவனை ஒருவன் ஆற்றுப்படுத்தல், மன்னன் தன் புகழைக் கருதி மாற்றான் நாட்டை அழித்தல் முதலிய செயல்கள் எல்லாம் இத்திணையைச் சேர்ந்தவையாகும். தொல்காப்பியர் இத்திணை பற்றிய செய்திகளைப் பல நூற்பாக்களில் விளக்கியுள்ளார். பரிபாடலில் புறத்திணை பற்றிய பாடல்களும், பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய நூல்களில் உள்ள பாடல்களும், பத்துப்பாட்டில் பலவும் புறப்பொருள் இலக்கணத்திற்குரிய செய்யுட்களாகும். தொல்காப்பியத்தையும் தொகை நூல்களையும் படித்து இவ்விருவகை இலக்கணங்களின் சிறப்பையும் உள்ளவாறு அறிதலே ஏற்புடையது.

# 5. மதுரையில் தமிழ்ச் சங்கம்

## மூச்சங்கங்கள் பற்றிய செய்தி

இறையனார் களவியல் உரையில் நாலடி, சீவக சிந்தாமணி முதலிய நூல்களின் கருத்தும் சொற்றொடரும் காணப் படுவதால் அவ்வுரை பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதெனக்கொள்ளுதல் வேண்டும். பெரும்பாலும் 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டில் அவ்வுரை தோன்றியது எனக் கொள்ளுதல் மிகவும் பொருத்தமாகும்.[1] அவ்வுரையில் முச்சங்கங்களைப் பற்றிக் கீழ்வரும் விவரங்கள் தரப் பட்டுள்ளன.

இன்றுள்ள கன்னிமுனைக்குத் தெற்கே ஒரு காலத்தில் பாண்டிய நாடு விரிவடைந்திருந்தது. அங்குப் பாண்டியன் தலைநகரம் இருந்தது. அக்கோநகரில் பாண்டியன் ஆதரவில் தமிழ் வளர்க்கச் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பெற்றது. அதனில் சிவபெருமான், முருகக் கடவுள், அகத்தியர்[2]

---

1. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய தீபம், பக். 29.

2. அகத்தியர் தமிழ் இலக்கணத்தைச் செய்தார் என்று தொல்காப்பியரோ, பிற சங்ககாலப் புலவர்களோ கூற வில்லை. இச்செய்தியை முதன் முதல் கூறியுள்ளது இறைய னார் களவியலுரையேயாகும். அதன் காலம் கி.பி. 11 அல்லது 12 ஆம் நூற்றாண்டு என்பது மேலே கூறப்பட்ட தன்றோ? 'அகத்தியர் பற்றிய கதைகள் எல்லாம் ஆரியர் தென்னாட்டிற்கு வந்ததையும் அவ்வருகைக்கு அவர் தலைவ ராயிருந்ததையும் குறிப்பனவாகக் கோடலே பொருத்த மாகும்' — K. A. N. Sastry, A History of S. India, pp. 67—70.

கே. என். சிவராசப்பிள்ளையவர்கள் எழுதியுள்ள ''தமிழ கத்தில் அகத்தியர்'' என்னும் நூலும் படித்துணரத் தகும்.

உள்ளிட்ட 549 பேர் இருந்தனர். 4449 புலவர் தமிழா ராய்ந்தனர். அச்சங்கம் 4440 ஆண்டுகள் நிலைத்திருந்தது. அத்தலைநகரமும் அந்நிலப் பகுதியும் கடல் கொந்தளிப்புக்கு இரையாயின.

பின்பு கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் ஏற்பட்டது. அதனில் அகத்தியர், தொல்காப்பியர் உள்ளிட்ட 59 பேர் இருந்தனர். 3700 புலவர் தமிழ்ப் பாடல்களைச் செய்தனர். இச்சங்கம் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. பின்பு கபாடபுரமும் கடலுள் ஆழ்ந்தது.

அதன் பின்பு இன்றுள்ள மதுரையில் ஒரு சங்கம் ஏற்பட்டது இச்சங்கத்தில் நக்கீரர் உள்ளிட்ட 49 புலவர் இருந்தனர். 449 புலவர் தமிழ்ப்பாக்களைச் செய்தனர். இச் சங்கம் 1850 ஆண்டுகள் இருந்தது. இங்ஙனம் மூன்று சங்கங்கள் இருந்தன என்பதற்கு இக்கூற்றைத் தவிர வேறு சான்றில்லை. ஆயின், மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்தது என்பதற்கு இலக்கியச் சான்றும் பட்டயச் சான்றும் இருக்கின்றன.

**சங்கம் இருந்தமைக்குப் பிற்காலச் சான்றுகள்**

கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தருமி பொற்கிழி பெற்றதைத் தம் பாடலில் கீழ்வருமாறு குறித்துள்ளார்:

> **''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி**
> **நற்கனகக் கிழிதருமிக் கருளி னோன்காண்''**

என்பது அப்பர் தேவாரம் (6.76—3)

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள்,

> **''சங்கத் தமிழ்''**

என்று திருப்பாவையில் (செ. 30) குறித்துள்ளார்.

அதே நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார்,

> **''சங்க முகத்தமிழ்''**

என்று பெரிய திருமொழியிற் (3.4.10) பாடியுள்ளார்.

கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர்,

**''உறைவான் உயர்மதிற் கூடலில் ஆய்ந்தவொள்**
**தீந்தமிழின்**
**துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச்**
**சூழல்புக்கோ''**

என்று மதுரையில் புலவர் தமிழாராய்ந்த திறத்தைத் திருக்கோவையாரிற் (20) குறித்துள்ளார்.

அகநானூற்று உரைப்பாயிரம் செய்த இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவதரையன் என்பவன் அப்பாயிரத்தில்,

**''பழுதில் கொள்கை வழுதியர் அவைக்கண்**
**அறிவுவீற் றிருந்த செறிவுடை மனத்து**
**வான்றோய் நல்லிசைச் சான்றோர் குழீஇ**
**அருந்தமிழ் மூன்றுந் தெரிந்த காலை''**

என்று கூறியிருத்தல் கவனிக்கத் தக்கது.

நல்லிசைச் சான்றோர் மதுரையில் பாண்டியர் அவையில் கூடியிருந்து முத்தமிழையும் வளர்த்தனர் என்பதை இவ்வடிகள் தெரிவிக்கின்றன அல்லவா?

யாப்பருங்கலக் காரிகை என்னும் இலக்கண நூல் கி.பி. 10 அல்லது 11 ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டிருக்கலாம்.[3] அந்நூலில் வரும் மேற்கோள் செய்யுள் ஒன்று, 'சேரன் வில் சிறப்பை உடையவன்; பாண்டியன் தமிழ்ச் சிறப்பு உடையவன்; சோழன் நெல்சிறப்பை உடையவன்', என்னும் பொருள்பட வந்துள்ளதைக் காண்க.

**''வில்லுடையான் வானவன் வீயாத் தமிழுடையான்**
**பல்வேறுக டற்றானைப் பாண்டியன்—சொல்லிகவா**

3. சீநிவாசப்பிள்ளை, தமிழ் வரலாறு, இரண்டாம் பகுதி, பக். 230.

**வில்லுடையான் பாலை யிளஞ்சாத்தன் வேட்டனே**
**நெல்லுடையான் நீர்நாடர் கோ''[4]**

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கம்பர், சோழ நாட்டைப் 'புனல்நாடு' என்றும், பாண்டிய நாட்டைத் **'தென் தமிழ்நாடு'** என்றும் குறித்துள்ளார். மேலும், அவர் 'பாண்டிய நாடு முத்துகளுக்கும் முத்தமிழுக்கும் பெயர் பெற்றதாதலால் தேவர் நாட்டிலும் விஞ்சியது'. என்றும் கூறியுள்ளார். அவர் பாடிய செய்யுட்களைக் கீழே காண்க:

**''அனைய பொன்னி அகன்புனல் நாடொரீஇ**
**மனையின் மாட்சி குலாமலை மண்டலம்**
**வினையின் நீங்கிய பண்பினர் மேயினார்**
**இனிய தென்தமிழ் நாடுசென் றெய்தினார்''**

**''அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா(டு)**
**ஒத்தி ருக்குமென் றாலுரை யொக்குமோ**
**எத்தி றத்தினும் ஏழுல கும்புகழ்**
**முத்து முத்தமி ழுந்தந்து முற்றலால்''[5]**

கி.பி. 12 அல்லது 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பெரும்பற்றப் புலியூர் நம்பி பாடிய திருவிளையாடற் புராணத்திலும், 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்திலும் **மதுரைத் தமிழ்ச் சங்கத்**தைப் பற்றிப் பல செய்திகள் காணப்படுகின்றன.

புறத்திரட்டில் சேர்க்கப்பட்டுள்ள ஆசிரிய மாலை என்னும் பழைய நூலின் செய்யுள் ஒன்றில்,

**''பாடு தமிழ்வளர்த்த கூடல்''**

என்று மதுரை பாராட்டப்பட்டுள்ளது. 'ஆசிரிய மாலை'யின் காலம் திட்டமாகக் கூறக்கூடவில்லை யாயினும், பழங்கால நூல் என்பதில் ஐயமில்லை.

---

4. யாப்பருங்கல விருத்தி, பக். 229.
5. கிஷ்கிந்தாகாண்டம், ஆறுசெல்படலம், 52—53.

நச்சினார்க்கினியர் காலம் ஏறத்தாழக் கி.பி. 14-ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகும். அவர் திருமுருகாற்றுப் படை உரையில்,

> **''சோமன் வழிவந்த பாண்டியனின்
> நாட்டுடைத்து நல்ல தமிழ்''**

என்னும் இரண்டு வரிகளை மேற்கோளாகக் காட்டியுள்ளார். எனவே, இவ்விரண்டு வரிகளும் அவர் காலத்துக்கும் முற்பட்ட ஒரு பழம் பாடலைச் சேர்ந்தது என்பது தெளிவாகும்.

இங்ஙனம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழ்ந்து மறைந்த புலவர் பெருமக்கள் **மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்தது** என்பதைத் தம் பாக்களில் குறித்துள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத்தகும். 'மதுரையில் பாண்டியர் ஆதரவில் தமிழ்ச் சங்கம் ஒன்று நடைபெற்று வந்தது—அதன்கண் புலவர் பலர் கூடி முத்தமிழையும் ஆராய்ந்தனர்—நூல்கள் பல செய்தனர்—பிறர் பாடிய நூல்களை ஏற்றுக்கொண்டனர்,' என்ற கருத்துத் திருநாவுக்கரசர் காலம் முதல் புலவர் பெருமக்களிடையே நிலவியிருந்தது என்பதை இதுகாறும் கூறப்பெற்ற சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன அல்லவா? இங்ஙனம் பின்னோரால் குறிக்கப்பெற்ற புலவர் பேரவை ஒன்று திருநாவுக்கரசருக்கு முன்பு தோன்றிய தொகை நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காவியங்களிலும் குறிக்கப்பட்டுள்ளதா என்பது இனி ஆராயத்தகும்.

**அப்பர்க்கு முற்பட்ட சான்றுகள்**

**1. மதுரைக் காஞ்சியில்** (வரி 761-762)

> **''தொல்லாணை நல்லாசிரியர்
> புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின்
> நிலந்தரு திருவின் நெடியோன்''**

என வந்துள்ள அடிகள், ஆசிரியர் பலர் கூடியிருந்த பேரவையைக் குறிக்கும் என்பது தெளிவு. இது பற்றி **மகா**

**வித்துவான் ரா. இராகவையங்கார்** அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளது கவனிக்கத் தக்கது:

''இதன் கண் 'நல்லாசிரியர் புணர் கூட்டுண்ட புகழ்' என்பது, நல்லாசிரியர் பலர் தம்முள் மனமொத்தியைந்த கூட்டத்தில் அவர்களோடு கல்வி இன்பம் துய்த்த புகழ் என்று கொள்க. நல்லாசிரியர் புணர்—நல்லாசிரியர் புணர்ப்பு (சங்கம்) என்றது, ஆசிரியர் தம்முளொத்துப் புணர்ந்த கலப்பினையுடைய அவை யென்றபடி. பசுங்கூட்டென்பது பசிய பல பொருள்கள் கலந்ததற்கு வருவது போலப் புணர் கூட்டு—புணர்ந்த கூட்டம் எனினும் இயையும். 'கூட்டுண்ட' என்பது, 'அவரோடு கலந்து துய்த்த' எனினும் பொருந்தும். எங்ஙனமாயினும், இது பல்லாசிரியர் கூடியிருந்த நல்லவை யையே குறிக்குமென்று துணிந்து கொள்க. 'உண்ட' வென்னும் வினையால் அக்கூட்டத்துள் இன்பம் துய்த்தவாறு கூறியதாம். இதற்கேற்பவே பனம்பாரனார் தொல் காப்பியப் பாயிரத்தில்,

**''நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து''**

எனக் கூறுதலும் நோக்கிக் கொள்க. இவ்வவைக்கண் தொல்காப்பியம் அரங்கேற்றியது கூறியவாற்றால், இவ் வவை, கற்ற பல பெரியார் குழுமிய நல்லவையாதல் தெள்ளிது. தமிழுக்குத் தலைசிறந்த இலக்கணமாகிய இப் பெருநூலைக் கேட்டு, அதன் நலந்தீங்கு காணவல்ல தமிழறிந்த பெரியார் இல்லாதது அவையுமாகாது அரங் கேற்றத்திற் குரியதுமாகாது என்பது கண்டு உண்மை யுணர்க. இதனாற் **பாண்டியர் கல்வி அவையம் நெடுங் காலத்துக்கு முன்னரே உளதாதலறியலாம்.**''[6]

2. **''தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்**
**மகிழ்நனை மறுகின் மதுரை''**

எனவரும் **சிறுபாணாற்றுப்படை** அடிகள் (வரி 66—67). மதுரையில் தமிழ்ப் புலவர்கள் வீற்றிருந்த தெருவைக்

6. தமிழ் வரலாறு, பக். 46.

குறித்தல் காணலாம். இதுபற்றி மகா வித்துவான் கூறுவதைக் கீழே காண்க:

''இதன்கண் நச்சினார்க்கினியர், 'தமிழ்நிலை பெற்ற மறுகின் மதுரை' எனக் கூட்டித் 'தமிழ் வீற்றிருந்த தெருவினையுடைய மதுரை' என உரை கூறினார். தமிழ் வீற்றிருத்தல் தனியே நிகழாதென்பது யாம் கூறியறிவிக்க வேண்டுவதன்று. இது தமிழ்ப்புலவர் வீற்றிருந்த தெருவையே குறிக்கும் என்பது தெள்ளிது.''[7]

3. ''இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளுந்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே''

என்று காரிக் கண்ணனார் பாடிய புறப்பாட்டு (58) அடிகள் உணர்த்தும் உண்மை யாது? மூன்று முரசுகளுடன் முத்தமிழும் மதுரையில் ஆளப்பட்டன என்பதன்றோ கருத்து! ''தமிழ் ஆளப்படுதல் என்பது, நாடுபோற் குற்றங் கடிந்து நல்லன கண்டு தமிழ் போற்றப்படும் சிறப்பான் என்று கொள்க.''[8]

4. கலித்தொகை 35-ஆம் செய்யுளில்,

''மலனாவிற் றிரிதரூஉ நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ''

என்பது கூறப்பட்டுள்ளது. 'மதுரையில் உள்ள சான்றோருடைய அறிவுடைய நாவின்கண் தோன்றும் சொற்புதுமை' என்னும் குறிப்பு இதன்கண் இருத்தல் காணத்தக்கது. இது மதுரையில் கூடியிருந்த சான்றோரையும், அவர்தம் அறிவுடைய நாவன்மையையும், அவர் புதிது புதிதாகப் பாடும் செய்யுள் திறத்தையும் குறித்ததென்று எளிதில் அறியத் தகும். இது கூடற்கே (மதுரை) சிறந்தது. இல்லாவிடில்,

7. தமிழ் வரலாறு, பக். 47.
8. தமிழ் வரலாறு, பக். 50.

'கூடலார் புலனாவிற் பிறந்தசொற் புதிது' என்பது வேண்டாததாகும்.[9]

5. கலித்தொகை 68-ஆம் செய்யுளில்,

**''மதிமொழி யிடல்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலனா வுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர''**

என்று பாண்டியன் குறிக்கப்படல் காணலாம். ''இதன்கண் பேரரசனுக்கு அமைச்சனைப் போல நூல்வல்ல ஆசிரியர் பலர் மதுரைக்கண் இருந்தனர் என்றும், அவரது செவி செய்யாகவும், சான்றோர் செய்யுட்கள் நீராகவும், அவர்தம் நா ஏராகவும் கொண்டு புலமுழுதுழும் புலவரென்றும், அவர் புதிய புதிய கவிகளை மிகுதியாக உண்டாக்குபவரென்றும், அச்செய்யுள் வளத்தைக் கொள்ளை கொண்டு உண்டது மதுரை என்றும் கூறியது காணலாம்.[10]

6. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்,

**''ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் னிலவரை.''**

என்று வஞ்சினங் கூறினான் என்று புறநானூற்றுப் பாடல் (76) கூறுகின்றது. இக்கூற்றிலிருந்து, அவனைச் சார்ந்து புலவர் பலர் இருந்தனர் என்பதும், அவர் அனைவர்க்கும் மாங்குடிமருதன் என்புவர் தலைவராய் விளங்கினார் என்பதும் தெளியலாம். இதனால், பாண்டின் அணைப்பில் புலவர் பலர், ஒரு புலவர் பெருமான் தலைமையில் ஒத்து வாழ்ந்தனர் என்பது இனிதின் உணரலாம்.

---

9. தமிழ் வரலாறு, பக். 49.
10. தமிழ் வரலாறு, பக், 42.

7. சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள்,

''புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற்
பொதியிற் றென்றல் போலா தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது காணீர்''[11]

என்று கூறியிருத்தல் காணத்தகும். பொதியில் தென்றலை விட மதுரைத் தென்றலுக்குள்ள சிறப்பு, புலவர் செந்நாப் பொருந்திய ஏற்றம் என்பது இளங்கோவடிகள் கருத்து. ''சங்கப் புலவரது செந்நாவாலே புகழப்பட்ட இச்சிறப்பு களையுடைத்தாகலிற் பொதியில் தென்றல் தன்னை ஒவ்வாமைக்குக் காரணமாகி இந்த மதுரைத் தென்றல் வந்தது,'' என இவ்வரிகளுக்கு அடியார்க்கு நல்லார் தரும் விளக்கம் காண்க.[12]

8. இங்ஙனம் மதுரையில் தமிழ் வளர்ந்த சிறப்பை நோக்கியே, மணிமேகலை ஆசிரியரும்.

''தென்தமிழ் மதுரை',[13]

என்றனர்.

''தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்தல் அல்லது
குன்றுதல் உண்டோ மதுரை''

என வரும் பரிபாடல் அடிகள்[14] இங்குக் கருதத்தகும். ''தமிழ் நாட்டு அகமெல்லாம் தண்டமிழுக்கு வேலியாய் நின்று நிலைபெற்ற மதுரை புகழ் பூத்தலல்லது குன்றுதலுண்டோ என்று கூறும் இவ்வடிகள், தமிழ்நாட்டுத் தமிழ்ப் பயிர் வளர மதுரை வேலியாய் அமைந்தது — தமிழ்

---

11. புறஞ்சேரி, வரி. 130—132.
12. தமிழ் வரலாறு, பக். 51—52.
13. காதை 25, வரி 131.
14. பரிபாடல், மதுரை, 3.

மொழிக்குப் பெருங்காப்பாய் அமைந்தது எனப் பொருள் படல் காண்க.[15]

புலவர்கள், "தமிழ்கெழு கூடல்" என்று மதுரையைப் போற்றிப் புகழ்ந்தாற் போலவே, மதுரையில் பாயும் வையை யாற்றையும் "**தமிழ் வையை**"[16] என்று பாராட்டினர்.

இவ்வாறு மதுரைக்கும் தமிழுக்கும் தொடர்பு கூறும் சங்கச் செய்யுள் அடிகளைப் போலச் சோழர் நகரத்திற்கோ, சேரர் நகரத்திற்கோ தமிழ்த் தொடர்பான குறிப்பு ஒன்றேனும் வாராதிருத்தல் நோக்கத்தகும். இஃது ஒன்றே, **மதுரை தமிழ் வளர்த்த சிறப்புடையது** என்பதை விளக்கப் போதிய சான்றாகும். எனவே, **மதுரையில் பாண்டியரால் சங்கம் நிறுவப் பெற்றிருந்தது—அதனில் புலவர் தமிழ் வளர்த்தனர்** என்பன நன்கு துணியப்படும். இவ்வுண்மையை, இலண்டன் பொருட்காட்சிச் சாலையிலுள்ள **சின்னமனூர்ச் செப்பேடுகளில்** காணப்படும்,

"மாபாரதம் தமிழ்ப்படுத்தும் **மதுராபுரிச் சங்கம் வைத்தும்**" எனவரும் அடிகளும் மெய்ப்பிக்கின்றன.

**'சங்கம்' என்னும் பெயர்**

இதுகாறும் கூறப்பெற்ற இலக்கியச் சான்றுகளை நோக்க, மதுரையில் கலைக்கழகம் ஒன்று இருந்தது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும் உண்மையாகும். ஆயின், 'சங்கம்' என்னும் சொல் பழம் பாக்களில் இல்லாமை கவனிக்கத்தகும். அப்பெயர், தொகை நூல்ககளுக்கும் பின்னரே உண்டாகி, அப்பர் காலத்தில் வழக்கிற்கு வந்திருத்தல் கூடும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் மதுரையில் வச்சிரநந்தி என்ற சமணப் பெரியார் தலைமையில் திகம்பர சமணர் **சங்கம்** ஒன்று கூடியது.[17] சங்கம் என்ற சொல் மிகுதியாகப்

15. தமிழ் வரலாறு, பக். 52—3.
16. பரிபாடல் , வரி 60.
17. **Dr. Meenakshi—Aaministatron & Social Life under the Pallavas, p. 227.**

புத்தர காலத்தில் வழங்கத்தொடங்கியது. புத்தர், தருமம், சங்கம் என்னும் மூன்றும் பௌத்த மும்மணிகள் எனப்படும். இவ்வாறே சமணத்திலும் சங்கம் உண்டு. சங்கம் என்னும் சொல்வழக்குப் பௌத்தராலும் சமணராலும் தமிழகத்தில் இடம் பெற்றது என்று கூறுதல் பொருத்தமாகும். அச் சொல் வழக்கே மதுரையில் இருந்த புலவர் கழகத்திற்கும் பின்னோரால் வழங்கப்பட்டிருக்கலாம் என்று கருதுதல் தகும்.

**சங்ககாலம்**

'மதுரையில் சங்கம் இருந்த காலம் எது' என்பது அடுத்து ஆராயவேண்டுவது ஒன்றாகும். பல்லவர் என்னும் புதிய மரபினர் காஞ்சியை அரசிருக்கையாகக் கொண்டு தொண்டை நாட்டை ஏறத்தாழக் கி. பி. 300 இல் ஆளத் தொடங்கினர் என்பது வரலாறு கண்ட உண்மை.[18] இப் பல்லவரைப் பற்றிய குறிப்புத் தொல்காப்பியத்திலோ, திருக்குறளிலோ, தொகை நூல்களிலோ, சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் காவியங்களிலோ இல்லை. எனவே, பல்லவர் ஆட்சி காஞ்சியில் தோன்றிய காலம் (கி. பி. 300) சங்கத்தின் இறுதி எல்லையாகக் கொள்வது வரலாற்று ஆராய்ச்சிக்குப் பொருத்தமாகும். அதன் பேரெல்லை ஆய்வுக்குரியது.

மூன்று சங்கங்கள் இருந்தன என்பதற்குக் களவியல் உரையைத் தவிர, வேறு தக்க சான்றுகள் இல்லாவிடினும் மதுரையில் தமிழ்ப்பேரவை இருந்தது என்பது, இதுகாறும் கூறப்பெற்ற பல்வகைச் சான்றுகளால் தெளிவாதல் காண லாம். இச்சங்க நூல்களுள் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கண நூல் பெற்றுள்ள உயர்வைக்காண, அந்நூல் அத்தகைய முழுமையைப்பெற, அதற்கு முன்பு எத்துணைப் புலவர்கள் இருந்து நூல்கள் இயற்றினர் என்பது எண்ணத் தகுவதாகும். அங்ஙனம் எண்ணிப்பார்க்கும் பொழுது, இச்சங்கத்திற்கு முன்பு சில சங்கங்கள் இருந்திருக்கலாம் என்று கொள்வதில் தவறில்லை. களவியலுரையில் கூறப் பெற்றுள்ள ஆண்டுகளோ—புலவர் எண்ணிக்கையோ வேறு படலாம். களவியலுரையில் கூறப்பெற்றவாறு சில சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்தன என்று கொள்வதில் குற்றம் ஒன்றும் இல்லை. ஒரே சங்கமாகக் கொள்ளின், அதன் கீழ் எல்லை ஏறத்தாழக் கி. பி. 300, மேல் எல்லை கூறற்கியலாத பழைமையுடையது என்று கொள்வதே பொருத்தமாகும்.

---

18. Dr. D. Sircar, Successors of the Satavahanas, pp. 164—166.

# 6. சங்ககால வரலாறு

(கி. மு. 1000—கி. பி. 300)

## (1) கடல் வாணிக வரலாறு

உள்நாட்டு வாணிகத்திலும் கடல் வாணிகத்திலும் சிறப்புற்ற நாடே நாகரிக நாடு என்பது பொதுக் கருத்தாகும். வாணிகமே ஒரு நாட்டுச் செல்வ வளத்தைக் கணிக்கும் அளவு கோலாகும். கிறிஸ்துப் பெருமானுக்கு முற்பட்ட பல நூற்றாண்டுகளிலேயே தென்னிந்தியர் கடல் வாணிகத்திற் சிறந்திருந்தனர் என்று அயல் நாட்டார் எழுதிவைத்த குறிப்புகளைக் கொண்டும் புதைபொருள் ஆராய்ச்சி கொண்டும் அறிஞர் கூறுகின்றனர். அவர்கள் கூறுவனவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க.

### கிறிஸ்துவுக்கு முன்பு

கி. மு. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாலமன் அரசனுக்குத் தமிழ் நாட்டிலிருந்து கப்பல்கள் வாயிலாக மயில் தோகை, யானைத்தந்தம், மணப்பொருள்கள் முதலியன சென்றன. ஈப்ரு மொழியிலுள்ள **துகி** என்பது தமிழ்த் **தோகை** என்பதாகும்; **அகல்** என்பது **அகில்** என்பதாகும்.

திமில் உடைய எருதுகள் பாரசீக வளைகுடாவிற்கும் ஆப்பிரிக்காவிற்கும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. பொனீசியருடைய கப்பல்களில் சேரநாட்டு மிளகு மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. அக்காலத்தில் ஏடன் சிறந்த துறைமுகப்பட்டினமாக இருந்தது. தமிழ் வணிகர் கொண்டு

சென்ற பொருள்களை அரேபியர் ஏடன் என்ற துறைமுகத்தில் பெற்று, ஆப்பிரிக்கருக்கு விற்றனர்.[1]

பிலிப்பைன்ஸ் தீவுகளின் வடபகுதியில் தென் இந்தியாவிற் கிடைத்த இரும்புக்காலப் பொருள்கள் கிடைத்துள்ளதைக் காண, அப்பண்டைக் காலத்திலேயே பிலிப்பைன்ஸ் தீவுகட்கும் தென் இந்தியாவுக்கும் இடையில் கடல் வாணிகம் நடைபெற்றதென்பது தெளிவாகும். அக்காலம் ஏறத்தாழக் கி. மு. முதல் ஆயிரம் என்னலாம்.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன்பு பாபிலோன் நகரத்திற்குக் கடல் வழியாக அனுப்பப்பட்ட அரிசி, மயில், சந்தனம் முதலிய பொருள்களின் பெயர்கள் திராவிட மொழிப் பெயர்களாகவே காணப்பட்டமை, அப்பழைய காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த கடல் வாணிகச் சிறப்பை நன்கு உணர்த்துவதாகும்.[2]

கி. மு. 606 இல் அசீரியப் பேரரசு மறைந்தது. பாபிலோன் நகரம் வாணிகத்தில் சிறந்த நகரமாய் மாறியது. யவனர், யூதர், பொனீசியர், இந்தியர், சீனர் என்பவர் தங்கள் பொருள்களைக் கொண்டு சென்று அந்நகரத்தில் விற்கலாயினர். அந்நகரத்தில் தென்னிந்திய வணிகர் குடியேறி வாழலாயினர். அக்குடியேற்றம் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு வரையில் அந்நகரில் தொடர்ந்து இருந்து வந்தது. கி. மு. 538 இல் சைரஸ் என்ற பாரசீகப் பேரரசன் பாபிலோனிய பேரரசை வீழ்த்தினான். அவனுக்குப் பின்பு வந்த டேரியஸ் தரை வழி வாணிகத்தையும் கடல் வாணிகத்தையும் பெருக்கினான், அலெக்ஸாண்டரால் ஏற்படுத்தப்பட்ட அலெக்ஸாண்டிரியா நகரம் இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நடைபெற்ற கடல் வாணிகத்தில் சிறந்த பங்கு

1. P. T. S. Ayyangar, History of the Tamils, pp 129—134.

2. K. A. N. Sastry, A History of India, pp: 76-78.

கொண்டது. சூயஸ் கால்வாய் வழியாகவும் வாணிகம் நடைபெற்றது. இவ்வாணிகத்தால் எகிப்து, முன்பு இழந்த வாணிகப் பெருமையை மீண்டும் பெற்றது. கி. மு, 3 ஆம் நூற்றாண்டில் பேரரசனாய் விளங்கிய **முதலாம் தாலமியின்** ஊர்வலங்களில் இந்தியப் பெண்கள் காணப்பட்டனர்; இந்திய வேட்டை நாய்களும், இந்தியப் பசுக்களும், இந்திய மணப் பொருள்களும் காணப்பட்டன.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதல் ஐந்து நூற்றாண்டுகளில் இந்தியாவிற்கும் ஐரோப்பாவிற்கும் நடைபெற்ற வாணிகத்தில் கிரேக்கர் சிறந்த பங்கு கொண்டனர். அவர்கள் மொழியில் **அரிசி**, என்பது **'ஒரிஸா'** என்றும், **கருவா** என்பது 'கர்ப்பியான்' என்றும், **'இஞ்சிவேர்** என்பது **'சிக்கி** பெரஸ்' (Ziiggiberos) என்றும், **பிப்பிலி** என்பது 'பெப்பரி' என்றும் மாறி வழங்கலாயின.

ரோமப் பேரரசனான **அகஸ்டஸ்** ஏறத்தாழக் கி. மு. 30 இல் எகிப்தைக் கைப்பற்றினான். அவன் ரோமப் பெரு நாட்டுக்கும் இந்தியாவுக்கும் நேரான கடல் வணிகத்தை வளர்க்க முயன்றான். **பாண்டியனிடமிருந்து வணிகர் தூதுக்குழு** கி. மு. 21 இல் அப்பேரரசனைச் சென்று கண்டது. அப்போது நடைபெற்ற வாணிகத்தில் இந்திய வாணிகமே ரோமப் பெருநாட்டு வாணிகத்தைவிடச் சிறந்திருந்தது. பண்டமாற்றுக் குறைவாக இருந்தமையால், **ரோம நாணயங்கள்** மிகுதியாகச் செலவாயின.[3]

சீனத்துப்பட்டும் பிறபொருள்களும் தரைவழியாக மேலைநாடுகளுக்குச் சென்றதோடு, கடல் வழியாகவும் சென்றன. தமிழர் அவற்றைச் சூயஸ் கால்வாய் வரையில் கொண்டு சென்று யவன வணிகர்களுக்கு விற்றுவந்தனர்.

**பர்மா, மலேயா, சீனம்** முதலிய நாடுகளுடன் தமிழகம் வாணிகம் செய்துவந்தது. தமிழகப் பொருள்களுள் மிகச்

---

3. P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 192—196.

சிறந்தவை மிளகும் மணப் பொருள்களும் ஆகும். தமிழ் வணிகர் இவ்விரண்டிற்கும் பதிலாகப் பட்டும் சர்க்கரையும் பெற்றனர்.

தமிழர் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்ட பல நூற்றாண்டு களாகவே பர்மாவுடனும் இந்தோசீனத்துடனும் வாணிகம் செய்தனர். அவர்கள் அந்நாடுகளில் பல இடங்களில் குடியேறி வணிக நிலையங்களை அமைத்துக்கொண்டனர், அவற்றுள் தக்கோலா (தக்கோலம்) என்பது ஒன்று. இவ்விடப் பெயர் சென்னைக்கு அருகில் உள்ள தக்கோலம் என்னும் ஊரின் பெயரை நினைவூட்டுகிறது.[4]

**கிறிஸ்துவுக்குப் பின்பு**

தமிழகம் ரோமப் பேரரசுடன் கிறிஸ்துவுக்குப் பின்னும் தொடர்ந்து வாணிகம் செய்துவந்தது, இரும்பு, விலங்கு களின் தோல்கள், ஆட்டுமயிர், நெய் முதலியன ரோமப் பெருநாட்டிற்கு அனுப்பப்பட்டன. யானைத் தந்தம் மிகுதி யாக அனுப்பப்பட்டது. உருவச் சிலைகள், தேர்கள், வண்டிகள், மேசைக் கால்கள், பெட்டிகள், பறவைக் கூண்டுகள், சீப்புகள் முதலியன ரோமப் பெருநாட்டில் தந்தத்தால் செய்யப்பட்டன.

சேர நாட்டிலிருந்த முசிறி முதலிய துறைமுகங்களி லிருந்து தந்தம் முதலியன ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆமை ஓடுகள் மிகுதியாக ஏற்றுமதி செய்யப்பட்டன. ரோமப் பெருநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டவற்றுள் மிக்க விலையுயர்ந்தவை முத்துகளேயாகும். மதுரை, உறையூர் என்னும் இரண்டு தலைநகரங்களிலும் முத்து வாணிகம் குடிகொண்டிருந்தது.[5]

ரோமர்கள் முத்துகளையும் யானைத் தந்தத்தையும் மஸ்லின் ஆடைகளையும் மிளகையும் மிகுந்த விலை

---

4. P. T. S Ayyangar, History of tho Tamils, pp. 205—206

5. Ibid. pp. 301—304.

கொடுத்து வாங்கியதால், ரோம் நாடு ஆண்டுதோறும் இந்தியாவிற்கு (தமிழகத்திற்கு) ஏறக்குறைய் ஆறு லட்சம் பவுன் கொடுத்து வந்தது. ரோமாபுரி இராணிகளும் சீமாட்டிகளும் முத்துகளை அணிவதில் பெரும் பொருளைச் செல விட்டனர். அதனால் ரோம் நாட்டு அரசியல் தலைவர்கள் முத்துகளைப் பயன்படுத்திய பெண்மணிகளை வன்மையாகக் கண்டித்தனர்.[6]

''இங்ஙனம் பெண்கள் முத்துகளை அணிந்து வருவதால் ரோமப் பெருநாட்டின் செல்வம் வற்றிவருகிறது,'' என்று திபெரியஸ் (கி. பி. 16-37) என்ற ரோமப் பேரரசன் செனட் சபைக்கு எழுதியுள்ளான். இதைக்கொண்டு முத்து வாணிகம் எந்த அளவு ரோமப் பெருநாட்டில் நடந்திருத்தல் வேண்டும் என்பதை எளிதில் அறியலாம். தமிழகத்துப் பொருள்களுக்குப் பதிலாக ரோம்நாட்டுப் பொன், வெள்ளி நாணயங்கள், மதுவகைகள் என்பவை தமிழகத்துக்கு அனுப்பப்பட்டன.[7]

தமிழகத்திலிருந்து ரோமப் பெருநாட்டிற்குச் சென்ற ஒவ்வொரு கப்பலிலும் பாதிக்கு மேற்பட்ட சரக்குமிளகாகவே இருந்தது. ஏலக்காய், இலவங்கப்பட்டை, வெல்லப்பாகு, நல்லெண்ணெய் முதலியனவும், உறையூரில் நெய்யப்பட்ட மிகவுயர்ந்த மெல்லிய ஆடை வகைகளும் ரோம் நாட்டுக்கு அனுப்பப்ட்டன; தேக்கு, அகில், சந்தன மரத்துண்டங்களும் அனுப்பப்பட்டன. தேங்காய், நெய், வாழை, அரிசி, சோளம், கப்பு முதலிய கூலங்கள், புளி,* வெற்றிலை, பாக்கு, மூலிகைகளான மருந்து வகைகள் முதலியனவும் ஏற்றுமதி செய்யப்பட்டன. முசிறித் துறைமுகத்திருந்து

---

6. R. Sathyanatha Ayyar, History of India. vol I. pp. 222—223.
7. P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 304—305.

* கரும்பு, வெல்லம் சேர்க்கப்பட்ட புளி ஏற்றுமதி செய்யப்பட்டது என்று மதுரைக் காஞ்சி (வரி 318) கூறியுள்ளது.

வயிரம் முதலிய விலை உயர்ந்த மணிகள் ரோமப் பெரு நாட்டுக்கு அனுப்பப்பட்டன.

இப்பல பொருள்களையும் பெற்றுக்கொண்ட ரோமர்கள் இவற்றுக்குப் பதிலாகப் பொன் வெள்ளி நாணயங்களையும், உயர்ந்த மதுவகைகளையும், பவழம், ஈயம், தகரம், எந்திரப் பொறிகள் முதலியவற்றையும் ஏற்றுமதி செய்தனர்.[8] **பிளைனி** (கி. பி. 24-79) என்ற மேனாட்டு யாத்திரிகர், தமிழகத்திலிருந்து ரோம் நாட்டுக்கு ஏற்றுமதியான முத்துகள், மெல்லிய ஆடைகள், இன்பப் பொருள்கள் இவற்றுக்காக ரோம் நாட்டுச் செல்வம் மிகுதியாகச் செலவழிக்கப் பட்டது என்று வருந்திக் கூறியுள்ளனர்;[9] ''செங்கடலிலுள்ள ஏசிரிஸ் என்னும் இடத்திலிருந்து (பருவக்காற்றுச் செம்மையாக வீசினால்) நாற்பது நாட்களில் சேரநாட்டு முசிறியைக் கப்பல்கள் அடையக்கூடும். முசிறி கடற் கொள்ளைக் காரரால் தாக்கப்படுவதால், பிரயாணிகள் பக்கரே (வைக் கரை)யில் இறங்க விரும்புகின்றனர்,'' என்றும் கூறியுள்ளார்.[10]

கி. பி 60 இல் **பெரிப்ளூஸ்** என்னும் நூலை எழுதிய **ஆசிரியர்** இந்தியத் துறைமுகங்களை நேரில் கண்டு பல செய்திகளைக் குறித்துள்ளார். சேரநாட்டில் **தொண்டி**, **முசிறி**; குமரி என்ற துறைகளையும், பாண்டிய நாட்டில் **கொற்கைத்** துறைமுகத்தையும், சோழ நாட்டில் காவிரிப் **பூம்பட்டினத்தையும்** குறித்துள்ளார்; கொற்கையில் கொடிய குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவரே முத்துக்குளித்து வந்தனர் என்று கூறியுள்ளார்; உறையூர் முத்து வாணிகத் திற்குப் பெயர்போனது என்றும் குறித்துள்ளார்; கிழக்குக்

---

8. History of Ceylon, vol. I, Part, I. p. 213.
9. Ibid. pp. 305—309.
10. Dr. S. A. G. Hussain, The History of the Pandya Country, p. 18.

கரைத் துறைமுகங்களிலிருந்து பெரிய கப்பல்கள் கங்கைக்கும் பர்மாவுக்கும் சென்றன என்று கூறியுள்ளார்.

கி. பி. 150 இல் தமது குறிப்பு நூலை வரைந்த **தாலமி** என்பவர் பெரிப்ளூஸ் நூலாசிரியரை விடத் தமிழகத்தைப் பற்றி மிகுதியான விவரங்களைத் தந்துள்ளார். அவர் தென்னிந்தியாவைப் பார்க்கவில்லை; ஆயினும் அவர் இந்தியாவில் தங்கியிருந்த தம்மவர் கூறியவற்றையே விவரமாக எழுதியுள்ளார். அவற்றை நோக்க, தமிழகத்தை முடியுடைய மூவேந்தரும் சிற்றரசர் பலரும் ஆண்டுவந்தனர் என்பதும், மூவேந்தரும் ஏறத்தாழச் சமநிலையில் இருந்தனர் என்பதும் தெரிகின்றன. சேரர், ஆயர், கரையார் (கரையாளர்), பாண்டியர், பரதர், சோழர், அருவாளர் எனப் பல இனத்தவர் தமிழகத்தில் இருந்தனர் என்று அவர் குறித்துள்ளார். கருவூர், மதுரை, உறையூர், மாவிலங்கை, தொண்டி, முசிறி, கொட்டாரக்கரை, கோட்டயம், பொரக்காடு, குமரி, கொற்கை, நாகப்பட்டினம், பொதுசா (புதுச்சேரி), சோபட்டினம் (மரக்காணத்திற்கு அண்மையில் இருந்த நகரம்), கோடிக்கரை, காவிரிப்பூம்பட்டினம்,[11] மோகூர் முதலிய நகரங்கள் அவரால் குறிக்கப்பட்டுள்ளன.

மதுரையில் வைகை ஆற்றங்கரைப் பகுதிகளிலும் பிற வெளியிடங்களிலும் கணக்கற்ற **ரோமச் செம்பு நாணயங்கள்** கிடைத்துள்ளன இவை மதுரையில் இருந்த யவன வணிகர் தம்முள் வழங்கிவந்த நாணயங்கள் ஆகலாம். எனவே, யவனர் பலர் மதுரை மாநகரில் தங்கியிருந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[12]

---

11. Karikala did not found Kavirippumpattinam, for it existed a thousand years before his time, since it is mentioned in the Jataka Tales, and probably was a sea port long before those Tales were born, — P. T. S. Ayyangar, History of the Tamils, p. 363.

12. P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 309—312.

தாலமி போன்ற யவன ஆசிரியர்கள் கொற்கை, குமரி, நாகப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம், பொதுசா (புதுச்சேரி), சோபட்டினம், முசிறி முதலிய தமிழகத்துத் துறைமுகப் பட்டினங்களைக் குறிப்பிட்டுள்ளனர். சேரநாட்டுக் கடற்கரையில் யவனர் குடியிருப்பும் அகஸ்டஸ் கோயிலும் இருந்தன. இன்றைய புதுச்சேரிக்கு அண்மையில் பழைய காலத்தில் ரோமர் தொழிற்சாலை இருந்தமைக்குரிய சான்றுகள் கிடைத்துள்ளன. யவனர் தமிழரசர் மெய்காவலராகத் தமிழரசர் அரண்மனைகளில் இருந்தனர்.[13]

யவனப் பொறியியல் அறிஞர்கள் தமிழரசர்க்குப் பல போர்ப் பொறிகளைச் செய்து தந்தனர். அவை இன்னவை என்பதைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். அவை மதுரையில் இருந்த கோட்டையின் சிறப்பு வாயிலின்மீதும் கோட்டைச் சுவர்மீதும் வைக்கப்பட்டிருந்தன. யவனத் தச்சரும் தமிழகத்தில் இருந்து பல பொருள்களைச் செய்து கொடுத்தனர். இவை அனைத்தையும் நோக்க, யவனர்க்கும் தமிழர்க்கும் இருந்த வாணிக உறவு நன்கு புலனாகும்[14]

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வரையப்பட்ட கிரேக்க பரிகாசக் கூத்து நூலில் பழைய கன்னட வாசகங்கள் இடம் பெற்றுள்ளன. அக்காட்சி, தென்கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த உடுப்பிக்கு அருகில் உள்ள மால்பே என்னும் இடத்திற்கு அண்மையில் நடைபெற்றதாக அந்நூல் கூறுகிறது.[15] இதனால் கிரேக்கருக்கும் கன்னடருக்கும் இருந்த வாணிகத் தொடர்பு நன்கு புலனாகும்.

இதுகாறும் கண்ட செய்திகள், தமிழகம் ஏறத்தாழக் கி. மு. ஆயிரம் முதலே கடல் வாணிகத்திற் சிறந்திருந்தது

13. History of Ceylon, vol. I, Part I, pp. 213—214.
14. P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 312—316.
15. R. Sathyanatha Aiyar, History of India, Vol. I, p. 222.

என்னும் வரலாற்று உண்மையை நன்கு தெரிவிக்கின்றன அல்லவா?

**தமிழ் இலக்கங்கள்** ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட பின்னங்களை யும் உடையவை.

$$\frac{1}{320} \times \frac{1}{21} = \text{இம்மி}$$

$$\frac{1}{320} \times \frac{1}{21} \times \frac{1}{7} = \text{அணு}$$

$$\frac{1}{320} \times \frac{1}{21} \times \frac{1}{7} \times \frac{1}{11} = \text{மும்மி}$$

$$\frac{1}{320} \times \frac{1}{21} \times \frac{1}{7} \times \frac{1}{11} \times \frac{1}{9} = \text{குணம்}$$

தமிழர் இவற்றைக் **கீழ்வாய் இலக்கம்** என்பர். இந்தப் பின்ன அளவைகளே தமிழரது வாணிகச் சிறப்பை விளக்கப் போதியவையல்லவா? இப்பின்ன அளவைகள் தமிழைத் தவிரப் பிற திராவிட மொழிகளில் இல்லை என்பதும் இங்கு அறியத்தகும். மேலும், எண்களைக் குறிக்கத் தமிழர் **தமிழ் எழுத்துகளையே பயன்படுத்தினர்** என்பதும் அறியத்தகும்.

## (2) இந்தியவரலாறு

சங்ககாலம் மிகப் பரந்துபட்ட கால எல்லையை உடையது என்பதும், அதன் கீழ் எல்லை ஏறத்தாழக் கி. பி 300 என்பதும் மேலே அறியப் பெற்றன. அக்கால இந்திய அரசியல் செய்திகளையும் அப்பழைய காலத்தில் தமிழ்நாடு பிற இந்தியப் பகுதிகளுடனும் அயல்நாடுகளுடனும்வாணிகத் தொடர்பு கொண்டிருந்ததையும் இங்கு அறிவது, தொல் காப்பியம் போன்ற சங்க நூல்களைப் பற்றி அறியப் பெருந் துணை புரிவதாகும்.

ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்து ரிக்வேதம் இயற்றிய காலம் ஏறத்தாழக் கி. மு. இரண்டாயிரம் என்றும், பிராமணங்கள் எழுதிய காலம் கி. மு. ஆயிரம் என்றும் வரலாற்றாசிரியர் கூறுவர் வேதகால இலக்கியத்தில் தமிழ் நாடுகளைப் பற்றிய பேச்சே இல்லை. பிராமணங்களின் காலத்தில்தான் தென்னிந்தியாவில் ஆரியர் நுழைவு ஏற்படத் தொடங்கியது. அக்காலத்தில் தென்னிந்தியா மேற்கு ஆசிய நாடுகளுக்கும் எகிப்துக்கும் தந்தம், மயில், மிளகு முதலிய வற்றை ஏற்றுமதி செய்துவந்தது [16]

வட இந்தியாவில் **கௌதம புத்தர்** வாழ்ந்த காலம் கி. மு. 567-487. அவர் **பௌத்த சமயத்தை** வட இந்தியாவில் பரப்பினார். அவருடைய கொள்கைகளை ஏற்றுக் கொண்ட ஆண் துறவிகள் பிட்சுக்கள் என்றும், பெண் துறவிகள் பிட்சுணிகள் என்றும் பெயர் பெற்றனர். அத்துறவிகள் இருக்கவும், புத்த தருமத்தைப் பரப்பவும் நாடெங்கும் சங்கங்கள் ஏற்பட்டன. **புத்தர்**, அவர் உபதேசித்த **தருமம்**, அவர் ஏற்படுத்திய **சங்கம்** ஆகிய மூன்றும் **பௌத்த மும்மணிகள்** என்று கூறப்பட்டன.

**சமண சமயத்**தைத் தோற்றுவித்த **மகாவீரர்** வாழ்ந்த காலம் கி. மு. 539-467 ஆகும். அவரும் புத்தரைப் போலவே அரச மைந்தராகப் பிறந்தவர். சமண சமயக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட ஆண் துறவிகள் சமண முனிவர் எனப்பட்டனர், பெண் துறவிகள் ஆரியாங்கனைகள், கந்தியார், அடிகள், குரத்தியர் எனப்பட்டனர். சமணத் துறவிகள் கூட்டமும் **சங்கம்** எனப்பட்டது. சமண சமயம் இன்னா செய்யாமை என்பதை மிகுதியாக வற்புறுத்தியது, கடுந்தவத்தை வற்புறுத்தியது; உண்ணா நோன்பை மேற்கொண்டு உயிர் விடுதலையும் ஏற்றுக்கொண்டது. இதனை '**வடக்கிருத்தல்**' என்று தமிழ் நூல்கள் கூறும்.

---

16. **R. Sathayanatha Iyer, History of India, Vol. I, pp. 36 & 45.**

புத்தர் காலத்தில் வட இந்தியாவில் மகதநாடு சிறப்புற்றிருந்தது. அக்காலத்தில் அதனைப் பிம்பிசாரன்[17] (கி. மு. 525-500) என்பவனும், அஜாத சத்ரு (கி. மு. 500-475) என்பவனும் அரசாண்டனர். இவர்களுக்குப் பின்பு தர்சகன் (கி. மு. 475-450), உதயணன் (கி. மு, 450-425) என்பவர் அரசாண்டனர். இந்த உதயணன் காலத்தில் வாழ்ந்தவன் தான் வத்சநாட்டு மன்னனான உதயணன் என்பவன்.[18]

ஏறத்தாழக் கி. மு. 425 இல் நந்திவர்த்தனன் என்பவன் மகதநாட்டை ஆளத் தொடங்கினான். அவன் கி.மு. 400 வரையில் ஆண்டான். அவனுக்குப் பின்பு மகாபத்ம நந்தன் என்பவன் கி. மு. 375 முதல் 350 வரையில் ஆண்டான். அவனுக்கு எட்டு ஆண்மக்கள் இருந்தனரென்றும், தந்தையும் மக்களும் நவநந்தர்கள் என்று அழைக்கப்பட்டனர் என்றும் வரலாறு கூறுகிறது. நந்தர்கள் மிக்க செல்வத்தைப் பெற்றிருந்தனர் என்று கிரேக்க ஆசிரியர்களும், மாமூலனார் என்ற சங்ககாலப் புலவரும் குறித்துள்ளனர்.[19]

ஏறத்தாழக் கி பி. 327இல் அலெக்ஸாண்டர் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்து வந்து வெற்றி கண்டார். அவரது வெற்றிக்குப் பிறகு கிரேக்கர்கள் வட இந்தியாவில் தலைகாட்டத் தொடங்கினர். அக்காலத்தில் வட இந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்கும் வாணிகத் தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பது சாணக்கியர் தமது பொருள் நூலில் எழுதியிருப்பதைக் கொண்டு உணரலாம். மேற்கு ஆசியாவுடனும் எகிப்துடனும் தென்னிந்தியா நடத்தி

---

17. தமிழில் பிம்பிசாரகதை என்னும் ஒரு காவியம் இருந்தது என்பது நீலகேசி உரையினால் தெரிகின்றது—பக். 71, செ. 190 உரை.

18. இவன் வரலாறே தமிழில் உள்ள பெருங்கதை என்பது.

19. History of India, vol 1, p. 87; அகநானூறு, 265.

வந்த கடல் வாணிகம் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆந்திரர்கள் தம்மாட்சி பெற்றிருந்தனர். தமிழ் அரசுகளும் விளக்கமுற்றிருந்தன.[20]

நந்தர்களுக்குப் பின்பு **சந்திரகுப்தமௌரியன்** மகத நாட்டு மன்னனானான். அவனும் அவன் மரபினரும் ஏறத்தாழக் கி. மு 188 வரையில் வட இந்தியாவின் பேரரசர்களாய் விளங்கினர். சந்திரகுப்த மௌரியன் வடஇந்தியா முழுமையும் வென்று பேரரசனாய் விளங்கினான். அவனுடைய அமைச்சனே **சாணக்கியன்** என்றும் **கௌடில்யன்** என்றும் கூறப்பெற்ற பேரறிஞன். அவன் சிறந்த **பொருள் நூல்** ஒன்றை எழுதினான். அந்நூலை மூன்று பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதி அரசனைப்பற்றியும்; அவனுடைய ஆட்சிக்குழுவைப் பற்றியும், அரசாங்கப் பிரிவுகளைப் பற்றியும் கூறுவது. இரண்டாம் பிரிவு பலவகைக் குற்றங்களுக்கு உரிய தண்டங்களைப் பற்றிப்பேசுவது. மூன்றாம் பகுதி உள்நாட்டுச் சட்டம், அரசதந்திரம், போர் ஆகியவற்றை விளக்குவது. இப்பொருள் நூல் தாப்ரொபேன்[21] (இலங்கை) முத்துகளையும் **பாண்டிய கவாடம்** என்ற முத்துகளையும் உயர்த்திக் கூறியுள்ளது; மதுரையில் நெய்யப்பெற்ற மெல்லிய ஆடைகளைப்பற்றியும் குறித்துள்ளது.[22]

சந்திரகுப்த மௌரியன் காலத்தில் கிரேக்க அரசியல் தூதனாய்ப் பாடலிபுரத்தில் ஒருவன் தங்கியிருந்தான். அவன் பெயர் **மெகஸ்தனிஸ்** என்பது. அவன் தான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் பற்றிச் சில குறிப்புகள் எழுதி

---

20. History of Indian, Vol. I, p. 105.

21. 'தாம்பன்னி' என்று இலங்கை பண்டைக்காலத்தில் பெயர் பெற்றிருந்தது. அயல் நாட்டார் அப்பெயரைத் 'தாப் ரொபேன்' என்று வழங்கலாயினர். —**History of Ceylon, vol. 1. part 1, (pp. 16—17) Publication of the University of Ceylon.)**

22. Ibid. p. 170.

வைத்தான். அக்குறிப்புகள் அடங்கிய நூலுக்கு இண்டிகா என்பது பெயர்,

அந்த நூலில் பாண்டிய நாட்டைப் பற்றியும் அந்த நாட்டு அரசியைப்பற்றியும் மெகஸ்தனிஸ் குறித்துள்ளான்; அரசியின் படையில் ஐந்நூறு யானைகளும் நாலாயிரம் குதிரைகளும் இருந்தன என்றும், ஒரு லட்சத்து முப்ப தாயிரம் வீரர் இருந்தனர் என்றும், பாண்டியநாட்டில் முத் தெடுக்கும் தொழில் நடைபெற்றது என்றும் குறித் துள்ளான்.[23]

சந்திரகுப்த மௌரியன் தனது ஆட்சி இறுதியில் பத்திரபாகு என்ற சமண முனிவருடன் மைசூர் நாட்டிலுள்ள சிரவணபெள்குளா (வெள்ளைக்குளம்) என்னும் இடத்தை அடைந்தான், அங்குத் தவம்கிடந்து முத்திபெற்றான் என்று சமண நூல்கள் கூறுகின்றன.[24]

சந்திரகுப்தன் மகனான **பிந்துசாரன்** கி. மு. 301 முதல் 273 வரையில் அரசாண்டான். அவன் தமிழகம் ஒழிந்த தக்கணப் பகுதி முழுமையையும் வென்றான். பிந்துசாரன் தமிழகத்தையும் வெல்லப் படையெடுத்தான். ஆயினும் அப்படையெடுப்புப் பயனற்றுப் போயிற்று. ஏறத்தாழக் கி. மு 165 இல் கலிங்க மன்னனாய் முடிசூட்டிக்கொண்ட **காரவேலன்** என்பவன், தமிழ்வேந்தர்கள் தம்முள் ஒன்று பட்டுத் தனக்கு முன்னே 113 ஆண்டுகளாக வலிமை பெற்று இருந்தார்கள் என்றும் அவர்களது ஒன்றுமை தனக்கு இன்னல் விளைப்பது என்றும் எண்ணித்தான் அவர்தம் கூட்டணியை ஒழித்ததாகவும் ஒரு கல்வெட்டில் குறித் துள்ளான். இங்ஙனம் அவன் குறிப்பிட்ட தமிழரசர் ஒற்று

23. History of Ceylon, Vol. I, Part I, p. 170; இது மதுரையை ஆண்டதாகத் திருவிளையாடல் கூறும் தடாதகைப் பிராட்டியைக் குறித்ததாகுமோ?

24. History of India vol I, p. 118.

மையே மௌரியர் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியது என்று கூறலாம்.[25] இப்படையெடுப்பைப் பற்றிச் சங்கப் பாடல்களில் குறிப்புகள் வந்துள்ளன.[26]

பிந்துசாரன் மகனான **அசோகன்** கி.மு 273 முதல் 232 வரையில் அரசாண்டான். அவனது ஆட்சியில் கலிங்க நாடு சேர்ந்தது. அவன் தமிழகம் நீங்கலாக உள்ள இந்தியா முழுமையும் அரசாண்டான். அம்மன்னன் கலிங்கப் போருக்குப் பின்பு பௌத்த சமயத்தைத் தழுவினான்; பௌத்த சமயக் கொள்கைகளைக் கற்றூண்களிலும் பாறைகளிலும் குறிக்கும்படி செய்தான். அக்கல்வெட்டுகள் வடக்கே இமயமலை முதல் தெற்கே மைசூர் வரையில் பரவியுள்ளன. அவற்றுள் இரண்டு கல்வெட்டுகளில் தமிழகத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன; சேர சோழ பாண்டிய நாடுகளில் பௌத்த சமயப் பிரசாரகரை அனுப்பியதாகவும் மருத்துவ வசதியளிக்க உதவி செய்ததாகவும் அக்கல்வெட்டுகளில் அசோகன் குறித்துள்ளான்.[27] அவனது பெருமுயற்சியால் ஈழநாட்டிலும் பௌத்த சமயம் பரவியது.[28]

---

25. History of India, vol I. p. 122; காரவேலன் தமிழரசர் ஒற்றுமையை உடைத்ததாகக் கூறும் கல்வெட்டின் காலம் கி.பி 165. தமிழரசர் கூட்டணி 113 ஆண்டுகளாக யிருந்துவந்தது என்று காரவேலன் குறித்துள்ளான்; அதாவது கி. மு 278 இல் அக்கூட்டணி ஏற்பட்டதென்பது பொருள். பிந்துசாரன் ஆட்சிக் காலம் கி. மு. 301-273, எனவே, இக்கூட்டணிக்குக் காரணம் பிந்துசாரன் மேற்கொண்ட மோரியர் படையெடுப்பேயாகும் என்று கூறுவது பொருத்தமாகும்.

26. அகநானூறு, 251, 281; புறநானூறு, 175; செந்தமிழ்ச் செல்வி vol. 15, பக். 546—554; vol. 16, pp. 117—119.

27. History of Ceylon, vol. I, part I. p. 47.

28. R. Sathyanatha Aiyar, History of India. vol I, p. 170.

அசோகன் குறித்த சத்திய புத்திரர் கொங்கு நாட்டை ஆண்டவராவர்.[29]

அசோகனது முயற்சியால் சேர சோழ பாண்டிய நாடுகளில் பௌத்த சமயப் பிரசாரகர் சென்றனர் என்பது முன்பு கூறப்பட்டதன்றோ? மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த கழுகுமலை போன்ற மலைகளில் குகைகள் இருக்கின்றன. அக்குகைகளில் பிராமி எழுத்துகளில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை கி.மு 3-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் எழுந்தவை என்று கூறலாம். எனவே, அசோகன் காலத்தில் பௌத்த பிட்சுகள் தமிழகத்தில் தங்கலாயினர் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.[30]

**அசோகனுக்குப் பின்பு**

ஏறத்தாழக் கி. மு 188 இல் **புஷ்யமித்ரசுங்கன்** என்பவன் மகதநாட்டு மன்னனானான். அவனுக்குப் பின்பு, அவன் மரபினர் சிறிது காலம் அரசாண்டனர். சுங்கர் ஆட்சியில் வைதிகர் செல்வாக்குப் பெற்றனர்; இராமாயண பாரத நூல்கள் திருத்தி எழுதப்பட்டன; பிரமன், விஷ்ணு, சிவன் ஆகிய மூவரும் சமநிலையில் வைக்கப்பட்டனர்.[31] இராமனும் கிருஷ்ணனும் விஷ்ணுவின் அவதாரங்களாகக் கருதப்பட்டனர். ஒரு சாரார் சிவனை உயர்த்தினர், மற்றொரு சாரார் விஷ்ணுவை உயர்த்தினர்; கீதை முடிவான உருவெடுத்தது. கிருஷ்ணன் விஷ்ணுவின் முழு அவதாரம் என்று கருதப்

---

29. **Do. History of Ancient Thondaimandalam**, pp. 4-6.

30. **Do. History of India, Vol. I, p. 171.** எழுத்துகள் தமிழ் உச்சரிப்பிற்கேற்ற தென்பிராமி எழுத்துகள். அவை கூறும் மொழி தமிழேயாகும்.—**K. A. N. sastry, A History of India**, p. 87.

31. புறநானூறு போன்ற சங்க நூல்களில் சிவன், முருகன், திருமால், பலதேவன் ஆகிய நால்வரும் ''தோலா நல்லிசை நால்வர்'' என்று சமமாகக் கூறப்பட்டுள்ளனர்.

பட்டான்; 'பகவான்' என்று அழைப்புண்டான். அவனுடைய கதைகள் பொதுமக்களிடம் பரவின. அம்மதத்தைப் பின்பற்றியவர் 'பாகவதர்' எனப்பட்டனர். அவன் வரலாற்றைக் கூறும் நூல் 'பாகவதம்' எனப்பட்டது.[32]

சுங்கர்களுக்குப் பின்பு கன்வர் மரபினர் மகதநாட்டை 45 ஆண்டுகள் ஆண்டனர். அவர்களுக்குப் பின்பு ஆந்திரப் பேரரசு இந்தியாவில் ஏற்பட்டது.

கி, மு. 176 முதல் 163 வரையில் கலிங்கப் பேரரசனாய் இருந்த **காரவேலன்** மகதநாட்டை வென்றான்; தனக்கு முன்பு 113 ஆண்டுகளாய் இருந்த தமிழரசரது வலிமை மிகுந்த கூட்டணியை அழித்தான்.[33] பாண்டியன் அவனுக்கு முத்துகளையும் யானைகளையும் பரிசாக வழங்கினான்.[34]

சிறந்த வடமொழிப் புலவரான **பதஞ்சலி** ஏறத்தாழக் கி. மு. 150இல் வாழ்ந்தவர். அவர் காஞ்சி நகரைக் குறிப்பிட்டுள்ளார். எனவே, தொண்டைமண்டலம் அப்பொழுது

32. D A. Pai, A Monograph on the Religious **Sects in India among the Hindus**, pp. 30—34; பரிபாடலிலும் கலித்தொகையிலும் திருமால் சிறப்புறப் பேசப்பட்டுள்ளமை காணலாம்.

33. R. **Sathyanatha Aiyyar, Histoty of India, Vol I**, p. 178; காரவேலன் கி. மு. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவன். அவன், தமிழரசர் 113 ஆண்டுகளாகத் தம்முள் கூட்டணி அமைத்திருந்தனர் என்று கி. மு. 165இல் கூறியுள்ளான். அஃதாவது, கி. மு. மூன்றாம் **நூற்றாண்டிலேயே தமிழரசர் கூட்டணி அமைத்திருந்தனர்** என்பது பொருளாகும். அக்கூட்டணி மௌரியரை விரட்டவே அமைக்கப்பட்டது எனக்கொள்வது பொருத்தமாகும். தொகை நூல்களில் வரும் ஆரியர் பற்றிய போர்களில் காரவேலன் போரும் ஒன்றாகலாம்.

34. **History of Ceylon, Vol. I, pat I, p.** 209.

சோழராட்சிக்கு உட்படாமல் தொண்டையர் என்ற திரையர் ஆட்சியில் இருந்திருத்தல் வேண்டும்.[35]

அலெக்ஸாண்டர் பஞ்சாப் நிலப் பகுதியைக் கைப்பற்றி மீண்ட பின்பு, அப்பகுதியையும் இன்றைய ஆப்கனிஸ்தானம், பலுஸிஸ்தானம் முதலிய பகுதிகளையும் கிரேக்கர்கள் அரசாளத் தொடங்கினர். அவர்களுள் மினாண்டர் என் பவன் ஒருவன். அவன் புத்த சமயத்தின்பால் பற்றுக் கொண்டவன். நாகசேனர் என்ற பௌத்த முனிவர் அவனைப் பௌத்தனாக்க முயன்றார். அப்பொழுது அவன் கேட்ட கேள்விகளும் அவற்றுக்கு நாகசேனர் அளித்த விடை களும் 'மிலிந்த பன்ஹ' (Milinda panha) என்ற பெயர் கொண்ட நூலாக வெளியானது. அது பாலி மொழியில் எழுதப் பெற்றது. அதன் காலம் ஏறத்தாழக் கி. பி. முதல் நூற்றாண்டாகும்.[36]

மினாண்டருக்குப் பின்பு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு வரையில் இந்தியாவின் வடமேற்குப் பகுதியைக் கிரேக்கர் கள் ஆண்டனர். அக்காலத்தில் (கி. மு. இரண்டாம் நூற்றாண்டில்) **சாகர்** அல்லது **சித்தியர்** என்னும் புதிய இனத்தவர் நடு ஆசியாவிலிருந்து இந்தியாவினுள் நுழைந்த னர். அவர்கள் (வட) மதுரை, தட்சசீலம் முதலிய

35. R. Sathyanatha Aiyar, Ancient History of Thondaimandalam, p 6; சங்க நூல்களில் திரையன், இளந் திரையன் பற்றிய குறிப்புகள் வந்துள்ளன.

36. மிலிந்த — மினாண்டர்; பன்ஹ — வினாக்கள். R. Sathyanatha Aiyar, History of India, vol, I, p. 229; ஏறத்தாழ இந்நூற்கேள்வி-விடைகளைப் போலவே சம்பந்தர்—புத்தர் வாதத்தில் எழுந்த வினா—விடைகள் இருத்தலைப் பெரிய புராணத்திற் காணலாம்; சம்பந்தர் புராணம்—915—924.

இடங்களிலிருந்து ஆளத் தொடங்கினர். அவர்கள் 'இராச ராசர்' என்ற பட்டத்தை மேற்கொண்டனர்.[37]

சாகர்களுக்குப் பின்பு குஷானர் என்ற புதிய இனத்தவர் இந்தியாவிற்கு வந்து சில பகுதிகளைக் கி. மு. முதல் நூற்றாண்டில் ஆளத் தொடங்கினர். அம்மரபில் மிகச் சிறந்தவன் கனிஷ்கன். ஆயின், 'குஷானர் தனிப்பட்ட இனத்தவர் அல்லர். அவர்களும் சாகர் இனத்தவரே' என்று இப்பொழுது ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்; கனிஷ்கன் என்னும் 'சக' மன்னன் கி பி. 78இல் மன்னனானான் அது முதல் **சக அப்தம்** (சகாப்தம்) ஆட்சிக்கு வந்தது.[38] சக அப்தத்திற்கு 'சாலிவாகன' அல்லது 'சாதவாகன' என்பது சேர்த்து வழங்கப்பட்ட காலம் கி பி. 1272 என்பது இங்குக் கவனிக்கத்தகும். எனவே, 'சாலிவாகன சகாப்தம்' அல்லது 'சாதவாகன சகாப்தம்' என்று கூறுவது பொருத்தமற்றது.[39]

கனிஷ்கன் கி. பி 78 முதல் 120 வரையில் அரசாண்டான். அவன் வடஇந்தியாவின் பெரும் பகுதிக்குப் பேரரசனாய் விளங்கினான். அவன் பௌத்த சமயத்தைத் தழுவினான். புத்தர் உபதேசித்த கொள்கைகள் **ஹீனயான** (சிறுவழி) பௌத்தத்தைச் சேர்ந்தவை. கனிஷ்கன் காலத்தில் பெருகிப் பரவிய பௌத்தம் **மஹாயானம்** (பெருவழி) எனப்பட்டது. பெருவழியில் புத்த விக்கிரகம் வைத்து வழிபடுதலும் சடங்குகளும் ஏற்பட்டன; பிரார்த்தனையும் சிறந்த ஒழுக்கமுடைமையும் வற்புறுத்தப்பட்டன. அறவழி காட்டிய புத்தரை மதித்துப் போற்றலே சிறுவழியின் உயிர் நாடியாய் இருந்தது.[40]

---

37. R. Sathyanatha Aiyer, History of India, vol. I, p. 184.
38. Ibid. pp. 185—189.
39. Ibid. P. 187.
40. தமிழில் உள்ள மணிமேகலை என்னும் பௌத்த காவியத்தில் கூறப்பட்டுள்ளது ஹீனயான பௌத்தமாகும்.

குஷானர் ஆட்சிக்குப் பிறகு ஏறத்தாழக் கி. பி. 180இல் **பாரசிவர்** என்று பெயர் கொண்ட அரச மரபினர் வடஇந்தியாவின் பெரும் பகுதியை ஆளத்தொடங்கினர். இவர்கள் நாக மரபினர். இவர்கள், பின்வந்த குப்தர்களால் கி. பி. 4 ஆம் நூற்றாண்டில் ஒடுக்கப்பட்டனர்.

**சாதவாகனர்**

ஏறத்தாழக் கி. மு. 235 முதல் கி. பி. 220 வரையில் சாதவாகனர் என்ற ஆந்திர அரசர்கள் கங்கைக்கும் கிருஷ்ணைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். இவர்கள் சாதவாகனர் என்றும் சதகர்ணிகள் என்றும் பெயர் பெற்றனர். '**சதகர்ணிகள்**' என்பவர் தமிழில் **நூற்றுவர் கன்னர்**[41] என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகளால் குறிக்கப்பெற்றனர்; ஆந்திரப் பேரரசருள் **கௌதமீபுத்ர சதகர்ணி** (கி. பி. 106—130) என்பவன் மிக்க புகழ் பெற்றவன். அவனது ஆட்சியில் மகாராட்டிரம், வடகொண்கானம், பீரார், கூர்ச்சரம்; கத்தியவார், மாளுவம் ஆகிய நாடுகள் சேர்ந்திருந்தன. அவனுக்குப் பின்பு ஆந்திரப் பேரரசு வரவர அளவிற் சுருங்கத் தொடங்கிக் கி. பி. 220 இல் மறைந்தது.

ஆந்திரப் பேரரசின் தென்பகுதி மாகாணங்களை இக்குவாகர், பிருகத் பலாயனர், சாலங்காயனர் என்பவர் மாகாணத் தலைவராய் இருந்து ஆண்டு வந்தனர். பல்லாரி மாவட்டத்தைப் **பல்லவர்** என்பவர் சாதவாகனர் சார்பில் ஆண்டு வந்தனர். ஆந்திரப் பேரரசின் வன்மை குறைந்தவுடன் இம்மாகாணத் தலைவர்கள் தாம்தாம் ஆண்டு வந்த மாநிலங்கட்குத் தாமே அரசராயினர்.[42] **பல்லவர்** தொண்டை

---

41. நூற்றுவர் கன்னர் செங்குட்டுவன் நண்பர் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது.

42. R. Sathyanatha Aiyar, History of India, part 1, pp. 207 & 210.

நாட்டைக் கைப்பற்றி ஏறத்தாழக் கி. பி. 300 முதல் ஆளத் தொடங்கினர் எனலாம். காஞ்சி அவர்தம் தலைநகரமா யிருந்தது.

**சமயநிலை**

பிராமணங்களின் காலத்தில் வேதியர் தமிழகத்தில் நுழைந்தனர். அவர்தம் வடமொழி தமிழகத்தில் பரவலா யிற்று அரசர்கள் வேதவேள்விகள் செய்யத் தொடங்கினர். காலப்போக்கில் சிவன், திருமால் முதலிய தேவர்கட்குக் கோவில்கள் எழுந்தன; விழாக்களும் பூசைகளும் நடந்தன. ஓவியம், சிற்பம், இசை, நடனம் முதலிய நுண்கலைகள் வளர்ச்சி பெற்றன. பௌத்த சமய ஆண் பெண் துறவிகளும், சமண சமய ஆண் பெண் துறவிகளும் தமிழகத்தில் மடங் களில் தங்கிச் சமயப் பிரசாரம் செய்தனர். பலவகைச் சமயங்கள் இருந்தபோதிலும், அவை வெளிப்படையாகப் பூசலிடவில்லை. தமிழர் தத்தம் விருப்பம்போல அச்சமயங் களைத் தழுவினர்.

பௌத்த சமயம் சாதவாகனர் ஆட்சியில் சிறந்த முறை யில் ஆந்திர நாட்டில் வளர்ச்சி பெற்றது. ஆந்திர நாட்டுத் தலைநகரான அமராவதியில் பெரிய கோவில்கள் கட்டப் பட்டன. அவை ஏறத்தாழக் கி. மு. 200 முதல் கி. பி. 200 வரையில் கட்டப்பட்டவையாகும். அவற்றில் புத்தருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிக்கும் சிற்பங்கள் கண்டு வியக் கத் தக்கவை.[43]

## 3. இலங்கை வரலாறு

தமிழகத்திற்கு ஏறத்தாழ முப்பது கல் தொலைவில் உள்ள கடல் கடந்த நாடு இலங்கையாகும். அது ஒரு தீவு. அது வடக்குத் தெற்காக 270 கல் நீளமும் கிழக்கு மேற்காக 140 கல் அகலமும் உடையது. அதன் வட பகுதியில் யாழ்ப்பாண நாடு அமைந்துள்ளது. அதனைச் சுற்றிலும்

43. Ibid. pp. 233—234.

பல சிறிய தீவுகள் அமைந்துள்ளன. ஏறத்தாழக் கி. மு. ஆறு அல்லது ஐந்தாம் நூற்றாண்டில் விசயன் என்பவன் வட இந்தியாவிலிருந்து வந்து இலங்கை அரசனாய் முடி சூடிக் கொண்டான்.

இந்திய இலக்கியங்களுள் இலங்கையைப் பற்றிக் குறிக்கும் முதல் நூல் கௌடில்யன் (சாணக்கியன்) எழுதிய பொருள்நூலே யாகும். அதே காலத்தில் வாழ்ந்த மெகஸ்தனிஸ் என்ற கிரேக்க அறிஞனும் இலங்கையைப் பற்றி எழுதியுள்ளான். கி. மு 3 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அசோகன் தன் மகனான மகேந்திரனையும் தன் மகளான சங்கமித்திரையையும் பௌத்த சமயத்தைப் பரப்புவதற்காக இலங்கைக்கு அனுப்பினான்.

அசோக மன்னன் காலத்தில் இலங்கை அரசனாய் இருந்தவன் தேவனாம்பிரியதிஸ்ஸன் என்பவன். அவனுக்குப் பிறகு அவன் பின்னவரான உத்தியன், மகாசிவன், சூரதிஸ்ஸன் ஆகிய மூவரும் (ஒவ்வொருவரும் ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் வீதம்) முப்பது ஆண்டுகள் அரசாண்டனர். சூரதிஸ்ஸன் ஆட்சிக் காலத்தில் கி. மு. 3 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் சேனன், குத்தகன் என்ற தமிழர் (தமிழகக் குதிரை வாணிகர்) இருவர் இலங்கையைக் கைப்பற்றி இருபத்திரண்டு ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். அவர்கள் கதம்ப ஆற்றின் போக்கை இலங்கையின் தலைநகரான அநுராதபுரத்திற்கு அண்மையில் திருப்பி விட்டனர்.

தேவனாம்பிரியதிஸ்ஸனுடைய தம்பியான அசேலன் என்பவன் தமிழரசர் இருவரையும் முறியடித்துப் பத்து ஆண்டுகள் நாட்டை ஆண்டான். அக்காலத்தில் (கி. மு. 2 ஆம் நூற்றாண்டில்) ஏழாரன் என்ற தமிழன் இலங்கையைக் கைப்பற்றி ஏறத்தாழ நாற்பத்து நான்கு ஆண்டுகள் அரசாண்டான்[44] பின்னர் அவன் துட்டகாமணி என்ற இலங்கையரசனாற் போரிற் கொல்லப்பட்டான். ஏ

44. History of Ceylon, Vol. I, part I. p. 144

மநுநீதிச் சோழனைப்போல நீதி முறையை நிலைநாட்டத் தன் மகனைக் கொன்றான், எல்லாச் சமயங்களையும் சமமாக மதித்தான் என்று பௌத்தர்கள் எழுதி வைத்துள்ள வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

ஏறத்தாழக் கி. மு. 103 முதல் கி. மு. 89 வரையில் இலங்கையில் மீண்டும் **தமிழர் ஆட்சி** ஏற்பட்டது. புலஹத்தன், பாகியன், பனைய மாறன், பிளைய மாறன், தாட்திகன் என்ற **தமிழர் ஐவரும் இலங்கையை ஆண்டனர்.** பின்னர்க் கி. பி. 43 முதல் 52 வரையில் சந்தமுக சிவன் என்ற சிங்கள அரசன் நாட்டை ஆண்டான். அவன் **தமிழதேவி** என்ற தமிழரசன் மகளை மணந்தான். அவன் மகனும் ஒரு **தமிழரசன் மகளை** மணந்து கொண்டான்.

வசபன் என்ற சிங்கள வேந்தன் கி. பி. 67 முதல் 111 வரை அரசாண்டான். அவன் சோழன் வலிமை பெறுவதை அறிந்து இலங்கையில் தக்க பாதுகாப்புகளை மேற்கொண்டான். வசபன் மகனான வங்கநாசிகதிஸ்ஸன் (கி பி. 111-114) காலத்தில் **சோழ அரசன்** (கரிகாலன்?) **படையெடுப்பு** இலங்கை மீது நடைபெற்றது. சோழன் பன்னீராயிரம் சிங்களவரைச் சிறை செய்து சோணாட்டுக்குக் கொண்டு சென்றான்; அவர்களைக் கொண்டு **காவிரிக்குக் கரையிடுவித்தான்.**[45]

''கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வரையப்பெற்ற புண்ணிய குமாரனுடைய மேல்பாட்டுச் செப்பேடுகளிலும், கங்கை கொண்ட சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேடுகளிலும், வீரராசேந்திர சோழனுடைய கன்னியாகுமரிக் கல்வெட்டிலும் **கரிகாலன் காவிரிக்குக்கரை அமைத்து** அதன் வெள்ளத்தைத் தடுத்து நாட்டிற்கு நலம் புரிந்தமை கூறப்பட்டுள்ளது. ஆதித்தன் முதற் பராந்தகன் ஆட்சிக் காலக் கல்வெட்டுகள் சில, காவிரிக் கரையைக் **'கரிகாலக்கரை'** என்று கூறுகின்றன. இக்கல்வெட்டுகளால் அவ்வேந்தர்

45. Ibid pp. 175—182.

களின் காலமாகிய கி.பி 9, 10-ஆம் நூற்றாண்டுகளில் காவிரியாற்றின் வட கரையைக் **'கரிகாலக் கரை'** என்றே மக்கள் வழங்கிவந்தனர் என்பது தெள்ளிதிற் புலனாதல் காண்க. இதுபற்றியே இவனைப் **''பொன்னிக் கரை கண்ட பூபதி''** என்று கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன் உலாவிற் புகழ்ந்துள்ளனர்.''[46]

வங்க நாசிக திஸ்ஸன் மகனே சிலப்பதிகாரத்திற் குறிக்கப் பெற்ற 'கடல்சூழ் இலங்கைக் **கயவாகு'** வேந்தன். அவனை முதலாம் **கஜபாஹு** என்று இலங்கை வரலாறு கூறும். அவன் ஆட்சிக் காலம் கி.பி. 114—136. அவன் காலத்தில் இலங்கையில் இரண்டு அரச மரபின் கிளையினர் பிரிந்திருந்தனர். நாடு முழுமையும் தன் ஆட்சியிற் கொண்டுவர எண்ணிய கயவாகு, மற்றொரு கிளையின் அரச மகளை மணந்தான்; இந்த மணவுறவினால் இலங்கை முழுமைக்கும் இறைவனானான்.

கயவாகு சோழ நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, பன்னீராயிரம் தமிழரைச் சிறை செய்து இலங்கைக்குக் கொண்டுவந்தான் என்றும், பத்தினியின் காற் சிலம்பைக் கொண்டு வந்தான் என்றும் இலங்கைக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் கூறுகின்றன. கயவாகு சேரன் செங்குட்டுவனுக்கு நண்பன் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. சோழனுடன் பகைமை கொண்ட கயவாகு சேரனுடன் சேர்ந்ததில் வியப்பில்லை. கயவாகு இலங்கையில் **பத்தினி வணக்கத்தை** ஏற்படுத்தினான் என்று இலங்கைக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் நவில்கின்றன. பத்தினி வணக்கம் இன்றும் சிங்களவர் சமயத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பது இங்கு அறியத்தகும்.[47]

அபயநாகன் என்ற சிங்கள இளங்கோ தென் இந்தியா

---

46. டி. வி. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், மூன்றாம் பகுதி, பக். 84—86.

47. History of Ceylon, Vol. I, Part I, pp. 183-185.

சென்று, படையுடன் மீண்டுவந்து, தன் தமையனைக் கொன்று, கி. பி. 230 இல் அரியணை ஏறினான்.[48]

**ஈழத்து வாணிகம்**

இலங்கை நாட்டுக் கதைகளில் வணிகர் கடல் கடந்து பல நாடுகட்குச் சென்று மீண்டமை கூறப்படுகிறது. வணிகர் சங்கங்கள் பிராமி கல்வெட்டுகளிற் குறிக்கப் பெற்றுள்ளன. இவற்றை நோக்க, இலங்கை மிகப்பழைய காலத்திலிருந்தே கடல் வாணிகத்தை மேற்கொண்டிருந்தது என்று கூறலாம்.

பலவகைப்பட்ட முத்துகள் இலங்கைத் தீவிற் கிடைப்பதாகச் சாணக்கியன் தனது பொருள் நூலில் எழுதியுள்ளான். அக்காலத்தில் இலங்கையின் வடமேற்குக் கடலில் **முத்துகள்** கிடைத்தன; முத்துகள் கிடைத்த இடத்திற்கும் வடக்கேயுள்ள கடலில் **சங்குகள்** மிகுதியாகக் கிடைத்தன. தென் இலங்கையில் உள்ள மலை நாட்டில் விலையுயர்ந்த **மணிகள்** கிடைத்தன. இக்காரணத்தால் இலங்கைத் தீவு '**இரத்தினத் தீவு**' என்று பழைய நூல்களில் எழுதப் பெற்றது.

இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட பொருள்களுக்கு ஈடாக அயல்நாட்டார் பொன், வெள்ளி, செம்பு, கண்ணாடி, பவழம், பலவகைப்பட்ட போலி இரத்தினங்கள், உயர்ந்த வகை மட்பாண்டங்கள், மது வகைகள், குதிரைகள் முதலிய வற்றை இலங்கைக்குக் கொடுத்தனர். **முதலில் இலங்கை யோடு குதிரை வாணிகம் செய்தவர் தமிழரேயாவர்.**

அசோகன் காலத்து இலங்கை இறைவனான தேவனாம் பிரிய திஸ்ஸன் அசோகனிடம் ஒரு தூதுக் குழுவை அனுப்பி னான். அவருள் ஒருவன் வணிகர் தலைவன். அசோகன் அத்தலைவர்க்குச் 'செட்டி' என்ற பட்டத்தை வழங்கினான். பிராமிக் கல்வெட்டுகளில் **தமிழ் வணிகர்** குறிக்கப்பெற் றுள்ளனர்.

48. Ibid. pp 187-188.

உள்நாட்டு வாணிகமும் சிறப்புற நடைபெற்றது. தலை நகரான அநுராதபுரத்தின் நான்கு வாயில்கட்கு அருகில் வணிக இடங்கள் இருந்தன. அவை நியமம் (வணிக இடங்கள்) என்று பெயர் பெற்றன. உள்நாட்டு வணிக இடங்கள் நகரங்கள் எனப்பட்டன.[49]

ஹிப்பலாஸ் (Hippalos) என்ற கிரேக்க அறிஞன் பருவக் காற்றுகளின் துணையைக் கொண்டு செங்கடலிலிருந்து இந்தியப் பெருங்கடல் வழியாக இந்தியாவிற்குக் கப்பல்களை எளிதில் செலுத்தலாம் என்று கி.மு. முதல் நூற்றாண்டில் கண்டறிந்தான். இக்கண்டு பிடிப்பைக் கிரேக்கர்களும் ரோமர்களும் பயன்படுத்திக்கொண்டனர். அது முதல், இலங்கைக்கும் மேல் நாடுகளுக்கும் நேரான கடல் வாணிகத் தொடர்பு ஏற்பட்டது. அதற்கு முன்பு அத் தொடர்பு ஏற்படவில்லை. ஆயினும் தமிழகத்துத் துறைமுக நகரங்களிலிருந்து இலங்கைப் பொருள்கள் மேல் நாடுகளுக்கு அனுப்பப்பட்டன. தமிழ் வணிகர் ஆமை ஓடுகள், மெல்லிய ஆடைகள் முதலிய ஈழ நாட்டுப் பொருள்களை வாங்கி அயல் நாடுகளுக்கு அனுப்பி வந்தனர்.

பிளைநி (கி.பி. 24—79), பெரிப்ளூஸ் (கி.பி.60) நூலின் ஆசிரியர் ஆகிய மேனாட்டு யாத்திரிகர் இலங்கையைப் பற்றி நன்கு எழுதியுள்ளனர். கிளாடியஸ் சீசர் (கி.பி. 41-54) காலத்தில் சிங்கள அரசனால் அனுப்பப்பட்ட அரசியல் தூதர் நால்வர் ரோம் நகரத்திற்குச் சென்றனர். இங்ஙனம் இலங்கை தனது கடல் வாணிகச் சிறப்பால் அயல் நாடுகளுக்குத் தெரியலாயிற்று. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் இந்தியாவையும் இலங்கையையும் அறிந்த தாலமி என்ற மேனாட்டு யாத்திரிகரும் இலங்கையைப் பற்றி எழுதியுள்ளனர்.[50]

---

49 Ibid. pp. 224—226.

50. Ibid. pp. 16—17.

இங்ஙனம் சங்க காலத்தில் இலங்கைக்கும் தமிழகத்துக்கும் அரசியலிலும் வாணிகத்திலும் உறவு இருந்த காரணத்தாற்றான் இலங்கைத் தமிழ்ப்புலவர் ஒருவர் தமிழகத்திற்கு வந்து தமிழிற் சில பாக்களைப் பாடினார். அவர் பெயர் ஈழத்துப் பூதன் தேவனார் என்பது. அவர் பாடிய பாக்கள் அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை என்னும் தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன.[51]

51. அகநானூறு, 88, 231, 307; குறுந்தொகை, 189, 343, 360; நற்றிணை, 366.

# 7. தொல்காப்பியம்

## (1) தொல்காப்பியத்தின் பழைமை

### சங்க நூல்கள்

தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன **சங்க நூல்கள்** என்பதும், சங்ககாலம் என்பது ஏறத்தாழக் கி.பி. 300 உடன் முடிவு பெற்றது என்பதும், அதன் தொடக்கம் கூறற்கியலாப் பழைமை வாய்ந்தது என்பதும் முன்னரே கூறப்பட்டவை. இப்பரந்து பட்ட காலத்தில் பல இலக்கண நூல்களும் இலக்கிய நூல்களும் தோன்றின. அழியக்கூடிய பனையோலை ஏடுகளில் எழுதப்பட்ட காரணத்தாலும், கடல் கோள்கள் போன்ற பேரழிவுகளினாலும் பல நூல்கள் அழிந்து போயின; போனவை போக, மேலே கூறப்பெற்ற நூல்கள் இன்று 'சங்க நூல்கள்' என்னும் பெயரில் உயிர் வாழ்கின்றன. காலப்போக்கில் மறைந்தொழிந்த நூல்களின் பெயர்கள் சில தொல்காப்பிய உரை, சிலப்பதிகார உரை, யாப்பருங்கல உரை முதலிய உரைகளிற் காணக் கிடக்கின்றன.

### சங்ககாலத் தமிழ்

தொல்காப்பியர் தமக்கு முற்பட்ட இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்பதை, 'என்ப', என்மனார் புலவர்' எனத் தம் நூலில் பல இடங்களில் குறித்துள்ளார்; 'யாப்பென மொழிய யாப்பறி புலவர்' என்றாற் போலவும் பல இடங்களில் கூறியுள்ளார்; ஆயின் வடசொற்கள் தமிழில் வழங்குவதற்கு விதிகூறும் இரண்டு இடங்களிலும்,

'என்ப', 'என்மனார்' என்னும் சொற்களை ஆளாததை நோக்க, அவர்க்கு முன்பு இருந்த இலக்கண ஆசிரியர்கள் காலத்தில் பிறமொழிச் சொற்கள் தமிழிற் புகவில்லை என்பது தெரிகிறது; தெரியவே, **தமிழ் தனித்தியங்கிய காலம் இருந்தது** என்பது தெளிவாகிறதன்றோ?

சங்ககாலம் மிகப் பரந்துபட்டது என்பது முன்பே கூறப்பெற்றது. இதன் முற்பகுதியில் (தொல்காப்பியத்திற்கு முன்பு) வடவர் கூட்டுறவு தமிழகத்தில் இல்லை. எனவே, தொல்காப்பியத்திலும் பிற சங்க நூல்களிலுமே வட சொற்கள் தமிழிற் கலந்தன. பெரும்பாலும் சமயத் தொடர்பான சொற்கள் இப்பிறமொழிச் சொற்களாகவே காணப்படுகின்றன. எனவே, பிறமொழிச் சொற்களைச் சிலவாகக் கொண்ட செய்யுட்களும் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன என்பதை இங்கு அறிதல் நலம். வடநாட்டுப் புராணக் கதைகளும் புத்த சாதகக் கதைகளும் சில தொகை நூற்பாக்களிலும், மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலும் இடம் பெற்றுள்ளன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பரந்துபட்ட சங்ககாலத்தின் இறுதியில் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பட்டவை. இந்த உண்மைகளை உளங்கொள்ளின், **சங்ககாலத்தின் முற்பகுதி தமிழ் மட்டும் வழங்கிய பகுதி** என்பதும், **பிற்பகுதி தமிழோடு பிறமொழிகளும் கலந்து வழங்கிய பகுதி** என்பதும் நன்கு அறியப்படும். இவ்வுண்மையைத் தொல்காப்பியத்திலேயே காணலாம்.

**தொல்காப்பியம்**

தொல்காப்பியம், இன்றுள்ள சங்க நூல்களுள் காலத்தால் முற்பட்டது என்பது பலர் கருத்து. முற்காலத்திலிருந்த தமிழ் நூல் வகைகளையும் செய்யுள் வகைகளையும் உலக வழக்காகிய நெறிமுறைகளையும் அறிவதற்குச் சிறந்த கருவியாக உள்ளது இந்நூலே என்பது அறிஞர் கருத்து. இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றையும் பற்றி எடுத்துக் கூறுவது. இதன்கண் உள்ள விதிகளைக் கூர்ந்து நோக்கின், அவற்றுக்கெல்லாம் அடிப்

படையாகத் தொல்காப்பியர்க்கு முன்னரே மிகப்பல இலக்கியங்களும் இலக்கண நூல்களும் தமிழ்மொழியில் நிலை பெற்று இருத்தல் வேண்டும் என்பது அறிவுடையோர்க்கு நன்கு புலனாகும். தொல்காப்பியர் தம் காலத்தனவும் தமக்கு முன்னர் எழுந்தனவும் ஆகிய இலக்கண இலக்கிய நூல்களை நன்கு ஆராய்ந்தே அவற்றின் இயல்புகள் அனைத்தும் விளங்கத் தம் நூலை இயற்றினார் என்பது தெளிவாகும்.

தொல்காப்பியச் சூத்திரங்களுள் ஏறத்தாழ இருநூற்று அறுபது இடங்களில் தொல்காப்பியர், தமக்கு முன்பு இருந்தவரும் தம் காலத்தவருமான இலக்கண ஆசிரியர் பலரைப் பலபடியாகக் குறிப்பிட்டுள்ளார்

(1) 'என்ப'—'மொழிப' என்னும் முறைமை தொல்காப்பியத்தில் ஏறத்தாழ 147 இடங்களில் வந்துள்ளன.

(2) 'என்மனார் புலவர்' என்பது சுமார் 68 இடங்களில் வந்துள்ளது.

(3) 'வரையார்' என்பது 15 இடங்களில் வந்துள்ளது.

(4) பிற சிறப்புடன் வந்துள்ள தொடர்கள் ஏறத்தாழ முப்பதாகும், இத்தொடர்கள் தாம் சுவையுடையவை. ஆதலின், அவற்றை அதிகார முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக இங்குக் காண்போம்:

I. எழுத்ததிகாரத்தில்—

| | | | |
|---|---|---|---|
| 1. | "நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே" | -நூற்பா | 7 |
| 2. | "ஒத்த தென்ப உணரு மோரே" | " | 193 |
| 3. | "செவ்வி தென்ப சிறந்திசி னோரே" | " | 295 |
| 4. | "புகரின்று என்மனார் புலமை யோரே" | " | 369 |

II. சொல்லதிகாரத்தில்—

| | | | |
|---|---|---|---|
| 1. | "உளவென மொழிப உணர்ந்திசி னோரே" | " | 116 |
| 2. | "வழுக்கின் றென்ப வயங்கி யோரே" | " | 119 |
| 3. | "விளியொடு கொள்ப தெளியு மோரே" | " | 153 |
| 4. | "ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே" | " | 158 |

III. பொருள் அதிகாரத்தில்— நூற்பா

| | | | |
|---|---|---|---|
| 1. | ''இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே'' | '' | 4 |
| 2. | ''புலனன் குணர்ந்த புலமை யோரே'' | '' | 14 |
| 3. | ''கொள்ளும் என்ப குறியறிந் தோரே'' | '' | 50 |
| 4. | ''நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே'' | '' | 315 |
| 5. | ''இடையும் வரையார் தொடையுணர்ந் தோரே'' | '' | 371 |
| 6. | ''வரைவின் றென்ப வாய்மொழிப் புலவர்'' | '' | 383 |
| 7. | ''யாப்பென மொழிப யாப்பறி புலவர்'' | '' | 380 |
| 8. | ''வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் நாற்பேர் எல்லை அகத்தவர் வழங்கும் யாப்பின் வழியது என்மனார் புலவர்'' | '' | 384 |
| 9. | ''பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே'' | '' | 403 |
| 10. | ''ஒன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே'' | '' | 406 |
| 11. | ''தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும்'' | '' | 407 |
| 12. | ''நூல்நவில் புலவர் நுவன்றறைந் தனரே'' | '' | 457 |
| 13. | ''ஒத்தென மொழிப உயர்மொழிப் புலவர்'' | '' | 472 |
| 14. | ''தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப'' | '' | 474 |
| 15. | ''ஆங்கென மொழிப அறிந்திசி னோரே'' | '' | 514 |
| 16. | ''தோலென மொழிப தொன்னெறிப் புலவர்'' | '' | 539 |
| 17. | ''புலனென மொழிப புலனுணர்ந் தோரே'' | '' | 542 |
| 18. | ''நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே'' | '' | 571 |
| 19. | ''நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்'' | '' | 644 |
| 20. | ''சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்'' | '' | 646 |

சுவை பயக்கும் இத் தொடர்களை, அவையுள்ள இயல்களையும் நூற்பாக்களையும் கொண்டு ஆராய்ந்து முடிபு கூறல் அழகிதாகும். இத் தொடர்கள் பலதுறைப் புலவர்களைச் சுட்டுதல் தெற்றெனை விளங்குதல் காண்க; இவற்றை நோக்கும் அறிஞர் சிறப்பாகப் பொருளதிகாரத்தில் வரும்

4, 5, 7, 8, 9, 11, 12, 14, 15, 16, 20 ஆம் எண்கள் சுட்டும் தொடர்களைக் காண்கையில், மேற் கூறப்பெற்ற உண்மையை எளிதில் உணர்வர்.

## தொல்காப்பியத்தின் பழைமை

தொல்காப்பியம்—எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, திருக்குறள் என்பவற்றிற்குக் காலத்தாற் முற்பட்டது என்பது பலர் கொள்கை. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் தொல்காப்பியம் மேற்சொல்லப் பெற்ற நூல்களுக்குக் காலத்தால் பிந்தியது என்று கூறியுள்ளனர். இவர் கூறியுள்ள காரணம் ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய்ந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சியாளர் வித்துவான் **க. வெள்ளை வாரணனார்** தமது **''தொல் காப்பியம்''** என்னும் ஆராய்ச்சி நூலில் மறுத்துள்ளார் (பக். 86—127).

இலக்கண நூல் செய்யும் ஆசிரியன் தன் காலத்தில் உள்ள எல்லா இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் நன்கு ஆராய்ந்த பின்பே இலக்கண விதிகளை அமைப்பது இயல்பு; உலக வழக்கில் உள்ள சொற்கள், செய்யுள் வழக்கிலுள்ள சொற்கள் ஆகிய இவற்றை ஆராய்ந்து விதி கூறுதல் இயல்பாகும். தொல்காப்பியர் புறநானூறு முதலிய நூல்களுக்குப் பிற்பட்டவராயின், அவற்றின்கண் காணப்படும் வழக்காறுகளை உள்ளத்துள் வைத்தே நூல் செய்திருப்பார். அவர் மேற்கூறப்பெற்ற நூல்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் ஆயின், பின் நூல்களிலுள்ள மாறுதல்களுக்கு அவர் பொறுப்பாளியாகார். இந்த உண்மையை நினைவிற் கொண்டு கீழ்வரும் செய்திகளைக் காண்போம்:

## அகச்சான்றுகள்

(1) சகரமெய், அ ஐ ஔ என்னும் மூன்று உயிரோடும் கூடி மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பிய விதி.

''சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அஐ ஔவெனும் மூன்றலங் கடையே.''

(எழுத்து: நூற்பா 62)

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில் 'சடை', 'சமம்', 'சகடம்' என்னும் சொற்கள் வந்துள்ளன. (செ. 1, 14, 102); பத்துப்பாட்டில் 'சவட்டி', 'சலம்', 'சந்து' என்பவை இடம் பெற்றுள்ளன) பெரும்பாண், வரி 217; மதுரைக் காஞ்சி, வரி 112; மலைபடு, வரி, 392); பதிற்றுப்பத்தில் 'சவட்டும்' என்பது வந்துள்ளது (செ. 84). திருக்குறளில் 'சமம்', 'சமன்' என்பன வந்துள்ளன (குறள் 99, 112).

(2) ஞகர மெய் ஆ, எ, ஒ, என்னும் மூன்று உயிரோடு மட்டுமே கூடி மொழிக்கு முதலில் வரும் என்பது தொல் காப்பிய விதி.

''ஆ எஒ, எனு மூவுயிர் ஞகாரத் துரிய.'' (எழுத்து. 64)

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில் ஞமன்', 'ஞமலி', 'ஞிமிறு' என ஞகரமெய் அகர இகரத்துடன் கூடி முதலில் வந்துள்ளது (செ. 6, 74, 93); அகநானூற்றில் 'ஞிமிறு' 'ஞமலி' என்பன இடம் பெற்றுள்ளன (செ. 59; 140, 388); பதிற்றுப்பத்தில் 'ஞரல' என்பது வந்துள்ளது (செ. 30). பட்டினப்பாலையில் 'ஞமலி' என்பது காணப்படு கின்றது (வரி 140).

(3) யகரமெய் ஆ என்னும் உயிரோடு மட்டும் மொழிக்கு முதலில் வரும். ஏனைய பதினொரு உயிர் களோடும் மொழிக்கு முதலில் வராது என்பது தொல்காப்பிய விதி.

''ஆவோ டல்லது யகர முதலாது.'' (எழுத்து. 65)

இவ்விதிக்கு மாறாக 'யவனர்' என்னும் சொல் சங்க இலக்கியங்களில் வழக்குப் பெற்றுள்ளது.[1]

---

1. புறநானூறு, 56; பெரும்பாணாற்றுப்படை, வரி 316; முல்லைப்பாட்டு, வரி 61; நெடுநல்வாடை, வரி 101; சிலப்பதிகாரம், காதை 5, வரி 10; காதை 14, வரி 67; காதை 29, வரி 25; மணிமேகலை, காதை 19; வரி 108 முதலியன.

(4) தொல்காப்பியத்தில் கூறப்பட்டுப் பிற்காலத்தில் வழக்கொழிந்த சொற்கள் சில; அவை 'சுட்டு முதலாகிய இகர இறுதியும்' என்று தொடங்கும் நூற்பாவில் (எழுத்து, 159) குறிக்கப்பட்ட 'அதோளி' (அவ்விடம்), 'இதோளி', 'உதோளி', 'எதோளி' என்னும் சொற்கள். அவை, இன்றுள்ள சங்க நூற் பாடல்களில் இடம் பெற்றில என்பது கவனிக்கத் தக்கது.

(5) 'நான்கு' என்னும் எண்ணுப் பெயர் பிற சொற்களோடு சேரும்போது எவ்வாறு புணரும், எவ்வெவ்வாறு திரியும் என்பன பல நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன. (நூற்பா 442, 453, 462, 467, 475). ஆயின், அக நானூற்றில், நன்னால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்', (செ.104) என்னும் வரியில் 'நான்கு—'நால்கு' என்று திரிந்துள்ளமைக்குத் தொல்காப்பியத்துள் விதி கூறப்பட வில்லை என்பது கவனிக்கத் தகும்.

(6) தொல்காப்பியர் ஒன்று முதல் பத்து, நூறு, ஆயிரம், நூறாயிரம் வரையில் உள்ள எண்களுக்குப் புணர்ச்சி விதி கூறியுள்ளார் (எழுத்து, 438—471), நூறு நூறாயிர மாகிய **கோடி** என்னும் எண்ணினைப் பற்றி அவர் யாண்டும் கூறவில்லை. இதனால் அவர் காலத்தில் 'கோடி' என்னும் எண் வழக்கில் இல்லை என்பது தெரிகிறதன்றோ? ஆயின், 'கோடி' என்னும் எண் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

> **''ஒன்றுபத் தடுக்கிய கோடி கடையிரீஇ**
> **பெருமைத் தாகநின் ஆயுள் தானே.''** **(செ. 18)**

திருக்குறளில்,

> **''கோடி** தொகுத்தார்க்கும் **துய்த்தல் அரிது.''**
> **(குறள் 377)**

என வந்துள்ளமை காண்க.

(7) 'கள்' என்னும் பன்மை விகுதி அஃறிணையில் வரும் என்பது தொல்காப்பிய விதி.

**''கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி உடைய பலவறி சொற்கே'' (சொல். 169)**

இவ்விதிக்கு மாறாகத் திருக்குறளில் 'மற்றையவர்கள், பூரியர்கள்' என உயர்திணைப் பன்மையில் 'கள்' வந்துள்ளது (குறள் 263, 919). கலித்தொகையில் 'ஐவர்கள்' எனக் 'கள்' (செ. 26) விகுதி உயர்திணையில் வந்துள்ளது.

(8) 'அன்' விகுதி ஆண்பால் படர்க்கைக்கே உரியது என்பது தொல்காப்பிய விதி.

**''அன்ஆன் அள்ஆள் என்னும் நான்கும்
ஒருவர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.''
(சொல். 205)**

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில், ''உரைத்தனன் யானாக'', ''அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே'' (செ. 136, 201) என 'அன்' விகுதி தன்மை ஒருமையில் இடம் பெற்றுள்ளது; அகநானூற்றில் ''நினக்கியான் கிளைஞன் அல்லனோ'', ''யான் வாழலனே'', ''மிகுதி கண்டன்றோ இலனே'', ''நனி அறிந்தன்றோ இலனே'' (செ. 342, 362, 379, 384) என வழங்கப்பெற்றுள்ளது. நற்றிணையில் ''கூறுவன் வாழி தோழி'', ''உள்ளினன் அல்லனோ யானே'', (செ. 233, 326) என வந்துள்ளது; குறுந்தொகையில், ''அளியள் யானே'', ''நீயலன் யான் என'', ''யானிழந் தனனே'', ''யான் கண்டனனோ விலனோ'' (செ. 30, 36, 43, 311) என வழங்கப் பெற்றுள்ளது.

(9) பலர்பால் படர்க்கையில் வழங்கும் 'மார்' ஈற்று முற்றுச் சொல் பெயர் கொள்ளாது வினை கொண்டு முடியும் என்பது தொல்காப்பிய விதி.

''மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியொடு முடியும் என்ப.''

(சொல், 207)

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில், ''உடம்பொடும் சென்மார் உயர்ந்தோர் நாட்டே'' (செ. 362) என 'மார்' ஈறு பெயர் கொண்டு முடிந்துள்ளமை காணத்தகும். இதுவன்றிப் ''பாடன்மார் எமர்'' (செ. 375) எனப் புறநானூற்றிலும், ''காணன்மார் எமர்'' (செ. 64) என நற்றிணையிலும் எதிர்மறையாய் நின்று பெயர் கொண்டு முடிந்துள்ளமையும் காண்க.

(10) வியங்கோள் வினை, முன்னிலை தன்மை ஆகிய இரண்டு இடங்களிலும் வாராது என்பது தொல்காப்பிய விதி.

''முன்னிலை தன்மை யாயீ ரிடத்தொடு
மன்னா தாகும் வியங்கோட் கிளவி.''

(சொல் : 226)

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில். ''நடுக்கின்றி நிலீஇயரோ'' (செ. 2) என முன்னிலையில் வியங்கோள் வினை இடம் பெற்றுள்ளது.

(11) 'மோ' என்னும் அசை முன்னிலைக்கு உரியது என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

''மியாயிக மோமதி யிகுஞ்சின் என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்''

(சொல். 274)

இவ்விதிக்கு மாறாகப் புறநானூற்றில், ''சென்மோ பெருமளம் விழவுடை நாட்டெின'' (செ. 381) என 'மோ' என்னும் அசை தன்மைக்கண் ஆட்சி பெற்றுள்ளது.

(12) கைக்கிளை முதல் பெருந்திணை இறுதியாகக் கூறப்பட்ட அகப்பொருள் செய்திகள் கலிப்பாவிலும்

பரிபாடலிலும் பாடுதற்குச் சிறப்பு உரிமை உடையன என்பது தொல்காப்பியர் கருத்து.

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட் டாயிரு பாவினும்
உரிய தாகும் என்மனார் புலவர்.''

(பொருள் அதிகாரம், 56)

இவ்விதிக்கு மாறாகச் சங்கத் தொகை நூல்களில் அகப் பொருள் செய்திகள் பெரும்பாலும் அகவற்பாவிலேயே அமைந்துள்ளன என்பது கவனிக்கத்தகும். தொல்காப்பியர் சங்கத் தொகை நூல்களுக்குப் பிற்பட்டவராயின், இங்ஙனம் நூற்பா செய்திருப்பாரோ என்பது எண்ணத் தகுவதாகும்.

(13) தொல்காப்பியத்தில் சேயோன், மாயோன், வருணன், வேந்தன் என்னும் நானிலத் தெய்வங்களையும் கொற்றவையையும் எல்லா நிலத்திற்கும் உரியதாகிய கடவுளையும் குறித்துள்ளார் (பொருள் 5, 85). ஆயின், தொகை நூல்களில் முருகன், சிவன், கண்ணன், பலதேவன் ஆகிய நால்வரும் சிறப்புடைக் கடவுளராகப் போற்றப் பெற்றனர் (புறநானூறு 56, 58 முதலியன). ஞாயி றும் திங்களும் மழையும் தெய்வங்களாகச் சிலப்பதிகாரத்தில் போற்றப்பட்டன. காமன் வழிபாடும் இருந்தது (சிலம்பு, காதை 9, வரி 60).

(14) பரிபாடல் அகப்பொருள் பற்றி வரும் என்றே தொல்காப்பியர் கூறியுள்ளார்.

''கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்தொடு
செப்பிய நான்கும் தனக்குறுப் பாகக்
காமங் கண்ணிய நிலைமைத் தாகும்.''

(செய், 121)

இவ்விதிக்கு மாறாக இன்றுள்ள பரிபாடல்கள் பல கடவுள் வாழ்த்துப்பற்றி அமைந்துள்ளமை நோக்கத் தகும்.

''இதனால், கடவுள் வாழ்த்துக் கூறிய கடைச்சங்க காலப் பரிபாடற் செய்யுட்டொகை நூலுக்கு இவர் (தொல்காப்பியர்) இலக்கணம் முந்தியதாதல் ஒருதலை.........உரைகாரர்கள் கடவுள் வாழ்த்தைக் கடைச் சங்கப் பரிபாடலுட் கண்டு அதற்கிலக்கணம் தொல்காப்பியத்துள் அமைத்தற்குப் பல் வகையானும் முயன்று இடர்ப்படுதல் இதனால் உணரலாகும்......தொல்காப்பியனார் இப்பரிபாடற்குப் பிற்பட்டவராயின், தம் இலக்கணத்து இங்ஙனம் காமங் கண்ணாத கடவுள் வாழ்த்து வருவதற்கும் இலக்கணம் கூறியே செல்வர் என்க.''[2]

(15) அதோளி, இதோளி, உதோளி என்னும் சுட்டு முதலாகிய இகர இறுதிச் சொற்கள் கடைச்சங்க காலத்திலேயே வழக்கு வீழ்ந்தன என்பதைப் பேராசிரியர் கீழ் வருமாறு கூறியுள்ளார் :

''ஒரு காலத்து வழங்கப்பட்ட சொல் ஒரு காலத்து வாராதாகப் பொருள் வேறுபடுதலுமுடைய; அதோளி, இதோளி, உதோளி எனவும் குயினெனவும் நின்ற இவை ஒரு காலத்துளவாகி இக்காலத்திலவாயின; இவை முற்காலத்துள வென்பதே கொண்டு வீழ்ந்த காலத்துஞ் செய்யுள் செய்யப்படா. அவை ஆசிரியர் நூல் செய்த காலத் துளவாயினும் கடைச் சங்கத்தார் காலத்து வீழ்ந்தமையிற் பாட்டினுந் தொகையினும் அவற்றை நாட்டிக்கொண்டு செய்யுள் செய்திலர் அவற்றுக்கு இது மரபிலக்கண மாகலினென்பது'' (செய், 80)

இங்ஙனம் தொல்காப்பியத்திற்கும் தொகை நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் இவற்றிற்கும் உள்ள வேறுபாடுகள் மேலும் பலவாகும். அவற்றை அண்ணாமலைப் பல்கலைக் கழத்தார் வெளியிட்டுள்ள

---

2. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 306—307

"தமிழ் வரலாறு', 'தொல்காப்பியம்' என்னும் நூல்களிற் கண்டு தெளியலாம்.[3]

**மகாவித்துவான் ரா. இராகவையங்கார்** அவர்கள் இவ் வேறுபாடுகளைக் குறிப்பிட்டு,

"இவர் செய்யுள் பற்றியும் வழக்குப் பற்றியும்கூறியுள்ள இலக்கணங்களிற் பலவற்றிற்கு இலக்கியம் காட்டுதல் இப்பொழுது வழங்கும் நூல்களைக்கொண்டு இயலாமையாலும், இவர் கூறிய இலக்கணங்களின் வேறாய்ச் சில சொற்களும் கொள்கைகளும் இந்நூற்களிற் காண்டலானும் இவர் இந்நூற் கெல்லாம் முந்தியவர் என்று துணிதல் ஒரு தலையாவது" (பக். 268)

என்று கூறியிருத்தல் தொல்காப்பியத்தின் பழைமையை நன்கு வலியுறுத்துவதாகும்.

**பன்மொழிப் புலவர் வே. வேங்கடராகலு ரெட்டியார்** அவர்கள் தமது 'பரணர்' என்ற ஆராய்ச்சி நூலில், "இலக்கண ஆசிரியர்கள், தம் காலத்தனவும் முந்தியனவுமான செய்யுட்களைக்கொண்டு இலக்கணம் செய்தல் மரபு. பரணர், கபிலர், நக்கீரர் இவர்கட்குப் பிற்பட்டவர் தொல்காப்பியராயின் அவர்தம் பாடல்களுக்கு முரணாக விதிகள் செய்திரார் அல்லவா? தொல்காப்பிய சூத்திர விதிகட்கும் அப்புலவர்களின் செய்யுட்களில் காணப்படும் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் சிறந்த இலக்கண மாறுபாடுகள் இருத்தல் ஒன்றே, தொல்காப்பியர்; கடைச்சங்கப் புலவராய

3. மகா வித்துவான் ரா. இராகவையங்கார் எழுதியுள்ள தமிழ் வரலாற்றில் தொல்காப்பியர் கடைச்சங்கப் புலவர்கட்கு முற்பட்டவர் என்பதைப் பல சான்றுகள் காட்டி (பக். 268—273, 308—309) நிறுவியுள்ளார்; வித்துவான் க. வெள்ளை வாரணனார் தொல்காப்பியம், பக். 90—94, 213. டி. ஆர். சேஷ ஐயங்கார் தமது "திராவிட இந்தியா" என்னும் பெயர் கொண்ட ஆங்கில நூலில் இதே முடிவைக் (பக். 175—178) குறித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

பரணர் முதலியோர்க்கும் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவ ராவர் என்பது திண்ணம்'' (பக். 172—173) என்று வரைந் திருத்தல் கவனத்திற்குரியது.

தொல்காப்பியர் இன்றுள்ள சங்க நூல்கட்குக் காலத் தால் முற்பட்டவர் என்பதைப் பேராசிரியர் மு. இராக வையங்கார் அவர்கள் பல சான்றுகள் காட்டி விளக்கியுள் ளார். அவற்றைப் படித்து உண்மையுணர்தல் நல்லது (ஆராய்ச்சித் தொகுதி, பக். 101—120).

இதுகாறும் காட்டப்பெற்ற அகச்சான்றுகள் அனைத்தும் தொல்காப்பியர், புறநானூறு போன்ற சங்க நூல்களுக்குக் காலத்தால் முற்பட்டவர் என்னும் உண்மையை ஐயமற விளக்கி நிற்கின்றன என்பதை நன்குணரலாம். இம்முடி வினையே வேறு சில புறச்சான்றுகளும் ஆதரித்து நிற்றலைக் கீழே காண்க.

**புறச் சான்றுகள்**

(1) பனம்பாரனார் எழுதிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் தமிழக எல்லைகள் கூறப்பட்டுள்ளன.

''வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து''

இவ்வரிகளுக்கு உரை எழுதிய உரையாசிரியர்கள், குமரி என்பதைக் குமரியாறு எனவே கொண்டனர்.

(1) ''கடல் கொள்வதன் முன்பு பிற நாடும் உண்மை யின், தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின் கூறப்படாவாயின'' என்பது இளம் பூரணர் தரும் விளக்கமாகும். ''அதுதானும் (தொல்காப்பிய மும்) பனம்பாரனார் 'வடவேங்கடம் தென்குமரி' எனக் குமரி யாற்றினை எல்லையாகக் கூறிப் பாயிரம் செய்தமை கடலகத் துப் பட்டுக் குமரியாறும் பனை நாட்டோடு கெடுவதற்கு முன்னையது'' (தொல்காப்பியம், மரபியல், நூற்பா 94 உரை) என்று பேராசிரியர் குறித்துள்ளார்.

**''வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்**
**வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென் (று)**
**இந்நான் கெல்லை அகவையிற் கிடந்த**
**நூலதின் உண்மை வாலிதின் விரிப்பின்''**

என்று (பெருங்) **காக்கை பாடினியார்** தெற்கே குமரியாற்றை எல்லை கூறினர். எனவே, அவர் தொல்காப்பியரோடு ஒருசாலை மாணவர் என்று பேராசிரியர் கருதுவர்.

பின் வந்த (சிறு) **காக்கை பாடினியார்** வடதிசை ஒழிந்த மற்ற மூன்றிற்கும் கடலையே எல்லையாகக் குறித்தமை,

**''வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்**
**தென்றிசை யுள்ளிட் டெஞ்சிப மூன்றும்**
**வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த**
**நாட்டியல் வழக்கம்''**

என்னும் அடிகளால் உணரலாம். இங்ஙனம் கூறியதால் அவர் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டவர் என்று பேராசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் (தொல்காப்பியம், செய். நூற்பா 1, பேராசிரியர் உரை). **நச்சினார்க்கினியர்** இவரைப் '**'பின்தோன்றிய** காக்கை பாடினியார்'' என்பர். சிறு காக்கை பாடினியார் கூறிய எல்லைகளையே கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற சிலப்பதிகாரமும்,

**''நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்**
**தமிழ்வரம் பறுத்த தண்புனல் நாடு''**

(காதை 8, வரி 1—2)

என்று கூறுகிறது.

தொல்காப்பியருக்குப் பின்பு குமரியாற்றுக்குத் தென் பாற்பட்ட நிலப்பரப்புக்கும்[4] இன்றுள்ள குமரி முனைக்கும்

---

4. இங்ஙனம் ஒரு நாட்டின் எல்லைகளுள் ஒன்றோ பலவோ யாறுகளாக அமைதல் இயல்பு என்பதனை, 'வட வெள்ளாற்றுக்கும் தென் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்டது சோழநாடு' என்னும் கூற்றால் உணர்க.

இடைப்பட்ட நிலப்பகுதி அழிந்துபட்டதால், தென்திசையும் கடல் எல்லையெனச் சிறுகாக்கை பாடினியாராலும் இளங்கோவடிகளாலும் கூறப்பட்டதெனக் கொள்வதே பொருத்தமாகும். ஆகவே, தொல்காப்பியர், சிறுகாக்கை பாடினியார் இளங்கோவடிகள் ஆகியோருக்குக் காலத்தால் முற்பட்டவர் என்பது காண்க.

(2) தொல்காப்பியர் ''எழுத்தும் சொல்லும் பொருளும் நாடித்'' தொல்காப்பியம் செய்தார் என்று பனம்பாரனார் தமது பாயிரத்தில் கூறியுள்ளார். அவர் கூறியதற்கு ஏற்பவே தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுதிகளாகவே வகுத்துரைக்கப்பட்டுள்ளது. சிறு காக்கை பாடினியார் வாழ்ந்த பிற்காலத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றின் வேறாக யாப்பு என்னும் இலக்கணம் நான்காவதாக வகுக்கப் பெற்று வழங்கியது என்பது,

> **''நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண்**
> **யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே''**

என்று கூறியுள்ளதிலிருந்து தெளிவாகும். இதற்கு ஏற்றாற் போலவே, பிற்காலத்தவராகிய களவியலுரை ஆசிரியரும், ''தமிழ்தான் நான்கு வகைப்படும்: எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்புமென'' என்று தமிழ் இலக்கணத்தை நான்கு வகையாகப் பகுத்தமை காண்க.

குமரியாறு[5] தமிழகத்தின் தென் எல்லையாக இருந்த பொழுது தொல்காப்பியம் இயற்றப்பட்டது என்பதும், குமரியாற்றுக்கும் இன்றுள்ள குமரி முனைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி அழிந்து கடலே தென் எல்லையாக அமைந்த

5. ''தொல்காப்பியர் காலத்தே குமரியாற்றின் தெற்கே இருந்த தமிழ் வழங்கிய நிலத்தை அடுத்துத் தமிழ் திரிநிலமாகிய குறும்பனை நாடு அமைந்திருந்தமையால் தமிழ்நாட்டின் தென் எல்லையாகக் குமரியாற்றினைக் கூற வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தது.''...வெள்ளை வாரணனார், தொல்காப்பியம், பக். 32.

பின்பு சிறுகாக்கை பாடினியார் வாழ்ந்தனர் என்பதும் இது காறும் கூறியவற்றால் நன்கறியலாம்.

### (2) தொல்காப்பியத்தின் காலம்

வடமொழியில் வல்ல வடநாட்டார் தமிழகத்தில் நுழைந்து, இங்கேயே தங்கி வாழலாயினர். அதனால் அவர் தம் சொற்கள் தமிழ் மொழியில் இடம்பெறலாயின. இக் காரணத்தால்தான்,

**''வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''**
(சொல் : 401)

எனவும்,

**''சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்''**
(சொல் : 402)

எனவும் தொல்காப்பியர், வடசொற்கள் தமிழிற் கலத்தற்கு இலக்கணம் கூறினார்; மேலும் சூத்திரம், படலம், பிண்டம், அம்போதரங்கம், காண்டிகை முதலியவற்றுக்கு இலக்கணம் கூறியுள்ளார். அவருக்கு முற்பட்ட காலத்தில் பிறமொழிச் சொற்கள் தமிழில் எடுத்தாளப்படுவதற்கு இலக்கண ஆசிரியர் விதி கூறி இருப்பரேல், தொல்காப்பியர் அவ்விதியைச் சுட்டிக்காட்டி, 'என்ப' என்றோ, 'என்மனார் புலவர்' என்றோ கூறியிருப்பர், அங்ஙனம் அவர் கூறாமையால், அவரே இப்புது விதிகளை வகுத்தவர் என்று சொல்லலாம் (இது முன்பே கூறப்பெற்றது). அவர் காலத்தில் தள்ள முடியாத அளவிற்கு வடசொற்கள் தமிழில் இடம் பெற்று விட்டமையால் அவர் அவற்றிற்கு விதிகூறும் நிலைமை ஏற்பட்டது என்று கூறலாம்.

ஆரியர் (வடமொழியாளர்) தமிழகத்திற்கு வந்த காலம் கி. மு. 7ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனப் பேராசிரியர் வி. அரங்காச்சாரியார் குறித்துள்ளனர்.[6] தமிழகத்தில்

---

6. Educational Review, October, 1928.

கி. பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் இசுலாம் பரவத் தொடங்கியது, கி. பி. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபர அடிகள் தம் செய்யுட்களில் 'சலாம்', 'சொக்காய்' என்னும் இந்துஸ்தானிச் சொற்களைப் பயன் படுத்தினார். இதனை நோக்க, வடமொழியாளர் தமிழகத் தில் தங்கித் தமிழரோடு ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகள் பழகிய பின்புதான் அவர்தம் சொற்கள் தமிழில் இடம் பெற் றிருத்தல் வேண்டும் என்று கருதுதல் தவறாகாது. இதனை நோக்கத் தொல்காப்பியர் ஏறத்தாழக் கி. மு 4ஆம் நூற் றாண்டினர் எனக் கொள்ளலாம்.

சந்திரகுப்தன் (கி. மு. 322—298) காலத்துச் சமண சமய குரவரான பத்திரபாகு முனிவரின் மாணவரான விசாக முனிவர் தமிழ்நாட்டில் சமண சமயப் பிரசாரம் செய்தார் என்பது சமண நூல் செய்தி. மதுரை மாவட்டத்திற் காணப் படும் பிராமிக் கல்வெட்டுகள் சமணரால் வெட்டப்பெற்றவை-அவற்றின் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு என்பது கல்வெட்டறிஞர் கருத்து. எனவே, சமணம் கி. மு. 3ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் நுழைந்து பரவத் தொடங்கியதென்னலாம்.[7] சமணம் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை.[8]

அசோகன் தனது இரண்டாம் பாறைக் கல்வெட்டில் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் மனிதர்க்கும் விலங்குகட் கும் மருத்துவ வசதி அளிக்க வசதி செய்ததாகக் கூறியுள் ளான்; 13ஆம் பாறைக் கல்வெட்டில் தமிழகத்தில் பௌத்த தருமம் பரவ ஏற்பாடு செய்தமையைக் குறிப்பிட்டுள்ளான். இவற்றால் அசோகன் காலத்திற்றான் (கி. மு. 273—232)

---

7. மயிலை சீனி வேங்கடசாமி, சமணமும் தமிழும், பக். 34—36.

8. M. Srinivasa Ayyangar, Tamil Studies, p. 8; T. R. Sesha Ayyangar, Ancient Dravidians, p. 109.

முதன் முதலாகத் தமிழகத்தில் பௌத்த சமயம் நுழைந்து பரவத் தொடங்கியது என்னும் உண்மை வெளியாகிறது.

தமிழகத்தில் கழுகுமலை முதலிய இடங்களிற் காணப் படும் பௌத்தருடைய பிராமிக் கல்வெட்டுகள் கி. மு. 3 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவை என்பது ஆராய்ச்சி அறிஞர் முடிபாகும். பௌத்தம் பற்றிய குறிப்புத் தொல்காப்பியத்தில் சிறிதும் இல்லை.[9] எனவே தொல் காப்பியம் தமிழகத்தில் பௌத்தம் நுழைவதற்கு முன்பு செய்யப்பட்ட தென்னலாம்.

பனம்பாரனார் பாயிரம்,

''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்''

என்று கூறுகின்றது. ஐந்திரம் என்பது வடமொழியில் சிறந்து விளங்கும் பாணினீயம் என்னும் இலக்கணத்திற்கு முற்பட்டது என்பது வடநூற்புலவர் கருத்து. தொல்காப்பியர் அப்பழைய வடமொழி இலக்கணத்தை நன்கு படித்தவர் என்று பனம்பாரனார் தம் பாயிரத்தில் பாராட்டியுள்ளார். பாணினீயம் வந்த பிறகு ஐந்திரம் மறைந்து விட்டது தொல் காப்பியர் பாணினிக்குப் பின்பு வந்தவராயின், அந்நூலையே கற்றுச் சிறப்படைந்திருப்பார்; 'பாணினீயம் நிறைந்த தொல்காப்பியன்' என்றும் பெயர் பெற்றிருப்பார். அவர் அங்ஙனம் குறிக்கப் பெறாமையால், பாணினி காலத்திற்கு

9. ''The famous Tamil grammatical work, the Tolkappiyam, may be assigned to the period (B.C. 325—B. C. 188) under survey; it is said to exhibit the influence of Aindra Vyakarana, a pre-Panini system of Sanskrit grammar, but it is free from Buddhist influence.''

—R. Sathyanatha Ayyar, History of India, Vol I, pp. 170—171.

முற்பட்டவர் என்னலாம்;[10] அல்லது பாணினீயம் வடநாட்டில் தோன்றிய பொழுது அதனை அறியாது அதே காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்தவராகலாம். எனவே, தொல்காப்பியர் பாணினிக்கு முன்பு அல்லது அவரது காலத்தில் (அவரது நூல் தமிழகத்தில் பரவாத காலத்தில்) வாழ்ந்தவர் என்று கூறலாம். பாணினியின் காலம் கி. மு. 4-ஆம் நூற்றாண்டு என்று மேனாட்டு அறிஞர் கூறியுள்ளனர்.[11]

தொல்காப்பியம் செய்யப்பட்ட பின்பே பாண்டியர் தலை நகரான கபாடபுரம் கடலாற் கொள்ளப்பட்டது என்று இறையனார் களவியலுரை கூறுகின்றது, பாண்டியரது கபாடபுரம் பற்றிய குறிப்பு வால்மீகி இராமாயணத்திலும், வியாச பாரதத்திலும் வருகின்றது. வியாச பாரதம் பல இடைச்செருகல் பெற்று இன்றுள்ள நிலையை அடைந்த காலம் கி. மு. 3 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்படாது என்று வின்டர்நிட்ஸ் கூறியுள்ளார். எனவே, பாரதத்திற் குறிக்கப் பெற்ற கபாடபுரம் கி.மு. 3, 4-ஆம் நூற்றாண்டுகளில் நல்ல நிலையில் இருந்திருத்தல் கூடியதே எனக் கொள்ளலாம்.

இதற்கு அரண் செய்வது போலக் கி. மு. 4ஆம் நூற்றாண்டினனான சந்திரகுப்தன் (கி. மு 325-301) அமைச்சனான சாணக்கியன் தனது பொருள் நூலில் முத்துகளின் பெயர்களைக் கூறும் இடத்தில் 'பாண்டிய கவாடம்' என்று

---

10. தொல்காப்பிய சூத்திரங்கள் சில பாணினீய சூத்திரங்களை ஒத்துள்ளன என்றும், சில பரத முனிவருடைய நாட்டிய சாத்திரசூத்திரங்களை ஒத்துள்ளன என்றும் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் தமது இலக்கிய வரலாற்றில் (பக். 68) கூறியுள்ளனர். வித்துவான் க. வெள்ளை வாரணனார் தாம் இயற்றிய ''தொல்காப்பியம்'' என்னும் அரிய ஆராய்ச்சி நூலில் (பக். 106—127) பிள்ளையவர்கள் கூற்றுகளுக்கு மறுப்பு வழங்கியுள்ளார். இரண்டையும் படித்துணர்வது நல்லது.

11. History of Ceylon, Vol. I, Part I, p. 208.

ஒரு முத்தின் வகையைக் குறிப்பிட்டுள்ளான். அது பாண்டியரது கபாடபுரத்துக் கடல் முத்தே என்பது தெளிவு. கபாடபுரம் அழிந்த பிறகு அந்நகரின் பெயரைக் கூட்டி அக் கடற்பகுதியில் கிடைக்கும் முத்திற்குப் பெயர் வழங்கினர் என்று கூறுதல் ஏற்புடையதாகாது. கபாடபுர அழிவிற்குப் பின்பு கொற்கை முத்தே தொகை நூல்களில் பேசப்படுகின்றது காண்க.[12] எனவே, கி. மு. 4ஆம் நூற்றாண்டில் கபாடபுரம் இருந்தது என்று கொள்வதே பொருத்தமாகும்.

'இலங்கையில் தோன்றிய மூன்று கடல் கோள்களுள் முதற் கடல்கோள் கி. மு. 2387இல் இலங்கையை இந்தியாவினின்றும் பிரித்தது; இரண்டாம் கடல்கோள் கி. மு. 504இல் நிகழ்ந்தது; ஆயின் குறிப்பிடத்தக்க பேரிழப்பு இல்லை. மூன்றாம் கடல்கோள், அசோகன் காலத்தில் வாழ்ந்த தேவனாம்பிரிய திஸ்ஸன் காலத்தில் கி.மு. 306இல் உண்டானது. அதனால் ஒரு லட்சம் ஊர்களும், மீன் பிடிப்பவர் வாழ்ந்த சிற்றூர்கள் 910ம் (தொள்ளாயிரத்துப் பத்தும்), முத்தெடுப்பவர் வாழ்ந்த நானூறு சிற்றூர்களும் அழிந்தன''[13] என்று இலங்கை வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

முதற் கடல்கோள் இலங்கையைத் தமிழகத்திலிருந்து வேறு பிரித்தது என்பதால், அடுத்து நிகழ்ந்த கடல்கோள்களும் இலங்கையைப் போலவே தமிழகத்தையும் பாதித்திருத்தல் இயற்கையேயாகும். அதனாற்றான் தென் மதுரை அழிய ஒரு கடல்கோளும், கபாடபுரம் அழிய மற்றொரு கடல்கோளும் காரணமாயிருந்தன என்று இறையனார் களவியலுரை இயம்புகின்றதுபோலும்!

---

12. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 37—38.

13. Sir James Emerson Tennent, Ceylon, Vol. I p. 7 foot-note.

**''பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள''**

என்னும் சிலப்பதிகார அடிகள்[14] ஒரு கடல் கோளைக் குறிக்கின்றன. இது பேரழிவைக் குறிப்பது. தமிழகத்திலிருந்து இலங்கையைப் பிரித்த பெருங்கடல்கோளே சிலம்பு கூறும் இப்பேரழிவை உண்டாக்கியிருக்கலாம். அதனால் பாண்டிய நாட்டின் தென் எல்லை குமரியாறாயிற்று என்று கொள்ளலாம்.

கபாடபுரம் அழியக் காரணமாயிருந்த கடல்கோள் இலங்கையில் நிகழ்ந்த இரண்டாம் அல்லது மூன்றாம் கடல் கோளாயிருத்தல் வேண்டும். இரண்டாம் கடல்கோள் குறிப்பிடத்தக்க இழப்பை உண்டாக்கவில்லை என்று இலங்கை வரலாறு இயம்புகின்றது.

எனவே, இலங்கையில் தோன்றிய மூன்றாம் கடல் கோளே கபாடபுரத்தை அழித்தது என்று கொள்வது, மேலே காட்டப்பெற்ற பல காரணங்களை நோக்கப்பொருத்தமாகும். ஆகவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், தொல்காப்பியர் கி. மு. 4ஆம் நூற்றாண்டினர் என்று கருதுதல் தகும்.[15] **அவர் காலம் ஏறத்தாழக் கி. மு. 300 என்று கொள்ளலாம்.**

---

14. காதை 11, வரி 19—20; காதை 8, வரி 1-அடியார்க்கு நல்லார் விளக்கவுரை.

15. வடமொழியில் வேதங்களையும் பிராமணங்களையும் எழுதிய ஆரியர் ஏறத்தாழக் கி.மு. 2300 அல்லது கி.மு. 2200இல் இந்தியாவிற் புகுந்தனர் என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. (N.K. Dutt, Aryanisation of India, pp. 39—58). ஆரியர் ஏறத்தாழக் கி. மு. 7ஆம் நூற்றாண்டில் தமிழகம் வந்திருக்கலாம் என்று பேராசிரியர் வி. அரங்காச்சாரியார் கூறியுள்ளார் (இது முன்பே கூறப்பட்டது). எனவே, கி. மு. 7ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழில் வடசொற்கள் கலக்கத் தொடங்கியிருத்தல் வேண்டும் என்று நினைப்பது பொருத்தமாகும். இங்ஙனம் காலப்போக்கில் நீக்க முடியாத அளவு வடசொற்கள் தமிழிற் கலந்தமையாற்றான் தொல்காப்பியர் வடசொல் தமிழிற் கலத்தலைப் பற்றி இரண்டு சூத்திரங்கள் கூறினார்; பிராமணர் தொழில்களையும் கூறினார். எனவே, தொல்காப்பியர், வடமொழியாளர் தமிழகம் வந்து தங்கிச் சில நூற்றாண்டுகளேனும் கழிந்த பின்னரே தோன்றியவராதல் வேண்டும் என்பது தெளிவாதல் காண்க.

பெயர் முதலியன

மதுரைப் பேராலவாயர், மதுரைக் குமரன் எனவரும் பெயர்களில் மதுரை என்பது ஊர்ப்பெயர்; பேராலவாயர், குமரன் என்பன இயற்பெயர்கள். இவ்வாறே வெள்ளூர்க் காப்பியன், காப்பியாற்றுக் காப்பியன் எனவரும் பெயர் களில் 'காப்பியன்' என்பது இயற்பெயர். நக்கீரன், நப்பாலத்தன் என்றாற்போல வரும் பெயர்களில் 'ந' என் னும் சிறப்பு அடுத்து நிற்றல் போலப் பல்காயனார் தொல் காப்பியர் என்பவற்றிலும், பிற பெயர்களிலிருந்து பிரித்துக் காட்டப் 'பல்', 'தொல்' என்னும் அடைமொழிகள் சேர்க்கப் பெற்றன என்று கொள்வதே பொருத்தமுடையது. தமது பெயரையே தாம் செய்த நூலுக்குத் தோற்றுவித்தார் என்னும் கருத்திற்றான் பனம்பாரனார்,

''தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றி''

எனக் கூறினார். எனவே, தொல்காப்பியன் என்பது ஒரு சொல் தன்மையில் வழங்கப்பெற்ற இயற்பெயர் என்று கோடலே தக்கது.

தொல்காப்பியர் தமிழகத்து நல்லாசிரியருடைய வழக் கையும் செய்யுளையும் அடியாகக்கொண்டு, செந்தமிழ் நாட்டுக்கு இயைந்த முன்னை இலக்கணங்களை முற்றக் கண்டு, எழுத்து—சொல்—பொருள் இலக்கணங்களை முறைப்பட ஆராய்ந்து தமது நூலைத் தொகுத்துச் செய்தார் என்பது பனம்பாரனார் பாயிரத்தால் தெரிகிறது.

தொல்காப்பியர் நிலந்தரு திருவிற் பாண்டியன் தலை நகரான கபாடபுரத்தில், அதங்கோட்டாசான் தலைமையிற் பனம்பாரனார் போன்ற புலவர் பெருமக்கள் கூடிய பேரவையில் தொல்காப்பியத்தை அரங்கேற்றினார் என்பது சிறப்புப் பாயிரத்தால் புலனாகிறது.

தொல்காப்பியர் கடவுள் நம்பிக்கை உடையவர்; எல்லாத் தெய்வங்களையும் ஒப்ப மதிப்பவர். அவர் இன்ன சமயத்தவர் என்று அறுதியிட்டுக் கூற இயலாது.[16]

## (3) தொல்காப்பியத்தின் சிறப்பியல்புகள்

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது; 1602 நூற்பாக்களை உடையது (எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களையும், சொல்லதிகாரம் 463 நூற்பாக்களையும், பொருளதிகாரம் 656 நூற்பாக்களையும் உடையது)[1].

### எழுத்ததிகாரம்

எழுத்ததிகாரத்தில் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல், புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் ஒன்பது இயல்கள் உள்ளன.

மக்கள் ஒருவருக்கொருவர் கருத்தைத் தெரிவிப்பதற்கு உரியது சொற்றொடர். ஒரு சொற்றொடர் பல சொற்களைக் கொண்டிருப்பது. ஒவ்வொரு சொல்லும் எழுத்துகளால் ஆகியது. எழுத்தின்றேல் சொல் இல்லை; சொல் இன்றேல் சொற்றொடர் இல்லை. எனவே, மொழிக்கு உயிர்நாடியாக இருப்பது எழுத்தென்பது வெள்ளிடைமலை: ஆதலால் தொல்காப்பியர் எழுத்துகளின் தன்மை முதலியவற்றை

---

16. தொல்காப்பியர் சமணர் என்று கூறுவோர் வாதத்தையும் அதற்குரிய மறுப்பையும் வித்துவான் க. வெள்ளை வாரணனார் எழுதியுள்ள ''தொல்காப்பியம்'' என்னும் நூல் [பக். 159—172] நோக்கி உணர்க.

[1]இந்நூற்பாக்கள் 1595 என இளம்பூரணரும், 1611 என்று நச்சினார்க்கினியரும் வகுத்து உரை எழுதியுள்ளனர்.

483 நூற்பாக்களில் தெரிவிக்கின்றார்; தமிழ் எழுத்துகள் உயிர், மெய், உயிர் மெய், ஆய்தம் என்பன என்றும், எழுத்துகளின் ஒலி வடிவங்களும் வரி வடிவங்களும் இவை என்றும், மாத்திரை, முதலெழுத்து—சார்பெழுத்து வகைகள், சுட்டு வினா வகைகள் இவை என்றும், சொற்களின் எழுத்து நிலை, மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள், மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துகள், மொழிக்கு நடுவில் வரும் எழுத்துகள், அளபெடை இன்னவை என்றும், உயிர் எழுத்துகளும் மெய்யெழுத்துகளும் இன்னின்ன முறையில் பிறக்கும் என்றும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன. மேனாட்டார் இக்காலத்தில் கூறும் ஒலிமுறைகள் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழில் விளக்கப்பட்டுள்ளன என்பது அறிந்து இன்புறத்தக்க செய்தியாகும். தொல்காப்பியர், சொற்றொடர்களில் சொற்கள் ஒன்றோடு ஒன்று சேருவதால் உண்டாகும் ஒலி மாற்றங்கள் புணரியல் முதலிய ஆறு இயல்களில் விரித்துக் கூறியுள்ளமை படித்து வியத்தற்குரியது.

**சொல்லதிகாரம்**

எழுத்துகளாலாகிய சொற்களின் இலக்கணம் கூறுவதே சொல்லதிகாரம். இதனுள் கிளவியாக்கம், வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என ஒன்பது இயல்கள் உள்ளன.

தொல்காப்பியர் சொற்றொடர் மரபுகளைக் கிளவியாக்கத்தில் கூறியுள்ளார்; சொற்றொடர் அமைப்புக்குப் பெரிதும் தேவைப்படும் வேற்றுமையை அடுத்துக் கூறியுள்ளார். அவர் காலத்திற்கு முன்பு தமிழில் ஏழு வேற்றுமைகளே கொள்ளப்பட்டன; விளிவேற்றுமை தனியாகவே எண்ணப்பட்டுவந்தது. தொல்காப்பியர்தாம் விளியையும் சேர்த்து வேற்றுமை எட்டு என்று கூறியுள்ளார்.

''வேற்றுமை தாமே ஏழென மொழிப''
''விளிகொள் வதன்கண் விளியோடு எட்டே''

என்னும் நூற்பாக்கள் இவ்வுண்மையை உணர்த்துகின்றன.

தொல்காப்பியர் விளிவேற்றுமைக்குத் தனி இயல் வகுத்து அதன் இயல்புகளை முப்பத்தேழு நூற்பாக்களில் கூறியிருப்பதைக் கொண்டே, அஃது அக்காலத் தமிழில் பெற்றிருந்த முதன்மையை நாம் நன்குணரலாம். தொல் காப்பியர் வேற்றுமை இயல், வேற்றுமை மயங்கியல், விளி மரபு என்னும் மூன்று இயல்களாலும் வேற்றுமையை ஆராய் வதிலிருந்து, மொழி அமைப்பிற்கும் வழக்கிற்கும் வேற்றுமை எவ்வளவு இன்றியமையாதது என்பதனை நாம் தெளிவாக அறியலாம். தொல்காப்பியர் காலத்திலும் அவர்க்கு முன்னும் இவ்வேற்றுமை பற்றிய ஆராய்ச்சி எந்த அளவு உயர்ந் திருப்பின் அவர் வேற்றுமைபற்றி மூன்று இயல்கள் கூறத் துணிந்தார் என்பது புலனாகும்.

தொல்காப்பியர் பெயர்ச் சொற்களையும் வினைச்சொற் களையும் தனித்தனி இயலில் அடுத்துக் கூறியுள்ளார். அடுத்து இடைச் சொற்களும் இவை என இரண்டு இயல் களில் உணர்த்தப்படுகின்றன.

கிளவியாக்கம் முதல் உரி இயல் ஈறாக எட்டு இயல் களிலும் விளக்கப்படாமல் எஞ்சி நிற்பனவற்றை ஆசிரியர் எச்சவியல் என்னும் ஒன்பதாம் இயலில் கூறியுள்ளார். மொழி, பேச்சுமொழி, நூல்மொழி, வேற்றுமொழி, கிளை மொழி எனப் பலவகைப்படும். ஒரு மொழியே, காலப்போக் கில் பேச்சு மொழி என்றும் நூல்மொழி என்றும் கிளைமொழி என்றும் இனமொழி என்றும் மாறுபாடும் பிரிவும் பெற்று விடும். மொழியறிவு நிறைவுபெற இவைபற்றிய அறிவு தேவைப்படும். தொல்காப்பியர் இவற்றைப் பற்றியும் கூறி யுள்ளார்.

**''இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்என்(று)**
**அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே''**

என்பது தொல்காப்பியம்.

இவற்றுள் **இயற்சொல்** என்பது பேச்சு மொழிக்கு உரியது; **திரிசொல்** என்பது நூல்மொழிக்கு உரியது. இவை இரண்டும் ஒரு மொழிக்கே உரியவை. **திசைச்சொல்** என்பது ஒரு மொழியிலிருந்தே கிளைத்தது; தன்னைச் சுற்றிலும் வழங்குவது. மலையாளம் தமிழிலிருந்து கிளைத்தது. அது தமிழிலிருந்து வேறுபடும் நிலையை அடையும்போது அதன் சொல் தமிழில் ஆளப்படுமாயின் அது திசைச்சொல் எனப் பெயர் பெறும். வடசொல் என்பது வேற்றுமொழி. அது வடக்கிலிருந்து வந்து தமிழோடு தொடர்பு கொண்டதால் வட மொழி எனப்பெயர் பெற்றது. இந்நான்கு மொழிகளும் தமிழ் நூல்களில் பயின்று வருதலின் தமிழர் இதனை அறிய வேண்டும் என்று கருதியே தொல்காப்பியர் இவற்றைப் பற்றிக் கூறினார்.

வடசொல் தமிழில் வழங்கும்போது அதற்குரிய ஒசை யைத் தமிழாக்கித் தமிழ்ப்படுத்தி வழங்க வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

**''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**
**யெழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே''**

சீதா : வடசொல். சீதை—வட எழுத்து நீக்கித் தமிழ் ஓசையோடு அமைக்கப்பட்டது. பிறமொழிச் சொல்லுக்குத் தமிழோசை ஊட்டுவதனால் அச்சொல் வடிவில் சிதையினும் குற்றமில்லை என்பது தொல்காப்பியர் கருத்து.

''சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்'' என்பது விதி. இந்த விதியைப் பின்பற்றியே விபீஷணன் என்பது **வீடணன்** எனவும், லக்ஷ்மணன் என்பது இலக்குவன் எனவும், **கர்ணன்** என்பது கன்னன் எனவும் தமிழில் வழங்கப்படு

கின்றன. இந்நூற்பாவினால் ஆணை, வட்டம், நட்டம், கண்ணன் எனப் பாதகமாய்ச் சிதைந்து வருபவனவும் தமிழிற் கொள்ளப்பட்டன என்று உரையாசிரியர்களான சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறியுள்ளனர்.

இவ்விரண்டு நூற்பாக்களாலும் நாம் அறிவது யாது? தொல்காப்பியர் காலத்தில் **வடமொழிச் சொற்கள் சில தமிழிற் கலக்கும் நிலைமை ஏற்பட்டது. அதனால், அவற்றைத் தமிழோசை ஊட்டியே ஏற்றுக்கொள்ள வேண்டும்** என்று ஆசிரியர் கருதினார் என்பன இவ்விரு நூற்பாக்களாலும் புலப்படும். ஆசிரியர் வகுத்த இம்முறை, காலத்தால் பிற்பட்ட கம்பர் முதலிய புலவர்களாலும் பொன்னே போல் போற்றப்பட்டது. **இங்ஙனம் குறிப்பிட்ட வரையறையோடு குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்றியதால்தான் தமிழ் மொழி தனக்குள்ள ஆற்றலில் சிதையாமல் இன்றளவும் இயங்கிவருகிறது** என்னும் உண்மையைத் தமிழ்மக்கள் நன்கு உணர்தல் வேண்டும்.

### பொருளதிகாரம்

எழுத்தும் சொல்லும் பற்றியே உலகத்து உள்ள எல்லா மொழிகளிலும் இலக்கணம் உள்ளது. எழுத்தையும் சொல்லையும் பயன்படுத்தும் மனிதனுடைய வாழ்க்கையை— வாழ்க்கையின் இலக்கணத்தை உணர்த்தும் இலக்கண நூல் உலகத்து வேறெம்மொழியிலும் இல்லை. **மனிதனுடைய வாழ்க்கையை உணர்த்தும் பகுதியாக—இலக்கணமாகத் தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் விளங்குகின்றது**.[2]

மனித வாழ்க்கை மனிதனது இல்லத்தைப் பற்றியது, அவனோடு தொடர்பு கொண்ட வெளியுலகத்தைப் பற்றியது என இருவகைப்படும். இல்வாழ்க்கை பற்றிய செய்திகள் **அகப்பொருள்** என்றும், மற்ற அனைத்தும் **புறப்பொருள்** என்றும் சொல்லப்படும். மனிதன் அடையத்தக்க அறம்.

---

2. T.R. Sesha Ayyangar, Dravidian India, p. 179

பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளுள் இன்பம் அகத்தின்பாற் பட்டதாகும்; ஏனைய மூன்றும் புறத்தின்பாற் பட்டவையாகும். இவைபற்றி ஒவ்வொரு மொழியிலும் நூல்கள் தோன்றியுள்ளன. எனவே, மனிதனுடைய அநுப வங்களே இலக்கியமாகும். அந்த இலக்கிய நூல்கள் வாழ்க்கை இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றி யவையாகும். மனிதனுடைய அகவாழ்வு, புறவாழ்வு ஆகிய இரண்டும் இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்டவை. அந்த வாழ்வை விரித்து உரைப்பதே பொருளதிகாரத்தின் நோக்கமாகும்.

பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையி யல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் என ஒன்பது இயல்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் அகத்திணையியல், கள வியல், கற்பியல், பொருளியல் என்பன அகப்பொருள் பற்றி யவை. புறத்திணையியலும் மரபியலும் புறப்பொருளைப் பற்றியவை. பிற இயல்கள் அகம் புறம் ஆகிய இரண்டையும் பற்றியவை.

நிலத்தின் பிரிவுகள் ஐந்து, அவற்றிற்குரிய பெரும் பொழுதுகள், சிறுபொழுதுகள், அந்நிலத்திற்குரிய தெய் வர்கள்,[3] அந்நிலத்தில் வாழும் விலங்குகள், பறவைகள்,

---

[3]குறிஞ்சி நிலக் கடவுளான முருகன் அல்லது வேலன் வேலைப் போர்க் கருவியாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டவன். கி. மு. நாலாயிரத்துக்கு முற்பட்ட ஆதிச்ச நல்லூர் நாகரிகத்தைச் சேர்ந்தபொருள்களில் இரும்பு வேல் களும் பித்தளையாற் செய்யப்பட்ட சேவல்களும் கிடைத் துள்ளன. இவை, முருக வழிபாடு மிகப் பழைய காலத்தி லிருந்தே தென்னாட்டவர்க்குரியதென்பதை மெய்ப்பிக் கின்றன.—K. A. N. Sastry, A History of S. India, p. 55.

மாயோன் வணக்கமும் வேத காலத்திற்கு முற்பட்டது. —P. T. Srinivasa Ayyangar, Stone Age in India, PP. 50—52.

பயிராகும் மரங்கள், அந்நில மக்களின் தொழில்கள் முதலி யன அகத்திணையியலில் கூறப்பட்டுள்ளன.

தலைவன் கப்பலிற் செல்ல நேருமாயின் தன் மனைவி யுடன் செல்லான் என்று பொருள்படத் தொல்காப்பியர்,

''முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை''

என்றார் (அகத்திணையியல்—34). போருக்காக அல்லது வாணிகத்திற்காகவே கப்பல் பயன்படுத்தப்படும். சங்ககாலத் தமிழர் கடல் கடந்த நாடுகளில் சென்று வாணிகம் செய் தமைக்கே சான்றுகள் பல உண்டு. இதனால் தொல்காப்பி யர் காலத்திற்கு முன்னரும் அவர் காலத்தும் தமிழர் கடல் வாணிகம் கருதிக் கப்பலிற் சென்றனர், அங்ஙனம் சென்ற போது தாம் மட்டுமே சென்றனர் என்பது இங்கு அறியத் தகும். மிகச் சில ஆண்டுகள் வரையில் இந்த வழக்கம் தன வணிகரிடம் இருந்துவந்தது இங்கு நினைக்கத் தகும்.

ஒருவன் ஒருத்தியைக் கண்டு காதல் கொள்வதும், அக் காதல் வாழ்வில் நடைபெறும் நிகழ்ச்சிகளும், அவ்வாழ்வில் தொடர்பு கொள்ளும் தோழி, செவிலி, தோழன், பாணர், அறிவர் முதலியோர் தொழில்களும் காதலர் களவு வாழ்க்கை யும் களவியலில் இடம் பெற்றுள்ளன.

பலர் அறிய மணந்துகொண்ட தலைவனும் தலைவியும் வாழ்க்கை நடத்தும் முறைமை கற்பியலில் கூறப்பட் டுள்ளது. கணவன்—மனைவி வாழ்க்கை, கணவன் பல செயல்களை முன்னிட்டு மனைவியைப் பிரிதல், அப் பிரிவுகள் காரணமாக மனைவி வருந்துதல், தோழி முதலியோர் அவளைத் தேற்றுதல் போன்ற பல செயல்கள் இவ்வியலில் இடம் பெற்றுள்ளன.

மக்களது இன்ப வாழ்க்கைக்கு அவரது நாடு, உரிமை நாடாக விளங்குதல் வேண்டும். தம்மாட்சி உடைய நாட்டில்தான் மக்களது இன்பம் களங்கமின்றி இருத்தல் இயலும். இந்த உண்மையை உணர்ந்த நம் முன்னோர்

நாட்டைக் காக்கப் போர்த் திறத்தில் சிறந்து விளங்கினர்; வெட்சி—கரந்தை, வஞ்சி—காஞ்சி, நொச்சி—உழிஞை, தும்பை, வாகை என்னும் பல வகைப் போர் முறைகளை வகுத்துச் செயலாற்றினர்; ஒவ்வொரு போர் முறையிலும் பல துறைகளை வகுத்துக்கொண்டனர். **புறத்திணையியல்** இவை பற்றிப் பேசுகின்றது. போரில் வெற்றி பெற்ற வேந்தர்க்குப் புலவர் வாழ்க்கை நிலையாமை கூறி அறிவுறுத்துதல், முடிசூடல், பிறந்த நாள் விழாக் கொண்டாடுதல் போன்ற செய்திகளும் பிறவும் இவ்வியலில் கூறப்பட்டுள்ளன.

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக்கு ஏற்ப உடலில் தோன்றும் வேறுபாடு **மெய்ப்பாடு** எனப்படும். மெய்ப்பாடுகள் சுவை பற்றித் தோன்றுவன. அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என எட்டு வகைப்படும். இவ்வெட்டனுள் ஒவ்வொன்றும் நந்நான்கு வகைப்படும். ஆகவே இவை முப்பத்திரண்டு வகைப்படும். இவை அல்லாமல் வேறு முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும் உள்ளன. இவ்வறுபத்து நான்கு மெய்ப்பாடுகளும் அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவானவை. களவுக்கு உரியவை, கற்புக்கு உரியவை என அகத்திற்கு உரிய மெய்ப்பாடுகள் எழுபதாக விரியும். இவற்றை நுணுகி ஆராயும் பொழுதுதான் பழந்தமிழ் மக்களுடைய மெய்ப்பாடுகள் பற்றிய ஆராய்ச்சி அறிவை நாம் உள்ளவாறு உணர்ந்து பாராட்டுதல் கூடும். இவை **மெய்ப்பாட்டியலில்** கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் காலத்தில் அணி இலக்கணம் என்று தனியாக ஓர் இலக்கணப் பிரிவு ஏற்படவில்லை. பிற்கால ஆசிரியர்கள் அணிகளை முப்பத்தாறாகவும் அவற்றிற்கு மேலாகவும் கூறிச் சென்றனர். அவ்வணிகள் எல்லாவற்றிலும் தலைசிறந்து விளங்குவது உவமை அணியாகும். தொல்காப்பியர் உவமையைப் பற்றி ஓர் இயலில் விளக்கி

யுள்ளார். உவமைகளுள் உள்ளுறை உவமம் மிகச் சிறந்த பொருள் நயம் உடையது. அது அகப்பொருள் பற்றிய செய்யுட்களில் இடம் பெற்றுச் செய்யுளின் பொருளைச் சுவையுறச் செய்யும். **உவமவியலில்** இச்செய்திகள் இடம் பெற்றுள.

மக்களுக்கு வாழ்வும் வளமும் தாழ்வும் சாவும் உண்டு. இவ்வாறே சொற்களுக்கும் இந்நான்கும் உண்டு. சொற்கள் மக்களைச் சார்ந்தே இந்நான்கு நிலைகளையும் அடைகின்றன. மக்கள் பல நூற்றாண்டுகளாக ஒரு சொல்லை ஒரு முறை பற்றியே வழங்கி வருவாராயின், அவர்தம் பின்னோர் அம்முறையிலேயே அதனை வழங்குதல் **மரபு** எனப்படும். சோறு உண்டான், கறி தின்றான் என்று கூறுவதே வாழையடி வாழையாக இருந்துவரும் வழக்கம். இந்த வழக்கமே 'மரபு' என்பது. இதற்கு மாறாகக் கறி உண்டான், சோறு தின்றான் என்று கூறுவது மரபு அன்று. இவ்வாறே நம் முன்னோர் ஒவ்வொன்றையும் எச்சொல்லால் சொல்லி வந்தனர் என்பதை உணர்த்துவதே '**மரபியல்**' என்பது. குட்டி என்பதும் கன்று என்பதும் விலங்குகளின் இளமைப் பெயர்கள். ஆயினும் பசுக்குட்டி என்றும் நாய்க்கன்று என்றும் சொல்லுதல் மரபு ஆகாது; பசுக்கன்று, நாய்க்குட்டி என்று கூறுவதே மரபு. இத்தகைய செய்திகளைக் கூறுவதே இவ்வியலின் நோக்கமாகும்.

அகத்திணையியல் முதல் மரபியல் ஈறாக உள்ள எட்டு இயல்களிலும் சொல்லப்பட்ட செய்திகளை அமைத்துக் கூறும் செய்யுட்களின் இலக்கணம் **செய்யுளியலில்** விரித்துக் கூறப்பட்டுள்ளது. அகம்—புறம் பற்றி இதுகாறும் கூறப்பெற்ற செய்திகள், சில ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்ட செய்யுள் அமைப்பில் இடம் பெற்றால்தான் அறிவுடையோர் அவற்றின் சுவையைப் படித்து உணர்வர். ஆதலால் செய்யுளுக்கு இலக்கணம் இன்றியமையாததாயிற்று. உலக மொழிகள் அனைத்திலும், பாக்களே முதலில் தோன்றின

என்று மொழிநூல் அறிஞர் கூறுவர். இலக்கண அறிவு மிக மிக, செய்யுட்கள் வடிவாலும் பொருளாலும் சிறப்புறலாயின. தொல்காப்பியருக்கு முற்பட்ட தமிழ்ச் செய்யுட்கள் இலக்கண அமைதியால் சீரும் சிறப்பும் பெற்றிருந்தன என்பது,

> **''நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென**
> **வல்லிதின் கூறி வகுத்துரைத் தனரே.''**

என்னும் அடிகளால் அறியலாம்.

தொல்காப்பியர் செய்யுள் உறுப்புகளையும், பாக்களின் வகைகளையும் இவ்வியலில் விளக்கியுள்ளார்; இருபது வண்ணங்களையும் எட்டு வனப்புகளையும் குறித்துள்ளார். எட்டு வனப்புகளாலும் அமைந்த நூல்கள் பலவாகும். அவை தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரும் சமகாலத்திலும் செய்யப்பட்டனவாகும். செய்யுளியலை நுணுகி ஆராயும் பொழுது **தொல்காப்பியர் காலத்தில் இருந்த நூல்களின் வகைகள் மிகப் பல** என்பது நன்கு உணரலாம்.

தொல்காப்பியம் கருத்தூன்றிப் படிப்பவருக்கு மிகவும் எளியது. அதனில் கூறப்பெற்றுள்ள செய்திகள் இன்னவை என்பதைப் பொதுமக்கள் அறிய வேண்டும் என்னும் கருத்தால் அறிஞர் **க. சுப்பிரமணிய பிள்ளை** என்பவர் பல ஆண்டுகட்கு முன்பு ஓர் உரைநடை நூல் எழுதியுள்ளார்; வித்துவான் **க. வெள்ளைவாரணனார்** 'தொல்காப்பியம்' என்னும் பெயரில் அரிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியுள்ளார்; **பேராசிரியர் சி. இலக்குவனார்** 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்னும் பெயரில் மிக எளிய நடையில் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். இப் பெருமக்களுக்குத் தமிழ் உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

சுருங்கக் கூறின், பண்டைத் தமிழ் மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், சமூக அமைப்பு முறை, அரசியல் நிலை, கடவுட் கொள்கை, வாழ்க்கை முறை, அரிய கருத்துகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டு

மிளிர்வதும்—தமிழரது வாழ்வும் வரலாறுமாக விளங்குவதும் பொருளதிகாரமே என்று கூறலாம். இதனைத் தன்னகத்தே கொண்டுள்ள தொல்காப்பியம் தமிழர்க்கு உயிர்நாடி போன்ற தாகும்.[4]

## (4) தொல்காப்பியர்க்கு முற்பட்ட நூல்கள்

தொல்காப்பியத்தில் ஏறத்தாழ 1600 நூற்பாக்கள் உள்ளன. அவற்றில் நூற்றுக்குப் பதினாறு இடங்கள் வீதம் தொல்காப்பியர் தம் காலத்தவரும் தமக்கு முற்பட்டவருமாக வாழ்ந்த இலக்கண இலக்கிய ஆசிரியர்களைப் பற்றிக் கூறி யுள்ளார் :

''செவ்வி தென்ப சிறந்திசி னோரே''
(உயிர் மயங்கியல்-96)

''என்மனார் புலவர்'' (குற்றியலுகரப் புணரியல்-78)

''உளவென மொழிப உணர்ந்திசி னோரே''
(வேற்றுமை மயங்கியல், 34)

''தோன்றுமொழிப் புலவரது பிண்டம் என்ப''
(செய்யுளியல், 165)

''தோலென மொழிப தொன்னெறிப் புலவர்''
(செய்யுளியல், 230)

''புலனென மொழிப புலனுணர்ந் தோரே''
(செய்யுளியல், 238)

''நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''
(மரபியல், 27)

''நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்''
(மரபியல், 98)

---

4 Among the sources which throw light upon the condition, political and social, of the Tamil people in

இவ்வாறு தொல்காப்பியர் தம் நூலுள் ஏறத்தாழ இருநூறு இடங்களுக்கு மேல் கூறியிருத்தலைக் காணலாம். இவற்றோடு, அவர் தமிழ்நாட்டில் தமக்கு முன்பு பன்னெடுங் காலமாக வழக்கில் இருந்து வந்த மரபினை நன்கு கவனித்தே நூல் செய்தார் என்பது அவர் எடுத்தாளும் பின்வரும் தொடர்களால் நன்கு துணியப் பெறும்:

''தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே''
(புள்ளி மயங்கியல், 60)

''பண்டியல் மருங்கின் மரீஇய மரபே''
(வேற்றுமை மயங்கியல், 7)

''தொன்னெறி மரபின் தோன்ற லாறே'' (ஷை, 27)

''..............வழக்கியன் மரபே'' (வினையியல், 47)

''பாடலுட் பயின்றவை நாடுங் காலை''
(அகத்திணையியல், 3)

''சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''
(அகத்திணையியல், 5)

''பாங்குற வுணர்ந்தோர் பன்னுங் காலை''
(செய்யுளியல், 51)

தொல்காப்பியர் காலத்திலும் அவர்க்கு முன்னும் தமிழ் நூல்கள் பல இருந்தன என்பதைப் பல நூற்பாக்களால் அறியலாம். முதல்நூல், தொகைநூல், விரிநூல், தொகை

---

ancient times, the Tolkappiyam will easily hold an important place................. It is no wonder that this antique work should have through the ages excited the interest and curiosity of the Tamil people. Its subject matter is the history of the Tamil race itself, the life of the ancient Tamil country.

–T. R. Seshe Ayyangar, Dravidian India,
pp. 91-92.

விரிநூல், விரிதொகைநூல், மொழி பெயர்ப்பு நூல் எனப் பலவகை நூல்கள் அவர் காலத்தில் இருந்தன.[1] பிறமொழி களிலிருந்து மொழி பெயர்க்கப்பெற்ற நூல்கள் அப்பழங் காலத்திலேயே இருந்தன என்பது இந்நூற்பாவால் நன்கு புலனாகின்றதன்றோ?

1. ''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கம்''[2]

''முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி
பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே
ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்''[3]

தொல்காப்பியர்க்கு முன்பே ஆற்றுப்படை நூல்கள் இருந்தன என்பதை இவ்விரண்டு நூற்பாக்களும் உணர்த்து கின்றன அல்லவா?

அகப்பொருள் பற்றிய நூல்கள் கலிப்பாவிலும் பரிபாட லிலும் வரும் எனத் தொல்காப்பியர் கூறுவதால்,[4] அவர்க்கு முன்பும் அவர் காலத்திலும் அவ்விரு பாக்களிலும் அமைந்த செய்யுள் நூல்கள் இருந்தமை வெளிப்படை.

2. ''குழவி மருங்கினும் கிழவ தாகும்.''[5]

என்று தொல்காப்பியர் கூறுவதால், பிற்காலப் பிள்ளைத் தமிழ் போன்ற நூல்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந் திருக்கலாம் எனக் கருதுதல் தவறன்று.

---

1. மரபியல் 97; ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, ப. 303.
2. புறத்திணை இயல், 36.
3. எச்சவியல், 66
4. அகத்திணையியல், 53.
5. புறத்திணையியல்,

**3. ''ஊரொடு தோற்றம் உரித்தென மொழிப''[6]**

என்று தொல்காப்பியர் கூறுவதால், அவர் காலத்தில் உலா நூல்கள் இருந்திருக்கலாமென்று கூறுதல் பொருத்தமாகும்.

**4. ''மடன்மாக் கூறும் இடனுமா ருண்டே''[7]**

என்று தொல்காப்பியர் கூறலால், ஆண்கள் தலைவியரை விரும்பி மடன்மா ஏறுவதாகக் கூறிய மடல் நூல்கள் தொல் காப்பியர் காலத்தில் இருந்திருக்கலாம்.

**5. ''அங்கதந் தானே அரில்தபத் தெரியிற்**
**செம்பொருள் கரந்த(து) எனஇரு வகைத்தே''[8]**

என்று தொல்காப்பியர் கூறுவதால், ஒருவனைப் பழித்தே வைத செய்யுட்களும், பழி மறைத்து மொழியும் செய்யுட் களும் அவர் காலத்தில் இருந்தன என்னலாம். இவை முறையே செம்பொருள் அங்கதம் (வசைப்பாட்டு), பழிகரப் பங்கதம் (வசை மறைத்துக் கூறும் பாட்டு) எனப்படும்.

6. எளிதில் பொருள் தோன்றாது சொற்களால் மறைய வைத்துக் கூர்ந்து நோக்கின் இன்ன பொருளையுடையது என்று அறியக்கூடும் வகையில் இக்கால விடுகதை போன்ற ஒருவகை, பிசி எனத் தொல்காப்பியர் காலத்தில் பெயர் பெற்றிருந்தது. அது உவமத்தாலும், தோன்றுவது கிளந்த துணிவினாலும் வரும்; செய்யுள் வடிவிலும் உரை நடை வடிவிலும் வரும். இப்பிசி பற்றிய நூல்கள் இருந்தமை பற்றியே தொல்காப்பியர் இதனைக் குறித்தார்.

**''ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானும்**
**தோன்றுவது கிளந்த துணிவி னானும்**
**என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே.''[9]**

8. முதுமொழி அல்லது பழமொழி என்பது இலக்கிய வளர்ச்சிக்கு முற்பட்டது; மக்கள் அநுபவ வாயிலாகப்

---

6. அகத்திணையியல் 30. 7. களவியல், 11.
8. செய்யுளியல், 124.
9. செய்யுளியல், 176

பிறந்தது. அது வேறொரு செய்தியை விளக்கப் பயன்படுகின்றது. புலவர் அதனைப் பயன்படுத்தித் தம் கருத்துகளை விளக்கும் பாடல்கள் உண்டு. இத்தகைய பழமொழி பற்றித் தொல்காப்பியர்,

''நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப''[10]

என்று குறித்துள்ளார். இதனால் முதுமொழியை உள்ளடக்கிய பழமொழி நானூறு போன்ற செய்யுள் நூல்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்பதை உணரலாம்.

9. ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''[11]

என்னும் நூற்பாவினால், தொல்காப்பியர் காலத்தில் மந்திரச் செய்யுட்களைக் கொண்ட நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரிகிறது. பிற்காலத்தில் பாடப்பெற்ற 'திரு மந்திரம்' போன்ற நூல்களாக அவை இருக்கலாம்.

10. இசையை முதன்மையாகக் கொண்ட பழம்பாட்டிடைக் கலந்த பொருளையே தனக்குப் பொருளாகக் கொண்ட பாடல்வகை பண்ணத்தி எனப்படும்.

இது பற்றிப் பேராசிரியர்;

''மெய்வழக்கல்லாத புறவழக்கினைப் பண்ணத்தி என்ப. இஃது எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருள்களைப் பண்ணத்தி என்ப என்பது. அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப் பாட்டும்

10. செய்யுளியல், 177.
11. ஷை, 178.

கடகண்டும் முதலாயின. அவற்றை மேலதேபோலப் பாட்டென்னாராயினார், நோக்கு முதலாயின உறுப்பின்மையின் என்பது. அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க,'' என்று கூறியுள்ளார்.

தம் காலத்தில் இருந்த எல்லா நூல்களையும் பழுதறக் கற்ற பேராசிரியரே, ''வல்லார்வாய்க் கேட்டுணர்க'' என்று கூறினர் எனின், அவர் காலத்தில் பண்ணத்தி என்பது வழக்கற்றுப் புலவரும் அறிய முடியாத நிலையை அடைந்து விட்டது என்பது தெரிகிறதன்றோ?

''பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டின் இயல பண்ணத்தி என்ப''[12]
இப்பண்ணத்தி பற்றியே ஆசிரியர்,

''அடியிகந்து வரினும் கடிவரை யின்றே''[13]

என்று கூறினார். இதற்கு உரை எழுதிய பேராசிரியர், ''அவை, முற்காலத்துள்ளார் செய்யுட் காணாமையின் காட்டாமாயினோம். இக்காலத்துளவேற் கண்டுகொள்க. இலக்கணம் உண்மையின், இலக்கியம் காணாமாயினும் அமையும் என்பது,'' என்று கூறியிருத்தல் பண்ணத்தியின் பழைமையை நன்கு உணர்த்துவதாகும். (தொல்காப்பியர் இன்றுள்ள நூல்கட்கு முற்பட்டவர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாதல் காண்க.)

11. தொல்காப்பியர் காலத்தில் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்னும் எண்வகை வனப்புகளுள் தனித்தனி வனப்புக்குரிய நூல்கள் இருந்தன என்பது, அவர் கூறும் எண்வகை வனப்புகளுக்குரிய நூற்பாக்களைக் கொண்டும் உரையாசிரியர் தரும் விளக்கம் கொண்டும் நன்கறியலாம்.

(1) அறம் பொருள் இன்பங்களைச் சேர்த்தும், தனித் தனியாகவும் வைத்து அடிகள் குறைந்த செய்யுட்களில்

---

12. ஷை 180, 13. ஷை, 183,

பாடப்படுவன '**அம்மை**' வனப்பமைந்தநூல்கள் ஆகும்.[14] பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இவ்வனப்பிறகு எடுத்துக் காட்டாம். எனவே, இவைபோன்ற நூல்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்.

2. சிறந்த செய்யுள் நடையில் பொலிவுபெற்ற பாடல்கள் **அழகு** என்னும் வனப்புடையவை.[15] எட்டுத் தொகை நூல்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும். எனவே, இவை போன்ற தொகை நூல்கள் தொல்காப்பியர் காலத் திலும் இருந்திருத்தல் வேண்டும்.

3. உரையொடு புணர்ந்த பழைமைப் பொருளாகக் கதை வடிவில் வருவது **தொன்மை** என்னும் வனப்பாகும்.[16] உரையொடு புணர்தல்-நெடுங்காலமாகப் பலரால் சொல்லப் பட்டு வருதல். பழைமை-பழங்கதை, பழைமைத்தாகிய பொருள்மேல் வருவன. இராம சரிதை, பாண்டவ சரிதை முதலியவற்றின்மேல் வரும் செய்யுள் என்று இளம்பூரணர் கூறுவர். ஆயின், பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் 'உரையொடு புணர்ந்த' என்னும் தொடர்க்கு 'உரை நடை யுடன் விரவிய' எனப்பொருள் கொண்டனர்; 'பெருந்தேவ னாரால் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல் வன,'' என்று குறித்துள்ளனர்.

4. இழும் என்னும் ஓசையையுடைய மெல்லென்ற சொற்களால் விழுமிய பொருள் பயக்கும்படி செய்யப்படு வனவும், பரந்த மொழியால் அடிநிமிர்ந்து வரத் தொடுக்கப் படுவனவும் **தோல்** என்னும் வனப்பைப் பெற்றவை.[17] இளம் பூரணர் முதலுக்கு எடுத்துக்காட்டாக மார்க்கண்டேயனார் காஞ்சியையும், இரண்டாவதற்கு எடுத்துக்காட்டாகக் கூத்த

14. ஷை, 235.
15. ஷை, 236.
16. ஷை, 237. 17. ஷை, 238.

ராற்றுப் படையையும் சுட்டியுள்ளனர். பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் ஆசிரியப்பாவினால் ஒரு கதைமேல் தொடுக்கப்பட்ட தொடர்நிலைச் செய்யுட்கள் இரண்டாம் நிலைக்கு எடுத்துக்காட்டு என்று கூறியுள்ளனர். இரண்டு இலக்கணங்களையும் கொண்டது சிலப்பதிகாரம் என்று கூற லாம். இத்தகைய நூல்கள் தொல்காப்பியர் காலத்தில் இருந்தகாரணம்பற்றியே ''தொன்மொழிப் புலவர் தோலெனா மொழிப'' என்று கூறினாராதல் வேண்டும்.

5. புதிதாகத் தொடுக்கப்படும் தொடர்நிலைச் செய்யுள் **விருந்து** என்னும் வனப்பை உடையதாகும்.[18] பேராசிரியர் முத்தொள்ளாயிரம், பொய்கையார் முதலியோர் செய்த அந்தாதி நூல்களை இவ்வனப்புக்குக் காட்டாகக் காட்டுவர்; 'கலம்பகம் முதலாயினவும் சொல்லுப' என்றும் கூறி யுள்ளனர்.

6. ஞ, ண, ந, ம, ன, ய, ர; ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியுள் ஒன்றனை இறுதியாகக் கொண்டு முடியுஞ் செய்யுள் **இயைபு** எனப்படும்.[19] ''இயைபென்ற தனானே பொருளும் இயைந்து சொல்லும் இயைந்து வரு மென்பது கருத்து; சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்கு வேளிராற் செய்யப்பட்ட தொடர் நிலைச் செய்யுளும் போல்வன. அவை னகார ஈற்றான் இற்றன. மற்றையீற்றான் வருவனவற்றுக்கும் ஈண்டிலக் கணம் உண்மையின், இலக்கியம் பெற்றவழிக் கொள்க. இப்பொழுது அவை வீழ்ந்தன போலும்,'' என்று பேராசிரியர் விளக்கம் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் ஒவ்வொரு காதையின் இறுதியும் 'ன்' என்பது பெற்று முடிகின்றது. மணிமேகலையிலுள்ள ஒவ்வொரு காதையும் இம்முறையிலேயே முடிகின்றது. ஒரு

18. ஷை, 239.

19. ஷை, 240.

காதையின் முடிவில் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு மெய்களுள் ஒன்று பெற்று முடியலாம். இவ்வெழுத்துகளை ஈற்றில் பெற்று முடியும் பகுதிகளைக் கொண்டவை இயைபு எனப் பெயர் பெறும் என்று தொல் காப்பியர் கூறியுள்ளார். இப்பதினொரு மெய்களுள் ஒவ் வொன்றையும் ஈற்றில் பெற்ற இலக்கிய நூல் தொல் காப்பியர் காலத்தில் இருந்திராவிடில், அவர் இவ்வெழுத்து கள் மட்டும் ஈற்றில் வரும் என்று கூறவேண்டிய தேவை ஏற்பட்டிராது. அவர் தேர்ந்தெடுத்து இவ்வெழுத்துகளைக் கூறியிருத்தலால், இவற்றுள் ஒவ்வொன்றையும் இறுதியிலே பெற்று முடியும் **நூல்கள் அவர் காலத்தில் இருந்திருத்தல் வேண்டும்** என்பது வெள்ளிடைமலை.

7. உலக வழக்குச் சொல்லினாலே செவ்விதாகக் கூறப்பட்டு எளிதில் தானே விளங்கத் தோன்றுவது **புலன்** என்னும் வனப்புடைய செய்யுளாகும். **விளக்கத்தார் கூத்து** முதலாகிய **நாடகச் செய்யுளாகிய** வெண்டுறைச் செய்யுள் போல்வன என்று பேராசிரியர் கூறியுள்ளனர்.[20] ''இங்குப் **புலன்** என்பது நாடகத்தைக் குறிக்கும் சொல் லாகும். நாடகம் என்பது வடமொழிப் பெயர். அதற்குத் தமிழர் வழங்கிய பெயர் 'புலன்' என்பது.''

''பாணர், விறலியர், கூத்தர் என்பவர் தமிழகத்தில் மிக்கிருந்தனர். இவர்களை வள்ளல்கள்பால் ஆற்றுப் படுத்தும் நூல்கள் பல இருந்தன. வள்ளல்கள் இவர்களைப் பெரிதும் ஆதரித்தனர் என்னும் விவரங்களை இன்றுள்ள தொகை நூல்களால் அறிகிறோம். **இவர்கட்கு இவர்தம் துறையிற் புலமை நல்கிய பெருநூல்கள் தொல்காப்பியர் காலத்தில் மிக்கிருந்தனவாதல் வேண்டும்** என்பது இச் சூத்திரத்தால் உணரப்படும்.[21]

---

20. ஷை, 241 உரை.

21. ரா. இராகவையங்கார்; தமிழ் வரலாறு, பக். 311.

8. ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத்துப் பயிலாமல் இரு சீரடி முதலாக எழுசீரடி அளவும் வந்த அடி ஐந்தனையும் ஒப்பிட்டு ஓங்கிய மொழியால் பொருள் புலப்படச் செய்வது **இழைபு** என்னும் வனப்பாகும்.[22] "அவையாவன **கலியும் பரி பாடலும்** போலும் இசைப் பாட்டாகிய செந்துறை மார்க்கத் தன என்பது."

1. பலவகைச் செய்யுள் நூல்களைக் குறிப்பிட்ட தொல் காப்பியர் தமது நூலில் **நால்வகை உரைநடையைப்** பற்றியும் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்று பாட்டினிடையே வைக்கப் பட்ட பொருட் குறிப்பினால் வருவது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய சிலப்பதிகாரத்தில் இடை யிடையே வரும் உரைநடை இவ்வகையைச் சார்ந்தது.

2. பாட்டில்லாமல் பேச்சு வழக்கில் உரையளவாய் வருவது. இது உலக வழக்கில் மக்கள் பேசும் உரைநடை.

3. உண்மை நிகழ்ச்சி இல்லாமல் பொய்யே புனைந் துரைக்கும் அளவில் வருவது ஒருவகை உரைநடை. ஓர் யானையும் குருவியும் தம்முள் நட்புக்கொண்டு இன்ன இடம் சென்று இன்னவாறு செய்தன என்று அவற்றுக்குப் பொருந்தாத பொருள்படும்படி தொடர்நிலையால் நீண்ட காலமாக வழங்கப்பட்டுவருவது என்று பேராசிரியர் கூறி யுள்ளனர்.

4. பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகைப் பொருள் அளவாய் வருவது நான்காம் வகை. முழுமையும் பொய்யென்று தள்ளப்படும் நிலையில் அமையாது, உலகிய லாகிய உண்மை நிலையை ஓரளவு அறிவுறுத்துவனவாய்க் கேட்போர்க்கு நகைச்சுவையை விளைக்கும் பஞ்சதந்திரக் கதைபோலும் உரைநடை இவ்வகையைச் சேர்ந்தது.

---

22. செய்யுளியல், 242.

இந்நால்வகை உரைநடை நூல்களும் தொல்காப்பியர் காலத்திலும் அவர்க்கு முன்பும் தமிழில் இருந்தமையால்தான் அவர்,

> ''பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
> பாவின் றெழுந்த கிளவி யானும்
> பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
> பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்(று)
> உரைவகை நடையே நான்கென மொழிப.''[23]

என்று நூற்பாவொன்றினைச் செய்தனர்.

''இவையன்றி 'அகமும் புறமும்' என்னும் பொருட்பாகு பாட்டிற்குரிய இன்பத் துறைகளிலும் கொடை, வீரம் முதலியவற்றிலும், உற்றார் இறந்த கையறு நிலையினும், மனமகிழ்தற்குக் காரணமான மங்கலங்களிலும், எல்லாந்துறந்த துறவிலும்; இன்னும் மக்கள் வாழ்நாளில் நிகழ்ந்த பல்வகை நிகழ்ச்சியினும் எத்துணையோ பலநூல்களும் உண்டாயிருந்தன வென்பது இந்நூலுள், அகத்திணை, புறத்திணை, பற்றிவரும் சூத்திரங்களால் அறியக் கிடப்பது.''[24]

தொல்காப்பியர் தமக்கு முன்னும் தம் காலத்திலும் இருந்த பலவகைச் செய்யுள் நூல்களையும் உரைநடை நூல்களையும் தமிழ் இலக்கண நூல்களையும் நன்கு பயின்று தமது இலக்கண நூலைச் செய்தார் என்பது இதுகாறும் கூறப்பட்ட செய்திகளால் நடுவுநிலை யறிவுடையார்க்கு இனிது புலனாகும்.[25]

---

23. ஷை,173.

24. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 318.

25. ''...Much of Tamil literature and many stages of grammars should have existed before the TolKapplyam to satisfy the existence of this perfect Grammar.''

—T. R. Sesha Ayyangar, Dravidian India, P. 92.

## (5) தொல்காப்பிய உரையாசிரியர்கள்

### இளம்பூரணர்

தொல்காப்பியத்திற்கு **இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர்** என்ற புலவர் பெருமக்கள் உரை கண்டுள்ளனர். இவருள் காலத்தால் முற்பட்டவர் இளம்பூரணர்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி. பி. 1178—1218) குவலாள புரத்தை (கோலாரை)ச் சீயகங்கன் என்பவன் ஆண்டுவந்தான். அவன் கி. பி. 1214இல் காஞ்சி அருளாளப் பெருமாள் கோவிலில் ஒரு திருப்பணி செய்தான் என்று அக்கோவில் கல்வெட்டுக் கூறுகிறது.[1] அச்சீயகங்கன் காலத்திற்றான் **பவணந்தி முனிவர் நன்னூலைச் செய்தார்** என்று நன்னூல் சிறப்புப்பாயிரம் செப்புகின்றது. எனவே, பவணந்தியார் காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்னலாம். இவர், இளம்பூரணர் தொல்காப்பியத்திற்கு வரைந்த உரையைத் தழுவியே நன்னூல் செய்தார்.[2] எனவே, இளம்பூரணர் பவணந்திக்கு முற்பட்டவராவர். அவர் காலம் கி. பி. 11 அல்லது 12ஆம் நூற்றாண்டு என்று கூறலாம். இளம்பூரணர் உரை தொல்காப்பியம் முழுமைக்கும் கிடைத்துள்ளது.

### சேனாவரையர்

**சேனாவரையர்** என்னும் பெயர் சில கல்வெட்டுகளில் காணப்படுகின்றது. அவற்றுள் ஒன்று கொற்கைக்கு அண்மையில் உள்ள 'ஆற்றூர்ச் சேனாவரையன்' என்ற ஒருவரைக் குறிக்கின்றது. கொற்கையைச் சூழ்ந்த நாடு 'மாறோக்கம்' எனப் பண்டைநாளில் வழங்கப்பட்டது. ஆற்றூர் அந்நாட்டைச் சேர்ந்ததேயாகும். தொல்காப்பியத்

---

1. A.R.E. 589 of 1919.

2. கலைக்களஞ்சியம் 2, பக். 141.

திற்கு உரைவரைந்த சேனாவரையர் சொல்லதிகாரத்துப் பெயரியலில், ''பெண்மையடுத்த மகனென் கிளவியும்'' என்பதன் சிறப்புரையாக, ''புறத்துப்போய் விளை யாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப,'' என்று பயிலு மிடம் குறிப்பிட்டுக் கூறியுள்ளார். இவ்வாறு தென்பாண்டி நாட்டைச் சேர்ந்த மாறோக்கம் என்ற பகுதியின் வழக் கினைக் கூறியவர், கல்வெட்டில் குறிக்கப்பெற்ற ஆற்றூர்ச் சேனாவரையராய் இருக்கலாம். அக் கல்வெட்டின் காலம் கி. பி. 1276.[3]

சேனாவரையர் நன்னூலார் கொள்கைகளை மறுத்து உரை கூறுதலால் பவணந்தி முனிவருக்குப் பிற்பட்டவராவர். இவரது காலம் கல்வெட்டில் கண்டபடி கி.பி. 13ஆம் நூற் றாண்டின் பிற்பகுதி என்னலாம். இவர் வடமொழிப் புலமை நிரம்பியவர். இவரது உரை சொல்லதிகாரத்திற்கு மட்டுமே கிடைத்துள்ளது.

**பேராசிரியர்**

பேராசிரியர் நன்னூல் சூத்திரத்தையும் சூத்திரக் கருத் தையும் தமது தொல்காப்பிய உரையில் எடுத்து ஆண்டுள் ளார். ஆதலின் இவர் பவணந்தி முனிவருக்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு.[4] எனவே, இவர் காலம் கி. பி. 13ஆம் நூற் றாண்டின் இறுதி அல்லது 14ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம். இவரது உரை மெய்ப்பாட்டியல், செய்யுளி யல், உவமையியல், மரபியல் என்னும் நான்கு இயல்களுக்கே கிடைத்துள்ளது.

**நச்சினார்க்கினியர்**

நச்சினார்க்கினியர் மதுரையைச் சேர்ந்தவர்; பாரத்து வாசகோத்திரத்தினர். இவர் வடமொழியிலும் தென்மொழி

---

3. 465 of 1929—30.
4. கலைக்களஞ்சியம், 7, பக். 681.

யிலும் புலமை மிக்கவர். இவரது உரை எழுத்ததிகாரத்திற்கும் சொல்லதிகாரத்திற்கும் பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களுக்கும் கிடைத்துள்ளது. இவர் தமது உரையில் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், பரிமேலழகர், ஆளவந்தபிள்ளை ஆசிரியர் ஆகிய உரையாசிரியர்களைக் குறிப்பிடுவதால் அவர்களுக்குப் பிற்பட்டவராவர். இவரது காலம் ஏறத்தாழப் பதினைந்து அல்லது பதினாறாம் நூற்றாண்டு என்று கூறலாம்.

## தெய்வச்சிலையார்

**தெய்வச்சிலையார்** உரை சொல்லதிகாரத்திற்கு மட்டும் கிடைத்துள்ளது. செந்தமிழ் நாடு இன்னது என இளம்பூரணரும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறிய கூற்றைக் குறிப்பிட்டு இவர் மறுத்துள்ளார். அதனால் இவர் நச்சினார்க்கினியருக்கும் பிற்பட்டவர் என்பது தெளிவாகும். திருப்புல்லாணியில் உள்ள பெருமாளுக்குத் தெய்வச் சிலையார் என்பது பெயர். அப்பெயரைத் தாங்கியுள்ள இவ்வுரையாசிரியர் அப்பகுதியைச் சேர்ந்தவராகலாம்.

## கல்லாடர்

**கல்லாடர்** உரை சொல்லதிகாரத்திற்கு மட்டுமே ஓலைச்சுவடிகளில் இருந்தது. அஃது இவ்யாண்டு அச்சாகியுள்ளது. கல்லாடர் முன்பு கூறப்பெற்ற உரையாசிரியருள் ஒருவராலும் குறிக்கப் பெறாமையால், அவர் அனைவருக்கும் பிற்பட்டவர் என்று கொள்ளுதல் பொருத்தமாகும். செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள **மீஞ்சூர்ச்** சிவபெருமானுக்குக் கல்லாடஈசுவரர் என்பது பெயர். எனவே, இன்றைய மீஞ்சூர் சங்ககாலத்தில் **கல்லாடம்** எனப் பெயர் பெற்றிருந்தது என்னலாம். சங்ககாலக் கல்லாடர் இவ்வூரினராதல் கூடும். பின் வந்த கல்லாடதேவ நாயனாரும் இத்தொல்காப்பிய உரையாசிரியரான கல்லாடரும் இவ்வூரினர் எனக் கருதுதல் பொருத்தமாகும்.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளால், தொல்காப்பிய உரையாசிரியர் காலம், தொல்காப்பியர் காலத்திற்கு மிகப் பிற்பட்டது என்பது தெளிவாகும்; அஃதாவது, ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்குப் பின்பே இளம்பூரணர் தோன்றினார்—அவருக்குப் பின்பு பிற உரையாசிரியர் தோன்றினர் என்பது தெளிவு. தொல்காப்பியருக்குப் பின்பு தமிழகத்தில் வட மொழியின் செல்வாக்கு மிகுதிப்பட்டது; ஆட்சிமுறையில் மாறுதல்கள் ஏற்பட்டன; சாதி வேறுபாடுகள் வேரூன்றி விட்டன; ஒரு சாதிக்கு ஒரு நீதி கூறும் நூல்கள் பெருகி விட்டன; பக்திநெறி பரவி விரிவடைந்தது. இம்மாற்றங்கள் தோன்றிய பின்பு வந்த உரையாசிரியர்கள் தங்களுக்கு ஏறத் தாழ 1600 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்ற தொல் காப்பியத்திற்கு உரை கூறுதல் முற்றும் இயலவில்லை; அதனால் பல இடங்களில் குழப்ப உரை கூறிச் சென்றனர்; சாதிகளை நுழைத்து உரை கூறினர்; இங்ஙனம் இவர்கள் தவறு செய்த இடங்களைப் பேராசிரியர் **டாக்டர் சோமசுந்தர பாரதியார்** தம் உரையில் சுட்டிக் காட்டி இருத்தல் காணத் தகும். நடுவுநிலை உள்ளம் படைத்த நன்மக்கள் இவ்வுரை களைப் படித்து உண்மை தெளிவாராக.

# 8. திருக்குறள்

## (1) திருவள்ளுவர் காலம்

### திருக்குறளும் மணிமேகலையும்

சங்க நூல்களில் ஒன்றான மணிமேகலையில் திருவள்ளுவரால் செய்யப்பட்ட திருக்குறள் பாக்களுள் ஒன்று அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது காண்க:

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.'' (குறள்-55)

இக் குறட்பா மணிமேகலையில்,

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்''
(மணிமேகலை, சிறைசெய் காதை, வரி 59-61)

என்று மணிமேகலை பாடிய மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரால் எடுத்தாளப்பட்டது. பரசுராமன் காலத்தில் வாழ்ந்த ககந்தன் என்ற பழைய சோழன் மகன் ஒருவன் 'மருதி' என்ற பார்ப்பன மங்கையைக் காவிரிக் கரையில் கண்டு காம உணர்ச்சியால் அழைத்தான். அவள் மனங் கலங்கி, ''உலகில் மழைவளந் தரும் பத்தினிப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகார். நான் இவன் உள்ளம் புகுந்தேன். இதற்குக் காரணம் யாது?'' என்று சதுக்கப் பூதத்தை அணுகித் தன் மனக் கவலையை வெளியிட்டாள். அதற்கு அப் பூதம் மேற்சொன்ன மூன்று வரிகளையும் கூறியது என்பது வரலாறு. இது நிற்க.

இவ்வாறு திருக்குறள் ஒன்றை வெளிப்படையாகத் தம் நூலில் கூறி, அதனைச் செய்த ஆசிரியரைப் 'பொய்யில் புலவன்' என்று வியந்து பாராட்டிய மணிமேகலை ஆசிரியர் காலம் யாது என்பதை முதற்கண் ஆராய்வோம்.

**மணிமேகலையின் காலம் என்ன?**

1. மணிமேகலை ஆசிரியரான சாத்தனாரும், சிலப்பதிகார ஆசிரியரான இளங்கோ அடிகளும் நண்பர்கள் என்பதும், செங்குட்டுவன் காலத்தவர் என்பதும் இவ்விரு நூல் பாயிரங்களாலும் சிலப்பதிகார அகச் சான்றுகளாலும் அறியலாம். இச்சாத்தனார் வாய்மொழியால் கண்ணகியின் சிறப்பறிந்த செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோவில் கட்டி வழிபட்டதற்கும், அதற்கு இலங்கை அரசனான கஜபாகு (கயவாகு) மன்னன் வந்திருந்தான் என்பதற்கும் சிலப்பதிகாரமே சான்று பகர்கிறது. கயவாகு என்னும் பெயருடைய அரசர் இருவர் முறையே கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலும், கி. பி. 12ஆம் நூற்றாண்டிலும் ஆண்டனர் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. இவற்றுள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆண்ட கயவாகுவே (கி. பி. 114-136)[1] செங்குட்டுவன் காலத்து அரசனாதல் வேண்டும் என்பதை ஆராய்ச்சியாளர் அனைவரும் ஒப்புகின்றனர். அவனே பத்தினி விழாவில் கலந்துகொண்டு தன் நாட்டிலும் பத்தினிக்குக் கோவில் கட்டியவன் ஆவான். இன்றைக்கும் சிங்களவர் 'பத்தினிதெய்யோ' என்று கண்ணகியைக் கொண்டாடுகின்றனர். இலங்கையிலிருந்துதான் பத்தினியின் உருவச் சிலை இலண்டன் பொருட்காட்சிச் சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

2. மணிமேகலை 27ஆம் காதையில் 'கிருதகோடி' என்னும் பெயர், வேதவியாசருடனும் சைமினி என்னும் ஆசிரியருடனும் பிரமாணங்கள் கூறுமிடத்தில் குறிக்கப்பட்டுள்ளது. 'கிருதகோடி' என்பது மீமாம்சை சாத்திர

---

1. History of Ceylon, Vol. I, Part I, pp. 183-185.

மாகிய வேதாந்த சூத்திரத்திற்குப் போதாயனர் இயற்றிய உரை ஆகும் என்பது 'பிரபஞ்ச ஹிருதயம்' என்னும் வடமொழி நூலில் கூறப்பட்டுள்ளது. அந் நூலில், இவ்வுரை மிக விரிவாக இருந்தது பற்றி உபவர்ஷர் என்பவர் அதனைச் சுருக்கி அமைத்தனர் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது. இந்த உபவர்ஷர் கி. மு. 3ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பது ஆராய்ச்சியாளர் முடிபு, எனவே, அவருக்கு முற்பட்ட 'கிருதகோடி' உரை எழுதிய போதாயனர் அவருக்கும் முற்பட்டவர்; ஏறத்தாழக் கி. பி. முதல் நூற்றாண்டின் அல்லது இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர் ஆவர் என்று அறிஞர் கருதுகின்றனர்.[2] இதனால், 'கிருதகோடி' ஆசிரியரைக் குறிப்பிடுகின்ற மணிமேகலை, அவ்வுரை பெரிதும் வழக்கிலிருந்த கி. பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருத இடம் தருகிறது.[3]

3. மணிமேகலை 29ஆம் காதையிலும், பிற காதைகளிலும் குறிக்கப்பட்டுள்ள பௌத்த சமயக் கொள்கைகள், ஏறத்தாழக் கி. பி. 200—250 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவராக ஆராய்ச்சியாளரால் துணியப்படும் நாகார்ச்சுனர் என்பவரால் உண்டாக்கப்பட்ட மகாயான பௌத்த மதக் கொள்கைகள் அல்ல. அவை ஈனயான பௌத்தமதக் கொள்கைகள். எனவே, மணிமேகலை காலத்தில் இருந்த தமிழகத்துப் பௌத்தம், ஈனயானத்தைச் சேர்ந்த சௌத்ராந்திகப் பிரிவினது என்பது தெளிவாகும்.[4]

---

2. Vedanta Commentators before Sankaracharya by P. V. Kane. Proceedings, Fifth Oriental Conference, Vol. II.

3. Dr. S. K. Ayyangar, 'Manimekalai in its Historical Setting' pp 61—67.

4. 'Buddhistic Studies' Compiled by B. C. Law pp. 11—17; K. A. N. Sastry, Cholas (2nd ed.), pp. 55—56.

எனவே, நாகார்ச்சுனர் கொள்கைகள் தமிழகத்தில் பரவு வதற்கு முற்பட்ட காலத்தது மணிமேகலை என்று கருதுதல் பொருந்தும்.

4. பௌத்த சமயத்துச் 'சாத்திய சித்தி' பிரிவினரான அரிவர்மர் ஏறக்குறையக் கி. பி. 250 இல் வெளிப்படுத்திய அநாத்மவாதக் கொள்கை மணிமேகலையில் இல்லை.[5] இதனாலும் மணிமேகலை கி.பி.250க்கு முற்பட்டது என்பது தெளிவாகும்.

5. மணிமேகலை ஆசிரியரான சாத்தனார்க்கு நண்ப னான செங்குட்டுவன், பத்தினிச் சிலைக்குக் கல் எடுக்க வடநாடு சென்றான் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. அவன் எவ்வித எதிர்ப்புமின்றிக் கங்கையைக் கடந்து உத்தர கோசலத்தில் மட்டும் ஆரிய அரசரை வென்றான் என்று அந் நூல் கூறுகிறது. இங்ஙனம் தமிழரசன் ஒருவன் வடக்கே படையெடுத்துச் செல்லத்தக்க வசதி கி.பி. முதலிரண்டு நூற் றாண்டுகளில் இருந்ததா எனின், ஆம். ஆந்திர அரசர் கங்கை வரையில் செல்வாக்குப் பெற்றிருந்தனர்; செங்குட்டு வன் கங்கையைக் கடக்க உதவி செய்தனர். கயவாகுவின் காலம் கி. பி. 114—136 ஆதலால், செங்குட்டுவன் படை யெடுப்பும் இக்காலத்திலேயே நிகழ்ந்ததாதல் வேண்டும். இப் படையெடுப்பில் செங்குட்டுவன் நண்பரான நூற்றுவர் கன்னர் அவன் கங்கையைக் கடக்க உதவி புரிந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. 'நூற்றுவர் கன்னர்' என்பது 'சதகர்ணி' என்னும் வடமொழித் தொடரின் மொழிபெயர்ப்பு என்பதை எளிதில் உணரலாம். உணரவே, அக்காலத்து ஆந்திரப் பெருநாட்டை ஆண்ட சதகர்ணி அரசன் செங்குட்டு வனுக்கு நண்பன் என்பது பெறப்படும். அக்கால ஆந்திர அரசன் கௌதமீ புத்திர சதகர்ணி என்பவன். இவன் காலம்

5. 'Manimekalai in its Historical Setting,' pp. 79—95.

கி. பி. 106—130[6]. எனவே, சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட நூற்றுவர் கன்னர், வரலாற்றுப் புகழ்பெற்ற 'சதகர்ணி அரசர்' என்பது அறியத்தகும். இங்ஙனம் வரலாறு கொண்டும், சமய உண்மைகள் கொண்டும் அறிஞர் கூறியுள்ள முடிவுகளைக் காணின், **சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செய்யப்பட்டனவாதல் வேண்டும்** என்பது நன்கு தெளிவாகும்.

**திருக்குறளின் பழைமை**

கி. பி. 2ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செய்யப் பெற்றதாகத் துணியப்படும் மணிமேகலையில் திருக்குறள் ஆட்சி பெற்றது எனின், திருக்குறள் நூல் சாத்தனார் போன்ற புலவர்கள் படித்தறியத்தக்க நிலையில் நாட்டில் பெருமை பெற்றிருந்தது என்பது தெளிவாகும். ஆசிரியர் இக்குறளை ஆண்டுள்ள இடம் நன்கு கவனித்தற்குரியது. சோழ அரசருள் மிகப் பழையவனான (கரிகாலனுக்கும் முற்பட்ட) ககந்தன் காலத்தில், காவிரிப்பூம் பட்டினத்தி லிருந்த சதுக்கப்பூதம் மருதி என்னும் பார்ப்பனியை நோக்கி,

> **''தெய்வம் தொழாஅள்..................**
>
> **..............................................**
>
> **பொய்யில் புலவன் பொருளுரை தேராய்,''**

என்று கூறியதாகச் சாத்தனார் கூறியுள்ளார். ஒரு சாதாரண பார்ப்பனப் பெண்ணான மருதி இத்திருக்குறளின் கருத்தை அறிந்திருத்தல் வேண்டும் என்று சதுக்கப் பூதம் எதிர் பார்த்தது என்பது சாத்தனார் கருத்தாதல் தெளியலாம். இவ்வாறு ககந்தன் காலத்திலேயே திருக்குறள் அனைவராலும் அறியத்தகும் நிலையிலிருந்தது. (அஃதாவது, மணி

6. R. Sathyanatha Ayyar, History of India, Vol. I, P. 207.

மேகலையின் காலத்துக்கு மிக முற்பட்டது திருக்குறள்) என்பதைச் சாத்தனார் சதுக்கப் பூதத்தின் வாயிலாக நமக்கு உணர்த்தும் திறன் வியந்து பாராட்டற்குரியது அன்றோ? சாத்தனார் உணர்த்துவது உண்மை என்பதை எட்டுத் தொகை, பத்துப்பாட்டு முதலிய நூல்கள் திருக்குறள் சொற்களையும் தொடர்களையும் கருத்துகளையும் எடுத்து ஆளுவதிலிருந்து நன்கறியலாம்.

### திருக்குறளும் சங்க நூல்களும்

தமிழகத்தில் கி. பி. 300க்கு முற்பட்ட பல்வேறு காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடிய பாக்களின் தொகுதியே எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் ஆகும். இவை கி. பி. மூன்றாம் நூற்றாண்டுக்குள்ளேயோ அல்லது அதற்குப் பிற்பட்ட காலத்திலேயோ தொகுக்கப் பெற்றவை. இவற்றின் மேல் எல்லை இது என அறுதியிட்டுக் கூறத்தக்க சான்றில்லை. இப்பாடல்களைப் பாடிய புலவர் பலர் தம் பாக்களில் திருக்குறள் கருத்துகளையும் சொற்களையும் சொற்றொடர்களையும் ஆண்டுள்ள உண்மை,[7] சங்கநூற் பயிற்சியுடையார்க்கு நன்கு விளங்கும்.

இடச்சுருக்கம் கருதி, ஒவ்வொரு நூலுக்கும் சில எடுத்துக்காட்டுகளைக் காட்டிச் செல்லுதலே சாலும்.

**நற்றிணை**

1. ''நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
   வானின் றமையா தொழுக்கு.'' (குறள்-20)

---

7. திருக்குறட் கருத்துகளையும் தொடர்களையும் சொற்களையும் சங்கப் புலவர்கள் ஆண்டனர் என்பதற்கு மாறாக, சங்கப் புலவர்தம் பாக்களை நன்றாகப் பயின்று அக்கருத்துகளைத் திருவள்ளுவர் தமது அறநூலில் பெய்து வைத்தார் என்று ஏன் கொள்ளலாகாது? அங்ஙனம் கொள்ளின், திருவள்ளுவர் சாத்தனார் காலத்திற்கு

''நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி...'' (நற்றிணை-1)

2. ''நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்டார்ப் பவர்க்கு.'' (குறள்-791)

''......................பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே.''
(நற்றிணை-32)

3. ''பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.'' (குறள்-580)

---

முன்னும், சங்கப் புலவர்க்குப் பின்னும் வாழ்ந்தவராகக் கொள்ளலாமே என்று சிலர் கருதலாம்.

புலவர் பலர் ஓர் அறநூலிலிருந்து கருத்துகளை எடுத்துத் தம் பாக்களில் பயன்படுத்தலே பெருவழக்குடையது. அங்ஙனம் பயன்படுத்துவோர் அறநூல் மேற்கோளை அப்படியே கையாளலும், அதனைப் பல அடிகளால் விரித்துக் கூறலுமே இயல்பு. தொகை நூல்களில் இந்த முறையினைக் காணலாம். திருக்குறள் இரண்டடிகளால் இயன்றது. சங்ககாலப் புலவர்களோ, இரண்டடிக் (குறட்) கருத்துகளைப் பல அடிகளில் விளக்கிக் கூறியுள்ளனர். இந்த உண்மையை நன்கு உளங்கொள்ளின், திருக்குறள் கருத்துகளையே பின் வந்த சங்ககாலப் புலவர் கையாண்டனர் என்பதைத் தெளியலாம்.

மேலும், ''அறம் பாடிற்றே'' என்று தெளிவாகச் சங்ககாலப் புலவர் தம் பாடலுள் சுட்டியிருத்தல் கவனிக்கத்தக்கது. வடமொழியிலுள்ள தர்ம சூத்திரங்கள் உரைநடையில் இயன்றவையே தவிரப் பாட்டால் இயன்றவையல்ல. பாட்டாலியன்ற பழைமையையும் பெருமையையும் உடைய அறநூல் திருக்குறள் ஒன்றே யாதலின், அதனையே புலவர் சுட்டினாரெனக் கொள்ளுதல் ஏற்புடையது. எனவே, சங்ககாலத்திலேயே திருக்குறள் சங்கப் புலவர் பாராட்டுக்கு உரியதாக இருந்தது எனக் கோடலே ஏற்புடைத்து.

''முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்.'' (நற்றிணை-355)

குறுந்தொகை

1. ''மலரினும் மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.'' (குறள்-1289)

''ஐதே காமம்''—காமநோய் நுண்ணியது; மெல்லியது)
(குறுந்தொகை-217)

2. ''பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.'' (குறள்-805)

''பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ.''
(குறுந்தொகை-230)

3. ''வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.'' (குறள்-1261)

''வீங்கிழை நெகிழ விம்மி யீங்கே
எறிகட் பேதுற லாய்கோ டிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்......''
(குறுந்தொகை-358)

பதிற்றுப்பத்து

1. ''நின் மறங்கூறு குழாத்தர்,'' (நான்காம் பத்து, 9.)
வீரர், தம் தலைவரது வீரத்தையே எடுத்தோதி மேம்படுதல் இயல்பு. இதனை,

''என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.''

என்று வீரர் தம் தலைவனது சிறப்பைக் கூறும் குறளில் (771) காண்க.

2. ''தொலையாக் கொள்கைச் சுற்றத்தார்.''
(ஏழாம் பத்து, 10)

தம்மால் சுற்றப்பட்ட தலைவன் செல்வம், வலிமை முதலியன அற்றபோதும், அவனை நீங்காது பழைமை பாராட்டும் பண்பினர் ஆதலின் சுற்றத்தார் இங்ஙனம் சிறப்பிக்கப்பட்டனர். இக்கருத்தை,

''பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.''

என்னும் குறளில் (521) காண்க.

3. ''நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலி னுண்டென் னுயிர்.'' (குறள்-1213)

''கனவினும் பிரியா வுறையுளொடு...
மீனொடு புரையுங் கற்பின்
வாணுதல் அரிவை......'' (ஒன்பதாம் பத்து-9)

பரிபாடல்

1. ''காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.'' (குறள்-1251)

''காமக் கணிச்சியாற் கையறவு வட்டித்துச்
சேமத் திரைவீழ்த்துச் சென்றமளி சேர்குவோர்.''
(பரிபாடல் 10, வரிகள் 34-35)

2. ''இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.'' (குறள்-223)

''இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்
அல்லது வெஃகி வினைசெய்வார்.''
(பரிபாடல் 10, வரிகள் 87-88)

3. ''ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.'' (குறள்-581)

''புடைவரு சூழல் புலமாண் வழுதி
மடமயி லோரும் அனையவ ரோடுங்
கடனறி காரியக் கண்ணவ ரோடுநின்
சூருறை குன்றிற் றடவரை யேறி.''
(பரிபாடல் 19, வரிகள் 20-24)

கலித்தொகை

1. ''காமமும் நாணு முயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து.'' (குறள்-1163)

''நலிதரும் காமமுங் கௌவையும் என்றிவ்
வலிதின் உயிர்காவாத் தூங்கியாங் கென்னை
நலியும் விழுமம் இரண்டு.'' (கலி-142)

2. ''காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி.'' (குறள்-1131)

''காமக் கடும்பகையிற் றோன்றினேற் கேமம்
எழினுத லீத்தவிம் மா.'' (கலி-139)

3. ''குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.'' (குறள்-549)

''குடிபுறங் காத்தோம்புஞ் செங்கோலான் வியன்றானை
விடுவழி விடுவழி சென்றாங்கவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றாற் பசப்பே.''
(கலி-130)

4. ''துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து'' (குறள்-1218)

''தெற்றெனக் கண்ணுள்ளே தோன்ற இமையெடுத்துப்
பற்றுவென் என்றியான் விழிக்குங்கால் மற்றுமென்
நெஞ்சத்துள் ளோடி யொளித்தாங்கே துஞ்சாநோய்
செய்யும் அறனிலவன்.'' (கலி-144)

அகநானூறு

1. ''மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.'' (குறள்-60)

''கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டி......'' (அகநானூறு-184)

2. ''தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு.'' (குறள்-1103)

''செய்வுறு விளங்கிழைப் பொலிந்த தோள்சேர்பு
எய்திய கனைதுயில் ஏற்றொறுந் திருகி
மெய்புகு வன்ன கைகவர் முயக்கின்
மிகுதிகண் டன்றோ இலனே.'' (அகநானூறு-379)

3. ''செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.'' (குறள்-1151)

''வருவீர் ஆகுதல் உரைமின் மன்னோ
.........................................
நின்றாங்குப் பெயருங் கானஞ்
சென்றோர் மன்னென இருக்கிற் போர்க்கே.''
(அகநானூறு-387)

புறநானூறு

1. ''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு.'' (குறள்-31)

''அறத்தான் வருவதே யின்பம்மற் றெல்லாம்
புறத்த புகழு மில.'' (குறள்-39)

''சிறப்புடைமரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல.'' (புறம்-31)

2\. ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'' (குறள்-110)

''நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ.'' (புறம்-34)

3\. ''பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.'' (குறள்-528)

''வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.''
(புறம்-121)

4\. ''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.'' (குறள்-69)

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
..................................................
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.'' (புறம்-278)

பத்துப் பாட்டு

1\. ''பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.'' (குறள்-528)

''வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த''
(சிறுபாணாற்றுப்படை, வரிகள் 217-218)

2\. ''ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல(து)
ஊதியம் இல்லை உயிர்க்கு.'' (குறள்-231)

''உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மே னிற்கும் புகழ்.'' (குறள்-232)

''..........................................விழுநிதி
ஈதல் உள்ளமோ டிசைவேட் குவையே.''
(மதுரைக்காஞ்சி, வரிகள் 204-205)

3. ''வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.'' (குறள்-85)

''விருந்துண் டெஞ்சிய மிச்சில் பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவதென் றாங்கு.''
(குறிஞ்சிப் பாட்டு, வரிகள் 206-207)

இங்ஙனம் குறட்பாக்களையும் அவற்றின் தொடர்களையும் கருத்துகளையும் தம் பாக்களில் எடுத்தாண்டவர்கள் பல்வேறிடத்தவர்-பல்வேறு காலத்தவர் ஆதலின், அவர்தம் காலத்திற்கும் முன்னரே திருக்குறள் அறப்பெரு நூலாக நாட்டில் வழக்குப் பெற்றிருந்தது என்னும் உண்மை தெற்றென விளங்கும்.

**சிலப்பதிகாரமும் திருக்குறளும்**

சிலப்பதிகாரத்திலும் பல இடங்களில் திருக்குறட் சொற்களும் தொடர்களும் கருத்துகளும் பயின்று வருகின்றன. அவற்றுள் இரண்டினைக் காண்க :

1. ''பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்'' (குறள்-319)

''முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிகாண்''
(சிலப்பதிகாரம்—வஞ்சினமாலை)

2. ''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.'' (குறள்-55)

''தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்.''
(சிலப்பதிகாரம்-கட்டுரை காதை)

இங்ஙனமே சங்க காலத்திற்குப் பிற்பட்ட பெருங் கதை,[8] சைவத் திருமுறைகள், ஆழ்வார்களின் அருட் பாடல்கள் முதலிய அனைத்திலும் குறட்பாக்களும் அவற்றின் தொடர்களும் கருத்துகளும் மிகப் பலவாகக் கையாளப் பட்டுள்ளன. இவை அனைத்தையும் நோக்க, இன்றுள்ள சங்க நூற் பாடல்கள் முதல், பின்னூல்கள் அனைத்திற்குமே திருக்குறள் போற்றத்தக்க அறநூலாய் விளங்கி வந்தது என்பது எளிதில் புலனாகும்.

**திருவள்ளுவர் காலம்**

ஆயினும், திருவள்ளுவர் ஏறக்குறைய எந்த நூற்றாண் டைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்னுங் கேள்வி எழுதல் இயல்பு. அதற்கு ஒருவாறு விடை காணல் நமது கடமை யாகும்.

1. திருவள்ளுவர் காலம் சங்க காலத்தின் முற்பகுதி யைச் சேர்ந்தது என்று கூறுவோரும், சங்க காலத்திற்குப் பிற்பட்ட காலத்தது என்று கூறுவோரும், இன்றுள்ள சங்கப் பாடல்களிற் பல ஏறத்தாழக் கி. பி. முதலிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை என்பதை ஒப்புகின்றனர். இதை நோக்க, நாம் இதுகாறும் கண்ட சான்றுகளைக் கொண்டு, **திருவள்ளுவர் காலம் இம்முதலிரண்டு நூற் றாண்டு கட்கும் முற்பட்டதெனக் கருதலாம்.**

2. **ககந்தன்[9]** என்ற பழைய சோழ அரசன் காலத்தி லேயே திருக்குறள் அறிவைப் பொது மக்களிடம் சதுக்கப்

---

8. குணாட்டியர் பைசாச மொழியில் செய்த பிருகத் கதையைக் கி. பி. 6ஆம் நூற்றாண்டின் இடையில் கங்க நாட்டு அரசனாக இருந்த துர்விநீதன் வடமொழியில் இயற்றி னான். அதனைப் பின்பற்றியே கொங்கு வேளிர் என்பவர் தமிழில் பெருங்கதையைப் பாடியுள்ளார். எனவே, அந் நூலின் மேல் எல்லை ஏறத்தாழக் கி. பி. 7ஆம் நூற்றாண்டு என்னலாம்.

9. இப்பெயர் அப்பண்டைக்காலச் சோழனுக்கு வழங்கிய தென்பது ஐயத்திற்குரியது.

பூதம் எதிர்பார்த்தது என்று கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சாத்தனார் கூறுவதால்[10] திருக்குறளின் பழைமை நன்கு புலனாகும். ஆகவே, வரலாற்றின் துணையைக் கொண்டு காலம் கூறமுடியாத ககந்தனுக்கும் முற்பட்டது திருக்குறள் எனக் கருத இடமுண்டாகிறது.

3. திருக்குறளைப் பாராட்டிச் சங்கப் புலவர்கள் பாடியனவாகக் கருதப்படும், 'திருவள்ளுவ மாலை' ஆராய்ச்சிக்குரியது. அப்புலவர்கள் பாடிய தொகைநூற் பாக்களை ஆராயின், அவர்கள் பல்வேறு காலத்தவர் என்பது அறியக் கிடக்கின்றது. எனவே, பல்வேறு காலத்தில் வாழ்ந்த புலவர் பாடிய பாக்கள், பிற்காலத்தில் புறநானூறு போன்ற தொகை நூல்களாகத் தொகுக்கப்பட்டாற்போல, பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர் பலர் திருக்குறளைப் பாராட்டிப்பாடிய பாக்களையும் பிற்காலத்தவர் 'திருவள்ளுவ மாலை' என்னும் தலைப்பில் தொகுத்தனர் என்றே கருதுதல் பொருந்தும். அத்திருவள்ளுவ மாலையில் காணப்படும் பழம் புலவர்க்கு, 'வள்ளுவர் சம காலத்தவர்' என்று கொள்ளுதலினும், அவர்க்கு முற்பட்டவராகக் கொள்வதே சால்புடைத்தாம். "புலவர் எவரும் தம் காலத்தவரால் தலைநின்ற தேவநாவலராய் மதிக்கப்படும் வழக்கம் யாண்டும்இல்லை. பெரும்பாலும் சமகாலத்தவரால் அவமதிப்பும், தாமியற்றிய நூலின் மெய்ப்பெரு வலியால் பிற்காலத்தவரால் மேம்பாடும் அடைவதே புலவர் உலகியல்பு. தெய்வப் பாவலராக வள்ளுவரைச்

---

10. சாத்தனார் தாமறிந்த குறட்பாவைச் சதுக்கப் பூதத்தின் வாயிலாகத் தெரிவித்தாரே யன்றி வேறன்று எனக் கருதுவோரும் உளர். அங்ஙனம் சாத்தனார் கூறியிருப்பரேல், அது காலவழு (Anachronism) எனப்படும். மணிமேகலைக்கு முற்பட்ட சங்கப் பாடல்களிலேயே குறட் கருத்துகளும் சொற்களும் ஆளப்பட்டிருத்தலின், சாத்தனார் கூறியிருத்தல் காலவழு என்னும் குற்றத்தின்பாற்படாது எனக் கொள்ளலாம்.

சங்கப் பழம் புலவர்கள் கூறுவதால், அவர்தமக்கு வள்ளுவர் நீண்ட காலத்துக்கு முற்பட்டவராகவும், அவர் அறநூலின் இறவாச் சிறப்பு அங்கீகரிக்கப்படுவதற்குப் போதிய அவகாசம் அக்குறளுக்கும் அதன் அடிகளைப் பாராட்டி எடுத்தாளும் சங்கப் பனுவல்களுக்கும் இடையே ஏற்பட்டிருத்தல் வேண்டும்.' '[11]

4. கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த கௌடில்யர் இயற்றிய பொருள் நூலில் கண்ட சில செய்திகளும் திருக்குறள் பொருட்பால் பகுதிகள் சிலவும் கருத்தில் ஒன்றுபட்டிருத்தலால், திருவள்ளுவர் கௌடில்யரது பொருள் நூலைப் படித்திருக்கலாம் என்று ஒருசார் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இங்ஙனம் கொண்டு, **திருவள்ளுவர் காலம் கி. மு. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு உட்பட்டதாகலாம்** எனக் கூறுகின்றனர்.[12]

---

11. நாவலர் சோமசுந்தர பாரதியார், திருவள்ளுவர், பக்கம், 4.

12. (1) திருக்குறளில் காணப்படும் ஒரு சில சொற்களையும், வடமொழிச் சொற்களையும், தொடர்களையும் கொண்டும், குறளில் காணப்படும் கருத்துகள் சில வடமொழி நூல்களில் காணப்படுதல் கொண்டும், குறள் மேலே கூறப்பெற்ற சங்க காலத்திற்கும் பிந்தியது என்றும் கூறும் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் கூற்றும், அதனைப் பேராசிரியரும் பெருநாவலரும் ஆகிய **டாக்டர் சோமசுந்தர பாரதியாரவர்களும்**, திருப்பதி கீழ்க்கலை ஆராய்ச்சிக் கூடத்துத் தமிழாராய்ச்சித்துறை அறிஞரான திரு. பழநியப்ப பிள்ளையவர்களும் மறுத்து எழுதியுள்ள கட்டுரைகளும் எனது ''திருவள்ளுவர் காலம்'' என்னும் தனி நூலில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்தல் நலம்.

(2) **V. R. R. Dikshitar, Studies in Tamil Literature and History, pp.** 133, 150—176.

5. திருவள்ளுவர் தொல்காப்பியத்தை வரம்பாகக் கொண்டே திருக்குறளை இயற்றினார் என்பதற்குப் பல சான்றுகள் காட்டலாம். அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க:

(1) தொல்காப்பியர், 'அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று முதற்பொருள்கள்' என்று செய்யுளியலில் ஒரு நூற்பாவில் (102) கூறியுள்ளார்.

> ''அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
> மும்முதற் பொருட்கும்உரிய வென்ப.''

திருவள்ளுவர் இம்மூன்று முதற் பொருள்களை விளக்கவே திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று முப்பாலாக வகுத்தமைத்தார்.

அறத்தினால் பொருளை ஈட்டி, அப்பொருளால் இன்பம் நுகர்தலே இவ்வுலக வாழ்வின் பயன் என்பது பழந்தமிழ்ச் சான்றோர் கொள்கை. தொல்காப்பியர் இக் கொள்கையையே தம் நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். திருவள்ளுவர் அதனையே பின்பற்றினார்.

(2) தொல்காப்பியர்,

> ''எழுத்தெனப்படுப
> அகரமுதல்
> னகர விறுவாய்'' (எழுத்ததிகாரம்—1)

என்று தமது நூலைத் தொடங்கினார். திருவள்ளுவர், ''அகரமுதல எழுத்தெல்லாம்'' என்று தொடங்கி, ''கூடி முயங்கப் பெறின்'' என்று னகர ஒற்றோடு திருக்குறளை முடித்தார்.

(3) தொல்காப்பியர்,

> ''அருள்முந் துறுத்த அன்புபொழி கிளவி
> பொருள்பட மொழிதல் கிழவோட் குரித்தே''

என்று கற்பியலில் நூற்பா ஒன்று (20) செய்தார். திருவள்ளுவர் இந்நூற்பாவின் முதலடிப்பொருளை ''அருளென்னும் அன்பீன் குழவி'' என ஒரு குறளிற் குறித்திருத்தல் கவனிக்கத்தகும்.

(4) தொல்காப்பியர்,

''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''

என்று செய்யுளியலில் (171) கூறியுள்ளார்.

திருவள்ளுவர்,

''நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்''

எனப்பாடியுள்ளார்.

இத்தகைய ஒருமைப்பாடுகளைக் கண்டே நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார், **திருக்குறள் தொல்காப்பியத்தை அடுத்துச் செய்யப்பட்டதாதல் வேண்டும்** என்று கூறியுள்ளார்.[13]

6. சிறந்த கடல் வாணிகத்தில் ஈடுபட்ட ஏலேலசிங்கர் என்பவர் திருவள்ளுவர் நண்பர் என்று செவிவழிச் செய்தி கூறுகிறது. அந்த ஏலேல சிங்கர் இலங்கையை வென்று அரசாண்ட தமிழனான ஏழாரனாக இருக்கலாம் என்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். அஃது உண்மையாயின் **திருவள்ளுவர் காலம் ஏழாரன் காலமான கி. மு. இரண்டாம் நூற்றாண்டாக இருத்தல் கூடும்.**[14]

இவை அனைத்தையும் நோக்க, திருவள்ளுவர் இன்ன நூற்றாண்டினர் என்று உறுதியாகக் கூறத்தக்க சான்றுகள்

13. திருவள்ளுவர் (ஆங்கில நூல்), பக் 5—18.

14. History of Ceylon, Vol. I, Part I, P. 207.

கிடைக்கும்வரை, அவர் தொல்காப்பியரை அடுத்துக் கிறிஸ்துப்பெருமானுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் என்று கூறுதலே பொருத்தம் என்பது தெரிகிறது.

## திருக்குறளுக்கு மூல நூல்கள்

'திருக்குறள் இன்றுள்ள சங்கப் பாக்கட்கு முற்பட்டதாயின், அதற்குரிய மூல நூல்கள் யாவை?' என்னும் கேள்வி அடுத்து எழுவதாகும்.

தொல்காப்பியர் காலம் கி. மு. 4ஆம் நூற்றாண்டு என்பதும், தொல்காப்பியத்திற்கு முன்னரும் சமகாலத்திலும் இன்றுள்ள சங்கப் பாக்களுக்கு முன்னரே இலக்கண ஆசிரியர் பலர் இருந்தனர் என்பதும், இலக்கிய நூல்கள் பல இருந்தன என்பதும் சென்ற பகுதியிற் கூறப்பட்டன. ''இவற்றால் தொல்காப்பியனார் தம் இலக்கணத்திற்குக் கருதிய இலக்கியங்கள் எத்துணையோ பல, அவர்க்கு முன்பே இத் தமிழ்நாட்டு வழங்கின என்றே ஒருதலையாகத் துணியலாம்.[15]

எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுதல் போல இலக்கியத்திலிருந்து எடுக்கப்படுவது இலக்கணம். ஆதலால், தொல்காப்பியத்திற்கு முற்பட்ட இலக்கண நூல்களுக்குக் கருவூலங்களாகப் பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தோற்றமன்றோ? அவை பரந்துபட்ட காலத்தினவாதல் வேண்டும். அவற்றுள் சிலவே இறையனார் களவியலுரை முதலியவற்றில் பெயரளவில் சுட்டப்படும் நூல்கள். அப்பழைய இலக்கிய நூல்களே அறம், பொருள், இன்பம் பற்றிய பல குறிப்புகளைத் திருக்குறளுக்கு உதவியிருக்கலாம்.

மிகப்பல நூற்றாண்டுகட்கு முன்னிருந்து தமிழகத்தை ஆண்டுவந்த சேர, சோழ, பாண்டியருடைய ஆட்சிமுறை

---

15. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 273.

களைக் கொண்டும், சான்றோர் வரைந்த மேற்சொன்ன பண்டை இலக்கியங்களைக் கொண்டும் உலகத்தார் அனை வரும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் முறையில் திருவள்ளுவர் தம் அற நூலைச் செய்து முடித்தனர் எனக் கொள்ளுதலே இதுகாறும் கண்ட உண்மைகளை நோக்கப் பொருத்தமாகக் காணப்படுகிறது.

முடிவுரை

இதுகாறும் பேசப்பட்ட உண்மைகளால், (1) தொல் காப்பியத்துக்குப் பின்பு எழுந்த நூல் திருக்குறள் என்பதும், (2) தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி. மு. 4ஆம் நூற் றாண்டு என அறிஞர் கருதுவதால், திருக்குறள் கி.மு. 4ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்பதும், (3) கி. பி. முத லிரண்டு நூற்றாண்டுகளைச் சேர்ந்தனவாகச் சிலரால் கருதப் படும் பெரும்பாலான தொகை நூற்பாக்களிலும், சிலப்பதி காரம் மணிமேகலை எனப்படும் காவியங்களிலும் குறட்பாக் களின் சொற்களும் தொடர்களும் கருத்துகளும் ஆளப் பட்டிருத்தலின், அப்பாக்களுக்கு (கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகட்கு) முற்பட்டது திருக்குறள் என்பதும் தெளி யலாம். தெளியவே, வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில், **திருவள்ளுவர் காலம் ஏறத்தாழக் கி. மு. 1 முதல் 300க்கு உட்பட்டது** என்று கோடலே அமைவுடையதாகும்.

## (2) திருக்குறட் சிறப்பு

திருவள்ளுவர் தம் காலத்தில் வழக்கில் இருந்த பல் வேறு தமிழ் இலக்கிய நூல்களையும், வழி வழியாக வந்த தமிழர் அரசியல் நெறியையும் நன்கு அறிந்தே திருக்குறள் நூலைச் செய்தவராவர். இந்நூற் கருத்துகள் மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. ஆதலின் நம் நாட்ட வரும் பிறநாட்டவரும் இதனைத் தத்தம் மொழிகளில் பெயர்த்து எழுதி வைத்துள்ளனர்.[16] மக்களாய்ப் பிறந்த

---

16. வீரமாமுனிவர், போப்பையர் முதலிய மேனாட்டுத் தமிழ் அறிஞர் இலத்தீன், செருமன், பிரெஞ்சு, ஆங்கிலம்

வர்க்குக் கல்வி கற்றல், சமுதாயத்தில் பழகுதல், கைக் கொள்ள வேண்டுவன, கைவிட வேண்டுவன, மனை வாழ்க்கை, இல்வாழ்க்கைச் சிறப்பு, உழுதொழில், வாணிகம் முதலியன இன்றியமையாதவை அல்லவா? இவற்றை வற்புறுத்திக் கூறும் சிறப்புடைமையால்தான் திருக்குறள் பண்டு தொட்டுப் பௌத்த சமயப்புலவராலும், சமண சமயப் புலவ ராலும், சைவ வைணவப் புலவர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது. பின்வந்த கிறித்தவப் புலவர்களும், முஸ்லிம் புலவர்களும் இந்நூற் கருத்துகளையும் சொற் களையும் சொற்றொடர்களையும் தங்கள் செய்யுட்களில் பயன்படுத்திக்கொண்டனர்.

வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களுள் **வெண்பா** மிகச் சிறந்தது. இவ் வெண்பாவில் மிகச் சிறிய வகையினது **குறள் வெண்பா** என்பது. இஃது இரண்டே அடிகளைக் கொண்டது. இரண்டே அடிகளில் விழுமிய கருத்து ஒன்றை நன் முறையில் கூறுவதென்பது எளிதான செயலன்று. பேராற்றல் மிகுந்த புலவரே இதனைச் செய்யவல்லவர். இதி லிருந்தே இதன் அருமைப் பாட்டினை அறியலாம். இத் தகைய அரிய செயலில் ஈடுபட்டு வெற்றிகண்ட பெருநாவ லரை நாம் எவ்வாறு பாராட்டுவது!

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கும் மனிதனுக்கு இன்றியமையாதவை. இவற்றைப் பற்றி

---

முதலிய மேனாட்டு மொழிகளில் திருக்குறளை மொழி பெயர்த்துள்ளனர். நமது நாட்டில் திரு. எம். எஸ். பூர்ண லிங்கம் பிள்ளை, திரு. எஸ். எம். மைக்கேல், திரு. வி. ஆர். இராமசந்திர தீட்சிதர், திரு. எம். ஆர். இராசகோபால ஐயங்கார். திரு.வ.வே.சு.ஐயர், திரு. ஜான் லாசரஸ் ஆகிய அறிஞர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். தெலுங்கு, வங்கம், கன்னடம், இந்தி முதலிய நம் நாட்டு மொழிகளிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மக்களுக்குச் சொல்ல வேண்டுவது கற்றவர் கடமையாகும். மனிதன் பிறந்து வளர்ந்து கல்வி கற்று நேர்மையாக வாழ்வை நடத்தச் சில பண்புகள் அவனுக்குத் தேவைப் படுகின்றன. அறத்துப்பால் இப் பண்புகளை எடுத்து இயம்புகின்றது. வளர்ச்சியுற்ற இளைஞன் பல துறை அலுவல்களில் ஈடுபடுகிறான். சமுதாயம், நாடு, அரசியல் என்பனபற்றி அவன் பல செய்திகளை அறிவது இன்றியமை யாதது. ஆதலின் அவைபற்றிய விளக்கம் பொருட்பாலில் பேசப்படுகின்றது.

இளைஞன் காதல் வாழ்வை மேற்கொண்டு காதலியோடு மனைவாழ்வை மாண்புற நடத்தச் சில உண்மைகள் தேவைப் படுகின்றன. அவ்வுண்மைகளைத் திறம்பட விளக்குவதே காமத்துப் பால். வீடு என்பது பலவகைப் பற்றுகளையும் விடுதல் என்று பொருள்படும். இளமை முதல் நேர்மையாக வாழ்க்கை நடத்திவரும் ஒருவன் தன் முதுமைக் காலத்தில் தன் குடும்பப் பொறுப்பைத் தன் மக்களிடம் ஒப்படைத்துக் குடும்பப் பொறுப்பிலிருந்து விலகி நின்று தூய உள்ளத் தோடு தன் வாழ்நாட்களைக் கழிப்பதை 'வீடு' என்று சொல்லலாம். இவ்வுண்மையை உணர்ந்தே, "இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு," என்று ஔவையாரும் உரைத் தருளினார்.

உலகில் இல்லறத்தில் வாழ்பவர் பலர்; இளமை முதலே துறவற நெறியை மேற்கொண்டு வாழ்வோர் மிகச் சிலர். அச்சிலரும் சமுதாய உறுப்பினராதலின் அவர்தம் சிறப்பையும் வள்ளுவர் சில இடங்களில் குறித்துள்ளார். எனவே, திருக்குறள் இல்லறம்—துறவறம் என்னும் இரண்டு நெறிகளையும் பற்றிப் பேசுகின்றது என்று கூறுதல் பொருத்தமாகும்.

திருக்குறளில் கூறப்பெறாத பொருளில்லை; செய்தி யில்லை. திருக்குறளில் அனிச்சம், மூங்கில் மரம், முள் மரம், நச்சு மரம், வற்றல் மரம், மருந்து மரம்; பழமரம் முதலிய மர

வகைகளும், தாமரை, குவளை முதலிய நீர்ப் பூக்களும், நெருஞ்சி, பசும்புல் முதலிய படர் செடிகளும், கரும்பு, எள் முதலிய செடி வகைகளும், குன்றி ஆகிய கொடி வகைகளும் பேசப்படுகின்றன. விலங்குகளில் யானை, பசு, காளை, ஆடு, நரி, புலி, மான் முதலியன குறிக்கப்பட்டுள்ளன. ஆமை, முதலை, மீன் முதலிய நீர் வாழ்வனவும், காகம், கொக்கு, கோட்டான் முதலிய பறவைகளும் குறிக்கப்பட்டுள்ளன. ஆண் மக்களின் இயல்புகளும் பெண்மக்களின் இயல்புகளும் பேசப்பட்டுள்ளன. உழவு, வாணிகம், மக்களுடைய பழக்க வழக்கங்கள், ஆசிரமப் பாகுபாடுகள், சடங்குகள், போர்க்கருவிகள், உணவு, ஊர்திகள், பலவகை விளையாட்டுகள், இசை, ஓவியம், சிற்பம் முதலிய கலைகள், உடை, அளவைப் பெயர்கள்; ஊருணி முதலிய நீர் நிலைகள், உடல் நலத்திற்கு உரியவை—எனப் பலதிறப்பட்ட செய்திகள் திருக்குறளுள் அடங்கியுள்ளன. திருமால் நெடுமாலாய் உலகளந்த வரலாறு, ததீசி வரலாறு முதலிய புராண வரலாறுகளைக் குறிக்கும் இடங்கள் இதனுள் இடம் பெற்றுள்ளன. இந்நூலில் ஏறத்தாழ 50 வடசொற்கள் இருக்கின்றன.[17]

## உரையாசிரியர்

உலகப் பொதுமறையாகிய திருக்குறளுக்கு உரை கண்டவர் பதின்மர் என்று பழம் பாடல் ஒன்று தெரிவிக்கின்றது. அவருள் இப்பொழுது அறியப் பெறுபவர் **மணக்குடவர், பரிதியார், காளிங்கர், பரிப் பெருமாள், பரிமேலழகர்** ஆகிய ஐவருமேயாவர். இவருள் பரிமேலழகர், தமது உரையில் மற்ற உரையாசிரியர் கூற்றுகளைச் சில இடங்களில் மறுத்துக் கூறியுள்ளமையால் மேலே கூறப்பெற்ற நால்வரினும் காலத்தால் பிற்பட்டவராவர். இவர் காலம் கி. பி. 13ஆம் நூற்றாண்டு என்று திரு மு. இராகவையங்கார் அவர்கள் கூறுவர்.[18]

---

17. திருக்குறள் உரைவளம், காமத்துப்பால், பக். 90.
18. சாஸனத் தமிழ்க்கவி சரிதம்; பக். 121—125.

அனைவர் உரையிலும் பரிமேலழகர் உரையே மிகச் சிறந்தது என்பது தமிழறிஞர் கருத்து. திருவள்ளுவருக்கும் இவ்வுரையாசிரியர்களுக்கும் இடையில் 1300 அல்லது 1400 ஆண்டுகள் கழிந்திருக்கலாம். திருவள்ளுவர் காலத்திற்கும் உரையாசிரியர் காலத்திற்கும் இடையில் ஏற்பட்ட சமுதாய மாறுதல்கள் பல; அரசியல் மாறுதல்கள் பல. வள்ளுவர் காலத்தில் சாதிகள் இல்லை. சாதிகள் பல்கிப் பெருகிய காலத்தில்—ஒரு சாதிக்கு ஒரு நீதி கூறிய காலத்தில்—வாழ்ந்த உரையாசிரியர்கள் முன்பு கூறப்பெற்ற தொல்காப்பிய உரையாசிரியர்கள் போலவே, தத்தம் சமயச் சார்பு பற்றியும் தம் காலநிலைக்கு ஏற்பவும் தாம் கற்ற நூல்களுக்கு ஏற்பவும் தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளுக்கு உரை வரைந்தனர் என்பதை நாம் நன்குணர்தல் வேண்டும். இந்த உண்மையை ஒவ்வொருவர் உரையும் நமக்கு அறிவுறுத்துகின்றது.

''ஐந்தவித்தான்'' என்று தொடங்கும் குறளுக்கும் ''தென்புலத்தார்'' என்று தொடங்கும் குறளுக்கும் பரிமேலழகர் வரைந்துள்ள உரையின் பொருந்தாமையே மேற்கூறிய உண்மையைப் புலப்படுத்துவதாகும். ஆதலின் திருக்குறளின் கருத்தை உள்ளவாறு அறிய விரும்புவோர் அவர் காலத்திலிருந்த சங்க நூல்களையும் சமய நூல்களையும் பிற நூல்களையும் நன்கு பயின்ற பின்னரே உரையாசிரியர்களின் உரைகளைப் படித்துக் குறளின் கருத்தைத் தெளிதல் நல்லது.

மேற்கூறப்பெற்ற உரைகளைத் தவிர இராமாநுச கவிராயர், கோ. வடிவேலுச் செட்டியார் முதலிய பெருமக்கள் எழுதிய உரைகளும் வெளிவந்துள்ளன. இக்காலத்தில் திருக்குறள் மிக்க ஏற்றம் பெற்றுள்ளது. யாண்டும் குறட்பாக்களும், குறட்கருத்துகளும் பேசப்படுகின்றன. இக்கால அறிஞர் சிலர் திருக்குறளுக்குத் தெளிவுரை எழுதியுள்ளனர். அவற்றுள் டாக்டர் மு. வரதராசனார் எழுதியுள்ள தெளிவுரை நூற்

படிகள் மட்டும் ஒரு இலட்சத்துக்குமேல் செலவாகியுள்ளன எனின், அத்தெளிவுரையின் எளிமையையும் சிறப்பையும் நன்குணரலாம்.

**தருமபுர ஆதீனத்துக் கயிலை-குரு மகா சந்நிதானம்** அவர்கள் பரிமேலழகர், மணக்குடவர், பரிப் பெருமாள், பரிதியார், காளிங்கர் ஆகிய ஐவருடைய உரையையும் ஒவ்வொரு குறளுக்கும் தந்து, **''திருக்குறள்—உரைவளம்''** என்னும் பெயரில் முப்பாலையும் மூன்று பெரிய நூல்களாக மகாவித்வான் தண்டபாணி தேசிகரைக் கொண்டு வெளியிட்டுள்ளனர். **திருப்பனந்தாள் காசிமடத்தார்** இம் முறையைப் பின்பற்றித் **'திருக்குறள்—உரைக்கொத்து'** என்னும் பெயரில் அடக்கவிலைப் பதிப்பாக முப்பால்களையும் மூன்று நூல்களாக வெளியிட்டுள்ளனர். திருக்குறளைப் பலர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். அண்மையில் **திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்** (பி. ஏ., பி.எல்.) அவர்கள் மிகப் பொருத்தமாக மொழி பெயர்த்துள்ளார்; ஆங்காங்கு விளக்கவுரையும் இக்காலத்திற்கேற்ற மேற்கோள் விளக்கமும் தந்துள்ளார். திருவள்ளுவர் கொண்டிருந்த கருத்துகளை இந்நூல் நன்கு வெளிப்படுத்துகின்றது என்னலாம். உலக நாட்டறிஞர்கள் திருக்குறளின் ஒப்பற்ற சிறப்பினை உள்ளவாறு அறிய இந்நூல் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை. அறிஞர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கட்குத் தமிழ் மக்களின் வாழ்த்தும் நன்றியும் உரியவாகும். இம் முயற்சிகள் அனைத்தும் மனமார வரவேற்கத் தக்கவை. இவை திருக்குறளின் சிறப்பைக் குன்றின் மீதிட்ட விளக்கென ஒளிரச் செய்பவை.

# 9. எட்டுத் தொகை

## (1) எட்டுத் தொகை

**எட்டுத்தொகை :** நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்களாம். இவை மேலே சொல்லப்பெற்ற பரந்துபட்ட காலத்தில் பல்வேறு புலவர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடப் பெற்றவை. இவை தொகுக்கப்பெற்ற காரணத்தால் '**தொகை நூல்கள்**' என்று பெயர் பெற்றன. இவற்றுள் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டும் புறப்பொருள் பற்றிய செய்திகளை நன்கு புலப்படுத்துவன. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை என்னும் ஐந்தும் அகப்பொருளாகிய இன்பத்துறை பற்றிய ஒழுக்க நிகழ்ச்சிகளை அழகுற எடுத்துக் கூறுவன. பரிபாடல் அகம், புறம் இரண்டையும் எடுத்துப் பேசுவது.

**வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா** எனப் பா நான்கு வகைப்படும். எட்டுத்தொகை நூல்களுள் பரிபாடல், கலித்தொகை ஒழிந்த ஆறின் பாடல்கள் **ஆசிரியப் பாவால்** இயன்றவை. ஆசிரியப்பா மூன்றடிச் சிறுமை உடையது; பலநூறு அடிகள் பெருமையுடையது. **கலித்தொகை** என்னும் நூற்பாடல்கள் கலிப்பாவினால் இயன்றவை. **பரிபாடல்** என்னும் நூற்பாக்கள் பரிபாடல் என்னும் பாவால் தொகுக்கப் பெற்றவை. பரிபாடலின் சிற்றெல்லை 25 அடி, பேரெல்லை நானூறு அடி.

**1. ஐங்குறுநூறு :** இது மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் உடைய பாடல்களைக் கொண்டது. இது மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்து

ஒழுக்கங்களுள் ஒவ்வொன்று பற்றியும் நூறு குறும் (சிறிய) பாக்களை உடையது; ஆதலால் **ஐங்குறுநூறு** எனப் பெயர் பெற்றது. இதன் பாக்களை நூலாகத் தொகுத்தவர் புலத் துறை முற்றிய **கூடலூர் கிழார்** என்பவர். இவரைக்கொண்டு இந்நூலைத் தொகுப்பித்தோன் **யானைகட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை** ஆவன். கூடலூர் கிழார் இம்மன்னன் இறப்பைப் பற்றி வருந்திப் பாடிய பாடல் ஒன்று புற நானூற்றில் (229) இடம் பெற்றுள்ளது. எனவே, புற நானூற்றுப் பாடல்கள் தொகுக்கப்படுவதற்கு முன்பே இச் சேர வேந்தன் காலத்தில் ஐங்குறுநூறு தொகுக்கப் பெற்றது என்பது தெரிகிறதன்றோ?

2. **குறுந்தொகை :** இந்நூலின் பாடல்கள் நானூறு. அவை நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடையவை. இந்நூலைத் தொகுத்தவன் **பூரிக்கோ** என்பவன். தொகுப்பித்தவர் இன்னவர் என்பது தெரியவில்லை. இந்நூல் ஐங்குறுநூற்றை அடுத்துத் தொகுக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. **நற்றிணை :** இது ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டடிப் பெருமையும் கொண்ட நானூறு பாடல்களை உடையது. இப்பாக்கள் **பன்னாடு தந்த மாறன் வழுதி** என்பவன் தொகுப்பித்தவையாகும். தொகுத்தவர் பெயர் தெரியவில்லை. இவன் பாடிய பாடல்கள் குறுந் தொகையிலும் (270) நற்றிணையிலும் (97, 301) இருப்பதைக்காண, இவன் சங்ககாலப் பாண்டிய வேந்தன் என்பது தெளிவு. எனவே, இந்நூலும் சங்ககால இறுதிக்குள் தொகுக்கப் பெற்றது எனக்கொள்வதே பொருத்தமாகும்.

4. **அகநானூறு :** இது பதின்மூன்றடிச் சிறுமையும் முப்பத்தோரடிப் பெருமையும் உடைய நானூறு பாக்களைக் கொண்ட தொகுப்பு நூல். இது 'நெடுந்தொகை' எனவும் கூறப்படுவதால் முன்பு தொகுக்கப்பட்ட மூன்று நூல்களுக்கும் பின்பு தொகுக்கப்பட்டது என்று கருதுதல் பொருத்தமாகும்.

இதனைத் தொகுத்தவன் உப்பூரிகுடி கிழார் மகன் **உருத்திர சன்மன்**; தொகுப்பித்தோன் **பாண்டியன் உக்கிரப் பெருவழுதி**. இவன் பாடிய பாடல்கள் அகநானூற்றிலும் (26) நற்றிணையிலும் (98) இடம் பெற்றுள்ளமையால் இவன் காலமும் சங்ககாலமேயாகும்.

5. **கலித்தொகை** : கலித்தொகையிலுள்ள பாலையைப் பெருங்கடுங்கோவும், குறிஞ்சியைக் கபிலரும், மருதத்தை மருதன் இளநாகனும், முல்லையைச் சோழன் நல்லுருத்திரனும், நெய்தலை நல்லந்துவனும் பாடினர் என்று வெண்பா ஒன்று விளம்புகின்றது. இவ்வெண்பா மிகவும் பிற்பட்டதென்றும், கலித்தொகை ஏடுகளில் காணப்படவில்லையென்றும், இந்நூலை இயற்றியவர் நல்லந்துவனார் என்ற புலவர் ஒருவரே என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.[1]

6. **பரிபாடல்** : பரிபாடல்களைத் தொகுத்தோர், தொகுப்பித்தோர் இன்னவர் என்பது தெரியவில்லை.

7. **பதிற்றுப்பத்து** : இது சேரவேந்தர் பதின்மரைப் பற்றியது. இதனைத் தொகுப்பித்தவர் இன்னவர் என்பது தெரியவில்லை; தொகுத்தவர் பெயரும் தெரியவில்லை. இதன் கண் முதல் பத்தும் இறுதிப் பத்தும் இல்லை. இறுதிப் பத்து யானைகட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைப் பற்றியதாக இருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர்.[2] இஃது உண்மையாயின், இவனது இறப்பைப் பற்றிய பாடலைக் கொண்ட புறநானூறு தொகுக்கப்படுவதற்கு முன்பே இந்நூல் தொகுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

8. **புறநானூறு** : புறநானூற்றுப் பாடல்களைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் இன்னவர் என்பது தெரியவில்லை.

---

1. Prof. S. Vaiyapuri Pillai, History of Tamil Language and Lilerature, p. 27.
2. Ibid. p. 26.

ஏறத்தாழப் புலவர் ஐந்நூற்றுவர் பாடிய பாக்கள் இந் நூல்களில் இடம் பெற்றுள்ளன. அந்நல்லிசைப் புலவர் தமிழகத்துப் பல ஊர்களைச் சேர்ந்தவர்; பல்வேறு தொழி லினர்; பல்வேறு காலத்தவர். அவருள் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை மூவேந்தரும் அரச மாதேவி யரும் இடம் பெற்றுள்ளனர். இவ்வாறே சிற்றரசரும் அவர் தம் மக்களும், அந்தணர், வணிகர், வேளாளர் முதலி யோரும், ஆயர், மறவர், குறவர் முதலிய நிலமக்களும் இடம் பெற்றுள்ளனர்.

இத்தொகைநூற் பாடல்கள் பலதிறப் பொருளை உடையன. அரசர்களின் போர்த்திறங்களையும் வெற்றிச் சிறப்பையும் விரித்துக் கூறும் பாக்கள் பல; பேரரசர் சிற்றரசர் முதலியோர் வள்ளன்மையை எடுத்துரைக்கும் செய்யுட்கள் பல; கல்வியின் சிறப்பு, நல்லொழுக்கம், ஆட்சிமுறை, நாகரிகம் முதலியவற்றை அறிவுரை முறையில் அறிவிப்பன சில. மறக்குடி மகளிர் சிறப்பைத் தெரிவிப்பன சில; காதல் வாழ்வை விளக்குவன பல; குறிஞ்சி, பாலை, நெய்தல், முல்லை, மருதம் என்னும் ஐந்திணை ஒழுக்கங் களை அழகுற எடுத்துக் கூறுவன பலவாகும். இயற்கைக் காட்சிகளை இன்பம் ததும்ப எடுத்துரைப்பன பல. இவற்றுள் புராண இதிகாசச் செய்திகளும், தமிழர் பழக்க வழக்கங்களும், வேற்று நாட்டுச் செய்திகள் சிலவும், வர லாற்றுக் குறிப்புகள் பலவும் ஆங்காங்கு இடம் பெற் றுள்ளன.

இவ்வெட்டுத் தொகை நூல்களுள் வரலாற்றுக் குறிப்பு களை மிகுதியாகவுடைய புறநானூற்றின் காலத்தை அறியின், நாம் ஏறத்தாழச் சங்க காலத்தை அறிந்தவ ராவோம். ஆதலின் முதற்கண் புறநானூற்றின் காலத்தை இங்கு ஆராய்வோம்.

## (2) புறநானூற்றின் காலம்

**முன்னுரை**

வரலாறு (History) என்பது எல்லா நாடுகளிலும் முதன் முதல் பாக்கள், கதைகள் வாயிலாகவே தோன்றியது. அப்பாக்களும் கதைகளும் காலஞ்சென்ற வீரர், அரசர், நல்லோர், தீயோர் இவர்தம் வரலாறுகளையோ வரலாறு களிற் காணத்தக்க சிறப்பான நிகழ்ச்சிகளையோ பற்றியன வாக இருந்தன. இங்ஙனம் முதன் முதலில் வரையப்பட்ட பாடல்களும் கதைகளும் பிற்கால அறிஞர்க்கு வரலாறு சுட்டும் அடிப்படையாக விளங்கின. மேல் நாட்டில் முதல் முதல் இனிய முறையில் வரலாறு எழுதத் தொடங்கிய ஆசிரியர் எரடோட்டஸ் (Herodotus) என்பவர். அவர் காலம் கி. மு. 5ஆம் நூற்றாண்டாகும்.[3]

பின்னர்ப் படிப்பினை பயக்கத்தக்க முறையில் வரலாறுகள் எழுந்தன. அங்ஙனம் வரைந்தாருள் முதல்வர் துசிடியஸ் என்பவர். இம்முறையில் எழுதப்பட்ட வரலாறே சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காவியம். ஆயின், முற் கூறியவை அரசர், அலுவலர், தலைவர் முதலியோர்களைப் பற்றிய அரிய நிகழ்ச்சிகளைக் கொண்ட வரலாறுகள் ஆகும், அவை இனிய செய்யுள் நடையிலும் உரை நடையிலும் யாக்கப் பெற்றவை. அத்தகைய வரலாற்று நூல்களை ஓரளவு ஒத்துக் காண்பன புறநானூற்றுப் பாக்கள் என்ன லாம். என்னை? சேர, சோழ, பாண்டியர் ஆகிய நெடுநில மன்னர், பாரி போன்ற குறுநில மன்னர், கோவூர் கிழார் போன்ற புலவர் ஆகியோர் வரலாறுகளைப் புறநானூற்றுப் பாடல்களைக் கொண்டே ஏறத்தாழ வரைந்து முடிக்கலாம் ஆதலின் என்க.

**புறநானூறு**

புறநானூற்றுப் பாடல்கள், பழங்கால நிகழ்ச்சிகளைப் பிற்காலத்தார் பாடி வைத்தவை போன்றவை அல்ல.

---

3. H.F.G. Teggart, Theory of History, pp. 18—22.

அவை புலவர் பலரால் தத்தம் கால அரசர், வள்ளல்கள் முதலியோரைப் பற்றிப் பாடப்பெற்றவை; அக்காலப் போர்களைப் பற்றியவை; அறம், பொருள், வீடு என்னும் மூன்றையும் பற்றியவை. ஆதலின், அவற்றுள் 'நம்பத் தகாதன' என்று ஒதுக்கித் தள்ளத்தக்க செய்திகள் இருத்தல் அருமையினும் அருமை.

சுருங்கக் கூறின், **புறநானூறு**, மிகப் பழைய காலத் தமிழ் மக்கள்-சிற்றரசர்-பேரரசர்-கொடையாளிகள்-புலவர்-வீரர் இவர்தம் வாழ்க்கைகளையும் நாகரிகப் பண்புகளையும் நன்கு விளக்கும் **வரலாற்று நூலாகும்**. அதனை நன்கு ஆராய்ந்து முறைப்பட வைத்து எழுதப்புகின், 'பண்டைத் தமிழக வரலாறு' என்னும் வரலாற்று நூலை ஒருவாறு எழுதி முடிக்கலாம். இது நிற்க.

அறம், பொருள், வீடு என்னும் புற ஒழுக்கம் பற்றிய நானூறு பாக்களின் தொகுதியே **புற-நானூறு** என்பது. இதில் உள்ள பாடல்களைப் பாடிய அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் முதலிய புலவர், பல்வேறு காலங்களில் வாழ்ந்தவர் ஆவர். இந்நூல் தொகுக்கப் பெற்ற பிற்காலத்தில் இப்புலவர் சிலருடைய பெயர்களே புலனாகவில்லை. ஆதலின் தொகுத்தவர்கள், பாவடிகளிற் பயின்று வரும் தொடர்களையும், பாக்களிற் காணப்படும் சிறப்பியல்புகளையும் கொண்டு தம் மனம் போனவாறு அடிக்குறிப்பில் புலவர் பெயர்களை, ஆக்கியிருத்தல் அறிவுடையார் அறிந்ததேயாகும். சான்றாக, ஒரூஉத்தனார், ஒருசிறைப் பெயரியனார், ஓரேர் உழவர், கூகைக் கோழியார், தொடித்தலை விழுத்தண்டினார், தும்பிசொகினனார், வெள்ளெருக்கிலையார், வெள்ளைமாளர் முதலிய பெயர்களைக் காண்க. மொழி ஆராய்ச்சியிற் புகினும், சில பாக்களின் நடை வேறுபட்டிருப்பதை நன்குணரலாம். செய்யுட்களிற் கூறப்பட்டுள்ள செய்திகளை நோக்கினும் இஃது உண்மையாகிறது.

தமிழர்க்கே உரிய தனிப்பட்ட நாகரிகப் பண்புகளும் அவருடன் பிற்காலத்தே கலந்த வடமொழியாளர்க்கே உரிய பண்புகளும் இந்நூற்கண் இடம் பெற்றுள்ளன; வேள்வி அந்தணர் முத்தீ, இதிகாச கதைகள், இந்திரன் பிரமன் பலராமன் முதலியோர் வழிபாடுகள் முதலியன புதியன வாய்த் தமிழகத்தில் நுழைந்தனவாகும். இராயசூயம் (இராஜ சூய யாகம்) வேட்ட பெருநற்கிள்ளி, பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி என்ற மன்னர்களைப் பற்றிய பாடல்கள் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. எனவே, தமிழ் மன்னர்கள் வேதவேள்விகளைச் செய்யத் தலைப்பட்டு விட்டனர் என்பது இத்தொடர்களினால் நன்கு புலனாகிறது. தமிழகத்தில் வேத ஒழுக்கமும் சிறிது சிறிதாகப் பரவத் தொடங்கியது என்பது தெளிவாகிறது. ஆகவே, சமயத் தொடர்பான வடசொற்கள் தமிழில் நுழையலாயின என்பது வெளிப்படை.

## புறநானூற்றின் காலம்

சங்க நூல்களின் இறுதிக் காலம் ஏறத்தாழக் கி. பி. 300 என்பது முன்பே பல இடங்களில் கூறப் பட்டுள்ளது. எனவே, புறநானூற்றுப் பாடல்களின் இறுதிக் கால எல்லையும் அதுவேயாகும். ஆதலால் புறப்பாடல் களின் காலப் பேரெல்லையைக் காண முயல்வது நமது கடமையாகும்.

இந்திய வரலாற்றோடு தொடர்பு கொண்ட சில நிகழ்ச்சி களும் பெயர்களும் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் பாரதப் போரில் உணவு கொடுத்தது, வால்மீகியார் என்பவரின் பாடல் புறநானூற்றில் காணப்படுவது, மோரியர் படை யெடுப்பு, கரிகாலன் இமயப்படையெடுப்பு என்பவை குறிக்கத் தக்கவை. இவற்றுள் ஒவ்வொன்றையும் பற்றி இங்கு ஆராய் வோம்.

1. பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்,

> ''அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
> நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
> ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
> பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்''

என்று புறப்பாடல் ஒன்றில் (2) பாராட்டப்பட்டுள்ளான். இச்சேரர் பெருந்தகை பாரதகாலத்தவன் என்று பொருள் படும்படி இப்பாடலுக்கு உரை கண்ட பழைய புலவர் எழுதியுள்ளார். தம் செய்யுட்களில் வரலாற்றுச் செய்திகளைப் புகுத்திப்பாடும் இயல்புடைய மாமூலனார் என்ற சங்ககாலப் புலவர்,

> ''துறக்க மெய்திய தொய்யா நல்லிசை
> முதியர்ப் பேணிய வுதியஞ் சேரல்
> பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை யிரும்பல்
> கூளிச் சுற்றங் குழீஇயிருந் தாங்கு''

என்று உதியன் சேரலாதன் பெருஞ்சோறு கொடுத்த திறத்தை அகநானூற்றுச் செய்யுள் ஒன்றில் (273) பாராட்டியுள்ளார்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் சிலப்பதிகாரத்தைச் செய்த இளங்கோவடிகள்,

> ''ஓரைவர் ஈரைம் பதின்மர் உடன்றெழுந்த
> போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
> சேரன் பொறையன் மலையன் திறம்பாடிக்
> கார்செய் குழலாட ஆடாமோ வூசல்
> கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ வூசல்''

என்று (காதை 29. செ. 24) புறநானூற்றில் கூறப்பெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பாடியுள்ளார். இளங்கோவடிகள் தமக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்து செயற்கரும் செயலைச் செய்த தமது முன்னோனை உளமாரப்

பாராட்டியுள்ளார் எனின், பாரதப்போர் நிகழ்ந்த காலத்தில் உதியன் சேரலாதன் செய்த செயற்கருஞ் செயல் (பெருஞ் சோறு வழங்கியமை) சேரமரபினராலும் சேரநாட்டுக் குடி மக்களாலும் வழிவழியாகப் போற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

பாரத நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலம் ஏறத்தாழக் கி. மு. 1400—800 என்பர் பேராசிரியர் ஆர். சி. டட்.[4] வேறு சில வரலாற்று ஆசிரியர் ஏறத்தாழக் கி. மு. 1000 என்பர்.[5] எனவே, பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் காலமும் ஏறத்தாழக் கி. மு. 1000 என்று கூறலாம். அவனை மேலே கண்டவாறு பாராட்டிப் பாடிய முரஞ்சியூர் முடிநாகனார்[6] முதற்சங்கப் புலவர் என்று களவியலுரை கூறுகின்றது. இடைச் சங்கத்தின் இறுதிக் காலம் தொல்காப்பியர் காலம் (கி. மு. 4ஆம் நூற்றாண்டு) என்பது முன்னரே கண்டோம் அல்லவா? எனவே, தலைச் சங்கப் புலவராகிய முடிநாகனார் காலம் ஏறத் தாழக் கி. மு. 1000 என்று கோடல் பொருத்த மாகும். இச் சேரலாதனும் முடிநாகராயரும் பாரத காலத்த வரே என்பதை மகாவித்துவான் ரா. இராகவையங்கார்

---

4. Ancient India, pp. 15—20.

5. R. Sathyanatha Aiyar, History of India, Vol. I., p. 45.

6. முடியில் நாகவுரு தரித்த நாகர்குல அரசர் என்பது தோன்ற 'முடிநாகராயர்' எனப்பட்டார். சேரர் மரபின ரான கொச்சி அரசர் கிளைகள் ஐந்தனுள் ஒன்றற்கு 'முரிஞியூர் தாய்வழி' என்பது பெயர். உதியஞ் சேரலைப் பாடிய இப் புலவர் பெருமானதுஊர் அம் முரிஞியூர் போலும். —மு. இராகவையங்கார், சேர வேந்தர் செய்யுட் கோவை I, பக். 2—3.

அவர்கள் தெளிவுற விளக்கி எழுதியிருத்தல் படித்து இன்புறத் தக்கது.[7]

வரலாற்றுப் பேராசிரியராகிய திரு. பி. டி. சீநிவாச அய்யங்கார், 'உதியன் சேரல் பாரத வரலாற்றைக் கதகளி போன்ற நடிப்பு நாடகமாக நடத்தி அதன் இறுதியில் நடித்தவர்க்கும் பொதுமக்களுக்கும் பெருஞ்சோறு வழங்கியிருத்தல் வேண்டும்' என்று கூறியுள்ளனர்.[8] இக் கருத்துத் தவறு என்பதை மகாவித்துவான் அவர்கள் 'தமிழ் வரலாறு' என்னும் தமது நூலில் தக்க காரணம் காட்டி மறுத்துள்ளார்.[9]

உதியன் சேரலின் முன்னோன் ஒருவன் பெருஞ்சோறு கொடுத்த செயலை முடிநாகனார், பின்னோனாகிய உதியன் சேரல்மீது ஏற்றிக் கூறினார் என்று கூறுவாரும் உளர்.[10] இங்ஙனம் கருதுவதும் தவறு என்பதை மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்.[11] உதியன் சேரல் சேர மன்னருள் காலத்தால் மிகவும் முற்பட்டவன் என்பதை நினைவூட்டவே புறநானூற்றில் அவனைப் பற்றிய பாடல் கடவுள் வாழ்த்தையடுத்து முதற் பாடலாக வைக்கப்பெற்றுள்ளது போலும்! இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு

7. தமிழ் வரலாறு, பக். 236—238.

8. History of the Tamils, pp. 491—494.

9. பக். 233.

10. K. A. N. Sastry, History of India, p. 113; History of S. India, p. 113; 'முன்னோன் செய்த செயல்' என்று இவரே ஒப்புக்கொள்வதால், பாரத காலத்தில் சேரர் இருந்தனர் என்பதை ஒப்புக்கொள்கிறார் என்பது இங்கு அறியத்தகும். எனவே, சேர, சோழ, பாண்டியர் பாரத காலத்துப் பழைமையுடையவர் என்பது கூறாமற் கூறியவாறாகும்.

11. தமிழ் வரலாறு, பக். 228—230.

குட்டுவன் ஆகிய இருவருக்கும் தந்தையான உதியஞ்சேரல் என்பவன் வேறாவான்.[12]

## 2. தருமபுத்திரன் (கி. மு. 1000)

'அறவோர் மகனே, மறவோர் செம்மால்' என்று புறப் பாட்டில் (366) **கோதமனார்** என்பவரால் பாடப்பெற்ற **தரும புத்திரன்** தமிழ் நாட்டு அரசனாகக் காண்கிலன். இவன், யம தருமன் மகன், பாண்டவருள் மூத்தவன் என்பதே பொருத்த மாகத் தெரிகிறது. பாரத வரலாறு ஏறத்தாழக் கி. மு. 1000த்தில் நடைபெற்றதாக முன்பு கொள்ளப் பெற்றது. இங்ஙனம் கொள்ளின், இப்புறப் பாட்டிற் கண்ட தரும புத்திரன், அவனைப் பாடிய கோதமனார்[13] ஆகிய இவர்தம் காலம் ஏறத்தாழக் கி. மு. 1000 என்னல் தவறாகாது, "......இவற்றால் வடநாட்டுப் பாண்டவர் ஐவர்க்கும் தமிழரசர்க்கும் பலவகையினும் தொடர்புண்மை நன்கு தெளியலாம். இத் தொடர்புண்மையால், கோதமனார் தரும புத்திரர்க்கு அறிவுறுத்தியதென்று நந்தமிழ்ப் பெருமக்கள் துணிந்த இச் செய்யுளின் பழமை நன்கு துணியலாம்"[14] என்று பெரும்புலவர் ரா. இராகவையங்கார் குறித்திருத்தல் காண்க.

பேராசிரியர் மு. இராகவையங்கார் அவர்கள் "அருச்சுனனும் பாண்டிய மரபும்" என்னும் ஆராய்ச்சி மிக்க கட்டுரையில், வியாச பாரதம், மெகஸ்தனீஸ் வரைந்த 'இண்டிகா' இவற்றைக் கொண்டு பாண்டவர்க்கும் பாண்டி

12. மு. இராகவையங்கார், சேர வேந்தர் செய்யுட் கோவை I, முன்னுரை, பக். 9.

13. இக் கோதமனார் வேறு, பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தைப் பாடிய **பாலைக் கோதமனார்** வேறு என்பது, முன்னவர்க்குப் 'பாலை' என்ற அடை இன்மை யால் அறியப்படும்.

14. தமிழ் வரலாறு,

யர்க்கும் இருந்த நட்புறவை மெய்ப்பித்து, ''தென்னாட்டுப் பாரதப் பிரதிகளில் கண்ட செய்திகள் இடைச் செருகல் என்று சிலராற் கூறப்படுவது எவ்வாற்றானும் பொருந்தா தென்பது கண்டுகொள்க,'' என்றும் கூறியுள்ளனர். மேலும் அப் பெரியார், தருமபுத்திரனைக் கோதமனார் பாடினார் எனவரும் செய்யுளைப் பற்றிப் பேசுகையில், ''இச் செய்தியை மேற்குறித்த விஷயங்களோடு சேர்த்து நோக்கும்போது, அசுவமேத யாகம் போன்ற சந்தர்ப்ப மொன்றில், தமிழரசருடன் சென்ற தமிழ்ப் புலவர் ஒருவர் பாண்டவரின் முன் தோன்றலையே அவ்வாறு பாடினரோ என்று சங்கிக்க இடந் தருகின்றது. அப் புறப்பாட்டில் '**அறவோர் மகனே**' எனத் தருமபுத்திரர் அக் கோதமனாரால் அழைக்கப்படுதலும், தலைச் சங்கத்தவர்களில் **கோதமனார்** என்ற பெயருடைய புலவர் ஒருவர் காணப்படுதலும் இங்கு அறியத்தக்கன,[15] என்று எழுதியிருத்தல் கவனிக்கத் தக்கது.

### 3. வான்மீகியார் (கி. மு. 600)

பாரத நிகழ்ச்சிகட்குப் பிற்பட்டது இராமாகாதை என்பது அறிஞர் கருத்து.[16] இராமகாதையை வடமொழியில் பாடியவர் வான்மீகியார் என்பவர். புறநானூற்றில் 358ஆம் பாடலைப் பாடியவர் வான்மீகியார் என்ற புலவர். அவர் இப்பாட்டில் துறவறத்தின் சிறப்பினைப் புகன்றுள்ளார். இராமாகாதை செய்த வான்மீகியாரும் இப் பாடலைப்பாடிய வான்மீகியாரும் **ஒருவரே** என்று 'செந்தமிழ்' இதழாசிரியராகிய பெரும்புலவர் **திரு நாராயணையங்கார்** ஏறத்தாழ எண்பது பக்கங்களில் விரிவாக ஆராய்ச்சி செய்துள்ளார்.[17] இம்முடிவு கொள்ளற்பாலதாயின், புறப்பாட்டிற் கண்ட

15. ஆராய்ச்சித் தொகுதி; பக் 70—78.
16. **Dr. S. K. Ayyangar, Ancient India, pp. 1—5.**
17. செந்தமிழ், 1939—40.

வான்மீகியார் காலம் ஏறக்குறையக் கி. மு. 600 என்னலாம்.[18]

4. **நெடியோன்** (கி. மு. 350—300)

> ''எங்கோ வாழிய குடுமி, தங்கோச்
> செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
> முந்நீர் விழவின் நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி[19] மணலினும் பலவே.''

என வரும் புறநானூற்று அடிகளிற் குறிக்கப்பெறும் நெடியோனைப் பற்றிச் சிலப்பதிகாரம்,[20] முல்லைக்கலி (4), மதுரைக் காஞ்சி (வரி 763—781) முதலிய நூல்களிலும் குறிப்புகள் பலவாகக் காண்கின்றன. இவனே சயமா கீர்த்தி எனப்பட்டவன். இவன் பாக்கள் நற்றிணையில் (105, 228) இரண்டுண்டு. இவன் 'கவியரங்கேறிய பாண்டியன்' எனக் களவியல் உரை கூறல் காண்க. சயமா கீர்த்தி அல்லது ஜயமாகீர்த்தி என்பதில் உள்ள 'ஜய'[21] என்பது யவத் (ஜாவா) தீவத்தின் பெயரால் கல்வெட்டு வல்லார் அறிந்தது. அங்குள்ள பிற்காலத்துக் கல்வெட்டு ஒன்று மீன் இலச்சினையுடன் கிடைத்துள்ளது. இதனால், 'சயமா கீர்த்தி' என்பது 'ஜயஸ்தானத்து மகா கீர்த்தியன்' என்னும் பொருளுடையதேயாகும்......இவன் ''அடியில் தன்னளவு

---

18. T. R. Sesha Ayyangar, Dravidian India, p.13.

19. முதற் கடல் கோளில் மதுரை அழிந்தது. அதன் நினைவாக இன்றைய மதுரை ஏற்பட்டது. அது போலவே பஃறுளியாறும் நிலமும் கடலில் அழுந்திய பின்பு, நெடியோன், பஃறுளி என்னும் பெயர் கொண்ட புதிய யாற்றைத் தோற்றுவித்தான். அப் பெயர் காலப் போக்கில் 'பறளியாறு' என மருவியது. அவ்யாறு நாஞ்சில் நாட்டிற் பாய்கிறது. அவ்யாறே இப்பாட்டிற் குறிக்கப்பட்டது எனல் பொருந்தும்.

20. சிலப். 11, வரி 17—22; அழற்படு காதை, வரி 56—61.

21. G. E. Gerini, Further India, p. 646.

அரசர்க்கு உணர்த்தி'' எனச் சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெறல்—நெடுந் தூரம் கடலிற்சென்று நிலங் கண்டு, அந் நிலத்துத் தன் அடிகளை வைத்து, ஆண்டுள்ள கடல் அலம்பும்படி நின்றதேயாம்...பேரரசன் தன் அடிகளைப் பாறைகளிற் பொறித்து அவற்றை நீர் அலம்பும்படி வைக்கும் செய்தி ஜாவாவில் ஸ்ரீ பூர்ணவர்மன் கல்வெட்டுகளிற் காணப்படுகிறது.

''ஸ்ரீமானும் பூர்ணவர்மனும் அவனிக்குப் பதியும் அடி வைத்தவனுமாகிய தருமா நகரத் தலைவனுடைய விஷ்ணு அடிகளை ஒத்த இணை அடிகள்'' (Ind. Ant. III. 355—358). இது யவத்வீபத்துச் சீர் அருடன் யாற்று நடுவி லுள்ள பெரும் பாறையில் நீர் அலம்பு நிலையில் உள்ளது... இங்ஙனம் அடி பொறிக்கும் வழக்கம் நெடியோன் கால முதல் அங்கு உண்டாயிற்று என்று உய்த்துணரலாம்.

இங்ஙனம் நெடியோன் பெருங் கடலகத்து நிலங் கொண்ட செய்தி மதுரைக் காஞ்சியுள்,

**''வானியைந்த இருமுந்நீர்ப்**
**பேஎநிலைஇய இரும்பவ்வத்துக்**
**கொடும்புணரி விலங்குபோழ**
**சீர்சான்ற வுயர்நெல்லின்**
**ஊர்கொண்ட உயர்கொற்றவ''**

என்று (வரி 75-88) குறிக்கப்படல் காண்க. நெல்-சாலி; நெல்லின் ஊர்-சாலியூர். இன்றைய சாரியூர் (Sarhi). இது ஜாவாத் தீவில் மதுரை என்ற தலைநகர்க்கு நான்கு கல் தொலைவில் உள்ள கடற்றுறைப் பட்டினம்.

''ஈண்டு மிகப் பிற்பட்ட காலத்தும் இந்நாட்டை வென்று கொண்ட மாறன் பெயரும் அவன் மதுரையும் (சுமதுரா) பாண்டியர் நூலில் குறித்த சாலியூரும் சேர வருவதலான், இந்நாடு முதலில் தென்னாட்டுப் பாண்டியராலே கொள்ளப்

யட்டதாக நன்கு தெளியலாம்......இவன் பொன்படுதீவங் கொண்ட சிறப்பையே போற்றி இவன் 'சய மாகீர்த்தி' எனவும், 'நெடியோன்' எனவும் புகழ் பெற்றனன்... இவன் வென்றுகொண்ட பிறநாடு மலயம் என இன்றுவரை வழங்குதலும் இவனுடைய பொதியப் பொருப்பாகிய 'மலயம்' பற்றியதாகும். மதுரை என்பது, கீழ்க்கடலகத்து யவத்தீவத்தை அடுத்து இப்போதுள்ள தீவாகும். இது முன்னர் ஒன்றாக இருந்ததென்ப. இச் சாவகத் தீவுடன் சங்க காலத்தில் வாணிகம் சிறக்க நடந்தது என்பதை மணி மேகலையால் அறியலாம்...சாவகத் தீவில் பல படியாகப் பகுப்புண்ட பெருநிலப் பெயர்கள் இன்றைக்கும் 'பாண்டியன், மதியன், புகார், பாண்டிய வாசம், மலையன்கோ, கந்தளி, செம்பூட்சேஎய்' என வழங்குதல் காணலாம். 'குறிஞ்சி, செங்கரை' என்பன ஆண்டுள்ள குளங்களின் பெயர்கள்...'நெடியோன் எனப்பட்ட பாண்டியன், அக்கரையில் உள்ள ஆழி, தன் பாதத்தை அலம்பும்படி நின்றவன்' என உணர்தலே பொருந்திய தென்க. இக் காரணத்தானே, மூவுலகும் ஈரடியால் அளந்தவனாகிய நெடியோனை ஒப்ப நின்றான் என்பது பற்றி, 'நெடியோன்' என்றார். இத்தகைய சிறந்த நெடியோன் வழித் தோன்றலாதல் பற்றியே, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்,

> ''முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்
> பரந்துபட்ட வியன்ஞாலம்
> தாளில் தந்து தம்புகழ் நிறீஇ
> ஒருதா மாகிய வரவோ ரும்பல்''

எனக் குடபுலவியனாரால் புறப்பாட்டில் (18) ஏத்தெடுக்கப் பெற்றான் என்க.[22]

---

22. இப்புதிய-அரிய செய்தியை விளக்கிய பெருமை பெரும்புலவர் ரா. இராகவையங்கார் அவர்கட்கே உரியது.—தமிழ் வரலாறு. பக். 322-343

இந் நெடியோன் தொல்காப்பியர் காலத்தவன் என்று மகா வித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் ஆராய்ந்து முடிவு கூறியுள்ளனர்.[23] தொல்காப்பியர் காலம் கி. மு. 4ஆம் நூற்றாண்டு என்பது முன்பே குறிக்கப்பட்டது. எனவே, இவன் காலமும் அதுவே எனல் பொருத்தமாகும்.

**கரிகாலன் (கி. பி. 75—115)**

இவன் சிலப்பதிகாரம் கூறுமாறு, இமயம் சென்று மீண்ட பேரரசன். இவனே தொண்டை நாட்டை வளப் படுத்திச் சோணாட்டைப் பெருக்கிய பெருவீரன். இலங்கை அரசனான வசபன் (கி. பி. 67—111) காலத்தில் சோழ மன்னன் தனது ஆட்சியை விரிவாக்கினான். அவன் இலங்கை மீது படையெடுக்கலாம் என்று அஞ்சிய வசபன் தன் படைகளைப் பெருக்கினான்; பாதுகாப்பை மிகுத்தான். வசபன் எதிர்பார்த்த சோழனது படையெடுப்பு அவன் மகனான வங்க நாசிக திஸ்ஸன் (கி. பி. 111-114) காலத்தில் நடை பெற்றது. அச்சோழன் பன்னீராயிரம் சிங்களவரைச் சிறை செய்து சோழ நாட்டிற்குக் கொண்டு சென்றான். அந்த அவ மானத்தை நீக்க வங்கநாசிக திஸ்ஸன் மகனான **கயவாகு வேந்தன்** (கி. பி. 114-136) சோழ நாட்டின்மீது படை யெடுத்துப் பன்னீராயிரம் தமிழரைச் சிறை செய்து இலங் கைக்குக் கொண்டுவந்தான் என்று இலங்கை வரலாறு கூறு கிறது.[24]

சங்க காலத்தில் நாட்டை விரிவாக்கியவன் கரிகாலனே என்பது சங்கப் பாடல்களால் தெரிகிறது.

இப்பொழுதுள்ள கடப்பை, கர்நூல் மாவட்டங்கள் என்னும் பகுதி கரிகாலனால் செம்மைப்படுத்தப்பட்டது.

---

23. தமிழ்மொழி வரலாறு, பக். 322-343.
24. History of Ceylon, Vol I, pp. 175—195.

போலும்!* அப்பகுதி கி. பி. 7ஆம் நூற்றாண்டில் 'ரேநாடு' எனப்பட்டது. அதனை ஆண்டவர் தம்மைச் 'சோழர்' என்றும் 'கரிகாலன் மரபினர்' என்றும் பட்டயங்களிற் கூறிப் பெருமை கொண்டனர்.[25] அந்த நாட்டைச் 'சூழிய' (சோழ நாடு) என்று 7ஆம் நூற்றாண்டில் யுவான் சுவாங்கு என்ற சீன வழிப்போக்கன் குறித்துள்ளான். காகந்தி என்பது சோழர் துறைமுக நகரான காவிரிப்பூம் பட்டினத்தின் பெயர். அப்பெயர் நெல்லூர் மாவட்டத்துக் கூடூர்ப் பகுதிக்குப் (கடல் கொண்ட காகந்தி நாடு எனப்) பெயரிடப்பட்டது. அப் பகுதியை ஆண்டவர் தம்மைச் சோழர்— கரிகாலன் மரபினர் என்றனர். இவர்கள் வழிவந்த தெலுங்குச் சோழர் (சோடர்) பின் நூற்றாண்டுகளில் சோழப் பேரரசர்க்கடங்கிக் குண்டூர், நெல்லூர், வடஆர்க்காடு, செங்கற்பட்டு, கடப்பை மாவட் டங்களை ஆண்டுவந்தனர் என்று கல்வெட்டுகள் தெரிவிக் கின்றன. விசயநகர வேந்தர்க்கடங்கிய சிற்றரசர் சிலரும் தம்மைக் கரிகாலனின் மரபினர் என்று கூறிக்கொண்டதை நோக்க, கரிகாலன் ரே நாட்டையும் தொண்டை நாட்டையும் வென்றவன் என்பது தெளிவாகிறதன்றோ?

கரிகாலன் காவிரியின் கரைகளை உயர்த்தியவன் என்று தெலுங்குச் சோழர் கல்வெட்டுகள் கூறுகின்றன. கி. பி. 12ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற கலிங்கத்துப் பரணியும் (197) இச்செய்தியைக் குறித்துள்ளது. சோழன் ஒருவன் பன்னீராயிரம் சிங்களவரைச் சிறை செய்து சோணாடு கொண்டு சென்று காவிரிக்குக் கரையிடுவித்தான் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. பராந்தகன் முதலிய சோழப் பேரரசர் காலக் கல்வெட்டுகளில் காவிரியின் கரை 'கரிகாலக்கரை' என்று குறிக்கப்பட்டுள்ளது.

---

*P. T. S. Ayyangar, History of the Tamils, pp. 346—347.

25. K. A. N. Sastry, Cholas, Vol. I, pp. 121—122.

கரிகாலனே இமயம் வரையில் சென்று மீண்டதாகச் சிலப்பதிகாரம் செப்புகிறது; அவன் காலத்தில் கடல் வாணிகம் சிறந்திருந்தது என்பது பட்டினப்பாலையால் தெரிகிறது. எனவே, படை வலிமை மிகுந்த அவனே இலங்கை மீது படையெடுத்திருக்கலாம். அங்ஙனமாயின் (அவன் படையெடுத்த காலம் கி. பி. 111-114 என்று இலங்கை வரலாறு கூறுவதால்) கரிகாலன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதி கி. பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியுமாக (கி. பி. 115 வரையில்) இருக்கலாம்.

## நெடுமுடிக்கிள்ளி (கி. பி. 115-136)

இவன் மணிமேகலை காலத்தவன். மணிமேகலை செய்த சாத்தனார் செங்குட்டுவன் காலத்தவர். செங்குட்டுவன் கயவாகுவின் (கி. பி. 114-136) காலத்தவன். எனவே, இந் நெடுமுடிக்கிள்ளியும் அக் காலத்தவனே யாவன். அக் காலத்தில்தான் பாண்டிய நாட்டை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆண்டுவந்தான். அவனுக்குப் பின்பு மதுரையின் ஒரு பகுதி அழிந்தது. இந்நெடுமுடிக்கிள்ளியோடு பூம்புகாரின் ஒரு பகுதி அழிவுற்றது என்று மணிமேகலை கூறுகிறது.

## பிற சோழ வேந்தர் (கி. பி. 136—300)

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான், கிள்ளிவளவன், இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, போர்வைக் கோப்பெருநற்கிள்ளி, வேல்பல் தடக்கைப் பெருவிறல்கிள்ளி, முடித்தலைக் கோப்பெருநற் கிள்ளி, கோப்பெருஞ்சோழன், நல்உருத்திரன் முதலியோர் சோணாட்டை ஆண்டவர் என்று புறநானூற்றுப் பாடல்கள் புகழ்கின்றன. இவருட் சிலரேனும் கரிகாலனுக்கு முற்பட்டவர் ஆகலாம், பலர் பிற்பட்டவர் ஆகலாம்.

பிளைநி, பெரிப்ளூஸ் ஆசிரியர்; தாலமி போன்றோர் குறித்துள்ள வாணிகச் செய்திகள் யாவும் உண்மை என்

பதைப் புறநானூற்றுப் பாக்களும் கரிகாலனைப் பற்றிய பொருநர் ஆற்றுப்படை, பட்டினப்பாலை என்னும் நெடும் பாடல்களும் உறுதிப்படுத்துகின்றன.

**புறநானூற்றின் காலம்**

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளைக் காண, புற நானூற்றில் உள்ள பாக்களின் காலம் ஏறத்தாழக் கி. மு. 300 என்னலாம்.[26].

---

26. வேதகாலத்தில் சொல்லப்பட்ட செய்திகளையும் புராண செய்திகளையும் கொண்டு வரலாறு எழுதி வரும் வர லாற்று ஆசிரியர்கள் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன், நெடியோன், வான்மீகியார், கோதமனார், கரிகாலன் இமயப் படையெடுப்புப் பற்றிய பாடல்களைக் கட்டுக் கதை என்று தள்ளுதல் ஆராய்ச்சி அறமன்று. இவை பற்றிய ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், திரு நாராயணையங்கார் போன்ற புகழ்பெற்ற தமிழ்ப் பேராசிரி யர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகளைத் தம் நூலிற் குறிப் பிடாமல் விட்டதும் அறமாகாது; இங்ஙனம் கூறவேண்டுவன வற்றைக் கூறாது, சங்க காலம் கி. பி. முதல் இரண்டு நூற் றாண்டுகளைச் சேர்ந்தது என்பதை மட்டும் பல இடங்களில் விடாமல் எழுதுதலும் அறமாகாது.

# 10. ஐங்குறுநூறு

**முன்னுரை**

இது மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் கொண்ட ஐந்நூறு பாக்களை உடையது. இந்நூல் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை; முல்லை என்னும் ஐந்து பிரிவு களை உடையது. ஒவ்வொரு பிரிவிலும் நூறு செய்யுட்கள் உள்ளன. அவை அத்திணைக்குரிய ஒழுக்கம் பற்றியவை. **ஓரம்போகியார்** மருதம் பற்றிய பாக்களையும், **அம்மூவனார்** நெய்தல் பற்றிய பாக்களையும், **கபிலர்** குறிஞ்சி பற்றிய பாக் களையும், **ஓதல் ஆந்தையார்** பாலைபற்றிய பாக்களையும், **பேயனார்** முல்லை பற்றிய பாக்களையும் இந்நூலில் பாடி யுள்ளனர்.

இந்நூலை முதன் முதலில் வெளியிட்டவர் **டாக்டர் உ. வே. சாமிநாதையராவர்.** அண்மையில் திருப்பனந்தாள் காசி மடத்துப் பொருள் உதவியால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார், பேராசிரியர் **ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களைக்** கொண்டு விரிவான முறையில் புதிய பதிப்பு (மூன்று பகுதிகளாய்) வெளியிட்டுள்ளனர். இப்புதிய பதிப்பு மிக்க பயனுடையது; பாராட்டுக்குரியது.

**ஐங்குறுநூற்றுப் புலவர்கள் :** மருதம் பாடிய ஓரம் போகியார், **ஆதன்** என்னும் சேர மன்னனையும் அவன் வழி வந்த அவினியையும் தம் பாக்களில் வாழ்த்தியிருத்தலால் அவினி என்ற சேர மன்னன் காலத்தவராகலாம். இவர் தம் காலச் சோழ பாண்டியரையும், **மத்தி, விரான்** என்ற சிற்றரசர்களையும் கண்டு பழகியவர் என்பது இவர் பாக்களி லிருந்து தெரிகிறது.

நெய்தல் பாடிய **அம்மூவனார்** சேரநாட்டுக் கடற்கரை ஊர்களாகிய தொண்டி, மாந்தை என்னும் ஊர்களை வளம் படப் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள தொண்டிப் பத்து அந்தாதி முறையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**கபிலர்** குறிஞ்சித்திணை பாடுவதில் இணையற்றவர். இவர் பாடல்கள் சொற்செறிவும் பொருட் செறிவும் உடையவை.

பாரி பற்றிய பாக்களைப் பாடியவர் **ஓதல் ஆந்தையார்** என்பவர். ஓதல்—ஓதலூர். ஓதலூர் குட்ட நாட்டிலுள்ளது. இவர் பாலைத் திணையில் உள்ள மரங்கள், பூக்கள் இவை இவை என நன்கு பாடியுள்ளார்.

முல்லை பற்றிப் பாடிய **பேயனார்** சிறந்த புலவர் என்பது அவர் பாக்களாற் புலனாகிறது. சேர நாட்டில் சிறைக்கல் வட்டத்துப் பையனூர் முற்காலத்தில் பேயனூர் என வழங்கப் பட்டது. சேரமான் இமய வரம்பனைப் பாடிய கண்ணனார் பெயரால் 'கண்ணனூர்' என்பதும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிய காக்கை பாடினியார் பெயரால் 'காக்கையூர்' என்பதும் தோன்றினாற்போல, இப்பேய னாரைச் சிறப்பித்தற்குப் பேயனூர் தோன்றியிருக்கலாம். மேலும் பேயன் என்ற பெயர் சேர நாட்டுக் கல்வெட்டு களில் காணப்படுகின்றது. எனவே, முல்லை பாடிய பேயனார் சேர நாட்டினர் என்று கருதலாம்.[1]

**பேரரசரும் சிற்றரசரும்:** ஐங்குறுநூற்றுப் பாடல்களில் ஆதன் அவினி (செ. 1-10), குட்டுவன் (178) என்ற சேர வேந்தரும், கடுமான் கிள்ளி (78) என்ற சோழ மன்னனும், தென்னவன் (54), தேர்வண் கோமான் (55), கொற்கைக் கோமான் (188) என்ற பாண்டிய அரசனும் குறிக்கப் பெற்றுள்ளனர்; **விரான்** என்ற சிற்றரசன் சேரநாட்டு இருப்பையூரைச் சேர்ந்தவன்; வரையாது வழங்குபவன் (58), **மத்தி** என்பவன் ஒரு சிற்றரசன்; கொடையிற் சிறந் தவன். கழாஅர் என்னும் ஊருக்குத் தலைவன் (செ. 61).

1 ஐங்குறுநூறு மூலமும் விளக்க வுரையும், பக். 194-'5.

**ஊர்கள்:** இந்நூலில் கீழ்வரும் ஊர்கள் இடம் பெற்றுள்ளன: தேனூர் (54), சோழர் ஆமூர் (56), இருப்பை (58), மத்தி கழாஅர் (61), தொண்டி (171), கொற்கை (185), ஊர்களின் பொதுப் பெயர்களாகப் பேரூர் (77), நல்லூர் (298), மூதூர் (372), சீறூர் (382), பாக்கம் (முல்லை நிலத்து ஊர்—439), வயலூர் (459) என்பவை இடம் பெற்றுள்ளன.

பேரூர் என்பது ஊரினும் பெரியது; 'சீறூர்' என்பது ஊரினும் சிறியது. 'மூதூர்' என்பது காலப்பழமை வாய்ந்த ஊர் எனப் பொருள்படும். சங்கப் பாக்களிலேயே ஓர் ஊர் 'மூதூர்' எனப்பட்டது எனின், அவ்வூரின் பழமையை எண்ணிப் பார்த்தல் வேண்டுமல்லவா?

**சிறப்புச் செய்திகள்**

**பாசறை** என்பது அரசரும் அமைச்சரும் போர் புரியத் தங்கியிருக்கும் இடம். படைத்தலைவரும், வீரரும், இயவரும் உள்ள இடம் **பாடி** என்பது. போர் நிகழ்ச்சியின் பெருமை, காலம் முதலிய நிலைமை நோக்கித் தக்கவாறு பெருக்கி அமைக்கும் பாடி இருக்கை **கட்டூர்** என்பது (445). இங்ஙனம் இவை வேறு வேறு காணப்படினும், பொதுவகையில் 'பாசறை' என்ற இடத்து இவை யாவும் அடங்கிவிடும். இவை காலப்போக்கில் ஊர்களாக மாறுதலும் உண்டு. **திரு எதிர்கொள்பாடி**, **பெருங்கட்டூர்** என்னும் ஊர்களின் பெயர்கள் பாடியையும் கட்டூரையும் நினைவூட்டுதலைக் காணலாம்[2]

குறிஞ்சி நிலத்தில் முருகன் வணக்கம் நடைபெற்றது. குறவன் தன் உறவினருடன் மழைவேண்டும் எனக் கடவுளை வேண்டுவான் (251). மகப்பேறு இல்லாத குறவன் கடவுளை வேண்டி மகனையோ மகளையோ பெறுவான்

---

2 டை, பக். 971

(257). குறமகள் வேங்கை மலர்களைக் கொண்டு கோவிலில் உள்ள இறைவனைப் பூசித்து விழிநீர் வார வழிபடுவாள் (269).

உண்ணுநீர் கொள்ளும் துறையில் தெய்வம் உறையும், அது மக்களுக்கு நோய் செய்யும் என்று அக்காலத்தார் நம்பினர் (28). அம்மக்கள் ஊழ்வினையில் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதைப் பல பாடல்கள் உணர்த்துகின்றன. (110, 374, 378); தவத்திலும் நோன்பிலும் நம்பிக்கை கொண்டிருந்தனர் (111, 365). ஊரிலுள்ள குளத்தில் தைத்திங்களில் இளமகளிர் நீராடி நோற்பது சங்க கால வழக்கம் (84). இதனை **மார்கழி நீராடல்** என்றும் **தைந் நீராடல்** என்றும் பிற்காலத்தார் கூறுவது வழக்கம். இந் நோன்பு பற்றிய விளக்கம் 'பரிபாடல்' என்னும் பகுதியில் விரித்துரைக்கப்படும். ஊரில் **இந்திரவிழவு** நடைபெற்றது என்று ஒரு செய்யுள் (62) கூறுகின்றது.

**அணிகள்:** ஐங்குறுநூற்றுப் பாடல்களில் காணப்படும் அணிகள் சிலவேயாகும். அவை வளை (20), இழை (இழைத்துச் செய்யப்பட்டது—25), தொடி (83), காஞ்சி (176), சங்குவளையல் (196), மணிப்பூண் (மணிகள் பதித்த நகை—232), மேகலை (306), பாண்டில் (பொன்னால் வட்டமாகச் செய்யப்பட்டதோர் அணிவகை. இதனைச் சுற்றி மணிகள் கோத்து மேகலையோடு அணிதல் பண்டை மரபு—310),[3] சிலம்பு, கழல் (383).

**பிற செய்திகள்:** குடிமக்கள் நாடு காவற்பொருட்டு அரசனை வாழ்த்துதல் மரபு (1). கடல் துறையிலிருந்து கப்பல்கள் கடலில் ஓடின (192). கரை உடைந்து தீமை விளையாதிருக்கக் குளங்களுக்குக் காவலர்களை நிறுத்துதல் பண்டை மரபு. தினைப்புனத்தில் புலிபோல் உருவம் சமைத்து விலங்குகள் தினைப்பயிரை அழிக்காதபடி குறவர்

---

3 ஷை, செ 310 உரை, பக். 742.

பார்த்துவந்தனர் (246). குறிஞ்சி நில வீடுகள் புல்லால் வேயப்பட்டு இருந்தன (252). ஊரைச் சேர்ந்து இருப்பது **சேரி** (297). சங்ககாலத்தில் நூறாயிரம் என்னும் எண்ணுப் பெயருக்கு மேலாகத் **தாமரை**, **வெள்ளம்**, **ஆம்பல்** என்னும் பேரெண்களும் வழக்கில் இருந்தன என்பது சங்கப்பாக்க ளால் தெரிகிறது. இந்நூலில் **'வெள்ளம்'** என்னும் பேரெண் குறிக்கப்பட்டுள்ளது (281). நள்ளிரவு 'நடுநாட் கங்குல்' (296) எனப்பட்டது. இதனால் பகல் பன்னிரண்டு மணி முதல் இரவு பன்னிரண்டு வரை உள்ள பொழுது பாதி நாளாகக் கணக்கிடப்பட்டது என்பது தெரிகிறது. இரவு பன்னிரண்டு மணியிலிருந்து மறுநாள் பகல் பன்னிரண்டு மணிவரை உள்ள பொழுது அடுத்த பாதிநாளாகும். எனவே, **சங்ககால மக்கள் பகல் பன்னிரண்டு மணியி லிருந்தே தங்கள் நாளைக் கணக்கிட்டனர்** என்பது தெளி வாகிறது. இஃது அறியத்தகும் அரிய செய்தியாகும். மயில்கள் மழை வரவினை அறிந்து தோகையை விரித்து ஆடும் (298),

போரில் இறந்துபட்ட மறவர்க்குக் கல் நடுதலும், அக் கல்லில் வீரன் உருவத்தையும் அவன் பெயரையும் பிற சிறப்புகளையும் பொறித்தலும் மரபு; அந்நடுகல் 'எழுத் துடை நடுகல்' எனப்பட்டது; அது வீரராலும் பிறராலும் பூசிக்கப்பட்டுவந்தது (352). செல்வர் பொன்கயிறு கொண்டு யானை கட்டுதல் வழக்கம் (356). பாலைநிலத்தில் செல்பவர் நெல்லிக்காயையும் பலாச்சுளையையும் உண்பது வழக்கம் (381).

பாண்டில்—கால் நிறுத்திய விளக்கு. இந்நூலில் யவனர் பாவைவிளக்கு இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தகும்; தலைவன் தன் மகனுக்குத் தன் தந்தை பெயரை இட்டு அழைப்பது மரபு; அதனால் அம்மைந்தன் **'தந்தை பெயரன்'** எனப்பட்டான், இவ்வழக்கு நாளடைவில் **'பெயரன்'** எனக் குறைந்து வழங்கியது. அது இக்காலத்தில் **'பேரன்'** என

மருவி வழங்கப்படுகிறது. மகளிர்க்கு இடக்கண் துடித்தல் நல்ல குறி (218).

**விளையாட்டுகள் :** பிள்ளைகள் சிறுதேர் உருட்டி விளையாடினர் (66, 403). சிறுமிகள் மணலால் பாவை செய்து நீர்த்துறையில் விளையாடினர் (69). ஆடவரும் பெண்டிரும் புனலாடுதல் வழக்கம். தலைவன் பரத்தையோடு புனலாடுவான். தலைவி அதனையறிந்து ஊடல் கொள்வாள் (71, 80). நீரில் பாய்ந்து விளையாடல் 'பண்ணை பாய்தல்' (74) எனப்பட்டது. வண்டல் மண்ணைக்கொண்டு பாவை செய்து விளையாடுதல் சிறுமியர் வழக்கம். அப்பாவை 'வண்டல் பாவை' எனப்பட்டது (124). சிறுமிகள் விரும்பி விளையாடும் ஒருவகை விளையாட்டுப் 'பொய்தல்' எனப் பெயர் பெற்றது. அதனை ஆடிமுடித்து இளமகளிர் குவிந்த வெண்மணலில் குரவை ஆடுவர் (181). குரவை என்பது பெண்கள் எழுவர் அல்லது ஒன்பதின்மர் கைகோத்து ஆடும் விளையாட்டு வகை. மகளிர் பந்தாடுதல் வழக்கம் (295). பெண்கள் கிளிகளை வளர்த்துப் பேசக்கற்பித்தல் வழக்கமாகும் (375). பெண்கள் பந்தும் பாவையும் ஆடுதல் போலவே கழங்கு வைத்தும் ஆடிவந்தனர் (377). பரத்தையர் வேழ மரத்தின் புழை பொருந்திய தண்டில் அஞ்சனத்தைப் பெய்து வைப்பர் (செ. 16).

**மேற்கோள் :** ஐங்குறுநூற்றுச் செய்யுட்கள் சிறிய பாக்களாயிருப்பினும் தமிழ்வளம் செறிந்தவை; இனிமையும் எளிமையும் வாய்ந்தவை. பிற நூல்களுக்குத் தேவையான சொற்களையும் சொற்றொடர்களையும் வழங்கும் நிலையில் அமைந்தவை. சான்றாகக் கீழ் வருவனவற்றைக் காண்க:

1. **''தாழிருங் கூந்தல் வம்மதி விரைந்தே''** 411
   **''தாழிருங் கூந்தல் தையால் நின்னை''**
   **—சிலப். காதை 2, வரி 80**

2. **''நல்லேறு தழீஇ நாகுபெயர் காலை''** 445
   **''இளமண நாகுதழுவி ஏறுவருவன கண்டேன்''**
   **—அப்பர் தேவாரம்**

3. ''மா யிருஞ் சோலை 353
''மால் இருஞ் சோலை'' பரிபாடல்

4. ''தேமொழி அரிவை தெளிந்திசின் யானே'' 466
''தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி''
—சிலம்பு, காதை 20, வரி 68

5. ''அங்கண் இருவிசும் பதிர'' 469
''அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்''
—நாலடியார், செ. 51

6. ''இரும்பொறை—பெரியமலை'' 431

பொறையன்—மலையன்; சேர அரசர்க்குரிய பெயர்களுள் ஒன்று. இரும்பொறை மரபினர்—பெரிய மலை (நாட்டின் ஆட்சிக்குரிய) மரபினர். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் பெயரைக் காண்க.

7. ''பேரமர்க் கண்ணி 496
''பேரமர்க் கண்ணி யிருந்த ஊரே''
—குறுந்தொகை, 131

8. ''போதவிழ் கூந்தலும் பூவிரும் புகவே'' 496
''போதவிழ் செல்வி பொருந்துதல் விரும்பிய''
—மணி, காதை 18, வரி 26

9. ''பொன்னேர் மேனி மடந்தை'' 388
''பொன்னார் மேனியனே'' —சுந்தரர் தேவாரம்

அந்தணர் கூட்டுறவு: தலைவன் ஏறிவந்த குதிரையினது நெற்றிமயிர், சிலவாய மயிர் பொருந்திய குடுமியை ஒத்திருந்ததைக் கண்ட தோழி, தலைவியை நோக்கி, ''நம்மூரில் வாழும் பார்ப்பனச்சிறுவர்களைப்போல நம் தலைவன் ஊர்ந்து வந்த குதிரையும் குடுமி பொருந்திய தலையை உடையது.'' என்று கூறி நகைத்தாள்.

''அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே.'' (202)

முன் குடுமியைப் பெற்றிருத்தல் பார்ப்பனருக்கு ஆசார விதி. 'முன் குடுமிச் சோழியா' என்பது காளமேகப் புலவரது பாடல் தொடர். 'நம்மூர்ப் பார்ப்பனர்' என்று தோழி கூறுதலை நோக்க, ஐங்குறுநூறு செய்யப்பெற்ற காலத்தில் வடமொழியாளராகிய வேதியர் பல ஊர்களில் குடியேறி இருந்தமை தெளிவாகும். வேதம் ஓதுதலால் வேள்வி நடக்கும்—அதனால் வானம் பொய்யாது மழை பொழியும்—விளைபொருள் மிகும்—இல்லறம் சிறக்கும் என்பது மக்கள் நம்பிக்கை. அதனாற்றான், தலைவி நாட்டு நலத்தையும் வீட்டு நலத்தையும் நினைத்தபொழுது, 'பார்ப்பார் ஓதுக' (4) என்றாள்.

இங்ஙனம் வேதம் ஓதி வந்ததாலும் அறவொழுக்கம் பூண்டிருந்ததாலும் தமிழ் மக்கள் அந்தணரை மிக்க மரியாதையுடன் நடத்திவந்தனர். அவருள் ஒரு சார் நன்மக்கள் தவக்கோலம் பூண்டு பலவூர்களுக்கும் சென்று வந்தனர். தலைவி தலைவனுடன் சென்றுவிட்டதை அறிந்து அவளைத் தேடிச் சென்ற செவிலி இங்ஙனம் யாத்திரையை மேற்கொண்ட அந்தணரைக் கண்டாள்; மிக்க மரியாதையுடன் அவர்களை அழைத்துத் தன் மகள் பற்றி வினவினாள்:

''சேட்புல முன்னிய வசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவல்'' (384)

''அறம்புரி யருமறை நவின்ற நாவின்
திறம்புரி கொள்கை யந்தணிர் தொழுவல்'' (387)

அந்தணர் தவம், வேள்வி, நோன்பு இவற்றை மேற்கொண்டமையால் தமிழகத்துச் சமய வாழ்வில் பெரும்பங்கு கொள்ளலாயினர். அதனால் அவர்கள் சொல்லிவந்த

கதைகளும், வடமொழி இலக்கண முறைகள் சிலவும் செல்வாக்குப் பெற்றன. 'அருந்ததி அனைய கற்பு' (442) என்பது வடநாட்டுக் கதைகளுள் ஒன்றாகும். 'அந்தாதி' முறையிற் பாடுவதும் அவர் வழக்கேயாகும். அந்தாதி (அந்தம்+ஆதி) என்ற தொடரே வடசொல் தொடராகும்,

இங்ஙனமே அவர் பயன்படுத்திவந்த வடசொற்களும் தமிழகத்தில் வழக்குப் பெற்றன; காலப்போக்கில் இலக்கியத்திலும் இடம் பெறலாயின. அவற்றுள் சில இந்நூலிலும் இடம் பெற்றுள்ளன. அவை அஞ்சனம்—மை (16), எந்திரம் (55), சிமையம்—உச்சி (100, 268), தவம் (11), அச்சிரம்—முன்பனி (223, 464, 470), தேசம் (317), பிரசம்—வண்டு (406), கருவி, கற்பம் (461).

'தேசம்' என்ற வடசொல் தமிழில் 'தேயம்' என முதலில் வழக்குப் பெற்றது; பின்பு 'தேஎம்' என மருவியது (317),

பிற தொகை நூல்களில் உள்ள வடசொற்களையும் வடநாட்டுக் கதைகளையும் விட இந்நூலில் உள்ள வடசொற்களும் கதைகளும் மிகக் குறைந்த அளவின என்பது நினைவிற் கொள்ளத்தகும்.

# 11. குறுந்தொகை

**முன்னுரை**

நான்கடிச் சிற்றெல்லையும், எட்டடிப் பேரெல்லையு முடைய 398 செய்யுட்களும் ஒன்பது அடியுள்ள இரண்டு செய்யுட்களும் (307, 399) கொண்ட இந்நூல், ஐங்குறு நூற்றுக்கு அடுத்த மேல் எல்லையில் (அடிகளைப் பொறுத்த வரையில்) உள்ளதாகும். பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடிய கடவுள் வாழ்த்து இதன்கண் இடம்பெற்றுள்ளது. இப்பாடல்களைத் தொகுத்தவன் **பூரிக்கோ** என்பவன். பெயரால் இவன் ஓர் அரசன் என்பது தெரிகிறது. இவனைப் பற்றி வேறு ஒன்றும் அறியுமாறு இல்லை. இந்நூற் பாடல்கள் 205 புலவர்களால் பாடப்பெற்றுள்ளன.

இந்நூற் பாடல்கள் அகப்பொருள் பற்றியவை; குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை ஒழுக்கங்களைப் பற்றிய பாடல்கள் இதன்கண் இடம் பெற்றுள்ளன. இந்நூலின் மூலத்தை மட்டும் முதன்முதல் வெளியிட்டவர் தமிழறிஞர் சி. வை தாமோதரம்பிள்ளை என்பவர். பின்னர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் இதற்குப் பதவுரை, கருத்துரை, விளக்கவுரை மேற்கோளாட்சி, ஒப்புமைப் பகுதி முதலியவற்றை அரும்பாடுபட்டு எழுதியுள்ளார். இந்நூலில் 380 பாடல்களுக்குப் 'பேராசிரியர்' உரை எழுதினார் என்றும், எஞ்சிய இருபதுபாடல்களுக்கு 'நச்சினார்க்கினியர்' உரை யெழுதினார் என்றும் சீவகசிந்தாமணியின் சிறப்புப் பாயிரத்தில் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். அவ்வுரை இப்போது கிடைக்கவில்லை.

இனி இந்நூற்பாக்களைப் பாடியுள்ள சங்ககாலப் புலவர் பெயர்களைக் கீழே காண்க :

## குறுந்தொகையிற் பாடிய புலவர்கள்—203 பேர்.

1. அஞ்சியாந்தை
2. அண்டர் மகன் குறுவழுதி
3. அணிலாடு முன்றிலார்
4. அம்மூவனார்
5. அரிசில் கிழார்
6. அள்ளூர் நன்முல்லையார்
7. அறிவுடைநம்பி
8. ஆசிரியன் பெருங்கண்ணன்
9. ஆதிமந்தியார்
10. ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன்
11. ஆலங்குடி வங்கனார்
12. ஆலத்தூர் கிழார்
13. இடைக்காடனார்
14. இருந்தையூர்க் கொற்றன் புலவன்
15. இளங்கீரந்தையார்
16. இளங்கீரனார்
17. இளம்பூதனார்
18. இறையனார்
19. ஈழத்துப் பூதன் தேவன்
20. உகாய்க்குடி கிழார்
21. உருத்திரன்
22. உரோடகத்துக்காரன்
23. உலோச்சனார்
24. உழுந்தினைம்புலவன்
25. உறையன்
26. உறையூர்ச் சல்லியன் குமரன்
27. உறையூர்ச் சிறுகந்தன்
28. உறையூர்ப் பல்காயனார்
29. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
30. உறையூர் முதுகூத்தனார்
31. உறையூர் முதுகொற்றன்
32. ஊண்பித்தை
33. எயிற்றியனார்
34. ஐயூர் முடவனார்
35. ஒக்கூர் மாசாத்தியார்
36. ஒருசிறைப் பெரியனார்
37. ஓதஞானி
38. ஓதலாந்தையார்
39. ஓரம் போகியார்
40. ஓரிற் பிச்சையார்
41. ஓரேருழவனார்
42. ஔவையார்
43. கங்குல் வெள்ளத்தார்
44. கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன்
45. கச்சிப்பேட்டு நன்னாகையார்
46. கடம்பனூர்ச் சாண்டிலியன்
47. கடியலூர் உருத்திரங்கண்ணனார்
48. கடுகு பெருந்தேவன்
49. கடுந்தோட் கரவீரன்
50. கடுவன் மள்ளன்
51. கண்ணன்
52. கணக்காயன் தத்தன்
53. கந்தக் கண்ணன்
54. கபிலர்
55. கயமனார்

56. கருவூர்க் கதப்பிள்ளை
57. கருவூர்கிழார்
58. கருவூர்ச் சேரமான் சாத்தன்
59. கருவூர்ப் பவுத்திரன்
60. கருவூர் ஓதஞானி
61. கல்பொரு சிறுநுரை யார்
62. கல்லாடனார்
63. கவைமகன்
64. கழார்க் கீரன் எயிற்றி
65. கள்ளில் ஆத்திரையன்
66. காக்கை பாடினியார் நச்செள்ளையார்
67. காமஞ்சேர் குளத்தார்
68. காலெறி கடிகையார்
69. காவன் முல்லைப் பூதனார்
70. காவிரிப்பூம் பட்டினத்துக் கந்தரத்தனார்
71. காவிரிப்பூம் பட்டினத்துச் சேந்தங்கண்ணனார்
72. கிடங்கிற் குலபதி நக்கண்ணன்
73. கிளிமங்கலங்கிழார்
74. குட்டுவன் கண்ணன்
75. குடவாயிற்கீரத்தனார்
76. குடவாயிற் கீரனக்கன்
77. குப்பைக் கோழியார்
78. குழல்தத்தன்
79. குறியிறையார்
80. குறுங்கீரன்
81. குறுங்குடி மருதனார்
82. குன்றியனார்
83. கூடலூர் கிழார்
84. கூவன் மைந்தன்
85. கூழிக் கொற்றன்
86. கொல்லன் அழிசி
87. கொல்லிக் கண்ணன்
88. கொற்றனார்
89. கோக் குளமுற்றன்
90. கோப்பெருஞ்சோழன்
91. கோவத்தன்
92. கோவூர்கிழார்
93. கோவேங்கைப் பெருங்கதவன்
94. சத்திநாதனார்
95. சாத்தன்
96. சிறைக்குடி யாந்தையார்
97. செம்புலப் பெயனீரார்
98. செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்
99. செல்லூர்க் கொற்றன்
100. சேந்தம் பூதனார்
101. சேந்தன் கீரன்
102. சேரமானெந்தை
103. தங்கால் முடக் கொல்லனார்
104. தாமோதரன்
105. தாயங் கண்ணனார்
106. திப்புத்தோளார்
107. தீன்மிதி நாகன்
108. தும்பிசேர் கீரனார்
109. தூங்கலோரியார்
110. தேவ குலத்தார்
111. தோதரன்
112. தொல் கபிலர்
113. நக்கீரனார்
114. நம்பி குட்டுவன்
115. நரிவெரூஉத்தலையார்
116. நன்னாகையார்

117. நாகம்போத்தன்
118. நாமலார் மகன் இளங் கண்ணன
119. நெடும் பல்லியத்தை
120. நெடு வெண்ணிலவி னார்
121. நெய்தற் காக்கியர்
122. படுமரத்து மோசி கீரனார்
123. படுமரத்து மோசி கொற்றன்
124. பதடிவைகலார்
125. பதுமனார்
126. பரணர்
127. பரூஉ மோவாய்ப் பதுமன்
128. பனம்பரனார்
129. பாண்டியன் பன்னாடு தந்தான்
130. பாண்டிய ஏனாதி நெடுங்கண்ணன்
131. பாரகாபரன்
132. பாலை பாடிய பெருங் கடுங்கோ
133. பூங்கண்ணன்
134. பூங்கணுத்திரையார்
135 பூதத்தேவன்
136. பூதம்புல்லன்
137. பெருங்கண்ணனார்
138. பெருங்குன்றூர்கிழார்
139. பெருஞ்சாத்தன்
140. பெருந்தோட் குறுஞ் சாத்தன்
141. பெரும்பதுமனார்
142. பெரும்பாக்கன்
143. பேயனார்
144. பேயார்
145. பேரி சாத்தனார்
146. பேரெயின்முறுவலார்
147. பொதுக் கயத்துக் கீரந்தை
148. பொன்மணியார்
149. பொன்னாகன்
150. மடல் பாடிய மாதங் கீரனார்
151. மதுரைக் கடையத் தார் மகன் வெண் ணாகன்
152. மதுரைக் கண்டரதத் தன்
153. மதுரைக் கண்ணனார்
154. மதுரைக் கதக்கண் ணன்
155. மதுரைக் காஞ்சிப் புலவன்
156. மதுரைக் கொல்லன் புலவன்
157. மதுரைச் சீத்தலைச் சாத்தனார்
158. மதுரை நல்வெள்ளி யார்
159. மதுரைப் பெருங் கொல்லன்
160. மதுரை மருதங்கிழார் மகன் இளம்போத்தன்
161. மதுரை மருதனிள நாகனார்
162. மதுரையளக்கர் ஞாழார் மகன் மள்ளன்
163. மதுரையறுவை வணி கன் இளவேட்டனார்
164. மதுரை ஆசிரியன் கோடங் கொற்றே வன்

165. மதுரைஈழத்துப்பூதன்
166. மதுரை எழுத்தாளன் சேந்தன்
167. மதுரைவேளாதத்தன்
168. மள்ளனார்
169. மாங்குடிகிழார்
170. மாங்குடி மருதனார்
171. மாடலூர்கிழார்
172. மாதிரத்தன்
173. மாமலாடன்
174. மாமூலனார்
175. மாயெண்டன்
176. மாலைமாறன்
177. மாவளத்தான்
178. மிளைக்கந்தன்
179. மிளைகிழான் நல் வேட்டனார்
180. மிளைப்பெருங்கந்தன்
181. மிளைவேள் தித்தன்
182. மீனெறி தூண்டிலார்
183. மோசி கீரனார்
184. மோசி கொற்றன்
185. மோதாசனார்
186. வடம வண்ணக்கன்
187. வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்
188. வடமன் தாமோதரன்
189. வருமுலையாரித்தி
190. வாடாப் பிரமந்தன்
191. வாயிலான் தேவன்
192. வாயிலிளங் கண்ணன்
193. விட்ட குதிரையார்
194. வில்லக விரலினார்
195. விற்றூட்டு மூதெயின னார்
196. வெண் கொற்றன்
197. வெண் பூதன்
198. வெண் பூதியார்
199. வெண் மணிப்பூதி
200. வெள்ளி வீதியார்
201. வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்
202. வேட்ட கண்ணன்
203. வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்

இப்புலவருள் அரச மரபினர் சிலர் உளர். அவருள் கருவூர்ச் சேரமான் சாத்தன், சேரமானெந்தை, நம்பி குட்டுவன், பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பவர் சேர அரச மரபினர் ஆவர். மாவளத்தான், கோப்பெருஞ்சோழன் என்பவர் சோழ அரச மரபினர்ஆவர். குறுவழுதி, பாண்டியன் பன்னாடு தந்தான் என்ற இருவரும் பாண்டிய அரச மரபின ராவர். மிளைவேல் தித்தன் என்பவன் ஒரு சிற்றரசனாய் இருத்தல் வேண்டும். ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன் என்பவனும் அரச மரபினனேயாவன்.

அக்கால அரசியல் உயர் அலுவலாளருள் சிலரும் கவி பாடும் ஆற்றல் பெற்று விளங்கினர். வள்ளுவன் என்பது அரசாங்க உள்படு கருமத் தலைவனுக்கு வழங்கப்பட்ட அலுவல் பெயராகும். அரசாங்கச் செய்திகளை அரசனுக்கு அறிவித்துவந்த உள்படு கருமத் தலைவன் 'செய்தி வள்ளுவன்' எனப்பட்டான்போலும்! அவனது இயற்பெயர் பெருஞ்சாத்தன் என்பது. அவன் இந்நூலில் ஒரு பாடலைப் பாடியுள்ளான்.

படைத்தலைவருள் சிறந்தவன் 'ஏனாதி' என்ற பட்டத்தைப் பெற்றிருந்தான். அவன் பாண்டியனுக்குப் படைத் தலைவன் ஆதலின் 'பாண்டியன் ஏனாதி' எனப்பட்டான். அவனது இயற்பெயர் நெடுங்கண்ணன் என்பது. அவனும் ஒரு செய்யுள் பாடியுள்ளான்.

நாணயங்களைப் பரிசோதித்த அரசாங்க அலுவலன் வண்ணக்கன் எனப்பட்டான். அவன் வடநாட்டான் அல்லது சுமார்த்தப் பிராமணருள் ஒரு பிரிவினன் ஆதலால் 'வடமன்' எனப்பட்டான் அவனும் இந்நூலில் ஒரு செய்யுளைப் பாடியுள்ளான்.

தேவகுலம் என்பது கோவிலைக் குறிக்கும். தேவகுலத்தார் என்பது கோவில் அருச்சகரை அல்லது கோவில் அதிகாரியைக் குறிக்கும். அத்தகைய ஒருவரும் ஒரு பாடலைப் பாடியுள்ளார். 'முது கண்' என்பதற்கு 'முக்கிய ஆதாரம்' என்பது பொருள். முதுகண்ணன் என்பவன் அரசியலுக்குச் சிறந்த அறிஞனாக இருந்தவன்போலும்! இக்கால அரசாங்க ஆலோசகர் (Advisor) போன்ற ஒரு பதவியாளனே முதுகண்ணன் எனப் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய உயர்ந்த அறிஞர் ஒருவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்பவர்.

ஆசிரியன் பெருங்கண்ணன், மதுரை ஆசிரியர் கோடங் கொற்றேவன், கணக்காயன் தத்தன் என்பவர் ஆசிரியத் தொழில் பூண்ட புலவர் பெருமக்கள். மதுரை எழுத்தாளன்

சேந்தன் என்பவர் நூலாசிரியராகவோ அரசாங்க எழுத்தாள ராகவோ இருந்திருத்தல் வேண்டும்.

இசையிலும் கூத்திலும் வல்லபெருமக்களும் இயற்றமிழ்ப் புலவர்களாய்த் திகழ்ந்தனர் என்பது உறையூர் முதுகூத்த னார், வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன், குழல் தித்தன் என்ற பெயர்களைக் கொண்டு அறியப்படும்.

ஊர்தோறும் பண்டப்பொதிகளைக் கொண்டு சென்று பேரிகையடித்து வாணிகம் செய்தவர் பேரிகைச் செட்டிமார் எனப்பட்டனர். அவருள் ஒருவரே பேரி சாத்தனார் என்பவர். மதுரைச் சீத்தலைச் சாத்தனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் ஆகிய மூவரும் வணிகராவர்.

வீடுகட்டும் தொழிலாளர் கொற்றனார் எனப்பட்டனர். உறையூர் முது கொற்றனார், கொற்றனார், செல்லூர்க் கொற்றன், படுமரத்து மோசி கொற்றன், காஞ்சிக் கொற்றன், கூழிக்கொற்றன் ஆகிய அறுவரும் கட்டடத் தொழிலாளர். இவர்கள் பாடிய பாக்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இரும்பு, பொன் தொழிலாளர் கொல்லர் எனப்பட்டனர். அவர்களும் புலவர்களாய்த் திகழ்ந்தனர். கொல்லன் அழிசி, தங்கால் முடக் கொல்லனார், மதுரைக் கொல்லன் புலவன், மதுரைப் பெருங்கொல்லன் என்பவர் பாடிய பாடல்கள் இந் நூலில் உள்ளன.

**பெண்பாற் புலவர்கள்**

சங்ககாலப் புலவருள் மெல்லியலாரும் இடம் பெற்றிருந் தனர். அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கச்சிப் பேட்டு நன்னாகையார், கழார்க்கீரன் எயிற்றி, காக்கை பாடினியார் நச்செள்ளை யார், நன்னாகையார், நெடும்பல்லியத்தை,[2] பூங்கண்

2. இயம்—வரத்தியம்; நெடும்பல்லியம்—நீண்ட பல வாத்தியங்கள். இவற்றை வாசித்தவன் 'நெடும்பல்லி யத்தன்' எனப்பட்டான். இவற்றை வாசித்தவள் 'நெடும் பல்லியத்தி' எனப்பட்டாள்.

உத்திரையார், மதுரை நல்வெள்ளியார், வருமுலையாரித்தி, வெண்பூதி, வெண்மணிப்பூதி, வெள்ளிவீதி என்பவர் குறுந்தொகைப் பாடல்களுள் சிலவற்றைப் பாடிய பெண்பாற் புலவராவர். இவருட் சிலர் நெடுநில மன்னராலும், குறுநில மன்னராலும் பெரிதும் மதிக்கப் பெற்றவராவர்; சங்ககாலப் பெண் கல்வி எந்த அளவு உயர்ந்த நிலையில் இருந்திருத்தல் வேண்டும் என்பதை இப்பெருமாட்டிகளின் பாடல்களைக் கொண்டு இனிதின் அறியலாம்.

கபிலர், பரணர் போன்ற புலவர் பெருமக்களே நாட்டில் பலராவர். அவர்கள் பேரரசரையும் சிற்றரசரையும் வள்ளல் களையும் நாடிச் சென்று அவர்தம் ஆதரவு பெற்று நற்ற மிழை நலமுற வளர்த்துவந்தனர்.

**அரசர் :** குட்டுவன் (34), பெரும்பூண் பொறையன் (89), திண்டேர்ப் பொறையன் (128) என்ற சேரமன்னர் இந்நூற் பாக்களில் குறிக்கப்பட்டுள்ளனர்; 'வளங்கெழு சோழர்' (116) குறிக்கப்பட்டுள்ளனர்; பசும்பூண் பாண்டி யன் (393) ஒருவன் குறிக்கப்பட்டுள்ளான்.

**சிற்றரசர் :** இன்ன சிற்றரசன் நாட்டைப்போன்ற அல்லது நகரம் போன்ற சிறப்புடையவள் தலைவி என்றும், களவைப் பற்றிய அலர் இன்ன அரசர்கள் போரிட்டு வெற்றி பெற்றபொழுது உண்டான ஆரவாரத்தினும் மிகுதியாக இருந்தது என்றும் கூறப்பெற்ற சந்தர்ப்பங்களில் சிற்றரசர் பெயர்களும் ஊர்களும் பிறவும் இப் பாடல்களில் குறிக்கப் பெற்றுள்ளன. இங்ஙனம் குறிக்கப்பெற்ற சிற்றரசர் பெயர்களையும் அவர்தம் இயல்புகளையும் கீழே காண்க. கட்டி[3] என்பவனது நாட்டுக்கு அப்பால் வடுகர் வாழ் கின்றனர் (11). எவ்வி (19), நன்னன்-பெண்கொலை

3. இம்மரபினர் கட்டிதேவன், கட்டியதேவன் எனப்பிற் காலச் சோழர் ஆட்சியில் சிற்றரசராய் இருந்த தெலுங்க ராவர்.

புரிந்தவன் (73,291), எழினி (80), ஆய் (84), அஞ்சி-தகடூர் அதியமானஞ்சி (91), வல்வில் ஓரி-கொல்லி மலைத் தலைவன் (100), தொன்று முதிர் வேளிர் (164), பாரி (196), மலையன்-திருக்கோவலூரையும் முள்ளூரையும் ஆண்டவன் (312), ஓரி (199), நள்ளி (210), அழிசி (257), தொண்டையர் (260), ஆதி அருமன் (293), அகுதை (298), விச்சிக்கோ (328).

**ஊர்கள் :** காஞ்சியூர் (10), மரந்தை (34, 116), சிறு நல்லூர் (பொதுப் பெயர் 55, 345), உறந்தை (116), தொண்டி (128, 210, 238), குன்றூர் (164), முள்ளூர் (312), குறும்பூர் (328).

ஊரில் தெருக்கள் பல இருந்தன. அந்தணர் தெரு 'ஆசில் தெரு' எனப்பட்டது (272). ஊரில் பலர் கூடிக் கடவுளை வணங்கவும் ஊர்ச் செய்திளைப் பேசவும் மன்றம் இருந்தது (241). ஊரார் உண்ணுதற்கும் நீராடுவதற்கும் ஊருக்கு அண்மையில் பொய்கைகள் இருந்தன (113, 370). ஊருக்கு அண்மையில் பொய்கையும் அதற்கு அப்பால் சிறிது தொலைவில் காட்டாறும் இருந்தன என்று ஒரு செய்யுள் கூறுகின்றது (113). சில ஊர்களில் கேணிகள் இருந்தன (369).

**சிறப்புச் செய்திகள் :** குறிஞ்சி நிலத்தில் குறவன் மரங்களை வெட்டி நிலத்தை உழுது தினை விதைப்பான் (214); தினை அறுவடையானதும் மீண்டும் தினை விதைப் பான்; அப்பொழுது அவரையையும் உடன் விதைப்பான் (82). அவன் யானையாலும் எட்டமுடியாதபடி குன்றின்மீது கட்டப்பட்ட பரணிலும் வேங்கை மரத்தின்மீது கட்டப்பட்ட பரணிலும் இருந்து தினைப்புனத்தைக் காப்பான்; யானை முதலிய விலங்குகள் வந்து பயிரை மேயாதபடி இரவில் கொள்ளியைக் காட்டுவான். தீயைக் கண்ட விலங்குகள் விலகி ஓடும். இங்ஙனம் மிகவுயர்ந்த பரணில் இருந்தமை யால் அவன் 'சேணோன்' எனப்பட்டான் (150, 357).

புலாப் பழங்களைக் குரங்குகள் குடைந்து தின்பது வழக்கம். குறவன் அவற்றைப் பிடிக்க மரத்தில் வலை கட்டுவது வழக்கம் (342).

கொல்லி மலையின் ஒரு பகுதியில் செதுக்கப்பட்ட ஒரு பாவை **கொல்லிப்பாவை** எனப்பட்டது (89, 100). பாறையில் உருவம் செதுக்கும் **சிற்பக்கலை** அறிவு அக்காலத்தில் இருந்தது என்பது இதனால் தெரிகிறது. மகளிரின் தோள் மீதும் மார்புமீதும் சந்தனக் குழம்பு கொண்டு வரிக்கோலம் எழுதப்பட்டது. இது **ஓவியக்கலை** அறிவை உணர்த்துகிறது. பறை, பணிலம் (15), பதலை (59), முழவு (71), தட்டைப்பறை (1?3), குளிர் (197, 291, 360), முரசு (365) முதலிய இசைக் கருவிகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. தெய்வ வழிபாட்டில் பலவகை இசைக்கருவிகள் ஒலிக்கப்பட்டன (263). பாணர் பலவகை யாழ்களைக் கொண்டு **இசைக்கலையை** வளர்த்தனர் (323, 336). நடனம் ஆடுபவள் ஆடுகளமகள் எனப்பட்டாள். ஆண்மகன் ஆடுகளமகன் எனப்பட்டான். **கூத்தர்** என்பவர் துணங்கை முதலிய கூத்து வகைகளையும் கதையைத் தழுவிவரும் கூத்துகளையும் ஆடினர். அவர் 'கோடியர்' என்றும் பெயர் பெற்றனர் (78).

பெரும் புண்ணியம் செய்தவருக்கே அமுதவுணவு பெறுதற்குரியது. சுவர்க்கம் 'பெரும் பெயர் உலகம்' எனப்பட்டது. இவ்விரண்டையும் பெறுக என்று வாழ்த்துவதும் அக்கால மரபு (83, 201). 'கடவுள்' என்னும் சொல் 'முனிவர்' என்னும் பொருளிலும் வந்துள்ளது (203). மலைப்பக்கத்தில் சூலத்தை ஏந்திய பெண்தெய்வம் 'சூலி' என்ற பெயருடன் வணங்கப்பட்டது. அக்கால மக்கள் நல்வினை தீவினைகளில் நம்பிக்கை பெற்றிருந்தனர் (246); நிரையம் (நரகம்) இருந்ததென்று நம்பினர் (258). உயிர்களை உடலிலிருந்து பிரிப்பவன் கூற்றம் எனப்பட்டான். (267). நோன்பிருந்தவர் நோற்றோர் எனப்பட்டனர் (344).

இதனால் நோன்பிருக்கும் வழக்கம் இருந்தது என்பது தெரிகிறது.

**அணிகள் :** சங்கு வளையல்களும் சங்கு மணிமாலைகளும் இருந்தன (11, 23). மகளிர் பொன்னால் செய்யப்பட்ட தலையணிகளை அணிந்திருந்தனர் (21); உருண்டையான பொற்காசுகள் கோக்கப்பட்ட காசுமாலைகளை அணிந்திருந்தனர் (67). நுண்பூண் (47), பூங்குழை (159), மின்னிழை (246), சேயிழை (281), மாணிழை (348) என்னும் தொடர்கள் அக்கால அணிகள் பெற்றிருந்த வேலைப்பாட்டினை நன்கு உணர்த்துவனவாகும். பொன்னாலும் மணியாலும் இயற்றப்பட்ட **மேகலை** என்னும் அணியும் இருந்தது (264). செல்வச் சிறுவர் காலணி பொன்னால் இயன்றது; அது மலரும் பருவத்துக் கொன்றை அரும்பினை ஒத்த பொன்மணிகளைக் கொண்டது. பொன்னை உரைத்து அதன் மாற்றை அறிவதற்கு இருந்த கல் 'கட்டளைக்கல்' எனப்பட்டது (192).

**ஆரியக்கூத்தர்** மூங்கிலில் கட்டிய கயிற்றின்மேல் நின்று ஆடினர். அப்போது பறை கொட்டப்பட்டது (7). கண்ணாடியுள் தோன்றும் பாவை (நமது உருவம்) ஆடிப்பாவை எனப்பட்டது (8). ஆலமரத்தடியில் **ஊரவை** கூடுதல் மரபு (15); சொல்வன்மை புலப்படப் பேசிய பாணன் '**இளமாணாக்கன்**' எனப்பட்டான் (33) விழா நிகழ்ந்த ஊர் '**சாறு கொள் ஊர்**' எனப்பட்டது (41).

புத்தர் காலத்தில் சிறப்புற்ற **பாடலிபுரம்** பல நூற்றாண்டுகள் மகத நாட்டின் தலைநகராய்ப் பொலிவுற்றிருந்தது. அது சோணை யென்னும் துணையாறு கங்கையைக் கூடும் இடத்தில் அமைந்திருந்தது. அத் தலைநகரத்து யானைகள் சோணையாற்றில் நீராட்டப்பட்டன என்றும், பாடலி செல்வச் சிறப்புடையது என்றும் படுமரத்து மோசிகீரனார் என்ற புலவர் பாடியுள்ளார் (75). வடநாட்டுச் செய்திகள் எந்த அளவு தமிழகத்தில் பரவியிருந்தன என்ப

தற்கு இஃது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இஃது உள் நாட்டு வாணிகத்தால் அறியப்பட்ட செய்தியாகும்.

பெண்கள் கூந்தலுக்கு எரு மண்ணையிட்டுப் பிசைவர் (113). மகளிர் கூந்தல் **குழல், அளகம், கொண்டை, பனிச்சை, துஞ்சை** என்று அதன் பகுப்பைக் கொண்டு ஐவகைப் பட்டது (269). ஆண்களின் தலைமயிர் 'ஓரி' எனப் பெயர் பெற்றது (229).

**நாழிகைக் கணக்கர்** இரவில் உறங்காது காலக் கணக்கை ஆராய்ந்து அறிவித்து வந்தனர் (261). தலைவன் செல்வத்தை ஈட்டுவதையே முதற் கடமையாகக் கொண் டான் (331). பரம்பரையாக வந்த பெரிய செல்வர் 'பெருமுது செல்வர்' எனப்பட்டனர் (337).

**பண்பாடு :** அகப்பொருள் பற்றிய இந்நூற் பாடல் களில் பழந்தமிழர் பண்பாட்டை அறிவிக்கும் செய்திகள் பல கிடைக்கின்றன. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண் போம்:

வினையே ஆடவர்க்கு உயிர்; மகளிர்க்கு ஆடவர் உயிர் (135). தன்பொருள் பலருக்கும் பயன்பட வேண்டும் என் னும் நல்லெண்ணம் கொண்டவன் 'கடப்பாட்டாளன்' எனப்பட்டான் (143). தாம் கண்டறிந்ததொன்றை மறைத் துப் பொய்க்கரி கூறும் இயல்பு அறிவால் அமைந்த பெரியோருக்கு இல்லை (184). திறமையுள்ளோர் செய்யும் செயல் அறத்தொடு பொருந்தியதாகும் (247). அறிவால் அமைந்த பெரியோர் தம்மைப் பிறர் புகழ்வதற்கு நாணுவர். அத்தகையோர் தம்மீது பிறர் கூறும் பழிச் சொல்லைப் பொறார் (252). நடுவு நிலைமையுடைய சான்றோரைக் காணும் மக்கள் அவர்களை எதிர்கொள்ளுதல் முதலிய கடமைகளைத் தவறாது செய்வர் (265). தம்முடைய முன் னோரால் தேடி வைக்கப்பெற்ற செல்வத்தைச் செலவழிப் போர் செல்வர் என்று சொல்லப்படார். தாமாக ஈட்டிய

பொருள் இல்லாதவர் முன்னோர் பொருளின் பயனைத் துய்த்து வாழ்தல் இரத்தலைக் காட்டிலும் இழிவுடையது (283).

பெரியோர் தம் நெஞ்சத்தில் நினைந்த ஒன்றனை நடத்தியே தீருவர் (341). சான்றோர் பிறர் உற்ற வறுமைத் துன்பத்திற்கு அஞ்சி அவர்கள் இரந்தவற்றைக் கொடுப்பர்; பிறகு தாம் கொடுத்த அவற்றைத் 'தருக' என்று சொல்லுதலைக் காட்டினும் தம்முயிரை மகிழ்ச்சியோடு இழப்பர் (349). செல்வம் நிலையில்லாத பொருள் (350).

மேலே கூறப்பெற்ற உயர்ந்த கருத்துகள் பழந்தமிழர் பண்பாட்டினை நன்கு விளக்கும் சான்றுகள் அல்லவா?

**மேற்கோள் :** இந்நூல் சொற்களும் தொடர்களும் பிற சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவ்வாறே காலத்தால் பிற்பட்ட நூல்களுக்கும் இவை எங்ஙனம் துணை செய்தன என்பதை இங்குக் காணலாம்:

**1. ''நீர்வார் கண்ணை நீயிவண் ஒழிய**
**யாரோ பிரிகிற் பவரே சாரல்'' 22**

**''நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்**
**யாரை யோநீ மடக்கொடி யோய்என''**
**—சிலம்பு, காதை 20, வரி 48-49.**

**2. ''கடும்புனல் தொகுத்த நடுங்கஞர் அள்ளல்''**
**103**

**''ஆரஞர் உற்ற வீரபத் தினிமுன்''**
**—சிலம்பு, காதை 22, வரி 155.**

**3. ''வென்றி நெடுவேள் என்னும் அன்னையும்'' 111**

**''நெடுவேள் குன்றம் அடிவைத் தேறி''**
**—சிலம்பு, காதை 23, வரி 190.**

**4. ''பழுமரம் படரும் பையுள் மாலை'' (172)**

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால்''
—குறள் 216.

5. ''மறந்தோர் மன்ற மறவாம் நாமே'' (200)

''நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்''
—சிலம்பு, காதை 7, செ, 32.

6. ''கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை'' 216

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு''
—குறள் 400.

7. ''பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே''(216)

''பாடமை சேக்கையுள் புக்குத்தன் பைந்தொடி''
—சிலம்பு, காதை 9, வரி 67.

8. ''பேதை மையாற் பெருந்தகை கெழுமி
நோதகச் செய்ததொன் றுடையேன் கொல்லோ''
230

''பேதைமை யொன்றோ பெருங்கிழமை
யென்றுணர்க
நோதக்க நட்டார் செயின்''
—குறள், 805.

9. ''வாலெயி(று) ஊறிய வசையில் தீநீர்'' 267

''பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்''
—குறள், 1121.

10. ''ஆள்வினை மருங்கில் பிரியார் நாளும்'' 267

''ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்''
—குறள், 1022.

**வட சொற்கள்**

தொல்காப்பியர்க்கு முன்னரே தமிழகத்தில் வடமொழியாளர் இடம் பெற்றுவிட்டனர் என்பதும், அவர்தம் சமயக் கருத்துகளும் சொற்களும் தமிழ் மொழியில் இடம் பெற்று விட்டன என்பதும் முன்பே பல முறை கூறப்பட்டன அல்லவா? எனவே, இந்நூற்பாக்களிலும் சில வடசொற்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் அவுணர் (1), யாமம் (5), சகடம் (165), நேமி (189), ஆத்திரை (யாத்திரை—293), ஆதி (293), ஆரம் (மாலை—321) என்பன குறிக்கத் தக்கவை. முருகன் அவுணரைக் கொன்றமை (1) கூறப் பட்டுள்ளது. அமிழ்தம் கூறப்பட்டுள்ளது (83, 201). அந்தணர்க்கு நீரோடு சொரிதல் வழக்கிற்கு வந்துவிட்டது (233). பார்ப்பனப் பாங்கன் களவு மணத்தில் இடம் பெற்று விட்டான் (156).

இந்நூற்பாக்களைப் பாடிய புலவருள் ஏறத்தாழ முப்பதின்மர் பெயர்களில் வடசொற்கள் காணப்படுகின்றன. ஆரிய அரசன் யாழ்ப்பிரமதத்தன், உருத்திரன், உருத்திரன் கண்ணன், உரோடகத்துக்காரன், உலோச்சன், ஓதஞானி, (கருவூர்) ஓதஞானி, சாண்டிலியன், கரவீரன், தத்தன், கபிலர், பவுத்திரன், ஆத்திரையன், கந்தரத்தன், குலபதி, சத்தி நாதன், தாமோதரன், வடமன் தாமோதரன், தேவ குலத்தார், தேரதரன், பதுமனார், பரணர், பாரகாபரன், பூதத் தேவன், பூதம் புல்லன், கண்டரத்தன், மாதிரத்தன், மோதாசன், பிரமந்தன் என்னும் பெயர்களைத் தமிழ்ப் புலவர்கள் பெற்றிருந்தனர் என்பது கவனித்தற்குரியது. இவற்றை நோக்க, வடமொழியாளர் செல்வாக்குத் தமிழகத்தில் படிப்படியாக உயர்ந்து வந்ததை அறியலாம்.

# 12. நற்றிணை

## முன்னுரை

இவ்வகப்பொருள் நூல் நானூறு அகவற் பாக்களை யுடையது. பாக்கள் ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டு அடிப் பெருமையும் உடையவை. இந்நூல் மிகச் சிறந்த அகத்திணை இலக்கியம். 187 புலவர் பாடிய பாக்கள் இந் நூலில் அடங்கியுள்ளன. இந்நூலைத் தொகுப்பித்தோன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்பவன். தொகுத்தவர் இன்னவர் என்பது தெரியவில்லை. காலஞ் சென்ற பெரும் புலவர் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள் இந்நூற்பாடல்கட்குப் பொழிப்புரை முதலியன எழுதியுள்ளனர். அப்பெரியார் தொண்டு பாராட்டத்தக்கது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரும் அண்மையில் இந் நூலுக்கு உரையெழுதி வெளியிட்டுள்ளனர்.

**நற்றிணையில் செய்யுட்களைப் பாடிய புலவர்கள்—187 பேர்**[1]

1. அகம்பன் மாலாதனார்
2. அஞ்சில் அஞ்சியார்
3. அஞ்சில் ஆந்தையார்
4. அம்மள்ளனார்
5. அம்மூவனார்
6. அம்மெய்யனாகனார்
7. அல்லங்கீரனார்
8. அறிவுடைநம்பி
9. ஆலங்குடி வங்கனார்
10. ஆலம்பேரிசாத்தனார்
11. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்
12. இடைக்காடனார்
13. இளங்கீரனார்
14. இளந்திரையனார்
15. இளந்தேவனார்

---

1. 175 சங்கப்புலவர்கள் பாடியுள்ளனர் என்று தஞ்சை சீநிவாசப் பிள்ளையவர்களும் S. வையாபுரிப் பிள்ளையவர்களும் கூறுவர்.-தமிழ் வரலாறு பக். 34; தமிழ் மொழி-இலக்கிய வரலாறு, பக். 24.

16. இளநாகனார்
17. இளம் புல்லூர்க் காவிதி
18. இளம்போதியார்
19. இளவெயினனார்
20. இளவேட்டனார்
21. இனிசந்த நாகனார்
22. உக்கிரப் பெருவழுதி
23. உரோடோகத்துக் கந்தரத்தனார்
24. உலோகச்சனார்
25. உறையூர்க் கதுவாய் சாத்தனார்
26. எயினந்தை மகன் இளங்கீரனார்
27. எயினந்தையார்
28. ஐயூர் முடவனார்
29. ஒரு சிறைப் பெயரியனார்
30. ஓரம்போகியார்
31. ஔவையார்
32. கச்சிப்பேட்டு [2] இளந்தச்சனார்
33. கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்
34. கடுவன் இளமள்ளனார்
35. கண்ணகனார்
36. கண்ணகாரன் கொற்றனார்
37. கண்ணங் கொற்றனார்
38. கண்ணம் புல்லனார்
39. கணக்காயனார்
40. கணிபுன் குன்றனார் (கணியன் பூங்குன்றனார்)
41. கதப்பிள்ளைச் சாத்தனார்
42. கந்தரத்தனார்
43. கபிலர்
44. கயமனார்
45. கருவூர்க் கோசனார்
46. கழார்க்கீரன் எயிற்றியார்
47. கள்ளம் பாளனார்
48. கள்ளிக்குடிப் பூதம் புல்லனார்
49. காசிபன் கீரனார்
50. காஞ்சிப் புலவனார்
51. காப்பியஞ் சேந்தனார்
52. காமக்கணிப்பசலையார்
53. காரிக்கண்ணனார்
54. காவன் முல்லைப் பூதனார்
55. காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனார்
56. கிடங்கில், காவிதி, கீரங்கண்ணனார்
57. கிடங்கில், காவிதி, பெருங்கொற்றனார்
58. கிள்ளிமங்கலங் கிழார் மகனார் சோகோவனார்
59. கீரங்கீரனார்
60. குடவாயிற்கீரத்தனார்

---

2. கச்சிப்பேடு என்பது பழைய காஞ்சி நகரத்தை அடுத்திருந்த பகுதி; இன்றைய யதோத்காரி கோவிலும் கச்சிநெறிக் காரைக்காடு கோவிலும் உள்ள பகுதி. பராந்தக சோழன் I காலத்தில் சோழர் அரண்மனை கச்சிப்பேட்டில் தான் இருந்தது.

—21 of 1921, 420 of 1902; S.I.I III. 142

61. குண்டுகட் பாலியாதனார்
62. குதிரைத் தறியனார்
63. குளம்பனார்
64. குறமகள் குறியெயினி
65. குன்றியனார்
66. குன்றூர்கிழார் மகனார் கண்ணத்தனார்
67. கூடலூர் பல்கண்ணனார்
68. கூற்றங் குமரனார்
69. கொள்ளம் பக்கனார்
70. கொற்றங் கொற்றனார்
71. கொற்றனார்
72. கொட்டம் பலவனார்
73. கோக்குளமுற்றனார்
74. கோட்டியூர் நல்லந்தையார்
75. கோண்மா நெடுங்கோட்டனார்
76. கோவூர்கிழார்
77. கோளியூர் கிழார் மகனார் செழியனார்
78. சல்லியங்குமரனார்
79. சாத்தந்தையார்
80. சிறுமோலிகனார்
81. சிறைக்குடி யாந்தையார்
82. சீத்தலைச்சாத்தனார்
83. செங்கண்ணனார்
84. செம்பியனார்
85. சேகம் பூதனார்
86. சேந்தங் கண்ணனார்
87. சேந்தம் பூதனார்
88. தங்கால், ஆத்திரேயன் செங்கண்ணனார்
89. தங்கால் பொற்கொல்லன்வெண்ணாகனார்
90. தனிமகனார்
91. தாயங்கண்ணனார்
92. தும்பிசேர் கீரனார்
93. துறைக் குறுமாவிற் பாலங்கொற்றனார்
94. தூங்கல் ஓரியார்
95. தேய்புரிப் பழங்கயிற்றனார்
96. தேவனார்
97. தொண்டைமான் இளந்திரையன்
98. தொல்கபிலர்
89. நக்கண்ணையார்
100. நக்கீரர்
101. நப்பாலத்தனார்
102. நம்பி குட்டுவனார்
103. நல்லந்துவனார்
104. நல்லாவூர் கிழார்
105. நல்லூர்ச் சிறுமேதாவியார்
106. நல்விளக்கனார்
107. நல்வெள்ளியார்
108. நல்வேட்டனார்
109. நற்சேந்தனார்
110. நற்றங் கொற்றனார்
111. நற்றமனார்
112. நிகண்டன், கலைக்கோட்டுத் தண்டனார்
113. நெய்தல் தத்தனார்
114. நொச்சிநியமங்கிழார்
115. பரணர்
116. பராயனார்
117. பாரதம் பாடிய பெருந்தேவனார்
118. பாண்டியன் மாறன் வழுதி
119. பாலை பாடியபெருங்கடுங்கோ

120. பிசிராந்தையார்
121. பிரமசாரி
122. பிரான் சாத்தனார்
123. புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர் கிழான்
124. பூதங்கண்ணனார்
125. பூதன் தேவனார்
126. பூதனார்
127. பெருங்கண்ணனார்
128. பெருங்குன்றூர் கிழார்
129. பெருங் கௌசிகனார்
130. பெருந்தலைச் சாத்தனார்
131. பெருந்தேவனார்
132. பெரும் பதுமனார்
133. பெருவழுதி
134. பேராலவாயர்
135. பேரி சாத்தனார்
136. பொதும்பில் கிழார்
137. பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார்
138. பொய்கையார்
139. போதனார்
140. மடல் பாடிய மாதங்கீரனார்
141. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்
142. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
143. மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்
144. மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார்
145. மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்
146. மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்
147. மதுரைக் கண்ணத்தனார்
148. மதுரைக் காருலவியங் கூத்தனார்
149. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்
150. மதுரைச் சுள்ளம் போதனார்
151. மதுரைப் பள்ளி மருதங்கிழார் மகனார் சோகுத்தனார்
152. மதுரைப் பூவண்டநாகன் வேட்டனார்
153. மதுரைப் பெருமருதனார்
154. மதுரைப்பெருமருதிளநாகனார்
155. மதுரைப் பேராலவாயர்
156. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்
157. மதுரை மருதனிளநாகனார்
158. மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்
159. மருதம் பாடிய இளங்கடுங்கோ

160. மலையனார்
161. மள்ளனார்
162. மாறன் வழுதி
163. மாங்குடி கிழார்
164. மாமூலனார்
165. மாறோக்கத்து நப்பசலையார்
166. மிளைகிழான் நல்வேட்டனார்
167. மீளிப் பெரும் பதுமனார்
168. முக்கல், ஆசான் நல்வெள்ளையார்
169. முடத்திருமாறன்
170. முதுகூற்றனார்
171. முப்பேர் நாகனார்
172. முறுவெங் கண்ணனார்
173. மூலங்கீரனார்
174. மோசி கண்ணத்தனார்
175. மோசி கீரனார்
176. வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்
177. வடம வண்ணக்கன் சொருமருங் குமரனார்
178. வண்ணப்புறக் கந்தரத்தனார்
179. வன்பரணர்
180. வாலம் பேரி சாத்தனார்
181. விழிக்கட் பேதைப் பெருங் கண்ணனார்
182. விற்றூற்று வண்ணக்கன் தத்தனார்
183. வினைத்தொழிற் சோகீரனார்
184. வெள்ளியந் தின்னனார்
185. வெள்ளி வீதியார்
186. வெள்ளைக்குடி நாகனார்
187. வெறி பாடிய காமக் கண்ணியார்

இப்புலவர் பெயர்களுள் சில வடமொழிப் பெயர்களாகக் காணப்படுகின்றன. சாதேவனார், இனிசந்த நாகனார், உக்கிரப் பெருவழுதி, உரோடோகம், உலோச்சன், கந்தரத்தன், கோசன், கபிலன், காசிபன், சேகம்(பூதனார்), சிறுமோலிகனார், ஆத்திரேயன், தேவன், மேதாவியார் நிகண்டன், தத்தன், பராயன், பிரமசாரி, கௌசிகன், போதன், ஆசான் இவற்றை நோக்க, இந்நூற்பாக்கள் பாடப்பெற்ற காலத்தில் வடமொழியாளர் எந்த அளவு தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது ஓரளவு அறியப்படும். காசிபன், ஆத்திரேயன், பராயன், நிகண்டன், பிரமசாரி, கௌசிகன், உலோச்சன் முதலிய பெயர்களோடு விளங்கியவர் வடமொழியாளரென்றே கொள்ளலாம். ஆயினும் அவர்கள் தமிழரோடு கலந்து, தமிழராய் வாழ்ந்து,

தமிழ்ப் புலவராய் விளங்கி நற்றமிழில் நன்கு பாடியுள்ளனர் என்பது மறக்கற்பாலதன்று.

அரசனால் காவிதிப் பட்டம் பெற்ற வணிகப் பெரு மக்களும், அறுவை வணிகர் போன்ற பலதுறை வணிகப் பெருமக்களும், சிறுபிள்ளைகளுக்குப் பாடம் கற்பிப்பவர் முதல் பலருக்கும் கல்வி கற்பிக்கும் ஆசிரியன்மார்களும், குறத்தி முதலிய திணைநில மக்களும், கொல்லன் முதலிய பலவகைத் தொழிலாளரும் நல்லிசைப் புலவராய்த் திகழ்ந் தனர் என்பது இப் புலவர் பட்டியலைக் கொண்டு இனிதுண ரப்படும். இங்ஙனம் மக்கள் இனத்தில் எவ்வித வேறுபாடும் இன்றி **எல்லாத் தரத்தினரும் புலவர்களாய் விளங்கிய சங்க காலம் தமிழர் வரலாற்றில் பொற்காலம்** என்று கூறுவதில் தடையுண்டோ?

இனி இந்நூலுள் கூறப்பட்டுள்ள செய்திகளைக் காண் போம்:

## நூற்செய்திகள்

**அரசரும் சிற்றரசரும் :** குறுந்தொகைப் பாக்களில் குறிக்கப்பட்டாற் போலவே சேர சோழ பாண்டியர் தமக் குரிய பொதுப் பெயர்களால் நற்றிணைப் பாக்களில் குறிக்கப் பட்டுள்ளனர். ஆலங்கானத்துச் செழியன் (387) என்று நெடுஞ்செழியன் குறிக்கப்பட்டுள்ளான். சிற்றரசருள் ஓரி (6, 52, 265, 320), பழையன் (10), தித்தன் (58), அழிசி (87), மலையமான் (100, 170, 291), பெரியன் (131), ஆய் அண்டிரன் (167, 237), அன்னி (180), பாரி (253), விராஅன் (260, 350), நன்னன் (270, 391), மிஞிலி (265), தழும்பன் (300), வாணன் (340), அருமன் (367), நெடுமானஞ்சி (381), முடியன் (390) என்பவர் குறிக்கப் பட்டுள்ளனர்.

**அரசியல் :** அரசர் தம் கடமையை அறிந்து நடப்பா ராயின், அவரது ஆட்சி இன்பந்தரும் குளிர்ந்த நிழலைப்

போன்றது (146). சோழர் அறம் கெடாது நீதி வழங்கு பவர் (400). போர்க்களத்தில் களம் பாடுவாரும் இசைக் கருவியை இசைப்பவர்களும் கூடி இருந்து வெற்றி பெற்ற அரசனை வாழ்த்துவது வழக்கம் (113).

குறிஞ்சிநில ஊர்களில் **ஊர்க்காவல்** இருந்தது. காவலர் குறிஞ்சி என்னும் பண்ணைப் பாடிக்கொண்டு இரவு முழுமை யும் தூங்காமல் ஊரைக் காவல் காத்தனர் (255). நெய்தல் நில ஊர்களிலும் காவலர் யாமந்தோறும் மணியடித்து ஓசை யெழுப்பி, ''தலைக்கடை புழைக்கடை வாயில்களைப் பாது காத்துக்கொள்ளுங்கள்,'' என்று கூறிச்சென்றனர் (132).

தகுதி உடையவர் பெயரையும் அவர் வாழும் ஊரையும் ஏட்டில் வரைந்து ஊர்ப்பொது மன்றத்தில் வைத்திருப்பது வழக்கம் (365).

**ஆயன் :** ஆயன் முல்லை மலரை இரவிலே கொய்து பனங்குருத்தின் போழுடனே சேர்த்து மாலையாகத் தொடுத்து அணிவான் (169). அவன் பலவாகிய காலிட்டுப் பின்னிய மெல்லிய உறியுடனே, தீக்கடை கோல் முதலிய கருவிகளை இட்டு வைத்த தோல் பையைச் சுருக்கிக் கட்டிப் பனையோலைப்பாயோடு முதுகிற் கட்டியிருப்பான்; பால் விலை கூறி விற்பான்; கையில் கோலூன்றி இருப்பான்; அக் கோல்மீதுஒரு காலை வைத்து ஒடுங்கிய நிலையில் நிற்பான்; வாயைக் குவித்து 'வீளை' எனப்படும் அழைத்தலாகிய குறியை எழுப்புவான். அது கேட்ட ஆடுகள் பிறநிலம் புகாமல் நிற்கும் (142). ஆயர் தயிர்த்தாழியின் முடை நாற்றம் நீங்க விளம்பழம் இட்டு வைப்பர் (12).

**பரதவர்** வீடுகள் பனையோலைகளாலும் இலை களாலும் தழைகளாலும் வேயப்படும். பனை ஓலைகளோடு முட்களைச் சேர்த்துக் கட்டப்பட்ட வேலி ஊரைச் சூழ்ந்து இருக்கும் (38). பரதவர் திமிங்கிலத்தையும் வேட்டையாடு வர்; மீன்களைப் பிடித்து விடியற்காலையில் கொண்டு வருவர்; புன்னைமர நிழலில் இருந்து தேன் மணம் வீசும்

தெளிந்த கள்ளைப் பருகுவர் (328); சில சமயங்களில் கடலி லேயே சுறா மீன்களையும் வேறு பெரிய மீன்களையும் தம் திமிலிலேயே துண்டித்து இறைச்சிகளை நிரப்பிக்கொண்டு கரைக்கு வருவர் (112).

**ஊர்கள் :** இந்நூற் பாடல்களில் கீழ்வரும் ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளன: தொண்டி - சேரனுக்குரிய துறைமுக நகரம் (8, 195), போர் - பழையன் என்ற சிற்றரசனுக்கு உரியது (10), கொற்கை - பாண்டியர் துறைமுக நகரம் (23), மாந்தை - சேரநாட்டுக் கடற்கரை ஊர் (35, 395), காண்ட வாயில் - கடற்கரை ஊர், கூடல் - பாண்டியர் தலைநகரம் (39, 298), கிடங்கில் (65), சாய்க்காடு(73), பொறையாறு (131), அம்பர் (141), ஆர்க்காடு (190), மருங்கூர்ப்பட்டினம் - பாண்டிய நாட்டுக் கடற்கரை நகரம் (358), புனல்வாயில் (260), இருப்பையூர் (260), பாரம் (265), ஆறேறு (265), குன்றூர் (280), கழாஅர் (281), முள்ளூர் (291), ஊனூர் (300), வாணன் சிறுகுடி (340), அருமன் சிறுகுடி (367), குடந்தைவாயில்[3] (379), வெண்ணி (390).

**உடை :** கலிங்கம், பூங்கலிங்கம், துகில், நுண்துகில், அம்துகில் என்பன உயர்ந்த மெல்லிய ஆடை வகைகள் (20, 90, 43, 120, 366). பாலைநிலத்து ஆடவர் துவர் ஆடையை உடுத்திருந்தனர் (33). வீரர் இடையில் கச்சு அணிந்தனர் (21). கானவர் (குறிஞ்சி நிலத்து ஆடவர்) மரப்பட்டை நாரால் பின்னிய உடையை உடுத்திருந்தனர் (64). அவர்தம் மகளிர் தளிர்களையும் பூங்கொத்துகளையும் நெருக்கமாக வைத்துக் கட்டப்பெற்ற தழைகளை ஆடையாக உடுத்திருந்தனர் (204). நாரை யிறகின் மென்மையும் வெண்மையும் வாய்ந்த ஆடைகளும் வழக்கில் இருந்தன (70).

---

3. இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் 'குடவாசல்' என்பது இப்பழைய ஊரே போலும்!

**வாணிகம் :** பல நாடுகளிலிருந்தும் கப்பல்கள் வந்து துறைமுகத்தில் தங்குவது வழக்கம் (293). கடைத்தெரு **நியமம்** எனப்பட்டது (45). தமிழ் வாணிகர் வாணிகத்தின் பொருட்டு வடநாட்டிற்குச் சென்றனர்; கங்கையாற்றில் கலத்தில் சென்றனர் (189). பரதவர் மீனை விற்றுக் கள்ளைப் பெற்றனர். உப்பு வாணிகர் உப்பை விற்று நெல்லைப் பெற்றனர் (183). இவற்றை நோக்க, அக் காலத்தில் **பண்டமாற்று** வழக்கில் இருந்தமை தெளிவாகும்.

**கலைகள் :** தமிழகத்தில் ஓவியர் இருந்தனர் (118, 146, 177, 182, 268). பாணர் சீறியாழ் (38), பேரியாழ் (40) வாசித்தனர். முழவு (67), மயிர்க்கண் முரசு (93), தண்ணுமை (130), கிணைப்பறை (108), தொண்டகச் சிறு பறை (104), குடமுழா[4] (220), குழல் (69) முதலிய இசைக் கருவிகள் வழக்கில் இருந்தன. குறிஞ்சிநில மகளிர் நெல் முதலியவற்றைக் குற்றும்போது பாடிக்கொண்டே குற்றினர் (379).

**மருத்துவன்** அறவோன் எனப்பட்டான் (136); நோயை ஆராய்ந்து அந்நோய்க்குத் தக்க மருந்தையே கொடுத்தான் (136). சோதிடம் பார்த்தவர் 'கணியர்' எனப்பட்டனர். எனவே, சோதிடக்கலையும் சங்ககாலத் தமிழகத்தில் இருந்தது என்பது தெளிவாகும் (373).

**சமயம் ;** அக்கால மக்கள் தைத்திங்கள் முதல் நாளில் நீராடி நோன்பு முற்றியிருந்து உண்டனர் (22). தை மாதத்தில் குளிர்ந்த நீரில் நீராடிப் பெண்கள் நோன்பிருந்தனர் (80). நீண்ட சடையையும் அசையாத மெய்யையும் கொண்டு மலையில் தவம் செய்பவர் (தவசியர்) அக்காலத்தில் இருந்தனர் (141). கடற்கரையில் பலவகைக் கொடிகள் படர்ந்த இடங்களில் அக்கொடிகளை அறுத்து அவ்விடங்களில் நோன்பினைக் கொண்ட மாதர் உறைவது வழக்கம்.

---

4. திருத்தருப்பூண்டி—சிவன் கோவிலில் இஃதுஇன்றும் உள்ளது.

அவர்கள் 'படிவ மகளிர்' எனப்பட்டனர் (272). இவர்கள் கவுந்தியடிகள் போன்ற சமண சமயப் பெண் துறவி களாகலாம்.

**பண்பாடு**

தேரின் உருளையில் நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடி பாகன் தேரைச் செலுத்தினான் (11) என்பது, அவனுக் கிருந்த அருள் உணர்ச்சியை உணர்த்துகிறது. சங்ககால மக்கள் செல்வத்தை 'நில்லாப் பொருள்' என்றனர் (126, 241); 'மன்னாப் பொருள்' (71) என்றனர்; இன்பமும் இளமையும் விரைவில் கழிவன (46) என்னும் உண்மையை அறிந்திருந்தனர். பெரியோர் கொடிய தீத்தொழிலைச் செய்தவரிடத்து அச்செயலை நேரிலே கண்டும் உள்ளத்தால் ஆராய்ந்து அத்தொழில் செய்தோர் இனி அதனைச் செய் யாது ஒழியும்படி பலவாறு அறிவுரை கூறினர் (116); ஒன் றன் காரணமாக உண்டானதை வேறொன்றன்மேல் இட்டுக் கூறுதல் பண்புடையதன்று (117), விருந்தினர்களுக்கு உணவுப் பொருள்களைப் பகிர்ந்து கொடுத்தல் சிறந்த பண்பாடு (135) என்பவற்றைத் தமிழ்மக்கள் அறிந்திருந் தனர்; இரவில் விருந்து வரினும் உவகையோடு உபசரித் தனர் (142).

தம் வாழ்நாளும் பொருளும் பிறர் பொருட்டே என்று எண்ணி அருள்மிக்க நெஞ்சுடனே தமிழர் பொருளீட்டச் சென்றனர் (186, 286). இல்லின்கண் செயலற்று இருப்ப வர்க்கு இம்மைக்குரிய புகழும் இருமைக்கு முரிய இன்பமும், மறுமையிலும் இன்புறுவதற்கு ஏதுவாகிய இரந்தோர்க்கு ஈதல் முதலிய கொடைமையும் ஆகிய மூன்றும் கைகூடுவ தில்லை (214). புகழ் மிகும்படி அருள் உணர்ச்சியோடு வாழ்கின்றவரது செல்வம் பொலிவடையும் (217). மக்கள் மரம் பட்டுப் போகும்படி அதனிடமுள்ள மருந்தை முற்றும் கொள்ளார் (226). விருந்தினரை உபசரித்தல் உயர்ந்த பண்பாடு (258, 280, 281). ஆயுள் முதிர்ந்து

யாக்கை மூத்துத் தளர்ந்தவர் இளமையை விரும்பின் அடைதல் இயலாது; தம் வாழ் நாளின் எல்லையை எவரும் அறியார் (314). நட்பின்கண் சிறுதவறும் நேராதபடி நடத்தல் வேண்டும் (315). தீயநெறி நரகம் போன்றது (329). இவை தமிழர்தம் உயர்ந்த கருத்துகள்.

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் தோழியை நோக்கி, ''இவ்வுலகத்தில் பிறந்தவர் இறப்பர் என்பது உண்மை. கணவன் பிரிவால் இறப்பு வந்ததே என்று நான் அஞ்ச வில்லை. அவ்வாறு இறப்பின், இனிவரும் எனது பிறப்பு மக்கட் பிறப்பு இல்லாமல் வேறு ஒரு பிறப்பாக மாறிவிடின், என் காதலனை அப்பொழுது மறப்பேனோ என்று அஞ்சு கின்றேன் (397),'' என்று உள்ளம் உருக உரைத்தாள். உயிர் பல பிறவிகள் எடுக்கும் என்ற நம்பிக்கை அக் காலத்தில் இருந்தது என்பதையும், உண்மை மனைவி பல பிறவிகளிலும் தன் கணவனையே பெற விரும்புவதையும் இத்தலைவியின் கூற்று உணர்த்துகின்றது அல்லவா?

**மேற்கோள்**

நற்றிணைப் பாடல்களில் திருக்குறள் கருத்துகளும் சொற்களும் சொற்றொடர்களும் ஆங்காங்கு அமைந் துள்ளன. அவற்றை நிரலே கீழே காண்க:

1. **''நீரின் றமையா வுலகம் போலத்**
**தம்மின் றமையா நந்நயந் தருளி''** 1

**''நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு''** —குறள் 20

2. **''......................பெரியோர்**
**நாடி நட்பி னல்லது**
**நட்டு நாடார்தம் ஒட்டியோர் திறத்தே.''**
**32**

**''நாடாது நட்டலிற் கேடில்லை; நட்டபின்**
**வீடில்லை நட்பாள் பவர்க்கு''**
**—குறள் 791**

3. ''அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா''
97

''விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை எடுத்து''
—குறள் 776

4. ''மருந்துய ரவலந் தீர்க்கு
மருந்துபிறி தில்லையா னுற்ற நோய்க்கே.''
140

''பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.''
—குறள் 1102

5. ''ஆள்வினைக்கு அகறி யாயின் இன்றொடு''
205

''ஆள்வினையுடைமை''
—குறள் அதிகாரம் 62

6. ''ஐதே கம்மவிவ் வுலகுபடைத் தோனே''
240

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்
—திருக்குறள் 1062

7. ''முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்.''
355

''பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.''
—குறள் 580

8. ''உயிர்செலத் துணைதரு மாலை
செயிர்தீர் மாரியொ டொருங்குதலை வரினே.''
364

''மாலையோ வல்லை மணந்தார் உயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.''

—குறள் 1221

புறநானூறு முதலிய தொகை நூல்களிலும் சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் நற்றிணைத் தொடர்கள் சில பயின்று வருவதைக் காணலாம்.

1. ''எம்மனோரில் செம்மலும் உடைத்தே''
45

''நும்மோர் அன்ன செம்மலும் உடைத்தே''
—புறநானூறு 47

2. ''கடியுடை வியனகர்க் காவல் நீவியும்''
156

''கடியுடை வியனக ரவ்வே''
—புறநானூறு 95

3. ''நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய......''
289

''நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்''
—புறநானூறு 3

4. ''செம்மறு கொண்ட வெண்கோட் டியானை''
151

''வெண்கோட் டியானை சோனை படியும்''
—குறுந்தொகை 75

5. ''அழுமே தோழியவர் பழமுதிர் குன்றே''
88

''பழமுதிர் சோலை மலைகிழ வோனே''
—திருமுருகாற்றுப்படை

6. ''பழவிறல் நனந்தலை'' 37

''பழவிறல் மூதூர்''
—சிலம்பு, காதை 10, வரி 4

7. ''வருமழை கரந்த வானிற விசும்பின்''
76

''வருபனி கரந்த கண்ண ளாகி''
—சிலம்பு. காதை 16, வரி 97

8. ''யாரை யோநின் தொழுதனம் வினவுதும்''
155

''யாரை யோநீ மடக்கொடி யோய்என''
—சிலம்பு, காதை, 20, வரி 49

9. ''செங்கதிர்ச் செல்வன் தெறுதலின்'' 164

''காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்''
...சிலம்பு, காதை 18, வரி 51

10. ''மாலை அந்தி மாலதர் நண்ணிய'' 238

''அந்திமாலைச் சிறப்புச் செய் காதை''
சிலம்பு, காதை 4

11. இனிது பெறுமீன் எளிதினில் மாறி'' 239

''மாறி வருவன் மயங்கா தொழிகென''
—சிலம்பு, காதை 16, வரி 93

12. ''முற்றா முலையள்'' 312

''முதிரா முலை குறைத்தாள்''
—சிலம்பு, காதை 22, வெண்பா

13. ''பொன்செய் கொல்லனின் இனிய தெளிர்ப்ப''
394

''பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட''
—சிலம்பு, காதை 20, வரி 74

14. ''ஊதுலைக் குருகின் உள்ளுயிர்த் தகமும்'' 125

''ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது''
—மணிமேகலை, காதை 2, வரி 42

**உவமை முதலியன**

நற்றிணைப் பாடல்களில் உள்ளத்தைக் கவரும் உவமைகள் ஆங்காங்கு இடம்பெற்றுள்ளன (84, 97, 131, 184, 345). தற்குறிப்பேற்றம் (242), பிறிது மொழிதல் (266) போன்ற பிற அணிகள் சிலவும் இடம் பெற்றுள்ளன. இவை படித்துச் சுவைத்தற்குரியன.

**வட சொற்கள்**

நற்றிணைப் பாடல்களில் மிகச் சில வட சொற்களே இடம்பெற்றுள்ளன. அவற்றுள் வதுவை (125), தபசியர் (141), சாபம் (228), பிரசம்—வண்டு (268), தாமம் (232), அற்சிரம் (312) என்பவை குறிப்பிடத் தக்கவை.

# 13. அகநானூறு

## முன்னுரை

அகநானூற்றுப் பாடல்களின் சிறுமை பதின்மூன்று அடி; பெருமை முப்பத்தொன்று. இதற்கு **நெடுந்தொகை** என்றும் பெயர் உண்டு. இதனைத் தொகுப்பித்தவன் பாண்டியன் **உக்கிரப்பெருவழுதி;** தொகுத்தவன் மதுரை உப்பூரி குடி கிழான்மகன் உருத்திரசன்மன். இந்நூலில் முதல் நூற்றிருபது பாக்கள் 'களிற்றியானை நிரை' எனவும், 121 முதல் 300 வரையில் உள்ளவை 'மணிமிடை பவழம்' எனவும், இறுதி நூறு 'நித்திலக் கோவை' என்றும் பெயர் பெற்றுள்ளன. இச் செய்திகள் இந்நூற்பாயிரத்தில் கூறப்பட்டுள்ளன.

இப்பாயிரத்தைப் பாடியவன் இடையள நாட்டு மணக்குடியான் பால்வண்ண தேவனான வில்லவ தரையன். இவன் காலம் அறியுமாறில்லை. இவன், இந்நூலில் பாடியுள்ள புலவர் நூற்று நாற்பத்தைவர் எனக் கூறியுள்ளான். இங்ஙனம் இவன் கூறிய புலவர் எண்ணிக்கையே இலக்கிய வரலாறு எழுதியோர் அனைவரும் தத்தம் நூலில் குறித்துள்ளனர். புலவர் பெயர்களை எழுதிக் கணக்குப் பார்க்கும் போது அவர்கள் தொகை நூற்றைம்பத்தெட்டு[1] ஆகிறது. மூவர் பெயர்கள் தெரியவில்லை.

---

1. பேரி சாத்தனார் வேறு, ஆலம்பேரி சாத்தனார் வேறு. இங்ஙனமே நக்கீரர் வேறு. மதுரை நக்கீரர் வேறு, மதுரை நக்கீரனார் வேறு, கணக்காயனார் மகனார் நக்கீரனார் வேறு. இவ்வாறே மருதன் இளநாகனார் வேறு, மதுரை மருதன் இளநாகனார் வேறு. இப்படியே சீத்தலைச் சாத்தனார் வேறு, மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் வேறு.

''மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் வேறு, ஆசிரியர் நல்லந்துவனார் வேறு, அந்துவன் வேறு'' என்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். — தமிழ் மொழி—இலக்கிய வரலாறு, பக். 56, அடிக்குறிப்பு.

ஐந்திணை பற்றிய இப்பாடல்களின் வைப்பு முறை கவனித்தற்குரியது. ஒற்றை எண்பட வருபவை **பாலை** பற்றிய பாக்கள்; 10, 20, 30 என்னும் எண்களைப் பெற்று வருபவை **நெய்தல்** பற்றியவை; 4, 14, 24 என இறுதியில் 4 என்னும் எண்ணைப்பெற்று வருபவை **முல்லை** பற்றியவை; 2, 8, 12, 18 என 2, 8 என்னும் எண்களை இறுதியில் பெற்று வருபவை **குறிஞ்சித்** திணையைப் பற்றியவை; 6 என்னும் எண்ணை இறுதியில் பெற்று வருபவை (6, 16, 26 36 முதலியவை) **மருதம்** பற்றிய பாக்கள். இத்தகைய தொகுப்பு முறை குறுந்தொகையில் இல்லை. நற்றிணையிலும் இல்லை. எனவே, அவை இரண்டிற்கும் பின்னரே இந்நூல் தொகுக்கப் பெற்றிருக்க வேண்டும் என்று நினைத்தல் தகும். 'குறுந்தொகைக்கு மறுதலையான நெடுந்தொகை' என்னும்பெயரும், இப்பாடல்கள் பின்பு தொகுக்கப் பெற்றவை என்பதை வலியுறுத்துவதாகும்.

அகநானூற்றுப் பாடல்களுள் குறிஞ்சி பற்றியவை 80; பாலை பற்றியவை 200; முல்லை பற்றியவை 40; மருதம் பற்றியவை 40; நெய்தல் பற்றியவை 40.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது, முதல் தொண்ணூறு பாடல்களுக்கு மட்டுமே குறிப்புரையாக உள்ளது. அடுத்து 70 செய்யுட்களுக்கு இந்நூலின் (அகநானூற்றின்) முதல் பதிப்பாசிரியரான **வே. இராச கோபால ஐயங்கார்** என்ற அறிஞர் உரை எழுதியுள்ளார். பின்னர் நூல் முழுமைக்கும் நாவலர் **ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்களும், கரந்தைக் கவியரசு **ரா. வேங்கடாசலம் பிள்ளை**யவர்களும் சேர்ந்து உரை யெழுதியுள்ளனர். இவ்வுரையினால் இந்நூலின் சிறப்பு நன்கு விளங்குகின்றது.

இப் பாடல்களில் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து நிலங்களின் இயல்புகள் விளக்கப் பட்டுள்ளன; புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல்

என்னும் ஐவகை ஒழுக்கங்கள் தக்க உவமைகளுடன் இணையற்ற முறையில் தெளிவுறுத்தப்பட்டுள்ளன. பாடல்கள் சொற் செறிவும், பொருட் செறிவும் உடையவை.

## அகநானூற்றில் இடம் பெற்ற புலவர்கள்—158

1. அந்தியிளங்கீரனார்
2. அம்மூவனார்
3. அள்ளூர் நன்முல்லையார்
4. அண்டர் மகன் குறுவழுதியார்
5. அஞ்சியத்தை மகள் நாகையார்
6. அதியன் விண்ணத்தனார்
7. ஆலம்பேரி சாத்தனார்
8. ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
9. ஆலங்குடி வங்கனார்
10. ஆவூர் மூலங்கிழார்
11. ஆமூர்க் கவுதமன் சாதேவனார்
12. ஆவூர் கிழார் மகனார் கண்ணனார்
13. ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்
14. இடைக்காடனார்
15. இடையன் நெடுங்கீரனார்
16. இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்
17. இறங்குகுடிக் குன்றநாடன்
18. இடையன் சேந்தங் கொற்றனார்
19. இம்மென் கீரனார்
20. ஈழத்துப் பூதன் தேவனார்
21. உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார்
22. உலோச்சனார்
23. உம்பற்காட்டு இளங் கண்ணனார்
24. உவர்க் கண்ணூர்ப் புல்லங்கீரனார்
25. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
26. உறையூர் முதுகூத்தனார்
27. ஊட்டியார்
28. எயினந்தை மகனார் இளங்கீரனார்
29. எருமை வெளியனார்
30. எருமை வெளியனார் மகனார் கடலனார்
31. எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார்
32. எழூஉப் பன்றி நாகன் குமரனார்
33. ஐயூர் முடவனார்
34. ஒக்கூர் மாசாத்தனார்
35. ஒரோடோகத்துக் கந்தரத்தனார்
36. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்
37. ஒக்கூர் மாசாத்தியார்
38. ஓரம்போகியார்

39. ஔவையார்
40. கடுந்தொடைக் காவி னார்
41. கபிலர்
42. கயமனார்
43. கருவூர்க் கண்ணம் புல்லனார்
44. கருவூர்ப் பூதஞ்சாத்த னார்
45. கல்லாடனார்
46. காட்டூர் கிழார் மக னார் கண்ணனார்
47. காவன் முல்லைப் பூத ரத்தனார்
48. காவிரிப்பூம் பட்டினத் துக் காரிக் கண்ண னார்
49. காவிரிப் பூம்பட்டினத் துச் செங்கண்ணனார்
50. குன்றியனார்
51. குடவாயிற் கீரத்தனார்
52. குறுங்குடி மருதனார்
53. கடியலூர் உருத்திரங் கண்ணனார்
54. கருவூர்க் கண்ணம் பாளனார்
55. கருவூர்க் கலிங்கத்த னார்
56. கருவூர் நன்மார்பனார்
57. கழார்க்கீரன் எயிற்றிய னார்
58. காவன் முல்லைப் பூத னார்
59. குமுழி ஞாழலார் நப்ப சலையார்
60. குறுவழுதியார்
61. கொடி மங்கலத்து வாதுளி நற்சேந்தனார்
62. கொடியூர் கிழார் மக னார் நெய்தல் தத்த னார்
63. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்
64. கருவூர்க் கந்தப்பிள் ளைச் சாத்தனார்
65. காவட்டனார்
66. சாகலனார்
67. சீத்தலைச் சாத்தனார்
68. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்
69. சாகலாசனார்
70. செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்
71 செல்லூர் கிழார் மக னார் பெரும் பூதங் கொற்றனார்
72. சேரமான் இளங்குட்டு வன்
73. சேந்தன் கண்ணனார்
74. தங்கால் முடக்கொற்ற னார்
75. தங்காற் பொற்கொல் லனார்
76. தாயங்கண்ணனார்
77. தொண்டி ஆமூர்ச் சாத் தனார்
78. தொல்கபிலர்
79. நக்கீரனார்
80. நக்கீரனார் (கணக்கா யனார் மகனார் நக்கீர னார்)
81. நக்கீரனார் (மதுரை நக்கீரர்)
82. நல்லாவூர் கிழார்
83. நல்வெள்ளியார்
84. நண்பலூர்ச் சிறுமே தாவியார்

85. நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்
86. நொச்சிநியமங்கிழார்
87. நோய்பாடியார்
88. நக்கண்ணையார்
89. நரைமுடி நெட்டையார்
90. பரணர்
91. பாண்டியன் அறிவுடை நம்பி
92. பாண்டியன் கானப் பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி
93. பாலை பாடிய பெருங் கடுங்கோ
94. பெருங்குன்றூர் கிழார்
95. பெருந்தலைச் சாத்தனார்
96. பெருந்தேவனார்
97. பொருந்தில் இளங் கீரனார்
98. போந்தைப் பசலையார்
99. பேயனார்
100. பேரிசாத்தனார்
101. பொதும்பில் கிழான் வெண்கண்ணனார்
102. பொதும்பிற் புல்லாளங் கண்ணியார்
103. பறநாட்டுப் பெருங் கொற்றனார்
104. பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்
105. பாவைக் கொட்டிலார்
106. பிசிராந்தையார்
107. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்
108. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
109. மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங் கூத்தன்
110. மதுரை எழுத்தாளன்
111. மதுரைக் கணக்காயனார்
112. மதுரைக் கணியன் பூதத்தனார்
113. மதுரைக் காஞ்சிப் புலவர்
114. மதுரைச் செங்கண்ணனார்
115. மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்
116. மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்
117. மதுரைப் பாலாசிரியர் நற்றமனார்
118. மதுரைப் பேராலவாயார்
119. மதுரைப் போத்தனார்
120. மதுரை மருதனிள நாகனார்
121. மருதன் இளநாகனார்
122. மதுரையாசிரியர் நல்லந்துவனார்

123. மருங்கூர் கிழார் பெருங் கண்ணனார்
124. மருதம் பாடிய இளங் கடுங்கோ
125. மாமூலனார்
126. மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்
127. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்
128. மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்
129. மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனார்
130. மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண் ணாகனார்
131. மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்
132. மதுரைக் கூலவாணி கண் சீத்தலைச் சாத் தனார்.
133. மதுரைத் தமிழ்க்கூத் தன் நாதன் தேவ னார்
134. மதுரைப் பாலாசிரி யர் நப்பாலனார்
135. மதுரைப் புல்லங் கண்ணனார்
136. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங் கண் ணனார்
137. மதுரை...மள்ளனார்
138. முள்ளியூர்ப் பூதியார்
139. மோசிக்கரையனார்
140. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம் மள்ளனார்
141. மதுரை இளங்கௌசி கனார்
142. மதுரைக் கண்ணத்த னார்
143. மதுரைக் கூத்தனார்
144. மதுரைத் தத்தங்கண் ணனார்.
145. மதுரைப் பொன்செய் கொல்லன் வெண் ணாகனார்
146. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண் ணனார்
147. மருங்கூர்ப் பாகைச் சாத்தன் பூதனார்
148. மோசிகீரனார்
149. வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்
150. வண்ணப்புறக் கந்த ரத்தனார்
151. வடமோதங் கிழார்
152. விற்றூற்று மூதெயின னார்
153. வெள்ளாடியனார்
154. வெள்ளி வீதியார்
155. வெறி பாடிய காமக் கண்ணியார்
156. வீரை வெளியன் தித் தனார்
157. வெண்கண்ணனார்
158. வேம்பற்றூர்க் குமர னார்

## வரலாற்றுச் செய்திகள்

**நந்தர்கள்** (கி. மு. 425—கி. மு. 323)

அகநானூறு 265ஆம் பாடலில் நந்தர்களைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது.

**''பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்**
**சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை**
**நீர்முதல் கரந்த நிதியம் கொல்லோ.''**

251ஆம் பாடலில் இரண்டுவரிகள் காணப்படுகின்றன.

**''நந்தன் வெறுக்கை யெய்தினும் மற்றவண்**
தங்கலர் வாழி தோழி.''

இவ்விரண்டு குறிப்புகளும் மாமூலனார் என்ற புலவர் பெருமானால் தரப்பெற்றுள்ளன. **நந்தர்** மகதநாட்டை ஆண்டவர். அவர்கள் தலைநகரம் பாடலிபுத்திரம். அவர்கள் செல்வத்தில் சிறந்தவர்கள். அவர்கள் அச் செல்வத்தைக் கங்கையாற்றின் அடியில் புதைத்து வைத்திருந்தனர். இச்செய்தியை இவ்விரண்டு பாக்களின் அடிகளும் குறிக்கின்றன.

**மோரியர் படையெடுப்பு** (கி. மு. 301—கி. மு. 273)

அகநானூற்றுச் செய்யுட்கள் மூன்றில் (69, 281, 375) **மோரியர்** (அவர்க்குத் துணையாக வந்த வடுகர்) படையெடுப்புத் தமிழகத்தில் நிகழ்ந்தமை குறிக்கப்பட்டுள்ளது. புறநானூற்றிலும் இது பற்றிய செய்திகள் காணப்படுகின்றன[2]. இப் படையெடுப்புச் சந்திரகுப்த மோரியன் மகனான **பிந்துசாரன்** காலத்தில் நிகழ்ந்திருக்கலாம் என்று வரலாற்றாசிரியர் கூறுகின்றனர்[3].

---

2 இந்நூலாசிரியர் எழுதியுள்ள ''எல்லோரும் வாழ வேண்டும்'' என்னும் நூலில் இதுபற்றி விரிவான கட்டுரையைக் காண்க.

3. Dr. S. K Ayyangar—Beginnings of S. I. History.

நந்தர்களைப் பற்றிய செய்தியும் மோரியர் படையெடுப்பைப் பற்றிய குறிப்புகளும் இந்திய வரலாற்றுச் சிறப்புடைய செய்திகளாகும். சங்க காலப் புலவர்கள் இச் செய்திகளை எந்த அளவு அறிந்திருந்தனர் என்பதை அகநானூற்றுப் பாடல்கள் அழகுற அறிவிக்கின்றன.

**பேரரசர் :** அகநானூற்றுப் பாடல்கள் அகப் பொருள் பற்றியவையாயினும்; அவற்றுள் தமிழ்ப் பேரரசர் சிற்றரசர் பற்றிய செய்திகளும் பிறவும் உவமைகளாகவும் பிறவாகவும் கூறப்பட்டுள்ளன. இச் செய்திகள் தமிழக வரலாற்றிற்குப் பெருந்துணை செய்வனவாகும். இங்ஙனம் வரலாற்றுச் செய்திகளை எடுத்துக் கூறும் அகப் பொருள் நூல்களுள் அகநானூறு தலை சிறந்தது.

சேர வேந்தருள் உதியன் சேரல் (65), சேரலாதன் (127), மாந்தரம் பொறையன் கடுங்கோ (142), உதியன் (168), கோதை மார்பன் (346) என்பவர் பெயர்களால் சுட்டப்பட்டுள்ளனர். பிறர் குட்டுவன் (91, 296), வானவன் (309), வானவரம்பன் (389) எனச் சேரர்க்குரிய பொதுப் பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளனர். சோழருள் தித்தன் (6), கரிகாலன் (141), கிள்ளி வளவன் (346) பேசப்பட்டுள்ளனர். பலவிடங்களில் சோழர் என்றே பொதுப்படையாகக் குறிக்கப் பட்டுள்ளனர். பாண்டியருள் ஆலங்கானத்துச் செழியன் (36), பசும்பூண் பாண்டியன் (162), பழையன் மாறன் (346) என்பவர் இடம் பெற்றுள்ளனர். பிற பாண்டியர் வழுதி (312), செழியன் (335), கவுரியர் (342), தென்னவன் (342) எனப் பாண்டியர்க்குரிய பொதுப் பெயர்களால் குறிக்கப் பெற்றுள்ளனர். தொண்டை நாட்டை ஆண்ட திரையன் (85) பொதுப் பெயரால் குறிக்கப்பெற்றுள்ளான்.

**சிற்றரசர் :** வேள் ஆவி (1), மத்தி (6), கோடைப் பொருநன் (13), காரி (35), திதியன், எழிநி, எருமை யூரன், இருங்கோ வேண்மான், பொருநன் (36), நன்னன்,

ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, குன்றுறை, பழையன், கணையன் (44, 186, 326), அன்னி (45), பண்ணன் (54, 177), புல்லி (61), வேள் ஆய் (69), அகுதை (76), பிட்டன் (77, 143), பாரி (78), கொங்கர் (79), கடலன் (81), நன்னன் வேண்மான் (97), பெரியன் (100), பாணன் (Banan) (113, 226, 325), வேள் எவ்வி (115), அஞ்சி (115), கழுவுள் (135), ஆய் எயினன் (148), தித்தன் வெளியன், பிண்டன், நள்ளி, ஆய் (152), மிஞிலி (181), ஆதன் எழினி (216), வழுதுணைத் தழும்பன் (227), முசுண்டை (249), (வடுகர் பெருமகன்) எருமை (253), பேகன் (263), (நீடூர் கிழவன்) எவ்வி (266), அவியன் (271), பாரி (303), அதியன் (325).

பேரரசர் பேரரசருடன் போரிட்டபோது அவரவரைச் சேர்ந்த சிற்றரசரும் தத்தம் பேரரசர் சார்பில் நின்று போரிட்டனர் (36); சிற்றரசர் ஒருவரையொருவர் எதிர்த்துப் போரிட்டனர்; பலர் சேர்ந்து சிலரை எதிர்த்தனர்; சிலர் சேர்ந்து பலரை எதிர்த்தனர்; பலர் சேர்ந்து ஒருவனை எதிர்த்தனர். இத்தகைய விவரங்கள் இந்நூற் பாடல்களில் கூறப்பட்டுள்ளன.

**பாணர்கள் :** பாணர்கள் (**Banas**) நான்கு பாடல்களில் (113, 226, 325, 386) குறிக்கப்பெற்றுள்ளனர். தமிழகத்திற்கு வடக்கில் அவர்தம் நாடு இருந்தது. அவர்கள் ஆண்ட நாடு, கிழக்கில் கர்நூல் மாவட்டத்திலுள்ள திருப்பருப்பதம் மலைகள் வரையிலுள்ள நிலப்பகுதியையும், தென்கிழக்கில் சித்தூர் (சிற்றூர்) மாவட்டத்தின் மேற்குப் பகுதி வரையிலுள்ள நிலப் பகுதியையும், மேற்கே கோலார் மாவட்டத்தையும் தன்னகத்தே கொண்டது. தொடக்கத்தில் அவர்கள் ஆட்சியிலிருந்த நிலப் பகுதி அடர்ந்த காடுகளாகவும் பாறைகள் நிறைந்த பகுதியாகவும் இருந்தது.[4] பின்பு காலப் போக்கில்

---

4. Dr. Mahalingam, **The** Banas in S. I. History, **pp.** 155—156.

அவர்கள் நாடு வட ஆர்க்காடு மாவட்டத்தின் வடமேற்குப் பகுதியும் சித்தூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதியும் சேர்ந்த நிலப்பரப்பாயிற்று. அப் பகுதி பெரும்பாணப்பாடி என்று பிற்காலக் கல்வெட்டுக்களில் பெயர் பெற்றது.[5]

மணிமேகலை என்னும் தமிழ்க் காவியம்—நெடுமுடிக் கிள்ளி என்ற சோழவேந்தன் பாண அரசர் மகளான சீர்த்தி என்பவளை மணந்துகொண்டான் என்றும், அவள் உதய குமரனுக்குத் தாயென்றும் கூறுகிறது. இதனால் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பாண அரசர்கள் சோழர்க்குப் பெண் தரும் தகுதி பெற்றிருந்தமை தெளிவாகும்.

**கங்கர் :** கங்கர் சங்க காலத்திலேயே வாழ்ந்த அரச மரபினர் (44, 186). அவர் மரபினரே பிற்காலத்தில் தழைக் காட்டைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டனர் என்று கூறலாம்.

**திரையர் :** திரையர் தொண்டை மண்டலத்தை ஆண்டவர். அவர் தலைநகரம் பவத்திரி (340), தொண்டை நாட்டின் தென்பகுதியைக் காஞ்சியிலிருந்து இளந்திரையன் ஆண்டுவந்தான்.

**ஊராட்சி :** சங்க காலத்தில் தேர்தல் முறையால் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர் (77). ஊராட்சி மன்றத்தார் ஊர் வழக்குகளை விசாரித்து நீதி வழங்கினர். (256).

**சிறப்புச் செய்திகள் :** தமிழரசர் ஆட்சியில் ஒற்றர் இருந்தனர் (318); தூதர் இருந்தனர் (337). அரசாங்க வருவாய் குறிப்பிட்ட ஊரில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது. சோழ நாட்டு வருவாய் குடந்தையில் வைத்துப் பாதுகாக்கப் பட்டது (60). சோழரது தலைநகரான உறையூரிலிருந்த அறங் கூறு அவையம், முறை வழங்குவதில் பெயர் பெற்றது (93).

5. Ibid, p. 156.

**தமிழர் திருமணம் :** அகநானூற்றுப் பாடல்கள் இரண்டு சங்க காலத் தமிழரின் திருமணத்தைப் பற்றிப் பேசுகின்றன. (1) வரிசையாய்க் கால்களையுடைய குளிர்ந்த பெரிய பந்தரில் மணல் பரப்பப்பட்டிருந்தது. பந்தலைச் சுற்றிலும் மலர் மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. மனைவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. உளுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த பொங்கலோடு விருந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. சந்திரனை உரோகிணி கூடிய நல்லோரையில் முதிய மங்கல மகளிர் மணமகளை நீராட்டுதற்குரிய நீரை முகந்து தர, மக்களைப் பெற்ற மங்கல மகளிர் நால்வர் கூடிநின்று, "கற்பினின்றும் வழுவாது நன்றாய பல பேறுகளையும் தந்து நின்னை எய்திய கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தை உடையை ஆகுக," என்று வாழ்த்தி, அந்நீரில் நெல்லையும் மஞ்சளையும் கலந்து மணமகளை நீராட்டினர் (86).

இங்ஙனம் மங்கல மகளிர் மணமகளை நீராட்டுவது அக்காலத்தில் மிகச் சிறந்த சடங்காய்க் கருதப்பட்டது. செய்யுள் 136இல் வேறொரு வகைத் திருமணம் கூறப்பட்டுள்ளது.

"இறைச்சியுடன் கூட்டியாக்கிய நெய் மிகுந்த வெண் சோற்றை மணத்திற்கு வந்தவர் உண்டனர். திங்கள் உரோகிணியுடன் கூடிய நல்லோரையில் மண மனை அழகு செய்யப்பட்டது; கடவுள் வழிபாடு நடைபெற்றது; மண முழவுடன் பெரிய முரசம் ஒலித்தது. வாழ்வரசிகள் மணமகளுக்கு மண நீராட்டினர். வாகை இலையை அருகின் கிழங்கிடத்துள்ள அரும்புடன் சேரக்கட்டிய வெள்ளிய நூலைச் சூட்டி மணமகளைத் தூய உடையால் பொலியச் செய்தனர். மணமகள் பல அணிகளை அணிந்திருந்தாள். மேகம் ஒலித்தது போல மண ஒலி ஒலித்தது. உறவினர் அனைவரும் கூடி மணமகளை மணமகனுக்கு மனைவியாகத் தந்தனர்.

**"இவ்விரண்டு திருமணங்களிலும் ஆரியச் சார்புடையது எதுவும் இல்லை—எரி வளர்த்தல் இல்லை, தீவலம் வருதல் இல்லை, தட்சிணை பெறப் புரோகிதன் இல்லை, இவை**

**முற்றும் தமிழர்க்கே உரிய திருமண முறைகளாகும்,''** என்று வரலாற்றுப் பேராசிரியர் திரு. பி. டி. சீநிவாச அய்யங்கார் கூறியுள்ளது காண்க.[6]

**சமயச் செய்திகள் :** கூடலை யடுத்த திருப்பரங்குன் றத்தில் முருகன் திருக்கோயில் இருந்தது (59). அங்கு ஓய் வில்லாமல் விழாக்கள் நடந்தபடி இருந்தன (149). அலை வாய் என்பது கடற்கரை ஊர். அங்கு அழகிய மணி விளக்கு ஒன்று ஒளி தந்துகொண்டிருந்தது. அங்கும் முருகன் கோவில் இருந்தது (266). மதுரையில் மலையை ஒத்த உயர்ந்த கோவில் இருந்தது (290). சிவனும் திருமாலும் 'இருபெருந் தெய்வங்கள்' என்று போற்றப்பட்டனர் (360). ஒவ்வோர் ஊரிலும் அக்காலத்தில் **பொதியில்** (அம்பலம்) இருந்தது. அதனில் **கந்து** என்னும் வழிபாட்டுக்குரிய மரத்தூண் (இலிங்கவடிவில் அமைந்தது) இருந்தது. ஊர் மக்கள் விடியற்காலத்தில் அதனை வழிபட்டனர் (287).

சங்ககாலத் தமிழர் தம் பிள்ளைகளுக்குத் **தாலி** அணி வித்தல் வழக்கம். அத்தாலி, காத்தற் கடவுளான திருமாலின் ஐந்து படைகளின் உருவங்களும் பொறிக்கப் பெற்றிருந்தது. அது **'ஐம்படைத் தாலி'** எனவும் பெயர் பெற்றது. அதனை ஆண் மகனும் பெண் மகளும் அணிந்திருந்தனர் (54).

உயர்ந்த மலைகள்மீது **கார்த்திகை விழா**விற்கு விளக்கு களை இடுதல் சங்ககால வழக்கம் என்று பாலைபாடிய பெருங்கடுங்கோ என்ற சேரமன்னன் கூறியுள்ளான். சேர நாடு மலைநாடு. இன்று திருவண்ணாமலை உச்சியில் இடப்

---

6. It will be noticed that in this ancient Tamil rite of Marriage there is absolutely nothing Aryan, no lighting of fire, no circumambulation of fire and no priest to receive dakishna...These two poems belong to a later period than we are considering, but certainly describe the wedding rites which prevailed in very old times.—History of the Tamils, pp. 80—81.

படுவது போலச் சேரநாட்டு மலைகளின் உச்சியில் பெரிய விளக்குகள் இடப்பெற்றன போலும்!

உறையூரை யடுத்த காவிரியின் கரையிலிருந்த சோலையில் **பங்குனி விழா** நடைபெற்றது (137). கொங்கு நாட்டினர் மணியினை இடையில் கட்டிக்கொண்டு **உள்ளி விழாவின்போது** தெருவில் ஆடுவர் (368). அக்காலத் தமிழகத்தில் உண்ணாமையால் வாடிய வயிற்றினையும், நீராடாத உடலையும் உடைய தவத்தினர் (சமணத் துறவிகள்) இருந்தனர் (123).

**நாகரிகம் :** சங்ககால மகளிர் பந்து எறிதல், கழங்காடுதல் முதலிய ஆட்டங்களில் சிறந்திருந்தனர் (17, 66). சேரவேந்தரது சுள்ளி என்ற ஆற்றில் யவனர் கப்பல் பொன்னுடன் வந்து மிளகொடு மீண்டது (148). உலகம் நகர்ந்தாலொத்த அச்சம் தோன்றும் **கப்பல்** (255) அக்காலத்தில் இருந்தது.

சங்ககாலத் தமிழர் இசைக் கலையில் வல்லவர் என்பதைப் பல பாடல்கள் உணர்த்துகின்றன (102, 186, 346, 355). தினைப்புனம் காவல்காத்த பெண் **குறிஞ்சிப் பண்ணைப்** பாடிக்கொண்டிருந்தாள். அப்போது தினைக் கதிரைத் துதிக்கையில் பிடித்திருந்த இளைய ஆண் யானை இசையில் ஈடுபட்டுத் தினைக் கதிரை உண்ணாமலும், நின்ற நிலையிலிருந்து அகலாமலும் உறங்கிவிட்டது என்னும் செய்தி குறமகளின் இசைச் சிறப்பை இனிது விளக்குகிறதன்றோ? (102). தினைப்புனம் காத்த குறமகளிர் தினையை உண்ண வரும் கிளி முதலிய பறவைகளை ஓட்டுவதற்குப் பாடல் பாடினர். அது **'கிளிகடி பாடல்'** எனப்பட்டது (118).

சங்ககால நடன மகள் **விறலி** எனப்பட்டாள்; உள்ளக் குறிப்புப் புறத்தில் வெளிப்படும்படி விறல்பட நடித்ததால் **'விறலி'** எனப் பெயர் பெற்றாள். அவள் நடிக்கும்போது முழவு கொட்டுவோன் அவளுக்குப் பின்புறம் நிற்பது

வழக்கம். ஊரில் நடைபெறும் விழாக்களில் விறலி நடிப்பது வழக்கம் (352).

**பண்பாடு :** அகநானூற்றுப் பாடல்கள் இன்பம் பற்றி யன ஆயினும், தமிழர் பண்பாட்டை விளக்கும் உயர்ந்த கருத்துகளை ஆங்காங்குக் கொண்டுள்ளன. அவற்றுள் சில வற்றை இங்குக் காண்போம்:

(1) சான்றோர் மிக்க காதல் கொண்டாராயினும் பழி யுடன் கூடிவரும் இன்பத்தினை விரும்பார் (112).

(2) பாவநெறியிற் செல்லாத வாழ்க்கையும், பிறன் மனை வாயிலில் சென்று நில்லாத மேம்பாடும் ஆகிய இரண்டும் பொருளினால் ஆகும் (155).

(3) உள்ளம் விருப்பிய வழியில் அதனைச் செல்ல விடாமல், விரும்பிய பொருளின் நன்மை தீமைகளை ஆராய்ந்து, உள்ளத்தை நல்லதன்வழிச் செலுத்துவதே பெரியோர் ஒழுக்கமாகும் (286).

(4) இரப்பவரது ஏந்தும் கை நிறையும்படி மகிழ்ச்சி யோடு விரைந்துவந்து புதிய பொருள்களைத் தந்து மகிழு வதற்கே அரிய செல்வத்தை ஈட்டவேண்டும் (389).

இத்தகைய உயர்ந்த பண்பாடுடைய தமிழ் மக்கள் வாழ்ந்த காலமே சங்ககாலம்.

**புராண இதிகாசக் கதைகள் :** கண்ணன் யமுனைத் துறையில் நீராடிய கோவியர் ஆடைகளைக் கவர்ந்தமை, முருகன் சூரனைக் கொன்றமை, இராமன் கோடிக்கரையில் பறவைகள் ஒலியை அடக்கினமை, பரசுராமன் மன்னர் மரபை அழித்தமை போன்ற சில கதை நிகழ்ச்சிகள் அக நானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன (59, 70, 220 முதலியன).

**வடசொற்கள் :** இந்நூற் பாடல்களில் வடசொற்கள் தமிழ் உருப்பெற்றும் பெறாமலும் வழங்கப்பெற்றுள்ளன. நிதி (60), இராமன் (70), வதுவை (86), அரமியம் (124), வீதி (147), கலாபம் (152), சிகரம் (181), சிமயம் (208), பதி (299), தேயம் (333). இவை போன்ற சில சொற்களே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

# 14. கலித்தொகை

## கலித்தொகையின் புதுமைகள்

1. ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய நான்கு நூல்களும் அகவற்பாவில் அமைந்த அகப்பொருள் செய்யுட்களைக் கொண்டவை. மேலும் அவை அனைத்தும் அகத்திணை பற்றிய செய்திகளையே கொண்டவை. தொல்காப்பியருடைய களவியலுக்கும் கற்பியலுக்கும் பெரும்பாலும் இலக்கியமாக அமைந்தவை. கலித்தொகைப் பாடல்கள் கலிப்பாவில் அமைந்தவை. இவற்றுள் சில 80 அடி நீளமும் உடையவை; தொல்காப்பியர் பொருளியலில் கூறியுள்ள விதிகட்கு இலக்கியமாக அமைந்தவை; அதனால் கைக்கிளை, பெருந்திணை பற்றிய பாடல்களும், மடலேறுதல் பற்றிய பாடல்களும், இழிந்தோர் காதல் பற்றிய பாடல்களும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

2. நற்றிணை முதலிய அகநூல்களில் தலைவியின் முகம், கூந்தல், உடல்வளம், அவளது நலம் முதலியவற்றிற்குத் தமிழ் நாட்டுப் பகுதிகள், நகரங்கள் முதலியனவே உவமைகளாய் வந்துள்ளன. கலித்தொகையில் வந்துள்ள உவமைகளுள் பெரும்பாலன, நற்றிணை முதலிய நூல்களில் காணப்பெறாத இதிகாச புராண கதைகளாகவே அமைந்துள்ளன.

3. நற்றிணை முதலிய பாடல்களின் நடை மிடுக்குடையது. கலித்தொகைப் பாடல்களின் நடைமிடுக்குத் தளர்ந்தது.

4. நற்றிணை முதலிய நூற்பாக்களில் பேரரசர், சிற்றரசர் நாடுகளும் நகரங்களும் மலைகளும் ஆறுகளும் இடம் பெற்றுள்ளன. ஆயின், கலித்தொகைப் பாக்களிற்

பாண்டியன் (57), கூடல் (66, 91, 92), வையை (97), பொதியில் (57) மட்டுமே குறிக்கப்பட்டுள்ளன. சேர, சோழ, பாண்டியர்களோ அவர்தம் ஊர்களோ பிறவோ குறிக்கப்படவில்லை. இது கவனிக்கத்தகும் செய்தியாகும்.

5. ஒவ்வொரு கலியிலும் ஒரே துறை அமைந்த பல பாடல்கள் சுவையற்ற நிலையில் பாடப்பட்டுள்ளன. சான்றாக, தலைவன் மடலூர்தல் பற்றி நான்கு பாடல்களும் (138-141), காமவெறி கொண்ட தலைவி பிதற்றல் பற்றி ஆறு பாடல்களும் (143-148) வந்துள்ளன.

6. சில செய்யுட்கள் தோழி—தலைவி உரையாடல் (60), தலைவி—தலைவன் உரையாடல் (64), தோழி—தலைவன் உரையாடல் (61) முறையில் அமைந்துள்ளன.

7. பிற அகநூல்களில் காணப்பெறாத 'நின்றீத்தை' (93), 'போசீத்தை' (93), 'பாடித்தை' (130), இஃதொத்தன் (84) போன்ற சொற்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

8. நற்றிணை முதலிய நூல்களில் காமக்கிழத்தி பேசுவதாகச் செய்யுள் இடம் பெறவில்லை. ஆயின், இந்நூலில் சில செய்யுட்கள் (69, 72, 73) இடம் பெற்றுள்ளன.

9. கலிப்பாக்களில் வரும் பெரும்பாலரான தலைவன் தலைவியர் வினைவல பாங்கர் ஆதலால் தலைவி, தலைவனை 'ஏடா' என்றும், தலைவன் தலைவியை 'ஏடி' என்றும் அழைப்பதைக் காண்கிறோம் (87, 90).

10. மருதக் கலியில் வந்துள்ள கூனி—குறளன் காதல் உரையாடல் (94) நற்றிணை முதலிய நூல்களில் காணுமாறு இல்லை.

11. வியாழனும் வெள்ளியும் வடமொழியில் அற நூல்கள் எழுதியுள்ளனர். 'அந்நூல்களின்படி நாடாண்டவனே' என்று தலைவன் ஒரு செய்யுளில் (99) அழைக்கப்படுகிறான். இத்தகைய செய்தி வேறு தொகை நூல்களில் இல்லை என்பது கவனிக்கத்தகும்.

12. சிவபெருமான் முப்புரம் எரித்தது (1, 150), துரி யோதனன் பாண்டவரை அரக்கு மாளிகையில் கொல்ல முயன்றமை (25), முருகன்—சூரபதுமன் போர் (27), இரா வணன் கயிலை மலையைப் பெயர்த்தது (38), வீமன் துரியோ தனனைத் துடையில் அடித்தது (52), கண்ணன் கம்சனால் ஏவப்பட்ட மல்லரை அழித்தது (52, 134), வீமன் துச்சா தனன் நெஞ்சைப் பிளந்தது (101), சிவன் எமனை உதைத் தமை (101), அசுவத்தாமன் தன் தந்தையைக் கொன்ற சிகண்டியைக் கொன்றமை (101); கண்ணன் கம்சனால் ஏவப்பட்ட குதிரை உருவத்தில் வந்த அசுரனைக் கொன்றமை (103), கண்ணன் தன் ஆழியால் மறைத்த சூரியனை மீட்டமை (104), கன்னன் சூரியனுக்கு மகன் (108), ஊர்வசி திலோத்மை பற்றிய செய்தி (109), யயாதி அரசன் கதை (139), சிவன் தன் சடையில் கங்கையை மறைத்தமை (150), இவற்றுள் சிவன் முப்புரம் எரித்தமை யும், முருகன் சூரபதுமனை அழித்தமையும் பிறநூல்களில் இடம் பெற்றுள்ளன. ஏனையவை முதன் முதலாக இந்நூலில் தாம் கூறப்பட்டுள்ளன என்பது கவனிக்கத்தகும். இவை அனைத்தும் இந்நூலிற்கே உரிய புதுமைகளாகும்.

### கலித்தொகை ஆசிரியர்

கலித்தொகை என்பது கடவுள் வாழ்த்து உட்பட 150 கலிப்பாக்களைக் கொண்டதாகும். இவை பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஒழுக்க வகையில் அமைந்துள்ளன. பாலைத்திணை பற்றி 35 செய்யுட்களும், குறிஞ்சித்திணை பற்றி 29 செய்யுட்களும், மருதத்திணை பற்றி 35 பாக்களும், முல்லைத்திணைபற்றி 17 பாடல்களும், நெய்தல் திணைபற்றி 37 பாடல்களும் இதன்கண் அமைந் துள்ளன.

ஏறத்தாழக் கி.பி.14 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் எனக் கருதத்தகும் நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர் இந்நூலுக்கு அழகிய உரை எழுதியுள்ளார். அவர் கடவுள்

வாழ்த்துப் பகுதியில், ''ஆதலால் ஈண்டுப் பாலைத் திணையையும் திணையாக ஆசிரியர் நல்லந்துவனார் கோத்தார் என்று கூறுக;'' என்றும், நூலின் இறுதியில், ''முல்லை, குறிஞ்சி, மருதம் எனச் சொல்லிய முறையால் சொல்லவும் படுமே எண்புழிச் சொல்லாத முறையால் சொல்லவும் படும் என்றலின் இத்தொகையைப் பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என இம் முறையே கோத்தார் நல்லந் துவனார்,'' என்றும் கூறியுள்ளார். அவரே நெய்தற்கலி 25 ஆம் செய்யுள் உரையில், ''சொல்லெச்சமும் குறிப்பெச்சமுமாகத் தம் பேரறிவு தோன்ற ஆசிரியர் நல்லந்துவனார் செய்யுள் செய்தார், ' என்பதையும் குறித்துள்ளார்.

இக் கூற்றுகளை நோக்க, நல்லந்துவனார் நெய்தற் கலியை மட்டும் பாடினவர் என்பதும், அத்துடன் தம் காலத்தில் இருந்த பிற கலிப்பாக்களைக் கோத்து முறைப் படுத்தியவர் என்பதும் நச்சினார்க்கினியர் கருத்தாதல் தெளிவாகும். ஆயின், நச்சினார்க்கினியர் தமது உரையில் பிற கலிகளை இயற்றிய ஆசிரியர் பெயர்களைச் சுட்டவில்லை. இதனால் அவர் காலத்திலேயே பிற கலிகளைப் பாடிய ஆசிரியர்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை என்பது தெளிவாகும்.

கலித்தொகையை முதலில் வெளியிட்ட திரு சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், இந்நூல் இயற்றியோர் ஒருவரே எனக் கருதினர். அதன் பின்,

''பெருங்கடுங்கோன் பாலை கபிலன் குறிஞ்சி
மருதனிள நாகன் மருதம்—அருஞ்சோழன்
நல்லுருத் திரன்முல்லை நல்லந் துவனெய்தல்
கல்விவலார் கண்ட கலி.''

என்னும் வெண்பா வெளிப்பட்டது. அது முதல், ஐந்து கலியும் புலவர் ஐவரால் பாடப்பட்டவை எனத் தமிழறிஞர் கருதலாயினர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைப் புலவராய் இருந்த திரு. K. N. சிவராசப்பிள்ளை

அவர்கள் 'கலித்தொகை ஆசிரியர் ஒருவரே' என முடிவு கட்டினர்.

**ஐவர் அல்லர்: காரணங்கள்**

(1) கலித்தொகை ஆசிரியர் ஐவரே என்பதற்கு மேற்காட்டிய வெண்பாவைத் தவிர வேறு சான்று இல்லை. எனவே, அவ்வெண்பா நம்பத்தக்கதா என்பதை முதற்கண் ஆராய்தல் வேண்டும்.

1. பாலைக் கலியைப் பாடியவர்—பெருங்கடுங்கோன்
2. குறிஞ்சிக் ,, ,, —கபிலர்
3. மருதக் ,, ,, —மருதன் இள நாகனார்
4. முல்லைக் ,, ,, —சோழன் நல்லுருத் திரன்
5. நெய்தற் ,, ,, —நல்லந்துவனார்

என்பது அவ்வெண்பாவில் உள்ள செய்தி. ஏனைய தொகை நூல்களில் பாலைத்திணை பற்றிப் பல செய்யுட்களைக் கடுங்கோன் பாடியிருத்தலாலும், குறிஞ்சித்திணை பற்றிப் பல செய்யுட்களைக் கபிலர் பாடியிருத்தலாலும், முதலிரண்டு கலிகளை இவர்கள் பாடினார்கள் எனக் கொள்ளினும், ஏனைய மூன்றையும் பிற புலவர் மூவரும் பாடத் தகுதி வாய்ந்தவர் என்பதற்குரிய சான்று ஏனைத் தொகை நூல்களில் காணக் கூடவில்லை. மருதன் இளநாகனார் பிற நூல்களில் பாடியனவாகக் காணப்படும் 39 செய்யுட்களில் பாலை பற்றி 17ம், குறிஞ்சி பற்றி 9-ம், முல்லை பற்றி 5ம், நெய்தல் பற்றி 5ம், மருதம்பற்றி மூன்றுமே உள்ளன. இவர் மருதக்கலியைப் பாடினார் என்பது பொருந்துவதாக உள்ளதா? சோழன் நல்லுருத்திரன் புறநானூற்றில் ஒரு செய்யுளே (190) பாடியதாகத் தெரிகிறது. அவன் பாடிய பா ஒன்றும் வேறு தொகை நூல்களில் இல்லை. அவன் முல்லைக் கலியைப் பாடினான் என அவ்வெண்பா கூறு

கிறது. நல்லந்துவனார் நெய்தற்றிணையில் ஒரு செய்யுளும் செய்திலர். அவர் நெய்தற்கலியைப் பாடியதாக வெண்பா விளம்புகிறது.[1]

(2) முல்லைக் கலியில் கூறப்படும் முல்லை நில மக்கள் பாண்டிய நாட்டவராகக் காணப்படுகின்றனர். அவர்கள் பாண்டியனை வாழ்த்துவதாகச் செய்யுள் கூறுகிறது. சோழ வேந்தன் தனது நாட்டு முல்லை நில மக்களைப் பாடாதது வியப்பே அன்றோ? சோழ அரசன் தனது நாட்டு மக்களைப் பற்றிப் பாடாமல், பாண்டிய நாட்டு முல்லை நில மக்களைப் பற்றி மட்டும் தனது முல்லைக் கலியில் பாடினான் என்னல் சற்றும் பொருந்தாது. முல்லை நிலம் பாண்டியர்க்கே உரிமையுடையதும் அன்று. பாண்டியனை வாழ்த்திப் பரவும் ஒரு குறிப்பிட்ட முல்லை நிலத்தாரைப் பற்றிச் சோழ வேந்தன் நூல் பாடினான் என்பது அறிவிற்கும் அநுபவத்திற்கும் சற்றும் பொருந்தாததாகும்.

(3) நெய்தற் கலியைப் பற்றி ஒரு சிறு செய்யுளும் ஏனைய தொகை நூல்களுட் பாடியிராத ஒருவர், நெய்தற் கலியைப் பாடினார் என்பது, கருக்கொள்ளாது மகப்பேறு தோன்றினாற் போலாகும் அன்றோ?

(4) 'கலித்தொகை முழுமையையும் நன்கு ஆராயின், செய்யுட்கள் ஒரே ஆசிரியர் இயற்றியன என்பது புலனாம். இதனை ஒப்புக்கொள்ள மனமற்றவர் இவ்வெண்பாவினை வெளிக்கிளம்ப விட்டனர். இவ்வெண்பா எந்தக் கலித்தொகை ஏட்டிலும் இல்லை; வேறு நூல் ஏட்டுப் படிகளிலும் இல்லை; மாயமாய் வந்ததாகும். இதனை நன்கு எண்ணாது புலவர்கள் கலித்தொகையை ஐவர் பாடியதாகக் கொண்டு விட்டனர்.[2] இது முற்றும் ஆதாரமற்ற—இக்காலப் புலவர்

---

1. K.N. Sivaraja Pillai, The Chronology of the Early Tamils, p. 35.

2. Ibid. p. 225.

எவரோ கட்டிவிட்ட வெண்பா ஆகும் என்பதே பேராசிரியர் திரு எஸ். வையாபுரிப்பிள்ளை, திரு வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் முதலியோர் கருத்துமாகும்.

(5) திருநெல்வேலி - சுவர்ணம் பிள்ளை அவர்கள் தமக்குக் கிடைத்ததாகக் கூறிய 'ஊசி முறி' என்னும் நூலைத் தமிழ்ப் பேராசிரியர் திரு கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் பொருள் கொடுத்து வாங்கி ஆராய்ந்தார்கள்; அது போலி நூல் - பொருளுக்காக இக்காலப் புலவர் பாடிய பொய்ந்நூல் - என்பதை அறிந்து கிழித்தெறிந்தார்கள். இங்ஙனம் பொருளுக்காகவும் விளையாட்டாகவும் பலர் தாமே கட்டிய பாக்களைப் 'பழம்பாடல்கள்' எனக்கூறி ஏமாற்றல் உண்டு. இவ்வெண்பாவின் படைப்பு அத்தகையோருள் ஒருவர் செயலாக இருக்கலாம் எனக் கோடலே பொருந்தும்.

கலித்தொகைப் பாக்களின் நடை, மொழி அமைப்பு, சொல் அமைப்பு, நூல் முழுமையும் புராண இதிகாசக் கதைகள் விரவிக் கிடத்தல், பிற அகப்பொருள் நூல்களில் குறிக்கப் பெற்ற சிற்றரசர் பேரரசர் பெயர்களுள் ஒன்றேனும் குறிக்கப்படாமை முதலியவை, இந்நூல் கபிலர் பரணர் முதலிய புலவர்களுக்குப் பிற்பட்ட ஒருவரால் பிற்காலத்தில் (பெரும்பாலும் சங்க இறுதிக் காலத்தில்) பாடப்பட்ட நூலாக இருத்தல் வேண்டும் என்று நினைக்க இடம் தருகின்றன. இப்பாடல்களை ஐவரோ, பலரோ பாடினர் என்பதை உணர்த்தும் சான்று இப்பாக்களின் நடையில் இல்லை.[3]

---

3. பேராசிரியர் S. வையாபுரிப் பிள்ளை, தமிழ் மொழி இலக்கிய வரலாறு, பக். 17, 51, 57.

ஐவர் பாடியவராயின் அவர்தம் பெயர்கள் ஏடுகளில் இடம் பெற்றிருக்கும்; பாடியவர் பலராயினும் பிறநூற் பாடல்களில் உள்ளவாறு புலவர் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

**கலித்தொகையின் காலம்**

1. கலித்தொகைச் செய்யுட்கள் பெரும்பாலும் பொருளியல் சூத்திரங்களுக்கு இலக்கியமாய் அமைந்தவை; கைக்கிளை, பெருந்திணைச் செய்யுட்களை உடையவை.

2. ''மையின் மதியின் விளங்கு முகத்தாரை
வவ்விக் கொளலும் அறனெனக் கண்டன்று.''
—குறிஞ்சிக்கலி - 26.

பெண்டிரை வௌவிக்கோடல் 'இராக்கத மணம்' எனப் படும். இராக்கத மணத்தைத் தொல்காப்பியர் கூறிலர். 'பெருந்திணை-ஒவ்வாத காமம்' எனத் தொல்காப்பியர் கூறினரே அன்றி, இராக்கத மணமுறையாகிய வௌவிக் கோடலைத் தமிழ் மக்கள் கையாண்டனர் என்று கூறிலர். 'இராக்கத மணம் அறன்' எனத் தொல்காப்பியரோ சங்க நூற் புலவரோ யாண்டும் கூறிலர். ஆரியருடைய எண் வகை மணங்களுள் 'இராக்கத மணம்' ஒன்றாகும். தமிழர்க்கு இம்மணம் உண்டெனக் கூறச் சங்க இலக்கியச் சான்றில்லை. அடியோர் தலைவராகக் கொள்ளினும், தமிழகத்துள் அடிப்பட்ட பழக்கத்துக்கு மாறாகச் சங்கத்துச் சான்றோர் செய்யுள் செய்யார். ஆகவே, 'இராக்கத மணம் அறன்' எனக் கூறும் இச் செய்யுளும் இதுபோன்ற கலிச் செய்யுட்களும் கடைச் சங்கப் புலவருக்குப் பிற்பட்ட காலத்தனவாகும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

3. குறிஞ்சிக்கலிச் செய்யுள் ஒன்றில் தலைவி, ''தோழி, நீ தெருவில் போவார்க்கெல்லாம் இரங்குதல் வாரணவாசியில் (காசியில்) பிறர் வருத்தம் தம் வருத்தமாகக் கருதும் அருளுடையார் செயலை ஒத்துள்ளதே,'' (24) எனக் கூறியுள்ளது கருதற்பாலது. ஏனைய தொகை நூல்களுள், இச்செய்தி காணப்பட்டிலது. வாரணவாசி (காசி) நகர மாந்தர் செய்தி எந்த அளவு தமிழகத்தில் பரவி இருந்தால், அதனைத் தலைமகள் சொல்வதாகப் புலவர் பாடியிருப்பர் என்பது சிந்திக்கத் தக்கது. ஏனைய பழம்பாடல்களில்

காணப்பெறாத இவ்வடநாட்டுச் செய்தி சங்க காலத்தின் இறுதியில் அல்லது பிற்பட்ட காலத்தில் தமிழகத்தாரால் அறியப்பட்டதாதல் வேண்டும்.

4. குறிஞ்சிக் கலியுள் ஐந்திணை பற்றிக் கூறற்குரிய அரிய செய்திகளை, ஏனைச் சான்றோரைப் பின்பற்றிக் கூறுதலை ஒழித்து அவரால் கனவிலும் கருதப்படாதவையும் சொல்லப்படாதவையுமான கைக்கிளை பெருந்திணைச் செய்திகளையும், இழிந்தோர் களவினையும், மருதக்கலியுள் கூனும் குறளும் உறழ்ந்து கூறலும் புணர்தல் (29) போன்ற செய்திகளையும், ''தேள் கொட்டி ஏறும் விஷம் போலக் காமம் தலைக்கேறுகிறதோ?'' என்றாற்போலக் கூறப்படும் முல்லைக்கலிச் செய்திகளையும், இவைபோன்றே ஏனைய கலிகளிலும் வெறுக்கத்தக்க—பண்டைப் புலவர் நெறிக்கு மாறாகக் கூறப்படும் அச்சங்ககாலப் புலவரோடு இருந்த சான்றோர் பாடியிரார் என்பது அறிவும் நடுவு நிலைமையும் உடையார் நன்கறிதல் கூடுமன்றோ? இவற்றுக்கு இலக்கணம் தொல்காப்பியத்துள் காணப்படினும், இவற்றைப் பிற்காலத்துப் புலவர் பாடினர் எனக் கோடலே அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாகத் தெரிகிறது. அறிஞர் மேலும் ஆய்வாராக.

5. காமன் ஆரியக்கடவுள். அவன், 'காமனார்' எனவும், 'சாமனார்க்கு மூத்த காமனார்' எனவும் மருதக் கலியுள் (29] கூறப்பட்டாற் போலப் பிற தொகை நூல்களுட் கூறப்பட்டிலன்.

6. கலித்தொகை முழுமையிலும் எந்த அரசன் பெயரும் சுட்டப்படவில்லை. மூவேந்தருள் பாண்டியனே சுட்டப்படுகின்றான். வையை, கூடல் இவையே சுட்டப்படுகின்றன. ஏனைய தொகை நூல்களிற் கூறப்படும் வள்ளல்களோ புலவர்களோ சுட்டப்படவில்லை. மேற்கோள் காட்டத் தகும் இடங்களில் 'வாரணவாசிப் பதம்' போன்ற வட நாட்டுச் செய்திகளும், உவமைகள் கூறப்பட்டுள்ள இடங்கள்

பலவற்றில் புராணக் கதைகளும், தெய்வங்களுமே குறிப்பிடப்பட்டுள்ளன. ஏனைய அகப்பாட்டுகளில் பெரும்பாலான செய்யுட்களில் வந்துள்ள தமிழ்ப்புலவர் பெயர்கள், வள்ளல்களின் பெயர்கள், அரசர்கள் பெயர்கள், போர்கள் முதலியன போன்ற தமிழகச் செய்திகளுள் ஒன்றேனும் 149 செய்யுட்களைக் கொண்ட கலித்தொகையில் பயின்றுவராமை நன்கு கவனித்தற்குரியது. இத்தகைய காரணம் கொண்டே கலித்தொகைச் செய்யுட்கள் பிற அகப்பொருள் நூல்கட்குப் பின்னரே செய்யப்பட்டவை எனக் கூறலாம்.

கபிலர், பரணர், நக்கீரர் போன்ற சங்கத்துச் சான்றோர் அகனைந்திணை பற்றிய பாடல்களையே பாடியுள்ளனர்; தொல்காப்பியப் பொருளியல் விதிகட்குரிய பாக்களைப் பாடவில்லை. அக்குறையை நீக்கவே அப்புலவர்கட்குப் பின்பு தோன்றிய புலவர் ஒருவர் இந்நூலைப் பாடியிருத்தல் கூடும். இந்நூலில் பாண்டியநாடு ஒன்றே குறிக்கப்பட்டுள்ளது; பாண்டியனே பாராட்டப்பட்டுள்ளான். எனவே, கலித்தொகை பாடிய புலவர் பாண்டிய நாட்டினராயிருத்தல் கூடும்.

கலித்தொகையில் பாண்டியன், அவன் தலைநகரான மதுரை, வையை ஆறு, பொதியில்மலை, அவனது நேர்மையான ஆட்சி என்பன இடம் பெற்றுள்ளன. இவற்றுடன் பாண்டியர் வளர்த்த தமிழ்ச் சங்கம் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. முன்பு குறிப்பிட்டதுபோல் சேர, சோழர் பற்றியோ புகழ்பெற்ற குறுநில மன்னரைப் பற்றியோ ஒரு சிறு குறிப்பும் இந்நூலில் இடம் பெறவில்லை. இவை அனைத்தையும் நடுவு நிலையிலிருந்து நோக்க, பிற புலவர்கள் பாடாது விட்ட பொருளியல் விதிகட்கேற்ற பாடல்களைக் கொண்ட இக்கலித்தொகை என்னும் நூல், சங்க காலத்தின் இறுதியில்—களப்பிரர் படையெடுப்புக்குச் சிறிது முற்பட்ட காலத்தில்—பாண்டியன் மீதும் அவனது நாட்டின் மீதும் அளவற்ற பற்றுக்கொண்ட பாண்டிய நாட்டுப் புலவர் ஒருவரால் பாடப்பட்டிருத்தல் வேண்டும் என்று கொள்வது

மிகவும் பொருத்தமாகும்.[4] இப்புலவர், நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிட்ட ஆசிரியர் நல்லந்துவனார் ஆயின்; இந்நல்லந்துவனார் பிற நூல்களிலுள்ள பாடல்களைப் பாடிய நல்லந்துவனாரினும் வேறுபட்டவர் எனக் கொள்ளலே பொருத்தமுடையது. எனவே, **கலித்தொகையின் காலம் சங்க இறுதிக்காலம், அஃதாவது, ஏறத்தாழக் கி.பி. 300 என்னலாம்.**

## நூற் செய்திகள் சில

**ஏறு தழுவல்:** காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். ஆயர் என்பவர் முல்லைநில மக்கள். பிடவம், கோடல், காயா, கொன்றை, வெட்சி, தளவம், குல்லை, குருந்தம், பாங்கர் முதலிய மலர்கள் முல்லை நிலத்திற் குரியவை. இவை தனித்தனியே கட்டப்பட்டும், கலவை யாகக் கட்டப்பட்டும் ஆயரால் அணியப்பெறும் (101, 103).

முல்லைக்கலியுள் ஆயர் ஏறுதழுவல் பற்றிய விவரங்கள் அழகுற அமைந்துள்ளன. ஆயர் சிவபெருமான் மழுவைப் போல எருதுகளின் கொம்புகளைச் சீவுவர் [101]. எருதுகளுள் பலதேவனைப் போன்ற வெண்ணிறம் கொண்டவை சில; கண்ணனைப்போலக் கரியவை சில; சிவனைப் போலச் செம்மையும் கருமையும் கலந்தவை சில; முருகனைப்போலச் சிவந்தவை சில [105]; இந்திரனைப்போல் பல புள்ளிகளை உடையவை சில; முருகனது வெள்ளிய துகிலைப்போல வெள்ளிய கால்களையுடையவை சில; எமனைப்போன்ற வலிமையுடையவை சிலவாகும் [106]. இவை அனைத்தும் தொழுவத்தில் விடப்படும்.

---

4. இங்ஙனம் கொள்வதே மிக்க பொருத்தமாகும். இங்ஙனம் கொள்ளின், 'கலித்தொகை' என்னும் பெயர் தவறாகும்; தொகை நூல்கள் ஏழாகும். பலர் பாடினர் என்னும் தவறான கருத்தில் இதற்குக் (கலித்) '**தொகை**' என்னும் பெயர் கொடுக்கப்பட்டது போலும்!

முல்லைநில இளைஞர்கள் அத்தொழுவில் பாய்வதற்கு முன்பு நீர்த்துறையிலும், ஆலமரத்தின் கீழும், மாமரத்தின் கீழும், உறையும் தெய்வங்களை வழிபடுவர் ]102, 103]. கன்னிப்பெண்கள் பரண்மீது நின்று வேடிக்கை பார்ப்பர் [102, 103].

வீரர்கள் தொழுவத்துள் பாய்ந்தவுடன் ஏறுகளைத் தழுவி அடக்க முற்படுவர். அவை சில வீரர்களைக் குத்திச் சாய்க்கும்; சிலர் குடல்களை வெளியே தள்ளச் செய்யும். குடல்கள் சில எருதுகளின் கொம்புகளில் சுற்றிக்கொள்வதும் உண்டு. ஏறுகளை அடக்கும் வீரர்கள் ஆயராலும் ஆய்ச்சியராலும் பாராட்டப்படுவர், இறுதியில் வீரரும் மங்கையரும் ஊர் மன்றத்தில் கைகோத்துக் குரவைக்கூத்து ஆடுவர். அப்பொழுது ஆய்ச்சியர் சில பாடல்களைப் பாடி ஆடுவர் [101;-104]; இறுதியில் அரசனை வாழ்விக்கும்படி திருமாலை வேண்டுவர் [103-106].

ஏறு தழுவலில் ஈடுபடாத இளைஞனை ஆயர்மகள் கணவனாக ஏலாள் ]103]. ஆயருள் ஆடுமாடுகளை மேய்த்தவர் ஆட்டிடையர் எனப்பட்டனர்; 'புல்லினத்தார்' அல்லது 'குறும்பர்' எனவும் அழைக்கப்பட்டனர். பசு இடையர் 'கோ இனத்தார்' என்றும் 'நல்லினத்தார்' என்றும் கூறப்பட்டனர் [107, 113].

தலைவியின் தந்தையோடு அவள் தமையன்மாரும் உடனிருந்து அவளது திருமணத்திற்கு இசைவு தருவர் [107].

வினைவல பாங்கனான தலைவன், தலைவியின் தமையனுக்கு உணவு கொண்டு செல்வான்; பசுக் கூட்டத்திலிருக்கும் தலைவியின் தந்தைக்குக் கறவைக்கலம் [பால் கறக்கும் பாத்திரம்] கொண்டு செல்வான்; கன்றுகளை மேய்ப்பான் [108]; திருமாலை எண்ணித் தலையினாலே வணங்கி, கையால் தொட்டுச் சூள் உரைப்பான் [108].

ஆயர் தம் வீட்டைச் செம்மண்ணால் அலங்கரித்துத் தரையில் மணலைப் பரப்புவர்; பெண் எருமையின் கொம்பைத் தெய்வமாக வைத்து வழிபட்டுத் திருமணம் செய்வர். அத்திருமணம் **'பெருமணம்'** எனப்படும் [113].

**தமிழ்ச் சங்கம்:** இளவேனிற் காலத்தில் சான்றோர் நாவிற் பிறந்த கவிகளின் புதுமையை மதுரை மக்கள் கொண்டாடுவர் என்று ஒரு செய்யுள் [35] கூறுகிறது. இதனை நோக்க, இளவேனில் என்னும் இன்பந்தரும் காலத்தில்தான் புலவர்கள் புதிய செய்யுட்களை இயற்றிக் கொண்டு மதுரையில் கூடினர் என்று நினைப்பது பொருத்தமாகும்.

வையையாறு மதுரையைச் சூழ்ந்து வந்தது. அத் தோற்றம் நிலமகள் ஒரு பூமாலையைச் சூடியிருந்த தன்மையை ஒத்திருந்தது. கார்காலம் முதிர்ந்தமையால் கொத்துக் கொத்தாக மலர்கள் வையை நீரில் படிந்து வந்தன. வையை நீர் கோட்டை மதில்மீது மோதிக் கொண்டிருந்தது. அவ் வையை புலவரால் பாராட்டப்பட்டது [67]. புலவர்கள் தம் செவிகளை வயலாகவும் தமக்கு முற்பட்ட சான்றோர் கூறிய செய்யுட்கள் தம் சொல்லை வளர்க்கும் நீராகவும் கொண்டு, தமது அறிவுடைய நாவாகிய கலப்பையால் உழுது உண்பவர். அத்தகைய புலவர் பெருமக்களின் புதிய கவிகளைப் பாண்டியன் கொள்ளைகொண்டு மகிழும் இயல்புடையவன் [68]. இக் கூற்றுகளை நோக்க, மதுரையில் புலவர்கள் மிக்கிருந்தமையும் பாண்டியர் அவர் செய்யுட்களைக் கேட்டு அநுபவித்தமையும் அப்புலவர் பெருமக்கள் புதிய கவிகள் இயற்றினமையும் இனிது புலப்படுகின்றன அல்லவா?

குறிஞ்சி நிலத் தலைவன் தன்னை நாடி வந்த புலவர்களுக்குத் தேர்களையும் களிறுகளையும் கொடுத்தான் என்று ஒரு செய்யுள் கூறுகிறது [50]. கலித்தொகைப் பாக்கள் சில, பாண்டியனையே தலைவனாகக் கொண்டு பாடப்பட்டிருப்ப

தால், இங்குக் கூறப்பட்டுள்ள தலைவனைப் பாண்டியனாகக் கருதுதல் பொருத்தமாகும் ''தமிழ் கெழுகூடல்'' என்றும் ''தமிழ் வையை'' என்றும் தமிழுக்கும் கூடலுக்கும், தமிழுக்கும் வையைக்கும் தொடர்புடைமையைப் பிறநூற் பாக்களும் உணர்த்தலாலும், பாண்டியரே சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர் என்று களவியலுரையும் பிற நூல்களும் கூறலானும், கலித்தொகைப் பாக்களும் அவ்வுண்மையையே புலப்படுத்துகின்றன என்பது இங்கு அறியத்தகும்.

**கல்வி:** கல்வி பற்றிய செய்தி மூன்று செய்யுட்களில் கூறப்பட்டுள்ளது. ஒரு தலைவன் மெய்ப்பொருள் கூறும் நூல்களைக் கூறவல்லவர்களை வழிபட்டு அப்பொருளை அறிந்தவன்போல நன்மக்களைக் கண்டால் தோன்றும் மன அடக்கம் உடையவன் [47]. ஒன்றையும் கல்லாமல் மூத்தவன் அறிவுக்கண் இல்லாத நெஞ்சம் உடையவன் [130]. பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியன் தன்பால் ஒன்று பெறாமல் மனம் வருந்தும்படி, கற்றவன் விடலாகாது. அவன் தன் கைப்பொருளை அக்கல்விப் பொருளுக்குக் கைம்மாறாகக் கொடுக்க வேண்டும். தான் கற்ற கல்வியிடத்தே தவறு செய்பவனது கல்விப் பொருள் நாள்தோறும் தேயும். அவனும் தானாகத் தேய்ந்துவிடுவான் [சிறப்பிழப்பான்] [149].

**அணிகள்:** இந்நூலில் மிகப்பல அணிகளின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இழை, முத்துவடம், கண்ணி, மேகலை, தொடி, மகரக்குழை, வரிக்குழை, கனங்குழை, தெள்ளரிச் சிலம்பு, இடபக்குறி பொறித்த தாயத்து, பவளவடம், பொன்மணி வடம், சதங்கை, வயந்தகம், வல்லிகை, புல்லிகை, கன்ன சாமரை, தெய்வ உத்தி, கண்டிகை முதலியன. பரத்தையர் அணியும் அணிகள் சில செய்யுட்களில் [95, 96, 135] கூறப்பட்டுள்ளன.

**சமயச் செய்திகள்:** முக்கோல்பகவர் என்பவர் உறியிலே தங்கின கமண்டலத்தை யுடையவர்; அரி, அயன், அரன்

என்னும் மூவரும் ஒருவரே என்பதை அறிவிக்கும் அடையாளமாக முக்கோலைத் தோளிலே வைத்தவர்; குடையை உடையவர்; காட்டிடத்தே போதல் இயல்பான ஒழுக்கமாகக் கொண்டவர் (9); பிரணவத்தை எப்பொழுதும் நினைத்திருப்பவர் (126).

திருமால், பலராமன், சிவன், முருகன் ஆகிய நால்வரும் சிறப்புடைக் கடவுளராய் மதிக்கப்பட்டனர். உயிர்களைப் படைக்கும் பிரமன் முதல்வன் எனப்பட்டான் (129). திருமாலின் மகனான காமன் (109), அவன் தம்பி சாமன் [26] குறிக்கப்பட்டுள்ளனர். ஆயர் மகள் தெய்வத்திற்குப் பாலை வழங்கக் கோவிலுக்குப் போவாள் [109]. குறப் பெண்கள் நேர்த்திக் கடன் செய்வது வழக்கம் [46]. கோவில் 'கடவுள் கடிநகர்' எனப்பட்டது [84]; 'புத்தேளிர் கோட்டம்' என்றும் பெயர் பெற்றது [82]. மக்கள் கோவிலை வலம் வருதலும் சிறு பிள்ளைகளை வலம் வரச் செய்வித்தலும் வழக்கம் [82].

கன்னிப் பெண்கள் தைத்திங்களில் நீராடி நோன்பிருந்து பிறர் மனையின்கண் ஐயமேற்றுப் பாடி அங்குப் பெற்றவற்றைப் பிறர்க்குக் கொடுத்தனர்; அங்ஙனம் கொடுப்பதால் தமக்கு நற்பயன் உண்டாகும் என்று நம்பினர் [59]. இது பிற்காலத்தில் '**மார்கழி நோன்பு**' எனப்பட்டது.

இருடிகள் மாலையில் அழலை ஆவுதி பண்ணி எழுப்புவர் [130]. இவர்கள் மனைவியரோடு வாழ்ந்துகொண்டே தவம் செய்பவர். இவர்கள் 'கடவுளர்' எனப்பட்டனர் [93].

அரிய தவங்களைச் செய்தவர் பேரின்பத்தை அடைவர் என்பது நம்பப்பட்டது [30]. நூற் கேள்வியினையுடைய அந்தணர் யாகம் செய்தனர் [36]. அவர்கள் மாலையில் தம் சமயக் கடமைகளைத் தவறாது செய்தனர் [119].

**சில உண்மைகள் :** எந்த நாட்டு மனித இனத்திற்கும் பொதுவான பல உண்மைகள் இந்நூலில் இடம் பெற்

றுள்ளமை இந் நூலுக்கென்று அமைந்த சிறப்பியல்புகளுள் சிறந்தது என்னலாம். அவ்வுண்மைகள் தலைவன் கூறுவன போலவும், தோழி கூறுவன போலவும், முக்கோற் பகவர் போன்ற பெரியோர் கூறுவன போலவும்; வினைவல பாங்கர் கூறுவன போலவும் இந்நூலில் அமைந்துள்ளன. அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்:

1. செல்வம் நிலையில்லாப் பொருள் [8].

2. வறியவனது இளமை சிறப்பை அடையாது; கொடைக்குணம் இல்லாதவனுடைய செல்வம் அவனைச் சேர்ந்தவரைப் பாதுகாவாது [10].

3 யாவர்க்கும் தீங்கு செய்பவன் இறுதியில் உறவினர் இன்றி, நண்பர் இன்றிக் கெட்டு ஒழிவான் [10].

4. இளமையும் காமமும் நாள்தோறும் கழியும் இயல்பின [12].

5. அறிவில்லாதவர் தமக்கு இறுதி உண்டு என்பதையும் மூப்பு உண்டு என்பதையும் மறந்துவிடுவர் [12].

6. நேர்மையற்ற முறையில் பொருள் தேடுவார்க்கு அப்பொருள் இம்மையிலும் மறுமையிலும் பகையாகும் [14].

7. முழுமதி நாள்தோறும் தேய்வது போல இளமையும் அழகும் தேயும் [17].

8. நற்குணமுடையவர் சொல் தவறார் [22].

9. நிலையாமையை உணர்பவர் கொடை புரிவர் [32].

10. சோம்பலில்லாதவன் செல்வம் வளர்ச்சி அடையும் [35].

11. மனிதயாக்கை பெறுதற்கு அரியது [141].

12. பொருள் இல்லாதவர் நிகழ்த்தும் இல்லறம் இன்பத்தைத் தராது [148].

**உவமை முதலியன** : கலித்தொகைப் பாக்களில் உவமைகள் மிகப் பலவாகும். அவற்றுள் சில இதிகாச புராணக் கதைகளைக் குறிப்பவை [101]; சில அரசியல் செய்திகள் பற்றியவை [70]; வேறு சில உலகியல் பற்றியவை [69]. **உருவக அணி** சில செய்யுட்களில் [61, 96, 97, 149] அமைந்துள்ளது. **உள்ளுறை உவமம்** பல செய்யுட்களில் [39, 123, 132 முதலியன] அமைந்துள்ளது. **தற்குறிப்பேற்ற அணியும்** இடம் பெற்றுள்ளது [74]. இறைச்சிப் பொருளும் இடம் பெற்றுள்ளது [40].

**மேற்கோள்**

கலித்தொகைப் பாக்களில் திருக்குறள், அகநானூறு, சிலப்பதிகாரம் முதலிய சங்க கால நூல்களின் கருத்துகளும் தொடர்களும் சொற்களும் மிகுதியாகப் பயின்று வருகின்றன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காணலாம்.

1. ''அளியென உடையேன்யான் **அவலங்கொண்டழிவலோ**'' 20.

''அறனெனும் மடவோயான் **அவலங்கொண்டழிவலோ**''—சிலம்பு, காதை 18, வரி 41.

2. ''**வென்வேலான் குன்றின்**மேல் விளையாட்டும் விரும்பார்கொல்'' 27.

''**வென்வேலான் குன்றில்** விளையாட்டு யானகலேன்''—சிலம்பு, காதை 29, செ. 10.

3. ''**பாடல்சால் சிறப்பிற்** சினையவும் சுனையவும்'' 28

''**பாடல்சால் சிறப்பிற்** பட்டினப் பாக்கமும்'' சிலம்பு, காதை 5, வரி 58.

4. ''காதலர்ப் புணர்ந்தவர் **கவவுக்கை நெகிழாது**'' 33

''காதலற் பிரியாமல் **கவவுக்கை நெகிழாமல்**''—சிலம்பு, காதை 1, வரி 61.

5. ''ஓர்வுற்று ஒருதிறம் ஒல்காத நேர்கோல்'' 42

''சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்''
—திருக்குறள், 118

6. ''காதல்கொள் வதுவைநாட் கலிங்கத்துள் ஒடுங்கிய மாதர்'' 69.

''கொடும்புறம் வளைஇக் கோடிக் கலிங்கத்து
ஒடுங்கினள்'' அகம், 86

7. ''முகந்தானே கொட்டிக் கொடுக்கும் குறிப்பு'' 95

''அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்'' —திருக்குறள், 706

கலித்தொகைப் பாக்களில் காணப்படும் சில கருத்துகளும் தொடர்களும் சொற்களும் திரிகடுகம், தேவாரம் முதலிய பின் நூல்களில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க :

1. ''கோளாளர் என்னொப்பார் இல்லெனநம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கொருநாள்
கோளாளன் ஆகாமை இல்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன காண்.'' 101

'தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.''—திரிகடுகம், 13.

2. ''அன்னையும் அத்தனும் இல்லரா, யாய்நாண''115

''அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்.''
—அப்பர் தேவாரம்.

**வடசொற்கள் :** ஐங்குறுநூறு முதலிய அகப்பொருள் நூல்களில் வடசொற்கள் மிகக் குறைந்து காணப்படுகின்றன.

கலித்தொகைப் பாக்களில் அவற்றைவிடச் சில சொற்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இந்நூற்பாக்களில் வட நூற் கதைகளும் பிறவும் மிகுதியாக இடம் பெற்றிருத்தல் முன்பே குறிக்கப்பட்டதன்றோ? கடவுள் வாழ்த்து நீங்கிய இந்நூற் பாக்களில் காணப்படும் வடசொற்களுள் சிரகம்—பாத்திரம் [51], காரணம் [60], தம்பலம் [65], பிசாசர் [65], குணங்கள் [71], வயந்தகம்-ஒருவகை அணி [79], ஆரம்-மாலை [79], நூபுரம்-சிலம்பு [83], வச்சிரம் [105], நேமி [105]; சாமன்; காமன் [94], மேகலை [96], உத்தி [97], விச்சை-வித்தை [148], என்பவை குறிக்கத் தக்கவை.

காலம் செல்லச் செல்லத் தமிழர் வாழ்வில் வடசொற்களும் வடநூற் செய்திகளும் பிறவும் எங்ஙனம் படிப்படியாக மிகுந்துவந்துள்ளன என்பதை இக் கலித்தொகைச் செய்திகள் நன்கு புலப்படுத்தல் காண்க.

# 15. பரிபாடல்

**முன்னுரை**

**பரிபாடல்** என்னும் இசைப்பாக்களால் தொகுக்கப்பெற்றமையால் இப்பாக்களின் தொகுதி **பரிபாடல்** எனப் பெயர் பெற்றது. இப்பாக்களுக்குப் பண்கள் வகுக்கப்பெற்றுள்ளதைக் காண, இவை சங்க காலத்தில் இசையுடன் பாடப் பட்டன என்பது தெளிவு.

'இது, தொகைநிலை வகையால் **பா** என்று சொல்லப் படும் இலக்கணம் இன்றி எல்லாப்பாவிற்கும் பொதுவாக நிற்றற்கு உரியதாய் இன்பப் பொருளைப் பற்றிக் கூறும். இது சிறுமை இருபத்தைந்து அடியும், பெருமை நானூறு அடியும் எல்லையாகக் கொண்டுவரும்,' என்று **தொல்காப்பியர்** கூறியுள்ளார்.[1]

பரிபாடற்கண் மலையும் யாறும் ஊரும் வருணிக்கப் படும் என்று **இளம்பூரணர்** கூறியுள்ளார்.[2] அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்கள் நான்கனுள் **இன்பத்தையே பொருளாகக் கொண்டு** கடவுள் வாழ்த்து, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு முதலியவற்றில் இப்பாடல் வருமென்று **பேராசிரியர்** கூறியுள்ளார்.[3] தெய்வ வாழ்த்து உட்படக் காமப்பொருள் குறித்து உலகியலே பற்றி வரும் என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.[4]

---

1. செய்யுளியல், நூற்பா 116, 155.
2. ஷை நூற்பா, 117 உரை.
3. ஷை 1372, 1373, 1411 உரை.
4. தொல்காப்பியம், அகத்திணையியல், நூற்பா 53 உரை.

**பரிபாடல்**

இன்றுள்ள பரிபாடல்களிற் பல திருமாலையும், முருகனையும் பற்றியவை; பக்தி நெறி பற்றியவை; தொல் காப்பியர் விதிக்கு மாறுபட்டவை. வையை பற்றிய பாடல் களும் முருகன் பற்றிய பாடல்களுள் சிலவுமே அகப்பொருள் பற்றியவை. எனவே, தொல்காப்பியர்க்குப் பிற்பட்ட காலத் தில் புறம்பற்றிய செய்திகளும் பரிபாடலில் பாடப்பெற்றன என்பது இப்பாக்களால் தெரிகின்றது.

இன்றுள்ள பரிபாடல் என்னும் நூலில் இடம் பெற் றுள்ள பாக்கள் அகம், புறம் ஆகிய இரண்டையும் பற்றி யவை. எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறும் பதிற் றுப் பத்தும் புறப்பொருள் பற்றிய நூல்கள் என்பதும், ஏனைய ஐந்தும் அகப்பொருள் பற்றிய நூல்கள் என்பதும் முன்பே கூறப்பட்டன. அகப்பொருள் நூல்கள் ஐந்து திணைகளைப் பற்றிப் பேசும்; ஆனால் பரிபாடல்கள் ஐந்து திணைகளையும் நிலைக்களனாகக் கொண்டு அகப்பொருள் செய்திகளைக் கூறவில்லை. பிற அகப்பொருள் நூல்களில் பேரரசர் சிற்றரசர் முதலியோர் பற்றிய குறிப்புகள் இருக் கும். ஆனால் பரிபாடலில் அவற்றைப் பற்றிய குறிப்பு களே இல்லை. பாண்டியர்களைப் பற்றியும் அவர்களது நாட்டைப் பற்றியுமே குறிப்புகள் உள்ளன. பரிபாடலி லுள்ள புறப்பொருட் பகுதியிலும் பிற அரசர்களைப் பற்றிப் பேச்சே இல்லை. திருமாலிருஞ்சோலையில் உள்ள திருமால், திருப்பரங்குன்றத்து முருகன் ஆகிய தெய்வங்கள் பற்றிய தோத்திரப் பாக்களாகவே பல அமைந்துள்ளன. வையை பற்றிய பாக்களும், அதற்குத் தெய்வத் தன்மை கூறி, அதனை வழிபடும் பாடல்களாகவே அமைந்துள்ளன.

பிற தொகை நூல்களில் ஐந்திணைக் கடவுளர் ஆங் காங்குக் குறிக்கப்பட்டுள்ளனர்; ஆயின், பரிபாடலில் குறிஞ்சி நிலக் கடவுளாகிய முருகனும் முல்லை நிலக் கடவுளான திருமாலுமே விரிவாகப் பாடப்பெற்றுள்ளனர்.

| | பாடல்களைப் பாடியவர் | பாடல்கட்கு இசை வகுத்தவர் | பாடப்பெற்ற கடவுள் அல்லது யாறு | திருமால் | முருகன் | வையை |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஆசிரியன் நல்லந்துவனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | வையை | | | 2 |
| | | ,, | முருகன் | | 1 | |
| | | நாகனார் | வையை | | | 1 |
| 2. | இளம்பெருவழுதியார் | மருத்துவன் நல்லச்சுதனார் | திருமால் | 1 | | |
| 3. | கடுவன் இளஎயினனார் | பெட்டனாகனார் | திருமால் | 1 | 1 | |
| | | கண்ணன் நாகனார் | முருகன் | 1 | | |
| 4 | கரும்பிள்ளைப் பூதனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | வையை | | | 1 |
| 5. | கீரந்தையார் | நன்னாகனார் | திருமால் | 1 | | |
| 6. | குன்றம்பூதனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | முருகன் | | 2 | |
| 7. | கேசவனார் | கேசவனார் | முருகன் | | 1 | |
| 8 | நப்பண்ணனார் | மருத்துவன் நல்லச்சுதனார் | முருகன் | | 1 | |
| 9. | நல்லச்சுதனார் | கண்ணாகனார் | முருகன் | | 1 | |
| 10. | நல் அழுசியார் | நல்லச்சுதனார் | வையை | | | 1 |
| | | ,, | முருகன் | | 1 | |
| 11. | நல் எழுநியார் | —பெயர் அழிந்துபட்டது | திருமால் | 1 | | |
| 12. | நல் வழுதியார் | நந்நாகனார் | வையை | | | 1 |
| 13. | மையோடக் கோவனார் | பித்தா மத்தர் | வையை | | | 1 |

இத்தகைய பாக்களை வேறு தொகை நூல்களில் காணல் இயலாது. இந்நூற் பாக்களின் நடை எளிமை வாய்ந்தது. இப்பாக்கள் வருணனை மிகுந்தவை. ஒவ்வொரு பாவிற்கும் இசை கூறப்பட்டிருப்பதால் இவை இசையோடு பாடுவதற்கு அமைந்தவை என்பது தெரிகிறது. ஆதலால் இவை மக்களுடைய பேச்சு வழக்குச் சொற்களையும் ஆங்காங்கே பெற்றுள்ளன. இங்ஙனம் இப்பாடல்கள் 'பா' வகையிலும் செய்யுள் நடையிலும் வருணனையிலும் எண்ணத்திலும் முறைவைப்பிலும் பிறவற்றிலும் மாறுபட்டுள்ளமை அறியத் தகும்.

அழிந்தன போக இன்று இந்நூலில் இருப்பவை 22 பாடல்களாகும்; (தொல்காப்பிய உரையிலும் புறத்திரட்டிலும் வேறு மூன்று பாடல்கள் கிடைத்துள). இவற்றுள் திருமாலைப் பற்றியவை ஆறு; முருகனைப் பற்றியவை எட்டு; வையை பற்றியவை எட்டு; மதுரை, வையையாறு, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலைமலை ஆகியவை பற்றிய செய்திகளே இப்பாடல்களிற் காணப்படுகின்றன. இவற்றை நோக்க. இந்நூற்பாக்கள் பாண்டிய நாட்டைச் சிறப்பிக்கவே பாடப்பெற்றன என்று கருத இடந்தருகின்றன.

ஆசிரியர் நல்லந்துவனார், இளம்பெரு வழுதியார், கடுவன் இளஎயினனார், கரும்பிள்ளைப் பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார், நல்லச்சுதனார், நல்லழுசியார், நல்லெழுனியார், நல்வழுதியார், மையோடக்கோவனார் என்னும் பதின்மூன்றுபேர் இந்நூற் பாடல்களைப் பாடியுள்ளனர். ஒவ்வொரு பாடலுக்கும் இசை வகுத்த புலவர் வேறாவர்.

இந்நூற் பாடல்களுக்குப் பரிமேலழகர் இயற்றிய உரை கிடைத்துள்ளது. இவ்வுரை பல இடங்களில் பொழிப்புரையாயும், சில இடங்களில் பதவுரையாயும், வேறு சில இடங்

களில் கருத்துரையாயும் அமைந்துள்ளது; இலக்கணக் குறிப்புகளை ஆங்காங்குப் பெற்றுள்ளது. விளங்காத பகுதிகள் சில தமிழ் நூல் மேற்கோள்களாலும் வடநூல் கருத்துகளாலும் விளக்கப்பட்டுள்ளன.

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இந்நூலைச் சிறந்த முறையிற் பதிப்பித்தனர். சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார் புதிய உரையுடன் கூடிய பதிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

## பரிபாடலின் காலம்

பரிபாடல் சங்ககாலத்திற்குப் பிற்பட்டது என்று கூறும் அறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்கள் அதற்குரிய தடைகளைக் கீழ்வருமாறு மொழிகின்றனர்:

**தடைகள் :** 1. பரிபாடல்களைப் பாடிய புலவருள் ஒருவரேனும் பிற தொகை நூல்களைப்பாடியவராய்த் தெரிந்திலர். சில பரிபாடல்களைப் பாடிய ஆசிரியன் நல்லந்துவனார், அந்துவனார்—மதுரை ஆசிரியன் நல்லந்துவனார் என்னும் புலவர்களின் வேறானவர். இங்ஙனமே பதினைந்தாம் பரிபாடலைப் பாடிய இளம்பெருவழுதியார் புறநானூற்றில் 182 ஆம் செய்யுளைப் பாடிய கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் வேறானவர். ஏனெனில், பின்னவர் தமது புறப் பாட்டில் 'இந்திரர்' என்று பன்மையில் சுட்டலால் சமணர் எனக் கருதற்பாலர் ஆதலின் என்க.[5]

2. பிற தொகை நூல்களில் காணப்படும் வடசொற்களையும், புராண இதிகாசக் கதைகளையும்விடப் பரிபாடல்களில் இவ்விருவகையும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. கவிதை, ஆராதனை [பாடல் 6], மேகலை, வாகுவலயம் [பாடல் 7], புங்கவம், நரதர், குடாரி, அருச்சிப்போர்,

5. History of Tamil Languge and Literature, p. 29.

அமிர்தபானம் [பாடல் 8], மிதுனம், புன்னாகம், சண்பகம், குந்தம், மல்லிகாமாலை [பாடல் 11], யாத்திரை, பிரமம், இரதி, சோபனம் [பாடல் 19], வந்திக்க, சிந்திக்க [பாடல் 20] முதலிய வடசொற்கள் பரிபாடல்களின் பிற்காலத்தை உணர்த்துகின்றன.[6]

3. சங்ககாலத்திற்குப் பின்பே திருவேங்கடம், திருவரங்கம், திருமாலிருஞ்சோலைமலை, திருவனந்தபுரம் என்பன வைணவத் தளிகளாகக் குறிக்கப்பட்டுள்ளன. பின்வந்த ஆழ்வார்கள் இத்தளிகளைப் பாடியுள்ளனர். சிலப்பதிகாரத்திலும் இவை குறிக்கப்பட்டுள்ளன. திருமாலிருஞ்சோலை மலை பரிபாடலில் குறிக்கப்படலால் பரிபாடலின் காலம் கி.பி. 600 என்னலாம்.[7]

4. கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் திருப்பரங்குன்றத்துச் சிவபெருமானைப் பாடியுள்ளார்; ஆயின், முருகனைப்பற்றிப் பாடவில்லை. எனவே, சம்பந்தருக்குப் பின்பே முருகன் கோவில் உண்டாயிற்று என்று கூறலாம். பரிபாடலில் அம்முருகனைப் பற்றிய பாடல்கள் இருத்தலால் அப்பாடல்களின் காலம் ஏறத்தாழக் கி.பி. 700 என்னலாம்.[8]

5. கி. பி. 300க்கு முற்பட்ட தமிழிலக்கியத்தில் அகத்தியரைப் பற்றிய பேச்சே இல்லை. ஆனால் பரிபாடலில் அகத்தியர் 'பொதியில் முனிவன்' (பாடல் 11, வரி 11) என்று குறிக்கப்பட்டுள்ளார்.[9]

6. கி. பி. மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட அபிஷேக பாண்டியன் காலத்தில்

---

6. Ibid. p. 56.

7. காவிய காலம், பக். 121.

8. **History of Tamil Langugae and Literature, p. 113.**

9. **இலக்கியத் தோற்றம், பக். 58—59.**

மதுரை நான்மாடக்கூடலென்று பெயர் பெற்றது. எனவே, கூடலைப் புகழும் பரிபாடல் கி.பி மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகலாம்.[10]

7. பதினோரம் பரிபாடலில் காணப்படும் வானிலை பற்றிய குறிப்புகளை ஆராய்ந்து திரு. சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் அப்பாடலின் காலம் கி. பி. 634என்று கூறி யுள்ளார்.[11]

8. நான் (பாடல் 20, வரி 82), ஆயும் (பாடல் 6 வரி 71) என்னும் பிற்காலச் சொல்லுருவங்கள் பரிபாடல் களில் பயின்றுள்ளன.[12]

இனி இவற்றை ஒவ்வொன்றாக இங்கு ஆராய்வோம் :

**விடைகள்**

1. பரிபாடல்களுக்கு இசை வகுத்த புலவர்களுள் கண்ணகனார் ஒருவர். புறநானூற்றில் 218 ஆம் செய் யுளையும், நற்றிணையில் 79ஆம் செய்யுளையும் **கண்ண கனார்** என்ற புலவர் பாடியுள்ளார். இவ்விருவரும் ஒருவரே என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் கருது கிறார்கள்.[13] இக்கருத்தை மறுப்பதற்கு எவ்விதச் சான்றும் இல்லை.

நன்னாகனார் என்ற புலவர், புறநானூற்றில் 381 ஆம் செய்யுளைப் பாடியுள்ளார். கீரந்தையாராது பரிபாடலுக்கு இசை வகுத்த நன்னாகனார் என்ற புலவரும் முன் கூறப் பெற்ற நன்னாகனாரும் ஒருவரே என்று கருதுவதில் தவ

---

10. ஷை பக். 60—61.

11. L. D. Swamikkannu Pillai, Indian Ephemeries, vol. I, Part I, pp. 98—109.

12. History of Tamil Language and Literature, p. 56.

13. பரிபாடல், பக். 18.

றில்லை. இசைப் புலவர்கள் இயற்றமிழ்ப் புலவராயும் இருத்தல் கேசவனாரைக் கொண்டு அறியலாம்.

இங்ஙனமே இயற்றமிழ்ப் புலவர் இசைத்தமிழிலும் வல்லராதலைச் சிலப்பதிகாரம் கொண்டு அறியலாம். எனவே, மேலே காட்டப்பெற்ற இசைப்புலவர் இருவரும் சங்ககாலப் புலவர் அல்லர் என்று உறுதியாகக் கூற இயலாமை காண்க.

2. பிற தொகை நூல்களிலும் உருத்திரன், உலோச்சனார், பவுத்திரன், பிரமதத்தன், காசிபன் கீரனார், சத்தி நாதனார், பிரமசாரி, கௌசிகனார், தாமோதரனார், மார்க்கண்டேயனார், வான்மீகியார் போன்ற வடமொழிப் பெயர்கள் புலவர் பெயர்களாக வந்துள்ளன. பிற தொகை நூல்களில் முருகன் சூரபதுமனைக் கொன்றமை, சிவன் முப்புரம் எரித்தமை, திருமால் பிரமனைப் படைத்தமை போன்ற புராண இதிகாசக் கதைகள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. கண்ணன் நப்பின்னையை மணந்தமை, கண்ணன் குருந்து ஒசித்தது போன்ற பாகவத நிகழ்ச்சிகள் சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவையுள் கூறப்பட்டுள. கண்ணனும் பலதேவனும் நப்பின்னையை நடுவிற்கொண்டு ஆடிய அற்புதக் குரவை ஆயர்பாடியில் ஆடப்பட்டது என்றும் ஆய்ச்சியர் குரவை அறிவிக்கிறது. கண்ணன் நீராடிக்கொண்டிருந்த ஆயர்மகளிர் ஆடைகளைக் கவர்ந்தமையும் அப்பொழுது பலராமன் வருதலையறிந்து, ஆயர் மகளிரது மானங் காக்க வேண்டிக் கண்ணன் குருந்து ஒசித்துத் தன் செயலைத் தமையன் அறியாமற் செய்தமையும் அகநானூற்றில் (59) மருதன் இளநாகனார்,

"..........................................வடாஅது
வண்புனல் தொழுநை வார்மணல் அகன்றுறை
அண்டர் மகளிர் தண்டழை உடீஇயர்
மரஞ்செல மிதித்த மாஅல்"

என்று குறித்துள்ளார்.

இனிக் கண்ணன் ஆடிய குடக்கூத்தும், அவன் மகனான பிரத்தியும்நன் ஆடிய பேடு என்னும் கூத்தும், கண்ணன் மல்லன் வேடம் பூண்டு வாணனைக் கொன்றாடிய மல்லாடல் கூத்தும், அல்லியத் தொகுதி என்ற கூத்தும் சிலப்பதிகாரம்—அரங்கேற்று காதையில் இடம் பெற்றுள. சிலப்பதிகார காலத்திற்கு முன்னரே இக்கதைகள் தமிழகத்தில் வழக்குப் பெற்றுவிட்டன என்பதையே இவை உணர்த்துகின்றன. இவை போன்ற சிலவே பரிபாடலில் திருமால் பற்றிக்கூறும் இடங்களில் இடம் பெற்றுள்ளன. எனவே, இவை கொண்டு நூலின் காலம் காணல் அருமையிலும் அருமை!

பரிபாடல்களுள் பல, திருமால் முருகன் ஆகிய கடவுளரைப் பற்றியவை. ஆதலால், அக்கடவுளரைப்பற்றி வடமொழிப் புராணங்களில் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. கங்க மரபினர் காலத்தில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில்—வட இந்தியாவில் தோன்றிய பக்திநெறி தமிழகத்திலும் நன்கு பரவிவிட்ட காரணத்தாலும், கடவுளர்பற்றிய செய்திகள் வடமொழி நூல்களிலேயே மிகுதியாக இடம் பெற்றிருந்த காரணத்தாலும் கடவுளர் பற்றிய பரிபாடல்களில் வடமொழிச் சொற்களும் புராணக் கதைகளும் ஓரளவு மிகுதியாக இடம் பெற்றிருத்தல் இயல்புதானே! இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான மணிமேகலை பௌத்த சமயத்தைப் பற்றியே பேச எழுந்தது. ஆதலால் அதன்கண் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவ்வொரு காரணம் பற்றியே மணிமேகலை சிலப்பதிகார காலத்திற்குப் பிற்பட்டது என்று கூறுவது பொருந்தாது அன்றோ?

3. சிலப்பதிகாரத்தின் காலம் கயவாகுவின் காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி (கி.பி. 113—136) என்பது முன்பு பல இடங்களில் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் வேங்கடம், திருவரங்கம், அழகர்மலை ஆகிய மூன்றும் திருமாலுக்கு உரியனவாகக்

கூறப்பட்டுள்ளன. பத்துப்பாட்டுள் ஒன்றான பெரும் பாணாற்றுப்படை, அக்காலக் காஞ்சிக்கு அருகில் பள்ளி கொண்ட திருமால்கோவில் இருந்ததை இயம்புகிறது.

''காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோன் ஆங்கண்''
(வரி 372-373)

4. திருப்பரங்குன்றத்தில் சிவனைப் பாடிய சம்பந்தர் அங்குள்ள முருகனைப் பாடவில்லை என்பது இன்றுள்ள திருப்பதிகத்தைக் கொண்டு தெரிகிறது. அவர் பரங்குன் றத்தைப் பற்றிப் பாடிய ஒரே பதிகம்தான் கிடைத்துள்ளது. சம்பந்தர் பாடவில்லை என்பது கொண்டு, அவர் காலத்தில் திருப்பரங்குன்றத்தில் முருகன் கோவில் இல்லையென்று கூறுவது பொருந்தாது. ஏனெனில், அகநானூறு 59 ஆம் பாடலில்,

''சூர்மருங்கு அறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை''

என்று மதுரை மருதன் இளநாகனார் பாடியுள்ளார். இம் மருதன் இளநாகனார்க்கு முன்பே அந்துவன் என்ற புலவர் திருப்பரங்குன்றத்து முருகனைப் பாடியுள்ளார் என்பது இவ் வடிகளால் தெளிவாகிறதன்றோ!

''நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்
கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடா அது
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய
ஒடியா விழவின் நெடியோன் குன்றம்''

என்னும் அகநானூற்று 149 ஆம் பாடல் அடிகளும் சங்க காலத்திலேயே திருப்பரங்குன்றத்தில் முருகன் கோவில் இருந்ததை மெய்ப்பிக்கின்றன; அன்றியும் அக்கோவிலில்

அக்காலத்தில் ஓய்வின்றி விழாக்கள் நடைபெற்றமையையும் இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. எனவே, திருப்பரங் குன்றத்தில் முருகன் கோவில் சங்ககாலத்திலேயே இருந்தது என்பது தெளிவாதல் காண்க.

5. **''தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்**
**றொன்முது கடவுள்''**

எனவரும் மதுரைக்காஞ்சி அடிகட்கு [வரி. 40-41]

''இராவணனைத் தமிழ்நாட்டை யாளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழைமை முதிர்ந்த **அகத்தியன்**'' என்று நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். இந்நச்சினார்க்கினியரே தொல்காப்பியப் பாயிரவுரையில், ''**அகத்தியர்** பொதியின்கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கி,'' என்று கூறியுள்ளார்.

மேலே கூறப்பெற்ற மதுரைக்காஞ்சி அடிகளுக்கு நச்சினார்க்கினியர் உரையைத் தந்த பத்துப்பட்டின் பதிப்பாசிரியராகிய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் அடிக்குறிப்பில், ''தென்னாட்டை ஆண்டு குடிகளைத் துன்புறுத்திவந்த இராவணனை, **அகத்தியர்** பொதியமலை உருகும்படி இசைபாடி இலங்கைக்குப் போக்கினர் என்பது பண்டை வரலாறு'' என்று கூறி, அகத்தியர் இசையில் வல்லுநர் என்பதற்கும், அகத்தியர் யாழ் வாசித்துப் பொதியினை உருகச் செய்தனர் என்பதற்கும், இராவணனை இசைபாடி அடக்கினர் என்பதற்கும் திருக்கயிலாய ஞானவுலா, தக்கயாகப் பரணி, சோணசயில மாலை, வெங்கையுலா, தஞ்சைவாணன் கோவை என்னும் இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளனர். இவை மதுரைக்காஞ்சிக்கு மிகப் பிற்பட்ட நூல்களாயினும், அகத்தியர் இசைபாடி இராவணனை விரட்டினார் என்ற வரலாறு இந்நாட்டில் நெடுக வழங்கிவந்தது என்னும் உண்மையை உணர்த்துகின்றன அல்லவா? எனவே அகத்

தியர் தொகை நூல்களிற் குறிக்கப்பெறவில்லை என்பது பொருந்தாமை காண்க.

பதினோராம் பரிபாடலில் ''பொதியின் முனிவன்'' அகத்தியர் குறிக்கப்பட்டுள்ளார். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் பாடப்பெற்ற சிலப்பதிகாரம் எட்டாம் காதையில் [வரி 8] 'பொதியின் மாமுனி' என்னும் தொடர் அகத்தியரைச் சுட்டுதலைக் காணலாம்.

6 ''மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்'' என வரும் மதுரைக் காஞ்சி அடியும் [வரி. 429], ''பெரிய நான்மாடத்தாலே மலிந்த புகழைக் கூடுதலையுடைய மதுரை'' என வரும் நச்சினார்க்கினியர் உரையும் காணத்தக்கவை. இவை, சங்ககாலத்திலேயே கூடலில் [நான்] மாடம் இருந்ததை மெய்ப்பிக்கின்றன.

கலித்தொகை 92 ஆம் பாடலில் ''நான்மாடக் கூடல்'' என்பது வந்துள்ளது. கலித்தொகையின் காலம் கி.பி. 300 எனக் கொண்டாலும், அது சங்கநூலாதல் உறுதியே. எனவே, 'நான்மாடக் கூடல்' என்பது கொண்டு பரிபாடல் சங்ககாலத்திற்குப் பிற்பட்டது எனக் கூறல் இயலாது.

7. அறிஞர் சுவாமிக்கண்ணுப் பிள்ளையவர்கள் பரிபாடலில் வரும் வானிலை பற்றிய செய்தி கொண்டு கூறிய காலம் பொருந்தாது என்பதைத்தக்க காரணம் காட்டிப் பேராசிரியர் பி.டி. சீனிவாச அய்யங்கார் மறுத்துள்ளார் என்பது இங்கு அறியத்தகும்.[15]

8. 'நான்', 'ஆமாம்' முதலிய சொற்கள் பொது மக்களால் பேசப்பட்ட வழக்குச் சொற்கள் என்னலாம். அவை சமுதாயத்தில் பெற்றுள்ள செல்வாக்கினால் சில சமயங்களில் புலவர் பாக்களில் இடம் பெறுதல் இயற்கை. நாம் வாழும் இக்காலத்தில் புலவர் சிலர் இலக்கியச் சொற்

---

15. A description of the sky during an eclipse in poem II has been used in an attempt to fix the date of

களையே பயன்படுத்தி நூல் எழுதுவதும், புலவர் பலர் எளிமை கருதிப் பேச்சு வழக்குச் சொற்களை மிகுதியாகப் பயன்படுத்தலும் இயல்பாக இருக்கின்றது. பரிபாடல்களுள் பல வழிபாட்டுப் பாடல்கள்; பொதுமக்களுக்கு உரியவை. எனவே, அவற்றிற்கு இசையும் வகுக்கப்பட்டது. ஆதலால் மக்கள் பேச்சு வழக்கிலிருந்த 'நான்', 'ஆமாம்' போன்ற சொற்கள் இடம் பெற்றன என்று கொள்வது பொருத்தமாகும்.

கண்ணன் தமையனான பலதேவனுக்குப் பனைக் கொடியும் நாஞ்சிற்படையும் உரியவை. அவை இரண்டும் திருமாலுக்கு உரியவையாகப் பரிபாடல்கள் [4, 13] கூறுகின்றன. மேலும் பலதேவனை வாசுதேவனுடன் [கண்ணனுடன்] இணைத்து வழிபட்டமை பரிபாடலில் [13] கூறப்பட்டுள்ளது. இங்ஙனம் இருவரையும் இணைத்து வழிபடும் முறை மிகத் தொன்மையானது.

வடஇந்தியாவில் கோசுண்டி, நானாகாட் என்னும் இடங்களிற் கிடைத்த கல்வெட்டுகளில் வாசுதேவன்—பலதேவன் வணக்கம் இணைந்தே காணப்படுகிறது. இக்கல்வெட்டுகள் முறையே கி. மு. 3, 1ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. எனவே, வாசுதேவன்—பலதேவன் வணக்கம் வடஇந்தியாவில் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் இருந்தமை நன்கு தெளிவாகும்.[16]

---

the composition of the poem by astronomical calculations, but it has proved a failure because the information in the text is not enough for calculating the date without adventitious unwarranted assumptions and the information supplied by the annotator has made confusion worse confounded.— History of the Tamils, p. 584.

16. Sri R. G. Bhandarkar, Vaishnavism, Saivism, and Minor Religions, pp. 3—4.

இவ் வணக்கம் சங்ககாலத் தமிழகத்திலும் இருந்தது. கண்ணனுக்கும் பலதேவனுக்கும் கோவில்கள் இருந்தன. புலவர்கள், ''நீ பகைவரைக் கொல்வதில் கண்ணனையும் வலிமையில் பலதேவனையும் ஒப்பை''[17] எனத் தமிழரசரை வாழ்த்தினர், ''இருபெருந்தெய்வமும் ஒருங்கிருந் தாங்கு'',[18] என்று அவர்களை இரண்டு பெருந் தெய்வங் களாகவே கருதி வழிபட்டனர் என்பன புறநானூறு சிலப்பதி காரம் முதலிய சங்கநூல்களால் அறியப்படும். பலதேவ னுக்குப் பனைக்கொடி உரியது. தொல்காப்பியர் 'பனை' என்னும் பெயர் முன் 'கொடி' என்பது வருதற்குத் தனி விதி கூறியுள்ளதை நோக்க, அவர் காலத்திலேயே இவ்வணக்கம் தமிழகத்தில் இருந்தது என்று நினைத்தல் தகும்.

''கி. மு. முதல் நூற்றாண்டிலே சங்கருடண வாசு தேவர்கள் [பலதேவரும் வாசுதேவரும்] மராத்தியரால் வழி படப்பட்டனர். இதே காலத்தில் இம்மதம் தெற்கிலும் பரவி யிருத்தல் வேண்டும். பரிபாடல் முதலிய நூல்கள் அக்காலத் தில் எழுந்தன ஆகலாம்.[19]

சங்ககாலம் என்பது முன்பு கூறியாங்கு மிகப்பரந்துபட்ட கால எல்லையை உடையது. அப்பரந்துபட்ட கால எல்லை யில் கி. மு. நான்காம் நூற்றாண்டில் தொல்காப்பியம் செய்யப்பட்டது—அதற்கு முன்பு சிலவும் பின்பு பலவுமாகத் தொகை நூற் பாடல்கள் பல் காலங்களிற் பாடப் பெற்றன என்பதும், பிற்பட்ட சொல்லுருவங்களையும் வழக்குகளையும் புராணக்கதைகளையும் மிகுதியாகக் கொண்ட கலித்தொகை, பரிபாடல், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன கி. மு. இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளிற் செய்யப் பெற்றி ருக்கலாம் என்பதும் பொருத்தமாகும்.

---

17. புறநானூறு, 56.
18. புறநானூறு, 58.
19. ஈ. எஸ். வரதராச அய்யர், தமிழிலக்கியவரலா பக். 236.

பரிபாடல்களைப் பாடிய புலவர் இன்றுள்ள பிற தொகை நூற்பாக்களைப் பாடிய புலவரே எனக் கொள்ளினும், அப்புலவரின் வேறானவர் எனக் கொள்ளினும், அவர்கள் காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதி என்று கொள்வது தக்கதாகும்.

கலித்தொகையில்—நற்றிணை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள மூவேந்தர் போர்ச் செயல்களும் சிற்றரசர் போர்ச் செயல்களும் இவ்விரு தரத்தாரைப் பற்றிய பிற விவரங்களும் இடம் பெறவில்லை. பாண்டியர், அவர்தம் தலைநகராகிய கூடல், வையையாறு என்பவையே இடம் பெற்றுள்ளன. ஆதலால் கலித்தொகைப் பாக்கள் நக்கீரர், கபிலர், பரணர் போன்ற புலவர் பெருமக்களுக்குப் பின்பே பாடப்பெற்றனவாதல் வேண்டும் என்பது முன்பே கூறப்பட்டதன்றோ? பரிபாடலிலும் இதே நிலையை காணப்படுவதால், இதன் காலமும் கலித்தொகையின் காலமென்றே கூறுதல் பொருத்தமாகும்.

## பரிபாடல் செய்திகள்

### முப்பொருள் பற்றிய பாடல்கள்

பரிபாடல் நூலில் இருபத்திரண்டு பாடல்கள் உள்ளன. அவற்றுள் ஆறு [1—4, 13, 15] திருமாலைப் பற்றியவை; எட்டுப் பாடல்கள் [5, 8, 9, 14, 17, 18, 19, 21] செவ்வேளைப் பற்றியவை; எட்டுப் பாடல்கள் [6, 7, 10, 11 12, 16, 20, 22] வையை ஆற்றைப் பற்றியவை. இவை அல்லாமல் தொல்காப்பிய உரையில் காணப்பட்ட மூன்று பாடல்கள் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று திருமாலைப்பற்றியது; ஒன்று வையை பற்றியது; மற்றொன்று மதுரை பற்றியது.

திருமாலைப் பற்றிய 6 பாக்களிலும் அகப்பொருள் பற்றிய செய்திகள் இல்லை; செவ்வேளைப்பற்றிய 8 செய்யுட்களில் நான்கு [8, 9, 14, 21] அகப்பொருள் கலந்தவை. வையை பற்றிய எட்டுப் பாக்களில் ஆறு பாடல்கள் அகப்பொருள் கலந்தவை. இவ்வகப்பொருள் கலந்த பாடல்கள்

தலைவனது பரத்தைமையையும், தலைவி அதனைக் கடிதலையும், தலைவன் பொய்ச்சூள் புரிதலையும், தோழி அதற்காக அவனைக் கடிதலையும், தலைவன் தலைவியோடு வையையின் புதுவெள்ளத்தில் நீராடியதையும், தலைவன் இற்பரத்தையுடன் நீராடியதையும், தலைவி—பரத்தை உரையாடலையும் பற்றிக் குறிப்பிடுகின்றன.

**இருங்குன்றம் :** இஃது இன்றைய அழகர்மலையாக இருத்தல் கூடும் என்று கூறப்படுகின்றது. இருங்குன்றத்தின்மீது திருமாலுக்கும் பலதேவனுக்கும் ஒரு கோவில் இருந்தது. அதனால் இக்குன்றம், 'மாலிருங்குன்றம்' எனப்பட்டது; அக்குன்றத்தில் சோலைகள் மிக்கிருந்தமையால் திருமாலிருஞ்சோலைமலை எனப்பட்டது [பாடல் 15, வரி 13—23]. அம்மலையில் சிலம்பாறு என்ற பெயருடன் ஒரு பெரிய அருவி விளங்கியது. மலைமீதுள்ள கோவிலில் குழலோசையும், மிடற்றுப் பாடலும், தாள ஒலியும், முழவொலியும் நிலவியிருந்தன. மக்கள் குடும்பம் குடும்பமாகச் சென்று மலையேறித் திருமாலையும் பலதேவனையும் வணங்கினர் [15, வரி 30—45]. கண்ணனும் பலதேவனும் 'பெரும்பெயர் இருவர்' எனப்பட்டர் [15, வரி 66].

**இருந்தையூர் :** இருந்தையூர் என்பது கூடலுக்கு அப்பால் வையைக் கரையில் இருந்த ஊராகும். மதுரையில் இன்று கூடலழகர் கோவில் உள்ள இடமே அக்கால இருந்தையூர் என்பது. இங்குத் திருமால் இருந்த கோலத்தில் காட்சி தருகிறார். அதனால் இத்தலம் 'இருந்த ஊர்' என்று பெயர் பெற்றது. அப்பெயர் காலப்போக்கில் 'இருந்தையூர்' என மாறி வழங்கலாயிற்று.

**தண்பரங் குன்றம் :** இது கூடல் நகரத்திற்கு மேற்கில் இருந்தது. மலைமீது சோலைகள் மிக்கிருந்தன. மலையிலிருந்து அருவிகள் கீழ்நோக்கிப் பாய்ந்தன. இவற்றால் அம்மலை தண்பரங் குன்றம் எனப்பட்டது. [14,13— 7]. மலைமீது முருகன் திருக்கோவில் இருந்தது. பாணர் யாழ் வாசித்தனர். பலவகை இசைக் கருவிகள் ஒலித்தன.

விறலியர் நடனமாடினர். மக்கள் இறைவனை வழிபட்டனர் [17,9—21].

**வையை :** வையையில் புதுவெள்ளம் வருவதைக் கண்டதும் ஆற்றங்கரையின் காவலர் கரையைக் காவல் காத்தனர் [10, 7]. மதுரை மக்கள் அனைவரும் புது வெள்ளத்தில் நீராடினர். தலைவர் சிலர் பரத்தையருடன் நீராடினர். நீராடியவர்கள் பொன்னால் செய்யப்பட்ட நத்தை, நண்டு, இறால், வாளை மீன் இவற்றை நீரில் விட்டனர் [10, 71—88) வையையின் கரையிலிருந்த சோலைகளில் ஆடல் பாடல் நிகழ்ந்தன [22, 35—45]. மதுரை மக்கள் வையையைப் பலவாறு வாழ்த்தித் தத்தம் இல்லங்களை அடைந்தனர்.

**தமிழ் வையை :** பாண்டியர் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவர்; புலவர்களை ஆதரித்துத் தமிழை வளர்த்தவர். அதனால் அவர்கள் தலைநகராகிய கூடல் 'தமிழ் கெழு கூடல்' எனப்பட்டது அக்கூடலை அடுத்துப் பாய்ந்த வையையும், ''தமிழ் வையை'' [6,60] எனப்பட்டது.

**தைந் நீராடல் :** மார்கழி மாதத்தில்—நிறைமதி நாளாகிய திரு ஆதிரையில் ஆகமங்களை உணர்ந்த பூசகர்கள் தெய்வத்திற்குத் திருவிழாவைத் தொடங்கினர். அப்போது கன்னிப் பெண்கள் ஒன்றுகூடி, ''நிலம் மழைவளம் பெற்றுக் குளிர்வதாகுக,'' என்று சொல்லி அம்பா ஆடலை மேற்கொண்டனர். அந்நோன்பு முறையை அறிந்த முதிய பார்ப்பனிமார் அக்கன்னிப் பெண்களுக்கு நோன்பு நோற்கும் முறைமையைத் தெரிவித்தனர். அக்கன்னிப் பெண்கள், அவர்கள் தெரிவித்தபடி, பனி நிறைந்த கதிரவன் தோன்றும் காலத்தில் வையையில் நீராடினர்; கரையில் தங்கியிருந்த அந்தணர் வளர்த்த வேள்வித்தீயை வணங்கினர். இங்ஙனம் இளைய ஆண்மக்களோடு காமக் குறிப்பு இல்லாத விளையாட்டைப் புரியும் அக்கன்னிப் பெண்கள், தவமாகிய தைந் நீராடலை வாய்க்கப் பெற்றனர் [11, வரி 74—92]. இது

அம்மன் பொருட்டு நிகழ்த்தப்பெறும் நீராட்டு என்று பொருள் படும். அம்பா, அம்பாள் என்பது அம்மனைக் குறிப்பவை.[20]

**அடியார் வேண்டுதல் :** அடியவர், ''நாங்கள் எங்கள் சுற்றத்தாருடன் நின் திருவடிகளைத் தொழுது வாழ அருள் புரிவாயாக [1], யாம் மெய்யுணர்வு பெற்ற நின்னை வணங்க அருள்புரிவாய் [2], இந்த இருங்குன்றத்தின் அடியின்கண் வாழும் பேறு எங்களுக்குக் கிடைப்பதாகுக,'' [15] என்று திருமாலை வேண்டினர்.

அடியார் சிலர், ''யாம் வேண்டுபவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல. எமக்கு வீடு பயக்கும் நின் அருளும், அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யும் அன்பும், அவ்விரண்டாலும் வரும் அறமும் ஆகிய இம் மூன்றுமேயாகும் [5], நின் திருப்பரங்குன்றத்தில் யாம் வாழுதல் நாள்தோறும் பொலிந்து பயன்தருவதோடு சிறக்கும்படி நின் அருளை வேண்டுகிறோம் [9], பிறவித் துன்பம் எம்மைவிட்டு நீங்குக என்று நின் புகழை ஏத்திப் பாடுவோம் [17], யாம் எமது சுற்றத்துடன் கூடி நின் அடிக்கண் வாழுதல் இன்றுபோல் என்றும் பொருந்துக,'' [21] என்று முருகனை வேண்டினர்.

பிரிந்த தலைவர் வினைமுடித்து விரைவில் வந்துதம்மைக் கூடவேண்டும் என்பதற்குத் தலைவியர் திருப்பரங்குன்றத் தில் விழா இயற்றினர்; பின்பு வையைக் கரையிலும் வழி பாடு செய்தனர்; பின்பு கூடலில் விருந்து நடத்தினர் [17, வரி 42—46].

**ஓவியம் :** ஓவியம் எழுதுவோன் வல்லோன் [21, வரி 27—28] எனப்பட்டான். தண்பரங்குன்றத்து மலைமீதிருந்த முருகன் திருக்கோவில் மண்டபத்தில் பல ஓவியங்கள் வரையப் பட்டிருந்தன. அவற்றுள், நாள் மீன்களையும் தாரகைகளை

---

20. பேராசிரியர் மு. இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, பக். 194—195.

யும் உடைய துருவ சக்கரத்தைப் பொருந்திய சூரியன் முதலாக உள்ள கோள்களின் நிலைமையை விளக்கும் ஓவியம் ஒன்றாகும். இரதி மன்மதனைக் குறிக்கும் ஓவியம் மற்றொன்றாகும். கௌதமன், அகலிகை, இந்திரன் உருவங்களையும் இந்திரன் எடுத்த பூனை உருவத்தையும் வேறோசர் ஓவியம் உணர்த்தினது. இத்தகைய ஓவியங்கள் பல அம் மண்டபத்தில் தீட்டப்பட்டிருந்தன [19, வரி 46—53]. ஓவியங்களைப்பற்றிய இத்தகைய தெளிவான குறிப்பு வேறு சங்க நூல்களில் இல்லை எனபது இங்கு அறியத்தகும்.

**பேரெண்கள் : நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம், வெள்ளம்** என்பவை நீண்ட காலங்களைக் குறிக்கும் பேரெண்கள் ஆகும் [2, வரி 13—14]. திருமால் பற்றிய தனிப் பாடல் ஒன்றில் **தோழம்** என்பது ஒரு பேரெண் என்று குறிக்கப்பட்டுள்ளது. ஒருகை, இருகை. முக்கை...எண்கை, ஒன்பதிற்றுக்கை, பதிற்றுக்கை, ஆயிரம் கை, பதினாயிரம் கை, நூறாயிரம்கை என ஒன்று முதல் நூறாயிரம் வரை எண்கள் குறிக்கப்பட்டுள்ளன [3, வரி 34—43).

**மேற்கோள் :** பிற அகப்பொருள் நூல்களில் உள்ள வாறே பரிபாடலிலும் திருக்குறள் போன்ற நூல்களின் கருத்துகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க :

**1. வென் வேலான் குன்று 9—68.**
**வென் வேலான் குன்று—கலித்தொகை 93.**

**2. காமக் கணிச்சி 10—33**
**''காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு**
**நாணுத்தாழ் வீழ்ந்த கதவு''—குறள் 1251**

**3. ''இல்லது நோக்கி யிளிவரவு கூறாமுன்**
**நல்லது வெஃகி வினைசெய்வார்'' 10, வரி 87—88**

**''இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே யுள''- குறள் 223**

4. ''கள்ளின் களியெழக் காத்தாங் கலரஞ்சி''
10, வரி 65

''களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று''—குறள் 929

புராணக் கதைகள்

1. பாற்கடலைக் கடைந்தது—2, வரி 71—72; 3 வரி 33—34.
2. கருடன் தன் தாயின் துயரைக் களைந்தது—3, வரி 15—18.
3. கண்ணன் கேசி என்னும் அசுரனைக் கொன்றது—3, வரி 31—32.
4. பிருங்கலாதன் கதை—4, வரி 12—21.
5. முருகன் சூரனைக் கொன்றது—5, வரி 4.
6. முருகன் கிரௌஞ்ச மலையைப் பிளந்தது—5, வரி 9.
7. முருகன் பிறப்பு—5, வரி 27—49.
8. சிவன் முப்புரம் எரித்த கதை—5, வரி 25.
9. முருகன் போர்க்கருவிகள் பெற்ற கதை—5, வரி 50—70.
10. அகலிகை கதை—19, வரி 50—52.

இவற்றுள் பாற்கடலைக் கடைந்தது, கருடன் தன் தாயின் துயரைக் களைந்தது, பிருங்கலாதன் வரலாறு, முருகன் பிறப்பு, முருகன் போர்க் கருவிகள் பெற்ற வரலாறு, அகலிகை சாபம் பெற்றது ஆகியவை பிற தொகை நூல்களில் இடம் பெறாதவை என்னலாம். வட நாட்டுக் கதைகள் தமிழகத்தில் காலப்போக்கில் மிகுதியாக இடம் பெற்றமையை இவை உணர்த்துகின்றன.

**வடசொற்கள் :** இந்நூலில் பல வட சொற்கள் ஆளப் பட்டுள்ளன. அவற்றுள் குறிக்கத்தக்கவை கீழ்வருவன ஆகும். இவற்றுள்ளும் பல புதியவை.

நேமி [1]; கமலம், நித்திலம், மதாணி, ஆசான் [2]; பிருங்கலாதன் [4]; மாதவர், பதுமம், குணம், போகம் [5]; கவிதை, ஆராதனை, சாரிகை, சலதாரி, காமன் [6]; மேகலை, வாகுவலயம், சிரம் [7]; காரணம், தமனியம், குடாரி, அருச்சித்தல், அமிர்தபானம் [8]; நயனம், தடாகம் [9]; சனம், சரணத்தார், அத்திரி, தண்டம், திசை, சலம் [10]; மிதுனம், மகரம், சையம், நதி, கன்னி, அம்பா [11]; அரவிந்தம், மத்தகம், முஞ்சம், கங்கை [16]; சுருதி [18]; ரதி, காமன், இந்திரன், அகலிகை, கவுதமன், சோபனம் [19]; கணிகை, சிந்திக்க, வந்திக்க, வச்சிய—வசீகரித் தலையுடைய [20]; சருமம்; மண்டிலம் [21].

**வடமொழிப்பெயர் மொழி பெயர்ப்பு :** [1[ கண்ணன் குதிரை உருவத்தில் வந்து போரிட்ட 'கேசி' என்னும் அசுரனைக் கொன்றான். இப்பெயர் 'கேசம்' என்னும் வடமொழி முதல் நிலையாக முடிந்தமையின் அதன் பொருள் பற்றிக் கடுவன் இள எயினனார் என்ற புலவர், ''கூந்தல் என்னும் பெயரோடு கூந்தல்'' [3, வரி 31] என்றார்.

[2] அவரே மேருமலையை அப்பெயரால் குறியாது ''நடுவண் ஓங்கிய பலர் புகழ் குன்று'' [4—24] என்று மாற்றிக் கூறியுள்ளார்.

[3] கற்பிற் சிறந்தவளும் தெய்வத்தன்மை பொருந்திய வளுமாகிய அருந்ததியை அவ்வாசிரியரே, ''கடவுள் ஒரு மீன் சாலினி'' [5—44] என்று குறித்துள்ளார்,

[4] ஆசிரியன் நல்லந்துவனார் என்ற புலவர் பல விண் மீன்களின் பெயர்களைத் தமிழில் மாற்றியுள்ளார்: கார்த் திகை—எரி, திருவாதிரை—சடை, பரணி—வேழம், இராசி— இருக்கை [11, வரி 1—3].

# 16. பதிற்றுப்பத்து

**முன்னுரை**

ஒவ்வொரு சேரவேந்தனைப் பற்றிப் பத்துப் பத்துப் பாக்களாகச் சேரவேந்தர் பதின்மரைப் பற்றிய நூறு பாடல்களைக் கொண்டமையால், இந்த நூல் **பதிற்றுப் பத்து** என்னும் பெயர் பெற்றது. இன்றுள்ள நூலில் முதல் பத்தும் இறுதிப் பத்தும் இல்லை.

**பாடல் பெற்ற சேரர் :** இரண்டாம் பத்து உதியஞ் சேரலின் மகனான **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்** பற்றியது, மூன்றாம் பத்து நெடுஞ்சேரலாதன் தம்பியான **பல்யானைச் செல்குழு குட்டுவனைப்** பற்றியது; நான்காம் பத்து நெடுஞ்சேரலாதன் மகனான **களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரலைப்** பற்றியது; ஐந்தாம் பத்து நெடுஞ்சேரலாதன் மகனான **செங்குட்டுவனைப்** பற்றியது. ஆறாம் பத்து நெடுஞ்சேரலாதன் மகனான **ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப்** பற்றியது. ஏழாம் பத்து அந்துவஞ்சேரல் இரும்பொறையின் மகனான **செல்வக் கடுங்கோ வாழியாதனைப்** பற்றியது. எட்டாம் பத்து அவ்வாழியாதன் மகனான **தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையைப்** பற்றியது. ஒன்பதாம் பத்து, **பெருஞ்சேரல்** இரும்பொறையின் மகனான **இளஞ்சேரல் இரும்பொறையைப்** பற்றியது. எனவே, இவ்வெட்டுப் பத்துகளும் இரண்டு குடும்பத்தினரைப் பற்றியவை என்பது தெளிவு.

**சேரர் கொடை :** இரண்டாம் பத்தைப் பாடியவர் **குமட்டூர்க் கண்ணனார்** என்பவர். சேரமான் அவருக்கு உம்பற் காட்டைச் சேர்ந்த ஐந்நூறு ஊர்களைப் பிரமதாயமாகக் கொடுத்தான். தன் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டின் தென்

பகுதி வருவாயில் முப்பத்தெட்டு ஆண்டுகள் பாகம் கொடுத்தான் என்று அவனைப் பற்றிய பதிகம் கூறுகிறது.

மூன்றாம் பத்தைப் பாடியவர், **பாலைக் கௌதமனார்** என்பவர். சேரன் அவர் விருப்பப்படி பத்துப் பெருவேள்விகளைச் செய்வித்து அவரையும் அவர் மனைவியையும் துறக்கம் புகுவித்தான். நான்காம் பத்தைப் பாடியவர், **காப்பியாற்றுக் காப்பியனார்** என்பவர். சேரன் அவருக்கு நாற்பது நூறாயிரம் பொன் பரிசளித்தான்; தான் ஆண்ட நாட்டின் ஒரு பகுதியையும் கொடுத்தான். ஐந்தாம் பத்தைப் பாடியவர் **பரணர்** என்பவர். சேரன் உம்பற்காட்டு வாரியை அவருக்கு அளித்தான்.

ஆறாம் பத்தைப் பாடியவர் **காக்கை பாடினியார் நச்செள்ளையார்** என்பவர். சேரன் அவருக்கு ஒன்பது காப் பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசிலாய் வழங்கினான். ஏழாம் பத்தைப் பாடியவர் **கபிலர்** என்பவர். சேரமான் அவருக்கு நூறாயிரம் காணம் பரிசில் கொடுத்தான்; 'நன்றா' என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் அவருக்கு வழங்கினான். எட்டாம் பத்தைப் பாடியவர் **அரிசில் கிழார்** என்பவர். சேரன் அவருக்கு ஒன்பது நூறாயிரம் காணம் வழங்கினான்; தன் அரசாட்சியையும் கொடுத்தான். புலவர் ஆட்சியை அவனிடமே ஒப்புவித்தார்; தாம் அவனுக்கு அமைச்சராய் அமர்ந்தார். ஒன்பதாம் பத்தைப் பாடியவர் **பெருங்குன்றூர் கிழார்** என்பவர். சேரன் அவருக்கு முப்பத்தோராயிரம் பொன் கொடுத்தான்; அவருக்குத் தெரியாமல் ஓர் ஊரையும் மனையையும் வழங்கினான்; அம்மனையில் செல்வத்தை நிரப்பினான்.

**பதிற்றுப்பத்தின் காலம் :** மேலே கூறப்பெற்ற சேர மன்னர் எண்மருள் ஐந்தாம் பத்துக்கு உரியவன் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் ஆவன். இவனே வடவரை வென்று கண்ணகிக்குக் கல் கொண்டு வந்த சேரன் செங்குட்டுவன் என்று பதிகம் பகர்கின்றது. இவன் கயவாகு

வின் காலத்தில் வாழ்ந்தவன் என்று சிலப்பதிகாரம் செப்பு கின்றது கயவாகுவின் காலம் கி. பி. 113—136 என்று இலங்கை வரலாறு இயம்புகின்றது என்பது முன்பே கூறப் பட்டதன்றோ? செங்குட்டுவன் ஐம்பத்தைந்து ஆண்டுகள் அரசாண்டான் என்று பதிகம் பகர்கின்றது. செங்குட்டு வன் தனது ஆட்சிக் காலத்தின் இறுதியில் வடநாட்டு யாத் திரையை மேற்கொண்டான். எனவே, அவனது ஆட்சிக் காலம் ஏறத்தாழக் கி. பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியும் இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும் எனக் கருதுதல் பொருத்தமாகும். அவனுக்கு முற்பட வாழ்ந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கி. பி. முதல் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வாழ்ந்தவனாதல் வேண்டும். பத்துகளின் வைப்பு முறையைக் கொண்டு, பிற்பட்ட பத்துகளுக்குரிய சேர மன்னர் செங்குட்டுவனுக்குப் பிற்பட்டவர் எனக்கொள்ள லாம். இங்ஙனம் கொள்ளின், பதிற்றுப்பத்தில் பாடப்பெற்ற சேரவேந்தர்களின் காலம் ஏறத்தாழக் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளுள் அடங்கும் என்று கூறலாம்.

**பதிகங்கள் :** ஒவ்வொரு பத்தின் ஈற்றிலும் உள்ள பதிகம் அதற்குரிய மன்னவன் இன்னவன், அவன் போர்ச் செயல்கள் இவை, அவன் கொடைத்திறம் இன்னது, பாடிய புலவர் இவர், இவர் பெற்ற பரிசில் இன்னவை என்பவற்றை விளக்கி நிற்கின்றது. இப்பதிகத்தையும் இதன் கீழ்வரும் உரை நடையையும் பிற்காலத்தார் எழுதி முடித்தனர் என்பது இதன் அமைப்பைக் கொண்டே கூறலாம்.

**பாடல்கள் :** ஒவ்வொரு பத்திலும் உள்ள ஒவ்வொரு பாட்டுக்கும் அப்பாட்டில் காணப்படும் பொருள் நயம் பொருந்திய அருந்தொடரே தலைப்பாக இடப்பட்டுள்ளது. இம்முறை, வேறு எச்சங்க நூலிலும் இல்லை. இதனில் நான்காம் பத்து அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் காப்பியாற்றுக் காப்பியனாராவர். அந் தாதித் தொடையில் செய்யுட்களைப் பாடுவது சங்க காலத்தி

லேயே வழக்கில் இருந்தது என்பது இதனால் தெரிகிறதன்றோ?

இந்நூற் பாடல்களில் சேரநாட்டு வளமும் சேரவேந்தர் போர்ச் செயல்களும் அவர்தம் கொடைச் சிறப்பும், சேரமா தேவியரின் இயல்புகளும், சேரநாட்டு மக்களின் பழக்க வழக்கங்களும் பிறவும் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு செய்யுளுக்கும் வண்ணமும் தூக்கும் அமைந்துள்ளன. எனவே, இப்பாக்கள் பரிபாடல் பாக்களைப்போல இசையோடு பயிலப்பட்டவை என்பது அறியப்படும்.

**உரை :** பதிற்றுப்பத்துக்குப் பழைய உரை உண்டு. அதனை இயற்றிய ஆசிரியர் பெயரும் காலமும் தெரியவில்லை. இவ்வுரையாசிரியர் இந் நூலிலுள்ள அருஞ்சொற்களுக்கும் தொடர்களுக்கும் பொருள் கூறியுள்ளார்; ஒவ்வொரு பாடலுக்கு உரிய துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பனவற்றின் அமைதியைப் புலப்படுத்தியுள்ளார். ஆங்காங்கு இலக்கணக் குறிப்புகளைத் தந்துள்ளார்; ஒவ்வொரு பதிகத்தின் ஈற்றிலும் அதுபற்றிய விளக்கம் தந்துள்ளார்.

இந்நூலை முதலிற் பதிப்பித்த பெருமை டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கட்கு உரியது. பின்பு பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களின் விளக்கவுரைப் பதிப்பு ஒன்று சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வாயிலாக வெளிவந்துள்ளது. இது மிகவும் பாராட்டத்தகும் முறையில் பதவுரையும் விளக்கவுரையும் பெற்றுள்ளது.

## நூற் செய்திகள்

**சேரர் வீரம் :** பதிற்றுப்பத்துப் புறப்பொருள் பற்றிய நூல். ஆயின் இதன்கண் சேரவேந்தர் போர்ச் செயல்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. கடற் கொள்ளைக்காரரான

கடம்பர் என்னும் இனத்தவரை இமயவரம்பனும் செங்குட்டுவனும் தத்தம் காலத்தில் கடற்போரில் முறியடித்துக் கடல் வாணிகத்தை நிலைநிறுத்தினர். நெடுஞ்சேரலாதன் தன்னுடன் போரிட்ட ஆரியரையும் யவனரையும் முறியடித்தான்; யவனர் கைகளைப் பின்பக்கமாகக் கட்டி அவர் தம் தலைகளில் நெய்யைப் பெய்து, தனது வஞ்சி நகரத்திற்கு அழைத்து வந்தான்; அவர்களிடம் இருந்த சிறந்த அணிகளையும் வைரக் கற்களையும் எடுத்துக்கொண்டான். இமயவரம்பன் தான் வென்ற ஏழு அரசர்களின் பொன் முடிகளை உருக்கித் தனது வெற்றிக்கு அறிகுறியாகப் பொன் மாலை ஒன்றை அணிந்திருந்தான். அஃது 'எழுமுடி மாலை' எனப்பட்டது. செங்குட்டுவனும் அதனை அணிந்திருந்தான்,

செங்குட்டுவனின் வீரச் செயல்களைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். பெருஞ்சேரல் இரும்பொறை தகடூர் அதியமானுடன் போரிட்டுத் தகடூரை அழித்தான்; கழுவுள் என்னும் ஆயர் தலைவனை வென்றான். இளஞ்சேரல் இரும்பொறை இருபெரும் வேந்தரையும் விச்சிக் கோவையும் ஒரு போரில் முறியடித்தான்.

**கொடைச் சிறப்பு :** இமயவரம்பன் முதல் எல்லாச் சேர மன்னரும் முத்தமிழ் வாணரைப் பலவகைப்பட்ட பரிசில்களை நல்கி மகிழ்வித்தனர். இவர்கள் 'பாடினி வேந்து', 'பரிசிலர் செல்வம்' என்று தனித்தனியே பாராட்டப் பெற்றனர்; புலவர்களுடன் இருந்து உண்டு மகிழ்ந்தனர். இரவலர் பசியோடு தம்மை நோக்கிய பார்வையைக் கண்டு அஞ்சினர்; போர்களில் கிடைத்த பொருள்களை ம் முத்தமிழ் வாணர்க்கு அளித்து மகிழ்ந்தனர். செல்வக் கடுங்கோ வாழியாதன் கொடுமணம் என்னும் ஊரில் கிடைத்த விலையுயர்ந்த அணிகளையும், பந்தர் என்னும் ஊரில் கிடைத்த முத்துகளையும் பரிசிலர்க்கு வழங்கி மகிழ்ந்தவன் (37). இவர்கள் தம்மைப் பாடிய புலவர்களுக்கு

நாட்டின் சில பகுதிகளையும், சில பகுதிகளின் வருவாயையும் கொடுத்ததிலிருந்தே இவர்தம் கொடைத்திறனை நாம் நன்கு அறியலாம்.

**ஆட்சிச் சிறப்பு :** சேரமன்னர் காட்டில் வாழ்ந்த முனிவர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தனர்; தம் நாட்டுப் பெருவழிகளைப் பாதுகாத்தனர்; நீர் நிலைகளைப் பெருக்கினர்; கடல் வாணிகத்தை வளர்த்தனர்; உள்நாட்டு வாணிகத்தையும் வளப்படுத்தினர்; தளர்ந்த குடிமக்களை உயர்த்தப் பாடுபட்டனர்; நாட்டு வருவாயை அறம் முதலிய பல துறைகளுக்கும் தனித்தனியே பிரித்துச் செலவிட்டனர்; நெடுஞ்சாலைகளில் இனிய பழம் தரும் மரங்களை வைத்து வளர்த்தனர்.

இம்மன்னர்தம் நல்லியல்புகளையும் ஆட்சிச் சிறப்பையும் ஒவ்வொரு பத்தையும் படித்து அறிவது நல்லது.

### போர் பற்றிய விவரங்கள்

**படையெடுப்பு :** ஒரு நாட்டின்மீது படையெடுக்கும் அரசனுடைய வீரர்கள் முதலில் தங்கள் முரசத்திற்குச் செந்தினையையும் குருதியையும் பலியாகத் தூவுவர்; குருதியால் அதன் கண்ணைத் துடைப்பர்; பின்பு அதனைக் குறுந்தடி கொண்டு முழக்குவர் (9). உடனே படையில் ஆரவாரம் உண்டாகும்.

குதிரை வீரர்கள் விரைந்து செல்லும் குதிரைகள்மீது இவர்ந்து செல்வர். தேர்ப்படை வீரர் நீண்ட கொடியினையுடைய தேர்கள்மீது ஏறிச்செல்வர். யானை வீரர் யானைகள் கழுத்தின்மீது அமர்ந்து போர்க்கருவிகளை ஏந்திச் செல்வர் காலாட்படையினர் வாள், வேல், வில் முதலிய கருவிகளை ஏந்திச் செல்வர். மன்னன் நெற்றிப் பட்டத்தையும் பொன்னரி மாலையையும் அணிந்த யானையின்மீது இவர்ந்து செல்வான் (34).

அரசனிடம் பல படைகள் இருக்கும். அவற்றுள் முதல் படை **கூளிப்படை** எனப்படும். அது பகைப்புலத்தைச் சூறையாடும்; தனக்குப் பின் வரும் படைக்கு ஒழுங்கான வழியை அமைத்துக்கொண்டு போகும். அதற்குப் பின்னரே, புலித்தோலால் செய்த உறையில் வாளைச் செருகியுள்ள வாட்படை வீரரும் வேற்படை வீரரும் பிற படை வீரரும் அணி வகுத்துச் செல்வர் (19).

கூளிப்படையை அடுத்துச் செல்லும் படை **தார்** அல்லது **தூசிப்படை** எனப்படும். இப்படை வீரர் மன எழுச்சியுடன் போரிடுவர்; பகைவர் ஊர்களுக்கு எரியூட்டுவர்; பகைவர் நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்துவர் (23).

சமவெளியில் போரிடும் வீரர் **தும்பைப்பூ** மாலையைச் சூடுவர். மன்னன் பொன்னால் செய்த தும்பைப்பூ மாலையைச் சூடுவான் (45). கோட்டையை முற்றுகை இடுவதாயின் மன்னன் பொன்னால் செய்த **உழிஞைப்பூ** மாலையைச் சூடுவான். அவன் வீரர் உழிஞைப் பூக்களால் ஆகிய அழகிய மாலையைச் சூடுவர் (22).

**உழிஞைப் போர்:** படையெடுத்துச் செல்லும் வீரர் கோட்டைக்கு வெளியிலுள்ள காவற்காட்டை அழிப்பர்; பின்பு அதனை அடுத்துக் கோட்டையைச் சூழ உள்ள அகழியைக் கடப்பர். இவ்வொவ்வொரு முயற்சியிலும் கோட்டைக்கு உரியவர் எதிர்த்து நிற்பர். படையெடுக்கும் வீரர் அவர்களை வென்று மதில்மேல் ஏறுவர். பகைவர் எளிதில் ஏறிவர முடியாதபடி அம்மதிற்சுவர் வளைந்து வளைந்து செல்லும் நிலையில் அமைக்கப்பட்டிருக்கும் (53). அங்கு மதில் போர் நடக்கும்; மதிற்போரில் வெற்றி பெற்றவுடன் உழிஞை வீரர் அகநகர்க்குள் புகுவர்; அங்குத் தம்மை எதிர்த்த வீரரை அழித்து நகர்க்கு எரியிடுவர்; நகரைச் சூறையாடுவர் (20).

கோட்டை வாயிலில் பகைவரை மகளிர் போல உருவமைத்து அவர் அணிந்துகொள்வதற்குச் சிலம்பும் தழையும்

பந்தும் கட்டித் தொங்கவிடுதல் அக்காலத்தார் மரபு. அக் கோட்டை வாயிலில் அம்புகளை எய்யும் எந்திரப் பொறிகள் அமைந்திருக்கும். கோட்டையைச் சூழ்ந்துள்ள அகழியில் கொடிய முதலைகள் விடப்பட்டிருக்கும் (53). கோட்டைக் கதவு மிக்க வலிமையுடையது; இருப்பாணிகளால் இறுகப் பிணிக்கப்பட்டது. அதனை உடைக்க யானைகள் ஏவப்படும். யானைகள் தம் தந்தங்களால் அக்கதவினைப் பிளக்க முயலும். அம்முயற்சியில் அவற்றின் கொம்புகள் முறிவதும் உண்டு. கதவுக்குப் பின்பு கணையமரம் கதவிற்கு வலிமை யாக அமைந்திருக்கும் (53).

கோட்டையின் முற்றுகையில் நால்வகைப் படைகளும் கோட்டையைச் சூழ்ந்துகொள்ளும். கோட்டையுள் இருப்ப வர் வெளியில் வர இயலாது. கிடுகு (கேடயம்) ஏந்திய படை வீரரும் வேற்படையினரும் வாட்படையினரும் குதிரைப் படையினரும் யானைப் படையினரும் மதிலின் பக்கத்தில் நெருங்கி வளைந்து தமது முற்றுகையைப் பயனுள்ளதாக்குவர் (62).

கோட்டை மதில்களில் கண்டார் விரும்பத்தக்க ஓவியங் கள் வரையப்பட்டிருக்கும் (68). கோட்டைக்கு வெளியிலுள்ள பகைவர் ஊர்கள் தீப்பற்றி எரியும். கோட்டையுள் உணவுப் பொருள்கள் செல்லாமல் தடுக்கப்படும் (71). கோட்டையுள் அடைபட்ட அரசன் நெடுநாள் கோட்டையுள் இருக்க இயலா விடின், படையெடுத்த அரசனுக்குத் திறை தந்து போரைத் தடுப்பான் (62); மானமுடைய மன்னன் போரிட்டு மடிவான்.

**பாசறை :** அரசனும் அவன் படைகளும் தங்கியிருக்கும் இடம் 'பாசறை' எனப்படும். பாசறையின் நடுவில் அரசனது இருக்கை அமைந்திருக்கும். பாசறையில் வீரர்கள் காவல் புரிவர். ஒருபால் யானைப் படைகள் தங்கியிருக்கும்; மற்றொருபால் குதிரைப் படைகள் தங்கியிருக்கும்; வேறொரு பக்கம் தேர்ப்படைகள் தங்கியிருக்கும்; பிறிதொருபால்

காலாட் படையினர் தங்கி இருப்பர். அரசனது வெற்றியைக் கருதிப் புலவரும் பாணரும் கூத்தரும் பொருநரும் பாசறையில் இருப்பர். விறலியரும் பாணரும் அரசனது போர் வீரத்தைப் புகழ்ந்து பாடுவர்; அவன் ஒவ்வொரு போர்த்துறையிலும் வெற்றி பெற்றவுடன் அவ்வெற்றியைப் புகழ்ந்து பாடுவர் (54).

மன்னன் பகைவர் நாடுகளை அழித்து அங்குக் கிடைக்கும் பொருள்களைப் பரிசிலர்க்கு வழங்குவான் (83); வெற்றி பெற்ற தன் வீரர்க்குப் பொற்கட்டிகளையும் பிறவற்றையும் வழங்குவான் (81, 83).

தோற்ற அரசனது காவல் மரத்தைக் கொண்டு, வென்ற அரசன் முரசு செய்துகொள்ளுவான் (11). வீரர் அம்முரசுக்குப் பலியிடுவர் (17, 19). பகைவரது பட்டத்து யானையின் தந்தங்களை அறுத்துச் செய்யப்பட்ட பலிக்கட்டில்மீது வீரர் தம் குருதியைத் தெளிப்பர் (79).

போரில் ஊது கொம்புகளும் வலம்புரிச் சங்குகளும் முழங்கும் (67); முரசின் ஓசையும் தண்ணுமை ஓசையும் கேட்கும் (84); பாசறையில் பலவகை இசைக் கருவிகளுடன் கலந்து முரசு முழங்கும் (88). வெற்றிக்குப் பிறகு வீரர்க்கு உணவு விருந்தும் இசை விருந்தும் நடைபெறும் (30). தோற்ற படை வீரருட் சிலர் வென்ற வேந்தன் படையில் சேருவதும் உண்டு (63). படையெடுக்கும் அரசர் தமக்குப் போரில் வெற்றி கிடைக்குமா என்பதைக் கழங்கிட்டுப் பார்த்தல் வழக்கம் (32). அறிவுள்ள அரசன் தன் அரச நிலையைக் குறித்துப் போரிடுவானே தவிர மண்ணாசையால் போரிடான். நிலையாமை உணர்வே அவன் புரியும் போரில் சிறந்திருக்கும் (84).

**சமயச் செய்திகள் :** முனிவர்கள் பிற உயிர்களுக்குத் தீங்கு நினையாதவர்; வாய்மை தவறாதவர்; பிறர் மதிக்கத் தக்க பெருமையினை உடையவர். அரசர்கள் அவர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்தனர். அம்முனிவர்

'கடவுளர்' என்று கூறப்பட்டனர் (21). உண்ணாநோன்பு மேற்கொண்ட விரதியர் கோவில் மணி அடித்ததும் விடியற் காலையில் குளிர்ந்த நீர்த்துறைக்குச் சென்று நீராடுவர்; பின்பு திருமாலின் அடியில் வணங்கி அப்பெருமானை வாழ்த்திடுவர் (31). இங்குக் குறிப்பிட்ட திருமால் திருவனந்தபுரத்துத் திருமால் என்று பழைய உரைகாரர் கூறியுள்ளனர் (31). இஃது உண்மையாயின், அவ்வூர்த் திருமால் சங்க காலமுதலே புகழ்பெற்றுவருபவர் என்பது அறியப்படும்.

பெருஞ்சேரல் இரும்பொறை அரிய மறைப் பொருளை அறிவர் உரைப்பக் கேட்டான்; அவர் உரைத்த விரதங்களை மேற்கொண்டு ஒழுகினான்; அறிவு ஒழுக்கங்களால் உயர்ந்த நன்மக்கள் உள்ளம் மகிழும்படி வேள்விகளைச் செய்து முடித்தான் (74). அவன் தன் புரோகிதனைத் துறவு மேற்கொள்ளும்படி செய்தான். கொடை, மன அமைதி, செல்வம், மகப்பேறு, தெய்வ உணர்வு முதலியன தவமுடையார்க்கு உண்டாகும் என்பதை அறிவுறுத்தி அப்புரோகிதனை மன்னன் தவம் செய்யும்படி காட்டிற்கு அனுப்பினான் (74). இதனால் அம்மன்னன் தவத்தில் கொண்டிருந்த நம்பிக்கையை நாம் நன்குணரலாம். சேரநாட்டில் அயிரை மலை மிகச் சிறந்தது. அதன்மீது கொற்றவை கோவில் இருந்தது. சேர மன்னர் கொற்றவையை வழிபட்டனர். ''கொற்றவை வீற்றிருக்கும் அயிரைமலை போல நின் புகழ் நிலைபெற்று விளங்குக,'' என்று அரிசில் கிழார் பெருஞ்சேரல் இரும்பொறையை வாழ்த்தினார் (79).

போருக்குச் செல்லும்போது போரில் வெற்றி உண்டாவதற்காகச் சேர மன்னர் அயிரை மலைக் கொற்றவையைப் பரவுவது வழக்கம் (88). சேர நாட்டு வீரர் தம் விழுப்புண்ணில் சொரியும் குருதி கலந்த சோற்றுத் திரளைப் படைத்து அயிரை மலைக் கொற்றவையை வழிபடுவது மரபு (79, 88).

பல்யானைச் செல்கெழுகுட்டுவன் பாலைக் கௌதமனார் என்ற அந்தணப் புலவர் பொருட்டுப் பெரும்பொருள் செல விட்டுப் பத்துப் பெருவேள்விகளை வேட்பித்தான் என்று அவனைப் பற்றிய பதிகம் கூறுகின்றது. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் வேதியர்க்குப் பசுக்களோடு குட நாட்டு ஓர் ஊரும் வழங்கினான்.

இங்ஙனம் சேர வேந்தர் வேள்விகள் செய்தனர்; கொற்றவை வழிபாட்டிலும் திருமால் வழிபாட்டிலும் பங்கு கொண்டனர்; முனிவர்களுக்குக் காடுகளில் இருக்க வசதி களைச் செய்து தந்தனர்; வேள்வி அந்தணர்க்குப் பணிந்து நடந்தனர். இச் செய்திகள் அனைத்தும் **சேர நாட்டில் வேத நெறி தழைத்து ஓங்கிய உண்மையை உணர்த்துவனவாகும்.**

**நகரங்கள் :** **நறவு** என்பது சேர நாட்டுச் சிறப்புடைய நகரங்களுள் ஒன்று (60). **தொண்டி** என்பது சேர நாட்டுத் துறைமுகப் பட்டினம். யவன யாத்திரிகர் அதனைத் 'துண்டிஸ் என்று குறித்துள்ளனர். **கொடுமணம்** என்பது ஒரு நகரம். அது வேலைப்பாடு மிகுந்த நகைகட்குப் பெயர் பெற்றது (74). **பந்தர்** என்பதும் ஒரு நகரம். அது பாண்டிய நாட்டுக் கொற்கையைப் போல முத்துகளுக்குப் பெயர் பெற்றது (67, 74). **மரந்தை** என்பது மற்றொரு நகரம்.

**வருணனை :** ஓவியம் வரையத்தக்க முறையில் அமைந்த வருணனைப் பகுதிகள் இந்நூற் பாக்களில் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. அவற்றுள் மருத வளம் (27), மலைவளம் (12), பிற நாடுகளின் வளம் (13, 23) பூமி நாட்டு வளம் (21), நானிலச் சிறப்பு (30), பாலை வழி (41), பாடினியர் சிறப்பு (46), கடலின் தோற்றமும் கடற்கரையின் தோற்ற மும் (51), மாரியின் சிறப்பு (61), சோழ நாட்டுச் சிறப்பு (73), தகடூர் நாட்டுச் சிறப்பு (78), இளஞ்சேரல் இரும் பொறையின் நாட்டு வளம் (89) என்பவை குறிக்கத் தக்கவை.

**வாழ்த்து முறை :** புலவர் பெருமக்கள் மன்னர்களைப் பலவாறு வாழ்த்தினர். ''நீ உன் முன்னோரைப் போலப் புகழை நிறுவி வாழ்வாயாக'' (14), ''உலகத்தார் நலனுக்காக நீ வாழ்வாயாக'' (15), ''உன்னைப் பெற்ற உன் தாயின் வயிறு வாழ்வதாகுக'' (20), ''நீ நின் மனைவியோடு ஆயிரம் வெள்ளம் காலம் வாழ்க'' (21), ''நின் வளம் வாழ்வதாகுக'' (24), ''நின் வலிமை கெடாது நிலை பெறுவதாகுக, நினது பெருவளம் நீடு வாழ்வதாகுக'' (36), ''உலக மக்கள் ஆக்கத்தின் பொருட்டு நின் வாழ்க்கையும் வளனும் வாழ்க'' (37), ''நீ காஞ்சியம் பெருந்துறை மணலினும் பல வாழ் நாட்களைப் பெற்று வாழ்க'' (48), ''வாழ்க நின் கண்ணி; மிகச் சிறிது காலமேனும் துறக்க உலகுக்குச் செல்லாமல் இவ்வரச வாழ்க்கையிலேயே நிலை பெற்று நின்று நெடுங்காலம் வாழ்வாயாக'' (54), ''நின் வாழ்நாள் சென்று கெடாது ஒழிவதாகுக'' (55), ஆம்பல் என்னும் எண்ணும் பல ஆயிரங்களாகப் பெருகிய வெள்ளம் என்னும் எண்ணும் ஆகிய ஊழிகள் நீ வாழ்வாயாக'' (63), ''அயிரை என்னும் நெடிய மலையைப்போல நீ வாழும் நாள் குறையாது பெருகுவதாகுக'' (70, 79), ''நீ ஞாயிறு போலப் பல நாள் விளங்குவாயாக'' (88), ''நீ அருந்ததி போலும் கற்புடைய நின் மனைவியுடன் அழகுற விளங்கி நோயற்று வாழ்வாயாக'' (89), ''உலக மக்கள் கூறும் திங்கள், யாண்டு, ஊழி, வெள்ளம் என்பவை முறையே நின் வாழ்நாளின் நாள், திங்கள், யாண்டு, ஊழி என்பனவாக நீடுக'' (90).

சேர வேந்தரை இங்ஙனம் வாழ்த்தப் புலவர் பெருமக்கள் உள்ளம் எந்த அளவு குளிர்ந்திருத்தல் வேண்டும் என்பது இங்கு நினைக்கத் தகும்.

**மேற்கோள் :** பிற அகப்பொருள் தொகை நூல்களில் திருக்குறள், புறநானூறு, பத்துப் பாட்டுக் கருத்துகளும், சொற்களும், சொற்றொடர்களும் இருத்தல் போலவே

பதிற்றுப்பத்திலும் காணப்படுகின்றன. அவற்றுள் சில வற்றைக் கீழே காண்க :

1. ''கண்ணி னுவந்து நெஞ்சவிழ் பறியா
நண்ணார் தேஎத்தும் பொய்ப்பறி யலனே.'' 20

''முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சகரை யஞ்சப் படும்.'' —குறள் 842,

2. ''ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்'' 37

''ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே.'' —புறம் 191.

3. ''ஓவத் தன்ன வுருகெழு நெடுநகர்ப்
பாவை யன்ன மகளிர் நாப்பண்.'' 88

''ஓவத் தன்ன விடனுடை வரைப்பிற்
பாவை யன்ன குறுந்தொடி மகளிர்.'' —புறம் 251.

4. ''ஒளிறுவாள் வயவேந்தர்
களிறொடு கலந்தந்து'' 90

''ஒளிறுவாள் அருஞ்சம முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.''
—புறம் 312.

5. ''பன்மீ னாப்பட் டிங்கள் போலப்
பூத்த சுற்றமொடு பொலிந்து தோன்றலை'' 90

''பன்மீன் நடுவண் திங்கள் போலவும்
பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கி''
—மதுரைக்காஞ்சி; வரி 769-770.

6. ''புற்றடங் கரவின் ஒடுங்கிய அம்பின்'' 45

''புற்றடங் கரவின் செற்றச் சேக்கை''
—மணிமேகலை, காதை 4, வரி 117.

**வடமொழியாளர் செல்வாக்கு**

முருகன் பிணிமுகம் என்னும் யானையை ஊர்ந்தமை (11), தலையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரதத்தில் குறிக்கப்பட்ட அக்குரன் ஈகைத் தன்மை (14) என்பன இந் நூலிற் குறிக்கப்பட்ட கதைகளாகும்.

எட்டுப் பத்துகளையும் பாடிய புலவர் எண்மருள் குமட்டூர்க் கண்ணனார், பாலைக் கோதமனார், பரணர், கபிலர் ஆகிய நால்வரும் அந்தணப்புலவர் ஆவர். இப்பாடல்களில் வேத வேள்விகள் குறிக்கப்பட்டுள்ளன. சான்றாகப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் தன்னைப் பாடிய பாலைக் கௌதமனார் விருப்பப்படி பத்துப் பெருவேள்விகளைச் செய்வித்தான் என்பது மூன்றாம் பத்தின் பதிகத்தால் அறியத் தகும்.

பாலைக் கௌதமனார் போன்ற அந்தணப் புலவர் நால்வர் பதிற்றுப்பத்தில் இடம் பெற்றிருப்பினும், அவர் பாடல்கள் பிற தமிழ்ப் புலவர் பாடல்களைப் போலவே சொற் செறிவும் பொருட் செறிவும் பெற்று விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தகும். அப் புலவர் பெருமக்கள் தமிழ் இலக்கண வரம்பில் நின்று, தமிழ் வழி வந்த சான்றோர் போலவே, உயர்ந்த முறையில் பாடியுள்ளனர் என்று கூறுதல் தகும். அதனாற்றான், மிகச் சில வட சொற்களே இந்நூலிற் பயின்றுள்ளன.

வேதங்களில் வல்ல மறையவரைச் சேர மன்னர் மதித்தனர்; அவர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்வித்தனர்; அவர்களுக்குப் பல ஊர்களை அளித்தனர்; அவர்களைத் தம் குருமார்களாகக் கொண்டனர் என்பன போன்ற செய்திகள், இச் சேர வேந்தர் காலத்தில் வேத நெறியினர் சேர நாட்டில் பெற்றிருந்த செல்வாக்கை இனிது உணர்த்துவனவாகும்.

# 17. புறநானூறு

**முன்னுரை**

எட்டுத்தொகை நூல்களுள் புறநானூறு வரலாற்றுச் சிறப்புடையது; அறம், பொருள், வீடு ஆகிய மூன்றையும் பற்றிய பாடல்களைக் கொண்டது; 157 புலவர்கள் பாடிய பாடல்களைத் தன்னகத்தே கொண்டது. இதனைச் சிறந்த முறையில் முதலிற் பதிப்பித்த பெரியார் **டாக்டர் உ. வே. சாமிநாதையர்** ஆவர்.

புறநானூறு வரலாற்றுக்குப் பெருந்துணை செய்யும் நூல். அஃது இறுதியில் தொகுக்கப்பட்டது என்று கூறலாம். நானூறு பாக்களுள் இரண்டு பாக்கள் (267, 268) காணப் படவில்லை. பதினான்கு பாடல்களைப் பாடியவர் இன்னவர் என்பது தெரியவில்லை. பாடிய புலவர்களின் எண்ணிக்கை 157; பாடியவரும் பாடப்பட்டவருமாகிய பேரரசர்-சிற்றரசர் முதலியோர் தொகை 178.

இந்நூலில் உள்ள செய்யுட்களைப் பாடிய புலவர்கள் ஒரு நாட்டாரல்லர்; ஓர் ஊராரல்லர்; தமிழகம் முழுமையிலும் வாழ்ந்தவராவர். இவருள் சேரர், சோழர், பாண்டியர், குறுநில மன்னர், அந்தணர், வேளாளர், பலவகை வணிகர், வீரர், அரசமாதேவியர், குறுநில மன்னர் மகளிர், கொல்லர் முதலிய பலவகைத் தொழிலாளர் எனப் பலவகைப் பட்டவர் இடம் பெற்றுள்ளனர்.

சேர, சோழ, பாண்டிய நாடுகள், அவற்றின் தலை நகரங்கள், ஆறுகள், மலைகள், தமிழகத்தில் பேரரசர்—சிற்றரசர் செய்த போர்கள், மன்னரது ஒழுக்கம், வீரர்

செயல்கள், மறக்குடி மகளிர் செயல்கள், புலவர் அறிவுரைகள் எனப் பல திறப்பட்ட செய்திகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

அக்கால மக்கள் பயன்படுத்திய போர்க் கருவிகள், பலவகை நகைகள், உடைகள், உலோகங்கள், உணவுகள், ஊர்திகள், கட்டில்கள், கொடிகள், பாத்திரங்கள், மாலைகள், வாத்தியங்கள் முதலியவற்றின் பெயர்களை இந்நூலிற் காணலாம். தெய்வங்களின் பெயர்கள், கோவில்களின் பெயர்கள், விலங்குகள்—பறவைகள்—மரங்கள் இவற்றின் பெயர்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. சங்ககாலத் தமிழருடைய உழவு, கைத்தொழில், வாணிகம், பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் இந்நூல் கூறுகின்றது.

''புறநானூற்றுச் செய்யுட்கள் பேராசிரியர் பலருடைய உள்ளத்தையும் உரையாசிரியர் பலருடைய உள்ளத்தையும் தம் வயமாக்கி அவற்றைத் தமக்கு முழுமணிப் பீடிகையாக்கிக்கொண்டு வீற்றிருந்தன என்பதை, அவரவர் அருளிச் செய்த நூல்களும் உரைகளும் இவற்றின் சொல் நடை பொருள் நடைகளை இடையிடையே பெரும்பாலும் தழுவியிருத்தலே தெளிவாகப் புலப்படுத்தும்.' [1]

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அவ்வுரை இருநூற்று அறுபத்தாறு பாடல்களுக்கு மட்டுமே கிடைத்துள்ளது. அவ்வுரை மிகச் சிறந்த புலவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பதை அதன் நடையும் பொருள் அமைதியும் பிறவும் உணர்த்துகின்றன. பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள் இந்நூற் பாடல் ஒவ்வொன்றுக்கும் தக்க முன்னுரையும் உரையும் விளக்கமும் எழுதியுள்ளார். இந்நூலைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர். இப்புதியவுரை பெரிதும் பாராட்டத் தக்கது.

---

1. புறநானூறு, மூன்றாம் பதிப்பின் முகவுரை, பக்.11.

## புறநானூற்றுப் பாடல்களைப் பாடிய புலவர்கள்—157

1. அடைநெடுங் கல்வியார்
2. அண்டர்மகன் குறுவழுதி
3. அரிசில் கிழார்
4. அள்ளூர் நன்முல்லையார்
5. ஆடுதுறை மாசாத்தனார்
6. ஆலங்குடி வங்கனார்
7. ஆலத்தூர் கிழார்
8. ஆவியார்
9. ஆவூர் கிழார்
10. ஆவூர் மூலங் கிழார்
11. இடைக்காடனார்
12. இடைக்குன்றூர் கிழார்
13. இரும்பிடர்த்தலையார்
14. உலோச்சனார்
15. உறையூர் இளம்பொன் வாணிகனார்
16. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
17. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
18. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
19. உறையூர் முதுகூத்தனார்
20. ஊன்பொதி பசுங்குடையார்
21. எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்
22. எருமை வெளியனார்
23. ஐயாதிச் சிறுவெண்தேரையார்
24. ஐயூர் முடவனார்
25. ஐயூர் மூலங்கிழார்
26. ஒக்கூர் மாசாத்தனார்
27. ஒக்கூர் மாசாத்தியார்
28. ஒருசிறைப்பெரியனார்
29. ஓரூஉத்தனார்
30. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
31. ஓரம் போகியார்
32. ஓரேருழவர்
33. ஔவையார்
34. கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி
35. கண்ணகனார்
36. கணியன் பூங்குன்றன்
37. கதையங் கண்ணனார்
38. கபிலர்
39. கயமனார்
40. கருங்குழலாதனார்
41. கருவூர்க் கதப்பிள்ளை
42. கருவூர்க் கதப்பிள்ளை சாத்தனார்
43. கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார்
44. கல்லாடனார்
45. கழாத்தலையார்
46. கழைதின் யானையார்
47. கள்ளில் ஆத்திரையனார்
48. காக்கை பாடினியார் நச்செள்ளையார்
49. காரிகிழார்
50. காவட்டனார்
51. காவற்பெண்டு
52. காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்
53. குட்டுவன் கீரனார்
54. குடபுலவியனார்
55. குடவாயிற் கீரத்தனார்

56. குண்டுகட் பாலியாதன்
57. குளம்பாதாயனார்
58. குறமகள் இளவெயினி
59. குறுங்கோழியூர் கிழார்
60. குன்றூர் கிழார் மகனார்
61. கூகைக் கோழியார்
62. கூடலூர் கிழார்
63. கோடை பாடிய பெரும்பூதனார்
64. கோதமனார்
65. கோப்பெருஞ்சோழன்
66. கோவூர் கிழார்
67. கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்
68. சங்க வருணரென்னும் நாகரியர்
69. சாத்தந்தையார்
70. சிறுவெண் தேரையார்
71. சேரமான் கணைக்கால் இரும்பொறை
72. சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக்கோதை
73. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந் தும்பியார்
74. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
75. சோழன் நல்லுருத்திரன்
76. சோழன் நலங்கிள்ளி
77. தண்காற் பூண் கொல்லனார்
78. தாமப்பல் கண்ணனார்
79. தாயங் கண்ணியார்
80. திருத்தாமனார்
81. தும்பி சொகினனார்
82. துறையூர் ஓடைகிழார்
83. தொழுத்தலை விழுத்தண்டினார்
84. தொண்டைமான் இளந்திரையன்
85. நரிவெரூஉத் தலையார்
86. நல்லிறையனார்
87. நன்னாகனார்
88. நெட்டிமையார்
89. நெடுங்கழுத்துப் பரணர்
90. நெடும் பல்லியத்தனார்
91. நெரச்சி நியமங்கிழார்
92. பக்குடுக்கை நன்கணியார்
93. பரணர்
94. பாண்டரங் கண்ணனார்
95. பாண்டியன் அறிவுடை நம்பி
96. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்
97. பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்
98. பாரதம் பாடியபெருந் தேவனார்
99. பாரி மகளிர்
100 பாலை பாடிய பெருங் கடுங்கோ
101. பிசிராந்தையார்
102. பிரமனார்

103. புல்லாற்றூர் எயிற்றி யனார்
104. புறத்திணை நன் னாகனார்
105. பூங்கணுத்திரையார்
106. பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு
107 பெருங்குன்றூர் கிழார்
108. பெருங்கோழி நாய் கன் மகள் நக்கண் ணையார்
109. பெருஞ் சித்திரனார்
110. பெருந்தலைச் சாத்த னார்
111. பெரும் பதுமனார்
112. பேய்மகள் இளவெ யினி
113. பேரெயில் முறுவலார்
114. பொத்தியார்
115. பொய்கையார்
116. பொருந்தில் இளங் கீரனார்
117. பொன்முடியார்
118. மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்
119. மதுரை அறுவை வாணிகன் இளவேட் டனார்
120. மதுரை இளங்கண் ணிக் கௌசிகனார்
121. மதுரை ஓலைக் கடைக் கண்ணம்புகுந் தாரா யத்தனார்
122. மதுரைக் கணக்காய னார்
123. மதுரைக் கணக்காய னார் மகனார் நக்கீர னார்
124. மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண் ணாகனார்
125. மதுரைக் கூலவாணி கன் சீத்தலைச் சாத் தனார்
126. மதுரைத் தமிழ்க்கூத் தனார்
127. மதுரை நக்கீரர்
128. மதுரைப் படைமங்க மன்னியார்
129. மதுரைப் பூதனிள நாகனார்
130. மதுரைப் பேராலவா யார்
131. மதுரை மருதனிள நாகனார்
132. மதுரை வேளாசான்
133. மருதனிள நாகனார்
134. மாங்குடி கிழார்
135. மாதி மாதிரத்தனார்
136. மார்க்கண்டேயனார்
137. மாற்பித்தியார்
138. மாறோக்கத்து நப்ப சலையார்
139. முரஞ்சியூர் முடிநாக ராயர்
140. மோசி கீரனார்
141. மோசி சாத்தனார்
142. வடம நெடுந்தத்த னார்
143. வடம வண்ணக்கன் தாமோதரனார்
144. வடம வண்ணக்கன் பெருஞ் சாத்தனார்
145. வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்

146. வடமோதங்கிழார்
147. வன்பரணர்
148. வால்மீகியார்
149. விரிச்சியூர் நன்னாகனார்
150. விரியூர் நக்கனார்
151. வீரை வெளியனார்
152. வெண்ணிக் குயத்தியார்
153. வெள்ளெருக்கிலையார்
154. வெள்ளைக்குடி நாகனார்
155. வெள்ளைமாளர்
156. வெறிபாடிய காமக்கண்ணியார்
157. வேம்பற்றூர்க் குமரனார்

**பேரரசரும் சிற்றரசரும் :** புறநானூற்றில் சேர மன்னர் பதினெண்மரும் சோழ மன்னர் இருபதின்மரும் பாண்டியர் பதின்மூவரும் சிற்றரசர் ஐம்பத்திருவரும் பிற தலைவர் பன்னிருவரும் குறிக்கப்பட்டுள்ளனர். இவர் அனைவரும் தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பாதுகாத்தவராவர். சங்க காலத்தில் தமிழ் வளம்பெறக் காரணமாயிருந்த இப்பெரு மக்கட்கு நமது நன்றியும் வணக்கமும் உரியவாகும்.

## புறநானூற்றுச் செய்திகள்

**ஆட்சிச் சிறப்பு:** மன்னன் தன் ஆட்சிக்குட்பட்ட குறிஞ்சி முதலிய எல்லா நிலங்களிலும் காவல் வீரரை வைத்திருந்தான் (3). ஒவ்வோர் ஊரிலும் ஊரைக் காப்பவர் இருந்தனர். அவர்கள் இரவில் விளக்கேற்றிச் சென்று ஊரைக் காவல் காத்தனர் (37). குடிகள் கண்ணீர் சிந்தி, 'எம் மரசன் கொடுங்கோலன்' என்று வருந்திக் கூறும்படி நடத்தலாகாது என்று தமிழ் மன்னர் கவலை கொண்டனர் (72); முறை தவறி அறம் உரைக்கும் மக்கள் அறங்கூறவையத்தில் இருத்தலாகாது என்று கவலை கொண்டனர். குடிமக்களைப் பாதுகாக்கும் பொறுப்புள்ள அரசமரபில் பிறத்தலைச் சிறப்பாகக் கருதினர் (71); நல்லவரை ஆதரித்தனர்; கொடியவரைத் தண்டித்தனர் (29). சோழர் தலைநகரான உறையூரிலிருந்த அறங்கூறவையம் அறநெறி தவறாதது (39).

**அரசர் ஒழுக்கம் :** பாண்டியன் நெடுஞ்செழியன், "எனது நாட்டின்மீது படையெடுத்து வரும் பகைவரை யான் வெல்லேனாயின், என்குடிமக்கள் என்னைக் கொடுங்கோலன் என்று பழி தூற்றுவர் ஆகுக; மாங்குடி மருதனைத் தலைவனாகப் பெற்ற புலவர் கூட்டம் எனது நாட்டைப் பாடாது ஒழிவதாகுக. 'இல்லை'யென்று இரப்பவர்க்கு 'இல்லை' யென்று சொல்லும் வறுமையை யான் அடைவேனாகுக'' (72), என்று சூளுரைத்தான்.

பூதப் பாண்டியன், "என் பகைவரை யான் வெல்லேனாயின், யான் என் மனைவியை விட்டு நீங்குவேனாகுக; அறநெறி தவறாத அவைக்களத்தில் தகுதியற்ற ஒருவனை வைத்து முறைதவறிக் கொடுங்கோல் செய்தவன் ஆகுக; என் சிறந்த நண்பர்களும் நல்லவர்களுமாகிய மாவன், ஆந்தை, அந்துவன் சாத்தன், ஆதன் அழிசி, இயக்கன் ஆகியோர் நட்பினைத் தப்பினவன் ஆகுக; பல உயிர்களையும் பாதுகாக்கும் பாண்டியர் அரசமரபிலிருந்து யான் மாறிப் பிறப்பேனாகுக," (71) என்று சூளுரைத்தான்.

சோழன் நலங்கிள்ளி, "யான் என் பகைவரை வெல்லேனாயின், பொதுப் பெண்டிர் மார்பில் எனது மாலை துவள்வதாகுக. ' (73) என்று சூளுரைத்தான். இம்மூன்று சூளுரைகளிலிருந்தும் சங்ககாலத் தமிழரசர் ஒழுக்கத்தின் உயர்வினை நாம் நன்கு அறியலாம்.

**தமிழ்ப் புலவர்கள் :** புலவர்கள் வறுமையில் வாடினும் உயர்ந்த பண்பாடு பெற்றிருந்தனர். புலவர் தம் மதிப்பை இழக்க விரும்பாதவர்;

> "முற்றிய திருவின் மூவர் ஆயினும்
> பெட்பின் றீதல் யாம்வேண் டலமே'' (205)

என்று இறுமாந்து கூறியவர்; அரசரிடமிருந்து மரியாதையையும் பொருள் உதவியையும் பெற விழைந்தவர்; மன்னர் தமக்கு உதவி செய்யத் தாழ்க்கினும், தாமே நேரில் வந்து

உபசரியாது பிறர் வாயிலாக உதவியை அனுப்பினும், வெகுளும் இயல்பினர் (206, 209); சிறிது பொருள் தரினும் அதனைப் பெறாது வெகுண்டு செல்வர் (162, 208).

புலவர் தம்முள் ஒருவரை ஒருவர் மதித்துத் தம் பாக்களில் போற்றினர் (158, 174, 202, 212); ஒரு புலவரை மதியாது நடந்துகொண்ட மன்னனிடத்து வெறுப்புக் காட்டி அவனிடம் செல்வதைத் தவிர்ந்தவர் (151, 202); இத்தகைய உயர் பண்புகளால் தமிழ் வேந்தரது மதிப்பைப் பெற்றனர்.

புலவர் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர். **பெருஞ்சித்திரனார்** என்ற புலவர் குமணனைப் பாடிப் பரிசில் கொணர்ந்து தம் மனைவியைப் பார்த்து, "இச்செல்வத்தை உனக்கு இதுவரையில் கடன் கொடுத்தவர்க்குக் கொடு; தம் உறவினர்க்கு வழங்கு; இல்லாதவர் எவர் வந்து கேட்பினும் என்னைக் கேளாது உதவுவாயாக," (163) என்று கூறினார் எனின், சங்ககாலப் புலவரது பண்பாட்டை என்னென்பது!

அக்காலப் புலவர்கள் உள்ளதை உள்ளவாறே எடுத்துக் கூறும் இயல்பினர்; தமது வறுமையைச் சிறிதும் வெட்கமின்றி—மகன் தந்தைக்கு உரைப்பது போலத் தம் வள்ளலிடம் எடுத்துக் கூறினர் (154).

**தமிழரசரும் புலவரும்** : தமிழ் வேந்தர் தம் காலப் புலவர் பெருமக்களைப் பெரிதும் மதித்தனர்; அவர்தம் அறிவுரைகளை அவ்வப்போது ஏற்று நடந்தனர். **கோவூர் கிழார்** சோழரிடை நடைபெற இருந்த பெரும் போரைத் தம் அறிவுரையால் நீக்கினார் (44); பகை வேந்தனுடைய குற்றமற்ற மக்களைக் கிள்ளிவளவன் கொல்ல முனைந்தபோது அறிவுரை கூறி அம்மக்களைக் காத்தார்; இளந்தத்தன் என்ற புலவரை ஒற்றன் என்று தவறாக எண்ணி அவரைக் கொல்ல முயன்ற நெடுங்கிள்ளிக்குப் புலவர்களின் வாழ்க்கையை எடுத்துக் கூறி, இளந்தத்தன் உயிரைக் காத்தார் (47).

**ஔவையார்** அதியமானுக்கும் தொண்டைமானுக்கும் நிகழவிருந்த போரைத் தாமே அரசியல் தூதராகச் சென்று தவிர்த்தார் (95). **பெருந்தலைச் சாத்தனார்** தன் தமையனைக் கொல்ல விரும்பிய இளங்குமணன் உள்ளத்தைத் தம் சிறந்த உரையால் மாற்றினார் (165). **முடமோசியார்** சேரனுக்கும் சோழனுக்கும் நிகழ இருந்த போரைத் தமது பேச்சாற்றலால் தவிர்த்தார் (13).

**பிசிராந்தையார்** பாண்டியன் அறிவுடை நம்பியிடம் சென்று, குடிகளை வருத்தாது சிறுகச் சிறுக வரி வாங்க வேண்டும் என்பதை அவன் உள்ளத்தில் நன்கு பதியும்படி அறிவுறுத்தினார் (184). **வெள்ளைக் குடி நாகனார்** என்ற புலவர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனுக்குத் தக்கவாறு அறிவுரை கூறி, நிலத்திற்கு விதிக்கப்பட்டிருந்த பழைய வரியை நீக்கினார் (35).

**சிற்றரசர் :** தமிழகத்துச் சிற்றரசருட் பலர் மூவேந்தர் ஆட்சிக்கு உட்பட்டவர். அவர் அனைவரும் முத்தமிழ் வாணரைப் போற்றினர். அவருள் பறம்பு நாட்டை யாண்ட **பாரி**, பழநிமலை நாட்டை ஆண்ட **பேகன்**, கொல்லிமலை நாட்டை யாண்ட **ஓரி**, மலையமானாட்டை யாண்ட **காரி**, பொதிய மலைநாட்டை ஆண்ட **ஆய்**, தகடூர் நாட்டை ஆண்ட **அதிகன்**, **நள்ளி** என்னும் எழுவரும் குறிக்கத் தக்கவர். புலவர் பலர் இவ்வள்ளல்களின் உயிர் நண்பர்களாய் இருந்தனர் என்று புறநானூற்றுப் பாடல்கள் புகல்கின்றன.

**ஊர்த்தலைவர்களும்**, சிறந்த வீரர்களும், பெருஞ் செல்வரும் முத்தமிழ் வாணரை ஆதரித்துவந்தனர் என்பதைச் செய்யுட்கள் பல (316—337) உணர்த்துகின்றன. இத்தலைவர்கள் போலவே இவர்தம் வாழ்வரசிகளும் முத்தமிழ் வாணரை உபசரித்துப் பெருமை பெற்றனர் என்பதைப் புலவர் பாக்களே புகழ்ந்துரைக்கின்றன.

இங்ஙனம், சங்ககாலத் தமிழகத்தில் முடியுடை மூவேந்தர், சிற்றரசர், வீரர், செல்வர் ஆகிய அனைவரும் பைந் தமிழைப் பாங்குற வளர்த்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**தமிழ் வீரர் :** தமிழ் நாட்டு வீரர் போர் என்றவுடன் துள்ளிக் குதிப்பவர்; தாம் போரிடச் செல்லும் நாடு தொலைவில் இருப்பினும் மிக்க மகிழ்ச்சியோடு செல்பவர் (31); அடிக்கும் கோலுக்கு அஞ்சாது எதிர் மண்டும் பாம்பு போன்றவர் (89). இவ்வீரர் குடிப் பெண்களும் அஞ்சாமை மிக்கவர்; தம் மைந்தர் போரில் மார்பில் புண்பட்டு இறத்தலையே விரும்பினர் (278). ஒரு வீரத் தாய் போருக்குச் செல்லத்தக்க ஆடவன் தன் வீட்டில் இல்லாமையால் விளையாடிக்கொண்டிருந்த தன் ஒரே மகனை வேலைக் கையில் கொடுத்துப் போருக்கு அனுப்பினாள் (279). இம்மகளிர், இறந்த தம் கணவர் உடலைப் போர்க்களத்தில் தழுவினர்; சிலர் தழுவி இறந்தனர் (288).

வீரர், மன்னன் தகுதி ஒன்றிற்காகவே தம் மகளை மணம் செய்து கொடுப்பர்; அரசனுக்கு அஞ்சித் தம் மகளைத் தாரார்; அதனால் வரும் போரை மகிழ்ச்சியோடு ஏற்பர் (338—352). போரில் இறந்த வீரர்க்குக் கல் நடப்படும். அக்கல்லில் அவனுடைய உருவமும் பெயரும் பீடும் பொறிக்கப்படும். பின்பு அக்கல் அனைவராலும் வழிபடப் படும் (232, 260, 306, 329).

**சமயம் :** தமிழகத்தில் சிவபெருமான், கண்ணன், பலதேவன், முருகன் ஆகிய நால்வரும் நாற்பெரும் தெய்வங்களாகக் கருதப்பட்டனர் (56). மக்களுக்கு மறுமை உலகம் உண்டு என்ற நம்பிக்கை இருந்தது (18). தெய்வத் திருவுருவங்கள் வழிபடப்பட்டன (106). உலகத்தைப் படைத்தவன் இறைவன் என்ற நம்பிக்கை இருந்தது (194). உலகில் எப்பொருளும் நிலையாதது—புகழ் ஒன்றே நிலைபெறும் என்று சான்றோர் நம்பினர் (105).

''வாழ்க்கையின் இறுதியில் யமன் உயிரைக் கொண்டு செல்லுதல் உறுதி. ஆதலால் நல்வினைகளைச் செய்யுங்கள்; அவற்றைச் செய்ய முடியவில்லையாயின் தீவினையாவது செய்யாதிருங்கள். அதுவே நன்னெறியில் செலுத்தவல்லது'' (195) என்பது ஒரு புலவர் அறிவுரையாகும். மற்றொரு புலவர், ''நல்லது செய்வோர் துறக்கம் பெறுவர்—அல்லது செய்பவர் மாறிப் பிறப்பர்,'' (214) என்று கூறியுள்ளார்.

**தமிழர் வடநாட்டு அறிவு :** இமயமலை அடிவாரத்தில் அந்தணர் இருந்து வேள்வி செய்தனர் (2). அங்குக் கவரி மான்கள் நரந்தையையும் நறும்புல்லையும் மேய்ந்து சுனை நீரைப் பருகித் தகரமர நிழலில் தங்கும் (132). இமயமலை உயர்ந்த நெடிய பக்க வரைகளை உடையது (166).

**பண்பாடு :** அன்புடைமை, அருளுடைமை, பண்புடைமை முதலிய நற்பண்புகளின் சேர்க்கையே பண்பாடு என்பது. அது சொல்லிலும் செயலிலும் வெளிப்படுவது: வயலில் அறுவடை செய்யும் உழவர் அங்குத் தமக்குத் தெரியாமல் வாழும் பறவைகளை விரட்டத் தண்ணுமை முழக்குவர் (348). தண்ணுமை ஒலி கேட்டு அவை பறந்து விடும். தண்ணுமை முழக்காவிடின் அவை அறுவடையில் உயிரிழக்கும். எனவே உழவர் அருளுணர்ச்சியால் தண்ணுமை முழக்கினர் என்பது இங்கு அறியத்தகும்.

தம்மை மறந்து இருந்த வேந்தரையும், தம் தகுதி அறியாது சிறிதே வழங்கிய மன்னரையும், தமக்குப் பொருள் கொடாது காலம் தாழ்த்திய காவலரையும் புலவர்கள் கடிவது வழக்கம். அங்ஙனம் கடிந்த பின்பு அருளுணர்ச்சி மேலிடத் தம்மை அவமதித்தமையால் அம்மன்னர் கேடுறுவரே என்று அஞ்சி, ''நீ நோயின்றி வாழ்வாயாக!'' என்று கூறி வாழ்த்துவது வழக்கம் (209).

வறுமையால் வாடிய புலவனோ, பாணனோ, கூத்தனோ ஒரு வள்ளலைக் கண்டு பாடி அல்லது ஆடிப் பரிசில் பெற்று மீளும் போது வழியில் வறுமையுற்ற புலவனையோ, பாணனையோ, கூத்தனையோ பார்க்கும்போது அவனைத் தன் வள்ளல்பால் ஆற்றுப்படுத்துதல் வழக்கம். தான் மட்டும்

வாழ்ந்தால் போதும், பிறன் எக்கேடும் கெடுக என்று எண்ணாது அக்கால முத்தமிழ்வாணர் தம்போன்றவரை ஆற்றுப் படுத்தியது, அவரிடமிருந்த உயர்ந்த பண்பாட்டை விளக்கு கிறது. இப் பண்பாட்டின் அடியாகத் தோன்றியவையே புலவர் ஆற்றுப்படை (48), விறலி ஆற்றுப்படை (105), பாணாற்றுப்படை (143) முதலிய நூல்கள்.

கல்வி கேள்வி ஒழுக்கங்களால் சிறந்த **சான்றோர்** போர் களையே விரும்பிய மன்னர்களுக்கும் வீரர்களுக்கும் வாழ்க்கை நிலையாமையை வற்புறுத்தத் தொடங்கினர்; உடல் நிலையற்றது, செல்வம் நிலையற்றது, வாழ்க்கை நிலையற்றது என்பதைப் பல சான்றுகள் கொண்டு விளக்கி அவர்களை அறவழியில் செலுத்தினர். துறவு உள்ளம் கொள்ளச் செய்தனர். ''நாடும் செல்வமும் மன்னர் உயிருக்குத் துணை செய்வதில்லை; அவர் செய்யும் அற வினையே மறுமைத் துணையாய் நின்று இன்பம் தரும்'' (357). ''இவ்வுலகம் ஒரே நாளில் எழுவரைத் தலைவ ராகக் கொள்ளும் தன்மை உடையது; அஃதாவது, எந்த ஆட்சியும் நிலையில்லாதது. பற்று விடுதலே இன்பத்தைக் காணும் வழி'' (358).

''பல நாடுகளை வென்று ஆண்ட முடிவேந்தரும்முடிவில் முதுகாட்டையே அடைந்தனர். நினக்கும் அவ்வாறு ஒரு நாள் வரும். இவ்வுலகில் இசை அல்லது வசையே நிலைத்து நிற்கும். ஆதலால் வசை நீங்கி இசை வேண்டின், ஒரு பாலும் கோடாது முறை வழங்குதலும் இரவலர்க்கு ஈதலும் நல்லது. இச் செயலால் உலகம் உள்ளளவும் நின் பெயர் நிலை பெற்று விளங்கும்'' (359). ''சீரிய பண்பு நலன் களைப் பெற்றிருந்த மன்னர் சிலர்; அவர்க்கு மாறுபட்டவரே மிகப் பலர்; அவரும் மறைந்தனர்; அவர்தம் செல்வமும் மறைந்தது. ஆதலால் ஒழுக்கம் குன்றாமல் அறச் செயல் செய்து நற்பெயர் பெறுதலே நல்லது'' (360). ''அறிவுடை அரசர் தாயினும் சாலப் பரிந்து ஏழைகளுக்கு உதவுவர்;

நெறி தவறாது முறை செய்வர்; வாழ்க்கை இன்பத்தை நன்கு நுகரினும் யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையை மறவார்; அவரே நற்பேற்றைப் பெறுவர்'' (361).

''விரிந்த சிந்தையும் பரந்த நோக்கமும் உடைய பெரு மக்கள் உலகத்தில் எல்லா ஊர்களையும் தம் ஊர்களாகவே கருதுவர்; உலக மக்களைத் தம் உறவினராகவே எண்ணுவர்; தமக்கு வரும் ஆக்கமும் கேடும் தம்மாலேயே வருவன என்னும் உண்மையை மறவார்'' (192);

மறக்குடியில் பிறந்த ஒரு பெண்மணி பலருடைய கடமைகளைக் கீழ்வருமாறு கூறியுள்ளார்: ''மகனைப் பெற்று வெளியுலகத்திற்குத் தருதல் எனது கடமை; அவனைக் கல்வி கேள்வி ஒழுக்கங்களால் சிறந்தவனாகச் செய்வது தந்தையின் கடமை; அம் மைந்தனுக்குப் போர்க் கருவிகளைச் செய்து தருவது கொல்லனது கடமையாகும். நாட்டுக்குகந்த நன்மகனாக அவனை ஆக்குவது காவலன் கடமையாகும்; மிகச் சிறந்த போரில் ஆண் யானையைக் கொன்று பெயர் பெறுதல் அம் மைந்தன் கடமையாகும்'' (312). இது பொன்முடியார் பாடலாகும். இவர் ஒரு பெண்பாற் புலவர். நாட்டில் பிறந்த குடிமகனான இளைஞனுக்கு யார் யார் எவ்வெவ்வாறு கடமைப்பட்டிருக்கின்றனர் என்பதை இப் பெண்பாற் புலவர் அறிவுறுத்தும் திறம் பாராட்டத்தகும். உயர்ந்த பண்பாடு பெற்ற சமுதாயத்தில் தான் இத்தகைய உயர்ந்த கருத்துகள் வெளிப்படல் இயலும்.

பிசிராந்தையார் ஒரு புலவர். பல்லாண்டுகள் ஆகியும் அவர் தலையில் நரை இல்லை. புலவர் பலர் அதன் காரணத்தை அறிய அவாவினர். அப்புலவர் பெருமான் தமக்கு நரையின்மைக்குக் கீழ் வருமாறு நான்கு காரணங்களைக் கூறினார்: ''(1) என் மனைவியும் மக்களும் குணங்களாலும் செயல்களாலும் உயர்ந்தவர்; (2) என் இல்லத்து

ஏவலரும் அத்தகையவரே; (3) எனது நாட்டு மன்னன் செங்கோலினன்; (4) இவை அனைத்திற்கும் மேலாக, எனது ஊரில் ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழ்கின்றனர்'' (191).

ஒவ்வொருவரும் இந்நான்கு காரணங்களையும் எண்ணிப் பார்த்தல் இன்றியமையாதது. மனிதன் நடமாடும் இடங்கள் மூன்று. அவை வீடு, ஊர், நாடு என்பன. வீட்டில் உள்ள அனைவரும் உயர்ந்த பண்பு நலன் வாய்க்கப் பெற்றிருப்பின் அவ்வீட்டில் இன்பம் ஒன்றே நிறைந்திருக்கும். இங்ஙனமே ஊரில் கல்வி, கேள்வி ஒழுக்கங்களாற் சிறந்த பெரியோர் பலர் இருப்பின் அவ்வூர் செம்மை சான்ற சூழ்நிலையில் அமைந்திருக்கும். அரசன் செங்கோலினனாயின் நாட்டில் அன்பும் அறனும் அருளும் தாண்டவமாடும். எனவே, மனிதன் கவலைப்பட இடமில்லை. இத்தகைய வாழ்க்கை ஒவ்வொருவரும் பெறத்தக்க வாழ்க்கையன்றோ? உயர்ந்த பண்பாட்டின் அடியாகப் பிறந்த இக்கருத்துகள் சங்ககாலப் புலவர்பெருமக்களின் பண்பாட்டை அல்லவோ உணர்த்துகின்றன!

**அந்தணர்:** புறநானூற்றுப் பாடல்கள் பல தோன்றிய காலத்தில் வடமொழியாளர் செல்வாக்குத் தமிழகத்தில் நன்கு பரவிவிட்டது. அவர்களை,

> ''ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை
> நான்மறை முதல்வர்'' (26)

என்று புலவர் பாராட்டினர்; அவர்கள் எதிரே 'தலை வணங்குக' என்று அரசர்க்கு அறிவுறுத்தினர். வேள்வி செய்தல் சிறப்பாகக் கருதப்பட்டது (15).

அந்தணர்க்கு ஊர்களும் செல்வமும் நீர்வார்த்துக் கொடுக்கப்பட்டன (361, 362, 367). அவர்கள் தூண்டுதலால் தமிழரசர் சிலர் வேள்வி செய்யத் தொடங்கினர். சேர மன்னருட் பலர் வேள்வி செய்தமையைப் பதிற்றுப் பத்து

உணர்த்துகிறது. சோழருள் பெருநற்கிள்ளி என்பவன் **இராஜ சூய யாகம்** செய்து, ''**இராஜசூயம் வேட்ட** பெருநற்கிள்ளி'' என்று பெயர் பெற்றான். பாண்டியருள் ஒருவன் பல யாக சாலைகளை அமைத்துப் ''**பல்யாகசாலை** முது குடுமிப் பெரு வழுதி'' எனப் பெயர் பெற்றான். அவன் வேள்வி அந்தணர்க்கு ஊர்களை உதவினவன் என்று வேள்விக்குடிச் செப்பேடுகள் செப்புகின்றன. பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன் பல வேள்விகள் செய்த பெரு மகன். இவை அனைத்தும் சங்ககாலப் பிற்பகுதியில் (கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளில்) தமிழகத்துச் சமயத் துறையில் (பெருமக்கள் அளவில்) வடமொழியாளர் செல்வாக்கு வேரூன்றி வளர்ந்துவந்தது என்பதை அங்கைக்கனியென அறிவிக்கின்றன. இவர்கள் சேர்க்கையால் வடமொழிச் சொற்கள் பல தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றமை ஒவ்வொரு நூலைப்பற்றிய ஆராய்ச்சியிலும் கூறப்பெற்றதன்றோ?

**வட சொற்கள்** : புறநானூற்றில் இடம் பெற்றுள்ள வட சொற்களுள் பின் வருபவை குறிப்பிடத்தக்கவை:

'அசுரர், அஞ்சனம் (174), அந்தி (2), அமிழ்தம் (182), ஆகுதி (99), இயக்கன் (71), ஈமம் (231), உற்கம் (41), கபிலம் (337), கரகம் (1), கலாபம் (133), குமரி (67), கௌரியர் (3), சடை (251), சாபம் (70), சாமரம் (50), சிகரம் (135), சித்திரம் (251), தருப்பை (360), நேமி (3), பிண்டம் (234), பூதம் (369), மதுரை (351), மாயம் (363), மார்ச்சனை (164), முண்டகம் (24), யூபம் (400).

# 18. பத்துப்பாட்டு

## முன்னுரை

ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய தொகை நூல்கள் அகவற்பாவில் அமைந்தவை. அவ்வாறே புறநானூற்றுப் பாடல்களும் அகவற்பாவில் அமைந்தவையே. அகநானூற்றுப் பாடல்கள் 13 அடிச் சிறுமையும் 31 அடிப் பெருமையும் உடையவை. புறநானூற்றில் 40 அடிப் பெருமையுள்ள பாடலும் (395) இடம் பெற்றுள்ளது. பதிற்றுப்பத்தில் 57 அடிகளைக் கொண்ட பாடலும் (90) இடம் பெற்றுள்ளது. ஆயின், நூற்றுக்கு மேற்பட்ட அடிகளைக் கொண்ட அகவற்பாக் களும் உண்டு. அத்தகைய நீண்ட பாடல்கள் பத்தின் தொகுதியே **பத்துப்பாட்டு** எனப்படும்.

பத்துப்பாட்டு என்பவை-திருமுருகாற்றுப்படை, பொரு நர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகும். இப்பத்தும் முறையே 317, 248, 269, 500, 103, 782, 188, 261, 301, 583 அடிகளைக் கொண்டவை. இவற்றுள் மிகச் சிறியது முல்லைப்பாட்டு (103 அடி); மிகப் பெரியது மதுரைக் காஞ்சி (782 அடி).

## பத்துப்பாட்டின் காலம்

(1) திருமுருகாற்றுப்படை **நக்கீரர்** என்பவரால் முருகப் பெருமானைப் பற்றிப் பாடப்பட்டது; (2) **முடத்தாமக் கண்ணியார்** என்ற புலவர் கரிகாற் சோழன் மீது பொருநர் ஆற்றுப் படையைப் பாடினார். (3) **கடியலூர் உருத்திரன்**

கண்ணனார் என்ற புலவரும் கரிகாற் சோழன்மீது பட்டினப் பாலை பாடினார். (4) இப்புலவரே தொண்டைமான் இளந் திரையன்மீது பெரும்பாண் ஆற்றுப்படையைப் பாடினார். எனவே, கரிகாற் சோழனும் தொண்டைமான் இளந்திரைய னும் ஒரு காலத்தவர் என்பது தெளிவாகத் தெரிகிறதன்றோ? கரிகாற் சோழன் காலம் ஏறத்தாழக் கி.பி. முதல் நூற்றாண் டின் இறுதியும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாக இருக்கலாம் (கி.பி. 75-115) என்பது முன்பே குறிக்கப் பட்டது.

மாங்குடி மருதனார் என்ற புலவர் தலையாலங்கானத் துச் செருவென்ற நெடுஞ்செழியன்மீது மதுரைக் காஞ்சியைப் பாடியுள்ளார். நக்கீரர் என்ற புலவரும் அதே அரசன்மீது நெடுநல்வாடையைப் பாடியுள்ளார். நக்கீரர் அகநானூறு 141 ஆம் செய்யுளில்,

> "செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
> வெல்போர்ச் சோழன்"

என்று குறித்துள்ளார். இவர் கரிகாலன் காலத்தவர் என்ப தற்குச் சான்றில்லை. எனவே, இவர் கரிகாலனுக்குப் பிற்பட் டவர் என்பதே பொருந்தும். ஆகவே, நக்கீரரால் பாடப்பட்ட நெடுஞ்செழியனும் கரிகாலற்குப் பிற்பட்டவன் என்று கொள்வதே பொருத்தமாகும். கரிகாலனைப் பாடிய புலவ ருள் ஒருவரேனும் இந் நெடுஞ்செழியனைப் பாடாமையும் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகிறது என்னலாம்.[1]

பெருங் கௌசிகனார் என்ற புலவர் நன்னன் சேய் நன்னனைப் பற்றி மலைபடுகடாம் பாடியுள்ளார். இந் நன்னன் சிறந்த கொடைவள்ளல் என்று மலைபடுகடாம்

---

1. S. Vaiyapuri Pillai, History of Tamil Language & Literature, pp. 33—34.

(வரி 71-72) புகழுதலை நோக்க, மதுரைக் காஞ்சியில் வரும்,

"பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாட்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தாங்கு"

என்னும் அடிகள் (318-329) இந்நன்னனைப் பற்றியன என்று கருதுதல் பொருத்தமாகும்.[2] இங்ஙனம் கொள்ளின், மாங்குடி மருதனார் காலத்திலோ சிறிது முற்பட்டோ மலைபடுகடாம் பாடப்பட்டது என்று கருதலாம்.

பதிற்றுப்பத்து என்னும் நூலில் உள்ள எட்டுப்பத்துகளும் காலமுறைப்படி அமைந்துள்ளன. அவற்றுள் ஐந்தாம் பத்தைப் பரணர் பாடியுள்ளார். ஏழாம் பத்தைக் கபிலர் பாடியுள்ளார். இவ்விருவரும் பேகனைப் பாடியுள்ளனர்.[3] ஆதலின், கபிலர், பரணரது முதுமைக் காலத்தில் இளைஞராய் இருந்தவர் என்று கருதுதல் தகும். பரணர் கரிகாலன் தந்தையாகிய உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னியைப் பாடியுள்ளார் (புறநானூறு, 4). எனவே, கபிலர் ஏறத்தாழக் கரிகாலன் காலத்தில் குறிஞ்சிப் பாட்டைப் பாடினார் என்று சொல்லுதல் பொருத்தமாகும்.

மேலும், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரவேந்தன் மதுரைக்காஞ்சிக்குரிய பாண்டியன் நெடுஞ்செழியனிடம் தோற்றவன். அவன், "கபிலன் இன்றுளனாயின் நன்றுமன்" என்று (புறம், 53) கூறியுள்ளான். இதனால் அவன் காலத்தில்-மதுரைக் காஞ்சி

---

2. கொண்கானம் கிழானாகிய நன்னன் பெண்கொலை புரிந்தவனாதலின், அவனையும் அவன் மரபினரையும் புலவர் பாடா தொழிந்தனர். ஆதலின் இந்த நன்னன் அந்த நன்னன் மரபினரினும் வேறானவன் எனக் கொள்வது பொருத்தமாகும். இவன் செங்கண்மா (செங்கம்) நகரை ஆண்டவன் என்னலாம்.

3. புறநானூறு 143, 144.

பாடப்பட்ட காலத்தில்-கபிலர் இல்லை என்பது வெளிப் படை.

ஆகவே, பொருநர் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப் படை, பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆகிய நான்கும் ஏறத்தாழ ஒரு காலத்தன என்று கூறலாம். மலை படுகடாம், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை என்ற மூன்றும் ஒரு காலத்தன என்று கூறலாம்.

சிறுபாண் ஆற்றுப்படையில் பாரி முதலிய ஏழு வள்ளல் களின் வரலாறு இறந்த காலச் செய்தியாகக் கூறப்பட்டுள் ளது. இவ்வள்ளல்கள் கபிலர், பரணர், முடமோசியார், ஔவையார் முதலிய புலவர்களால் பாடப்பட்டவர்கள். எனவே, இப்புலவர்களுக்கும் பிற்பட்ட காலத்தில் நல்லூர் நத்தத்தனார் என்ற புலவர் சிறுபாண் ஆற்றுப் படையைப் பாடினார் என்று கொள்வது பொருத்தமாகும். இவ்வாற்றுப் படை ஓய்மானாட்டு நல்லியக்கோடன் என்ற சிற்றரசனைப் பற்றியது.

முல்லைப்பாட்டில் யவனரைப் பற்றியும் மிலேச்சரைப் பற்றியும் குறிப்புகள் வருகின்றன (வரி 60-66). நெடுநல் வாடையிலும் இவ்விருவரைப் பற்றியும் குறிப்புகள் வரு கின்றன (31-35, 101). ஆதலால் ''இவ்வகைக் குறிப்பு கள் காணும் நூல்கள் காலமுறையில் அடுத்தடுத்துத் தோன் றின என்று கொள்ளுதல் பொருத்தமே. எனவே, நெடுநல் வாடையை அடுத்து முல்லைப்பாட்டுத் தோன்றியிருத்தல் கூடும்.[4]

பதிற்றுப்பத்தில் பத்தாம் பத்து யானைக்கட்சேய் மாந்த ரஞ்சேரல் இரும்பொறை பற்றியதாக இருத்தல் கூடும் என்று அறிஞர் கருதுகின்றனர்.[5] அவன் ஐங்குறுநூற்

---

4. எஸ். வையாபுரிப்பிள்ளை, இலக்கிய தீபம், பக்.8—9

5. S. V. Pillai, History of Tamil Language&Literature, p. 37.

றைத் தொகுப்பித்தவன் ஆதலால் அவன்மீது புலவர் ஒரு பத்தைப் பாடியிருக்கலாம். அவன் இறுதிப் பத்துக்கு உரியவனாயின், ஐந்தாம் பத்துக்குரிய செங்குட்டுவனுக்கு மிகவும் பிற்பட்டவனாவன். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் போரில் வென்றதாகப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்று (17) கூறுவதால், இப்பாண்டியன் நெடுஞ்செழியன் செங்குட்டுவற்குப் பிற்பட்டவன் என்று கூறலாம்; பதிற்றுப்பத்தின் வைப்பு முறையை நோக்க, இவன் காலம் ஏறத்தாழக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு என்னலாம்.[6] இங்ஙனம் கொள்ளின், இப்பாண்டியனைப் பற்றிய நெடுநல்வாடையும் மதுரைக் காஞ்சியும், நெடுநல்வாடையை ஒத்துள்ள முல்லைப்பாட்டும் கி. பி. 3 ஆம் நூற்றாண்டு நூல்கள் என்னலாம். இவை அனைத்திற்கும் பிற்பட்ட நல்லியக் கோடனைப் பற்றிய சிறு பாணாற்றுப்படையும் இம்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் செய்யப்பட்டது எனக் கொள்ளலாம்.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளைக் கொண்டு குறிஞ்சிப் பாட்டு, பொருநர் ஆற்றுப்படை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை ஆகிய நான்கு பாடல்களும் ஏறத்தாழக் கரிகாலன் காலத்தவை (கி.பி. 75-115) என்றும், (2) மலைபடுகடாம், நெடுநல்வாடை, மதுரைக் காஞ்சி, முல்லைப்பாட்டு ஆகிய நான்கும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை ஆகலாம் என்றும், அனைத்திலும் இறுதி

---

6. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் இப்பாண்டியன் காலம் ஏறத்தாழக் கி.பி. 250 என்று குறித்துள்ளனர். History of Tamil Language & Literature, pp. 35—36.

பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் இவன் காலம் கி.பி. 210ஐச் சுற்றியிருக்கலாம் என்பர். —History of S. India, p. 121.

யில் பாடப்பெற்ற சிறுபாணாற்றுப்படை கி. பி. 3 ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் செய்யப்பட்டதாகலாம் என்றும் கொள்வது பொருத்தமாகும். வேறு தக்க சான்றுகள் கிடைக்கும் வரையில் இம்முடிபைக் கொள்ளல் தகும்.

பத்துப்பாட்டுள் எஞ்சியிருப்பது திருமுருகாற்றுப்படை ஒன்றேயாம். இனி இதனைப்பற்றி ஆராய்வோம்.

**திருமுருகாற்றுப்படையின் காலம்**

வள்ளல்பால் பரிசு பெற்று மீளும் பாணர், கூத்தர், புலவர் முதலியோர் வறுமையால் வாடும் பாணர் முதலிய இரவலரை ஆற்றுப்படுத்தல் 'ஆற்றுப்படை' என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.[7] பாணனை ஆற்றுப்படுத்தல் 'பாணாற்றுப்படை' எனவும், புலவரை ஆற்றுப்படுத்தல் 'புலவர் ஆற்றுப்படை' எனவும், கூத்தரை ஆற்றுப்படுத்தல் 'கூத்தர் ஆற்றுப்படை' எனவும் பெயர் பெறும்.

திருமுருகாற்றுப்படை பக்தி நூல். முருகன் அருளைப் பெற்ற ஒருவன் பக்தி மிகுந்த மற்றோர் அடியவனை அம் முருகன்பால் ஆற்றுப்படுத்தல் முருகாற்றுப்படையின் பொருளாகும். இது தொல்காப்பிய இலக்கண விதிக்கு மாறுபட்டது. அஃதாவது, சமயத் துறையில் ஆற்றுப்படுத்தி நூல் செய்தல் தொல்காப்பியர் காலத்தில் இல்லை என்பது அவரது நூற்பாவால் தெரிகிறது ஆதலின் என்க.

(1) சிவபெருமானது வீரியத்தை இந்திரன் பெற்றான். முனிவர் அறுவர் அதனை இந்திரனிடமிருந்து பெற்று வேள்வித் தீயில் இட்டு அதன் வேகத்தைக் குறைத்துத் தம் மனைவியர் அறுவருக்கு உண்ணக் கொடுத்தனர். அதனை உண்ட முனிவர் பத்தினிமார் ஆறு குழந்தைகளைப் பெற்றனர். அக் குழந்தைகளே ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளும் உடைய ஒரே குழந்தையாக மாறின என்று ஐந்தாம் பரிபாடல் கூறுகிறது. ஆயின்,

7. புறத்திணை இயல், நூற்பா 36, எச்ச இயல் 60.

''ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ''

என்று திருமுருகாற்றுப்படை (வரி 254-255) கூறுகின்றது. ஐவருள் ஒருவன் என்பது நிலம், நீர், காற்று, தீ, விசும்பு, ஆகிய ஐந்தினுக்கும் உரிய தேவர் ஐவருள் ஒருவனைக் குறிப்பதாகும். அவன் தன் உள்ளங் கையில் (சிவன் தந்ததைப்) பெற்றான் என்பது முதல் வரியின் பொருளாகும். ஆயின் பரிபாடலில் ஐவருள் ஒருவன் அங்கை ஏற்றதாகக் கூறப்படவில்லை என்பது கவனித்தற்குரியது.

சிவபெருமான் ஆறு முகங்களோடு விளங்கி ஆறுநெற்றிக் கண்களிலிருந்தும் ஆறு தீப் பொறிகளை வெளிப்படுத்தினார்; காற்றுத் தேவனையும் தீத் தேவனையும் அப்பொறிகளைக் கங்கையில் விடுமாறு பணித்தார். காற்றுத் தேவன் சிவனை வணங்கி அத் தீப்பொறிகளைப் பெற்றுச் சென்றான். வழியில் தீக்கடவுள் அப்பொறிகளைத் தாங்கிச்சென்று கங்கையில் விடுத்தான். கங்கை சரவணப் பொய்கையில் அவற்றை உய்த்தது. சரவணப் பொய்கையில் ஆறு முகங்களையும் பன்னிரண்டு கைகளையும் உடைய ஒரே குழந்தையாக அப் பொறிகள் மாறின. திருமால் முதலிய தேவர்கள் கட்டளைப்படி கார்த்திகை மாதர் அறுவர் குழந்தைக்குப் பாலூட்டச் சென்றனர். முருகன் அத் தாய்மார் பொருட்டு ஆறு குழந்தைகளாக மாறினான் என்பது கந்த புராணம் கூறும் செய்தியாகும்.

திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ள 'ஐவருள் ஒருவன்' காற்றுக் கடவுளே என்பது இக் கதையால் விளங்குகிறது. எனவே, சங்க கால நூலாகிய பரிபாடலில் சொல்லப்பட்டுள்ள முருகனது பிறப்பு வரலாறு வேறு; திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ள முருகனது பிறப்பு வரலாறு வேறு என்பது தெளிவாகும். சங்க காலத்தில் திருமுருகாற்றுப்படையைப் பாடிய நக்கீரர் இருந்திருப்பாராயின், அவர் பரிபாடல் கதையையே கூறியிருப்பர்.

இவர் அங்ஙனம் கூறாமையின், சங்க காலத்திற்குப் பிற்பட்டவர் என்று கருதுவதே பொருத்தமாகும்.

(2) சங்க கால நக்கீரர் 56ஆம் புறப்பாட்டில்,

''ஞாலம் காக்கும் கால முன்பின்
தோலா நல்லிசை நால்வர்''

என்று கூறினார். இதனால் சிவன், முருகன், கண்ணன், பலராமன் ஆகிய நால்வர்க்கும் ஞாலம் காத்தலும் கால முன்பும், தோலா நல்லிசையும் இயற்கையாகவே அமைந்துள்ளமை தெரிகிறது. ஆயின், திருமுருகாற்றுப் படையைப் பாடிய நக்கீரர், ''மும்மூர்த்திகளும் தத்தம் தொழில் புரியும் தலைவர் ஆகும்படி, முருகன் தோன்றியருளினான்'' (வரி 162-163) என்று பாடியுள்ளார். இதனால், முருகன் பிறப்பினால் மும்மூர்த்திகளின் தலைமை செயற்கையாய் அமைந்தது என்பதன்றோ பொருளாகிறது? இங்ஙனம் கடவுள் பற்றிய செய்தியில் மாறுபட்ட இரண்டு கருத்துக்களை ஒரே நக்கீரர் பாடியிருப்பாரா?

சங்ககாலப் புலவர் ஒரு தெய்வத்தை உயர்த்தப் பிற தெய்வங்களைத் தாழ்த்திக் கூறினமைக்குச் சான்றில்லை. அவர்கள் சமரச மனப்பான்மையுடனே தெய்வங்களைப் பாடியுள்ளனர். கடுவன் இள எயினனார் என்ற ஒரே புலவர் பரிபாடலில் திருமாலுக்கு ஒரு பாடலும் முருகனுக்கு ஒரு பாடலும் பாடியுள்ளார். மதுரைக் கண்ணத்தனார் திருமாலையும் சிவனையும் ''இரு பெருந்தெய்வம்'' என்று (அகம்-360) பாடியுள்ளார்.

இளங்கோவடிகள் சிவனையும் முருகனையும் திருமாலையும் ஒருபடித்தாகவே பாடியுள்ளமையும் நோக்கத்தகும். இவை அனைத்தையும் நோக்க, முருகனை முழு முதற் கடவுளாகக் கருதும் நிலை சங்க காலத்துக்குப் பிற்பட்டதாகும் என்று கருதுதல் பொருத்தமாகும். ஆகவே, மும்மூர்த்திகட்கும் மேலாகப் பாடியுள்ள திருமுருகாற்றுப்

படை ஆசிரியரான நக்கீரர் சங்க கால நக்கீரரின் வேறாவர் என்று கொள்வதே ஏற்புடையதாகும்.

ஆவிநன்குடி முருகற்குரிய இடமாகச் சங்க நூல்களிற் குறிக்கப்பட்டிலது. எனவே, சங்க காலத்திற்குப் பின்னரே ஆவிநன்குடியில் முருகனுக்குக் கோவில் உண்டாயிருக்கலாம். திருமுருகாற்றுப்படை தொல்காப்பிய இலக்கணத்திற்கு மாறுபட்டது; ஆயின் நடை ஏறத்தாழச் சங்கச் செய்யுட்களின் நடையை ஒத்துள்ளது.

முருக வணக்கம் சங்க காலத்திற் சிறப்புற்றிருந்தது. பரிபாடலில் முருகனைப் பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. கி. பி. 6முதல் உண்டான நூற்றாண்டுகளில் சிவ வணக்கமே சிறப்புறலாயிற்று என்பதற்குப் பன்னிரு திருமுறைகளே ஏற்ற சான்றாகும். இவை அனைத்தையும் நோக்க, திருமுருகாற்றுப்படை சங்க காலத்திற்குப் பின்பு கி. பி. 300 க்குப் பின்பு) அப்பர் சம்பந்தர்க்கு முன்பு (கி. பி. 600 க்கு முன்பு) பாடப்பட்டிருக்கலாம் என்று கூறுதல் பொருத்தமாகும்.[8]

சங்க கால நூல்களுள் தொல்காப்பியத்திலும் மணிமேகலையிலும் கடவுள் வாழ்த்து இல்லை. சிலப்பதிகாரத்தில் திங்கள், ஞாயிறு, மழை என்னும் மூன்றையும் போற்றும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருக்குறளில் கடவுள் வாழ்த்து இடம் பெற்றுள்ளது. அஃது இடைச் செருகல் என்று கூறுவாரும் உளர். தொகை நூல்கள் பின்பு தொகுக்கப்பட்டவையாதலின் கடவுள் வாழ்த்துச் சேர்க்கப்பட்டது. பின்னர்த் தோன்றிய நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடுதல் புலவர் மரபாயிற்று.

பத்துப் பாட்டுள் 9 பாடல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில், பின் தோன்றிய திருமுருகாற்றுப்படையை (அது

8. Prof. T. P. Minakshisundaram's 61st Birthday Commemoration volume, P. 70.

கடவுள் பற்றிய பாடலாதலாலும் அதன் நடை சங்க கால நடையை ஒத்திருத்தலாலும்) முன் வைத்துப் 'பத்துப் பாட்டு' என நூலுக்குப் பெயரிடப்பட்டது எனக்கோடல் பொருத்தமாகும். முருகனைப் பற்றிச் சங்க காலத்தில் பாடப்பட்ட பரிபாடல்கள் சேர்க்கப் பெறாமல் முருகனைப் பற்றிய இத் திருமுருகாற்றுப்படை மட்டும் 11ஆந் திரு முறையில் இடம் பெற்றிருத்தலே, இது சங்க காலப் பாடல் அன்று என்பதற்கு ஏற்ற மற்றொரு சான்றாகும்.

### பத்துப்பாட்டு என்னும் பெயர்

இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரர் உரை கண்டார் என்பது இறையனார் அகப்பொருள் உரையிற் கூறப்பட்டுள்ளது. அவ்வுரையில் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாண்டியன் நெடுமாறன்மீது பாடப்பட்ட பாண்டிக் கோவையின் செய்யுட்கள் காணப்படுகின்றன; நாலடியார், சீவக சிந்தாமணி முதலிய நூல்களின் கருத்தும் சொற்றொடரும் காணப்படுகின்றன. எனவே, அவ்வுரை கி.பி. 11 அல்லது 12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது என்னலாம்.[9]

அக் களவியலுரையில் கடைச் சங்க நூல்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அப்பட்டியலில் பத்துப்பாட்டு இடம் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அக் காலத்தில் பத்துப் பாக்களும் தொகுக்கப்பட்டிருக்குமாயின், அத் தொகுப்பின் பெயர் அவ்வுரையில் இடம் பெற்றிருக்குமன்றோ?

இளம்பூரணர் என்பவர் தொல்காப்பிய உரையாசிரியருள் காலத்தால் முற்பட்டவர். அவர் காலம் கி. பி. 11 அல்லது 12ஆம் நூற்றாண்டு என்னலாம்.[10] அவர் பத்துப் பாட்டுள் ஒவ்வொன்றையும் அதனதன் தனிப் பெயர்

---

9. எஸ். வையாபுரிப் பிள்ளை, இலக்கிய தீபம், பக்.29.

10. கலைக்களஞ்சியம், தொகுதி 2, பக். 141.

கொண்டே கூறியுள்ளார்.[11] கி. பி. 13ஆம் நூற்றாண்டினரான பவணந்தி முனிவர்க்குப் பிற்பட்டவரான (கி. பி. 13அல்லது 14ஆம் நூற்றாண்டினரான) **பேராசிரியர்**[12] இத் தொகுதியைப் 'பாட்டு' (செய்யுளியல் நூற்பா 50, 80 உரை) என்றே குறித்துள்ளார். இதனை நோக்க, இப் பாடல்கள் இளம்பூரணருக்குப் பின்பும் பேராசிரியர்க்கு முன்பும் தொகுக்கப்பட்டன என்பது தெரிகிறது. ஆயின், அப்பொழுதும் இத் தொகுதிக்குப் 'பத்துப் பாட்டு' என்னும் பெயர் அமையவில்லை என்பது கவனிக்கத்தக்க தாகும்.

**மயிலைநாதர்** என்பவர் நன்னூலுக்கு உரை வரைந்தவர். இவர் கி.பி. 14-ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர்.[13] இவரே நன்னூல் நூற்பா 387 இன் உரையில் **'பத்துப்பாட்டு'** என்று **முதன் முதலாகக்** கூறியுள்ளார். ஆதலின், **பேராசிரியர்க்குப்** (கி. பி. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டிற்குப்) **பின்பே இத்தொகுதிக்குப்** 'பத்துப்பாட்டு' என்று பெயர் **வழங்கலாயிற்று** என்று கொள்வது பொருத்தமாகும்.[14]

---

11. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் இளம்பூரணர் உரையை ஏடுகளிற் கண்டு, இளம்பூரணர் 'பத்துப் பாட்டு' என்று கூறவில்லை என்று குறித்துள்ளார்கள். ஆயின் அச்சிடப்பட்ட நூல்களில் செய்யுளியல் நூற்பா 150இன் உரையில் 'பத்துப் பாட்டு' என்பது காணப்படுகிறது. இவருக்குப் பின் வந்த பேராசிரியர் 'பாட்டு' என்றே பல இடங்களில் குறித்துள்ளார். தமக்கு முற்பட்ட இளம்பூரணர் 'பத்துப் பாட்டு' என்று குறித்திருப்பாராயின், பின் வந்த பேராசிரியர் அதனையே குறித்திருத்தல் இயற்கையன்றோ? எனவே, இளம்பூரணர் 'பத்துப்பாட்டு' என்று குறிக்கவில்லை என்பதே உண்மையாகும்.

12. கலைக்களஞ்சியம், தொகுதி 7, பக். 631.

13. கலைக்களஞ்சியம், தொகுதி 8, பக். 106.

14. இலக்கிய தீபம், பக். 40; பத்துப் பாட்டிற்கு இலக்கணம் கூறும் பன்னிரு பாட்டியல் கி. பி. 14 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதென்னலாம்.

## பத்துப்பாட்டுச் செய்திகள்

1. **திருமுருகாற்றுப்படை :** இதன்கண் முருகன் கோயில் கொண்டுள்ள திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவினன்குடி, திரு ஏரகம் ஆகிய தனித்தனி இடங்கள் நான்கு குறிக்கப்பட்டுள்ளன; பின்பு பழம் உதிர்கின்ற சோலைகளையுடைய மலைகளை விரும்பியுறையும் முருகன் எல்லாக் குன்றுகளிலும் சதுக்கங்களிலும் நீர்த்துறைகளிலும் பிற இடங்களிலும் வாழ்கின்றான் (முருகன் எங்கும் உறைபவன்) என்பது குறிக்கப்பட்டுள்ளது.

317 அடிகளைக் கொண்ட இந்நெடும் பாட்டு ஆறு பிரிவுகளை உடையது. **முதற் பிரிவில்**-முருகனது திருவுருவச் சிறப்பு, அப்பெருமான் அணியும் மாலைகள், சூரர மகளிர் செயல்கள், சூரபதுமன் அழிவு, கூடலின் சிறப்பு, திருப்பரங் குன்றத்தின் இயற்கை வளம் ஆகியவை கூறப்பட்டுள்ளன. **இரண்டாம் பகுதியில்**-முருகனது யானையின் இயல்பு, அப்பெருமானுடைய ஆறு திருமுகங்களின் செயல்கள், பன்னிரண்டு திருக்கைகளின் செயல்கள், அவன் திருச்சீரலைவாயில் எழுந்தருளியிருத்தல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. **மூன்றாம் பிரிவில்**-முருகனை வழிபடும் முனிவர் ஒழுக்கம், அவனை வழிபட வரும் தேவர்-மகளிர் இயல்புகள், திருமால் முதலிய தேவர்கள் பற்றிய செய்திகள், திருவாவினன் குடியில் முருகன் கோவில் கொண்டிருத்தல் ஆகியவை கூறப் பட்டுள்ளன.

**நான்காம் பகுதியில்**-மந்திரம் ஓதுவார் இயல்பும் அருச்சகர் நிலையும் முருகன் திருஏரகத்தில் இருத்தலும் கூறப் பட்டுள்ளன. **ஐந்தாம் பிரிவில்**-குன்றக்குரவையின் நிகழ்ச்சி, ஆடு மகளிர்-பாடு மகளிர் இயல்பு, முருகனுடைய அணி, ஆடை, செயல் முதலியன, அப்பெருமான் குன்றுதோறும் உவந்து ஆடுதல் என்பவை இடம் பெற்றுள்ளன. **ஆறாம் பகுதியில்**-முருகன் எழுந்தருளியுள்ள நீர்த்துறை முதலிய பல இடங்கள், தேவராட்டி முருகனை ஆற்றுப்படுத்தும்

முறை அப்பெருமானை வழிபடும் முறை, அவனிடம் சென்று அருள் பெறும் முறை, முருகனுடைய அடியார் இயல்புகள், முருகன் அருள்புரியும் விதம், பழமுதிர் சோலை மலையின் வருணனை ஆகியவை கூறப்பட்டுள்ளன.

**2. பொருநராற்றுப்படை :** இப்பாட்டு 248 அடிகளை உடையது. சோழன் கரிகாலனிடம் பரிசில் பெற்று மீண்டு வந்த பொருநன் ஒருவன் பரிசில் பெறக் கருதிய பொருநன் ஒருவனை வழியிற் கண்டு, அவனைக் கரிகால் சோழனிடம் ஆற்றுப்படுத்தியதாக இது பாடப்பட்டுள்ளது. இதனைப் பாடியவர் **முடத்தாமக் கண்ணியார்** என்பவராவர். பொருநர் ஏர்க்களம் பாடுவோர் என்றும், போர்க்களம் பாடுவோர் என்றும், பரணி பாடுவோர் என்றும் பலவகைப்படுவர். அவருள் இப்பாட்டில் வரும் பொருநன் போர்க்களம் பாடு பவனாவன்.

பொருநர் ஊர் விழாவில் தங்கள் இசைக் கலைத் திறனைக் காட்டுதல், அவ்விழா முடிந்த பின்பு வேற்றூரை நோக்கிச் செல்லுதல், பாலையாழ் வருணனை, இவர்கள் வாசிக்கும் பாலைப்பண்ணைக் கேட்டு ஆறலை கள்வர் தம் கொடுஞ்செயலை மறந்து அன்புடையராதல், விறலியின் வருணனை, கரிகாற் சோழன் பரிசிலரை விரும்பி உபசரித் தல், உணவு வகை, பொருநர் விறலியர் முதலியோர் பரிசு பெறுதல், கரிகாலன் வீரச் செயல்கள், காவிரியின் சிறப்பு முதலியன இந்நெடும்பாட்டில் இடம் பெற்றுள்ளன.

**3. சிறுபாண் ஆற்றுப்படை :** 269 அடிகளைக் கொண்ட இப்பாட்டு, சீறியாழை வாசித்த பாணனொரு வனைப் பரிசில் பெற்ற சிறுபாணன் ஓய்மானாட்டு **நல்லியக் கோடனிடம்** ஆற்றுப்படுத்தியதாக அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் இடைக்கழி நாட்டு **நல்லூர் நத்தத் தனார்** என்பவர் இடைக்கழி நாடு என்பது செங்கற்பட்டு மாவட்டத்து மதுராந்தகம் வட்டத்திலுள்ள கடற்கரைப் பகுதியாகும். அப்பகுதி உப்பங்கழிக்கும் கடலுக்கும் இடைப்

பட்ட நாடாகும். அதனால் இடைக்காழி நாடு எனப்பட்டது. அந்நாட்டில் நல்லூர் என்னும் ஊர் இன்றும் இருக்கின்றது. ஒய்மானாடு என்பது திண்டிவனம் வட்டத்தின் பெரும்பகுதியும், விழுப்புரம் வட்டத்தின் கிழக்குப் பகுதியும் மதுராந்தகம் வட்டத்தின் தென்கோடிப் பகுதியும் சேர்ந்த நிலப் பரப்பாகும். இத்நாட்டுக்குத் தலைநகர் கிடங்கில் என்பது. இப் பண்டை நகரம் இன்றுள்ள திண்டிவனத்தின் பெரும் பகுதியாயிருந்தது.

இப்பாட்டில் **மாவிலங்கை, எயில்பட்டினம்** என்ற நகரங்களைப் பற்றிய செய்திகள், விறலியின் வருணனை, சேர சோழ பாண்டியர் தலைநகரங்களின் சிறப்பு, உமணர் செயல்கள், நல்லியக்கோடனுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த பாரி பேகன் முதலிய வள்ளல்கள் எழுவரின் அரிய செயல்கள், நல்லியக்கோடனது வீரம், சிறுபாணனுடைய வறுமை நிலை, நெய்தல் நில இயல்பு, அதனை அடுத்த எயிற்பட்டினத்துப் பரதவர் வாழ்க்கை, முல்லை நில இயல்பு, அதனைச் சார்ந்த வேலூர் எயிற்றியர் விருந்தினரைப் பேணும் முறை, மருதநில இயல்பு, அதனைச்சேர்ந்த ஆமூர் உழவர் மகளிர் உபசரிப்பு, நல்லியக்கோடனுடைய நற்பண்புகள், அவன் பாணனை வரவேற்றுப் பரிசில் நல்கும் அருமை ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**4. பெரும்பாண் ஆற்றுப்படை :** ஐந்நூறு அடிகளைக் கொண்ட இந்நெடும்பாட்டு, காஞ்சி நகர மன்னனான **தொண்டைமான் இளந்திரையனிடம்** பரிசு பெற்ற பெரும்பாணன் ஒருவன் பரிசில் பெற விரும்பிய மற்றொரு பெரும்பாணனை அத்தொண்டைமானிடம் ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பட்டது. இதனைப் பாடியவர் **கடியலூர் உருத்திரங் கண்ணனார்** என்பவர். சிறிய யாழை வைத்திருந்தவன் சிறுபாணன் **என்று** அழைக்கப்பட்டாற் போலப் பெரிய யாழை இசைத்தவன் பெரும்பாணன் எனப்பட்டான்.

இப்பாட்டில் யாழின் வருணனை, இளந்திரையன் ஆட்சிச் சிறப்பு, உப்பு வாணிகர் இயல்பு, நாட்டு வழிகளைக்

காப்பவர் தன்மை, எயிற்றியர் செயல், கானவர் செயல், வீரக்குடி மக்கள் இயல்பு, முல்லை நில மக்களின் செயல்கள், உழவர் செயல்கள், பாலை நிலத்தார் இயல்புகள், அந்தணர் ஒழுக்க முறை, நீர்ப்பெயற்று என்னும் ஊரின் சிறப்பு, பட்டினத்தின் (மாமல்லபுரம்) சிறப்பு, திருவெஃகாவில் திருமால் கிடந்த கோலம், காஞ்சி நகரின் சிறப்பு, இளந் திரையனுடைய வீரம் கொடை முதலிய பண்புகள், பாணரும் விறலியரும் மன்னனிடம் சிறப்புப் பெறுதல் முதலியன கூறப் பட்டுள்ளன.

**5. முல்லைப் பாட்டு :** 103 அடிகளை உடைய இப் பாட்டு முல்லை என்னும் ஒழுக்கத்தைப் பற்றியது. மனைவி, தன்னைப் பிரிந்து சென்ற கணவன் கூறியபடி அவன் வரும் வரையில் அவனது பிரிவை ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த் தும் ஒழுக்கமே முல்லை என்பது. முல்லை ஒழுக்கம் பற்றிய பாட்டு 'முல்லைப் பாட்டு' எனப் பெயர் பெற்றது. இதனைப் பாடியவர் **நப்பூதனார்** என்பவர். இவர் காவிரிப் பூம்பட்டினத்துப் பொன்வாணிகர்.

பிரிந்து சென்ற தலைவன் வரத்தகும் சகுனத்தைப் பெருமுது பெண்டிர் பார்த்தல், போருக்குச் சென்ற தலைவன் தங்கியுள்ள பாசறையின் அமைப்பு, அங்குப் பாகர் யானை களிடம் பழகும் தன்மை, அங்குள்ள அரசனது பள்ளியறை யின் இயல்பு, அங்கு வீரமங்கையர், நாழிகை சொல்பவர், மெய்க்காப்பாளர் ஆகியோர் செயல்கள், அரசன் பகைவர் தாக்குதலால் துன்புற்ற தன் படைகளைப் பார்வையிடுதல், தலைவி தலைவனைக் காணாமல் துன்புறுதல், கார்காலத்து மீண்டுவரும் தலைவன் வழியில் காணும் காட்சிகள் முதலியன இப்பாட்டில் இடம் பெற்றுள்ளன.

**6. மதுரைக் காஞ்சி :** மதுரைக் காஞ்சி என்பது 'மதுரையில் அரசனுக்குக் கூறிய காஞ்சி' எனப் பொருள் படும். யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை முதலிய பல்வேறு நிலையாமையைச் சான்றோர் கூறுதல் 'காஞ்சித்

திணை' எனப்படும். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு வீடு பேறு நிமித்தமாகப் பலவகை நிலையாமையைக் கூறுவது இந்நெடும் பாட்டின் குறிக்கோளாகும். இதனைப் பாடியவர் மாங்குடி மருதனார் என்பவர். அவர் நெடுஞ்செழியனால் மதிக்கப்பெற்ற புலவருள் முதல்வர். மதுரைக் காஞ்சி என்னும் பாடல் 782 அடிகளை உடையது.

இந்நீண்ட பாட்டில் நெடுஞ்செழியன் படையெடுப்பு, போர்ச் செயல்கள், பகைவர் நாடுகளை அழித்தல், இருபெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் வெற்றி கொள்ளல், பரதவரை அடிப்படுத்தல், பகைவர் நாட்டுப் பொருள்களை நட்டோர்க்கும் புலவர் முதலியோர்க்கும் வழங்கும் பாண்டியனுடைய சிறப்பியல்புகள், அவன் முன்னோர் அருஞ் செயல்கள், பாண்டிய நாட்டின் ஐந்திணை வளங்கள், மதுரையின் சிறப்பு, மதுரைக் கடைத்தெரு பற்றிய விவரங்கள், மக்கள் செயல்கள், மன்னன் நாட்காலையில் வீரர்க்கும் பரிசிலர்க்கும் களிறு முதலியவற்றை வழங்குதல், மன்னன் மேற்கொள்ள வேண்டும் கடமைகள் முதலியன அழகுறக் கூறப்பட்டுள்ளன.

7. **நெடுநல்வாடை:** 188 அடிகளைக் கொண்ட இப்பாடல், பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்தும் கோப்பெருந்தேவிக்கு அவ்வருத்தம் நீங்கும்படி அவன் பகையை வென்று விரைவில் வருவானாக என்று கொற்றவையைப் பரவும் ஒருத்தி கூறும் முறையில் அமைந்துள்ளது. இதனைப் பாடிய புலவர் நக்கீரனார் என்பவர்.

---

*இப் பாட்டில் நெடுஞ்செழியன் பெயரோ, தலையாலங்கானப் போரோ குறிக்கப்படவில்லை. ஆயினும் இப் பாடல் நெடுஞ்செழியனைப் பற்றியதென்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். அவர் கூற்றைத் தழுவியே இப் பாடல் நெடுஞ்செழியனைப் பற்றியது என்று இங்குக் கூறப்பட்டுள்ளது.

நெடுநல்வாடை என்பது 'நெடிதாகிய நல்ல வாடை' என விரியும். தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவிக்கு ஒரு நாள் ஒருழிபோல நெடிதாகிய வாடையாய், அரசன்; மனைவியோடு உறைவதில் மனமற்றுப் பகைவர் நாட்டில் பாசறை அமைத்துத் தங்கியிருப்பதால் அவனுக்கு நல்ல தாகிய வாடையாயினமையின், 'நெடுநல்வாடை' எனப் பட்டது.

இப்பாடலில்—குளிர்காலத்தில் மக்களும் விலங்குகள் பறவைகள் முதலியனவும் குளிரால் வருந்தியிருக்கும் நிலை, அரசமாதேவி வாழும் அரண்மனை அமைப்பு, அவள் உறங்கும் கட்டிலின் சிறப்பு, அவள் மன்னனின் பிரிவால் வருந்தும்நிலை, அவளது வருத்தம் தீரச் செவிலியரும் பணிப் பெண்களும் ஆற்றும் செயல், பாசறையில் அரசன் நடந்து சென்று, புண்பட்ட வீரர்களைக் கண்டு முக மலர்ச்சியோடு ஆறுதல் கூறுதல் என்பன அழகுறக் கூறப்பட்டுள்ளன. மேலும் இப்பாடலில் இடையிடையே பூவின் மலர்ச்சிகொண்டு பொழுதை அறியும் வழக்கம், மகளிர் மாலைக் காலத்தைக் கொண்டாடுதல், அரண்மனை வகுக்கும் முறை முதலியவை கூறப்பட்டுள்ளன.

8. **குறிஞ்சிப்பாட்டு :** 261 அடிகளைக் கொண்ட இப் பாடல் குறிஞ்சி ஒழுக்கத்தைப் பற்றியது. இதனைப் பாடிய வர் கபிலர் என்பவர். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச் சுவையை ஊட்டக் கபிலர் இப்பாடலைப் பாடினார். களவு வாழ்க்கையில் தலைவிக்குக் காவல் இருந்தது. அவள் தலைவன் வரும் வழியிலுள்ள கேடுகளை எண்ணி அஞ்சி னாள். அதனால் அவள் பாங்கிக்கு அறத்தொடு நின்றாள். அப்பாங்கி அதனைச் செவிலிக்கு நயம்பட உரைக்கும் முறை யில் இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலுள் தலைவி தலைவனைச் சந்தித்தல், அவருள் அன்பு உண்டாதல், குறிஞ்சி நிலச் சிறப்பு, குறிஞ்சி நிலத்து மலர்கள் 99 இன் பெயர்கள் முதலியவையும் கூறப்பட்டுள்ளன, குறிஞ்சித்

திணை பற்றிப் பாடுவதில் கபிலர் வல்லவர் என்பதற்கு இக் குறிஞ்சிப் பாட்டு ஏற்ற சான்றாகும்.

**9. பட்டினப்பாலை :** பட்டினம் என்பது, சோழர் துறைமுக நகரமான காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிக்கின்றது. பாலை என்பது, தலைவன் தலைவியை விட்டுப் பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாகும். எனவே, பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத்திணைப் பாடல் '**பட்டினப் பாலை**' எனப்பெயர் பெற்றது. தலைவியை விட்டுப் பிரிந்து பொருள் ஈட்டுவதற்கு வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்பிய தலைவன், 'புகழ் மிக்க காவிரிப்பூம்பட்டினத்தைப் பெறுவதாயினும் என் மனைவியைப் பிரிந்து வாரேன்; கரிகால் வளவன் பகைவர்மீது செலுத்திய வேலினும் கொடியது யான் கடக்க விரும்பும் கானம்; என் மனைவியின் தோள் அச்சோழனது செங்கோலினும் குளிர்ச்சியுடையது', என்று கூறிச் செலவு தவிர்ந்ததாக இப்பாடல் அமைந்துள்ளது. இதனைப் பாடியவர் **கடியலூர் உருத்திரங் கண்ணனார்** என்பவர்.

இப்பாட்டில் சோழநாட்டின் சிறப்பு, காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, கரிகாற் சோழனின் வீரச்செயல்கள், உறையூரை அவன் வளப்படுத்தினமை முதலியவை கூறப்பட்டுள்ளன. கரிகாலனது வாழ்க்கை, காவிரியின் சிறப்பு, சோழநாட்டுக் குடிவளம், பரதவர் செயல்கள், கடல் வாணிகம், வணிகர் நல்லியல்புகள், நகரத்தில் உயர்த்தப் பட்ட பலவகைக் கொடிகள் பற்றிய விவரங்கள், கரிகாலன் உறையூரில் செய்த நற்பணிகள் முதலிய செய்திகள் இப் பாட்டில் விளக்கமாக இடம் பெற்றுள்ளன.

**10. மலைபடுகடாம் :** 583 அடிகளைக் கொண்டுள்ள இந்நெடிய பாடல், செங்கண்மாத்து வேள் **நன்னன்சேய் நன்னன்** என்பவனிடம் பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன், பரிசில் பெற வரும் கூத்தனை அவ்வேளிடம் ஆற்றுப் படுத்தியதாக அமைந்துள்ளது. இதனைப் பாடியவர்

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் என்பவர். இரணிய முட்டம் என்பது மதுரையை அடுத்த ஆனைமலைப் பகுதி—அழகர் மலைப்பகுதி—இவ்விரண்டையும் சூழ உள்ள பகுதி ஆகிய சிறிய நிலப்பகுதியின் பெயராகும். இந்நிலப்பகுதியில் சிறு குன்றுகளும் பெருங்குன்றுகளும் மலைகளும் மிக்குள்ளன.

மலைக்கு யானையை உவமித்து அதன்கண் பிறந்த ஓசையைக் 'கடாம்' எனச் சிறப்பித்தமையால் இப்பாட்டு 'மலைபடுகடாம்' எனப் பெயர் பெற்றது. இது கூத்தர் ஆற்றுப்படை எனவும் வழங்கும்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சவ்வாது மலைத் தொடரும் அதனைச் சூழ உள்ள நிலப்பகுதியும் நன்னனது நாடாகும். அடிவாரத்திலிருந்து மலைமீது ஏறிச்சென்று, மலையில் பாய்ந்தோடும் சேயாற்றைத் தாண்டி அதன் கரை வழியே நடந்து தரையில் அமர்ந்திருந்த செங்கண்மா என்னும் நன்னனது நகரத்தை அடையும்வரையில் மலையடிவார ஊர்கள், மலைமேலிருந்த ஊர்கள், காடுகள், ஊர் மக்கள் இயல்புகள், அவர்கள் விருந்தினரை உபசரிக்கும் முறை, ஆங்காங்குக் கிடைத்த உணவு வகை, மலைமீது காரியுண்டிக் கடவுள் பற்றிய விவரம், நன்னனது கொடைத் திறன் இன்ன பிறவும் இந்நெடிய பாட்டில் அழகுறக் கூறப்பட்டுள்ளன.

## சிறப்புச் செய்திகள்

**உயிர்க் காட்சிச்சாலை :** பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தில் அவனது தலைநகரான மதுரை மாநகரத்தில் கரடி, புலி முதலிய கொடிய விலங்குகள் கூண்டுகளில் அடைத்து வைக்கப்பட்டிருந்தன என்று மதுரைக் காஞ்சி (வரி 677) கூறுகின்றது. **இக்காலத்துச் சென்னை போன்ற மாநிலத் தலைநகரங்களில் வைக்கப்பட்டுள்ள உயிர்க் காட்சிச்சாலை இத்தமிழ் நாட்டில் சங்க காலத்திலேயே இருந்தது** என்பது இதனால் தெரிகிறதன்றோ?

வாணிகம் : உள்நாட்டு வாணிகத்தில் கழுதைகளும் பெரும்பங்கு கொண்டன. அவை மிளகு முதலியசரக்குகளைக் கொண்ட பண்டப் பொதிகளைச் சுமந்து வரிசையாகச் சென்றன. உப்பு ஏற்றப்பட்ட வண்டிகளை எருதுகள் இழுத்துச் சென்றன (பெ. ஆ. படை, 78-80). தமிழகத்தில் மலை நாட்டிலிருந்து சந்தனம், அகில், மிளகு முதலிய பொருள்கள் தரைவழியே வந்தன.

தொண்டை நாட்டுத் துறைமுக நகரங்களுக்கு அயல் நாடுகளிலிருந்து குதிரைகள் வந்தன (பெரும்பாண், வரி 320). முத்து, சங்கு, வளை, பலவகை உணவுப்பொருள்கள், தீம்புளி, வெள்ளுப்பு, மீன் உணக்கல், உயர்ந்த வேலைப் பாடமைந்த நகைகள் ஆகியவை மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி ஆயின (ம. கா. வரி 315-322). காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகப் பகுதியில் மேலைநாடுகளிலிருந்து வந்த குதிரை களும், தென்கடல் முத்தும், கீழ்க்கடல் பவளமும், இலங்கை உணவுப் பொருள்களும், பர்மா நாட்டுப் பொருள்களும் இறக்குமதியாயின. அவற்றுடன் சேரநாட்டு மிளகு மூட்டை களும், வடமலையில் கிடைத்த மணிகளும் பொன்னும் இடம் பெற்றிருந்தன.

இக்கடல் வாணிகம் ஓய்வின்றி நடைபெற்றது என்பதைப் பட்டினப்பாலை தெளிவாகத் தெரிவிக்கின்றது (வரி 120—134). பல மொழிகள் பேசிய பல நாட்டு வணிகரும் பூம்புகார் நகரில் வாணிகத்தின் பொருட்டு வாழ்ந்துவந்தனர் என்று பட்டினப்பாலை (வரி 216.217) பகருகின்றது.

இக் கடல் வாணிகத்தில் பங்குகொண்ட பல்வேறு நாட்ட வருள் யவனர் சிறப்பிடம் பெற்றிருந்தனர். யவனர் கொண்டு வந்த பொருள்களுள் பாவை விளக்கு, அன்னப் பறவை விளக்கு என்பவை குறிப்பிடத்தக்கவை.[15] யவனர் அரை யாடையும் சட்டையும் அணிந்திருந்தனர். இவர்கள் அர

---

15. நெடுநல்வாடை, வரி 101-102; பெரும் பாணாற்றுப்படை, வரி 316-317.

சாங்கப்பணியில் ஈடுபட்டிருந்தனர். சட்டையிட்ட வெளி நாட்டு ஊமையர் அரசன் பாதுகாவலராய் இருந்தனர். அவர்கள் 'மிலேச்சர்' எனப்பட்டனர்.[16]

**அந்தணர் செல்வாக்கு :** தொல்காப்பியருக்கு முன்னரே வடமொழியாளர் தமிழகத்தில் தங்கித் தங்கள் மொழியையும் வேத நெறியையும் இந்நாட்டில் பரப்பலாயினர் என்பது தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை நூல்களைக் கொண்டு முன்பே உணர்த்தப்பட்டது. காலம் செல்லச் செல்ல வேதநெறி தமிழகத்தில் வேரூன்றிப் பரவலாயிற்று என்பதும் முன்னரே விளக்கப்பட்டது. கீழ்வரும் பத்துப் பாட்டுச் செய்திகள் இவ்வுண்மையை நன்கு உணர்த்துகின்றன.

பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப்படை சங்ககாலத்தது அன்று என்பது முன்பே கூறப்பட்டுள்ளதன்றோ? அஃதொழிந்த ஒன்பது பாடல்களுள் நான்கு பாடல்களைப் பாடியவர் அந்தணராவர். இளந்திரையன்மீது பெரும் பாணாற்றுப்படையும் கரிகாலன்மீது பட்டினப்பாலையும் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார், குறிஞ்சிப் பாட்டைப் பாடிய கபிலர், நன்னன்மீது கூத்தராற்றுப் படையைப் பாடிய இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் ஆகிய மூவரும் அந்தணப் புலவராவர்.[17] இவருள் உருத்திரங்கண்ணனார் கரிகாலனால் நூறாயிரம் பொன் பரிசளிக்கப் பெற்றவர் என்று கலிங்கத்துப் பரணி (இராச பாரம்பரியம், 21) கூறுகிறது. கரிகாலன் அப் புலவர்க்குப் பரிசிலாக வழங்கியிருந்த பதினாறுகால் மண்டபம் ஒன்று உறையூரில் இருந்தது. முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கி. பி. 1219இல் உறையூரைத் தரைமட்ட

---

16. முல்லைப்பாட்டு, வரி 59-56.

17. தொல்காப்பியம், மரபியல், நூற்பா 74, பேராசிரியர் உரை.

மாக்கியபொழுது, புலவருக்குப் பரிசிலாக வழங்கப்பட்ட இம் மண்டபத்தை மட்டும் இடிக்காமல் விட்டுவிட்டான் என்று திரு வெள்ளறையில் உள்ள அச்சுந்தரபாண்டியன் கல்வெட்டுக் கூறுகின்றது.[18]

ஓய்மானாட்டு ஊர்களுள் ஆமூர் என்பது ஒன்று. அவ் வூரில் அந்தணர் நிறைந்திருந்தனர் என்று சிறுபாணாற்றுப் படை (வரி 187-188) செப்புகிறது. ஓய்மானாட்டு மன்னனது அரண்மனை வாயில் பொருநர்க்கும் புலவர்க்கும் அடை யாதது போலவே அருமறை நாவின் அந்தணர்க்கும் அடை யாதது (வரி 204-206) என்று அப்பாட்டுக் குறிக்கின்றது. இச்செய்தி வேறு எந்த நூலிலும் குறிக்கப்படாதது என்பது கவனிக்கத்தகும். எனவே, புலவர்-பாணர் - பொருநர் - கூத்தர் போலவே அந்தணரும் அரசர்களால் பிற்காலத்தில் சிறப்பிக்கப்பெற்றனர் என்பது இதனால் தெரிகிறது. ஆமூர், அந்தணர்க்கு விடப்பட்ட பிரமதேயச் சிற்றூராக இருந்திருக் கலாம் என்று கருதுவதும் பொருத்தமாகும்.

தொண்டைநாட்டுப் பல பகுதிகளையும் கடந்து காஞ் சிக்குச் செல்ல வழி கூறிய பெரும்பாணன், அவ்வழியில் வேதியர் வாழ்ந்த ஓர் ஊரைக் குறிப்பிட்டுள்ளான்; ''மறை

---

18. ''வெறியார் தளவத் தொடைச்செய மாறன் வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரி நாட்டில் அரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய் பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினாறு மேயங்கு நின்றனவே.''

திருவெள்ளறைக் கல்வெட்டு, செந்தமிழ்த் தொகுதி 41, பக் 215. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கரிகாலனால் விடப்பட்ட இம்மண்டபம் சுந்தரபாண்டியன் படையெடுப்பின் போது (கி. பி. 1219) இருந்தது என்பது கவனிக்கத் தகும்.

காப்பாளர் உறைபதி'' என்று அவன் கூறியிருப்பதை நோக்க, அவ்வூரும் **பிரமதேயச் சிற்றூர்** என்று கருதுதல் தகும். அங்கு இருந்த அந்தணர் வீடுகளில் கோழியும் நாயும் புகவில்லை. வீட்டை அடுத்துப் பந்தல் இருந்தது. அப்பந்தலின் ஒரு காலில் பசுக்கன்று கட்டப்பட்டிருந்தது. இல்லம் பசுவின் சாணத்தால் மெழுகப்பட்டிருந்தது. அங்கு வளர்ந்த கிளிக்கு வேத ஓசை கற்பிக்கப்பட்டது. அவ்வில்லத்து அரசியாகிய பார்ப்பனி ஆவுதிக்கு உரிய நெற்சோற்றைப் பதமறிந்து சமைத்தாள். கொம்மட்டி மாதுளங்காய் மிளகுப்பொடி கலக்கப்பட்டுக் கறிவேப்பிலை அளாவப்பட்டு வெண்ணெயில் வேகவைக்கப்பட்டது. மாவடு ஊறுகாயும் உணவுப் பொருளாகப் பயன்பட்டது (பெ.ஆ. படை, 297-310).

அந்தணர்கள் தாம் தங்கியிருந்த இடங்களில் **யாக சாலைகளை** அமைத்திருந்தனர். ஒவ்வொரு யாகசாலையிலும் வேள்வித்தூண் (யூபம்) நடப்பட்டு இருந்தது என்று பெரும்பாணாற்றுப்படை (வரி 315—316) பேசுகின்றது. பூந்தாதினை உண்ணும் வண்டு ஒலி செய்வது போல வேதத்தை முழுதுணர்ந்த அந்தணர் துதிப்பாடல்களைப் பாடினர் என்று மதுரைக் காஞ்சி (வரி 655—656) கூறியுள்ளது. மதுரையில் பௌத்தர் பள்ளி, சமணர் பள்ளி இருந்தாற்போல **அந்தணர் பள்ளியும்** அமைந்திருந்தது. அப்பள்ளி மலையை உள்வெளியாக வாங்கி இருப்பிடம் ஆக்கினாற் போன்ற அமைப்பைப் பெற்றிருந்தது (ம.கா.வரி 474).

யாகங்களைப் பண்ணிப் பெரிய சுவர்க்கத்து ஏறப் போகும் அந்தணர்கள் அரசனை அடக்குமாறு போல அமைச்சர்கள் அரசனிடத்திருந்த நன்மையும் தீமையும் நெஞ்சத்தாலே கண்டு அத்தீங்குகளை ஆராய்ந்து அவற்றிலே ஒழுகாமல் அடக்கினர் (ம. கா. வரி. 494—496). இந்த உவமையிலிருந்து, வேதியராகிய அந்தணப் பெரியோர்கள் அரசனுக்கு அறிவுரை கூறும் (ஆசான் என்ற) உயர் நிலையில் இருந்தனர் என்பது தெளிவாகிறதன்றோ?

அதேபாடல், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன், அந்தணர்க்குக் கூறிய முறைப் படி முன்னுள்ள கருமங்களை முடித்துப் பின்னர்த் தத்துவங் களை ஆராய்ந்து மெய்ப்பொருள் உணர்ந்து, வீட்டின்பம் எய்திய ஆசிரியரிடத்தே தானும் அம்முறையே சென்று வீட்டின்பத்தைப் பெற்றான் (வரி 759—762) என்று கூறு கின்றது. பாண்டியன் வேதியர் சொற்படி பல யாகங்களைச் செய்து முடித்தவன் என்பதை இச்செய்தி உணர்த்துகிறது.

அந்திக்கால நிகழ்ச்சிகளைக் குறிக்கும் குறிஞ்சிப்பாட்டு, ''அந்தணர் அந்தி நேரத்தில் வேத நெறிப்படி சில தொழில் களை நிகழ்த்தினர்'' (வரி, 225) என்று கூறியுள்ளது. 'பூம்புகார் வணிகர் யாகங்களைச் செய்தனர், நான்மறை யோர் புகழ் பரப்பினர்' என்று பட்டினப்பாலை (வரி 200-202) குறித்துள்ளது. இச்செய்தியும் பிற சங்க நூல் களில் காணப்படாதது.

இதுகாறும் கூறப்பெற்ற அந்தணர் பற்றிய செய்தி களால், அந்தணர் அரசர்களிடம் தனி ஊர்களைப் பெற்று வாழ்ந்தனர், அரசர்களிடம் பரிசில் பெற்றனர், மன்ன ராலும் குடிகளாலும் மதிக்கப்பட்டனர், கல்வி கேள்வி ஒழுக்கங்களில் சிறந்திருந்தனர், புலவர்கள் தம் பாக்களில் பாடும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பன அங்கைக் கனியென விளங்குகின்றன அல்லவா?

**புராணக் கதைகள் :** திருமுருகாற்றுப் படையில் முருகன் இந்திரன் மகளான தெய்வயானையைத் திருமணம் செய்து கொண்டமை (வரி 6), முருகன் சூரபதுமனைக் கொன்றமை (46, 60), முருகன் தாய்மார் அறுவரால் வளர்க்கப்பட்டமை (255), சிவபெருமான் முப்புரம் எரித்தமை (154), இந்திரன் நூறு வேள்விகள் செய்தமை (155—156), திருமாலின் கொப்பூழிலிருந்து தோன்றிய தாமரை மலரில் நான்முகன் உண்டானமை (164-165), ஆதித்தர் பன்னிருவர், உருத் திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர்

(167), பதினெண் கணங்கள் (168), நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரிய விரதம் காத்த அந்தணர் (179); முருகன் மலைமகள் (பார்வதி) மகன் (257), கொற்றவை சிறுவன் (வரி 258) என்னும் புராணச் செய்திகள் இடம் பெற்றுள்ளன.

சிறுபாணாற்றுப் படையில் அருச்சுனன் தமையன் வீமன் என்பதும் அவன் மடைத்தொழிலில் சிறந்தவன் என்பதும் அவனது நூற்படி நல்லியக்கோடன் அரண்மனையில் உணவு சமைக்கப்பட்டது (வரி 239-241) என்பதும் கூறப்பட்டுள்ளன. அதே பாட்டில் வேலூரின் பெயர்க் காரணம் கூறப்பட்டுள்ளது. நல்லியக்கோடன் தன் பகை மிகுதிக்கு அஞ்சி முருகனை வழிபட்டான். அப்பெருமான், "இக்கேணியில் உள்ள பூவை எடுத்துப் பகைவர்மீது எறி," என்று கனவில் தோன்றிக் கூறினான். நல்லியக்கோடன் கேணியிலிருந்த பூவை எடுக்க அது வேலாக மாறிற்று. அன்று முதல் அக்கேணி யிருந்த ஊர் 'வேலூர்' என்று பெயர் பெற்றது (172-173).

திருமாலின் கொப்பூழில் தோன்றிய தாமரையிலிருந்து பிரமன் தோன்றியமையும் (402-403), பாண்டவர் கவுரவர் போரும் (415-417) பெரும்பாணாற்றுப் படையில் கூறப் பட்டுள்ளன. முருகன் பகைவர்மீது செல்லலும் (183), திருமால் பிறந்த ஓணநாள் விழாவும் (591) மதுரைக் காஞ்சியில் இடம் பெற்றுள்ளன. உரோகிணி சந்திரனை விட்டுப் பிரியாதவள் என்பது நெடுநல்வாடையில் (163) கூறப்பட்டுள்ளது. சூரியன் ஏழு குதிரைகள் பூட்டிய தேரினன் என்பது குறிஞ்சிப்பாட்டில் (215-216) இடம் பெற்றுள்ளது.

"சிவன் அல்லது ருத்திரன் என்னும் கடவுள் மலைக்குரிய கடவுளாக வடவரால் கருதப்பட்டான். ஆயின், தமிழர் முருகனை மலைக்குரிய கடவுளாகக் கருதினர். வேதகாலத்தில் சுப்பிரமணிய வணக்கம் இல்லை. இந்திரன்

பணியாளரான அக்கினியும் வாயுவும் சுப்பிரமணியர் என்றழைக்கப்பட்டனர் என்று தைத்ரீய ஆரணியகம் கூறுகிறது. அந்நூலில் அச்சுப்பிரமணியன் வழிபாட்டுக்குரிய சுலோகங்கள் இல்லை. ஆயின், இதிகாச காலத்தில் கார்த்திகேயன் அல்லது சுப்பிரமணியன் பிறப்புப்பற்றிய குறிப்புக்கள் கிடைக்கின்றன. அக்கடவுள் உருத்திரன் அல்லது அக்கினியின் மகனாகக் கூறப்பட்டுள்ளான். உருத்திர வணக்கம் அல்லது சிவ வணக்கத்தின் வளர்ச்சியின் பயனாகவே சுப்பிரமணிய வணக்கம் தோன்றியிருக்கலாம். தென்னாட்டவர் தங்கள் முருகனை இச்சுப்பிரமணியனாகக் கருதி வழிபடக் கருதினர் என்னலாம்.[19]

**வடசொற்கள்**

திருமுருகாற்றுப்படை உள்ளிட்ட பத்துப்பாடல்களிலும் சில வடசொற்களே காணப்படுகின்றன. அவற்றுள் சிறப்பாகக் குறிக்கத் தக்கவை கீழ்வருவனவாகும்:

(1) மகரம்; பிண்டி, அவுணர், மந்திரம், அங்குசம் (திருமுருகாற்றுப்படை).

(2) மாத்திரை, மது (பொருநர் ஆற்றுப்படை).

(3) ஆரம், இமயம், தெய்வம், நாகம், நித்திலம், கோபம், நேமி (சிறுபாணாற்றுப்படை).

(4) பூதம், விசயம், கின்னரம் (பெரும்பாணாற்றுப்படை).

(5) படம், மிலேச்சர், கடகம் (முல்லைப்பாட்டு).

(6) யூபம், சலம், நியமம், பதாகை, ஆதி, அரமியம், அந்தி, தூரியம், வேதம், சாவகர், ஆவுதி, அமிர்து. மாயம், கணம், அவுணர், ஓணம்,

---

19. சி. வி. நாராயண அய்யர், தென்னிந்தியாவில் சைவ சமயத் தோற்றமும் தொடக்க வரலாறும், பக். 102.

சாணம், சமம், சூதர், மாகதர், வேதாளிகர், மதுரை (மதுரைக் காஞ்சி).

(7) சாலேகம், உரோகிணி (நெடுநல் வாடை).

(8) திலகம், சண்பகம், நந்தி, சேமம் (குறிஞ்சிப் பாட்டு).

(9) மகம், நாடகம், மஞ்சிகை, அமரர் (பட்டினப் பாலை).

(10) வதுவை, தேம் (தேசம், தேயம்), வாதி, நிதி (மலைபடுகடாம்).[20]

---

20. சிறுபாணனை ஆற்றுப்படுத்திப் பாடப்பட்டது சிறு பாணாற்றுப்படை எனவும், பெரும்பாணனை ஆற்றுப்படுத் தியது பெரும்பாணாற்றுப்படை எனவும், பொருநனை ஆற்றுப்படுத்தியது பொருநராற்றுப்படை எனவும் வழங்கி னாற் போலவே கூத்தரை ஆற்றுப்படுத்தியது கூத்தராற்றுப் படை என்றே சங்ககாலத்தில் பெயர் பெற்றிருத்தல் வேண்டும். இதுவே முறையாகும். இடைக்காலத்தில் பொருத்த மற்ற முறையில் இப்பாடலுக்கு 'மலைபடு கடாம்' என்று எவரோ பெயரிட்டுவிட்டனர் எனக் கொள்வதே பொருத்தமாகும். இவ்வாறே புலவர் ஆற்றுப் படையைப் பிற்காலத்தார் திருமுருகாற்றுப்படை என மாற்றிவிட்டனர் என்று நினைத்தல் தகும்.

# 19. சிலப்பதிகாரம்

## (1) சிலப்பதிகார காலம்

**சோழன் கரிகாலன்**

கோவலன்—கண்ணகி திருமணத்தின் இறுதியில், ''இமயத்தில் புலிப்பொறி பொறித்த சோழன் தன் திகிரியை உருட்டுவோனாகுக'', என்று சொல்லித் திருமணத்திற்கு வந்திருந்தோர் வாழ்த்தினர் என்னும் பகுதியில், அடியார்க்கு நல்லார், அச் சோழனைக் கரிகாலன் என்று குறித்துள்ளார். கரிகாலனது வடநாட்டு வெற்றி, இந்திர விழவூர் எடுத்த காதையில் (வரி 87—104) விரிவாய்க் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்துக் கானல் வரியில், சோழன் கங்கை வரையில் சென்று மீண்டமை குறிப்பாய் உணர்த்தப்பட்டுள்ளது; ''கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி'' —இங்ஙனம் கங்கை வரையில் சென்று மீண்ட சங்க காலச் சோழன் கரிகாலன் ஒருவனே ஆவான். இவை அனைத்தையும் நோக்க, கோவலன்—கண்ணகி திருமணம் நடைபெற்ற போது கரிகாலனே சோழப் பேரரசனாய் இருந்தான் என்பது தெளிவாகிறது.

சோழவேந்தன் ஒருவன், முதல் கயவாகு வேந்தனுக்கு முற்பட இருந்த வங்க நாஸிகதிஸ்ஸன் (கி. பி. 111-114) காலத்தில் இலங்கையின்மீது படையெடுத்துப் பன்னீரா யிரம் சிங்களவரைச் சிறை செய்து சோழ நாட்டுக்குக் கொண்டு சென்றான், அவர்களைக் கொண்டு காவிரிக்குக் கரையிடுவித்தான் என்று இலங்கை வரலாறு கூறு கின்றது.[1] இங்ஙனம் செய்தவன் கரிகாலனே என்பது

1. The History of Ceylon, Vol. I, Part I, pp. 175—182.

'சங்க காலம்' என்னும் பகுதியில் முன்பே கூறப்பட்ட தன்றோ? எனவே, சிலப்பதிகார வரலாற்றுத்தொடக்கத்தில் கரிகாலன் வாழ்ந்திருந்தான் என்று கொள்வது பொருத்த மாகும்.

## இலங்கைக் கயவாகு

சேரன் செங்குட்டுவன் பத்தினிக்குக் கோவில் கட்டி வழிபட்டபோது வந்திருந்த அரசருள். ''கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தன்'' ஒருவன் என்று சிலப்பதி காரம் செப்புகின்றது (காதை 30, வரி 160). இவன் முதலாம் கஜபாகு என்று இலங்கை வரலாறு கூறும். இவன் ஆட்சிக் காலம் கி. பி. 114—136. இக் கயவாகு இலங்கையில் பத்தினி வணக்கத்தை ஏற்படுத்தினான் என்று இலங்கைக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் நவில்கின்றன. இன்றும் பத்தினி வணக்கம் இலங்கை மக்கள் சமயத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது.[2]

''கயவாகு வேந்தன் சோழநாட்டின்மீது படை யெடுத்துச் சென்றபோது யாழ்ப்பாண வழியே சென்றனன்; போரின் பின் திரும்பும் போது போர் வீரரைச் சிறைப்பிடித்து வந்தான். அவர்களுடன் பத்தினிக் கடவுளின் காற்சிலம்பும் வேறு சில அணிகளும் கொண்டுவந்தான்' என்று 'இராசவழி' என்னும் இலங்கை வரலாற்று நூல் கூறுகிறது. கயவாகு வேந்தனே இலங்கையில் பத்தினி வணக்கத்தைத் தோற்று வித்தவன் என்று கூறும் சிலப்பதிகாரச் செய்தி இதனால் உறுதி பெறல் காணத்தகும். இலங்கையில் உள்ள கண்ணகி

2. History of Ceylon, Vol. I, Part I, pp. 183—185; சிலப்பதிகார நிகழ்ச்சிகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டி னது ஆகலாம்; ஆயின் அந் நூல் கி.பி. ஐந்தாம் நூற்றாண் டுக்கு முன்பு செய்யப்பட்டதென்று கூற இயலாது என்று வர லாற்றாசிரியர் திரு. K. A. நீலகண்ட சாஸ்திரியார் கூறியுள் ளார்; ஆயின் அதற்குரிய காரணங்களைக் காட்டவில்லை. —A History of S. India, p. 112.

யம்மன் கோவில்களில் சிலம்பைத் தவிர வேறு உருவங்கள் வழிபாட்டிற்காக அமையவில்லை.

"தமிழகத்தில் கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்த வைபவத்தில் பிரசன்னமாயிருந்து திரும்பியதும் முதன் முதலாக அங்கனாக் கடவையில் கண்ணகிக்கு ஆலயமும் விழாவும் எடுப்பித்துத் தனது உருவச்சிலையை ஆலய முற்றத்தில் நிறுவினன் என்று 'புராதன யாழ்ப்பாணம்' என்னும் நூலில் முதலியார் சி. இராசநாயகம் அவர்கள் கூறிப் போந்தனர்.

"இங்குக் குறிப்பிட்ட கயவாகுவின் உருவச்சிலை யாழ்ப் பாணத்தில் சர் போல் ஈபீறிஸ் அவர்கள் நடத்திய புதை பொருள் ஆராய்ச்சியில் தலை வேறாகவும் உடல் வேறாகவும் உடைந்து காணப்பட்டமையின், யாழ்ப்பாணம் அரும் பொருட்சாலைக்கு அனுப்பப்பட்டது. கயவாகு மன்னன் நாடெங்கும் பத்தினிக்குக் கோயிலும் விழவுஞ் செய்தல் வேண்டுமெனக் கட்டளையிட்டதையிட்டு, யாழ்ப்பாணத்தி லும் ஆலயங்கள் எழுந்தனவென்றும் வேலம்பரவையிலுள்ள கண்ணகிக் கோயில் அக் காலத்தில் முதலில் அமைக்கப் பட்டதென்றும்; அதற்குப் பின்பு கட்டப்பட்டவைகளே களை யோடை, அங்கனான் கடவு முதலிய இடங்களில் உள்ளவை என்றும் 'யாழ்ப்பாண சரித்திரம்' என்னும் நூலில் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை கூறியுள்ளார்."[3]

---

3. 'தினகரன்', 13-7-62—திரு. ம. பொ. செல்வரத் தினம் அவர்கள் எழுதிய கட்டுரை. இலங்கை அரசினர் தமிழில் நடத்தும் 'ஸ்ரீலங்கா' என்னும் திங்கள் தாளிலும் இக் கட்டுரை இவ்யாண்டு 9ஆம் இதழில் வெளிவந்துள்ளது. இலங்கையில் கண்ணகி வழிபாடு பற்றிய எல்லா விவரங்களை யும் எனக்கு உதவிவரும் வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் அவர்கட்கு எனது உளமார் நன்றி உரியது.

**நூற்றுவர் கன்னர்**

செங்குட்டுவன் வடநாடு சென்ற பொழுது **நூற்றுவர் கன்னர்** என்னும் பெயர் கொண்ட மன்னன், கங்கை யாற்றைக் கடக்க உதவி புரிந்தனன் என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது. **சாதகர்ணி** என்னும் வடமொழிப் பெயரின் மொழி பெயர்ப்பே **நூற்றுவர் கன்னர்** என்பது. **சாதகர்ணிகள்** என்று அழைக்கப்பட்டவர், 'சாதவாகனர்' என்ற ஆந்திரப் பேரரசரேயாவர். அவர்கள் ஏறத்தாழக் கி. மு. 235 முதல் கி. பி. 220 வரையில் நடு இந்தியாவின் பெரும்பகுதியை ஆண்டவராவர்.[4] அவருட் சிலர் காலங்களில் ஆந்திரர் ஆட்சி கங்கை வரையிற் பரவியிருந்தது. அச் சிலருள் ஒருவனான **கௌதமீபுத்திர சாதகர்ணி** என்ற ஆந்திரப் பேரரசன் பெரும் புகழுடன் வாழ்ந்திருந்த காலம்தான் (கி. பி, 106—130) கயவாகுவின் காலத்தோடு (கி. பி. 114—136) பொருந்துகிறது. அக்காலத்தில் கங்கைக்கு வடபால் சிறு சிறு நாடுகள் அரசால் ஆளப்பட்டுவந்தன என்பதும் வரலாறு கண்ட உண்மை.

**ஒரே காலத்தவர்**

சிலப்பதிகார ஆசிரியரான **இளங்கோவடிகள் செங்குட்டுவனுக்குத் தம்பியாவார்** என்று சிலப்பதிகாரம் வரந்தரு காதை (வரி 171—183) தெளிவாகத் தெரிவிக்கின்றது. செங்குட்டுவன், இளங்கோ ஆகிய இருவர் காலத்திலும் **மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்** வாழ்ந்தனர் என்று சிலப்பதிகாரமே (காட்சிக் காதை) செப்புகிறது. மேலும்,

> **''உரைசால் அடிகள் அருள மதுரைக்**
> **கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்''**

என்று சிலப்பதிகாரப் பதிகமும்,

---

4. R. Satyanatha Aiyar, History of India, Vol. I, pp. 206—207.

''இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திற மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனென்''

என்று மணிமேகலையின் பதிகமும் அவ்விருவரும் ஒரே காலத்தவர் என்பதை உறுதிப்படுத்துகின்றன. எனவே, கயவாகுவின் காலம் என்று துணியப்பட்ட கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியே சிலப்பதிகாரம் செய்யப்பட்ட காலம் என்று கொள்வது பொருத்தமாகும்.

**பேராசிரியர் கூறும் தடைகள்**

சிலப்பதிகாரம் கி. பி. 500க்குப் பிற்பட்டதாகும் என்பதற்குப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் கீழ் வரும் காரணங்களைக் கூறியுள்ளனர் :

1. இளங்கோவடிகள் செங்குட்டுவன் தம்பி என்பது கூறப்படுகிறது. அதற்கு மணிமேகலையிலோ பதிற்றுப் பத்திலோ சான்றில்லை.

2. பத்தினி விழாவின்போது இலங்கைக் கயவாகு வேந்தன் சேரநாடு வந்திருந்தான் என்பதற்குச் சிலப்பதிகாரம் தவிர மணிமேகலை முதலிய வேறு நூல்களில் சான்றில்லை; இலங்கை வரலாறு கூறும் மகாவம்சத்திலும் கூறப்பட வில்லை; கி. பி. 16ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற 'இராசவழி' என்னும் நூலில்தான் கூறப்பட்டுள்ளது.

3. இளங்கோவடிகள் செங்குட்டுவன் தம்பியாயிருப்பின் அவர் காலம் சங்க காலமாகும். அவர் பாடிய பாடல் ஒன்றேனும் தொகை நூல்களில் இல்லை. அவர் மணிமேகலை பாடிய சாத்தனார் தவிர வேறு சங்கப் புலவர்களை அறிந்தவர் என்பதற்குச் சான்றில்லை.

4. மணிமேகலை ஆசிரியரான சாத்தனார் சீத்தலைச் சாத்தனாரல்லர். அவர் அரசு கட்டிலில் துஞ்சிய நெடுஞ்-

செழியன் காலத்தவர். இந் நெடுஞ்செழியன்மீது ஒரு சங்கப் புலவரும் பாடவில்லை. எனவே, இந்நெடுஞ்செழியனை உண்மை அரசன் என்று கொள்வதற்கில்லை.

5. பத்தினி வணக்கம் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளதே தவிரப் பிற தொகை நூல்களில் கூறப்படவில்லை.

6. கண்ணகியால் குறிக்கப்பட்ட கற்புடை மகளிருள் ஒருத்தி கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பதற்குச் சான்றில்லை. ஏனைய பத்தினிப் பெண்களும் பிற தொகை நூல்களில் குறிக்கப்படவில்லை.

7. சிலப்பதிகாரத்தில் வேங்கடமலையில் திருமால் நின்ற கோலத்தில் இருப்பதாகச் சிலப்பதிகாரம் செப்புகிறது. ஆயின், தொகை நூல்களில் வேங்கடமலை சமயத் துறையில் சிறந்ததாகக் கூறப்படவில்லை. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கூறப்பட்டுள்ள சமய வளர்ச்சியைத் தொகை நூல்களில் காணுமாறு இல்லை. ஐந்தெழுத்தும் எட்டெழுத்தும் தொகை நூல்களில் கூறப்படவில்லை.

8. 'காவிரி' என்னும் பெயரே 'காவேரி' என்று சிலப்பதிகாரத்தில் மாறி வழங்கப்பட்டமையே சிலப்பதிகாரம் பிற்பட்டது என்பதை உணர்த்துகிறது. காவிரி பற்றிய புராண கதையும் மணிமேகலையில் காணப்படுகிறது.

9. அகநானூற்றில் காணப்படும் திருமண முறைக்கும் கோவலன் கண்ணகி திருமண முறைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

10. தொகை நூல்களில் கூத்தர், விறலியர் நடனங்களே கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தில் வந்துள்ள மாதவியின் நடன அரங்கேற்றம் பரத நாட்டியத்தைப் பின்பற்றியது.

11. வரிப்பாட்டு முதலிய பாடல்கள், சிலப்பதிகாரம் தொகை நூல்களுக்குப் பிற்பட்ட வளர்ச்சியை உணர்த்துவனவாகும்.

12. பார்ப்பனி கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை பஞ்சதந்திரத்தைச் சேர்ந்தது. அதனைக் கூறும் சிலப்பதிகாரம் மிகவும் பிற்பட்டதாகும்.[5]

## தடைக்குரிய விடைகள்

இனி, இத் தடைகள் பொருந்துவனவா என்பதை ஒவ்வொன்றாக எடுத்து இங்கு ஆராய்வோம்.

1. இளங்கோவடிகள் செங்குட்டுவனுக்கு இளவல் என்பதை, இளங்கோ துறவு பூண்ட வரலாற்றை எடுத்துக் கூறித் தெய்வம் விளக்கியதாக இளங்கோவடிகளே மிகத் தெளிவாக வரந்தரு காதையில் பன்னிரண்டு வரிகளில் (171—183) கூறியுள்ளார். இந்நிலையில் மணிமேகலையின் சான்றோ, பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தின் சான்றோ இதற்குத் தேவையில்லையே! மணிமேகலையிலோ ஐந்தாம் பத்திலோ இந்த உறவு முறையைக் கூறத்தக்க வாய்ப்பும் இல்லையே!

2. செங்குட்டுவன் இயற்றிய பத்தினி விழாவை முதன் முதல் எடுத்துக் கூறிய இளங்கோவடிகள் அதற்கு வந்திருந்த மாளுவ வேந்தரையும் கயவாகுவையும் குறிப்பிட்டார். இம் மாதிரியே மணிமேகலையிலும் குறிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தல் உண்டா? அங்ஙனம் குறிக்கப்படாமையால் இஃது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று என்று கூறுவது பொருத்தமாகுமா? இலங்கை வரலாற்று நூல்களுள் காலத்தால் முற்பட்ட மகாவம்சத்தில் கயவாகு பத்தினி விழாவிற்கு வந்திருந்தது குறிக்கப்படவில்லை என்பது உண்மையே. ஆயின், பின் நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட இராசவழியில் அச்செய்தி குறிக்கப்பட்டுள்ளது. கயவாகு வந்தமை சிலப்பதிகாரத்தில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. ''அது கேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு

5. History of Tamil Language and Literature, pp. 143-152.

நாள் பலிப்பீடிகைக் கோட்டம் முந்து உறுத்து, 'ஆங்கு அரந்தை கெடுத்து வரம் தரும் இவள்' என ஆடித்திங்கள் அகவையின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப, மலை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று;''

என்று இளங்கோ அடிகள் உரைபெறு கட்டுரையில் உரைத்துள்ளார்.

கயவாகுவின் காலத்தில் அநுராதபுரம் தலைநகராய் இருந்தது. அவன் அதனில் ஆடிமாதத்தில் (ஜூலை-ஆகஸ்டு) பத்தினி விழாக் கொண்டாடியிருத்தல் வேண்டும்.[6]

---

6. According to Silappatikaram, King Gajababu on his return to Ceylon raised temples and altars to make daily offerings to Pattini-Devi and instituted the conduc ting of grand and gorgeous processions along the streets of his capital city of Anuradhapura in the month of Adi (July-August). The annnal perahera now conducted at Kendy is obviously a continuance of the festival of Pattini-Devi. It would be interesting to note that the present Kandy Perahera always begins in the month of Adi (July-August) as stated in the Tamil classical poem of Silappatikaram.

This common worship of Pattini-Devi by both the Sinhalese and the Tamils appears to have engendered a certain amount of religious and cultural fellow-feeling between the two communities. The classical name Pattini-Devi is largely in use among the Sinhalese and Tamil name Kannaki Devi or Kannakai Amman among the Tamils —T. Sadasiva Iyer, Vasanthan Kavithirattu, Int. pp. 16-17.

இலங்கையில் கயவாகு வேந்தன் கட்டிய கண்ணகியின் கோவிலிலிருந்து அவனது உடைந்த சிலை கண்டெடுக்கப் பட்டது. கண்ணகியின் சிலை இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்டு இங்கிலாந்து பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் கண்ணகிக்குக் கோவிலோ விழாக்களோ இன்று இல்லை. ஆயின், இலங் கைத் தமிழரும் சிங்களவரும் ஆண்டுதோறும் பத்தினிக்கு இன்றும் விழா எடுக்கின்றனர். இச்செய்திகள் அனைத்தும் கயவாகுவுக்கும் பத்தினி வணக்கத்திற்குமுள்ள தொடர்பை ஐயமற விளக்குகின்றன அல்லவா?[7]

3. இளங்கோவின் தனிப்பாடல் எதுவும் தொகை நூல் களில் இல்லை என்பதனாலேயே அவர் காலத்தால் பிற்பட்ட வராவரோ? முல்லைப்பாட்டைப் பாடிய காவிரிப்பூம்பட்டி னத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் எட்டுத் தொகை நூற்களில் ஒரு பாடலையும் பாடினார் என்பதற்குச் சான்றில்லை. இது கொண்டு இவர்காலம் பிற்பட்டதென்று கூறலாமா? அடிகள் சேரநாட்டுச் சமணத் துறவியார். அவ ருடன் நெருங்கிப் பழகியவர் சாத்தனார் ஒருவரே போலும்!

---

7. (1) "Gajababu brought away from the Choli capital the most venerated relics of the chollans, the golden anklets, the image and the books used in the worship of goddess Pathini. The origin of the Devalas in Ceylon and of the Pathini ceremonies now current among the Kapuvas of Ceylon can be traced to this time. Gajababu has ever since become a national hero."—W.A. de Silva, Ceylon National Review for Jan, 1907.

(2) இலங்கையில் பத்தினி வணக்கம் பற்றிய விவரங் களை அறிய திரு. M. D. இராகவன் என்பார் எழுதியுள்ள பத்தினி வணக்கம் பற்றிய ஆங்கிலக் கட்டுரையை Ethnological Survey of Ceylon No. 3. 1951 என்னும் வெளியீட்டிற் காணலாம்.

அதனாற்றான் சாத்தனார் முன்னிலையில் சிலப்பதிகாரம் அரங்கேற்றப் பெற்றது; அடிகள் முன்னிலையில் மணி மேகலை அரங்கேற்றப் பெற்றது.

4. மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் நெடுஞ் செழியன் காலத்தவர் என்பது உண்மையே. அவர் பாடிய பாடல் எதுவும் தொகை நூல்களில் இல்லை. எனினும் அது கொண்டு அவர்காலத்தால் பிற்பட்டவர் என்பது எங்ஙனம் பொருந்தும்?

சாத்தனார் காலத்தவன் நெடுஞ்செழியன் என்ற பாண்டியன். அவன் பேராசிரியர் குறிப்பிட்டபடி 'அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் மட்டும் அல்லன், வட ஆரியர் படை கடந்த நெடுஞ்செழியன் என்றும் பெயர் பெற்றவன்' என்று இளங்கோவடிகளே மதுரைக் காண்டத்தின் இறுதிக் கட்டுரையில் தெளிவாய்க் கூறி யுள்ளார். இந்த ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ''உற்றுழி உதவியும்'' என்று தொடங்கும் கல்வியின் மேம்பாடு பற்றிய செய்யுளொன்றைப் பாடியுள்ளான். அப்பாடல் புறநானூற்றில் (183) இடம் பெற்றுள்ளது. உண்மை இங்ஙனம் இருப்ப, இவன் கற்பனை அரசன் என்று பேராசிரியர் அவர்கள் எங்ஙனம் கூறத்துணிந்தார்களோ, தெரியவில்லை.

5. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் பத்தினி வணக்கம் வேறு தொகை நூல்களில் கூறப்படவில்லை என்பது உண்மையே. சங்கநூற் பாடல்கள் முழுமையும் நமக்குக் கிடைக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை யாகும். அழிந்துபட்ட பாடல்களுள் பத்தினி வணக்கம் பற்றிய பாடல்கள் இடம் பெற்றிருக்கலாம். இன்றுள்ள தொகை நூல்களில் பத்தினி வணக்கம் இல்லை என்பது கொண்டு சிலப்பதிகார காலம் பிற்பட்டது என்று கூறுதல் எங்ஙனம் பொருந்தும்? சிலப்பதிகாரத்திற்குப் பின்பு செய்யப் பட்ட நூல்களிலும் இப்பத்தினி வணக்கம் குறிக்கப்பட

வில்லையே! அதனால் சிலப்பதிகாரம் தமிழ் நூல்கள் அனைத்திற்கும் காலத்தாற் பிற்பட்டது என்று கூறுதல் பொருந்துமா?

6 கண்ணகியால் குறிக்கப்பட்ட பத்தினிப் பெண்கள் பிற தொகை நூல்களில் இடம் பெறவில்லை என்பது உண்மையே. இன்றும் நம்நாட்டில் அறிவிலும் ஒழுக்கத்தி லும் உயர்ந்தவர் பலர் உளர். எவரேனும் ஒருவர் அவர் களைப் பற்றிக் கூறினால் அல்லது எழுதினால் மட்டுமே அவர்களைப் பற்றிப் பிறர் அறிய வாய்ப்பு உண்டாகும். அவர்களை நேரில் அறியாதவர்கள் அவர்களைப் பற்றிப் பேசவோ, பாடவோ வாய்ப்பு உண்டாவதில்லை. இங்ஙனமே கண்ணகியால் அறியப்பட்ட பத்தினிப் பெண்டிர் பிறர்க்குத் தெரியாதிருக்கலாம். அவள் குறித்த அறுவருள் ஆதிமந்தி பற்றிய செய்தி பரணராலும் வெள்ளி வீதியாராலும் (அகம் 45) பல பாடல்களில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதிமந்தி பரணர் ஒருவராலேயே பல செய்யுட்களில் பேசப்பட்டுள்ளாள் (அகம்-76, 222, 236, 376, 396). கரிகாலன் முன்னிலை யில் கழாஅர்த்துறையில் நடனமாடியபோது அவள் கணவன் ஆற்று நீரால் இழுத்துச் செல்லப் பெற்றான் என்று பரணர் குறித்துள்ளார். அந்த ஆதிமந்தி வரலாற்றையே அவளது பெயர் கூறாமல் செயலை மட்டும் கூறி, அவள் கரிகாலன் மகள் என்று இளங்கோவடிகள் வஞ்சினமாலையில் (வரி 11-15) கூறியுள்ளார்.

புலவர் சிலர் கூறாது விட்ட உறவுமுறையை அவர் காலத்துப் புலவரோ பிற்காலப் புலவரோ குறிப்பது தவ றன்றே! மேலும் கரிகாலனை அடுத்து வாழ்ந்தவர் இளங்கோ அடிகள். அவர் சேர அரசமரபினர். அவரே, 'சேர அரச மகன் (வஞ்சிக்கோன்) ஒருவன் மனைவியே கரி காலன் மகள்' என்று கூறித் தொகைநூற் பாடல்களிற் கூறப் பட்டுள்ள ஆதிமந்தியின் கற்பின் திறத்தைக் கூறியுள்ளார். எனவே, அவரால் குறிக்கப்பட்டது ஆதிமந்தி வரலாறு என்று கோடலே பொருத்தமுடையது.

7. சங்க காலத்தில் வேங்கடம் மாமூலனாரால் ''விழவுடை விழுச்சீர் வேங்கடம்'' (அகம் 61) என்று கூறப்பட்டுள்ளது. எனவே, வேங்கடமலையில் விழாக்கள் நடைபெற்றுவந்தன என்பது இதனால் தெரிகின்றதன்றோ! மலை மீது விழாக்கள் நடைபெற்றன என்பது கொண்டு, அங்குக் கோவில் இருந்தது என்பதை எளிதில் அறியலாமன்றோ! உண்மை இங்ஙனம் இருப்ப, சங்ககால வேங்கடம் சமயச் சிறப்புப் பெற்றிருக்கவில்லை என்று பிள்ளையவர்கள் கூறியிருப்பது உண்மைக்கு மாறுபட்டதாகும் மாமூலனார் அகப்பொருள் பற்றிய பாடலில் ஓர் எடுத்துக்காட்டுக்காக இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஆதலால் வேங்கடத்தில் எந்தகைய கோவில் இருந்தது என்று அவர் கூறவில்லை. அதனால் வேங்கடத்தில் கோவில் இல்லை என்று முடிவு கட்டுதல் தவறு. கோவிலைப்பற்றிப் பேசவேண்டிய இடம் அதுவன்று; ஆதலின் அவர் பேசவில்லை. கோவிலைப் பற்றிக் கூறவேண்டிய இடத்தில் மாங்காட்டு மறையவன், தன் கண்ணாற் கண்டு வழிப்பட்ட வேங்கடத்தானது நின்ற கோலத்தைத் தான் கண்டவாறு கூறியதாக அடிகள் சிலப்பதிகாரத்தில் சிறப்பித்து மகிழ்ந்தனர் என்று கோடலே ஏற்புடையது.

காவிரிப்பூம்பட்டினத்தில் சிறப்பாக இந்திரவிழா நடைபெற்றதைச் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் விரிவாகக் கூறியுள்ளன. இதே இந்திரவிழவு சிற்றூரிலும் அக்காலத்தில் நடைபெற்றுள்ளது என்பதை ஐங்குறுநூற்றுச் செய்யுள் ஒன்று (62) குறித்துள்ளது. ஆயின் அதுபற்றிய பிற விவரங்கள் அச்செய்யுளில் இல்லை. ஏன்? அப்பாடல், குறிப்பிட்ட ஓர் அகப்பொருள் கருத்தைக் கூறவந்ததே தவிர இந்திர விழாவினை விளக்கப் பாடப்பட்டதன்று. இவ்வாறே ஒவ்வொரு தொகை நூற்பாடலும் குறிப்பிடப்பட்ட அகப்பொருள் அல்லது புறப்பொருள் கருத்துக்காகப் பாடப்பட்டது. சிலப்பதிகாரம் கோவலன்-கண்ணகி வரலாறு கூறும் பெரிய காப்பியம். ஆதலின் தலைவன்—தலைவியர்

காலச் சமயச் செய்திகளையும் பிறவற்றையும் விரிவாக எடுத்துக் கூற ஆசிரியருக்கு வாய்ப்பு மிகுதியாகக் கிடைத்துள்ளது. மணிமேகலை பௌத்த சமயத்தைப் பற்றிய காவியம் ஆதலின் அதன்கண் பௌத்த சமயச் செய்திகள் நிரம்பப் பேசப்பட்டுள்ளன. காவியப் பாத்திரங்கட்கேற்ப—நிகழ்ச்சிகட்கும் ஏற்பச் சமயச் செய்திகளோ பிறவோ காவியத்தில் விரித்துப் பேசப்படல் இயல்பு. இந்த வேறுபாட்டை உள்ளங்கொள்ளுதல் வேண்டும். இதனாற்றான் தொகைநூற் பாடல்களில் சமயச் செய்திகள் விரிவாகப் பேசப்படவில்லை; காப்பியத்தில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

8. 'சிலப்பதிகாரத்தில் காவிரி—காவேரி என்று சொல்லப்பட்டது. இதனாலும் சிலப்பதிகாரகாலம் பிற்பட்டது என்பது தெளிவு,' என்று பிள்ளையவர்கள் கூறியுள்ளனர். சிலப்பதிகாரம் கானல்வரியில், பாட்டைப் பாடுவோர் 'காவேரி' என்று காவிரியை அழைத்ததாக இளங்கோவடிகள் குறித்துள்ளாரே தவிர, பிற எல்லா இடங்களிலும் 'காவிரி' என்றே குறித்துள்ளமை நோக்கற்பாலது. சிலப்பதிகாரம் நாடகக்காப்பியம். ஆதலின் அவரவர் கையாளுகிற சொற்களை அவரவர் பேச்சில் அல்லது பாடலில் வைத்து வழங்குதல் உண்மைப் புலவர் இயல்பாகும். இளங்கோவடிகள் இம்முறையையே பின்பற்றியுள்ளார். கோவலன் யாழை வாங்கிக் 'காவேரி' என்று அழைத்துப் பாடத் தொடங்குகிறான் என்பதைக் கூறும் இடத்திலும் இளங்கோவடிகள்,

> ''காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப்பாணியும்
> மாதவிதன் மனமகிழ வாசித்தல் தொடங்குமன்''

என்று கூறியிருத்தல் கவனிக்கத்தகும்.

முருகன் கனவிற் கூறியபடி அரசன் ஓர் ஊரின் கிணற்றிலிருந்து வேலை எடுத்துத் தன் பகைவனை வென்றான். வேல் எடுக்கப்பட்ட கிணற்றைக்கொண்ட ஊர் ''வேலூர்''

எனப் பெயர்பெற்றது என்று சங்க நூலான சிறுபாணாற்றுப் படையிலேயே (வரி 172-173) புராணகதை இடம் பெற்றுள்ளதைப் புலவர் அனைவரும் அறிவர். சமயத்தொடர்பான இத்தகைய கதைகள் சங்க காலத்திற்குப் புதியவை அல்ல என்பதைப் புறநானூற்றுப் பாடல்களாலும் (174 முதலியன) அறியலாம். இங்ஙனமே காவிரி பற்றிய புராண கதையும் எனக்கோடலே ஏற்புடையது.

9. நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் நகரத்துப் பழக்கவழக்கங்களுக்கும், சிற்றூர்ப் பழக்கவழக்கங்களுக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. நம்மிடையே புரோகித மணம் வழக்கிற்கு வந்து பல நூற்றாண்டுகள் ஆயினும், இன்றும் புரோகிதர் இன்றியே திருமணம் செய்யும் தமிழர் பலர் இத் தமிழ்நாட்டில் உண்டு. நகரத்தில் நடைபெறும் புரோகித மணமும், சிற்றூர்களில் நடைபெறும் புரோகிதன் அற்ற மணமும் இந்த நூற்றாண்டுப் புலவர் இருவரால் பாடப்படுகின்றன என்று கொள்வோம். 21ஆம் நூற்றாண்டில் இப்பாடல்களைக் காணும் அறிஞர் ஒருவர், இவ்விரண்டிற்கும் வேறுபாடு காணப்படலால் இவ்விரண்டும் வெவ்வேறு காலத்தன என்று கூறுதல் எங்ஙனம் பொருத்தமற்றதோ, அங்ஙனமே பிள்ளையவர்கள் முடிவும் பொருத்தமற்றதாகும். மேலும், கோவலன் திருமணச் செய்திகள் சமண முறைப்படி அமைந்தவை என்பது அறிஞர் சிலர் கருத்தாகும்.

10. மேலே திருமணம் பற்றிக் கூறப்பெற்ற மறுப்பே இதற்கும் பொருத்தமாகும். 'பரதசாத்திரம் கி. மு. 2ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 2ஆம் நூற்றாண்டிற்கு உட்பட்ட காலத்தில் இப்பொழுது காணப்படும் உருவை அடைந்திருக்கலாம்' என்று அறிஞர் கூறுகின்றனர்.[8] எனவே, கி. பி. 2ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் செய்யப்பெற்ற சிலப்பதிகாரத்தில் பரதநாட்டியம் பற்றிய செய்திகள் இருத்தலில் வியப்பில்லை அன்றோ?

8. கலைக்களஞ்சியம் 6, பக். 746.

11. சிலப்பதிகாரம் **பொதுமக்கள் காப்பியம்—நாடகக் காப்பியம்.** ஆதலால் அதன்கண் ஆற்றுவரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, ஊசல் வரி, அம்மானை முதலிய பலவகைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தொல் காப்பியம் — செய்யுளியலையும் அதன் உரைகளையும் காண் போர் இப்பாடல்கள் செய்யுளியற் செய்திகட்கு உட்பட்ட வையே என்பதை எளிதில் உணர்தல் கூடும்.

12. பார்ப்பனி கீரிப்பிள்ளையைக் கொன்றது பஞ்ச தந்திரக்கதையில் சொல்லப்பட்டுள்ளது என்பது ஒரு வாதம். **பஞ்சதந்திர நூலைப்பற்றிய உண்மை வரலாறு கிடைக்க வில்லை.** அதன் உருவம் காலப்போக்கில் மாறுதல் அடைந்ததா இல்லையா என்பதும் விளங்கவில்லை. அது பாரசீக அரசன் கொச்ரௌ அனோஷர்வன் (கி.பி.531-579) என்பவனால் பஹ்லவி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள் ளது. இவ்வாறு பிற நாட்டினரின் மதிப்பைப்பெறும் பெருமையை இந்நூல் அடைவதற்கு இந்நிலையில் நூறு ஆண்டுகளாவது சென்றிருக்க வேண்டுமாதலின் இது கி. பி. 5ஆம் நூற்றாண்டில் எழுதியிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். உபகதைகள் பல பௌத்த மத நூல்களில் காணப்படுகின்றன. **புத்தரின் ஜாதகக் கதைகள் கூறும் நூல்களில் உள்ள உபகதைகளைத் தழுவி எழுந்த கதை நூல்களில் பஞ்சதந்திரம் சிறப்பானது.**[9]

பிள்ளையவர்கள் கூறும் பஞ்சதந்திரக் கதைகளே புத்த சாதகக் கதைகள் முதலிய நூல்களிலிருந்து எடுக்கப் பட்டவை. எனவே, ஒவ்வொரு கதையின் காலம் இன்னது என்று எவராலும் கூறுதல் இயலாது. கீரிப்பிள்ளையின் கதை பஞ்சதந்திர நூல் உண்டாவதற்கு முன்னரே நாட்டில் வழங்கப்பட்ட கதையாய் இருக்கலாம். அது கோவலனோடு தொடர்புண்ட கதையாயிருந்து வடநாட்டுக் கதைகளில் உரு மாறியும் இருக்கலாம்.

---

9. கலைக்களஞ்சியம் 6, பக். 643.

மிகத்தெளிவாகத் தெரியும் கயவாகு வேந்தன் காலத்தைக் காற்றில் பறக்கவிட்டுக் காலமே ஐயத்திற்கு இடமாகக் கூறத்தகும் பரிதாப நிலையிலுள்ள சான்றுகளைக் காட்டிச் சிலப்பதிகாரம் பிற்பட்டது எனக் கூறுதல் சிறிதும் பொருந்தாததாகும்.

தொகைநூற் பாடல்கள் சிலப்பதிகார காலத்தில் மட்டும் பாடப்பட்டவை அல்ல; அதற்கு முன்னும் பின்னும் பாடப்பட்டவை. அவை அகப் பொருள் புறப்பொருள் பற்றிய செய்திகளைக் கூற எழுந்த தனிப்பாக்களின் தொகுப் பாகும். சிலப்பதிகாரம் ஒரு பெரிய காவியம். அதனைப் பாடிய ஆசிரியரோ சமணத்துறவியார். சமணசமயம் வட நாட்டில் தோன்றியது. ஆதலால் சமண நூல்கள் வட மொழியில் எழுதப்பட்டன. எனவே, சமண சமயத் தொடர் பான செய்திகளும் அச்சமயத் தொடர்பான பெயர்களும் வடசொற்களில் அமைந்திருத்தல் இயற்கையேயாகும். இளங்கோ அடிகள் பரதநாட்டிய உண்மைகளை விவரமாகக் கூறுவதிலிருந்தும் அவரது வடமொழி அறிவை நாம் நன்கு அறியலாம்.

சேரநாடு மலைநாடு ஆதலால் தமிழ் நாட்டுடன் மிகுந்த தொடர்பு உடையதாக அமையவில்லை. அந்நாட்டில் வட மொழியின் செல்வாக்குச் சங்ககாலத்திலேயே மிகுந் திருந்தது. சேர மன்னர் வைதிக நெறியைப் பின்பற்றிப் பிற தமிழரசரை விட மிகுதியாக வேதவேள்விகள் செய்தனர்! வடமொழியாளரை நன்கு ஆதரித்தனர். சோழ பாண்டிய நாடுகளைவிடச் சேரநாடு வடமொழியை நன்கு ஆதரித்தது. நாம் இவற்றைப் பதிற்றுப்பத்தால் அறியலாம். இங்ஙனம் வைதிகநெறியிலும் சமணத்திலும் வடமொழி தனியரசு செலுத்தியமையால், சேரநாட்டு இளங்கோவடிகள் அச் சமயங்களைப் பற்றிக் கூறிய இடங்களிலெல்லாம் வடசொற் களைப் பெய்து வைத்தார் என்பது பொருந்தும்.

சிலப்பதிகாரம் குடிமக்கள் காப்பியம் ஆதலால்

ஆசிரியர் அதனைச் சிறிது இளகல் நடையில் பாடினார் எனக் கொள்வது பொருத்தமாகும்.

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டில் மறைமலையடிகள் திருவொற்றியூர் முருகன் மும்மணிக்கோவை பாடியுள்ளார். அஃது ஏறத்தாழச் சங்ககால நடையை ஒத்துள்ளது. அவர் காலத்தில் வாழ்ந்த பாரதியார் பாடல்கள் எல்லோருக்கும் புரியத் தகும் முறையிலும் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்த நிலையிலும் அமைந்துள்ளன. நூறு ஆண்டுகள் கழித்து இவ்விரு பாடல்களையும் ஆராய்ச்சி செய்யும் ஒருவர், மறைமலையடிகள் பாடல்நடை மிடுக்கும் தூய்மையும் கொண்டுள்ளதால், அவர் பாரதியாருக்கு முற்பட்டவர் என்று கூறுதல் பொருத்தமாகுமா?

இவை அனைத்தையும் ஆழ நினைந்து பார்ப்பின், தொகைநூற் பாடல்களின் நடை மிடுக்கிற்கும் சிலப்பதிகார நடையின் மிடுக்கற்ற தன்மைக்கும் வடசொற்கள் மிகுதியாக இருத்தற்கும் அடிப்படைக் காரணங்கள் நன்கு புலனாகும். மிடுக்குத் தளர்ந்த நடையையும் சொற்கள் மிகுதியையுமே கொண்டு, காலத்தை உணர்த்தும் வரலாற்று உண்மைகளை அறவே கைவிட்டுச் சிலப்பதிகாரம் தொகை நூல்களுக்குப் பிற்பட்டது என்று எளிதில் முடிபு கூறுதல் ஆராய்ச்சி அறமாகாது.

## (2) சிலப்பதிகாரம்

### காவியத்தின் சிறப்பு

சிலப்பதிகாரம் ஆசிரியப்பாவால் அமைந்த முப்பது நீண்ட பாடல்களைக் கொண்ட பெருநூல். ஒவ்வொரு நீண்ட பாடலும் ஒரு **காதை** எனப்படும்.

கோவலனும் கண்ணகியும் சோழநாட்டுப் புகார் என்ற காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்து வளர்ந்தனர்; பின்பு வறுமையுற்று வாணிகம் செய்யப் பாண்டியநாட்டு

மதுரைக்குச் சென்றனர். கோவலன் மதுரையிற் கொலையுண்டான். கணவனை இழந்த கண்ணகி சேர நாட்டிற்குச் சென்றாள்; அங்கிருந்து விண்ணகம் புகுந்தாள்; அதனால் சேர நாட்டுத் தலைநகரான வஞ்சியில் இருந்த செங்குட்டுவனால் வணங்கப்பட்டாள். எனவே, கோவலன்-கண்ணகி வரலாறு சேர, சோழ, பாண்டிய நாடுகளோடும், அந்நாடுகளின் தலைநகரங்களோடும், அந்நாட்டு மன்னர்களோடும் தொடர்புடையதாயிற்று. தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளே மிக்க சிறப்புடையவை. அச்சிறப்புடைய நாடுகள் மூன்றும் இவ்வரலாற்றில் பிணைக்கப்பட்டு விட்டன. அதனால் இவ்வரலாறு புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று பெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் உள்ள **வேட்டுவவரி** என்னும் பாடலால் பாலைநில மக்களுடைய பண்புகளையும், **ஆய்ச்சியர் குரவை** என்னும் பாடலால் முல்லைநில மக்களுடைய பண்புகளையும், **குன்றக்குரவை** என்னும் பாடலால் குறிஞ்சிநில மக்களுடைய செயல்களையும் பிறவற்றையும் நாம் நன்கு அறியலாம். இந்நூலிலிருந்து **சைவம், வைணவம், சமணம்**என்னும் சமயங்களைப் பற்றிய செய்திகளையும் அறியலாம். காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும், அக்கால இசை-நடனக்கலைகளைப்பற்றிய செய்திகளையும் விழாக்களையும் மக்கள் பழக்க வழக்கங்களையும் அரசியலையும் தமிழர் நாகரிகத்தையும் பண்பாட்டையும் இந்நூலின் உதவி கொண்டு நன்கு தெளியலாம்.

இந்நூல் **இயல், இசை, நாடகம்** என்னும் முத்தமிழும் விரவப்பெற்றது; இனிய—எளிய நடையில் இயன்றது; உவகை, அவலம், வீரம் முதலிய ஒன்பான் சுவைகளையும் ஒருங்கே பெற்றது. இத்தகுதிகள் அனைத்தும் பெற்ற ஒப்பற்ற தமிழ்க்காவியம் என்று இதனைக் கூறலாம். அதனாற்றான் காலஞ்சென்ற கவியரசர் பாரதியார்,

''நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்'', என்று இதனைப் பாராட்டி மகிழ்ந்தார்.

### திருமணச் சடங்குகள்

கோவலன்—கண்ணகி திருமணத்தை வணிக மகளிர் யானைமீது அமர்ந்து ஊரார்க்கு அறிவித்தனர் என்ற செய்தி கவனிக்கத்தகும். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து குடி யேறிய பூவாளுர் (பூவலூர்)ச் செட்டிமாரிடை இவ்வழக்கம் அண்மைக்காலம் வரையில் இருந்துவந்தது என்பது தெரி கின்றது. இது பிற நூல்களில் காணப்படாத செய்தியாகும். அகநானூற்றுப் பாடல்கள் இரண்டனுள் கூறப்பட்ட திரு மணமுறை எளிமை வாய்ந்தது. கோவலன்— கண்ணகி திரு மணத்தில் மாமுது பார்ப்பான் வேதவிதிப்படி திருமணம் செய் தான்—மணமக்கள் தீவலம் வந்தனர்— முளைப்பாலிகை வைக்கப்பட்டு இருந்தது. எனவே, திருமணத்தில் வேதியர் நுழைவு கி. பி. 2ஆம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டுவிட்டது என்பது சிலப்பதிகாரத்தால் தெரிகின்றது.[10]

### நடனக்கலை

சிலப்பதிகாரத்தில் உள்ள அரங்கேற்று காதை அக்கால நடனக்கலை வளர்ச்சியை அறியப் பெருந்துணை செய்வ தாகும். அரங்கின் அமைதி, கூத்தியின் அமைதி, ஆட லாசிரியன் அமைதி, இசையாசிரியன் அமைதி, கவிஞன் அமைதி, தண்ணுமை ஆசிரியன் அமைதி, குழலோன் அமைதி, யாழாசிரியன் அமைதி, கூத்தி ஆடும் இயல்பு என்பன போன்ற பல செய்திகள் அரங்கேற்று காதையில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சேர நாட்டில் கூத்தச் சாக்கையன், சிவபெருமான் ஆடிய கொட்டிச் சேதம் என்னும் நடனத்தை நடித்தான் என்பதைக் கூறும் பகுதி

---

10. கோவலன் சிராவகன் ஆதலால் திருமணத்தை நடத்தியவன் சமண சமயத்துப் புரோகிதன் என்றும் அறிஞர் கூறுவர்.

படித்துப் படித்து வியத்தற்குரியதாகும் (காதை 28, வரி 67-77).

**இசைக்கலை**

பூம்புகாரின் கடற்கரையில் கோவலனும் மாதவியும் பாடிய **கானல்வரிப்** பாடல்கள் இசைக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இளங்கோவடிகள், தனித்திருந்த மாதவி யாழ் வாசித்த திறத்தினை வேனிற் காதையில் (வரி 23-44) கூறியுள்ளமை இக்கலையின் சிறப்பினை அறிவிக்கும் மற்றோர் சான்றாகும்.

**இந்திரவிழா**

மணிமேகலையிலும் சிலப்பதிகாரத்திலுமே இந்திரவிழா விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் இந்திர விழவூரெடுத்த காதையில் விழா நிகழ்ச்சிகள் தெளிவாய்த் தரப்பட்டுள்ளன. அவ்விழா இருபத்தெட்டுநாள் தொடர்ந்து நடைபெறுவது வழக்கம். விழா முடிந்த அடுத்த நாள் அனைவரும் கடலாடுதல் வழக்கம். அவ்விழாவில் மாதவி பலவகை நடனங்களை ஆடிக்காட்டினாள். சமயவாதிகள் தத்தம் சமயக்கொள்கைகள் பற்றி விரிவுரையாற்றினர். வடநாட்டினரும் இவ்விழாவைக் காண வந்திருந்தனர்.

**தமிழர் வீரம்**

செங்குட்டுவன் மான உணர்ச்சி மிகுந்த தமிழன்; கங்கைக்கு வடபால் இருந்த கனகன் விசயன் என்ற வேந்தர் தமிழர் ஆற்றலைப் பழித்துரைத்தனர் என்பதை முனிவர் வாயிலாய் உணர்ந்த செங்குட்டுவன் கடுஞ் சீற்றம் கொண்டான்; அவ்வேந்தரைத் தக்கவாறு தண்டிக்க விரும்பினான்; அவரைத் தண்டிக்கும் நோக்குடனேயே செல்வதாய் நூற்றுவர் கன்னர் விடுத்த அரசியல் தூதுவனிடமும் கூறினான்; தான் விரும்பியபடியே அவ்வேந்தரை வென்று அவர்தம் தலைகள்மீது பத்தினியின் உருவம் பொறிக்கத் தக்க சிலையை ஏற்றி வஞ்சிமாநகர்க்குக் கொண்டு வந்தான்.

இது சிலப்பதிகாரம் கூறும் செய்தியாகும். தாய் மொழிப் பற்று மிகுந்த இளங்கோவடிகள் இதனைப் பல இடங்களில் உணர்ச்சியோடு கூறியுள்ளார்.

## அக்காலப் பெருவழிகள்

காடுகாண் காதையில், மாங்காட்டு மறையவன், கொடும் பாளூரிலிருந்து மதுரைக்குச் சென்ற மூன்று வழிகளைக் கூறும் பகுதி மிக்க சுவையுடையது. கோவலனும் கண்ணகியும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கொடும்பாளூர் வரையில் சென்ற வழியும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறே, சேரன் செங்குட்டுவன் வஞ்சிமாநகரிலிருந்து கங்கையாறு வரையிலும் சென்ற பெருவழியும் கவனிக்கத்தக்கது. அக்காலத்தில் மாடலன் போன்ற மறையவரும் பிறரும் கங்கையிலிருந்து குமரிவரையிலும் தலயாத்திரை செய்தனர் என்பதனை நோக்க, வட இந்தியாவையும் தென்னிந்தியாவையும் இணைத்த பெருவழிகள் இருந்தன என்பது தெளிவாகும்.

## சிறப்புச் செய்திகள்

(1) திருமணம் முடிந்தவுடன் கோவலனும் கண்ணகியும் தனிக் குடித்தனம் வைக்கப்பட்டனர் (காதை 2). இவ்வழக்கம் இன்றும் நகரத்தாரிடம் இருந்து வருகின்றது. அவர்களும் பூம்புகாரிலிருந்து குடியேறியவராவர்.

(2) திருமண முடிவிலும் (காதை 1), வழிபாட்டு இறுதியிலும் (காதை 12, 17, 24) அரசனை வாழ்த்துதல் குடிகள் வழக்கம். யாத்திரிகர் ஒரு நாட்டு எல்லையுள் புகும்போது அந்த நாட்டு மன்னனை வாழ்த்திக்கொண்டே புகுதல் மரபு (காதை 11). மன்னனிடம் பேசுவோன் தன் பேச்சின் முன்னும் பின்னும் மன்னனை வாழ்த்துதல் மரபு; தன் பேச்சு நீண்டதாயின் பேச்சின் இடையிலும் மன்னனை வாழ்த்துதல் மரபு (காதை 27, 28).

(3) மனைவி, கணவனையே சிறப்புடைய கடவுளாக வழிபடுவாள் (காதை 9). அவள் அறவோர்க்கு அளித்தல்

அந்தணர் ஓம்பல், விருந்தெதிர்கோடல் ஆகியவற்றைத் தவறாது செய்வாள் (காதை 16).

(4) மழை பெய்வது தவறினும், உயிர்கள் யாதானும் ஒன்றால் வருந்தினும், அரசன் வெறுக்கப்படுவான். அதனால் குடிமக்களால் பாராட்டத்தகும் நிலையில் அரசுபுரிதல் துன்பந்தருஞ் செயலேயாகும் (காதை 25).

(5) வஞ்சி மாநகரில் பல நாட்டு ஒற்றரும் இருந்தனர் (காதை 25). சங்ககாலத்தில் ஒவ்வொரு பேரரசன் தலைநகரிலும் பல நாட்டு ஒற்றரும் இருந்தனர் என்பது இதனால் தெரிகின்றது.

(6) அக்காலத்தில் அரச முத்திரை யிடப்பெற்ற முடங்கல் (முடக்கப்பட்ட பனையோலை) 'மண்ணுடை முடங்கல்' எனப்பட்டது (காதை 26).

(7) அரசனுக்குக் குருவாய் அமைந்தவன் ஆசான் எனப்பட்டான். அவனும், பெருங்கணி, அறக்களத்து அந்தணர், காவிதிப்பட்டம் பெற்ற அமைச்சர்கள், மந்திரக் கணக்கர் என்பவரும் அரசனோடு அரசியலில் தொடர்பு கொண்டவர் ஆவர் (காதை 22).

(8) பாண்டியன் அரண்மனையில் பணியாளராய்க் கூனர், குறளர், ஊமர் இருந்தனர் (காதை 20). இவ்வாறே சேரன் அரண்மனையிலும் கூனர், குறளர், பேடியர் பணியாளராய் இருந்தனர் (காதை 28).

**இளங்கோவடிகள் சிறப்பு**

இளங்கோ அடிகள் சமணத்துறவியார்; குற்றமற்ற பண்பாடு உடையவர். கோவலனும் கண்ணகியும் இன்பம் துய்த்தனர் என்பதை,

**''தாரும் மாலையும் மயங்கிக் கையற்று''**

**(காதை 2 வரி 35)**

என்னும் தொடரைக்கொண்டு விளக்கிய திறம் அவரது குற்றமற்ற பண்பாட்டை நன்கு தெரிவிப்பதாகும்.

நூலாசிரியர் தமது இனம், நாடு, சமயம் என்னும் பற்று மிக்கவராய் நடுவுநிலை தவறிப் பிறநாடு, மொழி, சமயங்களைத் தமது நூலுள் இழிவுபடுத்தலாகாது. இது சிறந்த நூலாசிரியர் கடமையாகும். இச்சிறந்த கடமையுணர்ச்சி இளங்கோவடிகளிடம் வெள்ளிடைமலைபோல் விளக்கமாய்த் தெரிகின்றது.

(1) ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் அக் காண்டத்திற்குரிய நாட்டு மன்னர்களையும், அவர்தம் நாட்டையும், அவர்தம் சிறப்பியல்புகளையும், ஒருபடித்தாய்ப் பாடியுள்ளமை இளங்கோவடிகளின் நடுவுநிலைமைக்குச் சான்றாகும். அவர் புகார்க் காண்டத்தில் சோழரையும், மதுரைக் காண்டத்தில் பாண்டியரையும், வஞ்சிக் காண்டத்தில் சேரரையும் நடுவுநிலை பிறழாமல் பாராட்டியுள்ளமை படித்து இன்புறத்தக்கது.

(2) வேட்டுவ வரியில் பாலைநில மக்கள் கொற்றவையை வழிபடும் முறை மிகவும் விளக்கமாய்க் கூறப்பட்டுள்ளது. இளங்கோவடிகள் வேட்டுவராய் இருந்தே அக் காதையைப் பாடியுள்ளார் என்று கூறுவது பொருத்தமாகும்; இங்ஙனமே ஆய்ச்சியர் குரவையும் அமைந்துள்ளது. ஆய்ச்சியர் குரவையில் கீழ்வரும் செய்யுளைக் காண்க:

> ''மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
> கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
> படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
> நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
> நாராய ணாவென்னா நாவென்ன நாவே.''

சிறந்த வைணவர் உருக்கமாய்ப் பாடியுள்ளது போலச் சமணத்துறவியாகிய இளங்கோவடிகள் இதனைப் பாடியுள்ளதை நோக்க, அவரது உண்மை ஆசிரியப் பண்பு

குன்றின்மேலிட்ட விளக்கென ஒளிர்தலைக் காணலாம். அவர் இங்ஙனமே குன்றக் குரவையில் முருகனைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் விரிவாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார்.

கண்ணகி வரலாறு முழுமையும் கூறிய ஆசிரியர் வாழ்த்துக் காதையில் மூவேந்தர் ஆறுகளையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்; சோழன் சிறப்புக்களை அம்மானை வரியிலும், பாண்டியன் சிறப்புக்களைக் கந்துக வரியிலும், சேரன் சிறப்புக்களை ஊசல்வரியிலும் அமைத்துப் பாடியிருத்தல் அருமைப்பாடுடையது. வாழ்த்துக் காதையின் இறுதியில் அமைந்துள்ள வள்ளைப்பாட்டில் மூவேந்தர்களையும் பாராட்டியுள்ளமை அவரது நடுவுநிலைமையை மிகுத்துக் காட்டுகிறது.

கானல்வரிப் பாடல்கள் அடிகளாரது இசைப் புலமையினை நன்கு விளக்குவதாகும்; அரங்கேற்று காதைச் செய்திகளும் கூத்தச்சாக்கையன் நடனம் பற்றிய பகுதிகளும் ஆசிரியரது நடனக்கலை அறிவை நன்கு தெரிவிப்பனவாகும். மலைநாட்டில் கேட்கப்படும் ஓசைகள், மலைவாணர் செங்குட்டுவனுக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்த மலைநாட்டுப் பொருள்கள் பற்றிக் கூறும் பகுதி அடிகளாரது குறிஞ்சிநில அறிவைத் தெற்றெனத் தெரிவிக்கின்றது. செங்குட்டுவன் கனகவிசயரோடு புரிந்த போரினை வருணிக்கும் பகுதி (காதை 26) ஆசிரியரது போர் பற்றிய அறிவை வெளிப்படுத்துவதாகும். ஆசிரியர் கவுந்தியடிகள் வாயிலாகச் சமண சமயக் கொள்கைகளை ஆங்காங்கு வற்புறுத்தியுள்ளார். ஆசிரியர் கோவில்களைப் பற்றிக்கூற நேர்ந்தபோது முதலில் சிவபெருமான் கோவிலைக் குறிப்பிடுதல் அவரது பரந்த சமயப் பொதுமையை அறிவுறுத்துவதாகும். ஆசிரியர் இந்நூலின் இறுதியில் கூறியுள்ள அறிவுரை, அவரது மேம்பட்ட ஒழுக்கத்தை உணர்த்துகிறது. இத்தகைய சிறப்புக்கள் பல கொண்டுள்ள நூலாதலின், சிலப்பதிகாரம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமாய் விளங்குகிறது.

சிலப்பதிகாரத்தில் முப்பது காதைகள் உள்ளன; அவற்றுள் சில காதைகளின் ஈற்றில் சொல்லழகும் பொருளழகும் அமைந்த வெண்பாக்கள் சில காட்சியளிக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க:

(1) ''காலை யரும்பி மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
அகழால் அமைந்த அவனிக்கு மாலைப்
புகழால் அமைந்த புகார்.''

(2) ''நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.''

(3) ''காவி யுகுநீருங் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாஞ் சூழ்ந்த கருங்குழலுங் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்.''

(4) ''மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்புங் கண்ணீரும்—
வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்
செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.''

## வடமொழியின் செல்வாக்கு

சேர வேந்தர், தம் தாய்மொழியாகிய தமிழை வளர்த்தாற் போலவே வடமொழியையும் வளர்த்தனர்; வேத நெறியில் நின்று வேள்விகள் செய்தனர். தமிழ்ப் புலவராய் விளங்கித் தம்மைப் பாடிய வேதியர்க்கு நிலங்களையும் பிறவற்றையும் வழங்கிச் சிறப்பித்தனர். சுருங்கக் கூறின், சேர வேந்தர் தம்காலச் சோழ பாண்டியரினும் மிகுதியாக

வைதிக நெறியை ஆதரித்தனர் என்னலாம். அதனால் சேர நாட்டில் வடமொழியின் செல்வாக்கு மிகுந்தது. அச்சூழ்நிலையில் வளர்ந்த இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில் வடமொழிக் கதைகளையும், வடவர் சமய நம்பிக்கைகளையும் ஆங்காங்குப் பொருத்தியுள்ளார். பராசரன் கதை, பார்ப்பனி கீரிப்பிள்ளையைக் கொன்ற கதை போன்ற கதைகளும் யமன் எருமை ஊர்தியில் வருதல் போன்ற செய்திகளும் வடவர் செல்வாக்கை உணர்த்துவனவாகும்.

அக்காலத்தில் அந்தணர் செல்வாக்கு அரசரிடம் மிகுந்திருந்தது என்பதற்குச் செங்குட்டுவன் மாடலன் சொற்படி சோழ பாண்டியர்மீது சீற்றம் தணிந்தான் என்பதும், வேத விதிப்படி வேள்வி செய்தான் என்பதும், அவனுக்குத் தன் நிறையளவு பொன்னைத் தந்தான் என்பதும் ஏற்ற சான்றுகளாகும் (காதை 27, 28, 29, 30).

**வடசொற்கள்**

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள வடசொற்களுள் கீழ் வருவன குறிப்பிடத்தக்கவை:—

மேரு, இமயம், நாகம், நிதி, பணிலம், விதானம், நித்திலம், பாலிகை, அருந்ததி (காதை 1), மயன், வாசம், மாதவி, தாது, தாமம், அரமியம், பரிசாரம் (காதை 2), தெய்வம், சாபம், தேசிகம், கவி, வக்கிரி, கரணம், சித்திரம், வஞ்சனை, பாகம், உத்தரம், சயந்தன், வந்தனை, புண்ணியம், தாமந்திரிகை, அந்தரம், மண்டிலம் (காதை 3), மேகலை, குணதிசை; மந்தமாருதம், ஆரம், மங்கலம், அஞ்சனம், பவளம், மகரம் (காதை 4), உதயம், காருகர், கஞ்சம், சூதர், மாகதர், வைதாளிகர், கணிகையர், வச்சிரம் மகதம், கிம்புரி, பூரணகும்பம், சுந்தரம், கணம், கமலம் (காதை 5).

அவுணர், அமராபதி, நாரதன், உருப்பசி, நாடகம், உஞ்சை, அடவி, வருணம், வாரிதி, பாண்டரங்கம், கஞ்சன்,

வாரணன், பேடி, அயிராணி, கண்டிகை, பரியகம், நூபுரம்; பாடகம், சூடகம், சந்திரபாணி, தெய்வவுத்தி, அத்திரி, தாசி, விதானித்து, வசந்தம் (காதை 6), பரிவட்டணை, கங்கை (காதை 7), மதுரகீதம், பாதகை (காதை 8), இடாகினி, தேவந்தி, சோமகுண்டம், சூரிய குண்டம், போகம், பூமி, (காதை 9), அந்தரசாரிகள், இந்திர விகாரம், அருகத்தானம், சாரணர், சிலாதலம், கவுந்தி, தருமம், சினேந்திரன், சித்தன், பகவன், புனிதன், சின வரன், கதி, பரமன், குணவதன், பரம், தத்துவன், சாது வன், காரணன், சங்கரன், ஈசன், சயம்பு, சதுமுகன், அங்கம், தேவி (காதை 10).

வரோத்தமை, சிந்தை, வந்தனை, வனசாரிணி (காதை 11), குமரி, கண்டி, அமரி, கவுரி, சமரி, சூலி, நீலி, ஞானம், மயிடன் (மகிஷாசுரன்), அரி, அரன், சோதி, அசுரர், அமரர், சங்கரி, அந்தரி, சடா (முடி) (காதை 12), கௌசிகன், கோசிகன், தந்திரி, கரம் (13), திரேயம், பாதம், தக்கணம், ஓசனி, சாமரை, உய்யானம், அபிநயம், சாதரூபம், சந்திரன், குரு, அங்காரகன், சாம்பூநதம், வீதி, அந்தி (14), கௌரியர், விஞ்சையன், தானம், பத்தினி, மத்திமம், உத்தர கௌத்தன், வாரணம், வாரணாசி, தேவ குமரன், துலாம் (15), கேவணம், மந்திரம் (16), கோகுலம் சேவகன், உந்தி, ஆரணம், நாராயணா (17), அதிபதி, அங்குலி; குங்குமம், அங்குசம் (22), கார்த்திகை, சங்கமன், பரதன், விரதம், விருத்தி (23), சரவணம், திகிரி (24), மதுகரம், சிந்துரம், களபம், நகுலம், சேனாமுகம் (25); தாபதர், தானவர், நீலகிரி (26), சூடகம் (27), போதி (அரசமரம்) (29), செட்டி, மாலதி, தவம் (30).

# 20. மணிமேகலை

## ஆசிரியர்—காலம்

மணிமேகலையை இயற்றியவர் 'கூலவாணிகன் சாத்தன்', என்று மணிமேகலையிலுள்ள பதிகம் கூறுகிறது. 'தண்டமிழ்ச் சாத்தன்,' 'மதுரைக் கூலவாணிகன் சாத்தன்' என்று சிலப்பதிகாரத்திலுள்ள பதிகம் செப்புகின்றது. இப் புலவரது இயற்பெயர் **சாத்தன்** என்பதும், இவர் **கூல வாணிகம்** செய்தவர் என்பதும், இவரது ஊர் **மதுரை** என்பதும் இத்தொடர்களால் அறியப்படும். மதுரையில் கூலவாணிகராய் இருந்த இவர் பைந்தமிழைப் பாங்குறக் கற்றுப் பாவலராயும் விளங்கினர் என்பது இத்தொடர்களால் தெளிவாகின்றது.

இவர் கோவலன் கண்ணகி காலத்தில் வாழ்ந்தவர். மதுராபதி தெய்வம் கண்ணகிக்குக் கூறிய அவளது முற் பிறப்பு வரலாற்றை நேரிற் கேட்டவர் என்பன சிலப்பதி காரத்தால் தெரிகின்றன. மேலும் இவர் செங்குட்டுவன்—இளங்கோவடிகள் காலத்தவர் என்பதும் சிலப்பதிகாரத்தால் தெரிகிறது. அவ்வடிகளே சிலப்பதிகாரத்தைச் செய்ய வேண்டுமென்று இச்சாத்தனார் வேண்டினர் என்பது சிலப் பதிகாரப் பதிகத்தால் அறியக் கிடக்கின்றது. மேலும் அடிகள் தம் நூலைச் சாத்தனார் முன்னிலையில் அரங்கேற்றி னார் என்பதும், சாத்தனார் இளங்கோவடிகள் முன்னிலை யில் மணிமேகலையை அரங்கேற்றினார் என்பதும் இரு நூல் களின் பதிகங்களால் தெளிவாகின்றன. ஆகவே, இச்சாத்த

னார், செங்குட்டுவன் — இளங்கோவடிகள் காலத்தவர் என்பது ஐயமற அறியக்கிடப்பது காண்க.

இனி, இவர் பாடியுள்ள மணிமேகலை என்னும் காவியத்தில் உள்ள சிறப்புச் செய்திகளைக் காண்போம்.

**நூலின் அமைப்பு**

மணிமேகலை என்னும் காவியம், கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மணிமேகலை என்னும் பெண்ணின் வரலாற்றை விரித்துக் கூறும் பெருநூல் ஆகும். இது சிலப்பதிகாரத்தைப்போலவே ஆசிரியப்பாவில் அமைந்த முப்பது காதைகளையுடையது. சிலப்பதிகாரம் கோவலன் கண்ணகி வரலாற்றை விரித்துக் கூறுவது. அதன்கண் பல சமயச் செய்திகளும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. மேலும் அது சமண சமயப் பிரசாரத்துக்கென்று எழுந்த நூல் அன்று. மணிமேகலை என்னும் இந்நூல் மணிமேகலை வரலாற்றைப் பௌத்த சமயத்தோடு பிணைத்துக் கூறுவது; அவளது வரலாற்றைக் கூறுமுகத்தான் பௌத்த சமயமே சிறந்த சமயம் என்பதை எடுத்துக்கூறும் முறையில் அமைந்திருப்பது. ஆயினும் சிலப்பதிகாரத்தைப் போன்ற நடை, வருணனைகள், அறவுரைகள், பல சமயக் கொள்கைகள் முதலியவற்றைத் தன்பால் கொண்டிருப்பது. இது பெரும்பாலும் சமய நூலாய் அமைந்திருத்தலால் கதைகள் பலவற்றைக் கொண்டுள்ளது. விண்ணில் பறந்து செல்லுதல், மந்திரவலிமையால் உருவம் மாறுதல், பசியின்றி இருத்தல், உணவு எடுக்க எடுக்கக் குறையாத அமுதசுரபியைக் கண்டெடுத்தல், கற்புடைய மங்கையைத் தீயும் துன்புறுத்தாத நிகழ்ச்சி, தெய்வங்களே நேரிற் பேசுதல் முதலிய அரிய செயல்கள் இதன்கண் கூறப்பட்டுள்ளன. ஆயினும் உயிர்களின் பசிப்பிணி போக்குதலை மிகச் சிறந்த அறமாக இந்நூல் பல இடங்களில் வற்புறுத்துகிறது.

**சிறப்புச் செய்திகள்**

**1. இந்திர விழா :** இஃது எவ்வாறு நடைபெற்றது என்பதை இந்நூலின் முதற்காதை நன்கு எடுத்து இயம்பு

கிறது. இதில் கூறப்பட்ட இந்திரவிழாவும் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட இந்திரவிழாவும் காவிரிப்பூம்பட்டினத்திலேயே நடைபெற்றவை. இவ்விழா இருபத்தெட்டு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது.

**2. மூவகைப் பத்தினிப் பெண்டிர் :** கணவனை இழந்த பெண்டிர் உடனே கணவனுடன் எரிமூழ்கி இறப்பர்; சிலர் தனியே எரி வளர்த்து அதனில் வீழ்ந்து இறப்பர்; வேறு சிலர் கணவனை நினைந்து அடுத்த பிறவியில் அவனுடன் வாழ்வதற்காகக் கைம்மை நோன்பு நோற்பர் (காதை 2).

**3. உடலின் இழிவு :** மணிமேகலையின் தோழியான சுதமதி, மணிமேகலையை விரும்பிவந்த உதயகுமரன் என்ற சோழ இளவரசனை நோக்கி, அவனால் விரும்பப்படும் உடலின் இழிவை எடுத்துரைக்கும் பகுதி படித்து அறியத் தக்கது.

> ''வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
> புனைவன நீங்கின் புலால்புறத் திடுவது
> மூப்புவிளி வுடையது தீப்பிணி இருக்கை
> பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
> புற்றடங்கரவின் செற்றச் சேக்கை
> அவலக் கவலை கையா றழுங்கல்
> தவலா உள்ளந் தன்பால் உடையது
> மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
> மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்.''
>
> —காதை 4, வரி 113-121

**4. உடல் அடக்க முறைகள் :** சங்ககாலத்தில் இறந்தவர் உடலைச் சுடுதல், வாளா இட்டுப் போதல், தோண்டப்பட்ட குழியில் இடுதல், தாழ்ந்த இடங்களில் அடைத்து வைத்தல், தாழியினால் கவித்தல் என்னும் முறைகள் கையாளப்பட்டன (காதை 6, வரி 66-67).

5. அரசியல் அறிவுரை : மணிமேகலா தெய்வம், மணிமேகலைமீது காதல் கொண்ட உதயகுமரன் கனவில் தோன்றிக் கீழ்வருமாறு அறிவுரை கூறியது. அவ்வறிவுரை ஆட்சித் தலைவர்கள் உள்ளத்தில் இருத்தற்குரியது.

''கோல்நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடில் மாரிவறங் கூறும்
மாரிவறங் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்.''

—காதை 7, வரி 8-12

இஃது எவ்வளவு சிறந்த அறிவுரை!

6. பசிப்பிணி என்னும் பாவி : தீவதிலகை என்னும் தெய்வ மகள் பசியின் கொடுமையைப்பற்றி மணிமேகலையிடம் கூறினமை பசிப்பிணியை நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றது. அதனைக் கீழே காண்க:

''குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாணணி களையும் மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி.''

—காதை 11, வரி 76—80

7. உண்டி கொடுத்தோர் சிறப்பு : உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவராவர் என்று காயசண்டிகை கூறுகின்றாள். அவள் கூறுவதைக் கீழே காண்க:

''ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை

**மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.''**

**—காதை, 11, வரி 92-96**

**8. தலயாத்திரை :** மக்கள் தம் பாவத்தைப் போக்கத் தல யாத்திரை செய்து குமரித்துறையில் நீராடுதல் வழக்கம் (காதை 13, வரி-5-7).

இவ்வாறே வித்தியாதரர் தம் தீவினையைப் போக்கப் பொதியில் மலைக்கு வந்தனர் (காதை 17, வரி 22-24).

**9. கணிகையர் இயல்பு :** கணிகையர், பாணன் இறந்தவுடன் இறக்கும்தன்மை யில்லாத யாழைப் போன்ற வர்; மேலும் மணமுள்ள மகரந்தத்தை நுகர்ந்து தேன் இல் லாத பூவைவிட்டு நீங்கும் வண்டினைப் போன்றவர்; மற்றும் நல்வினை நீங்கும் காலத்துத் திருமகளைப்போல் ஆடவரை விட்டு நீங்குபவர். இது மாதவியின் தாயாகிய சித்திராபதி கூறியுள்ள செய்தியாகும் (காதை 18, வரி 17-22).

**10. கணிகையர்க்குத் தண்டனை :** கணிகையருள் குடிக்குற்றப்பட்டாரை ஏழு செங்கல் சுமத்தி அரங்கினைச் சூழ்வித்துப் புறத்து விடுதல் மரபு (காதை 18, வரி 33-34).

**11. அறம் செய்யக் காரணம் :** மணிமேகலை தன் னைக் காதலித்துவந்த உதயகுமரனை நோக்கித் தான் உயிர்களுக்கு அன்னம் படைக்கும் நல்லறத்தை மேற் கொண்டதற்குக் காரணம் கூறுகின்றாள். அதனை அவள் வாயாலேயே கேட்டு மகிழ்க:

**''பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்**
**இறத்தலு முடையது இடும்பைக் கொள்கலம்**
**மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து**
**மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்.''**

**—காதை 18, வரி 136-139**

**12. அரச நீதி :** மணிமேகலைமீது காதல்கொண்ட உதயகுமரன் அவள் இருந்த இடத்திற்குச் சென்றான். அவனுக்கு அஞ்சிய மணிமேகலை காயசண்டிகை என்று வித்தியாதர மகளது வேடத்தில் காணப்பட்டாள். உதய குமரன் அவளிடம் நெருங்கிப் பேசிக்கொண்டிருந்தான். காயசண்டிகையைத் தேடிக்கொண்டு அங்கு வந்த அவள் கணவனான வித்தியாதரன், உதயகுமரன் தன் மனைவி யுடன் பேசுவதாகவே கருதிச் சீற்றம் கொண்டான். அவன் அன்று இரவு ஓரிடத்தில் மறைந்து இளவரசனின் வருகையை எதிர்பார்த்து இருந்தான். உதயகுமரன் அன்று இரவு மணிமேகலையைச் சந்திக்க வந்தான். மறைந்திருந்த வித்தியாதரன் அரசிளங்குமரனைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினான்.

மாதவர் வாயிலாக இவ்வருத்த நிகழ்ச்சியை அறிந்த சோழமன்னன் சிறிதும் வருந்தவில்லை;

> "மாதவர் நோன்பும் மடவார்க் கற்பும்
> காவலன் காவல் இன்றெனின் இன்றால்;
> மகனை முறைசெய்த மன்னவன் வழியோர்
> துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
> வேந்தர் தஞ்செவி யுறுவதன் முன்னம்
> ஈங்கிவன் தன்னையும் ஈமத் தேற்றிக்
> கணிகை மகளையுங் காவல்செய் கென்றனன்."
>
> —காதை 22, வரி 208—214

இச் சோழனுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர்க் ககந்தன் என்பவன் சோழ நாட்டை ஆண்டான். அவன் மகன் மருதி என்னும் பார்ப்பனியை, "நீ வா" என்று அழைத்தான். இதனை அறிந்த மன்னன் அவனைத் தன் மகன் என்றும் கருதாமல் வாளால் வெட்டி வீழ்த்தினான். இங்ஙனம் இறந்தவனுக்கு முன்னோனான அரசிளங்குமரன் விசாகை என்னும் செட்டிப் பெண்ணின் கழுத்தில் தான்

அணிந்திருந்த மாலையைப் போட முயன்றான். அதனை அறிந்த மன்னன் அவனையும் வாளால் வெட்டி வீழ்த்தினான் (காதை 22). சோழ மன்னர் நீதி வழுவாதவர் என்பதற்கு இவை ஏற்ற சான்றுகளாகும்.

**13. தீயவை பத்து :** கொலை, களவு, காமம், பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல், வெஃகல், வெகுளல், பொல்லாக் காட்சி ஆகிய பத்தும் தீயவை (காதை 24, வரி 125—130.)

**14. அரசர்க்கு அறிவுரை:**

> **''அரசர் தாமே யருளறம் பூண்டால்**
> **பொருளு முண்டோ பிறபுரை தீர்த்தற்கு**
> **அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
> **மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
> **உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
> **கண்ட தில்''**
>
> —காதை 25, வரி 226—231

**சமயக் கருத்துக்கள்**

சங்க காலத்தில் சைவம், வைணவம், பௌத்தம், சமணம் முதலிய பல சமயங்கள் தமிழகத்தில் இருந்தன என்பதை எட்டுத் தொகை நூல்களால் அறியலாம். ஆயின், எத்துணைச் சமயங்கள் அக்காலத்தில் இருந்தன என்பதை மணிமேகலையால்தான் நன்கறிதல் கூடும். மணிமேகலை என்னும் காவியத்தில் 27ஆம் காதையில் பல சமயவாதிகள் வஞ்சிமாநகரில் இருந்தனர் என்பது கூறப்பட்டுள்ளது. அவருள் வைதிகவாதி, சைவவாதி, பிரமவாதி, ஆசீவக வாதி, நிகண்டவாதி, சாங்கிய வாதி, வைசேடிகவாதி, பூத வாதி, பௌத்தவாதி என்பவர் குறிப்பிடத்தக்கவராவர். இவர்களுடைய சமயக்கொள்கைகள் 27ஆம் காதையில் கூறப் பட்டுள்ளன. 29ஆம் காதையிலும் 30ஆம் காதையிலும் பௌத்த சமயக் கொள்கைகளும் கருத்துக்களும் அறிவுறுத் தும் முறையில் கூறப்பட்டுள்ளன.

காபாலிகர் சுடலைநோன்பிகள் என்று இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளனர். மாவிரதிகள் 'விரத யாக்கையர்' என்று பேசப்பட்டுள்ளனர் (காதை 6). எனவே, சைவத்தின் உட்பிரிவுகளாகிய காபாலிகமும் மாவிரதமும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் இருந்தன என்பதற்கு மணிமேகலை ஏற்ற சான்றாகும்.

ஏழு என்ற எண்ணிக்கை பௌத்த சமயத்தில் மதிப்பு மிக்கதாகும் (9-18, 13-14; 22-72).

யாண்டு கம்பளம் : தேவேந்திரன் இருக்கைமீது வெள்ளைக் கம்பளம் விரிக்கப்பட்டிருக்கும். இது 'பாண்டு கம்பளம்' எனப்படும். நிலவுலகில் ஐந்தவித்த பெரியோர் தோன்றுவராயின், அப்பாண்டு கம்பளம் அசையும். இந்திரன் அதன் அசைவால் உண்மையை உணர்ந்து, ஐந்தவித்த பெரியோனைக் காணச் செல்வான். அவனுக்கு வேண்டும் உதவியைச் செய்வான் (காதை 14, வரி 25—35). இப்பாண்டு கம்பளச் செய்தி சமணசமய நூல்களிலும் கூறப்பட்டுள்ளது.

விருப்பப்படி பிறப்பு : மனிதன் ஒரு பிறப்பில் எதனை அழுத்தமாக விரும்புகின்றானோ அவ்விருப்பப்படியே அடுத்த பிறவியில் பிறப்பன் என்பது அக்கால மக்கள் நம்பிக்கை. ஆபுத்திரன் ஒரு பசுவினால் வளர்க்கப்பட்டவன். அவன்,

> **''தற்காத் தளித்த தகைஆ அதனை**
> **ஒற்கா வுள்ளத் தொழியான் ஆதலின்**
> **ஆங்கவ் வாவயிற் றமரர்கணம் உவப்பத்**
> **தீங்கனி நாவல் ஓங்குமித் தீவினுக்**
> **கொருதா னாகிஉலகுதொழத் தோன்றினன்.''**

**—காதை 15, வரி 17-21**

அறத்தின் சிறப்பு : இந்நூல் முழுமையும் அறத்தையே வற்புறுத்துகிறது. அறம் என்பது நல்வினை; நல்வினை ஒன்றே உயிர்க்கு உறுதியாவது என்று இந்நூல் வற்புறுத்து

கிறது. நல்வினையில் சிறப்புப்பகுதி தானம் செய்தல். அத் தான வகைகளுள் உயர்ந்தது அன்னதானம்.

''இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வருந் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது.''

—காதை 22, வரி 135—138

தீவினை வலிமையுடையது என்பது இந்நூலில் பல இடங் களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

''ஆங்கவன் தீவினை உறுத்த தாகலின்'' 22—193.

உதயகுமரன் விஞ்சையன் வாளால் வெட்டுண்டது, சென்ற பிறப்பில் அவன் செய்த தீவினையால் ஆகும் (23, 82-85).

''உம்மை வினைவந்து உறுத்தல் ஒழியாது.''

என்று கண்ணகித் தெய்வம், கோவலன் கொல்லப்பட்ட மைக்கு, அவன் முற்பிறப்பில் செய்த தீவினையை மணி மேகலைக்கு எடுத்துக் காட்டியது (26, வரி 14-33).

**வருணனை**

மணிமேகலை என்னும் காவியம் பௌத்த சமயச் செய்தி களையே மிகுத்துக் கூறுவதாயினும், ஆங்காங்குச் சில வரு ணனைப் பகுதிகளையும் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது. காவிரிப்பூம்பட்டினத்து உவவனம் எங்ஙனம் அமைந் திருந்தது என்பதைச் சாத்தனார் அழகுறக் கூறியுள்ளார். அவ்வுவவனத்தில் குரவம், மரவம், குருந்தம், கொன்றை, திலகம், வகுளம், வெட்சி, நரந்தம், நாகம், புன்னை, பிடவம், தளவம், குடசம், வெதிரம், அசோகம், செருந்தி, வேங்கை, சண்பகம் முதலிய மரங்கள் அடர்ந்து வளர்ந் திருந்தன. அவ்வனத்தின் தோற்றம், கைத்தொழிலில் பண்

யட்ட வல்லுநரால் இயற்றப்பட்ட ஓவியத்தொழில் அமைந்த துகில் போர்த்ததுபோலக் காணப்பட்டதாம் (காதை 3, வரி 160-169).

மணிமேகலையும் சுதமதியும் மலர்வனம் நோக்கிச் சென்றபொழுது காவிரிப்பூம்பட்டினத்துத் தெருக்களில் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஆசிரியர் அந்நிகழ்ச்சிகளைத் தம் புலமைத்திறன் விளங்கும்படி பாடியுள்ளமை படித்து இன்புறத்தகும். குடிகாரன் ஒருவன் சமணத் துறவியின் பின் சென்று அவனைப் பரிகசித்தல் ஒரு காட்சியாகக் கூறப்பட்டுள்ளது. பித்தன் செயல்கள் இரண்டாம் காட்சியாகக் காட்டப்பட்டுள்ளன. பேடிபோல வேடமிட்டுக் கண்ணன் மகன், வாணனது பேரூரில் ஆடிய பேடிக் கூத்து ஒரு தெருவில் ஆடப்பட்டது. ஆசிரியர் அப்பேடிக் கோலத்தை அழகுற வருணிக்கிறார். இப்பகுதிகள் சாத்தனாரது பாத்திறனை நமக்கு நன்கு விளக்குவனவாகும்.

ஆசிரியர் புகாரை வனப்பு மிகுந்த ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி வருணித்திருப்பது படிக்கப்படிக்கச் சுவை பயப்பதாகும் (காதை 5, வரி 109-122).

இவ்வாறே சாத்தனார் அந்திப்பொழுதை ஒரு பெண்ணாக உருவகப்படுத்தி வருணித்திருத்தல் அவரது புலமையை அழகுற அறிவிப்பதாகும் (காதை 5, வரி 123-141).

ஆசிரியர் சக்கரவாளக் கோட்டத்தைத் திறம்படப் பல வரிகளில் வருணித்துள்ளார். அக்கோட்டத்தில் இறந்தவர் பொருட்டு எடுக்கப்பெற்ற சமாதிகள் இத்தகையவை என்று ஆசிரியர் கூறியுள்ளது கவனிக்கத்தகும்;

**''அருந்தவர்க் காயினும் அரசர்க் காயினும்
ஒருங்குடன் மாய்ந்த பெண்டிர்க் காயினும்
நால்வேரு வருணப் பால்வேறு காட்டி**

இறந்தோர் மருங்கிற் சிறந்தோர் செய்த
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்.''

—காதை 6, வரி 54—59

பத்தொன்பதாம் காதையில் அரண்மனையைச் சேர்ந்த பூம்பொழில் வருணனை படித்துஇன்புறத்தகும்(வரி56-106). அப்பூம்பொழிலின் நடுவில் பசும்பொன் மண்டபம் ஒன்று இருந்தது. அம்மண்டபம் மகத வினைஞர், மராட்டக் கம்மர், அவந்திக் கொல்லர், யவனத் தச்சர், தண்டமிழ் வினைஞர் ஆகிய ஐந்து வகையினரும் சேர்ந்து அமைத்த தாகும். அம்மண்டபத்தின் கூரை பொன்வேயப்பட்டது. அது பசிய சாணத்தால் மெழுகப்படாதது; சந்தனத்தால் மெழுகப்பட்டது என்று கொள்ளலாம்.

இருபத்தெட்டாம் காதையில் வஞ்சி மாநகரைச் சூழ இருந்த அகழியில் கலந்த பலவகை நீரும் அகழியின் சிறப்பும் படித்து இன்புறத் தக்கவை. அவற்றைக் கீழே காண்க:

''மாடமகளிர் கரிய கூந்தலை ஆட்டிய நறுமணக் கலவை நீர், எந்திரவாவிகளில் மைந்தரும் மகளிரும் நீராடுதலால் அவர் அணிந்த சாந்து கலந்தோடும் நீர், மன்னன் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் விசிறியும் கொம்புமாகிய கருவிகள் கொண்டு ஒருவர்மேல் ஒருவர் வீசும் நறுமண நீர், உபாசகர் துறவிகளின் திருவடிகளைத் தம் கைகளால் விளக்கும் நன்னீர், நறும்புகை கமழும் தண்ணீர்ப்பந்தர்களில் குடங்களிலிருந்து ஊற்றுகின்ற நீர், மணச் சாந்துகளை அரைப்பவர் மனைகளின் நீர் ஆகியவை அகழியில் பாய்கின்றன. அவற்றால் அகழியில் வாழும் முதலை இனங்களும் மீன்களும் தமது புலால் நாற்றத்தை நீக்குகின்றன. அவ்வகழியில் தாமரை, குவளை, கழுநீர், ஆம்பல் முதலிய பூக்கள் மலர்ந்துள்ளன. வண்டினங்கள் அம்மலர்களிலுள்ள தேனை உண்டு ஆரவாரிக்கின்றன. இத்தகைய சிறப்புடைய அகழி வில்லைப்போலக் காணப்படுகின்றது.''

**கதைகள்**

வடமொழியாளர் தொல்காப்பியர்க்கு முன்னரே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றனர் என்பது முன்னரே கூறப்பட்டது. அவர்கட்குப் பின்பு சமணரும் பௌத்தரும் தமிழகத்தில் தங்கித் தங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பினர். பெருந்தேவனார் என்ற புலவர் பாரதத்தைத் தமிழிற் பாடிப் புகழ் பெற்றார். இராமாயண வரலாற்றுச் செய்திகளுட் சில எட்டுத்தொகை நூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் காணப் படுகின்றன. புத்தர் பல பிறவிகளை எடுத்து உயிர்களுக்குப் பல நன்மைகளைச் செய்தனர் என்பதைக் கூறும் **புத்த சாதகக் கதைகள்** அக்காலத் தமிழகத்தில் பரவியிருந்தன; சுருங்கக் கூறின், வேதநெறி, சமணம், பௌத்தம் பற்றிய கதைகள் தமிழகத்தில் நன்கு பரவியிருந்தன என்னலாம்.

மணிமேகலையில் இத்தகைய பல கதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் வசிட்டன் அகத்தியன் பிறப்புப் பற்றிய கதை, உதயணன் கதை, அகலிகை கதை, தீக்கடவுள் மனைவியின் கதை, பரசுராமன் அரசர்களை அடக்கிய கதை, ஒரு பிறப்பில் வடநாட்டில் பிறந்த சிலர் வேறு பிறவியில் தென்னாட்டில் பிறந்த கதைகள் என்பவை குறிப்பிடத் தக்கவை. திருமால் மூன்றடியால் மூவுலகங்களையும் அளந்தமை, கண்ணனும் பலராமனும் நப்பின்னையோடு நடனமாடியமை, திருமாலின் மகன் பிரமன் என்பது, சக்கரவாளக் கோட்டம் மயனால் அமைந்தமை என்றாற் போன்ற செய்திகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**பிறமொழிச் சொற்கள்**

பௌத்த நூல்கள் முதலில் **பாலிமொழியில்** எழுதப்பட்டன; பின்னரே வடமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. எனவே, பௌத்த சமயம் பற்றிய கருத்துக்களை விளக்கும் இடங்களிலெல்லாம் இவ்விரு மொழிச் சொற்களும் இடம்

பெற்றுள்ளமை இயல்பாகும். மணிமேகலை தலைசிறந்த பௌத்த காவியம். அதனால் இதன்கண் சிலப்பதிகாரத்தில், காணப்படும் பிறமொழிச் சொற்களைவிட மிகுதியான பிற மொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளமை இயல்பேயாகும். அவற்றுள் சிலவற்றைக் கீழே காண்க:

தீவகச் சாந்தி; பூரணகும்பம், விலோதம், வாதி (காதை 1); சித்திராபதி, வயந்தமாலை, காயக்கரணம் (2); சுதமதி, சண்பை, ஆராமம், மாருதவேகன், உய்யானம், சம்பாதிவனம், கவேரன், பகவன், உவவனம், பீடிகை, அராந்தாணம், வித்தகர், சித்திரம் (3); உதயகுமரன், மகரம் (4); சாப சரத்தி, சமணர், சங்கதருமன், குணன், வாமன், வருணம், தீர்த்தன், புராணம் (5); விஞ்சயன், வஞ்சம், தோரணம், சார்ங்கலன், கோதமை, தெய்வ கணங்கள், அசுரர், அந்தரம், யோசனை (6).

இரவிவன்மன், துரகம், துச்சையன், தாரை, வீரை, இலக்குமி (7); பதும சதுரம், தருமபீடிகை (8); மாதவன், காந்தாரம், பூர்வதேயம், பாதலம், அசோதரம், அமுதபதி, அத்திபதி, சித்திபுரம், நீலபதி, இராகுலன், கவேரகன்னி, ஆசனம் (9); சாதுசக்கரன், இரத்தினதீவம், அமரன், அங்கம், பாதபங்கயம் (10); தீவதிலகை, பூமி, சமந்தம், கோமுகி, புத்திரன், அமுதசுரபி, நாதன், பாதம், விடம் (விஷம்) (11); துடிதலோகம், மாதிரம் (12).

வாரணாசி, உவாத்தி, அவஞ்சிகன், நேமி, சிந்தா தேவி, அசலன், சிருங்கி, கம்பளன் (13); பாண்டு கம்பளம், சாவகம் (14); பிக்குணி, கோசம்பி, வத்தவன், உஞ்சை, யூகி, திப்பியம், காயசண்டிகை (15); சாதுவன், ஆதிரை, கணிகை, சாரணர், சந்திரதத்தன், அசரீரி, பத்தினி, பாடை (பாஷை), குரு, செட்டி (16); விருச்சிகன், தந்தி (யானை), சம்பு (17).

தாபதம்; அஞ்சனம் (18); நகுலம், மகதம், மராட்டம், தமனியம் (19); விச்சை (வித்தை), விந்தம், அந்தரி (20);

அற்புதம், பிரமதருமன், துவதிகன், மயன், மார்க்கம், உத்தர மகதம், சாவகன், சாதுசக்கரன் (21); காந்தமன், சுகந்தன், பரசுராமன், ககந்தன், காகந்தி, தருமதத்தன், விசாகை, தக்கண மதுரை (22); வாசந்தவை, இராசமா தேவி (23); அபிநயம், கமலம், வாசம், சலம், பார்த்திபன், வாசவன், நாகபுலம், பூமி, சந்திரன் (24); அநித்தம், நித்தம், துக்கம், ஆரியன், கஞ்சுகம், அமரசுந்தரி, ஏதம், மந்திரி, சனமித்திரன், பிரமர் (25); படிமம், சினம், கபிலை, இந்திரவிகாரம், பிடகம், தேவகுலம் (26).

வேதவியாதன், கிருதகோடி, உவமம், ஆகமம்; அருத்தாபத்தி, வைதிகம், அபாவம், சுகம், நாமம், சாதி, கிரியை, அநுமானம், அநுமேயம், சாதனம், சாத்தியம், அந்நுவயம், நிச்சயம், ஐதிகம், காந்தம், பிரமாணம், ஆபாசம், மாத்திரை, உலோகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம், அக்க பாதன், கணாதன், சைமினி, பாவம், கற்பகம், வியா கரணம், விபரீதம், பரமாணு, தன்மாத்திகாயம், அதன் மாத்திகாயம், காலா காயம், சீவன், பந்தம், நிம்பம், ஆகாயம், புத்தி, வாயு, பாயுபத்தம், வாக்கு, பிரளயம், புருடன், மனம், புத்தி, ஆங்காரம், சித்தம், ஆன்மா, கருமம், சாமானியம், விசேடம் (27); எந்திரம், சீலம், தனு, சாவகம், ககனம், தருமதவனம், சாலை, போனகம், பளிதம் (28).

ஆதி, சினேந்திரன், பிரத்தியம், பிரத்தியக்கம், திட் டாந்தம் உபநயம், நிகமனம், விபக்கம், சுபாவம், சத்தம், கடம், அநன்னுவயம், சாமம், கௌடிலச்சாமம், வெதி ரேகம், சாதன்மியம், வைதன்மியம், விருத்தம், சுவசனம், பிரசித்தம், அபிரசித்தம், உபயம், விசேடியம், அவிநாச வாதி, விநாசமம், உபயாசித்தம், அன்னியதராசித்தம், சித்தா சித்தம், ஆசிரியாசித்தம், தன்மியசித்தம், சாதாரணம், அசாதாரணம், சபக்கை, வியாபி, வியபிசாரி,

சங்கயம், அநேகாந்திகம், வர்த்தித்தல், மூர்த்தம், அமூர்த்தம், சொரூபம், இந்திரியம், பரார்த்தம், சயனா சயனங்கள், சன்னு, அசன்னு, கிருத்தி, கிருத்தம், வைதன்னியம் (29); சரணாகதி, மூலம், புத்தர், சந்தி, நரகம், ஆதிக்கண்டம், உற்பவித்தல், மைத்திரி, கருணா முதிதை, சுருதி, சிந்தனாபாவனாதரிசனை, ஞான தீபம் (30).

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றை முறையாகப் பார்த்துவரின், சமயத்துறையில் பிற சமயத்தார் படிப்படியாகச் செல்வாக்குப் பெற்றுவந்ததையும், அவர்கள் செல்வாக்குப் பெறப் பெற, வேற்றுமொழிச் சொற்களும் தமிழில் படிப்படியாக மிகுதிப்பட லாயின என்பதும் இனிது புலனாகும். இந்த வளர்ச்சியை உளங் கொண்டாற்றான் அடுத்துவரும் பகுதியில் சங்க காலத்திற்குப் பின்பு உண்டான தமிழ் வளர்ச்சியை உள்ள வாறு உணர்தல் கூடும்.

# பிற்சேர்க்கை

## சங்ககாலப் புலவர் - 552

1. அகம்பன் மாலாதனார்
2. அஞ்சில் அஞ்சியார்
3. அஞ்சிலாந்தையார்
4. அஞ்சிலத்தை மகள் நாகையார்
5. அடைநெடுங் கல்வியார்
6. அண்டர்மகன் குறுவழுதி
7. அணிலாடு முன்றிலார்
8. அதியன் விண்ணத்தனார்
9. அந்தியிளங் கீரனார்
10. அம்மள்ளனார்
11. அம்மூவனார்
12. அம்மெய்யனாகனார்
13. அரிசில்கிழார்
14. அல்லங்கீரனார்
15. அள்ளூர் நன்முல்லையார்
16. அறிவுடை நம்பி
17. ஆசிரியர் நல்லந்துவனார்
18. ஆசிரியர் பெருங்கண்ணனார்
19. ஆடுதுறை மாசாத்தனார்
20. ஆதிமந்தியார்
21. ஆமூர்க் கவுதமன் சாதேவனார்
22. ஆர்க்காடுகிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்
23. ஆரியவரசன் யாழ்ப்பிரமதத்தன்
24. ஆலங்குடி வங்கனார்
25. ஆலத்தூர் கிழார்
26. ஆலம்பேரி சாத்தனார்
27. ஆலியார்
28. ஆவூர்க் காவிதிகள் சாதேவனார்
29. ஆவூர் கிழார்
30. ஆவூர்க்கிழார் மகனார் கண்ணனார்
31. ஆவூர் மூலங்கிழார்
32. ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்
33. இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார்
34. இடைக்காடனார்
35. இடைக்குன்றூர் கிழார்
36. இடையன் சேந்தங் கொற்றனார்
37. இடையன் நெடுங்கீரனார்
38. இம்மென் கீரனார்
39. இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

40. இருங்கோன் ஒல்லையாயன் செங்கண்ணனார்
41. இருந்தையூர்க் கொற்றன் புலவன்
42. இரும்பிடர்த்தலையார்
43. இளங்கீரந்தையார்
44. இளங்கீரனார்
45. இளங்கோ (அடிகள்)
46. இளந்திரையனார்
47. இளந்தேவனார்
48. இளநாகனார்
49. இளம்புல்லூர்க் காவிதி
50. இளம்பூதனார்
51. இளம்பெருவழுதியார்
52. இளம்போதியார்
53. இளவெயினனார்
54. இளவேட்டனார்
55. இறங்குகுடிக் குன்ற
56. இறையனார் [நாடன்
57. இனி சந்த நாகனார்
58. ஈழத்துப் பூதந்தேவனார்
59. உக்கிரப் பெருவழுதி
60. உகாய்க்குடி கிழார்
61. உம்பற்காட்டு இளங்கண்ணனார்
62. உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்
63. உருத்திரன்
64. உரோடகத்துக் கந்தரத்தனார்
65. உரோடகத்துக்காரன்
66. உலோச்சனார்
67. உவர்க்கண்ணூர்ப் புல்லங்கீரனார்
68. உழுந்தினைப் புலவன்
69. உறையன்
70. உறையூர் இளம்பொன் வாணிகனார்
71. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
72. உறையூர்க் கதுவாய் சாத்தனார்
73. உறையூர்ச் சல்லியன் குமரன்
74. உறையூர்ச் சிறுகந்தன்
75. உறையூர்ப் பல்காயனார்
76. உறையூர் மருத்துவன் தாமோதரனார்
77. உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
78. உறையூர் முதுகூத்தனார்
79. உறையூர் முதுகொற்றன்
80. ஊட்டியார்
81. ஊன்பித்தை
82. ஊன் பொதி பசுங்குடையார்
83. எயிற்றியனார்
84. எயினந்தை மகனார் இளங்கீரனார்
85. எயினந்தையார்
86 எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்
87. எருமை வெளியனார்
88. எருமை வெளியனார் மகனார் கடலனார்
89. எழூஉப்பன்றி நாகன் குமரனார்
90. ஐயாதிச் சிறுவெண்தேரையார்
91. ஐயூர் முடவனார்

92. ஐயூர் முலங்கிழார்
93. ஒக்கூர் மாசாத்தனார்
94. ஒக்கூர் மாசாத்தியார்
95. ஒருசிறைப் பெரியனார்
96. ஒரூஉத்தனார்
97. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்
98. ஓதஞானி
99. ஓதல் ஆந்தையார்
100. ஓரம் போகியார்
101. ஓரில் பிச்சையார்
102. ஓரேருழவர்
103. ஓரோடோகத்துக் கந்தாத்தனார்
104. ஔவையார்
105. கங்குல் வெள்ளத்தார்
106. கச்சிப்பேட்டு இளந்தத்தனார்
107. கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன்
108. கச்சிப்பேட்டு நன்னாகையார்
109. கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார்
110. கடம்பனூர்ச் சாண்டிலிய ன்
111. கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி
112. கடியலூர் உருத்திரங் கண்ணனார்
113. கடுகு பெருந்தேவனார்
114. கடுந்தொடைக் காவினார்
115. கடுந்தோள் கரவீரன்
116. கடுவன் இளஎயினனார்
117. கடுவன் இளமள்ளனார்
118. கடுவன் மள்ளன்
119. கண்ணகனார்
120. கண்ணகாரன் கொற்றனார்
121. கண்ணங் கொற்றனார்
122. கண்ணம் புல்லனார்
123. கண்ணன்
124. கணக்காயன் தத்தன்
125. கணக்காயனார்
126. கணக்காயனார் மகனார் நக்கீரனார்
127. கணியன் பூங்குன்றன்
128. கதப்பிள்ளைச் சாத்தனார்
129. கதையங் கண்ணனார்
130. கந்தக் கண்ணன்
131. கந்தரத்தனார்
132. கபிலர்
133. கயமனார்
134. கருங்குழலாதனார்
135. கரும்பிள்ளைப் பூதனார்
136. கருவூர் ஓதஞானி
137. கருவூர்க் கண்ணம் பாளனார்
138. கருவூர்க் கண்ணம் புல்லனார்
139. கருவூர்க்கதப்பிள்ளை
140. கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்
141. கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்
142. கருவூர்க் கலிங்கத்தனார்
143. கருவூர் கிழார்
144. கருவூர்க் கோசனார்

145. கருவூர்ச் சேரமான் சாத்தன்
146. கருவூர் நன்மார்பனார்
147. கருவூர்ப் பவுத்திரன்
148. கருவூர்ப் பூதஞ்சாத்தனார்
149. கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூதநாதனார்
150. கல்பொரு சிறுநுரையார்
151. கல்லாடனார்
152. கவைமகன்
153. கழாத்தலையார்
154. கழார்க்கீரன் எயிற்றியார்
155. கழைதின் யானையார்
156. கள்ளம் பாளனார்
157. கள்ளிக்குடிப் பூதம் புல்லனார்
158. கள்ளில் ஆத்திரையனார்
159. காக்கை பாடினியார் நச்செள்ளையார்
160. காசிபன் கீரனார்
161. காஞ்சிப் புலவனார்
162. காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்
163. காப்பியன்சேந்தனார்
164. காப்பியாற்றுக் காப்யனார்
165. காமக்கணிப் பசலையார்
166. காமஞ்சேர் குளத்தார்
167. காரிக்கண்ணனார்
168. காரிகிழார்
169. காலெறி கடிகையார்
170. காவட்டனார்
171. காவற் பெண்டு
172. காவன் முல்லைப் பூதரத்தனார்
173. காவன் முல்லைப் பூதனார்
174. காவிரிப்பூம் பட்டினத்துக் கந்தரத்தனார்
175. காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார்
176. காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனார்
177. காவிரிப்பூம் பட்டினத்துச் சேந்தன் கண்ணனார்
178. காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார்
179. கிடங்கில் காவிதி கீரங்கண்ணனார்
180. கிடங்கில் காவிதி பெருங்கொற்றனார்
181. கிடங்கில் குலபதி நக்கண்ணன்
182. கிள்ளி மங்கலங்கிழார் மகனார் சேரகோவனார்
183. கிள்ளிமங்கலங் கிழார்
184. கீரந்தையார்
185. கீரன் கீரனார்
186. குட்டுவன் கண்ணன்
187. குட்டுவன் கீரனார்
188. குடபுல வியனார்
189. குடவாயில் கீரநக்கன்
190. குடவாயிற் கீரத்தனார்
191. குண்டுகட் பாலியாதன்

192. குதிரைத் தறியனார்
193. குப்பைக் கோழியார்
194. குமட்டூர்க் கண்ணனார்
195. குழுழி ஞாழலார் நப்பசலையார்
196. குழல் தத்தன்
197. குளம்பனார்
198. குளம்பாதாயனார்
199. குறமகள் இளவெயினி
200. குறமகள் குறிஎயினி
201. குறி இறையார்
202. குறுங்கீரன்
203. குறுங்குடி மருதனார்
204. குறுங்கோழியூர் கிழார்
205. குறுவழுதியார்
206. குன்றம் பூதனார்
207. குன்றியனார்
208. குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார்
209. கூகைக் கோழியார்
210. கூடலூர் கிழார்
211. கூடலூர் பல் கண்ணனார்
212. கூவன் மைந்தன்
213. கூழிக்கொற்றன்
214. கூற்றங் குமரனார்
215. கேசவனார்
216. கொட்டம்பலவனார்
217. கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்
218. கொடியூர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார்
219. கொல்லன் அழிசி
220. கொல்லிக் கண்ணன்
221. கொள்ளம் பக்கனார்
222. கொற்றங் கொற்றனார்
223. கொற்றனார்
224. கோக்குள முற்றனார்
225. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்
226. கோட்டியூர் நல்லந்தையார்
227. கோடை பாடிய பெரும் பூதனார்
228. கோண்மா நெடுங் கோட்டனார்
229. கோதமனார்
230. கோப் பெருஞ் சோழன்
231. கோவத்தன்
232. கோவூர் கிழார்
233. கோவேங்கை பெருங்கதவன்
234. கோழியூர் கிழார் மகனார் செழியனார்
235. கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்
236. சங்கவருணரென்னும் நாகரியர்
237. சத்திநாதனார்
238. சல்லியங் குமரனார்
239. சாகலனார்
240. சாகலாசனார்
241. சாத்தந்தையார்
242. சாத்தன்
243. சிறுமோலிகனார்
244. சிறுவெண்தேரையார்
245. சிறைக்குடி ஆந்தையார்

246. சீத்தலைச் சாத்தனார்
247. செங்கண்ணனார்
248. செம்பியனார்
249. செம்புலப் பெயனீரார்
250. செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்
251. செயலூர் இளம் பொன் சாத்தன் கொற்றனார்
252. செல்லூர் கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார்
253. செல்லூர்க் கொற்றன்
254. செல்லூர்க் கோசிகன் கண்ணனார்
255. சேகம் பூதனார்
256. சேந்தம் பூதனார்
257. சேந்தன் கண்ணனார்
258. சேந்தன் கீரன்
259. சேரமான் இளங்குட்டுவன்
260. சேரமான் எந்தை
261. சேரமான் கணைக்காலிரும்பொறை
262. சேரமான் கோட்டம் பலத்துத் துஞ்சிய மாக்கோதை
263. சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
264. சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
265. சோழன் நல்லுருத்திரன்
266. சோழன் நலங்கிள்ளி
267. தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்
268. தங்கால் பூட்கொல்லனார்
269. தங்கால் பொற்கொல்லனார்
270. தங்கால் பொற்கொல்லனார் வெண்ணாகனார்
271. தங்கால் முடக்கொல்லனார்
272. தங்கால் முடக்கொற்றனார்
273. தனிமகனார்
274. தாமப் பல்கண்ணனார்
275. தாமோதரன்
276. தாயங் கண்ணனார்
277. தாயங் கண்ணியார்
278. திப்புத்தோளார்
279. திருத்தாமனார்
280. திருவள்ளுவர் (திருக்குறள்)
281. தீன்மிதி நாகன்
282. தும்பி சொகினனார்
283. தும்பி சேர்கீரனார்
284. துறைக் குறுமாவிற் பாலங்கொற்றனார்
285. துறையூர் ஓடைகிழார்
286. தூங்கலோரியார்
287. தேய்புரிப் பழங்கயிற்றனார்
288. தேரதரன்
289. தேவகுலத்தார்
290. தேவனார்
291. தொடித்தலை விழுத்தண்டினார்

292. தொண்டி ஆமூர்ச் சாத்தனார்
293. தொண்டைமான் இளந்திரையன்
294. தொல்கபிலர்
295. தொல்காப்பியர் (தொல்காப்பியம்)
296. நக்கண்ணையார்
297. நக்கீரர்
298. நக்கீரனார்
299. நப்பண்ணனார்
300. நப்பாலத்தனார்
301. நம்பிகுட்டுவன்
302. நரிவெரூஉத்தலையார்
303. நரைமுடி நெட்டையார்
304. நல்லச்சுதனார்
305. நல்லந்துவனார்
306. நல்லழுசியார்
307. நல்லாவூர் கிழார்
308. நல்லிறையனார்
309. நல்லூர்ச் சிறுமேதாவியார்
310. நல்லெழுநியார்
311. நல்வழுதியார்
312. நல்விளக்கனார்
313. நல்வெள்ளியார்
314. நல்வேட்டனார்
315. நற்சேந்தனார்
316. நற்றங் கொற்றனார்
317. நற்றமனார்
318. நன்பலூர்ச் சிறுமேதாவியார்
319. நன்னாகனார்
320. நன்னாகையார்
321. நாகம்போத்தன்
322. நாமலார் மகன் இளங்கண்ணன்
323. நிகண்டன் கலைக்கோட்டுத்தண்டனார்
324. நெட்டிமையார்
325. நெடுங்கழுத்துப் பரணர்
326. நெடும் பல்லியத்தனார்
327. நெடும்பல்லியத்தை
328. நெடுவெண் நிலவினார்
329. நெய்தல் தத்தனார்
330. நெய்தற் காக்கியர்
331. நெய்தற் சாய்த்துய்த்த ஆவூர் கிழார்
332. நொச்சிநியமங்கிழார்
333. நோய்பாடியார்
334. பக்குடுக்கை நன்கணியார்
335. படுமரத்து மோசிகீரனார்
336. படுமரத்து மோசி கொற்றன்
337. பதடி வைகலார்
338. பதுமனார்
339. பரணர்
340. பராயனார்
341. பரூஉமோவாய்ப் பதுமன்
342. பறநாட்டுப் பெருங்கொற்றனார்
343. பனம்பாரனார்
344. பாண்டரங் கண்ணனார்
345. பாண்டியன் அறிவுடைநம்பி
346. பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன்

347. பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன்
448. பாண்டியன் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி
349. பாண்டியன் பன்னாடு தந்தான்
350. பாண்டியன் மாறன் வழுதி
351. பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியன்
352. பாரகாபரன்
353. பாரதம் பாடிய பெருந்தேவனார்
354. பாரி மகளிர்
355. பாலைக் கௌத மனார்
356. பாலை பாடிய பெருங் கடுங்கோ
357. பாவைக் கொட்டிலார்
358. பிசிராந்தையார்
359. ப்ரமசாரி
360. பிரமனார்
361. பிரான் சாத்தனார்
362. புதுக்கயத்து வண்ணக்கண் கம்பூர் கிழார்
363. புல்லாற்றூர் எயிற்றியனார்
364. புறத்திணை நன்னாகனார்
365. பூங்கண் உத்திரையார்
366. பூங்கண்ணன்
367. பூதங்கண்ணனார்
368. பூதன்தேவனார்
369. பூதனார்
370. பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு
371. பூதம்புல்லன்
372. பெருங் கண்ணனார்
373. பெருங்குன்றூர்கிழார்
374. பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார்
375. பெருங் கௌசிகனார்
376. பெருஞ்சாத்தன்
377. பெருஞ்சித்திரனார்
378. பெருந்தலைச் சாத்தனார்
379. பெருந்தேவனார்
380. பெருந்தோட் குறுஞ் சாத்தன்
381. பெரும்பதுமனார்
382. பெரும்பாக்கன்
383. பெருவழுதி
384. பேய்மகள் இளவெயினி
385. பேயனார்
386. பேயார்
387. பேராலவாயர்
388. பேரிசாத்தனார்
389. பேரெயில் முறுவலார்
390. பொத்தியார்
391. பொதுக்கயத்துக் கீரந்தை
392. பொதும்பில் கிழார்
393. பொதும்பில் கிழார் மகனார் வெண்கண்ணியார்
394. பொதும்பில் கிழார் வெண்கண்ணனார்
395. பொதும்பில் புல்லாளங் கண்ணியார்

396. பொய்கையார்
397. பொருந்தில் இளங் கீரனார்
398. பொன்மணியார்
399. பொன்முடியார்
400. பொன்னாகன்
401. போதனார்
402. போந்தைப் பசலை யார்
403. மடல்பாடிய மாதங் கீரனார்
404. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம் மள்ளனார்
405. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்
406. மதுரை அறுவை வாணிகன் இளவேட் டனார்
407. மதுரை ஆசிரியர் கோடன் கொற்றே வன்
408. மதுரை ஆசிரியர் நல் லந்துவனார்
409. மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்
410. மதுரை இளங்கண் ணிக் கௌசிகனார்
411. மதுரை இளங்கௌசி கனார்
412. மதுரை இளம்பாலா சிரியன் சேந்தன் கூத்தனார்
413. மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்
414. மதுரை எழுத்தாளன்
415. மதுரை எழுத்தாளன் சேந்தன்
416. மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்
417. மதுரைஓலைக்கடைக் கண்ணம் புகுந்தா ராயத்தனார்
418. மதுரை ஓலைக்கடை யத்தார் நல்வெள்ளை யார்
419. மதுரைக் கடையத் தார் மகன் வெண் ணாகன்
420. மதுரைக் கண்டரதத் தனார்
421. மதுரைக் கண்ணத்த னார்
422. மதுரைக் கண்ணனார்
423. மதுரைக் கணக்காய னார்
424. மதுரைக் கணக்காய னார் மகனார் நக்கீர னார்
425. மதுரைக் கணியன் பூதத்தனார்
426. மதுரைக் கதக் கண் ணன்
427. மதுரைக் கள்ளில் கடையத்தன் வெண் ணாகனார்
428. மதுரைக் காஞ்சிப் புலவன்
429. மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்
430. மதுரைக் காருல வியங் கூத்தனார்
431. மதுரைக் கூத்தனார்

432. மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் (மணிமேகலை)
433. மதுரைக் கூலவாணிகன்சீத்தலைச் சாத்தனார்
434. மதுரைக் கொல்லன் புலவன்
435. மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்
436. மதுரைச் சீத்தலைச் சாத்தனார்
437. மதுரைச் சுள்ளம் போதனார்
438. மதுரைச் செங்கண்ணனார்
439. மதுரைத் தத்தங் கண்ணனார்
440. மதுரைத் தமிழ்க் கூத்தன் நாதன் தேவனார்
441. மதுரைத் தமிழ்க் கூத்தனார்
442. மதுரைத் தமிழ்க் கூத்தனார் கடுவன் மள்ளனார்
443. மதுரை நக்கீரர்
444. மதுரை நல்வெள்ளியார்
445. மதுரைப் படை மங்க மன்னியார்
446. மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார்
447. மதுரைப் பள்ளி மருதங் கிழார் மகனார் சோகுத்தனார்
448. மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்
449. மதுரைப் பாலாசிரியர் நற்றமனார்
450. மதுரைப் புல்லங் கண்ணனார்
451. மதுரைப் பூதன் இளநாகனார்
452. மதுரைப் பூவண்டநாகன் வேட்டனார்
453. மதுரைப் பெருங் கொல்லன்
454. மதுரைப் பெரு மருதனார்
455. மதுரைப் பெரு மருதிள நாகனார்
456. மதுரைப் பேராலவாயார்
457. மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார்
458. மதுரைப் போத்தனார்
459. மதுரை மருதங்கிழார் மகனார் பெருங் கண்ணனார்
460. மதுரை மருதங் கிழான் மகன் இளம் போத்தன்
461. மதுரை மருதனிளநாகனார்
462. மதுரை மள்ளனார்
463. மதுரை வேளாசான்
464. மதுரை வேளா தத்தன்
465. மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார்
466. மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனார்

467. மருங்கூர் பாகைச் சாத்தன் பூதனார்
468. மருதம் பாடிய இளங் கடுங்கோ
469. மருதன் இளநாகனார்
470. மலையனார்
471. மள்ளனார்
472. மாங்குடி கிழார்
473. மாங்குடி மருதனார்
474. மாடலூர் கிழார்
475. மாதி மாதிரத்தனார்
476. மாதிரத்தன்
477. மாமலாடன்
478. மாமூலனார்
479. மாயெண்டன்
480. மார்க்கண்டேயனார்
481. மாலை மாறன்
482. மாவளத்தான்
483. மாற்பித்தியார்
484. மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்
485. மாறன் வழுதி
486. மாறோக்கத்து நப்பசலையார்
487. மிளைக் கந்தன்
488. மிளைக் கிழான் நல் வேட்டனார்
489. மிளைப் பெருங் கந்தன்
490. மிளை வேள் தித்தன்
491. மீளிப் பெரும்பதுமனார்
492. மீனெறி தூண்டிலார்
493. முக்கல் ஆசான் நல் வெள்ளையார்
494. முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன்
495. முடத்தாமக் கண்ணியார்
496. முடத்திருமாறன்
497. முது கூற்றனார்
498. முப்பேர் நாகனார்
499. முள்ளியூர்ப் பூதியார்
500. முரஞ்சியூர் முடி நாகராயர்
501. முறுவெங் கண்ணனார்
502. மூலங் கீரனார்
503. மையோடக் கோவனார்
504. மோசி கண்ணத்தனார்
505. மோசிக் கரையனார்
506. மோசி கீரனார்
507. மோசி கொற்றனார்
508. மோசி சாத்தனார்
509. மோதாசனார்
510. வடமநெடுந்தத்தனார்
511. வடமவண்ணக்கன்
512. வடமவண்ணக்கன் சொருமருங்குமரனார்
513. வடமவண்ணக்கன் தாமோதரனார்
514. வடம வண்ணக்கன் பெருஞ் சாத்தனார்
515. வடம வண்ணக்கன் பேரிசாத்தனார்
516. வடமன் தாமோதரன்
517. வடமோதங்கிழார்
518. வண்ணப்புறக் கந்தரத்தனார்
519. வருமுலையாரித்தி
520. வன்பரணர்
521. வாடாப் பிரமந்தன்

522. வாயில் இளங்கண்ணன்
523. வாயிலான் தேவன்
524. வாலம் பேரி சாத்தனார்
525. வான்மீகியார்
526. விட்டகுதிரையார்
527. விரிச்சியூர் நன்னாகனார்
528. விரியூர் நக்கனார்
529. வில்லக விரலினார்
530. விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார்
531. விற்றூற்று மூதெயினனார்
532. விற்றூற்று வண்ணக்கண் தத்தனார்
533. வினைத் தொழில் சோகீரனார்
534. வீரை வெளியனார்
535. வீரை வெளியன் தித்தனார்
536. வெண்கண்ணனார்
537. வெண்கொற்றன்
538. வெண்ணிக் குயத்தியார்
539. வெண்பூதன்
540. வெண்பூதியார்
541. வெண்மணிப்பூதி
542. வெள்ளாடியனார்
543. வெள்ளியந் தின்னனார்
544. வெள்ளி வீதியார்
545. வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார்
546. வெள்ளெருக் கிலையார்
547. வெள்ளைக்குடி நாகனார்
548. வெள்ளை மாளர்
549. வெறிபாடிய காமக்கண்ணியார்
550. வேட்டகண்ணன்
551. வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தன்
552. வேம்பற்றூர்க் குமரனார்

★ ★ ★

